# அனைத்துலக மனிதனை நோக்கி

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# அனைத்துலக மனிதனை நோக்கி

(Towards Universal Man)

★

ஆசிரியர் :
ரவீந்திரநாத் தாகூர்

தமிழாக்கம் :
அ. ச. ஞானசம்பந்தன்

★

பாரி நிலையம்
59, பிராட்வே · சென்னை-1.

முதற் பதிப்பு நவம்பர், 1961.

விலை ரூபாய் 10-00

# உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| | அறிமுகம் | ... | i |
| | முகவுரை | ... | iii |
| | முன்னுரை | ... | 1 |
| 1. | கல்வியின் மாறுபாடுகள் | ... | 39 |
| 2. | சமுதாயமும் அரசாங்கமும் | ... | 50 |
| 3. | கல்விப் பிரச்னை | ... | 70 |
| 4. | அடுத்து என்ன? | ... | 89 |
| 5. | தலைமை உரை | ... | 111 |
| 6. | கிழக்கும் மேற்கும் | ... | 145 |
| 7. | ஹிந்துப் பல்கலைக் கழகம் | ... | 159 |
| 8. | புறப்பாட்டுக்கு முன்னாள் | ... | 179 |
| 9. | தலைவன் விருப்பமே நடைபெறும் | ... | 199 |
| 10. | இந்தியப் பண்பாட்டு நிலையம் | ... | 233 |
| 11. | கல்வியின் பேதமின்மை | ... | 267 |
| 12. | சத்தியத்தின் அழைப்பு | ... | 291 |
| 13. | சுயராஜ்யத்திற்கு உழைத்தல் | ... | 317 |
| 14. | கவிஞன் நிறுவிய பள்ளிக்கூடம் | ... | 329 |
| 15. | நகரமும் கிராமமும் | ... | 347 |
| 16. | கூட்டுறவு | ... | 372 |
| 17. | மாறும் யுகம் | ... | 392 |
| 16. | நாகரிகத்தில் நெருக்கடியான நிலைமை | ... | 406 |
| | இணைப்புகள் | ... | 415 |
| | குறிப்புகள் | ... | 421 |
| | பெயர் அட்டவணை | ... | 447 |

எங்கே மனம் அச்சமற் றிருக்கிறதோ, தலை நிமிர்ந் திருக்கிறதோ

எங்கே அறிவு உரிமையுட னிருக்கிறதோ

எங்கே உலகம் குறுகிய குடும்ப எல்லைகளால் துண்டு துண்டாகப் பிளவுபடா திருக்கிறதோ

எங்கே உண்மையின் ஆழ்ந்த அடிப்படையிலிருந்து சொற்கள் பிறக் கின்றனவோ

எங்கே சலியாத உழைப்பு விழுமிய நிலையை நோக்கி நீளுகிறதோ

எங்கே பகுத்தறிவு என்னும் தெளிந்த ஓடை, மூடப் பழக்க வழக்கம் என்னும் வறண்ட பாலையில் சுவறிப்போகா திருக்கிறதோ

எங்கே என்றும் விரிந்து நோக்கும் எண்ணத்திலும் செயலிலும் மனத்தை நீ முன்னின்று அழைத்துச் செல்கிறாயோ

அங்கே அந்த உரிமையுள்ள இன்ப உலகத்தில், என் தந்தையே, என் நாடு விழிப்புறுக.

—ரவீந்திரநாத் தாகூர்.

# அறிமுகம்

இரண்டு ஆண்டுகட்கு முன்னர், ரவீந்தரநாத் தாகூரின் நூருவது பிறந்த நாள் விழாவை உலகம் முழுவதிலும் கொண்டாடுவது பற்றித் திட்டம் வகுக்கப்பட்டது. அப்பொழுது, போர்ட் பவுண்டேஷனின் இந்தியக் கிளையினர், இவ் விழாவிற்கு ஏற்ற முறையில், எந்த விதமாகத் தாங்கள் உதவலாம் என்று பிரதம அமைச்சர் நேருவையும், உப ராஷ்ட்ரபதி டாக்டர் இராதா கிருஷ்ணனையும் கலந்து ஆலோசித்தனர்.

தற்கால சமுதாயப் பிரச்னைகள் பற்றிய தாகூரின் எழுத்தோவியங்களைச் சேகரித்து ஒரு நினைவு மலர் வெளியிடுவதே, பவுண்டேஷனின் இந்தியக் கிளையினர், இந்தியாவில் செய்து வரும் தொண்டிற்கு ஏற்ற செயலாகும். பிரசித்தி பெற்ற இத் தேசபக்தக் கவிஞர் இத் துறையில் இந்தியாவிற்கும், உலகிற்கும் புதிய சில பாதைகளை வகுத்துக் கொடுத்துள்ளார். இத் துறையில் அவர் எழுதிய முக்கியமான எழுத்துக்கள் ஒன்ருகச் சேர்க்கப்படவில்லை; சில மொழிபெயர்க்கப்படக்கூட இல்லை.

இவற்றுள் முக்கியமானவற்றை ஒன்ருகச் சேர்த்து நூல் வடிவில் வெளியிடுவதன் மூலம், இன்றைய இந்தியாவின் பல்வேறு சமுதாயப் பிரச்னைகளுக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் தீர்வு காண முற்படுபவர்கட்கு உதவுவது சிறந்ததாகப்பட்டது. மேலும் இந்தியாவிலும், பிற நாடுகளிலும் வாழ்பவர் பலர் தாகூரை ஒரு கவிஞராக அறிந்திருந்தனரே யன்றி, இந்தியாவின் சமுதாய முன்னேற்றத்திற்கு வழிகோலிய பெரியவர்களில் அவரும் ஒருவர் என அறிந்திருக்கவில்லை.

இந்த நினைவு மலரைத் தயாரித்து வெளியிடும் பொறுப்பை, இதற்கெனவே கூடிய தாகூர் கழகத்திடம் ஒப்புவிக்கும் நல்ல பேறு பவுண்டேஷனுக்குக் கிடைத்தது. இக் கழகத்திற்குப் பிரசித்தி பெற்ற வங்காள மொழிப் புலவரும் இப்பொழுது இந்தியாவின், விஞ்ஞான, பண்பாட்டுத் துறை அமைச்சரும் ஆன பேராசிரியர் ஹுமாயூன் கபீர் தலைமை வகிக்கிருர். இந்த வெளியீட்டுக்குரியவற்றைத் தயாரித்து, தொகுத்து, மொழிபெயர்த்து வெளியிடுவதற்கு, இக் கழகம் பவுண்டேஷனிலிருந்து மானியம் பெறுகின்றது. இந்த வெளியீட்டின் சிறப்புகள் அனைத்திற்கும் உரிய பெருமை, தாகூர் கழகத்

தையும், சிறந்த மொழிபெயர்ப்பாளர்களையும், இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில், இப் பணியை மேற் கொள்ளுமாறு கழகத்தினரால் கேட்டுக் கொள்ளப்பட்ட அறிஞர்கள் அனைவரையுமே சாரும்.

இந்த வெளியீடு, எதிர்பார்க்கப்படும் அளவு கீழ், மேல் நாடுகளில் பரவுமேயானால், இதன் மூலம் கிடைக்கின்ற உரிமைத் தொகை, இன்று மலர்ந்து வரும் இந்தியாவின் பழம் பெரும் தலைவர்களுள் ஒருவராகிய தாகூரின் நூல்களை இக் கழகம் மேற்கொண்டும் வெளியிட ஏதுவாகும்.

இப் புதிய பாரதத்திற்குப் பல செய்திகளை கூறியுள்ளார் தாகூர். கல்வி, சாதி, கிராம முன்னேற்றம், தன்னம்பிக்கை, சுய உழைப்பு, மரபைக் காத்தல், கீழ், மேல் நாடுகளின் பண்பாடுகள் கலப்பதால் விளையும் பயன், மகளிரின் நிலை, சமுதாய நடைமுறை, சுய ஆட்சி ஆகிய பிரச்னைகள் பற்றி இன்றைய இந்தியா முடிவு காண முயன்று வருகிறது. முடிவு கண்டு தீர வேண்டிய இந்தப் பிரச்னைகள் பற்றித் தாகூர் தம் கருத்தைப் பேசியுள்ளார். இப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண முயலும் இந்தியா தன்னிடத்தில் தோன்றிய பெரு மக்களின் உள்ளுணர்வு, தெளிந்த அறிவு, வழிகாட்டும் சக்தி ஆகியவற்றிலிருந்து நிரம்ப எடுத்துக் கொள்ள வேண்டும். அப்பெரு மக்களில் வங்காளி ஆசிரியரும் சீர்திருத்தவாதியும் ஆகிய தாகூரும் ஒருவர்.

—டக்ளஸ் என்ஸ்மன்ஞர்.

# முகவுரை

உலகில் தோன்றிய தலைசிறந்த இசைக் கவிஞர்களில் தாகூரும் ஒருவர் என்பதை உலகம் முழுவதும் ஒப்புக் கொள்கிறது. சிறு கதை எழுத்தாளர், புதின ஆசிரியர், நாடகாசிரியர், இசைக் கலைஞர் என்ற முறைகளிலும் அவர் அழியா இடம் பெற்றுள்ளார். வாழ்க்கையின் பிற்பகுதியில் அவர் ஓவியம் வரைவதை மேற்கொண்டார்; என்றாலும், அப் புதிய கலையில்கூட அவர் சிறப்புப் பெற்றார். சுருங்கக் கூறுமிடத்து, கலைஞர் என்ற முறையில், அச் சொல்லின் மிக விரிந்த பொருளில், அவர் பெற்ற வெற்றி உலக வரலாற்றில் தன்னேரில்லாததாகவே உள்ளது.

என்றாலும், கல்வி, பொருளாதாரம், அரசியல், சமுதாயப் பிரச்சினைகள் என்ற துறைகளிலும், தாகூர் பெரும் பங்கு கொண்டு பெரிதும் உதவி இருக்கிறார் என்பது பலராலும் நன்கு அறியப்படவில்லை. இத் துறைகளில் அவர் செய்துள்ள உதவி இந்தியாவுக்கு மட்டுமல்லாமல் அகில உலகத்திற்கும் பயன்படுவதாகும். அவருடைய அறிவுப் பெருக்கத்தையும், இந்திய மறுமலர்ச்சியில் அவருடைய செல்வாக்கு எவ்வளவு என்பதையும் வங்காளத்திற்கு வெளியில் பலரும் அறியவில்லை. காரணம் இவைபற்றி அவர் எழுதியுள்ள நூல்கள் பலவும் வங்காளியிலேயே உள்ளன. பல நன்கு மொழிபெயர்க்கப்படவில்லை; சில மொழிபெயர்க்கப்படவே இல்லை. தாகூரை, இந்தியா முழுவதுங்கூட அறிந்து கொள்ளவில்லை என்றால், இந்தியாவின் அக வாழ்க்கையைத் தாகூர் எவ்வாறு அறிந்திருந்தார், நவீன இந்தியாவின் ஆக்க வேலைகளுக்கு எவ்வாறு உயிரூட்டினார் என்பவை பற்றி மேலை நாட்டார் அறியவில்லை என்பதில் வியப்பு ஒன்றுமில்லை.

1961-ஆம் ஆண்டு, தாகூரின் நூறாவது பிறந்த ஆண்டாகும். இந்த ஆண்டைக் கொண்டாட சமுதாயப் பிரச்சினை, பொருளாதாரம், அரசியல், கல்வி, சமயம் என்பவை பற்றித் தாகூர் கட்டுரைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிடுதலே சிறந்த முறையாகும் என்று யான் பல நாளாக எண்ணி இருந்தேன். போர்ட் பவுண்டேஷன் நிறுவனத்தார் இந்த நூற்றாண்டு விழாவைக் கொண்டாடு முறையில் இந்தியாவுக்கும் மேனாடுகளுக்கும் உள்ள உறவை வலுப்படுத்த நினைத்தனர். எனவே, சமுதாயம், கல்வி, அரசியல், பொருளாதாரம், சமயம் என்பவை பற்றித் தாகூரின் சிறந்த கருத்துக்களைத் தொகுத்து இந்தியா, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளில் 1961-ஆம் ஆண்டு மேமீ 7உ-யன்று வெளியிடலாம்

என நான் கூறியதை பவுண்டேஷன் நிறுவனத்தார் ஒப்புக் கொண்டனர். அந்த நிறுவனத்தார் அன்புடன் உதவிய 13,000 டாலர் கொண்டு இணைப்பு I-ல் காட்டப் பெற்ற முறையில், பதிவு செய்யப் பெற்ற ஒரு கழகம் அமைக்கப் பெற்றது.

தாகூர் நினைவு மலர் வெளியீட்டுக் குழுவின் சார்பில், நாங்கள், மூல மொழியில் தாகூரை நன்கு கற்ற நூறு பேர்களைச் சந்தித்தோம். தாகூரின் சிறந்த கருத்துக்களை வெளியிடும் முப்பது கட்டுரைகளைத் தேர்ந்தெடுக்குமாறு அவர்களைக் கேட்டுக் கொண்டோம். அவர்களில் நாற்பது பேர்கள் எங்கள் விருப்பத்திற்கு இணங்கி விடையளித்தனர். அவர்கள் விடைகளுள் பெரும்பாலானவை ஒன்றுகவே அமைந்தன என்பதில் வியப்பு ஒன்றுமில்லை. அவர்களுடைய கருத்துக்களை ஒட்டிக் கழகத்தார் முப்பது கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றை மறுபடியும் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்குமாறு செய்தனர். இக் கட்டுரைகளின் பட்டியல், இணைப்பு II-ல் கொடுக்கப் பெற்றுள்ளது. சிறந்த முறையில் ஆங்கிலம் எழுதும் இந்தியர்களுள் ஒருவராகிய டாக்டர் பவானி பட்டாச்சாரியாவை மொழி பெயர்ப்புத் துறை மேற்பார்வைத் தலைமைப் பதவிக்கு நியமித்தார்கள். இந்த முறையில் கட்டுரைகளை முதல் தேர்வு செய்தவர்கள் பட்டியலையும், மொழி பெயர்ப்பாளர் பட்டியலையும் இணைப்புக்கள் III, IV ஆகியவற்றில் காணலாம்.

பின்னர், இந்த முப்பது கட்டுரைகளில், மேனாட்டினரின் கவனத்தை ஈர்த்து அவர்கள் மனத்தில் என்றும் நிலைக்கக்கூடிய 15 அல்லது 20 கட்டுரைகளைத் தேர்ந்தெடுக்குமாறு ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் உள்ள புகழ் பெற்ற அறிஞர்களைக் கேட்டுக் கொண்டோம். இவர்கள் அனைவரும் பல்வேறு அலுவல்களில் மூழ்கி இருந்துங்கூட, நான் கேட்டுக் கொண்டதற்கிணங்க, டைப் செய்யப்பட்ட 600 பக்கங்களைப் படித்துத் தமது கருத்தை, நான் குறிப்பிட்ட கால எல்லைக்குள், தந்தார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், எனது முன்னுரையையும் படித்து அதுபற்றியும் தம்முடைய சிறந்த கருத்துக்களைத் தெரிவித்தனர். அவற்றுள் பல இந்த முன்னுரையில் சேர்க்கப் பெற்றுள்ளன. அவர்களுடைய கருத்துக்களை ஆய்ந்த பிறகு, தாகூர் கழகம் 18 கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்து இந்த மலராகத் தொகுத்துள்ளது. இம் முயற்சியில் ஒத்துழைத்த வெளிநாட்டாரும், வங்காளிகள் அல்லாத இந்தியாவின் பிற பகுதிகளிலுள்ளாரும் நன்றிக்குரியவர்கள். நவீன உலகில் இந்தியாவைப் பற்றி

என நான் கூறியதை பவுண்டேஷன் நிறுவனத்தார் ஒப்புக் கொண்டனர். அந்த நிறுவனத்தார் அன்புடன் உதவிய 13,000 டாலர் கொண்டு இணைப்பு I-ல் காட்டப் பெற்ற முறையில், பதிவு செய்யப் பெற்ற ஒரு கழகம் அமைக்கப் பெற்றது.

தாகூர் நினைவு மலர் வெளியீட்டுக் குழுவின் சார்பில், நாங்கள், மூல மொழியில் தாகூரை நன்கு கற்ற நூறு பேர்களைச் சந்தித்தோம். தாகூரின் சிறந்த கருத்துக்களை வெளியிடும் முப்பது கட்டுரைகளைத் தேர்ந்தெடுக்குமாறு அவர்களைக் கேட்டுக் கொண்டோம். அவர்களில் நாற்பது பேர்கள் எங்கள் விருப்பத்திற்கு இணங்கி விடையளித்தனர். அவர்கள் விடைகளுள் பெரும்பாலானவை ஒன்ருகவே அமைந்தன என்பதில் வியப்பு ஒன்றுமில்லை. அவர்களுடைய கருத்துக்களை ஒட்டிக் கழகத்தார் முப்பது கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றை மறுபடியும் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்குமாறு செய்தனர். இக் கட்டுரைகளின் பட்டியல், இணைப்பு II-ல் கொடுக்கப் பெற்றுள்ளது. சிறந்த முறையில் ஆங்கிலம் எழுதும் இந்தியர்களுள் ஒருவராகிய டாக்டர் பவானி பட்டாச்சாரியாவை மொழி பெயர்ப்புத் துறை மேற்பார்வைத் தலைமைப் பதவிக்கு நியமித்தார்கள். இந்த முறையில் கட்டுரைகளை முதல் தேர்வு செய்தவர்கள் பட்டியலையும், மொழி பெயர்ப்பாளர் பட்டியலையும் இணைப்புக்கள் III, IV ஆகியவற்றில் காணலாம்.

பின்னர், இந்த முப்பது கட்டுரைகளில், மேனுட்டினரின் கவனத்தை ஈர்த்து அவர்கள் மனத்தில் என்றும் நிலைக்கக்கூடிய 15 அல்லது 20 கட்டுரைகளைத் தேர்ந்தெடுக்குமாறு ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் உள்ள புகழ் பெற்ற அறிஞர்களைக் கேட்டுக் கொண்டோம். இவர்கள் அனைவரும் பல்வேறு அலுவல்களில் மூழ்கி இருந்துங்கூட, நான் கேட்டுக் கொண்டதற்கிணங்க, டைப் செய்யப்பட்ட 600 பக்கங்களைப் படித்துத் தமது கருத்தை, நான் குறிப்பிட்ட கால எல்லைக்குள், தந்தார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், எனது முன்னுரையையும் படித்து அதுபற்றியும் தம்முடைய சிறந்த கருத்துக்களைத் தெரிவித்தனர். அவற்றுள் பல இந்த முன்னுரையில் சேர்க்கப் பெற்றுள்ளன. அவர்களுடைய கருத்துக்களை ஆய்ந்த பிறகு, தாகூர் கழகம் 18 கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்து இந்த மலராகத் தொகுத்துள்ளது. இம் முயற்சியில் ஒத்துழைத்த வெளிநாட்டாரும், வங்காளிகள் அல்லாத இந்தியாவின் பிற பகுதிகளிலுள்ளாரும் நன்றிக்குரியவர்கள். நவீன உலகில் இந்தியாவைப் பற்றி

நன்கு அறிந்துகொள்ள உதவிய இவர்களிடம் இந்தக் கழகம் மட்டு மல்லாமல், பிற இடங்களிலுள்ள நன்மக்கள் அனைவரும் நன்றி பாராட்டுகிறார்கள். இவர்களுடைய பெயர்ப் பட்டியல், இணைப்பு V-ல் காணப்படும்.

நீண்ட ஆலோசனைக்குப் பிறகு வாழ்நாள் முழுதும் எந்தக் குறிக் கோளை நோக்கித் தாகூர் சென்று கொண்டிருந்தாரோ, அதைக் குறிப்பிடும் முறையில் இத் தொகுப்புக்கு 'அனைத்துலக மனிதனை நோக்கி' (Towards Universal Man) என்று பெயர் சூட்ட இக் கழகம் முடிவு செய்தது. தாம் இறக்கின்ற அன்று வரைத் தாகூர் சிந்தனை சக்தியில் வளர்ச்சி யடைந்து கொண்டே வந்தார். இந்த வளர்ச்சியின் பயனாக, தேசீயம், சமயத் தனித்தன்மை என்பவற் றைக் கூடக் கொஞ்சங் கொஞ்சமாகத் தாண்டி விட்டார். அவ ருடைய மனமும், கற்பனையும் இவ்வளவு விரிவடைந்த நிலையிலும் அவை, அவர் முதன் முதலில் கொண்டிருந்த சமுதாய, தேசீய, சமயக் கொள்கைகளின் மதிப்பை ஒரு சிறிதும் குறைக்கவில்லை என்பது வியப்புக்குரிய ஒன்று. இவ்வகையில் அவர் உண்மை யாகவே உலகப் பொது மனிதனாக இருந்தார். அவருடைய காலம் நாடு, நம்பிக்கை என்பவற்றின் தனி மதிப்புக்கள் அவருடைய உலகப் பொதுத் தன்மைக்கு அரண் செய்ய உதவின.

இத் தொகுப்பு, அதன் இலட்சியத்திலும் எல்லையிலும், உண்மை யிலேயே அனைத்துலக நிலையை அடைந்துள்ளது என்று கூறலாம். முதலில் தேர்ந்தெடுத்த முப்பது கட்டுரைகளும், தாகூரின் மூல நூல்களை நன்கு கற்ற அறிஞர்களால் தேர்தெடுக்கப் பெற்றன. இவற்றிலிருந்து இறுதித் தேர்வு செய்தவர்கள் இந்தியா, ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய நாட்டைச் சேர்ந்த அறிஞர்கள். எனவே, கிழக்கும் மேற்கும் என்றும் விடாமல் விரும்பி ஏற்றுக் கொள்ளும் கட்டுரைகளே இதில் இடம் பெற்றுள்ளன. என்றாலும், இத் தேர்வு அனைவரையும் திருப்தி செய்ய முடியாது என்பதை யான் அறிவேன். தேர்ந்த திறனாய்வாளர்கள் விட்டு ஒதுக்கிவிடக் கூடிய கட்டுரைகள் சில இதில் உள்ளன; அவர்கள் சேர்க்க விரும்புபவை பல விடப் பட்டுள்ளன. எந்த ஒரு தொகுப்பும், தொகுத்தவரையல்லாமல் அனைவரையும் திருப்திப்படுத்தும் என்று கூறமுடியாது என்பதைத் தான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சர்வதேச முயற்சியாகிய இதனை நிறைவேற்றுவதற்கு ஒத்து ழைத்தவர்கள் அனைவருக்கும் கழகம் நன்றி பாராட்டுகிறது. தாகூரால் தோற்றுவிக்கப்பட்ட சர்வதேசப் பல்கலைக் கழகமாகிய

விஸ்வபாரதிக்கும், இக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் கொள்ள உரிமை வழங்கிய தாகூரின் நூல்கள் உரிமையாளருக்கும் கழகம் கடமைப்பட்டுள்ளது. முதல் தேர்வாகிய முப்பது கட்டுரைகளைத் தந்தவர்கட்கும், மொழி பெயர்ப்பாளர்கட்கும், இந்தியா, ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய இடங்களிலிருந்து இதற்கு ஒத்துழைத்தவர்கட்கும், கழக அங்கத்தினர்கட்கும் தனிப்பட்ட முறையில் எனது நன்றி உரியதாகும். ஓரளவு பொறுமையைச் சோதிப்பதும், ஆனால் இன்றியமையாததுமான கட்டுரைகட்குக் குறிப்புத் தயாரித்தல், தட்டெழுத்தில் அச்சிடல் முதலிய வேலைகளைச் செய்து கொடுத்த சாந்தி நிகேதனத்தைச் சேர்ந்த ஸ்ரீ கிருஷ்ண ராய்க்கும், கல்கத்தா தேசீய நூலகத்தைச் சேர்ந்த ஸ்ரீ கேசவனுக்கும், அவரைச் சேர்ந்தவர்கட்கும் சிறப்பான முறையில் நன்றி தெரிவிக்க வேண்டும். போர்ட் பவுண்டேஷனின் இந்தியக் கிளையின் பிரதிநிதியாகிய டாக்டர் டக்ளஸ் என்ஸ்மன்ஞருடைய தூண்டுதல் இல்லையானால் இத் திட்டத்தை இவ்வளவு விரைவில் நிறைவேற்ற முடியாது ஆகலின் அவருக்கும் சிறப்பான முறையில் நன்றி உரியது. மேலும் டாக்டர் பவானி பட்டாச்சாரியா என்னுடன் இருந்து ஒவ்வொரு கட்டுரையையும் படித்துப் பார்த்து, ஆங்கில மொழி பெயர்ப்பு, தாகூரின் உள்ளக் கருத்தோடு பொருந்தி இருக்கும் முறையில் பணி புரிந்ததையும் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். என்னுடைய உதவிக் காரியதரிசி ஸ்ரீ ஆர். என். ராயும் ஓய்வு நேரங்களில் கட்டுரைகளுக்கும், முன்னுரைக்கும் வடிவு கொடுக்கும் பணியில் உதவினார். மூன்று கண்டங்களிலும் இந் நூலை மிகக் குறுகிய காலத்தில் வெளி வருமாறு உதவிய ஆசியா வெளியீட்டக நெறியாளர் ஸ்ரீ ஜெயசிங்கே அவர்களையும், ஸ்ரீ சரஸ்வதி அச்சகத்தைச் சேர்ந்த ஸ்ரீ சைலேந்திர நாத் குஹா ராய் அவர்களையும் குறிப்பிட வேண்டும்.

இறுதியாகக் கவிஞரின் மகனார் ஸ்ரீ ரதீந்திர நாத் தாகூர் இந் நூல் வெளியீட்டால் பெறும் ராயல்டி உரிமைத் தொகை அனைத்தையும் விஸ்வபாரதியில் பயிலும் வங்காளி மொழியைத் தாய் மொழியாகப் பெறாத தாகூர் மாணவர்கட்குப் பரிசாகவோ, உபகாரச் சம்பளமாகவோ வழங்குமாறு அன்புடன் உதவியதற்குக் கழகம் தன் நன்றியைச் செலுத்த விரும்புகிறது.

புது டில்லி,
7—5—1961.

ஹுமாயூன் கபிர்.

# முன்னுரை

கருவில் திருவுடையவர்கள் அல்லது மாமேதைகள் (Genius) எவ்வாறு தோன்றுகின்றனர் என்று கூற இயலாது; ஏன் எனில், பொதுச் சட்டத்திற்குப் புறனடைபோல, உலகப் பொது நடைக்குப் புறம்பாகவே அவர்கள் தோன்றுகின்றனர். ஆனால் அதே நேரத்தில் சமுதாயத்தின் அக மனத்திலும், நனவிலி மனத்திலும் (Sub-conscious and unconscious mind) தோன்றும் உணர்ச்சிகள், கருத்துக்கள் ஆகியவற்றிற்கு வடிவு கொடுக்கும் பணியே கருவில் திருவுடையவர்கள் கடமையாகிறது. இம் முறையில், திருவுடையாருக்கும் பொது மக்களுக்கும் ஒரு தொடர்பு உண்டாகிறது. இதனாலேயே திருவுடையாரைக் கண்ட முதல் வியப்புத் தீர்ந்தவுடன், அவரிடத்து மக்கள் பெரு மதிப்பும் மரியாதையும் காட்டுகின்றனர். தாங்கள் தெளிவாக வெளியிட முடியாமல் அகத்தே பனிப் படலம் போல் உணர்கின்ற உணர்ச்சிகள் முதலியவற்றிற்கு, திருவுடையார் சொற்கள் வடிவு கொடுக்கின்றன என, மக்கள் உணர்கின்றார்கள். அத்தகைய உறவால் மாமேதையும் ஒரு பயனடைகின்றார். சாதாரண மனிதனுடைய மனத்தில் கிடந்து மருவுகின்ற தொடர்பற்ற உணர்ச்சிகள், கோரிக்கைகள் ஆகியவற்றிலிருந்து அவரும் ஒரு சக்தியைப் பெறுகின்றார். இந்த இரண்டு வகையிலும் தாகூர் சிறந்த திருவுடையாராக அமைகின்றார். அவர் விந்தையானவர் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆனால் அதே நேரத்தில் எந்தப் பொது மக்களை விரும்பி அவர்கட்காக வாழ்ந்தாரோ அவர்களுடைய வாழ்விலேயே அவர் ஆழ்ந்து இருந்தார்.

தாம் பிறந்த காலத்தாலும், இடத்தாலும் தாகூர் பேறு பெற்றவர். அமைதியாக இருந்த இந்திய வாழ்க்கையை மேனாட்டுத் தொடர்பு ஓரளவு கலக்கி விட்டது. ஒரு புதிய விழிப்புணர்ச்சி நாடு முழுவதும் மெல்லப் பரவலாயிற்று. அத் தொடர்பின் தொடக்கத்தில் இந்திய மனம் அதைக் கண்டு பிரமித்துப்போயிற்று. ஆகவே, அத் தொடக்க காலச் சீர்திருத்தவாதிகள் மேற்கை அப்படியே படிசெய் (காப்பி) கின்ற அளவுக்குச் சென்று விட்டனர். அவர்களுடைய அதீதத்தைப் பார்த்து இன்று நாம் சிரிக்கலாம். ஆனால் அவர்கள் மனத் திடத்தோடும், முழு மனத்தோடும் மேனாட்டுக் கருத்துக்களை ஏற்றுக் கொண்டிராவிட்டால், இந்திய மறுமலர்ச்சி இவ்வளவு விரைவாகவும், இவ்வளவு தூரத்திற்கும் முன்னேறி இருக்க முடியாது. சமுதாய சடத்துவ சக்திகள்

எங்குமே வலுவாக உள்ளன. மிகப் பழமையான மரபோடு கூடிய இந்தியாவில் இச் சடத்துவம் வெல்ல முடியாததாக அமைந்து விட்டது. எல்லை மீறிய வெறி என்று கூறத் தக்க முறையில், புதுமையில் பக்தி பூண்ட ஒரு கூட்டத்தால்தான் இந்தப் பழமைக் கோட்டையைத் தகர்க்க இயலும்.

தொடக்கத்தில் ஆராய்ந்து பாராமல் ஏற்பட்ட வியப்பு நீண்ட காலம் நிலைத்து நிற்க முடியாது. மேனாட்டினர் மதித்தவற்றின் மேல் கொண்ட வியப்பு, அவர்களுடைய இலக்கியம், தத்துவம், சமயம் ஆகியவற்றைக் கற்கத் தூண்டியது; அதிகப்படியான அறிவு அதிகத் தெளிவைக் கொணர்ந்தது. இத் தெளிவு காரணமாக மேனாட்டு நாகரிகத்தின் சிறப்புக்களும், சிறப்பில்லாப் பகுதிகளும் அறியப்பெற்றன. இதே நேரத்தில், கீழை நாட்டுக் கருத்துக்களில் அதிக மதிப்பும், அறிவும் தோன்றின. சர் வில்லியம் ஜோன்ஸ் போன்ற மேனாட்டு அறிஞர்கள் நம்முடைய பூர்வக் கருத்துக்களாகிய பொக்கிஷத்தை மறுபடியும் நாம் அறியும்படி செய்தனர். இராஜா ராம் மோகன் ராய், அராபிய, சம்ஸ்கிருத மொழிப் புலவராகத் தொடங்கி இறுதியில் மேனாட்டுக் கருத்துக்களை ஆழ்ந்து கற்கலானார். கீழ், மேல் நாட்டுச் சமயங்களை நன்கு ஆராய்ந்த பிறகு, வாழ்க்கை, வாழ்வு ஆகியவை பற்றிய மிக உயர்ந்த கொள்கைகள் முதன் முதலில் கீழை நாடுகளிலேயே கூறப்பெற்றன என்று அவர் உறுதியாகக் கூறினார். பிரம்ம சமாஜத்தை நிறுவி, மேனாட்டுக் கருத்துக்களை இந்தியாவின் மிகப் பழைய கொள்கைகளுடன் கலக்க முடியும் என்பதை நிரூபித்தார். இதன் பயனாக, அளவால் சிறிய அந்த சமாஜத்தினர் இந்திய மறுமலர்ச்சியில் பெரிய அளவு பங்கு கொண்டனர் என்பதில் வியப்பொன்றுமில்லை.

இராஜா ராம் மோகன் ராய் ஹிந்துக்களுக்குச் செய்ததைப் போலவே, சர் சையத் அகமத்கான் முஸ்லிம்கட்குச் செய்ய முயன்றார். ஆனாலும் அதில் அவ்வளவு வெற்றி பெறவில்லை. இஸ்லாம் சமயத்தை மேனாட்டுக் கண்கொண்டு பார்த்து விளக்கம் செய்ய அகமத்கான் முயன்றது கிழக்குக் கருத்துக்களையும், மேற்கத்தியக் கருத்துக்களையும் இணைக்க முயன்றமைக்கு ஓர் எடுத்துக் காட்டு. பஞ்சாபில் தோன்றிய ஆர்ய சமாஜமும், மேற்கிந்தியா, தென்னிந்தியா ஆகிய இடங்களில் தோன்றிய பிரார்த்தனை சமாஜமும் பிரம்ம சமாஜத்துடன் பெரிதும் ஒற்றுமையுடையவை,

இவைகள், சில அம்சங்களில் தம்முள் மாறுபட்டாலும் பழைய சமயக் கருத்துக்களேயும், நவீன விஞ்ஞானக் கருத்துக்களேயும் ஒற்றுமைப் படுத்தவே முயன்றன. முதன் முதலில் தோன்றிய வியப்புணர்ச்சி சிறிது சிறிதாகக் குறைந்து, நடு நிலேயுடன் அனேத்தையும் காண முற்பட்ட காலத்தில்தான் தாகூர் பிறந்தார். அவர் பிறந்த காலத்தில், புதிய கருத்துக்கள் கொண்டு வந்த இலட்சியம் இன்னும் வலுவாக நிலேபெற்றிருந்துங்கூட, இந்தியாவின் சொந்தக் கருத்துக்களில் மக்கள் அதிகக் கவனம் செலுத்தத் தொடங்கினர்கள்.

இது காலத்தால் மட்டுமல்லாமல், இடத்தாலும் பொருத்த முடையதாய் அமைந்தது. மேனுட்டின் தொடர்பு, இந்தியாவின் பிற பகுதிகளில் ஏற்படுவதற்கு முன்னரே வங்காளத்தில் விரிவான முறையில் ஏற்பட்டது. வங்காளத்திலும்கூடக் கல்கத்தாவில் தான் அதிகச் சுறுசுறுப்புக் காணப்பட்டது. வாணிகர்கள், போர் புரிபவர்கள், ஆட்சியாளர்கள், சமயப் பிரசாரகர்கள் ஆகியவர்களுடன், அனேவர்க்கும் மேலாக, பிறப்பிலேயே பிறருக்கு அறிவு கொளுத்தும் சக்தியைப் பெற்ற ஆசிரியர்களும் இந்த நகரத்தை யும், அதன் சுற்றுப்புறத்தையம் நோக்கியே வந்து சேர்ந்தனர். அவர்கள் இங்கிலாந்திலிருந்து மட்டுமல்லாமல், போர்ச்சுகல், ஹாலந்து, பிரான்ஸ் மற்றும் ஏனேய ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் வந்தனர். அக் காலத்தில் எளிதில் செல்ல முடியாத நீண்ட தூரத்தில் உள்ள ரஷ்யாவிலிருந்தும் கூட, ஒருவர் கல்கத்தாவுக்கு வந்திருந்ததாகக் கல்கத்தா நாடக அரங்கில் ஒரு பெயர் பொறிக்கப் பெற்றுள்ளது. தாகூரைப் பொறுத்தவரை கிழக்கும் மேற்கும் ஒன்று கூடியது ஓர் இலட்சியமாகவும் நேரே நிகழ்ந்த நிகழ்ச்சியாகவும் அமைந்தது.

தாகூர் ஒரு மாமேதையாக மலர்வதற்கு அவருடைய குடும்பச் சூழ்நிலேயும் உதவியது. கிழக்கு வங்காளத்திலிருந்து வந்த அந்தக் குடும்பம் மொகலாயர் காலத்தில் செல்வமும் வளமும் பெற்றுத் திகழ்ந்தது. ஆட்சியாளரோடு அவர்கள் ஒத்துழைத்தது பண்பாட்டையும், செல்வத்தையும் [illegible] வெறுப்பையும் வளர்த்தது. அந்தப் பழைய காலத்தைப்பற்றி அதிகம் தெரியாவிடினும், கிழக்கு இந்தியக் கம்பெனி இங்கு நிலேபெற்ற காலத்தில், கல்கத்தாவில் செல்வமும் செல்வாக்கும் நிறைந்த குடும்பங்களில் தாகூர் குடும்பமும் ஒன்ருகத் திகழ்ந்தது. தாகூரின் பாட்டனர் துவாரகாநாத் தாகூர், தம் செல்வ வாழ்க்கை காரண

மாக அரசு குமாரர் என்று அழைக்கப்பட்டார். மேனாட்டுக் கல்வியைப் பரப்புவதில் ராம் மோகன் ராயுடன் சேர்ந்து அவரும் பெரும் பாடுபட்டார். தாகூரின் தந்தை காலை நேரத்தில் உபநிஷதங்களையும் ஹபீசையும் பாராயணம் செய்தார் என்று சொல்லப் படுகிறது. அவருடைய பக்தி, நம்பிக்கை என்பவை காரணமாக அவரை மகரிஷி என்றே அழைத்தார்கள். ராமமோகன் ராய்க்குப் பிறகு அவரே பிரம்ம சமாஜத்தின் மிக முக்கியமான தலைவரானார். உபநிஷத ஐதீகங்களிலும், இஸ்லாமிய ஐதீகங்களிலும் மூழ்கி இருந்தமையின் தாகூர் குடும்பம் மேனாட்டுக் கல்வி, வாழ்க்கை முறை இவற்றைப் பின்பற்றும் முதல் தலைமுறையாரில் முதலாவதாக விளங்கிற்று.

வாழ்க்கையைப் பற்றித் தாகூர் கண்ட முறையில், ஐதீகமும், பரிசோதனையும் கலந்திருந்த சிறப்புக்குக் காரணம் அவருடைய குடும்பத்தின் தனிப்பட்ட சூழ்நிலையே யாகும். தாகூர் பிறப்பதற்கு முன்னரே மூன்று தலைமுறைகளாக, மிகச் சிறந்த வன்மையுடையவர்கள் அக் குடும்பத்தில் தோன்றி இருந்தனர். சிறந்த புகழையும் நல்ல செல்வத்தையும் பெற்றுத் திகழ்ந்தாலும், பிராம்மணர்களால் தூற்றப் பெற்றுவந்தது அக் குடும்பம். தாகூர் குடும்பத்துடன் உணவு கொள்வது சமுதாய வெறுப்பையும், அவர் குடும்பத்தில் திருமண சம்பந்தம் வைத்துத் கொள்வது ஸனாதனிகளின் விரோதத்தையும் உண்டாக்கிற்று. தம்முடைய செல்வ நிலையையும், அறிவுத் திறத்தையும் நன்கு உணர்ந்திருந்த அக் குடும்பம், அன்று நிலத்திருந்த சமுதாயப் பழக்க வழக்கங்களைப் பற்றி ஒரு சிறிதும் கவலைப்படாமல் வாழ்ந்தது. அன்றிருந்த மரபுக்கு விரோதமாகத் தாகூரின் பாட்டனார் இங்கிலாந்துக்குச் சென்று வந்தார். பிரம்ம சமாஜக் கொள்கைகளைப் பரப்பியதால், ஸனாதனக் கொள்கைக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தவர்களின் தலைவராக இருந்தார். தாகூரின் மூத்த சோதரர் சத்தியேந்திர நாத், இந்தியன் சிவில் சர்வீஸ் தேர்வில் வெற்றி பெற்ற முதல் இந்தியராவார். பெண்கள் உடை விஷயத்தில் சத்தியேந்திர நாத்தின் மனைவியார் மேற்கொண்ட முறையே வங்காளம் முழுவதும் பரவி, இந்தியாவின் பல பகுதிகளுக்கும் விரிந்து சென்றது.

ராம் மோகன் ராயின் பிரம்ம சமாஜக் கருத்துக்களை எவ்வளவு அதிர்ச்சியுடன் ஹிந்து சமுதாயம் ஏற்றுக் கொண்டது என்பதை இவ்வளவு காலத்துக்குப் பிறகு நாம் சரியாக அறிய முடியாது. பல நூற்றாண்டுகளாக, முதலில் இஸ்லாத்தாலும், பிறகு கிறிஸ்துவ

சமயத்தாலும் புறத்திலிருந்தே ஹிந்து சமயம் தாக்கப்பட்டது. இடைக்காலத்தில் ஞானிகள் தொடங்கிய இயக்கங்கள் எல்லாம், ஒற்றுமையும், ஜனநாயக அடிப்படையுங் கொண்ட இஸ்லாத்தின் தாக்குதலின் பயனுகவே ஏற்பட்டன. ஆனால் ஹிந்து சமயத்தின் பல நம்பிக்கைகளை இந்த இடைக்கால ஞானிகள் ஒதுக்கி விட வில்லை. ஹிந்து சமயத்தில் உள்ள தெய்வங்கள் எல்லாம் இந்த ஞானிகளின் இயக்கங்களில் இடம் பெற்றன. அறிவுத் துறையில், சஞ்சல புத்தியை ஏற்றுக் கொள்ள ராம் மோகன் ராய் மறுத்து விட்டார். அவருடைய ஒரே கடவுள் கொள்கை மிகப் பிடிவாதமான இஸ்லாமியரையும் திருப்திப்படுத்துவதாக அமைந்தது. அவருடைய ஒரு தெய்வக் கொள்கையும் சடங்குகளை ஒதுக்கும் இயல்பும் இங்கிலாந்தின் ஆதி நாட்களையும், ஐரோப்பாவில் ஏற்பட்ட தூய்மையாக்குவோர் இயக்கத்தையும் நினைவூட்டிற்று. தம்முடைய கொள்கைகளை வலியுறுத்த உபநிஷதம் போன்ற பழைய சாத்திரங்களை ராம் மோகன் ராய் பயன்படுத்தியது ஸநாதனிகளுக்கு மிகவும் எரிச்சலை உண்டாக்கிற்று. மகரிஷியும் உபநிஷதங்களில் மிகவும் நம்பிக்கை வைத்திருந்ததோடு பல தெய்வ வணக்கத்தையும், விக்ரக வழிபாட்டையும் அறவே வெறுத்தார்.

எனவே ஆழமான சமயக் கொள்கையுடன், ஆனால் சடங்குகளை அறவே வெறுத்து ஒதுக்கும் ஒரு குடும்பத்தில் தாகூர் தோன்றினர். இந்தியாவின் பழைய ஐதீகங்களைச் சிறிதும் மறுக்காமல் ஏற்றுக் கொண்டார். சம்ஸ்கிருத மொழியில் காணப்பட்ட பண்பாட்டு இலட்சியங்களையும், சமய இலட்சியங்களையும் அவர் ஏற்றுக் கொண்டார். அவருடைய குடும்ப வரலாறே இடைக்கால வாழ்வு முறையை அவருக்கு அறிவித்தது. மொகலாய ஆட்சியில் வளர்ந்த இரு சமயக் கலப்புப் பண்பாட்டையும் அவர் ஏற்றுக் கொண்டார். இந்த இரண்டு வகைகளிலும் அன்று காணப்பட்ட பிராம்மண ஜமீந்தார்களிலிருந்து, தாகூர் மாறுபட்டிருக்கவில்லை. ஆனால் அவர்களைப் போலல்லாமல், நவீன உலக வாழ்க்கை முறையையும் அவர் அறியுமாறு அவருடைய குடும்ப மரபு செய்தது.

மேனாட்டார் மதிப்புக்களைப் (values) பரிவோடு அறிந்திருந்தார் தாகூர். ஆனால் அவற்றை இயந்திரம் போல் படி செய்வதால் ஏற்படக்கூடிய தீமையையும் நன்கு அறிந்திருந்தார். திடீரெனத் தோன்றக்கூடியனவும், உள்நாட்டில் வளர்ந்தவையுமான சில சக்திகள் பிற நாட்டுப் பண்பாடாகிய அச்சில் வைத்து அமுக்கப்பட்டால் எவ்வாறு அவதிப்படும் என்பதையும் தெளிவாக விளக்கினர்.

ஆனால் அதே நேரத்தில் வேறு எந்தப் பகுதியிலிருந்து வந்ததாயினும் சிறந்த கொள்கைகளை வரவேற்றுத் தம்முடைய பண்பாட்டில் கலந்து கொள்ள எப்பொழுதும் தயாராக இருந்தார். பழைய கால இந்தியாவிலிருந்தும், மத்திய கால இந்தியாவிலிருந்தும் வருகின்ற மரபுகளால் உருவாக்கப் பெற்று, அதே நேரத்தில் நவ இந்தியாவின் முன்னோடியாகவும் இருந்த அவருடைய குடும்பம், பழமையை எவ்விதத்திலும் விட்டுக் கொடாமல், புது யுகத்தின் சோதனைகளையும் ஏற்றுக் கொண்டது. அவரிடம் காணப்பட்ட இந்தியப் பண்பாட்டையும், மேனாட்டின் புதிய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளும் உயர்ந்த மனப்பான்மையையும் அவருடைய குடும்ப அடிப்படையே உதவிற்று. பழைய ஐதீகத்தையும் புதிய சோதனையையும் கலக்கும் அவருடைய வியத்தகு ஆற்றலின் இரகசியம் இங்கேதான் காணக் கிடக்கிறது.

தாகூரைப் பொது மக்களுடன் ஐக்கியப்படுத்தும் மற்றொன்றும் இருக்கிறது. அவருடைய தந்தையார் தம் சொத்துக்களைப் பராமரிக்கும் பொறுப்பை, தாகூரின் இளமைப் பருவத்திலேயே, அவருக்கு வழங்கி விட்டார். தம்முடைய பிள்ளைகளுள் மிக இளையவரும், கனவு காணும் கவிஞர் என்ற பெயரை ஏற்கனவே எடுத்துவிட்டவருமான ரவீந்தரரிடம் தம் சொத்துக்களைப் பராமரிக்கும் பொறுப்பை மகரிஷி ஒப்படைத்ததைக் கண்டு பலரும் வியப்படைந்தனர். குடும்பச் சொத்தைப் பராமரிக்கும் பொறுப்பை மகரிஷி தம்மிடம் ஒப்படைத்தது மிகவும் விவேகமான செயல் என்று அனைவரும் கருதும்படி கவிஞர் செய்தார். இதில் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், கிழக்கு வங்காளத்தில் கிராமப் பகுதிகளிலேயே தாகூர் பல ஆண்டுகள் வசிக்க நேரிட்டது. பத்மா நதியில் மணற் கரைகளிடையே படகோட்டுவதிலேயே அவர் பெரும் பொழுதைச் செலவு செய்தார். வங்காளக் கிராமம், கிராம மக்கள் ஆகியவர்களிடம் இதன் மூலம் அவர் நெருங்கிய தொடர்பு கொள்ள முடிந்தது. இந்தப் பகுதிகளில் அவர் கண்ட வாழ்க்கைமுறை அப் பிராந்தியங்களின் மிகப் பழைய மரபுடன் தொடர்பு கொண்டதாயிருந்தது. இடைக் காலத்தில் வளர்ந்த நகரப் பண்பாட்டிற்கு மிகமுற்பட்டே அக் கிராமியப் பண்பு மக்கள் மனத்தில் வேரூன்றி வளர்ந்திருந்தது. நவீன காலத்தில் கல்வி பெற்ற வகுப்பார்களில் பெரும்பாலார் அறிய முடியாத ஓர் உலகத்தில் தாகூர் நுழைய முடிந்தது. அம் மக்களின் ஒருமித்த மன வாழ்வின் ஆழத்தில் தாகூர் கால்கொள்ள முடிந்தது.

வாழ்வின் ஒற்றுமைத் தன்மையில் அவர் கொண்ட நம்பிக்கையே அவருடைய வலிமையாகும். அவருடைய சக்தியை எந்தப் பண்பாட்டுப் பிரிவினையும், குறிக்கோள் பிரிவினையும் ஒன்றுஞ் செய்ய முடியவில்லை. எனவே கலைக்கும், வாழ்வுக்கும் இடையே எவ்விதப் பிரிவினையையும் அவர் காணாததில் வியப்பு ஒன்றுமில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஐரோப்பாவில் அழகை வணங்கும் கொள்கை வெற்றி பெறலாயிற்று. வாழ்வோடு கலைக்குள்ள தொடர்பைப் பற்றிக் கவலைப்படாமல், கலையை கலைக்காகவே பயில வேண்டும் என்று கூறுபவர் பலர் இருந்தனர். வாழ்வில் காணப்படும் கொடுமைகளிலிருந்து மறைந்து கொள்வதே கலை முயற்சியின் இலட்சியமாக இருந்து வந்தது. கவிஞனும் கலைஞனும் கனவு காண்பதில் தலையாயவர்கள் என்று இக்கொள்கையுடையார் கூறினர். இந்த இலட்சியம் தாகூரின் இளமைப் பருவத்தில் அவரையும் கவர்ந்தது. ஆனால் குடும்பச் சொத்தைப் பராமரிக்கும் பொறுப்புக் காரணமாக சாதாரண மனிதனின் இன்பம், துன்பம் என்ற இரண்டையும் நேருக்கு நேர் காணும் வாய்ப்பும் அவருக்கு ஏற்பட்டது. இந்த அனுபவத்தின் பிறகு, வாழ்விலிருந்து பிரிக்கப்பட்ட கலையை ஏற்றுக்கொள்ள அவர் மறுத்து விட்டார். அழகை அவர் வழிபட்டாலும் அதனை வாழ்வின் ஒரு வெளிப்பாடாகவே கருதினார். அதனுடன் கூட, வாழ்வில் அழகு இருந்தாலொழிய அதில் எவ்வித சிறப்பும் இல்லை என்று கூறினார். தாகூரைப் பொறுத்தமட்டில் கவிஞனின் சமயமே மனிதனின் சமயமாகவும் இருந்தது.

## II

தாகூரின் வாழ்க்கையையும் அவருடைய நூல்களையும் ஆராயும் ஒருவர், அவருடைய பலதிறப் பயிற்சியுள்ள பேராற்றலைக் கண்டு வியக்காமல் இருத்தற்கில்லை. முக்கியமாக அவர் ஒரு கவிஞர் எனினும், கவிதையோடு மட்டும் அவர் நின்று விடவில்லை.

செய்துள்ள வேலையின் அளவைக் கணக்கிட்டாற்கூட எந்த எழுத்தாளரையும் அவருடன் ஒப்பிட முடியாது. ஓராயிரத்துக்கு மேற்பட்ட கவிதைகளும், இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களும் நீங்கலாக, மிகவும் அதிகமான சிறு கதைகள், புதினங்கள், நாடகங்கள், கட்டுரைகள் ஆகிய பல்வேறு மாறுபட்ட துறைகளில் அவருடைய எழுத்தோவியங்கள் உள்ளன. தரத்திலுங்கூட அவர் எட்டிப் பிடித்துள்ள நிலையை, மிக உயர்ந்த பண்பட்ட எழுத்தாளர்கள் மட்டுமே எட்டியுள்ளனர்.

அவருடைய இலக்கியப் படைப்பின் பல்வேறுபட்ட துறைகளே நமக்கு வியப்பை அளிப்பனவாயினும், பரந்துபட்ட இலக்கியம் அவருடைய சக்தியை முழுவதும் வாங்கிவிட வில்லை. ஏறத்தாழ எழுபது வயது ஆகையில் அவர் ஓவியக் கலையை மேற்கொண்டார். என்றாலும் பத்து ஆண்டுகளில் ஏறத்தாழ மூவாயிரம் படங்களைத் தீட்டினார்; அவற்றுள் சில மிக உயர்ந்த தரத்தன. இவற்றையல்லாமல், சமயம், கல்வி, அரசியல், சமுதாய முன்னேற்றம், ஆன்மீக முன்னேற்றம், பொருளாதார மறுமலர்ச்சி ஆகியவற்றிற்கும் அவர் எழுத்து மூலம் பணி புரிந்துள்ளார். இத் துறைகளில் அவர் புரிந்துள்ள பணிகள், இந்தியாவின் மிகச் சிறந்த மக்களில் ஒருவராக அவரை ஆக்கியதுடன், மானிட இனம் முழுவதற்கும் ஒரு செய்தியைக் கொண்டுவந்தவராகவும் ஆக்கின. அவருடைய பேராற்றலின், அதிகம் அறிந்து கொள்ளப்படாத சில பகுதிகளை, உலகத்தாரின் கவனத்துக்குக் கொண்டு வருவதே இந்த மலரின் நோக்கமாகும்.

கல்வித் துறை வல்லுநராகிய தாகூரில் தொடங்குவோம். கல்வியைப் பற்றிய அவருடைய கருத்துக்கள் அவருடைய அனுபவத்திலிருந்தே பெறப்பட்டவை. வேலைக்காரர்களின் கட்டுப்பாட்டில் நகரத்தில் வாழ்ந்த குறுகிய வாழ்க்கையே, குழந்தைகட்குத் தேவையான உரிமை, பரந்த இடம் ஆகியவற்றை அவர் சிறப்பாக உணருமாறு செய்தது. வாலாயமான காரியங்களைச் செய்யுமாறு வற்புறுத்தப்பட்டதும், அவருக்கு விருப்பம் இல்லாதவற்றைக் கற்குமாறு கட்டுப்பாடு செய்ததும், கல்வி நிலையங்களில் பயன்படுத்தப்பட்ட வழி முறைகளை அவர் வெறுக்குமாறு செய்தன. அன்றியும் தமக்கு வழங்கப்பட்ட கல்விக்கும், தம்முடைய சமுதாய வாழ்வுக்கும், பண்பாட்டு மரபுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பதை அவர் உள்ளத்துணர்ச்சியால் அறிந்தார். அவருடைய தந்தையார் முதன் முறையாக அவரை இமயமலைக்கு அழைத்துச் சென்ற பொழுது, இயற்கையைப் பெரு வியப்போடும் இன்பத்தோடும் தாம் கண்டதை அவரே எழுதியுள்ளார். குழந்தை, நல்ல உடல், மன வளர்ச்சி பெறுவதற்குப் புறக்கணிப்பிலிருந்து விடுதலையும், இயற்கையோடு ஒன்றி ஒட்டிய உறவும் இன்றியமையாதவை என்ற உறுதியை அவரிடம் வளர்த்தன. குழந்தையின் விருப்பத்திற்குத் தக்க முறையில் ஆக்கம் அளிக்கக் கூடிய கல்வி முறை ஒன்றை வகுக்க விரும்பினார். அந்தக் கல்வி முறை நாட்டின் மரபுகள், வரலாறு ஆகியவற்றிலிருந்து தோன்றியதாய் இயற்கையோடு ஒன்றி ஒட்டிய தொடர்புடையதாய் இருத்தல் வேண்டும்.

" கல்வியின் மாறுபாடுகள் " என்ற அவருடைய முதலாவது கட்டுரை அத் துறையில் முக்கியமானது என்பது மட்டுமல்லாமல் மனிதன் முழு வளர்ச்சியடைவதற்குத் தாய் மொழிப் படிப்பு மிக இன்றியமையாதது என்பதையும் விளக்கிற்று. இம் முறையில் அவர் கல்வித் துறையில் ஒரு புரட்சிக்காரராக ஆனார். ஆனால், அன்றுள்ள நடைமுறையில் மறந்தோ, ஒதுக்கியோ விடப்பட்ட சில மதிப்புடைய கொள்கைகளை மறுபடியும் அவற்றின் இடத்தில் இருக்குமாறு செய்த அளவில்தான் அவர் புரட்சிக்காரர். பழைய மரபிலிருந்து முற்றிலும் பிரித்துக் கொண்டு கிளம்பும் எந்த ஒரு புரட்சியும் முடிவில் தோற்றே போகும் என்பதை அறியும் அறிவும், தீர்க்கதரிசனமும் அவரிடம் இருந்தன. ஒரு புரட்சி வெற்றி பெற வேண்டுமானால், மறந்து போன மதிப்புடைய கொள்கைகளைக் கண்டு பிடித்துக் காலத்துக்கேற்ற மாறுதல்களுடன் புகுத்த வேண்டும்.

இயற்கையோடு பொருந்திய நிலையில், குழந்தையின் 'ஆளுமையை' (Personality) வளர்ப்பதே கல்வி என்பது அவருடைய முடிவான சித்தாந்தமாகும். இயற்கையோடு பொருந்தி, தன் ஆற்றலை வளர்ப்பதன் மூலமே, குழந்தை இணைக்கப்பட்ட (integrated) ஆளுமையைப் பெற முடியும் என அவர் நம்பினார். பல்வேறு வகைகளில் காட்சியளிக்கும் இயற்கை அழகு, குழந்தையின் அக மனத்தில், அக் குழந்தை அறியாத முறையில் இறங்க வேண்டும். மாலையின் அமைதி, காலையின் எதிர்பார்க்கும் இயல்பு, விண்மீன்களின் பெரு வனப்பு, காலைக் கதிரவனின் புறப்பாடு ஆகியவை குழந்தையின் ஆளுமையில் கலக்கவேண்டும். இயற்கையில் ஏற்படும் முரண்பாடுகளையும் போராட்டங்களையும் அவர் அறியாமல் இல்லை. ஆனால், இம் முரண்பாடுகள் முடிவான 'ஒன்றலில்' (harmony) வெல்லப்படுகின்றன என அவர் நம்பினார். புற உலகில் காணப்படும் ஒன்றலை அறிய அறியக் குழந்தையின் இயல்பிலும் ஒன்றல் ஏற்படும்.

தாகூரின் கல்விக் குறிக்கோளில் குறுகிய மனப்பான்மைக்கு இடமே இல்லை. மனித இயல்பின் எந்தப் பகுதியையும் அமிழ்த்தி விடுவதில் அவர் நம்பிக்கை வைக்கவில்லை. எல்லாப் பகுதிகளும் வளர்ச்சி யடைவதன் மூலமே இணைக்கப்பட்ட ஆளுமையைப் பெற முடியும். உண்மையான கல்வி அறிவோடு, உணர்வையும் வளர்க்க வேண்டும். அன்றியும், உண்மையான கல்வி என்பது உறுதியை வலுப்படுத்தி, இயற்கையோடு ஒன்றலை உண்டாக்கி,

படிக்கப்படுகின்ற பல்வேறு பாடங்களிலும் ஒரு சம நிலையையும் கற்பிக்க வேண்டும். 'கல்விப் பிரச்னை' என்ற கட்டுரையில் தங்கிப் படிக்கும் ஒரு பள்ளியில்தான் (Residential school) இவை முடியும் என்று கூறியுள்ளார். அங்குத்தான் குழந்தைகளை இயற்கையோடு உறவாடச் செய்ய முடியும். அதே நேரத்தில், ஆசிரியர்களிடம் கலந்து உறவாடுவது மூலம் தேசீய மரபுகளைக் குழந்தைகள் பெற முடியும். இந்த இலட்சியங்கட்கு ஒரு வடிவு கொடுக்கவும், குழந்தையின் ஆளுமையை எல்லாத் துறைகளிலும் வளர்க்கக் கூடிய ஒரு திட்டத்தைக் கொண்டு செலுத்தவும் தாகூர் சாந்தி நிகேதனத்தில் தாமே ஒரு பள்ளிக்கூடத்தைத் தொடங்கினார்.

பல்வேறு வகைப்பட்ட செயல்களில் ஈடுபடுவதன் மூலந்தான் குழந்தையின் வளர்ச்சியை நன்கு பெருக்க முடியும் என்று தாகூர் கூறி வந்தார். குழந்தையைப் பேசாமல் அமர்ந்திருக்குமாறு கட்டுப்படுத்துவதைவிடக் கொடூரமான செயல் வேறு இல்லை என்றும் கூறி வந்தார். குழந்தை இயல்பாகவே சுறுசுறுப்புடையது. எனவே, அவர் கண்ட பள்ளிக்கூடத்தில் குழந்தைகளின் இந்தச் சுறுசுறுப்பைக் கல்வியின் ஒரு பகுதியாகப் பயன்படுத்திக் கொண்டார். தாகூர் கண்ட கல்வி இலட்சியத்தைப் பல கல்வியாளர்கள் ஏற்றுக் கொண்டனர். அவருடைய புதிய கருத்துக்கள் பல, இன்று பொதுக் கல்வித் திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. ஆனாலும், ஆளுமையின் பல்துறை வளர்ச்சியில் ஒன்றல் தன்மையும், சம நிலையும் வேண்டும் என்று கூறியது தாகூரின் தனிச் சிறப்பான கொள்கையாகும். அவரைப் பொறுத்த வரை அழகு, ஒழுக்கத்துடன் தொடர்பு கொண்டு இருக்க வேண்டும். ஒழுக்கத்தை அழகுணர்ச்சியுடன் மனிதன் ஏற்றுக் கொண்டால்தான் சத்தியத்தை அடைய முடியும். இம்முறையில் சத்தியம், அழகு, நன்மை என்ற மூன்றும் கல்வி இலட்சியத்தில் ஒன்றுக்கப்பட்டன.

சுதந்திர இந்தியாவில் தொடக்கக் கல்வி என்ற பெயரில் உள்ள ஆதாரக் கல்வி, அதனுடைய முக்கியமான பகுதிகளைத் தாகூரின் எண்ணம், செயல் என்பவற்றிடமிருந்தே பெற்றது. பள்ளிக் கூடத்தை மக்களுடைய சமுதாய, பொருளாதார வாழ்விலிருந்து பிரித்து விடக்கூடாது என்று அவர் அடிக்கடி கூறி வந்தார். 'கவிஞன் நிறுவிய பள்ளிக்கூடம்' என்ற கட்டுரையில் பழைய குருகுல முறையில் குழந்தைகள் பள்ளிக்கூட வேலையுடன் வீட்டு

அலுவலேயும் சேர்த்தே பார்க்க வேண்டும் என்று கூறியுள்ளார். ஆதாரக் கல்வியில் முக்கியக் கூருக உள்ள கைத்தொழில் பயிற்சியைத் தாகூரின் சித்தாந்தத்திலும் காணலாம். ஆனுல், ஆதாரப் பயிற்சியில் முரட்டுத்தனமான கடைப்பிடி உடையவர்கள் நூல் நூற்பதையும் ஒரு கட்டாயமான பாடப் பகுதியாக ஆக்கியதைத் தாகூர் ஏற்றுக் கொண்டிருக்க மாட்டார். தாகூரைப் பொறுத்த வரை, சுதந்திரம், தனக்குத்தானே செய்து கொள்ளுதல் என்பவை, வாலாயமாகச் செய்வதைக் காட்டிலும் முக்கியமானவை. ஆதாரக் கல்வியை ஆதரிப்பவர்கள் தாகூர் கொள்கையிலிருந்து வேறுபடும் இடங்களிலெல்லாம் அவர்கள் தவருகவே முடிவதில் வியப்பு ஒன்று மில்லே.

இத்தகைய இலட்சியங்களேக் கூறிக் கொண்டிருந்ததோடல்லாமல், அவற்றிற்கு நடைமுறையில் வடிவு கொடுக்கும் வகையில் திட்டமும் வகுத்தார். தாய் மொழியைப் போதன மொழியாகக் கொள்ள வேண்டும் என்று அவர் கூறியதன் கருத்து, குழந்தைகட்குப் போதிக்கப்படும் கல்வி அவர்களேயும் அறியாமல் உட்புக வேண்டும் என்பதனுலேயே யாகும். எவ்வளவு வளமுடையதாயினும் அந்நிய மொழி அதற்கே உரிய சந்தர்ப்பப் பொருளேயும், சூழ்நிலேயையும் பெற்றிருக்கும். குழந்தைகளுக்கு இவை பழக்கமில்லாமையால், அவற்றை அறிய முயல்வது அவர்கட்கு ஒரு பாரமாகும். பிற மொழியில் ஏதாவது ஒன்றை அறியும் குழந்தை, பொருளேயும் மொழியையும் அறிவதில் கவனத்தைப் பங்கிட வேண்டியுளது. ஆனுல், தாய் மொழியில் அதே விஷயம் போதிக்கப் படும்பொழுது கவனத்தைப் பங்கிடும் வேலே ஒன்றும் இல்லே. இந்தியக் குழந்தைகள், வெளி உலகத்தில் காணப்படும் அளவிலாத அறிவு, பண்பாடு, ஒழுக்கம் ஆகிய ஆதாரங்களிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டும் என்று தாகூர் கூறினுர். ஆனுல், அதே நேரத்தில் தங்களுடைய தாய் மொழி, மரபு, பண்பாடு ஆகியவற்றில் வலுவான அடிப்படையைப் பெற்றிருக்க வேண்டும் என்றுங் கூறியுள்ளார்.

தனி மனிதனின் கௌரவத்துக்குப் பெரு மதிப்பளிக்கும் தாகூர், ஆசிரியரின் ஆளுமைக்கு மிக அதிகப்படியான கவனம் செலுத்தியது நியாயமேயாகும். 'கல்விப் பிரச்னே' என்ற கட்டுரையில் தக்க ஆசிரியரைக் காண்பதே முதல்வேலே என்று கூறுகிருர். இதனேச் செய்து முடித்து விட்டால், பின்னர் உள்ள பாடத்திட்டம் வகுத்தல், கற்பிக்கு முறை, மாணுக்கர் கட்டுப்பாடு என்பவற்றை

2

எளிதில் முடித்துக் கொள்ளலாம். ஆசிரியர் சொல்லிக் கொடுப்பதையும், அவருடைய அறிவையுங் காட்டிலும் முக்கியமானது அவர் வாழும் முறை. தாகூரைப் பொறுத்தமட்டில் வெறும் பண்டித ஞானம் பாரமாகவே இருக்கும். ஆனால், சிறந்த நம்பிக்கையுடன் அந்தப் பண்டித ஞானம் சேரும்பொழுது பல தலைமுறைகளுக்கு ஒளியைத் தரக் கூடியதாக மாறி விடுகிறது அந்த ஞானம். கல்வி என்பது நீண்ட ஒரு நிகழ்ச்சி என்றும், ஆசான் மாணாக்கன் என்ற இருவருடைய மனமும் சந்திக்கும் பொழுதுதான் கல்வி, உண்மைக் கல்வியாகப் பரிணமிக்கிறது என்றுங் கூறினார். ஒரு விளக்கிலிருந்து மற்றொரு விளக்கைக் கொளுத்துவது போன்றதே கல்வி என்றும், உண்மையான ஆசிரியன் கொளுத்தப் பெற்ற ஒரு விளக்கைப் போன்றவன் என்றும் கூறியுள்ளார். எப்பொழுது ஆசிரியன் தான் மேலும் மேலும் கற்பதை விட்டு விடுகின்றானோ, அப்பொழுதே அந்த விளக்கு அணைந்து விடுகிறது.

தனி மனித முயற்சி, சுதந்திரம் என்பவை பற்றித் தாகூர் வலியுறுத்தியதிலிருந்து, அவர் ஏன் பிடிவாதமான சட்ட திட்டங்களை நம்பவில்லை என்பதை அறிகிறோம். இந்திய மரபுகள் இலட்சியங்கள் என்பவற்றில் எவ்வளவு பக்தி கொண்டிருந்தாலும், மேனாட்டாரின் தொடர்பால் இவற்றில் சில மாறுதல்கள் தேவைப் படுகின்றன என்பதையும் அவர் அறிந்து கொண்டார். மாற்றம் என்பதே வாழ்வின் அடிப்படைச் சட்டம் என்பதை அறிந்திருந்தமையின், புதியன புகுதலை அவர் என்றுமே வரவேற்றார். ஆதலால் தம்முடைய உபதேசங்களை அப்படியே நகல் செய்வதை அவர் ஆதரிக்கவில்லை. ஓயாது மாறுவதன் மூலமே ஆன்மாவின் மதிப்பைக் காப்பாற்ற முடியும் என்றும் கூறினார். ஒவ்வொரு தேசமும், ஒவ்வொரு இனமும் தனக்கே உரிய ஒரு பண்பாட்டையும் தனியான தேவையையும் கொண்டிருக்கும் என்றும் அவர் கருதினார். எனவே, ஒவ்வொரு சமுதாயமும் ஒவ்வொரு காலத்தில், தன் பழைய இலட்சியங்களை, அப்பொழுதையத் தேவைக்கு ஏற்ப மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும் என்றுங் கூறினார். பல்வேறு வகைப்பட்ட மக்களும் நாகரிகங்களும் கலப்பதால், அந்தந்த மக்கள் தம்மை எதிர்ப்பட்ட பிரச்னைகளை எங்ஙனம் சமாளித்தார்கள் என்பது பற்றி மிகுதியாக அறிய முயல வேண்டும். பிரச்னைகட்கு அவர்கள் கண்ட முடிவுகள் ஓர் ஊரில் காணப்பட்டதாயினும், அம்முடிவுகள் அகில உலகத்துக்கும் பொருந்துவதாகும். 'கல்வியின் பேதமின்மை' என்ற கட்டுரையில் பல்வேறு மொழிகளையும், அம்மொழிகளைப் பேசும் மக்களையும் பெற்றுள்ள இந்தியா சர்வ தேசீய

நோக்கத்தை வளர்ப்பதில் பெரும் பங்கு கொள்ள வேண்டும் என்று தாகூர் கூறியுள்ளார்.

'இந்தியப் பண்பாட்டு நிறுவனம்' என்ற கட்டுரை தேசீயம், சர்வ தேசீயம் என்ற இரண்டையும் கலப்பதால், தாகூரின் கல்விக் குறிக்கோளை விளக்கும் முக்கியமான அறிக்கையாக அமைந்துள்ளது. சாந்திநிகேதனத்தில் பள்ளிக்கூடத்தை அமைப்பதற்கு முன்னர், தாய் மொழி மூலம் கல்வி கற்பிக்க வேண்டும் என்பதே அவருடைய எழுத்தின் உட்பொருளாக இருந்தது. பள்ளிக்கூடம் தொடங்கப்பட்ட பிறகு, தங்கிப் படிக்கும் பள்ளியை அமைப்பதிலும், இயற்கையோடு உறவாடும் முறையில் தேசீயப் பண்பாட்டைப் போதிப்பதிலும் அவர் கவனம் முழுவதும் சென்றது. அவருடைய அனுபவமும், பரிவும் விரிவடைந்தவுடன் விஸ்வ பாரதியை சர்வ தேசீயப் பல்கலைக் கழகமாக ஆக்குவதில் முனைந்தார். கிழக்கிலும் மேற்கிலும் உள்ள உயர்ந்தவற்றைக் கலந்து அனைத்துலக நோக்கத்தையும், மானிட நோக்கத்தையும், மனிதனிடம் காணப்படும் நம்பிக்கையின் அடிப்படையில் போதிப்பதே இப் பல்கலைக் கழகத்தின் நோக்கமாயிற்று.

## III

நம்முடைய பொருளாதாரக் கருத்துக்கள் பற்றித் தாகூர் பேசியுள்ளவற்றை இனிக் காணலாம். இந்தியாவில் பழங் காலத்தில் பயின்று வந்த சமநிலைப் பொருளாதாரத்தைப் (Balanced Economy) பற்றி அவர் எப்பொழுதும் ஒரு வியப்புடன் பேசி வந்தார். பல்வேறு தலைமுறையார்கட்கும் வேலை வாய்ப்பு, பாதுகாப்பு, திருப்தி ஆகியவற்றை அது அளித்து வந்தது என்பதைப் பற்றி ஓயாது புகழ்வார். இந்தியரல்லாத பிறநாட்டார் இதனைப் படித்தால், ஓரளவு குழப்பம் அடைவார்கள். ஏனென்றால், இந்தியக் கிராம வாழ்க்கை என்றாலே துயரமும் வறுமையும் நிறைந்தது என்று அவர் கேள்விப்பட்டிருப்பார். இந்தியக் கிராமப் பொருளாதாரத்தின் குறுகிய எல்லையையும் அளவையும் தாகூர் அறியாமல் இல்லை. ஆனால், அதிக வளர்ச்சியும், அதிக தேவையும் இல்லாத அந்தக் காலத்தில் அவர்களுடைய குறைவான தேவைகளை நிரப்புவதற்குக் கிராம வேளாண்மையும் கிராமக் குடிசைத் தொழிலும் போதுமானவையாய் இருந்தன.

ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் பேசப்படும் கிராமம் என்பதற்கும், இந்தியாவில் உள்ள கிராமத்திற்கும் பல வேறுபாடுகள் உண்டு. ஒவ்வொரு குடும்பமும் அதனுடைய நிலங்களின்

நடுவே அமைந்திராமல், வீடுகள் பலவும் ஒன்றாக ஓர் இடத்திலும், அவர்களின் நிலங்கள் பல்வேறு இடங்களில் சிதறியும் இருக்கும். இந்தியக் கிராம சமுதாயம் என்பது ஐரோப்பிய கிராமத்தை விடப் பெரிதாகவும், செறிவுடையதாகவும், நெருக்கமுடையதாகவும் இருக்கும். நாலாயிரம் அல்லது ஐயாயிரம் மக்கள் தொகையுடைய கிராமங்கள் நிரம்ப உண்டு. பத்தாயிரம் மக்கள் தொகையுடைய கிராமங்களும் சில உண்டு. வடக்கிலும், வடமேற்கிலும் உள்ள கிராமங்களில் சில ஒரு கோட்டைக்குள் அமைந்துள்ளன. சிறு நகர் என்று கூறக்கூடிய முறையில் அவை உள்ளன. கைத்தொழிலையும், வேளாண்மையையும் ஒன்று கலந்தமையாலும் மக்கள் தொகை மிகுதியாக இருந்த காரணத்தாலும், நவீன காலம் வரை, இந்தியக் கிராமம் சுயதேவைப் பூர்த்தி செய்துகொள்வதாய், திருப்தியுடன் வாழும் சமுதாயத்தைப் பெற்றதாய் அமைந்து கிடந்தது.

புராதன இந்தியாவின் கிராமங்களிடம் எவ்வளவு மதிப்பு வைத்திருந்தபோதிலும், கால மாறுபாடு, கிராமப் பொருளாதாரத்தைக் குலைத்துவிட்டது என்பதையும், அவை பழைய வடிவில் நிலைத்து நிற்க முடியாது என்பதையும் தாகூர் உணர்ந்தார். கிராமப் பொருளாதாரத்தையும், எளிய தொழில் முறையையும் ஐரோப்பாவின் தொழிற் புரட்சி அழித்துவிட்டது. இயந்திர உபயோகம் உற்பத்தியை அதிகப்படுத்தி, விலைபோவதற்கேற்ற சந்தையையும் விரும்பிற்று. நாகரிக உலகத்தில் நாம் பின்தங்கி விடாமல், உடன் செல்ல வேண்டுமானால், காலத்தோடு ஒட்டி நாமும் புதிய இயந்திர சாதன முறைகளைக் கைக்கொள்ள வேண்டும் எனத் தாகூர் விரும்பினர்.

பழமையை விடாப் பிடியாகப் பிடித்துக் கொள்பவரல்லர் தாகூர். ஆகவே, இந்தியப் பொருளாதாரத்தில் இயந்திரம் நுழைவதை அவர் வரவேற்றார். கால மாறுபாட்டாற் பயனற்றுப் போன வழிகளை விடாப் பிடியாகப் பிடித்திருப்பதால், இந்தியாவுக்கு நற்பயன் விளைக்க முடியாது என அவர் பலமுறை கூறியுள்ளார். கைத்தொழிலின் சிறப்பை அவர் நன்கு அறிந்திருந்தார். மிக அழகிய கலைப்பொருள்கள் சிலவற்றை, சாமர்த்தியத்துடன் செய்யப்படும் உடல் உழைப்பில் தான் பெறமுடியும் எனவும் அவர் கூறியுள்ளார். அதே நேரத்தில் நம்முடைய மக்கள் அனைவருக்கும் தேவையான பொருள்களைப் பெறவேண்டுமானால், இயந்திரங்களை அதிகம் பயன்படுத்த வேண்டும் என்பதையும் அவர் அறிந்திருந்

தார். மனிதனை அன்றாட உழைப்பிலிருந்தும் தொல்லையிலிருந்தும் இயந்திரம் விடுவிக்கிறது. எனவே, மனத்தாங்கல் ஒன்றுமில்லாமல் இயந்திரத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால், அந்த இயந் திரத்தை மனிதனுக்குத் தொண்டு செய்யும் கருவியாகக்கொள்ள வேண்டுமே தவிர, மனிதன் அதற்கு அடிமையாகிவிடக் கூடாது.

இயந்திரங்களையும், வளர்ச்சியடைந்த வேலை முறைகளையும் ஏற்றுக்கொள்வதால் ஓரளவு வேலை இல்லாத் திண்டாட்டம் ஏற் படும் என்பதைத் தாகூர் அறிந்திருந்தார். 'கூட்டுறவு' என்ற கட்டுரையில் இயந்திர மயமாக்குவதால் மட்டும் இந்நிலை ஏற்பட்டு விடாது என்றுங் கூறியுள்ளார். ஐரோப்பாவில் புதிய வேலை முறை களும், செல்வ வளர்ச்சியும், புதிய வேலை வாய்ப்புக்களையும், புதிய வாணிகங்களையும் ஏற்படுத்தியுள்ளன. பழமையான சமுதாயங் களில்தான் அதிகப்படியான வேலையற்றவர்கள் இருக்கின்றார்கள். வளர்ச்சியடைந்த சமுதாயங்களில் அதிகமாக இயந்திரங்கள் பயன்படும்பொழுது, உழைக்கும் ஆட்கள் போதவில்லை என்ற நிலை ஏற்படுகிறது. இந்தியாவிலும் இதே நிலை ஏன் ஏற்படக் கூடாது? புதிய துறைகளில் வேலை வாய்ப்பையும், ஓய்வு நேரத்தைக் கழிக்கும் புதிய வழிகளையும் ஓயாது கண்டுபிடித்துக் கொண்டிருக்கும் மேனாட் டார்களின் ஆற்றலையும், தூண்டுதலையும் அவர் பெரிதும் போற்றி னார். விடுதலை பெற்ற இந்தியா தன் பொருளாதார வாழ்வை மாற்றி அமைக்கக் கொண்டுள்ள குறிக்கோள், தாகூரின் தீர்க்க தரிச னத்தைப் பெரிதும் ஒட்டியே அமைந்துள்ளது. இயந்திரப் பொருள் களையும் கைத்தொழில் பொருள்களையும் தேவை என்று கூறும் ஒரு பொருளாதார நிலை அது. கன ரகத் தொழில், சாதாரணத் தொழில், என்ற இரண்டுடன் மூலதனத் தொழில், நுகர்பொருள் தொழில் இரண்டையும் சேர்த்து, அனைத்திலும் சமநோக்கம் செலுத்துவதுடன் தனியார் துறை, அரசினர் துறைஎன்ற இரண் டையும் ஊக்குவிக்கும் முயற்சியாகும் இப் பொருளாதார நிலை.

நவீன கால இந்தியாவில் கிராமங்களிலிருந்த 'ஸ்ரீ' என்று கூறப்படும் அழகும் சாயலும் (Grace) போய்விட்டமை துரதிஷ்ட மாகும் எனத் தாகூர் கருதினார். நாகரிகம் என்ற சொல்லே அது நகரத்தோடு தொடர்புடையது என்பதைக் காட்டி நிற்கிறது. எனவே, மேனாடுகளில் நாகரிகம், நகரைச் சுற்றியே அமைந்து கிடக்கிறது. பெரிய ஊர்களிலும் நகரங்களிலும் மக்கள் தொகை மிகுதியாவது நவீன காலத்தில் இன்னும் விளக்கமாகத் தெரி கின்றது. உலகம் முழுவதிலும் உள்ள நல்ல வலிமையுடைய

ஆண்களும், பெண்களும் கிராமங்களை விட்டுவிட்டு நகரங்களில் குடியேறுகின்றனர்கள். இது ஒரு வருந்தத் தகுந்த சூழ்நிலை என்றும், இதை மாற்ற வேண்டுமாயின் கிராம வாழ்க்கையையே மாற்றியமைக்கவேண்டும் என்றும் தாகூர் கருதினர். ' 'கிராமமும் நகரமும்' என்ற கட்டுரையில் மேனடுகளில் வளர்ச்சியடைந்துள்ள நாகரிகத்துக்கும் பழங்கால இந்தியாவில் காணப்பட்ட பண்பாட்டுக்கும் இடையே உள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டியுள்ளார். இந்தியப் பண்பாடு, கிராம அடிப்படையில் அமைந்ததோடு அல்லாமல், மனிதனுடைய முழு வளர்ச்சிக்கு இயற்கையும் தேவை என்பதை அறிவுறுத்தி வந்தது. அவருடைய கருத்துப்படி, ஐரோப்பாவின் பிழை, அவர்கள் இயற்கையை வெல்லவேண்டும் என்று நினைப்பதில்தான் அடங்கி இருக்கிறது. இயற்கையோடு ஒட்டி ஒன்றலைக் காண்பதே அறிவுடைமையாகும் என அவர் கருதினர். வட அமெரிக்காவில் குடியேறிய ஐரோப்பியர்கள் அங்குள்ள காடுகளை அழித்ததையும், இந்தியாவிற்கு வந்த ஆரியர்கள் காடுகளை அப்படியே ஏற்றுக்கொண்டு அவற்றை முனிவர்களும், ஞானிகளும் வாழும் தபோவனங்களாக மாற்றியதையும் ஒப்பிட்டுக் காட்டுகிருர்.

கால தேவனை பின்னேக்கிச் செலுத்த முடியாதென்பதைத் தாகூர் மிக இளமையிலேயே அறிந்துகொண்டார். 'சமுதாயமும் அரசாங்கமும்' என்ற கட்டுரையிலும், 'தலைமை உரை'யிலும் வன்மையுடைய ஆண்களும், பெண்களும் கிராமங்களை விட்டு நகரங்கட்குக் குடிபெயர்ந்து போவதை, அவர்களைக் கண்டிப்பதன் மூலம் தடுக்க முடியாதென்றும், கிராம வாழ்க்கையை உயர்த்திப் பேசுவதனுலும் செய்ய முடியாதென்றுங் கூறியுள்ளார். கிராமத்திற்கும் நகரத்திற்கும் இடையே உள்ள தாரதம்மியத்தைக் குறைப்பதற்குக் கிராம வாழ்க்கையை மாற்றியமைப்பதே சிறந்த வழி என்றும், அதன் மூலமே இந்த இரண்டிற்கும் உள்ள வேற்றுமையைப் போக்க முடியுமென்றுங் கூறியுள்ளார். கல்வி அளிக்கும் வசதிகளைக் கிராமங்கள் பெறவேண்டும். மேலும், அதன் பயனுக சுகாதாரம், அவர்கள் கருத்துக்களை வெளியிடும் பேச்சுரிமை ஆகியவற்றைக் கிராமத்திலிருந்து புறப்படுமுன் அவர்கட்கு அளிக்கவேண்டும். இளைஞர்களையும், இளம் பெண்களையும் நகரங்கட்கு அழைக்கும் வசதிகளைக் கிராமங்களில் ஏற்படுத்தி, தங்கள் கருத்துக்களை நிறைவேற்றக்கூடிய வாய்ப்புக்களை அவர்கட்கு அளித்தால் அப்போது நகரங்களை நோக்கி அவர்கள் படை எடுப்பது நிற்கும்,

பொருளாதாரக் கருத்துப் பற்றிய தாகூரின் மற்றொரு குறிப்பையும் இங்குக் கூறவேண்டும். கூட்டுறவு இயக்கத்தில் பெரு நம்பிக்கை கொண்டிருந்த அவர், இந்தியாவின் மிகப் பெரிய கூட்டுறவு இயக்கத்தவர்களில் ஒருவராவார். 'கூட்டுறவு' என்ற அவருடைய கட்டுரை, பல காலமாக அவர் கூறி வந்தவற்றையே எடுத்துக் கூறுகிறது. அதாவது தனித்த முறையில் கிராமங்கள் வறுமையுடையனவாக இருப்பினும், பல கிராமங்கள் தம்முடைய ஆதாரங்களை ஒன்றாகச் சேர்த்தால் தனியாக நிற்கும்பொழுது செய்ய முடியாதவற்றை எல்லாம் செய்துவிட முடியும். தம்நாட்டு மக்கள் சமுதாயம், பொருளாதாரப் புனருத்தாரண வேலையைத் தாமே மேற்கொண்டு செய்யவேண்டுமெனவும், அரசாங்கத்திடமிருந்து ஒவ்வொரு நிலையிலும் உதவியை எதிர்பார்க்கும் பழக்கத்தை விட்டுவிட வேண்டுமெனவும் அவர் கூறியதன் அடிப்படை, செயல்படுவதிலும் நேரிடையாகக் காரியங்களைச் செய்வதிலும் அவருக்கிருந்த நம்பிக்கையிலிருந்து பிறந்ததாகும்.

சாந்திநிகேதனைச் சுற்றியுள்ள கிராமங்களில், பொருளாதார, சமுதாயப் பண்பாட்டு வாழ்க்கையை மாற்றமைப்புச் செய்ய வேண்டி அவருடைய முறையைக் கையாண்டார். இந்திய விவசாயமும் கிராமப் பொருளாதாரமும் சென்ற மூவாயிரம் ஆண்டுகளாக மாறுதலடையவில்லை என்று கூறினால் அது மிகுத்துக் கூறியது ஆகாது. தாகூரினுடைய கிராம மாற்றமைப்பில்தான், பல நூற்றாண்டுகட்குப் பிறகு, விவசாய முறையை மாற்றிக் கிராமத்தில் புதுமுறைப் பொருளாதாரத்தையும், கிராம நிதி நிலையைச் சீரமைப்புச் செய்யும் நிலையையும் கண்டோம். கிராம மக்கள் சுயமரியாதையையும், ஊக்கத்தையும் பெற்றால் ஒழியப் பொருளாதார மாற்றமைப்போ, அரசியல் விடுதலையோ இயலாத காரியம் எனச் சென்ற நூற்றாண்டின் இறுதியிலேயே அவர் கூறினார். முதலில் சாந்திநிகேதனத்திலும், பின்னர், திரு. எல்ம்ஹர்ஸ்டனுடன் ஸ்ரீநிகேதனத்திலும், கிராம மக்களின் வாழ்வில் ஒரு புத்துணர்ச்சியையும், கௌரவத்தையும் உண்டாக்கவே அவர் பாடுபட்டார். வெளிப்படையாகத் தெரியும் முறையில் காணப்படும் பயன், அவர் உழைப்பில் பெரிதாக இராது. சிறிய அளவில் முதல் முயற்சி செய்வதையே அவரும் விரும்பினார். என்றாலும், அவருடைய சோதனை அந்தப் பிராந்திய மக்களுக்கு ஒரு விழிப்பை உண்டாக்கிற்று. அதிகப்படியான மக்களுக்குக் கல்வி வழங்குதல், கிராம சுகாதாரம் என்பவற்றில் அதற்கு முன்னர் இருந்து வந்த ஒரு

கவலை இன்மை நீங்கி மக்களின் கவனம் அதிகமாக இழுக்கப் பட்டது. விடுதலை பெற்ற இந்தியாவின் பெருங் கடமைகளுள் ஒன்று கிராமங்கட்குப் புத்துயிர் ஊட்டுவதாகும். தாகூரின் அனுபவம், கருத்து என்ற இரண்டும் இந்த ஊக்கத்திற்கும் திட்டத் திற்கும் பெரிதும் காரணமாகும்.

## IV

நம்முடைய பொருளாதார வாழ்வு வளம்பெறப் பழைய மரபும், சோதனையும் ஒன்று கலக்க வேண்டும் என்று தாகூர் கோரினர். தனி மனிதனின் கௌரவத்திற்குப் பழுது வராத முறையில் மேனுட்டு விஞ்ஞான வழிகளைப் புகுத்த வேண்டும் என்றே அவர் விரும்பினர். கிராமமும், நகரமும் கூட்டுறவு கொள்ளும் முறையில் விவசாயத்தையும், தொழிலையும் ஒன்று கலப்பதே அவருடைய பொருளாதார மாதிரியாகும். இவை அனைத்திலும், இந்தியா விலுள்ள செழிப்பான, பல்வேறு வகைப்பட்ட சமுதாயங்களிலும் ஒரு ஒன்றல் தன்மையைக் காணும் ஆக்க ஒற்றுமைத் தத்துவம் ஒன்றே அவரைத் தூண்டிவந்தது.

அரசியலிலும்கூட, இந்தியா, மேனுடுகள் ஆகியவற்றிற் காணப்படும் மிகச் சிறந்த பண்பாடுகளை ஒன்ருக்க முயன்ருர். பரிசாக வழங்கப்பட்டாற்கூடக் கொடுப்பானுக்கும், கொள்பவானுக் கும் இடையே பரஸ்பர மதிப்பு (ஸ்ரத்தை) இருந்தாலொழிய, அப் பரிசு இருவருக்கும் தீமை பயக்கும். அவரைப் பொறுத்தமட்டில் ஐரோப்பியப் பயணத்தை ஒரு யாத்திரையாகவே கருதினர். பிரிட் டனுக்கும், இந்தியாவிற்கும் இடையே அரசியல் வெறுப்பு இருந்த போதிலும், 'புறப்பாட்டுக்கு முன்னுள்' என்ற கட்டுரையில் மேனுட்டுக் கருத்துக்களை எவ்வளவு மரியாதையுடன் அணுகினர் என்பது விளங்கும். மேனுட்டுத் தொடர்பு புறத்தே தளையை ஏற்படுத்தினுலும், அதிகாரத்தின் எதிரே நாம் நடந்துகொள்ளும் முறையை மாற்றிவிட்டது. மேலும், இதுவரை நம் தேசீயக் குறை பாடாக இருந்துவந்த மனப்பான்மையை, தீமையின் எதிரே போராடாமல் அதனை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையை, ஒரேயடியாகப் போக்கி விட்டது என்பதையும் 'மாறும் யுகம்' என்ற கட்டுரையில் விளக்கியுள்ளார்.

தாகூர், மேனுட்டு முறையில் அமைந்த ஜனநாயகத்தை அப்படியே ஏற்றுக் கொண்டார். ஆனுல், அதனுடன் இந்தியர்கள் கண்ட சமுதாய ஊக்கம், சமுதாயப் பொறுப்புணர்ச்சி ஆகியவற்

றையும் உடன் சேர்த்துக் கொள்ள விரும்பினுர். பழங்கால இந்தியாவிலும், இடைக்கால இந்தியாவிலும், அரசர்கள், செல்வத்தையும், அதிகாரத்தையும் வழங்கி இருக்கலாம். ஆனுல், செல்வத்தால் நிறைந்து, அதிகாரத்தின் எல்லையில் நின்றவர்கள்கூடத் தாங்கள் வாழும் சமுதாயத்தின் ஒப்புதலைப் பெற்ருல் ஒழியத் திருப்தியடையவில்லை. இதன் பயனுகச் சமுதாய நலப்பணிகள் பலவும், சமுதாயத்தின் தனிப்பட்ட மனிதர்களின் ஊக்கத்தாலும், கொடையாலும், அரசினரின் அதிகாரத்தை எதிர்பார்க்காமலே, செய்யப் பெற்றன.

தேசீய வளர்ச்சிப் பணிகள் அனைத்தையும் அரசினரை எதிர்பார்க்காமல், இந்தியர்கள் தாமே செய்துகொள்ள வேண்டும் என்று தாகூர் வற்புறுத்திக் கூறியது, பழைய இந்திய மரபில் காணப்பட்ட சமுதாயப் பொறுப்பை அவர் மிகவும் ஆதரித்தமையால்தான். தனி மனிதனுடைய ஊக்கம் தேவை என்று கூறும் மேனுட்டு நம்பிக்கையுடன் இதுவும் ஒத்துப்போயிற்று. எந்த ஆட்சி, மிகக் குறைந்த அளவில், ஆட்சி செலுத்துகிறதோ அந்த ஆட்சியே சிறந்தது என்ற கொள்கையுடன் அவருடைய கொள்கையும் ஒத்திருந்தது. மேனுட்டில் பரவி இருந்த பரந்துபட்ட மரபு அவரை இவ்விஷயத்தில் ஆட்கொண்டிருக்கலாம். இதனுல்தான் போலும், அவர் சமுதாயத்தின் பெரும் பணிகள் அனைத்தையும் தனிப்பட்ட மனிதர்களும், கூட்டத்தாரும் மனங்கலந்து செய்ய வேண்டுமே தவிர, அரசினர் கட்டுப்பாட்டின் கீழ்ச் செய்யலாகாது என்று கூறினுர்.

தாகூரின் கருத்துப்படி அரசுக்கும் சமுதாயத்திற்கும் ஒரு வேறுபாடு இருந்தே வருகிறது. அரசு மேற்கொள்ள வேண்டிய பணிகளைக் குறைத்து அவற்றைச் சமுதாயத்திற்கு மாற்றவேண்டும் என்று அவர் விரும்பினுர். வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் ஸ்தல சுய ஆட்சி இருக்கவேண்டும் என அவர் வற்புறுத்தினுர். சுதந்திரத்துடன் இயங்குவதையே தனி மனிதன் பெரிதும் விரும்புவான். சமுதாயமும், அதனுடைய நலத்துக்கு அதுவே பொறுப்பாளியாகும்பொழுதுதான் நன்கு விரிவடைகிறது. எனவே, அதிகாரத்தைப் பரவலாகச் செய்வதற்கே அவர் விரும்பினுர். தனி மனிதனே அல்லது ஒரு குழுவோ சமுதாய வாழ்வின் எந்தப் பகுதியை ஏற்று நடத்த முடியாதோ அந்தப் பகுதியைத்தான் அரசு ஏற்று நடத்த வேண்டும் என்றுங் கூறியுள்ளார். சுருங்கக் கூறுமிடத்து, அதிகாரம் பரவலாக்கப்பட்டு, பல உறுப்புக்களும் இயங்கும்

அரசியலேயே, ஒவ்வொரு தொகுதியும் மேலும் மேலும் அதிகப்படி யான பங்கெடுத்துக் கொள்ளும் ஓர் அரசியலேயே அவர் கருதினர்.

பொருளாதார, அரசியல் செயல்களில் தனி மனிதன் சுதந் திரத்தோடு பங்கெடுத்து ஈடுபடுவதே தாகூரின் இலட்சியமாகும். ‘சமுதாயமும் அரசாங்கமும்’ என்ற கட்டுரை வெளியிடப்படும் முன்னரே, நம்முடைய அரசியல் தலை என்பது நம்முள் இருக்கும் வலிமையற்ற இயல்பைக் காட்டும் வெளிக் குறியாகும் என்று கூறினர். அரசியல் முறையில் ஒரு திட்டம் வகுத்துவிட்டால் மட்டும், இந்தியா விடுதலை பெற்றுவிட முடியாது. ஏனெனில், அது அகத்தே நோயிருக்கையில் புறத்தே தோன்றும் வெளிக் குறிக்கு மருத்துவம் செய்வதாகும் என்றுங் கூறினர். என்று தனி மனிதர்கள் தன்னம்பிக்கையுடன், அறிவை வளர்த்துக் கொண்டு, நல்லொழுக்க நோக்கையும், அழகை அனுபவிக்கும் ஆற்றலையும் பெறுகிருர்களோ அன்றே இந்தியா விடுதலை அடையும். அவர் காலத்தில் இருந்துவந்த அரசியல், உண்மையற்றதாய், வெறும் ஆர வாரமாகவே அமைந்துள்ளது என்றுங் கூறினர். தேச விடுதலைக்கு நடைபெறும் தேசீயப் போராட்டத்தில் பொதுமக்களுடைய ஒத் துழைப்பு இல்லாமல், ஆங்கிலம் அறிந்த ஒரு சிலர் மட்டும் தம்முள் பேசிக் கொள்ளும் நிலைதான் அது. பிற மொழி மூலம் கல்வி கற்பிப்பதால், கல்வியின் நிலை திருப்தியளிக்கவில்லை என்ருல், அதே காரணத்தால், அரசியல் காரியங்களும் திருப்தியளிக்காமல் உள்ளன. மக்கள் புரிந்துகொள்ளும் முறையில் அவர்களை அணு கினல் அவர்கள் மகிழ்ச்சியோடு ஒத்துழைப்பார்கள் என்றுங் கூறினர்.

‘தலைமை உரை’ என்ற கட்டுரை, தாகூர் தலைமையேற்ற ஒரே ஒரு அரசியல் மாநாட்டில் பேசப்பட்டதாகலின் குறிப்பிடத் தக்கதாகும். அரசியல் கூட்டம் ஒன்றில், இந்தியத் தலைவர் ஒருவர், இந்தியர்கட்கு இந்திய மொழியில் பேசிய முதல் கூட்ட மாகும் அது. அந்த உரையில் தாகூர் தம்முடைய அரசியல் திட்டம் என்ன என்பதை விளக்கி, சமுதாய விடுதலைக்கும் பொரு ளாதாரத் தன்னிறைவுக்கும் பாடுபட வேண்டுமென்பதை விளக் கினர். தனிப்பட்டவர்களைப் பற்றிக் கவலைப்படாமல், பிற நாட்டுச் சமுதாய முறையை ஏற்றுக் கொண்டு, லட்சக்கணக்கான இந்தியர் களை அவமரியாதைப்படுத்தவும், தாழ்மைப்படுத்தவும் தொடங் கியதே இந்தியாவின் தலையாகும். இந்தியர்கள் தமக்குள் சமத்து வத்தை ஏற்படுத்திக் கொண்டாலொழியப் பிற நாட்டினருடன்

சமத்துவம் வேண்டும் என்று எதிர்பார்ப்பதில் பயனில்லை என்று பலமுறை கூறியுள்ளார்.

இந்தியத் தேசீயம் என்ற குறிக்கோளைத் தாகூர் ஏற்றுக் கொண்டார். ஆனால் பிரிட்டிஷாரைப் பழிப்பதால் விடுதலை பெற முடியாதென்றும், ஆண்மை, சுய உதவி ஆகிய மனிதப் பண்புகளை வளர்ப்பதன் மூலமே விடுதலையைப் பெற முடியுமென்றும் கூறிய முறையில் அவர் ஏனைய தேசீயத் தலைவர்களினின்றும் வேறு பட்டார். அரசியல், பொருளாதார, பண்பாட்டுச் சூழ்நிலைகளில் ஏற்படுத்தப்பட்ட எல்லை மீறிய கொடுமைகள் இருந்தும், பிரிட்டிஷாரிடம் மனமாச்சரியம் ஒரு சிறிதும் இல்லாமல் வாழ்ந்தார் தாகூர். பிரிட்டிஷாருக்கும் இந்தியருக்குமிடையே வெறுப்பை ஊட்டும் உறவு முறையே நிலவி வந்த போதிலும், பிரிட்டிஷாரின் சட்ட முறைகளை எதிர்க்கின்ற அதே நேரத்தில் அவர்களிடம் காணப்பட்ட உயர்ந்த பண்புகளை அறிந்து கொண்டார் தாகூர். பிரிட்டிஷார்கள் உபதேசம் செய்த இலட்சியங்களை ஏற்றுக் கொண்டதனாலேயே இந்தியாவிலுள்ள பிரிட்டிஷார்களை அவர் எதிர்த்தார். மேனாட்டாரிடம் முழுவதும் ஏமாற்றம் ஏற்பட்டபோதுகூட, 'நாகரிகத்தின் நெருக்கடி நிலைமை' என்ற கட்டுரையில் அவர் மேனாட்டின் சிறந்த பண்பாட்டுப் பிரதிநிதிகளிடம் நம்பிக்கையைத் தெரிவித்திருக்கிறார். எனவே, மேனாட்டாரின் சிறந்த கருத்துக்களில் பெருங் கவனம் செலுத்தி, அக் கருத்துக்களைத் தம் நாட்டார் பாராட்டி ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்கு மிக முயன்றார்.

நவீன காலத்தில் மிகப் பெரிய சர்வ தேசீய வாதிகளில் தாகூரும் ஒருவராக இருப்பதில் வியப்பு ஒன்றுமில்லை. ஒவ்வொரு தேசீய இனத்தாரும் தம் விருப்பம்போல் செயல்படுவதற்கு உரிமை உண்டு என்பதை அவர் ஏற்றுக் கொண்டார்; ஆனாலும் மனிதனுடைய கடமைகட்கு எதிராகத் தேசிய உரிமைகள் இடம் பெறக் கூடாது என்பதும் அவருடைய கருத்தாகும். ஒருவர் தம்நாட்டு மக்களின் இலட்சியங்களிடம் அன்பும், மரியாதையும் காட்டுவது சிறந்த நற்பண்பாகும். அதே நேரத்தில் பிற நாட்டு மக்களுடைய மரபு, குறிக்கோள் ஆகியவற்றிடம் மரியாதைக் குறைவைக் காட்டுவது மனித சமுதாயத்திற்கு இழைக்கப்படும் குற்றமாகும். முரட்டுத் தனமான தேசீயம், தேசீய அரசை (Nation State) ஒரு குட்டித் தெய்வமாக ஆக்கியதைத் தாகூர் வன்மையாகக் கண்டித்தார். குருட்டுத்தனமாக தேசீயம், தேசீய அரசு ஆகியவற்றிற்கு

வணக்கம் செலுத்துவது, மனிதனின் வீழ்ச்சிக்கே அடிகோலி விடும் எனக் கூறினர் அவர்.

இந்திய, மேனாட்டுப் பண்பாடுகளில் மதிப்புடையனவற்றைத் தாகூர் நன்கு அறிந்திருந்தார் எனினும், அவற்றுள் குறுகிய நோக்க முடையவை, எதிர்ச்சக்தியுடையவை ஆகியவற்றைக் கண்டித்தார். தேவை ஏற்பட்ட பொழுதெல்லாம் தம் நாட்டவரிடமும், பிற நாட்ட வரிடமும் காணப்பட்ட குறைகளை அஞ்சாமலும், கருணை காட்டா மலும் எடுத்துக் காட்டினர். மகாத்மா காந்தியிடம் பெரு மதிப்பும், அன்பும் வைத்திருந்தார். ஆனல், இவற்றின் காரணமாக, மகாத் மாவின் கருத்துக்களிலும் செய்கையிலும் காணப்பட்ட எதிர்மறைக் கருத்துக்கள் என்று தாம் எண்ணியவற்றைக் கடுமையான முறை யில் எடுத்துக் காட்ட அவர் பின் வாங்கவில்லை. 'சத்தியத்தின் அழைப்பு' என்பதிலும், 'சுயராஜ்யத்திற்கு உழைத்தல்' என்ற கட்டுரையிலும் மகாத்மாவின் கொள்கைகளில் அடிப்படையான சிலவற்றை எதிர்த்துள்ளார். மகாத்மா வகுத்துள்ள திட்டத்தில் ஒரு பகுதி அவரே கூறியுள்ள கொள்கையுடன் முரண்படுகிறது என்பதையும் எடுத்துக் கூறியுள்ளார்.

தாகூர், அரசியலைத் தொழிலாகக் கொண்டவரல்லர். ஆனல், இந்திய மக்களின் துன்பத்தைக் கண்டு அதனல் உந்தப்பட்டுத் தேசீயப் போராட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் அரசியல் சம்பந்தமான செயல்களிலும், பேச்சுக்களிலும் அவர் ஈடுபட்டார். 1905-ம் ஆண்டில் சுதேசி இயக்கத்திற்காக வாதாடும் பேச்சாள ராகவும், அதன் புகழ் பாடும் கவிஞராகவும் அவர் ஆனர். மறுபடி யும் 1919-ம் ஆண்டில் ஜாலியன்வாலாபாக் கொடுமைகளைப் பற்றி அவரே முதலில் பேசினர். அரசாங்கத்தின் அரசியல் செய்கைகளை எவ்வளவு காரசாரமாக எதிர்த்தாலும் அதன் காரணமாக பிரிட்டிஷ் மக்களிடத்துள்ள மதிப்பை இழந்து விடவில்லை. இந்திய அரசியல் பணிகள், வெளியார் ஆட்சியை முருட்டுத்தனமாக எதிர்க்கும் ஒரு போராட்டமாக இராமல், தேசீயப் புனரமைப்புச் செய்யும் உடன் பாட்டுத் திட்டமாக அமைய வேண்டும் என அவர் விரும்பினர். 1905-ல் சுதேசி இயக்கம் நடைபெற்றபோதும், 1920-ல் சட்ட மறுப்பு இயக்கம் மும்முரமாக நடைபெற்ற போதும், தேசீய அரசியல் செயல்களில் காணப்பட்ட சில நிகழ்ச்சிகள் வெறும் எதிர்மறைச் செயல்களாக இருந்தமைபற்றி அவற்றை வன்மை யாகக் கண்டித்தார்.

தனி மனிதன் கௌரவம், எல்லாத் தேசங்கட்கும் உரிமையான விடுதலை, சுய ஊக்கம் என்பவற்றில் தாகூர் பெரிதும் நம்பிக்கை கொண்டிருந்தார். ‘கிழக்கும் மேற்கும்’ என்ற கட்டுரையில் வேற்றுமையில் ஒற்றுமை காணும் கொள்கையை, உலக நாகரிகத்துக்குத் தந்ததே இந்தியாவின் மிகச் சிறந்த கொடை எனத் தாம் நம்புவதாகக் கூறியுள்ளார். கருத்துவேறுபாடுகள் மிகவும் மதிப்புடையவை என்றும் வாழ்வை வளப்படுத்த அவை மிகவும் தேவை என்றுங் கூறினர். இந்திய வாழ்வில் காணப்படும் மொழிகள், சமயங்கள், பண்பாடுகள் ஆகியவற்றின் இடையே வேற்றுமை காணப்படுவதே ஒரு தெய்வீகக் கருத்தால்தான் என்றும் அவர் நம்பினர். வேற்றுமையில் ஒற்றுமை காண்கின்ற ஒற்றுமையே, இந்தியாவில் பண்டும் இன்றும் காணப்பட்ட, காணப்பட வேண்டிய இந்திய ஒற்றுமையாகும். இதில் ஒவ்வொரு மொழியும், ஒவ்வொரு சமயமும், ஒவ்வொரு பண்பாடும் தத்தமக்குரிய இடத்தைப் பெற வேண்டும். நவீன உலகில் இடம் பெற்றுள்ள பல்வேறு தேசங்களிடையே இந்த ஒற்றுமை எவ்வளவு தேவை என்பதை நாம் எளிதிற் காண முடியும்.

நவீன இந்தியாவின் அரசியல் விழிப்புணர்ச்சியில் தாகூரின் இலட்சியங்கள் எவ்வளவு தூரம் தாக்கியுள்ளன என்பதைப் பல வழிகளில் அறியலாம். உள் துறையில் இந்தியா ஒரு கூட்டமைப்பு நாடாக இருக்க முடிவு செய்துள்ளது. ஒவ்வொரு உறுப்பும் முழுச் சுய உரிமையுடன், கூட்டமைப்பின் உறுப்பாகவும் அமைந்துள்ளது. இந்தியப் பிரஜைகளிடையே, சாதி, சமய, இன, மொழி, பால் வேறுபாடு எதுவும் இல்லாமல் அவர்கள் அனைவரும் சமமாகக் கருதப் படவேண்டும் என்பதை அவர்தாம் முதலில் கூறினர் என்று கூற முடியாவிட்டாலும், இதனை விடாமல் அழுத்திக் கூறியவர்களுள் அவரும் ஒருவர் என்பதை மறுக்க முடியாது. வெளித் துறையில், பல்வேறு இனத்தாரிடையே ஒவ்வொருவருடைய வேறுபட்ட அரசியல் நம்பிக்கைகளுக்கும் மரியாதை காட்ட வேண்டும் என்று நினைப்பதும், இவற்றை அமுக்குவதன் மூலம் ஒற்றுமையைக் காண முற்படாமல், அவற்றிற்கும் இந்த ஆட்சி முறையில் இடம் உண்டு என்று நினைப்பதும் அவர் போதித்த தத்துவத்தின் உடனடியான பயன்களாகும். ஒரு நாட்டிலுள்ள தனிப்பட்ட கூட்டத்தின், அல்லது நபரின் ஆளுமையை அமுக்கிவிட முயற்சி நடைபெற்றால், நாடு முழுவதும் துன்பமடையும் எனக் கூறினர். அதேபோல எந்த ஓர் இனமாவது, நாடாவது சுதந்திரமாக முழு வளர்ச்சியடையவொட்

டாமல் தடை செய்யப்பட்டால் உலகம் துன்பமடையும். 'ஹிந்துப் பல்கலைக் கழகம்' என்ற கட்டுரை கல்விப் பிரச்னையைப் பேசுவதுடன், இந்தியாவின் நற்காலம் அதில் வாழும் பல்வேறு மக்களின் ஒற்றுமையில் இருக்கிறதே தவிர, அவர்களனைவரையும் சம நிலைப் படுத்துவதால் அப்பயன் விளையாது என்ற தாகூரின் நம்பிக்கையை மறுமுறையும் எடுத்துக் கூறுகிறது.

தனிப்பட்ட நபர்களும், கூட்டத்தாரும் தம் கருத்துக்களை வெளியிடுவதால் பயன் விளையும் என்று நம்பிய தாகூர், இந்தியாவிற்குச் சாதி, சமயங் கடந்த ஓர் அரசியல் வேண்டுமென்றும், எல்லாச் சமயம், இனம், நம்பிக்கை ஆகியவற்றையும் கவனிக்கும் அரசாக அது அமைய வேண்டும் என்றும் கூறிய தேசத் தலைவர்களில் முதலாவதாக இருந்ததில் வியப்பொன்றுமில்லை. எந்த இடத்தில் தனிப்பட்ட நபர், கூட்டம் ஆகியவர்களின் மதிப்புக்கு இடம் தரப்பட்டதோ, அங்கெல்லாம், அனைவருக்குமே பெரிதும் நலம் விளைந்துள்ளதெனத் தாகூர் நம்பினர். இக் கொள்கையைக் கடைப் பிடிக்காத நாடுகள் வறுமையுற்று, இறுதியில் தேசீயப் பண்பாட்டையும் செழிப்பையும் இழந்தன. இந்த நவீன உலகில், பல்வேறு தேசங்களின் இடையே காணப்படும் வேற்றுமைகளை, ஒருவருக்கொருவர் மதிப்புக் காட்டி ஏற்றுக் கொள்வதன் மூலமே, மனித சமுதாயம் முன்னேற முடியுமென்றும் அவர் நம்பினர்.

மனித வேற்றுமையின் நடுவே ஒற்றுமையை நாடிச் செல்லும் தாகூரின் இந்த இயல்பு உலகின் எல்லை வரை அவரைக் கொண்டு சென்றது. புத்தருடைய காலத்தில் ஏற்பட்ட இந்திய அறிவுப் பெருவளர்ச்சியின் பின்னர் இந்தியர்கள் தங்களுக்குள்ளேயே அடங்கிவிட முற்பட்டனர். இடைக் காலத்தில் மேற்கு ஆசியாவுடனும், பிறகு நவீன காலத்தில் ஐரோப்பாவுடனும் தொடர்பு ஏற்பட்டது உண்மைதான். கிறிஸ்து பிறந்த முதல் நூற்றாண்டின் பிறகு ஏற்பட்ட இத் தொடர்புகளில் இந்தியா வாங்கிக் கொள்ளும் நாடாக இருந்ததே தவிரக் கொடுக்கும் நாடாக அமையவில்லை. புது முயற்சிகளில் புகும் மனப்பாங்கு இந்தியர்களிடம் குறையத் தொடங்கியபொழுதே ஒழுக்கத் துறையிலும், அறிவுத் துறையிலும் வீழ்ச்சி ஏற்படும் அறிகுறிகள் தோன்றலாயின. இது பின்னர், பொருளாதார, அரசியல் துறைகளிலும் தோல்வியைக் கொணர்ந்தது. பல நூற்றாண்டுகள் வரை இந்தியர்கள் இந் நாட்டை விட்டு எங்கும் செல்லவில்லை. இந்தியர்களில் மிகப் பலர் நாட்டை விட்டு வெளியே செல்வதால் சமுதாயத்தில் இழி சொல்லையும், சாதிக் கட்டுப்பாட்டையும் தண்டனையாகப் பெற்றார்கள்.

சமீப காலத்தில், பிற நாட்டு மக்களுடன் தொடர்பு கொள்ளும் ஒரே நோக்கத்துடன், கல்வி, பொருளாதாரம், அரசியல், சமயம் ஆகிய எந்த இலக்கும் இல்லாமல் தாகூர் வெளிநாடு சென்று வந்தார். அவருடைய பண்பாட்டுப் பயணம் மேலை நாடுகளோடு நின்று விடவில்லை. நல்லெண்ணத் தூதுவராகச் சீனா, ஜப்பான், இலங்கை, மலேயா, இந்தோனீஷியா, பர்மா, தாய்லாந்து, இந்தோ-சீனா. ஈரான், ஆப்கானிஸ்தானம் ஆகியவற்றுடன் தென் வட அமெரிக்காக்களுக்கும் சென்று வந்தார். இந்த வகையில் இந்திய மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் உணர்ச்சி ஒட்டலுக்கும் பாடுபட்டார். ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளாக மேனாட்டார் மூலமும், சிறப்பாகப் பிரிட்டிஷார் மூலமுமே இந்தியர்கள் உலகைக் கண்டு வந்தனர். இதனை ஈடு செய்யும் முறையில் நம் நாட்டின் மேற்கு, கிழக்கு, வடக்கு, தெற்கு ஆகிய பிராந்தியங்களில் உள்ள அண்டை நாட்டார்களுடைய கொடை எவ்வளவு என்பதைத் தாகூர் அறிவித்தார்.

சமீபகால வரலாறு தாகூரின் நம்பிக்கைக்கு உரமூட்டுவதாக அமைந்துள்ளது. விஞ்ஞானமும் தொழில் நுட்பமும், மாறுபட்ட பொருளாதார, அரசியல் முறைகளை நெருங்குமாறு செய்துள்ளன. முன்னர்ப் பூகோள ரீதியில் பிரிக்கப்பட்டிருந்த மாறுபட்ட சமய, இலட்சியக் கூட்டங்கள் இன்று நெருங்கி வாழ்கின்றன. உலகம் எரிந்து போகாமல் இருக்க வேண்டுமாயின் ஒன்றை யொன்று சகித்துக் கொண்டு வாழப் பழகிக்கொள்ள வேண்டும். இந்த வேற்றுமைகளை வளர அனுமதித்தால், அதன் பயன் அனைவருக்கும் தீமையாய் முடியும். வேறுபாடுகளை அமிழ்த்திவிடக் கூடாதென்றும் பெரிய பூர்ணத்துவத்தில் அவற்றிற்குரிய இடம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் தாகூர் போதித்தார். பல்வேறுபட்ட தேசங்களும், இலட்சியங்களும் ஒத்துழைக்க வேண்டுமே தவிரப் போட்டி இடக் கூடாது என்றும் அவர் கேட்டுக் கொண்டார். ஏனென்றால், அவர் கருத்துப்படி ஒருவரை ஒருவர் எதிர்பார்த்து நிற்கும் தன்மை-தான் நவீன காலப் பிரச்னையைத் தீர்க்குமே தவிர வெறும் சுதந்திரம் அதனைத் தீர்க்க முடியாது.

## V

தாகூரினுடைய, கல்வி, சமுதாய, பொருளாதார, அரசியல் நம்பிக்கைகள் அனைத்தும் அவருடைய ஆழ்ந்த சமய உணர்ச்சியின் நிறத்தில் தோய்ந்து நிற்கும். அவருடைய தந்தையார் உப

நிஷதங்கள், சூபி ஞானிகளின் மொழிகள் ஆகிய இரண்டிலும் தோய்ந்தவர். அவரிடமிருந்து வாழ்வின் ஒற்றுமை பற்றித் தாகூர் கற்றுக் கொண்டார். தம்முடைய இளம் பிராயத்திலேயே ஒருநாள் திடீரென்று இயற்கை, மனிதன் ஆகிய இருவரிடையேயும் ஓர் உறவு இருப்பதை எவ்வாறு அனுபவ பூர்வமாக அறிந்தார் என்பதை அவரே எழுதியுள்ளார். இதன் பயனாக, மிகச் சிறந்த இசைப்பாடல் ஒன்று நமக்குக் கிடைத்தது. அவரைப் பொறுத்தமட்டில், அவருடைய வாழ்வுக்கு வழி காட்டும் கொள்கை ஒன்றும் கிடைத்தது.

மெய்ப்பொருளின் தரிசனத்தைப் பெற்ற தாகூர், சத்தியம், அழகு, நன்மை என்ற மூன்றுமே மதிப்புடையவை எனக் கண்டார். உலகிலுள்ள எல்லாவற்றின் அடியிலும் மறைந்து நிற்கும் ஒற்றுமை பற்றி அவர் அறிந்ததன் பயனாக, இயற்கைக்கும், மனிதனுக்கும் இடையே உள்ள ஒன்றல் தன்மையை வலியுறுத்தும் அவருடைய கல்வித் திட்டம் கிடைத்தது. எல்லாத் தனி மனிதர்களும் இறுதியில் முழு முதற் பொருளில் ஒன்றுகிறார்கள் என்ற உண்மையை அவர் அறிந்ததிலிருந்து, பொருளாதாரத்திலும், அரசியலிலும், தனி நபர் பற்றி அவர் கொண்ட கவலை உதித்தது. பல்வேறு வகைப்பட்ட மனிதர்களும் அரசியல் துறையில் ஒத்துழைக்க வேண்டும் என்று அவர் வற்புறுத்தியது, பல்வேறு கருத்துக்களுக்கும் அவர் மதிப்புக் கொடுக்கும் இயல்பிலிருந்தும், எல்லா மக்களும் கடவுளின் பிள்ளை கள் என்று நினைத்ததிலிருந்தும் கிடைத்தது. சிறு குழுவினரின் தேவைகட்கு நாம் அதிகம் மதிப்புக் கொடுப்பதால்தான் வெறுப்பும், போராட்டமும் தோன்றுகின்றன என அவர் நம்பினார். அனைத்துலக ஒற்றுமை நம்முடைய அக மனத்தில் படும்பொழுதுதான் இந்தச் சிறு கட்சி உரிமைகள் தத்தமக்குரிய இடத்தைப் பெறும் என்று 'அடுத்து என்ன?' என்ற கட்டுரையில் கூறியுள்ளார். அனைத் துயிர்களிடத்தும் அன்பையும் ஒற்றுமையையும் போதிக்கின்ற காரணத்தால் சமய உணர்வே வாழ்க்கையின் சிறந்த பயன் என்றும் அவர் நம்பினார்.

வாழ்க்கையின் ஒருமைப்பாட்டை ஆழ்ந்து அறிந்திருந்தமை யின், சமயம் என்பது பரந்த நோக்கமுடையதே தவிரக் குறுகிய நோக்கமுடையது அன்று என்பதே தாகூரின் கருத்தாக இருந்தது. வாழ்வை, எவ்வித மனத்தாங்கலுமின்றி, முழுவதாக ஏற்றுக் கொண்டார் அவர். மனித இயல்பின் எந்தப் பகுதியையும் ஒதுக்கி விட விரும்பவில்லை. துறவு நிலையைத் தாம் விரும்பவில்லை என்று

பன்முறையும் கூறியுள்ளார். ஒருவன் பிற உயிர்கட்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய ஏற்றுக் கொண்டால் ஒழிய அவன் வீடு பேற்றை அடைய முடியாது. உணர்ச்சிகளையும், அழகுணர்ச்சிகளையும் அமிழ்த்த முயல்வது கொடுமையான எதிர்ச் செயல்களை உண்டாக்கி வாழ்வையே அழித்து விடும் அளவிற்குக் கூடக் கொண்டு செல்லலாம். வாழ்வின் இன்ப, துன்பம் இரண்டையும் ஏற்றுக் கொண்டு, அன்றாடக் கடமைகளை நிறைவேற்றுவதில்தான் நிறைவைக் காண வேண்டும். நம்முடைய பல்வேறு சக்திகளையும் வளர்ப்பதால்தான் ஒருங்கு இணைந்த ஆளுமையைப் பெற முடியும். தனி மனிதர்களில் பெரும்பான்மையானவர்கள் தம்முடைய தனி வாழ்வில் ஒன்றல் தன்மையைக் காணும்பொழுதுதான் சமுதாயம் உண்மையிலேயே வளர்ச்சி யடையும்.

ஆளுமையின் வளர்ச்சியில் தாகூர் இவ்வளவு ஆர்வங் கொண்டிருந்தமையின், சமயச் சடங்குகளின் தத்துவம் பற்றி அதிகக் கவலை கொண்டாரேயன்றி அதன் கிரியைகள் பற்றி மிகுதியும் கவலைப்படவில்லை. சமய வாழ்க்கையில் சடங்குகள், உரிய இடத்தைப் பெற வேண்டும் என்றாலும், அவற்றின் பயன், நாம் கொண்டிருக்கும் நம்பிக்கையின் அளவையும் தரத்தையுமே பொறுத்திருக்கிறது என்று அவர் பல முறை வற்புறுத்திக் கூறியுள்ளார். 'தலைவன் விருப்பமே நடைபெறும்' என்ற கட்டுரையில் மனிதர்கள் சாத்திரங்களின் கருத்துக்களை விட்டு விட்டு வெறும் சடங்குகளை மேற்கொள்வதால், தம் ஆன்மாவையே இழந்து விடுகின்றனர் என்ற கருத்தை மிக அழகாகவும் ஆணித்தரமாகவும் கூறியுள்ளார். இக் கொள்கை பழைய மரபுகள், சம்பிரதாயங்கள், பொருளாதார, சமுதாய, அரசியல் விஷயங்கள் என்பவற்றிற்கும் பொருந்துவதோடு சமயத் துறைக்கும் மிகுதியும் பொருந்துகிறது. இந்த உலகில் எதுவுமே மாறாமலிருந்ததில்லை. எனவே, சமய சம்பிரதாயங்களும், மாறியே தீரவேண்டும். பழங்காலத்தில் அவ்வப் பொழுது ஏற்பட்ட ஆன்ம அனுபவங்களை, இன்று சடங்குகள் சம்பிரதாயங்கள் ஆகியவற்றுள் அடக்க முயல்வது முரட்டு வழக்காகும். மூலத் தூண்டுதல் வலிமை இழந்தவுடன் வெறுஞ் சடங்கு அந்த இடத்தை அடைய முயல்கிறது. அத்தகைய சந்தர்ப்பங்களில் பழைய சடங்குகளை ஒழித்துப் புதியனவற்றைப் புதிய காலத்துக்கு ஏற்ப அமைக்க வேண்டும் என்று சமயத்தின் சாராம்சமே வேண்டி நிற்கிறது. உடனடியான ஆன்ம அனுபவத்தின் உண்மையைக் காட்டிலும், சடங்கு, சம்பிரதாயங்களை உயர்த்திப் பேசுவது கூடாது.

இந்த அனுபவம் எல்லா மனிதர்கட்கும் எல்லாக் காலத்திலும் கிடைத்தற்கரிய, மாற்ற முடியாத ஒன்று என்பது தாகூரின் கருத்து.

தாம் மேற்கொண்டுள்ள சமயம் 'மனித சமயம்' என்று தாகூர் சில முறை கூறியுள்ளார். அண்டப் பேருணர்வில், மனிதன் என்பவன், ஒரு கூருக உள்ள உணர்வு என்பதைத்தான் அவர் அவ்வாறு கூறினுர் போலும். அனைத்துலகிலும் ஆண்டவன் மனித முயற்சியின் மூலமே வெளிப்படுகிருன் என்ற கருத்தை, அவர், ஆண்டவன் மனிதன் மூலமே வெளிப்படுகிருன் என்று கூறியுள்ளார். இந்த அண்டம் தோன்றி வளரும் முறையே ஒரு கூட்டுறவு முறையாகும். இதில் மனிதன் பெறுபவனுக மட்டுமல்லாமல் வழங்குபவனுகவும் உள்ளான். மனிதனுடைய ஆளுமை என்பது எவ்வாறு அவனுடைய உடம்பின் ஒவ்வொரு அணுவிலும் இருக்கிறதோ, அதேபோல, ஒவ்வொரு தனி மனிதனிலும் இறைவன் உறைகின்ருன் என்ற கருத்துடன் அவர் விளையாடிய காலமும் உண்டு. இந்த உயிரணுக்கள் தன்னறிவு பெறுமேயானுல் தாம் தனித் தன்மை பெற்றவை என்று அவை நினைந்துகொள்ளும். அதேபோல மனிதர்களும் தம்மைத் தனித் தன்மை பெற்றவர்கள் என்று நினைத்துக் கொண்டாலும் உண்மையில் அவர்கள் ஆண்டவனின் ஆளுமையில் ஒவ்வொரு கணமாகவே உள்ளனர்.

தாகூரின் சமயக் கொள்கையில் காணப்பட்ட கூடார்த்தம் (mystic element) அன்ருட வாழ்க்கையில் அவர் எடுத்துக் கொண்ட கவலைக்கு நேரானதாகும். தனி மனிதன் அல்லது ஓர் இனத்தின் மோட்சம் என்பது, நமது அன்ருட வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட எங்கோ ஓர் இடத்தில் இல்லை என்றும், நம்முடைய அன்ருட வாழ்வில் அனுபவிக்கும் சுக துக்கங்களிலேயே அடங்கி இருக்கிறதென்றுமுள்ள அவருடைய நம்பிக்கையைத் தொடர்ந்தே, இது வருகிறது. பொது வாழ்வின் மூலந்தான் தனி மனித மோட்சமும், சமுதாய விடுதலையும் உண்டு என்பதால் மனித உறவில் அதிக அழுத்தந்தந்து பேசினுர். சமுதாயமாகிய உயிர்ப் பொருளின் உறுப்பினர்கள் என்ற முறையில் தனி மனிதர்கள் அனைவரும் அவரைப் பொறுத்தவரை உயர்ந்தவர்களாகவே காணப்பட்டனர். ஆகவே-தான், ஹிந்து சமய நடைமுறையில் மனிதனுக்கும் மற்ருெரு மனிதனுக்கும் இடையே வேறுபாடு காட்டுவதை அவர் அவ்வளவு வன்மையாகக் கண்டித்தார். தன்னை அறியும் அறிவுபற்றிப் பழங்கால இந்திய ஞானிகள் அதிக அழுத்தங் கொடுத்துக் கூறினுர்கள்.

ஒருவேளை இஸ்லாம், கிறிஸ்துவ மதங்களின் செல்வாக்கினுல் போலும், இந்திய ஞானிகளின் கொள்கை எவ்வளவு இன்றியமையாததோ அவ்வளவு முக்கியமானது ஒரு மதனிதன் தன் அயலானை அறிந்து அன்பு செய்வது என்றும் தாகூர் கூறினுர். எனவே, அவருடைய சமயம் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். அன்றியும், அவருடைய சமயத்தில், கருத்துரிமை, அயலானிடம் அன்பு என்பவை நம் அன்ருட வாழ்வின் எண்ணம் செயல்களில் பிரதிபலிக்க வேண்டும் என்பதும் இடம் பெற்றது.

இம் முறையில் தாகூரின் சமயம், வாழ்வின் ஒரு பகுதியாய், அந்த வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் அதிகாரம் செலுத்துவதாய் அமைந்து விட்டது. அவருடைய அரசியல் கொள்கைகள், நம்பிக்கைகள் ஆகியவற்றை அவை எவ்வாறு ஆட்கொண்டன என்பதற்கு மிகச் சிறந்த உதாரணம் ஒன்றுண்டு. ஒரு முறை காங்கிரஸ் கூடும் பொழுது அவர் இயற்றிய பாடல் இன்று இந்திய தேசீய கீதமாகவே ஆக்கப்பட்டு விட்டது. இந்தியாவின் பல்வேறு பூவியல் பகுதிகள் பற்றியும், இடங்கள் பற்றியும் அக் கவிதை பேசுகிறது என்பது உண்மைதான். ஆனுல், மனித சமுதாயம் முழுவதன் மேலும் செலுத்தப்படுகிற அன்பின் அடிப்படையில் அப் பாடல் அமைந்துள்ளமையின், அதை தேசபக்திப் பாடல் என்று கூறுவதைக் காட்டிலும் சமயப் பாடல் என்று கூடக் கூறி விடலாம். உலகில் எல்லாப் பகுதிகளிலும் வாழும் மக்களின் மனக் கோயிலில் குடி கொண்டுள்ள இறைவனுக்கு வணக்கம் செலுத்தித் தொடங்கும் அந்தப் பாடல், வரலாற்றினூடே காணப்படும் மேடு, பள்ளங்கள் அனைத்திலும் மனிதனைச் செலுத்திவரும் ஆண்டவனுடைய புகழைப் பாடுகிறது. இந்தியாவின் நலத்தை மட்டும் வேண்டாமல் கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு ஆகிய எல்லாப் பகுதிகளின் நலத்தையும் அப் பாடல் வேண்டுகிறது. உண்மையைக் கூறினுல், அந்தத் தேசீய கீதம் இந்தியாவிற்கு மட்டுமல்லாமல் மானிட இனம் முழுமைக்கும் ஏற்றதாகும். எல்லா மனிதர்களிடையேயும், நட்பும், கூட்டுறவும், பரஸ்பர மரியாதையும் காட்டுகிற ஓர் இலட்சிய உலகைக் கண்ட தாகூரின் இந்திய தேசீயப் பாடலில், அதே இலட்சியம் பிரதிபலிக்கிறது. உலகப் முழுவதிலும் ஊக்கமும், கூட்டுறவு முறையில் மாற்றமைப்பும் ஏற்பட்டு, நாகரிகம் பெற்ற உலகில் வாழும் நாகரிக மனிதன் பெற வேண்டிய கௌரவமும், உரிமையும் கட்டாயமாக வழங்கப்பட வேண்டுமென்று அவர் பாடுகிருர். ஒரே வார்த்தையில் கூற மேண்டுமாயின், அனைத்துலக

மனிதனை நோக்கிச் செல்லும் யாத்திரையில் தாகூர் கொண்ட நம்பிக்கையைத் தான் இந்தப் பாடல் கூறுகிறது.

## VI

இறுதியாக, இந்த நவீன உலகைப் பொறுத்தமட்டில் தாகூரின் முக்கியத்துவம் என்ன என்று கேட்கப்படலாம். தலையாய அரசியல் அல்லது சமுதாய சீர்திருத்தக்காரர் அல்லது கல்வியாளர் என்று அவரைக் கூறமுடியாது. எனினும், இந்த ஒவ்வொரு துறையிலும் அவர் தம் சிறந்த கருத்துக்களை ஈந்திருக்கிறார் என்பதையே இக் கட்டுரைகள் காட்டுகின்றன. அவர், தலையாய கவியும், எழுத்தாளருமாவார். தம் காலத்துக்கும் தம் மக்களுக்கும் மட்டுமல்லாமல் எல்லா மக்களுக்கும், எல்லாக் காலத்துக்கும் உதவும் கருத்துக்களைக் கூறும் கலைஞர்களில் அவரும் ஒருவர். எல்லாவற்றிற்கும் மேலாக, இவற்றின் காரணமாக, இவற்றின் காரணமாகவே, அவர் மிகப் பெரிய தேசீயப் பெரியாராகவும், உலகப் பெரியாராகவும் விளங்கினார். அனைத்துலகத் தன்மையை நோக்கி அவர் ஓயாது செய்த முயற்சிகள், நவீன காலத்தின் மிகப் பெரிய பிரச்னைகளின் முடிவு எவ்வாறு இருக்கவேண்டும் என்பதைக் காட்டுகின்றன.

கீதாஞ்சலியின் எளிமையும் கபடற்ற நேர்மையும், ஐரோப்பாவைப் புயல்போலத் தாக்கின. மனிதனுக்கு மரணத்தையும், அழிவையும் காட்டி அச்சுறுத்துகின்ற பூசலுக்கும், போராட்டத்திற்கும் இடையே சத்தியத்தின் ஒலியை எழுப்புகின்ற ஒரு மனிதக் குரல் கேட்டது. போரினால் களைத்துப்போயிருந்த மானிட சமுதாயத்தின் இருதயத்தில் தாகூர் விடுத்த செய்தி உடன் சென்றுதைத்தது. முதல் உலகப்போர்க் காலத்திலும், அதனை அடுத்த சில ஆண்டுகளிலும், ஞானி என்றும், தீர்க்கதரிசி என்றும் மேனாடு அவரைப் பாராட்டிற்று. பத்தாண்டுகள் வரையில் பக்தி செலுத்தும் அளவுக்குப் போற்றிய பிறகு, மேல் நாடுகளில் அவருடைய புகழ் மங்கத் தொடங்கியது. முழு வளர்ச்சியடைந்த ஆண்கட்கும் பெண்கட்கும் திருப்தி அளிக்கமுடியாத அளவில், அவருடைய பாடல்கள் ஆழமற்றுள்ளன என்று சிலர் கூறினர். வேறு சிலர் அவருடைய கவிதைகளில் மனத்தை உருக்கும் இயல்பு ஓரளவுள்ளதென்றும், தொடக்கத்தில் அவை எவ்வளவுதான் விரும்பத்தகுந்தவையாக இருப்பினும் முடிவில் ஓரளவு சுவையைக் குறைத்துவிடுகின்றன என்றுங் கூறினர். அவருடைய பேச்சுக்களும், கட்டுரைகளும் அளவு மீறிப் பயன்தருபவையாய், ஒழுக்கம் போதிப்பவை

யாய், மந்தமுள்ளவையாய் உள்ளன என்றும் கூறினுர்கள். அன்றி யும், இடை இடையே காணப்பட்ட கவிதை உருவகம், அழகிய சொற்ருெடர் என்பவை இருப்பினும், திருப்பித் திருப்பிக் கூறும் இயல்பும், முக்கியமற்றதை முக்கியம் போலக் கூறும் இயல்பும் அவற்றில் மிகுதியும் உள்ளன என்றுங் கூறினர். தாகூரைப்பற்றிப் பேச வந்த நவீன விரும்பிகள் அவர் எவ்வளவுதான் மனித உயர் வுக்கு உண்மையாக முயன்ருலும் அவருடைய கவிதைகளில் ஆழம், உணர்ச்சி என்பவை இல்லை என்றும் அவருடைய கட்டுரை கள் பனிப்படலம் போல் தெளிவற்றும், நீண்டும், தருக்க முறைக்கு மாறுபட்டும், உள்ளன என்றும் கூறினுர்கள்.

கவிஞர் என்ற முறையில் தாகூரின் இடம் சந்தேகத்துக்கு இடம் இல்லாமல் தெளிவாகிவிட்டபடியால் அவருடைய திறனுய் வாளர்கள் அவரைப்பற்றிக் கூறியுள்ள குற்றச்சாட்டுகட்கு விடை கூறவேண்டிய தேவையே இல்லை. என்ருலும், இந்த மலர், அவ ருடைய கட்டுரைகள் பற்றியதாகையால், இந்தத் திறனுய்வுகள் எந்த அளவிற்குப் பொருந்தும் என்பதை இவற்றைக் கற்போர் மட்டுமே முடிவு செய்யவேண்டும். ஒன்றைமட்டும் முதலிலேயே ஒத்துக்கொண்டு விடலாம். அவருடைய நாட்டு மக்கள் கிடந்த ஆழ்ந்த உறக்கத்திலிருந்து அவர்களைத் தட்டி எழுப்பும் நோக்குடன் இக் கட்டுரைகளில் பல தோன்றின. இடைக்கால மனநிலையில் கிடந்த அவருடைய நாட்டு மக்களைத் தட்டி எழுப்பி, நவீன மன நிலையை உண்டாக்குவதற்காக, ஒரு தனி மனிதர், தாம் ஒருவராகவே ஒரு தலைமுறையில் நிகழ்த்திய பெரு முயற்சியைக் குறிக்கின்றன இவை. திருப்பித் திருப்பிச் சொல்லும் இயல்பும், ஒழுக்கம் போதிக் கும் இயல்பும் அவற்றில் காணப்படுவதற்குரிய காரணங்கள் இவை களே. இந்தியாவிலும், பிற இடங்களிலும் அவருடைய காலத்தில் வாழ்ந்தவர்களுடைய எழுத்திலும் இவற்றைக் காணலாம். இவை அனைத்திலும் மேலாக அவற்றின் சிறப்பையும், தனித் தன்மையை யும் எடுத்துக்காட்டுவது, மாச்சரியமும், மன வெறுப்பும் அக் கட்டுரைகளில் ஒரு சிறிதும் இல்லாதிருக்கும் சிறப்புத்தான்.

தாகூரின் இளமை வாழ்க்கை முழுவதும், தோன்றி வளர்ந்து வருகின்ற இந்திய தேசீயத்தின் சூழ்நிலையில் கழிக்கப்பட்டதை நாம் அடிக்கடி மறந்துவிடுகிருேம். பிரிட்டிஷார்கள் இந்தியாவிற்கு வந்தது ஒரு புரட்சிக்கு அடிகோலிற்று. அப் புரட்சி பழைய சமு தாய, சமய நம்பிக்கைகளைத் தாக்கியதோடு விட்டுவிடாமல் மேலும்

தொடர்ந்தது. பிரிட்டிஷார்கள் கடைப்பிடித்த பொருளாதாரச் சுரண்டலேயும், அரசியல் ஆதிக்கத்தையும் எதிர்க்கும் புரட்சியாகவும் அது விரைவில் மாறிற்று. 1885-ம் ஆண்டில் தாகூருக்கு 24 வயதாகும்பொழுது இந்தியத் தேசீயக் காங்கிரஸ் ஸ்தாபிக்கப் பெற்றது. இந்தியாவில் சிவில் உரிமைகளையும் பொதுப்பணிகளில் அதிக இடத்தையும் பெறவேண்டி, முதலில் இது தோன்றினலும், நூற்ருண்டின் முடிவில் போராடும் நிறுவனமாக மாறித் தேச விடுதலேக்குப் போராடும் நிலேயைப் பெற்றுவிட்டது. இருபதாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் அரசியல் கொலேகள் மூலம் விடுதலேயைப் பெற முயன்ற ஒரு பயங்கர இயக்கம் தோன்றிற்று. எல்லேயற்ற உணர்ச்சி வேகமும், மனக் கசப்பும் நிறைந்திருந்த அந்தக் காலத்தில் தாகூர், புறநிலேயில் துறவு மனப்பான்மையுடன் இருக்கும் நிலேயைப் பெற்றிருந்தது, அவர் ஆன்ம பலத்தையே காட்டுகிறது.

இந்தியத் தேசீயம் தொடக்கத்திலிருந்தே ஹிந்துப் புனரமைப்பு இயக்கத்துடன் கலந்தே இருந்துவந்தது. இந்திய சமுதாயத்தில் புரட்சியை உண்டாக்க விரும்பியவர்கள் கூட, காளிதேவி வணக்கத்தைக் கொண்டிருந்தனர். சுதந்திர இந்தியாவைப் பற்றிப் பேசும்பொழுதெல்லாம் ஆதிகால அரசியல் வாதிகளில் பலரும் ஹிந்து சமய தத்துவம், பண்பாடு என்பவற்றின் அடிப்படையிலேயே பேசினர். பிரிட்டிஷார்கள் கொணர்ந்த கொள்கைகளே வெருட்டி அடிப்பதோடு அல்லாமல் ஹிந்துக்களும், முஸ்லீம்களும் சேர்ந்து வளர்த்த பொது மரபைக்கூட வெருட்டிவிட முயன்ருர்கள். இந்த அரசியல்வாதிகள் இந்தியா என்ற முறையில் பேசினலும் சமுதாயம் என்ற கருத்திலேயே பேசினர் என்பதும் உண்மைதான். தாகூரின் எண்ணங்கூட வங்காளம், வங்காளிகள் என்றே சுற்றி வந்துள்ளதென்பதை இக் கட்டுரையைப் படிக்கின்றவர்கள் கவனிக்க முடியும். சில திறனய்வாளர்கள் இன்னும் ஒரு படி சென்று 1908 வரைத் தாகூர் இந்தியாவைக்காட்டிலும் வங்காளத்தைப் பற்றியே சிந்தித்தார் என்றும் அவருடைய பரிவெல்லாம் ஹிந்துக்கள் மேலேயே இருந்ததென்றும் கூறுகிருர்கள்.

அன்று வாழ்ந்த மற்றத் தலேவர்களேப்பற்றி என்ன கூறினலும் இவ்வளவு குறுகிய நோக்கத்தைத் தாகூரின் மேல் ஏற்றுவது சரியன்று. மிக ஆழ்ந்த முறையில் ஒரு தெய்வ வணக்கத்தைப் போற்றும் குடும்பச் சூழ்நிலே அவருடைய தேசத்தில் அன்று வாழ்ந்த கிறிஸ்தவ, முஸ்லீம் மக்களிடையே பரிவு கொள்ளச் செய்திருக்கும். இந்தியப்

பண்பாட்டின் மாறுபட்ட தன்மையையும், அதிலுள்ள பல மதிப்புடைய கொள்கைகளையும் ஒன்று சேர்த்து, ஒற்றுமையான ஒரு பண்பாட்டை ஏற்படுத்தவேண்டிய அவசியத்தையும் அவர் உணர்ந்திருந்தார் என்றும் அவருடைய ஆதி எழுத்துக்களிலிருந்து அறிகிறோம். உண்மையில் இந்தியா பெருமையடைய வேண்டுமென்றால், தன்னுடைய கலப்பு வாழ்வில் எந்த உறுப்பையும் அமிழ்த்தி விடாமல் முழுத்தன்மையில் அவை தக்க இடம் பெற்று வளரவிடுவதே சிறந்தவழி என்பதை முதலில் கூறிய ஒரு சிலருள் அவரும் ஒருவர். ஆக்க முயற்சிகள் அனைத்தும் ஒருவர் வாழும் ஊரை அடுத்துள்ள சூழ்நிலையிலிருந்தே தொடங்கப்பெற வேண்டும் என்ற அவருடைய நம்பிக்கையின் காரணமாகவே அவர் வங்காளத்தைப் பற்றி அதிகக் கவனம் செலுத்தினார். அரசியல் சமுதாயத் தொண்டர்கள் தங்களை அடுத்துள்ள இடங்களில்தான் அதிகக் கவனம் செலுத்தவேண்டும் என்று தாம் கனவுகண்ட திட்டத்தை ஏதாவது ஒரு கிராமம் நிறைவேற்றினாற்கூட அது, ஏற்றப்பட்ட ஒரு விளக்கு எல்லாத் திசைகளிலும் ஒளியைப் பரப்புவதுபோல், ஒளி பரப்பும் என்று கூறியுள்ளார்.

தாகூர் வங்காளத்தைப் பற்றி அதிகக் கவனம் செலுத்த மற்றொரு காரணமும் கூறலாம். இந்திய மறுமலர்ச்சியின் தொடக்க காலத்தில் வங்காளம் மேற்கொண்ட பங்காகும் அது. இந்தியாவின் கிழக்குப் பகுதியில்தான் மேனாட்டுத் தொடர்பு மோதல் முதன் முதலில் விரிவான முறையில் ஏற்பட்டது. இலக்கியத் துறையில் மட்டுமல்லாமல் சமுதாய, அரசியல் துறையிலும் கூட வங்காளத்தில்தான் மறுமலர்ச்சி தோன்றிற்று. வெறும் தந்திரம் மற்றொரு காரணமாகவும் இருக்கலாம். வங்காளத்தில் நிலை பெற்றுள்ள சூழ்நிலையை நன்கு அறிந்துள்ளமையின், அதுபற்றி அழுத்தமாகப் பேசலாம் என்றும், இந்தியாவின் பிற பகுதிகளிலுள்ளவர்களைக் காட்டிலும் வங்காளிகளை அதிகம் தாக்க உரிமையுண்டு என்றும் தாகூர் நினைத்திருக்கலாம். இருபது வயது முதல் அடுத்த பத்தாண்டுகட்கு அழகை அர்ச்சிக்கும் நிலையில் இறங்கித் தாகூர் கவிதை பாடி இருக்கலாம். ஆனால் குடும்பச் சொத்தைக் காக்கும் பொறுப்பு தலையில் ஏறியதும், கவிஞன் தான் வாழும் கனவுலகிலிருந்து கீழே வந்து சக மனிதர்களின் சுக, துக்கங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதை உணர்ந்தார். இந் நிலை சமுதாய, பொருளாதார, அரசியல் பிரச்னைகளில் அதிக கவனம் செலுத்தத் தூண்டியது. கவிஞனுக்குரிய தீர்க்க தரிசனத்துடன்

ஒற்றுமையுடைய சமுதாயத்தைப் படைக்க வேண்டுமானால், அதிலுள்ள தனி மனிதர்கள் அனைவரும் ஒருங்கிணைக்கப்பட்ட ஆளுமையுடையவர்களாக ஆக வேண்டும் என்பதை அவர் உணர்ந்தார். கல்வியை நோக்கி அவருடைய கவனம் சென்றது. தனி மனிதனுக்கு, இயற்கையோடும் சமுதாயத்தோடும் பொருந்திய முறையில் முழு வளர்ச்சியைத் தரக் கூடிய ஒரு கல்வித் திட்டத்தைக் காண முற்பட்டார்.

நாளாவட்டத்தில் தாகூரின் காட்சியும், பரிவும் வளர்ச்சியடையவும், ஒருவருடைய உள்நாட்டுப் பண்பாடு உடனடியாக மதிப்பையும், விருப்பத்தையும் உண்டாக்குவதாயினும், உண்மையிலேயே அனைத்துலக மானிடப் பண்பில் அது இடம் பெற வேண்டும் என்ற உண்மையை அவர் உணர்ந்தார். வங்காளப் பிரிவினையை அடுத்து நிகழ்ந்த பயங்கர இயக்கம், இந்திய விடுதலையைக் குறுக்கு வழியில் பெற முடியாது என்பதை அவருக்கு அறிவித்தது. இந்தியாவின் பல்வேறு சமுதாயத்தினரும், பிற நாட்டார் மேல் கொண்ட வெறுப்பின் காரணமாகவோ, தன்னலம் என்ற ஒன்றின் காரணமாகவோ ஒற்றுமையைப் பெற முடியாது என்பதையும் அவர் அறிந்தார். ஒரு வேளை ஒன்றுகச் சேர்ந்தாலும் அந்த நேரத்திற்கு அது பயன்படுமே தவிர, நிலைத்த ஒற்றுமைப் பிணைப்பைத் தராது. பொதுவான இலட்சியங்களுக்கு அன்பு செலுத்துகின்ற அடிப்படையில் அவர்கள் ஒன்றுசேர வேண்டும். அஹிம்சையில் கொண்ட நுண்மையான நம்பிக்கையின் காரணமாக அவர் ஹிம்சையைக் கண்டிக்கவில்லை. சரித்திரத்தைக் குறுக்கு வழியில் செலுத்த முயற்சிக்கும் முயற்சியே ஹிம்சை முறை என்று கருதினதால்தான் அவர் அம் முறையை வெறுத்தார்.

அவருடைய நீண்ட பயனுள்ள வாழ்க்கை முழுவதிலும் உண்மையான அனைத்துலக நோக்கம் ஒன்றை அடைவதிலேயே தம் முயற்சியைச் செலுத்தினார். உபநிஷதங்களில் கூறியுள்ள ஹிந்து இலட்சியங்கள் அவர் வாழ்வில் பெரிதும் செல்வாக்குற்றன. ஆனால் தொடக்கத்திலிருந்தே இந்திய வாழ்வில் காணப்படும் நிறைந்த வேறுபாடுகளை உணரத் தொடங்கினார். எல்லா உறுப்புக்களும் சுதந்திரமான முறையில் முழு வெற்றியடைய வழி வகுப்பதே இன்றியமையாதது என்பதை உணர்ந்தார். நல்ல விஞ்ஞானத்தாலும் தொழில் நுட்பத்தாலும் ஒருமைப்படுத்தப்பட்ட உலகிற்கு, தேசீயம் மட்டும் போதுமானதாகாது என்பதையும் நாளாவட்டத்தில் அவர் உணர்ந்தார். பல்வேறு நாடுகளும் அவற்

லுள்ள மக்களும் சுதந்திரம் பெறுவதைக் காட்டிலும், அவை ன்றற்கொன்று உதவிக் கொண்டு வாழ்வதே வாழ்வின் கொள்கை ாகவும், வளர்ச்சியாகவும் இன்றும் நாளையும் இருக்க வேண்டு மென்று அவர் பறை சாற்றினர்.

முழு உலகைப்பற்றி, நாளும் நாளும் அதிகமாக அவர் கொண்ட கவலையில், இந்தியாவைப் பற்றியும் ஒன்றை உணர்ந்தார். அனைத்துலக மானிடப் பண்பாட்டிற்கு இந்தியா தன் பங்கைச் செலுத்த வேண்டுமானல் எல்லா பிரச்னைகளையும் ஆக்க முறையில், உடன்பாட்டு வகையில் அணுக வேண்டும் என்றும் உணர்ந்தார். அவர் கருத்துப்படி, ஏற்றுக்கொள்வதுதான், வாழ்வின் அடிப்படைக் கொள்கையாக இருக்க வேண்டுமே தவிர, ஒதுக்கல், அடிப்படைக் கொள்கையாக அமையக் கூடாது. ஆனல், அதே நேரத்தில் இறந்தவற்றை ஒதுக்கியே தீர வேண்டும் என்று வாழ்வு விரும்பு கிறது. இந்திய வாழ்விலும், பழக்கத்திலும் காணப்பட்ட இறந்த வற்றையும், எதிர்ச் செயல் கொள்கைகளையும் தாக்க அவர் பின் வாங்கியதே இல்லை. மேனாட்டு நாகரிகத்தில் காணப்படும் வலிமையற்ற பகுதிகளையும் எதிர்த்துக் கூற அவர் தயங்கவில்லை. கீழை நாடுகளிற் காணப்படும் சோம்பர், குருட்டு நம்பிக்கை ஆகிய வற்றைத் தாக்கிய அதே நேரத்தில் மேனாட்டினரின் அளவு மீறிய தேசீயத்தையும், லௌகீகப் பொருள்கள் மேல் அவர்கட்குள்ள பற்றையும் கண்டித்தார். உண்மையானதும், புதுமையானதுமான மானிட நாகரிகம் ஐரோப்பாவின் மத்தியிலிருந்து பிறக்கும் என அவர் தொடக்கத்தில் நம்பினர். அவர் எழுதியுள்ள கடைசிக் கட்டுரையில் மேனாட்டின் மேல் தாம் கொண்டிருந்த நம்பிக்கை தகர்ந்து விட்டதாக வருத்தத்துடன் கூறியுள்ளார். தாகூரின் இக் கூற்று மேனாட்டுத் தாகூர்த் திறனாய்வாளர் சிலரின் மனத்தைப் புண்படுத்தியுள்ளது என்ருலும், இந்தியாவிலுள்ள தம் நண்பர்கள் பலரையும் கருணை இன்றிக் குறை கூறியுள்ளார் என்பதை அவர் கள் மறந்து விட்டனர். மகாத்மா காந்தியிடம் எல்லையற்ற மதிப்பு வைத்திருந்துங்கூட, சில குறிப்பிட்ட பிரச்னைகளில் வலுவாக அவரைக் கண்டித்துள்ளார். மேனாட்டின் மேல் அளவிலா மதிப்பு வைத்திருந்துங்கூட, தேசீய கர்வத்துக்கும், லௌகீக செல்வத் துக்கும் அவர்கள் எல்லையற்ற மதிப்புத் தருவதைக் கண்டு கண்டித் துள்ளார்.

எவ்வாறு இருப்பினும் மனிதனிடம் தாம் கொண்டிருக்கும் நம்பிக்கையைத் தாகூர் இழக்கவில்லை. மகாத்மாவைக் குறை

கூறும்பொழுதுகூட, மனிதர் என்ற முறையில் மகாத்மாவின் பெருமையை உணர்ந்திருந்தார். மேனாட்டின் மேல் தாம் வைத்திருந்த நம்பிக்கையை இழந்த நேரத்திலுங்கூட, தாம் நண்பர்களாகக் கொண்டிருந்த பெரு மனம் படைத்த மேனாட்டார் சிலரைப் பற்றிப் பெருமிதத்தோடும், நன்றியறிவோடும் கூறியுள்ளார். மனித சமுதாயத்தின் ஒற்றுமை, மனிதனை மாற்றியமைக்கச் சத்தியத்திற்கு உள்ள சக்தி, மாகாணப் பித்து கட்சிப்பித்து என்பவற்றின் தீமைகள், குறுகிய மனப்பான்மை, தன்னலம் என்பவை ஒருபுறம், இவற்றினெதிரே தர்க்கம், பண வீக்கம், தன் குறையறிய முயலாமை, பொறுப்பற்ற சினம், சாக்கு போக்குகளின் பின்னே மறைந்து கொள்ள முயலுதல், எல்லாவற்றையும்விடப் பிறர் போற்றுவனவற்றை அடிமை மனப்பான்மையுடன் அப்படியே செய்ய முயலுதல் ஆகிய இக் கருத்துக்களே அவருடைய கட்டுரைகள் முழுவதிலும் காணப்படும். அவர் கடைசியாக வரைந்த கட்டுரையில் உலகிற்கு விட்டுச் சென்ற மரண சாசனத்துடன் இந்த ஆராய்ச்சியை முடிக்கலாம். "என்ன இருப்பினும் இப்பொழுது கிடைத்துள்ள தோல்வியை முடிவானதாகக் கருதி மனிதனிடம் நம்பிக்கையை இழக்கும் பாவத்தை யான் செய்ய மாட்டேன். இந்தப் பெரும் நீர்ப் பிரளயம் முடிந்த பிறகு, மறுபடியும் ஆகாயம் உணர்ச்சி மேகத்தினின்று விடுபட்டுத் தூய்மையாக விளங்கத் தொடங்கியவுடன் வரலாற்றில் ஒரு திருப்பத்தை எதிர்பார்ப்பேன். ஒருவேளை அந்த விடிவுகாலம் அடிவானத்திலிருந்து, கதிரவன் தோன்றும் இக் கீழ்த் திசையிலிருந்து தோன்றலாம். அந் நேரத்தில் தோல்வி காணாத மனிதன் தடைகளை எல்லாம் தகர்த்து, தான் இழந்த பழைய பரம்பரைச் சொத்தை மீட்டும் வென்று பெறுவதற்கு வெற்றிப் பாதையில் செல்வான்."

—ஹுமாயூன் கபீர்.

# அனைத்துலக
# மனிதனை நோக்கி

## மொழி பெயர்பாளன் குறிப்பு

ஒவ்வொரு கட்டுரையிலும் சிற்சில சொற்களின் மேல் 1, 2 என்று இலக்கமிடப்பட்டுள்ளது. நூலின் இறுதியில் அந்த அந்தக் கட்டுரைத் தலைப்பில் இந்த இலக்கங்கட்குரிய அடிக் குறிப்பும், பிற குறிப்புக்களும் தரப் பெற்றுள்ளன.

# 1. கல்வியின் மாறுபாடுகள்

வாழ்க்கைக்கு, வேண்டிய இன்றியமையாத தேவைகளுடன் மட்டும் மனிதர்கள் அமைதியடைந்துவிட முடியாது. ஓரளவு தத்தம் தேவைகளால் பிணைக்கப்பட்டும், ஓரளவு சுதந்திரமாகவும் அவர்கள் வாழ்கின்றனர். சாதாரண சராசரி மனிதன் மூன்றரை முழம் உயரம் இருப்பினும் அதைவிட மிக அதிகமான உயரமுள்ள வீட்டில் குடி இருக்கிருன். அவனுடைய சுகாதாரத்துக்கும், வசதிக்கும், புழக்கத்துக்கும் ஏற்றவகையில் பெரிய வீட்டில் வாழ்கிருன். கல்விக்கும்கூட இது முற்றிலும் பொருந்தும். பள்ளிக்கூடத்திற்குப் படிக்கவேண்டிய பாடப் புத்தகங்களுடன், மாணவன் தானே விரும்பிப் படிக்கும் நூல்களையும் படிக்குமாறு உரிமை வழங்க வேண்டும். இவ்வாறு செய்யாவிட்டால் அவனுடைய மனவளர்ச்சி தடைப்பட்டு, உடலளவில் பெரிய மனிதஞக வளர்ந்தும் மன வளர்ச்சியில் ஒரு பையனைப் போலவே இருக்க நேரிடும்.

இந்த நாட்டில், ஒரு பையனுக்கு, அவன் விருப்பம்போல் செலவழிப்பதற்கு மிகக் குறைந்த நேரமே ஒதுக்கி இருப்பது துரதிர்ஷ்டந்தான். மிகச் சுருங்கிய காலத்தில், பிறநாட்டு மொழி ஒன்றைக் கற்று, பல தேர்வுகளில் வெற்றி பெற்று, ஒரு வேலைக்கும் தகுதியுள்ளவஞக அவன் ஆகவேண்டும். எனவே, எல்லை மீறிய வேகத்தில் சில பாடப் புத்தகங்களை உருப் போடுவது தவிர அவன் வேறு என்ன செய்யமுடியும்? பொழுது போக்குக்காக ஒரு நூலைப் படித்து அவனுடைய பொன்போன்ற காலத்தை வீணடிப்பதை அவன் பெற்ருேர்களும், ஆசிரியர்களும் அனுமதிப்பதில்லை. அவனிடத்தில் அத்தகைய புத்தகம் எதையாவது கண்டால் உடனே அதனைப் பறித்துவிடுகின்றனர்.

வங்காளிப் பையன் பத்திய உணவாகிய இலக்கணம், அகராதி, பூகோளம் என்பவற்றுடன் மட்டும் வாழ வேண்டும் என்று கொடிய விதி வகுத்திருக்கிறது. சூம்பி மெலிந்த கால்களைத் தொங்கவிட்டு ஆட்டிக்கொண்டு வகுப்பறையில் அவன் அமர்ந்திருப்பதைப் பார்க்கும்பொழுது, உலகத்திலேயே மிகுந்த துரதிர்ஷ்டம் பிடித்த பையனைப் பார்க்கின்ருேம். பிறநாடுகளில் அவனை ஒத்த குழந்தைகள் பலவிதமான கேளிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் பொழுது, இவன் ஆசிரியருடைய பிரம்படியை உண்ணவேண்டி இருக்கிறது. இந்தப் பிரம்படி உணவிற்கு ஊறுகாயாக ஆசிரியரின் ஏச்சும் பேச்சும் உதவுகின்றன.

இத்தகைய உணவு முறை நிச்சயமாக யாருடைய சீரணத்தை
யும் ஒழித்துவிடும். சத்தும், பொழுதுபோக்கும் இன்மையால்
வங்காளிப் பையன் அவனுடைய உடம்பும் மனமும் நன்கு ஊட்டப்
பெருமலே வளர்கிருன். மிக உயர்ந்த பல்கலைக் கழகப் பட்டங்
களைப் பெற்று, பல நூல்களை எழுதினுற்கூட, ஓர் இனத்தார் என்ற
முறையில் நம்முடைய மனம் நல்ல வளர்ச்சியுடனே, சுறு சுறுப்
புடனே காணப்படுவதில்லை. எந்த ஒன்றையும் நன்கு பற்றிக்
கொள்ளவோ, வலிமையுடன் நிற்கச் செய்யவோ, தொடக்கத்தி
லிருந்து முடிவுவரை ஒன்றைச் செய்து முடிக்கவோ நம்மால்
ஆகாது. நல்ல வயது வந்த இளைஞர்களைப்போலப் பேசவோ
நினைக்கவோ, செயற்படவோ நம்மால் முடிவதில்லை. எனவே
நம்முடைய 'மன வறுமையை ஈடுசெய்யும் முறையில் மிகுத்துக்
கூறல், வீம்பு பேசுதல், ஆடம்பரஞ் செய்தல் ஆகியவற்றை மேற்
கொள்ளுகிருேம்.

குழந்தைப் பருவத்திலிருந்தே நம் குழந்தைகள் பெறுப
மகிழ்ச்சியற்ற கல்வியின் முக்கியப் பயனுகும் இது. இக் கல்வி
யின்படி சில பாடப்புத்தகங்களை மனப்பாடஞ் செய்து, சில விஷயங்
களைக்கூட முழுவதுங் கற்காமல், அவற்றில் ஓரளவு அறிவுமட்டுமே
பெறுகிருர்கள். மனிதர்கள் பசியைத் தணிக்க உணவுதான்
தேவையே தவிரக் காற்றன்று; ஆனுல், அந்த உணவை நன்கு
சீரணிக்கக் காற்றும் தேவைப்படுகிறது. ஒரு பாடப் புத்தகத்தைச்
சீரணிக்கப் பொழுதுபோக்குப் புத்தகங்கள் பல தேவைப்படுகின்
றன. இன்பத்தின் பொருட்டாக ஒரு பையன் ஒரு நூலைப் படிக்கும்
பொழுது அவனையும் அறியாமல் படிக்கும் பழக்கம் அதிகமாகிறது
பலவற்றைக் கற்று, மனத்தில் நிறுத்திக் கொள்ளும் சக்தியும் இயல்
பான எளிய முறையில் வந்துவிடுகிறது.

மொழிதான் நம்முடைய முதல் தொல்லை. இலக்கணத்தாலும்
சொல்லாக்கத்தாலும் நம்முடைய தாய்மொழிக்கும் ஆங்கிலத்திற்
கும் உள்ள மிகப் பெரிய வேறுபாடு காரணமாக, ஆங்கிலம் நம்மைப்
பொறுத்தவரை பிறநாட்டு மொழியாகவே உள்ளது. இதையடுத்து
நூலில் சொல்லப்பட்ட பொருளைப் புரிந்துகொள்ளும் தொல்லை
எனவே, ஒரு ஆங்கில நூல் நமக்கு இரண்டு வகையிலும் வெளிநாட்
டுப் பொருளாகி விடுகிறது. அதில் கூறப்பெற்ற வாழ்க்கையோடு
நமக்கு ஒரு சிறிதும் தொடர்பின்மையின், அதனைப் புரிந்துகொள்
ளாமலே உருப்போட்டு விடுகிருேம். இது உணவை மெல்லாமல்
விழுங்குவதேபோல ஆகிறது. ஒரு குழந்தையின் ஆங்கிலப் பாட

புத்தகத்தில், வைக்கோல் போர் தயாரிப்பதைப் பற்றிய ஒரு கதையும், சார்லியும், கேட்டியும் பனி உருண்டை உருட்டி விளையாடுகையில் தம்முள் போட்டுக்கொண்ட சண்டை பற்றியும் எழுதி இருப்பதாக வைத்துக் கொள்வோம். இக் கதைகளில் வரும் நிகழ்ச்சிகள், ஆங்கிலக் குழந்தைகள் நன்கு அறிந்துள்ள நிகழ்ச்சிகள் பற்றியன. அவர்கள் அவற்றைப் படித்து மகிழ்ச்சியடைய முடியும். ஆனால், இக் கதைகள் நம் குழந்தைகள் மனத் திரையில் எந்த நினைவையும் உண்டாக்குவதில்லை; அவர்கள் கண்ணெதிரே எந்தப் படத்தையும் தோற்றுவிப்பதுமில்லை. இத்தகைய புத்தகங்களைப் படிக்கையில் நம் குழந்தைகள் இருட்டில்தான் துழாவுகின்றன.

நம்முடைய பள்ளிகளின் கீழ் வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்கள் தகுந்த அளவு பயிற்சி பெற்றவர்களல்லர். ஒரு சிலர் மெட்ரிக்குலேஷன் தேர்ச்சி பெற்றுள்ளனர்; ஒரு சிலர் அதுவும் பெறவில்லை. மேலும், ஆங்கில மொழி, இலக்கியம் ஆகியவற்றில் தக்க அறிவையும், ஆங்கிலேயர் வாழ்க்கை, எண்ணம் என்பவற்றில் போதுமான அறிவையும் இவர்களில் யாருமே பெற்றதில்லை. இவ்வாறு இருந்தும், ஆங்கிலக் கல்வியை நமக்கு அறிமுகம் செய்து வைப்பவர்கள் இந்த ஆசிரியர்களே யாவர். செம்மையான ஆங்கிலமோ, செம்மையான வங்காளி மொழியோ அவர்கட்குத் தெரியாது. அவர்கள் செய்யக்கூடியதெல்லாம் கற்பிக்கத் தெரியாமல் கற்பிப்பதேயாகும்.

இரங்கத்தக்க இவர்களைக் குற்றங்கூறவும் முடியாது; உதாரணமாக, 'குதிரை ஒரு மேன்மையான (Noble) பிராணி' என்ற ஆங்கில வாக்கியத்தை வங்காளியில் நான் மொழிபெயர்ப்பதாக வைத்துக் கொள்வோம். நான் அதனை எவ்வாறு செய்யமுடியும்? ஒரே நேரத்தில் எவ்வாறு இரண்டு மொழிகட்கு நான் உண்மையுள்ளவனாக இருக்கமுடியும். குதிரை ஒரு 'மேன்மையான' பிராணி என்பதா, அன்றி 'மேல் ஜாதி' பிராணி என்பதா, அன்றி 'மிக நல்ல' பிராணி என்பதா அல்லது வேறு எவ்வாறு இதனைக் கூறுவது? வங்காளி மொழியில் காணப்படும் எந்தச் சொல்லும் 'நோபிள்' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேர் பொருள் உடையதாகத் தெரியவில்லை. ஆராய்ச்சி முடிவில் வேறு சொல்லைப் போட்டு ஏமாற்றுவது தவிர யான் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. ஆகவே, முடிவில் தப்பித்துக்கொள்ளும் வழியை, ஆசிரியர் மேற்கொண்டால் யான் அவரைக் குறைகூற முடியாது.

இதன் முடிந்த பயன் என்னவெனில், பையன் ஒன்றையும் கற்றுக்கொள்ள முடிவதில்லை. வங்காளியைத் தவிர வேறு மொழியை அவன் கற்காதிருப்பின், பள்ளிக்கூடத்திற்கே அவன் போகாதிருப்பின், அவன் விருப்பம்போல், விளையாடவும், மரம் ஏறவும், குளத்திலும் ஆற்றிலும் நீச்சல் அடிக்கவும், மலர்கள் பறிக்கவும் இயற்கைக்கு ஆயிரமான தொல்லைகள் உண்டாக்கவும் ஆக, இவற்றிலாவது பொழுதை அவன் விருப்பப்படி கழிக்கமுடியும். இவ்வாறு செய்தால் அவனுடைய இளமை இயல்பையாவது திருப்திப்படுத்த முடியும். அதன் பயனாகத் திடமான உடலுடன் மகிழ்ச்சியான மனத்தையும் பெறமுடியும். ஆனால், ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்ளச் செய்யும் பெரு முயற்சியில், அவன் அதனைக் கற்றுக் கொள்வதுமில்லை; மகிழ்ச்சியடைவதுமில்லை; இலக்கியங் காட்டும் கற்பனை உலகில் அவன் நுழைவதற்குரிய சக்தியைப் பெறுவதுமில்லை; இவை இல்லாவிடினும், காட்சியளவில் உள்ள இயற்கை உலகில் நுழைவதற்குரிய காலத்தையாவது அவன் பெறுகின்றானா என்றால் அதுவும் இல்லை.

அகத்தே உள்ள ஓர் உலகத்திற்கும் புறத்தே உள்ள ஓர் உலகத்திற்கும் ஆக இரண்டு உலகங்கட்குச் சொந்தமாகிறான் மனிதன். இவ்வுலகங்கள் அவனுக்கு உயிரையும், சுகாதாரத்தையும், வலிமையையும் தந்து, வடிவம், நிறம், வாசனை, இயக்கம், இசை, காதல், இன்பம் என்ற அலைகளாக அவனைத் தாக்கி அவன் வாழ்வை மலரச் செய்கின்றன. இரண்டு சொந்த நாடுகளிலும் தங்க விடாமல் வெருட்டப்பட்டு அந்நிய நாட்டுச் சிறையில் வாடும் ஒருவரைப் போல நம் குழந்தைகள் இந்த அக, புற உலகங்களிலிருந்து வெருட்டப்படுகின்றன. குழந்தைகட்குத் தேவையான அன்பை, நிறைந்த அளவு கொடுப்பதற்காகவே, பெற்றோர்களின் உள்ளத்தில் அன்பை நிறைத்தும், குழந்தைகள் கிடந்து உறங்கும் வகையில் தாய்மார்களின் மார்பை மென்மையாகப் படைத்தும் வைத்திருக்கிறான் இறைவன். குழந்தைகள் உடலமைப்பு மிகச் சிறியதாக இருப்பினும் வீட்டிலுள்ள காலி இடம் முழுவதுங்கூட அவர்கள் விளையாடுவதற்குப் போதுமானதாக இல்லை. நம்முடைய பையன்களையும், பெண்களையும் அவர்களுடைய இளமைக் காலத்தை எங்கே சென்று கழிக்குமாறு விட்டிருக்கின்றோம்? பிற மொழியின் இலக்கணம், அகராதி என்பவற்றினிடையேயும், சுவையற்ற, முடிவிலாத, பள்ளி வேலை என்னும் குறுகிய சந்திலேயும் அவர்களை விட்டிருக்கின்றோம்.

ஒரு மனிதனுடைய ஆயுளில் ஓர் ஆண்டு, ஒரு சங்கிலியில் ஒரு கணுவைப் போன்றதாகும். குழந்தைப் பருவம் படிப்படியாகச் சென்று இளமைப் பருவத்தில் முடிகிறது என்பதைக் கூறத் தேவை இல்லை. நன்கு வளர்ச்சியடைந்து செயல்படும் உலகில் நுழைகின்ற ஒரு மனிதனுக்குச் சில மனக் குணங்கள் இன்றியமையாமல் வேண்டப்படுகின்றன. ஆனால், இந்தக் குணங்கள் உடனே கிடைப்பதில்லை; அவற்றை வளர்க்க வேண்டும். நம்முடைய கையும் காலும் அந்த அந்த நேரத் தேவைக்குத் தகுந்தபடி வளர்வதைப் போல மனக் குணங்களும் வளர்ச்சியடைகின்றன. தேவைப்படும் பொழுது கடையில் சென்று வாங்கக்கூடிய முன்னரே தைக்கப் பட்ட உடுப்புக்களைப் போல இவை அகப்படுவதில்லை.

வாழ்க்கையின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு, நினைவுச் சக்தியும் கற்பனைச் சக்தியும் மிகவும் தேவைப்படுகின்றன. உண்மையான மனிதர்களாக நாம் வாழ வேண்டுமாயின் இந்த இரண்டு சக்திகளும் இல்லாமல் வாழ முடியாது. குழந்தைப் பருவத்தில் இவற்றை வளர்த்தால் ஒழிய, நாம் வளர்ந்துவிட்ட பிறகு இவற்றைப் பெற முடியாது.

நம்முடைய தற்காலக் கல்வி முறை இவற்றை வளர்த்துக் கொள்ள இடந்தருவதில்லை. வேற்று மொழியைப் போதிப்பதற்குத் தகுதி பெருத ஆசிரியர்களால் கற்பிக்கப் பெறும் ஒரு வேற்று மொழியைக் கற்றுக் கொள்வதில், குழந்தைப் பருவத்தின் பல ஆண்டுகளைக் கழிக்கின்ருேம். ஆங்கில மொழியைக் கற்றுக் கொள்வதே கடினம்; ஆங்கில மக்களின் எண்ணம், உணர்ச்சி ஆகியவற்றை நாம் நன்கு புரிந்து கொள்வது அதைவிடக் கடினம். மேலும், இவற்றைச் செய்ய மிக நீண்ட காலத்தைச் செலவழிக்கின்ருேம்; அவ்வளவு காலமும் வெளியே போக்கிடம் இன்மையால் நம்முடைய நினைவாற்றல் தொழிற்படாமல் அப்படியே நின்று விடுகிறது.

சிந்திக்காமல் கற்பதென்பது, எதனையும் கட்டாமல், கட்டடப் பொருள்களைச் சேகரித்து நிரப்புவது போலாகும். மலைபோன்று உயர்ந்து நிற்கும் அளவுக்குச் சுண்ணும்பு, மணல், செங்கல், உத்தரக் கட்டை, குறுக்குச் சட்டம் ஆகியவற்றைச் சேர்த்துக் குவித்த பிறகு, பல்கலைக் கழகத்திலிருந்து மூன்ருவது மாடியின் கூரையைப் போடும்படியாகத் திடீரென்று ஓர் ஆணை பிறக்கிறது. உடனே நம்முடைய குவியலின் மேலே ஏறிச் சென்று இரண்டாண்டு

4

கட்கு இடைவிடாமல் அதனை அடித்து நொறுக்குகிறோம். அடிமேல் அடி அடித்ததன் விளைவாக அக் குவியல் சரிந்து வீட்டின் மேல் தளம் போல ஒரே சமமாக ஆகி விடுகிறது. இவ்வாறு சம தரை யாக ஆகிவிட்டமையின் இதனை ஒரு வீடு என்ற கூற முடியுமா? காற்றையும் ஒளியையும் உள்ளே அனுமதிப்பதற்கு ஜன்னல்கள் எவையேனும் அதில் உண்டா? ஒரு மனிதன் தன் வாழ்நாள் முழுவதும் வாழ்வதற்கு இதனைப் பயன்படுத்த முடியுமா? அதில் ஒழுங்குமுறை, அழகு, ஒன்றல் ஆகிய எவையேனும் இருக்குமா?

வரலாற்றில் இதுவரைக் காணப்படாத முறையில் ஒரு பெரிய கட்டடத்தை நம் நாட்டில் கட்டுவதற்கு மிகப் பெரிய அளவில் சாமான்கள் சேகரிக்கப்படுகின்றன. சேகரிக்கக் கற்று விட்டதால் கட்டவும் கற்று விட்டோம் என்று யாரும் நினைத்துவிட வேண்டா. சாமான் சேகரமும், வீடு கட்டும் முயற்சியும் ஒரே நேரத்தில் படிப் படியாக நடைபெற்றால் ஒழிய நல்ல பயனைக் காணமுடியாது.

எனவே, என் மகன் ஒரு மனிதனாக வளர வேண்டுமென்று நான் விரும்பினால், அவனுடைய குழந்தைப் பருவத்திலிருந்தே ஒரு மனித னாக வளர்வதற்குரிய முயற்சியை எடுத்துக் கொள்ள வேண்டும். அவன், தன்னுடைய மனனம் செய்யும் நினைவாற்றலை மட்டும் நம்பி வாழாமல், தானே சிந்திப்பதற்கும், தன் கற்பனையைப் பயன்படுத்து வதற்கும் பழக்கப்படுத்தப்பட வேண்டும். நல்ல பயனைக் காண வேண்டுமாயின் ஏர் உழுது, பறம்படிப்பதுடன் வயலுக்கு நீரும் விட வேண்டும். அதிலும் நெற்பயிர் நல்ல நீர்வளமுள்ள பகுதியில் நன்கு பயிராகிறது. நெற்பயிர் வளர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் மழை மிகவும் அவசியமாகிறது; மிகவும் தேவைப்படும் அந்த நேரத்தில் மழை இல்லாவிட்டால் நெற்பயிர் அழிந்து விடு கிறது. அந்தச் சமயம் கடந்த பிறகு எவ்வளவு மழை பெய்தாலும் பய னில்லை; பயிர் பிழைக்காது. குழந்தைப் பருவம், இளம் பருவம் ஆகிய பருவங்களில் மனிதன் நல்ல வளர்ச்சி யடைவதற்கு இலக்கியத் தூண்டுதல் மிகவும் தேவைப்படுகிறது. இந்தத் தூண்டுதல் பட்ட வுடன், அவனுடைய மனமும், இருதயமும் மெல்ல வளர்ந்து ஒளியும் காற்றும் உள்ள இடத்தில் தலை நீட்டி, நல்ல சுகாதாரத்துடனும் வலிமையுடனும், வளர்ச்சி யடையும். வெறும் இலக்கணத்தையும் அகராதியையும் படிப்பதில் அந்தப் பருவம் கழிந்தால் இவை வளர்ச்சியடையாமல் அப்படியே நின்று விடும். அதன் பிறகு ஐரோப்பிய இலக்கியத்தில் காணப்படும் மிகச் சிறந்த உண்மைகள் மிக உயர்ந்த கருத்துக்கள், அழகான எண்ணங்கள் ஆகியவற்றை

அந்த மனிதனின் வாழ்நாள் முழுவதும் அவன் தலையில் கொட்டினாலும் அவற்றின் ஆழமான உண்மைகளையோ கருத்தையோ அவன் அறிய முடியாது.

நம் வாழ்நாளின் மிக உயர்ந்த பகுதி, மகிழ்ச்சி தராத கல்வியைக் கற்பதில் செலவழிந்து விடுகிறது. குழந்தைப் பருவத்திலிருந்து இளம் பருவம் வரையிலும், இளம் பருவத்திலிருந்து இளைஞனாக ஆகும் வரையிலும், கலைமகளின் கூலியாள்களாகவே இருக்கிறோம்; நம்முடைய வளைந்த முதுகுகளில் எண்ணற்ற சொற்கள் என்னும் பாரத்தை ஏற்றிக் கொள்கிறோம். முடிவாக, ஆங்கிலக் கருத்துக்கள் நிரம்பிய இடத்தில் புகும்பொழுது நமக்கு ஏற்ற சூழ்நிலையாக அது இருப்பதில்லை. அந்தக் கருத்துக்களை ஒருவாறு புரிந்து கொண்டாலும் நம்முடைய ஆழமான இயல்புகளிலோ, அவற்றை நாம் செய்யும் சொற்பொழிவுகளிலும், எழுதும் நூல்களிலும் பயன்படுத்தினாலும், அன்றாட வாழ்க்கையிலோ நேரிடையாகப் பயன்படுத்த முடிவதில்லை.

எனவே, வாழ்க்கையின் முதல் இருபது, இருபத்திரண்டு ஆண்டுகள் ஆங்கில நூல்களிலிருந்து கருத்துக்களைப் பொறுக்கிக் கொள்வதில் கழிந்து விடுகிறது. என்றாலும், எந்தக் காலத்திலும் இக் கருத்துக்கள் நம் உள்ளத்தில் ஒட்டி உறவாடுவதில்லை. இதன் பயன் என்னவெனில், நம்முடைய மனம் பல இடங்களில் காரை உதிர்ந்த சுவர் போலக் காட்சியளிக்கின்றது. சில இடங்களில் காரை உதிராமல் உள்ள பகுதியைப் போலச் சில கருத்துக்கள் ஒட்டிக் கொண்டும், சில கருத்துக்கள் ஒட்டாமலும் இருக்கும். நம்முடைய அக வாழ்க்கையோடு ஒட்டாத ஐரோப்பியக் கல்வியை மேலாகப் பூசிக் கொண்டு, பழைய காலக் காட்டுமிராண்டிகள், தங்கள் ஒளி பொருந்திய உடம்பைச் சாயத்தாலும், பச்சை குத்திக் கொள்வதாலும் அசிங்கப்படுத்திக் கொள்வதைப் போல நாமும் பெருமையடித்துக் கொள்கிறோம். காட்டுமிராண்டிகளின் தலைவர்கள் ஐரோப்பிய உடையைத் தரித்துக் கொண்டு. மலிவான ஐரோப்பிய நாட்டு மணிகளை அணிந்து கொள்ளும்பொழுது எவ்வளவு அழகற்றுக் காட்சியளிக்கிறார்கள் என்பதை அவர்கள் அறிவதில்லை. நமக்குத் தெரிந்த சாதாரண ஐரோப்பிய வார்த்தைகளை வெளியிடும்பொழுது எவ்வளவு கேலிக்கூத்தான நிலையை அடைகிறோம் என்பதையும் நாம் அறிவதில்லை. மிக உயர்ந்த ஐரோப்பியக் கருத்துக்களை எவ்வளவு தவறாகப் பயன்படுத்துகிறோம் என்பதையும் அறியமுடிவ

தில்லை. பிறர் யாரேனும் நம்மைக் கண்டு சிரித்தால் இன்னும் ஆணித்தரமாகப் பேசி அவர்களைக் கவர முயல்கிறோம்.

நம்முடைய கல்வி நம்முடைய வாழ்க்கையோடு பொருந்த வில்லை. நாம் கற்கும் நூல்கள் நம்முடைய வீடுகள் பற்றியோ நம்முடைய சமுதாயத்தின் குறிக்கோள்பற்றியோ ஒன்றும் கூறுவ தில்லை. நமது அன்றாட வாழ்வில் செய்யும் முயற்சிகள் பற்றி இந் நூல்களில் ஒன்றும் இல்லை. நம்முடைய நண்பர்கள் அல்லது சுற்றத்தார்கள், நமது ஆகாயம், நமது நிலம், நமது காலை அல்லது மாலை, நமது விளைநிலம், ஆறுகள் ஆகிய எவை பற்றியும் அந்நூல் களில் ஒன்றுங் காணப்படுவதில்லை. இத்தகைய சூழ்நிலையில் கல்வியும் வாழ்க்கையும் ஒன்றாக இரா; இடையில் ஒரு குறுக்குச் சுவருடன் இவை இரண்டும் தனித்தே நிற்கும். நாம் பெறும் கல்வி நம்முடைய வேருக்கு அப்பால் வெகு தூரத்தில் பெய்கின்ற மழை யாகவே இருக்கும். வேரைப் பிரிக்கும் மண்ணைத் தாண்டி மழை செல்ல முடியாத நிலையில், அது நம் தாகம் தணிக்க முடியாமல் இருக்கிறது.

இந்த நாட்டைப் பொறுத்தவரை, வாழ்க்கையையும் கல்வி யையும் பிரிக்கும் குறுக்குச் சுவர் கடக்க முடியாமல் இருப்பதால், இவை இரண்டையும் சேர்த்தல் இயலாது. இவை இரண்டின் இடையே ஒரு பகைமை வளர்வதே, அடிக்கடி விளையும் பயனாகும். பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் நாம் கற்கின்ற பாடங்களை, நம்மைச் சுற்றியுள்ள வாழ்க்கை ஒவ்வொரு படியிலும் மறுத்து நிற்பதால், நாம் கற்பவை மீது அவநம்பிக்கையும், வெறுப்பும் வளரத் தொடங்கி விடுகின்றன. நாம் அரைகுறை உண்மைகளையே கற்றுக் கொள்கிறோம் என்ற எண்ணம் உண்டாகிறது; ஐரோப்பிய நாகரிகமே அரைகுறை உண்மைகளின்மேல்தான் கட்டப் பட்டுள்ளது என்றும் கருதுகிறோம். இந்திய நாகரிகம் எந்தியத்தின் மேல் கட்டப்பட்டுள்ளதென்றும் நம்முடைய கல்வி மகிழ்சியூட்டு கின்ற பொய்யில் நான் கொண்டுவிடும் என்றும் கருதுகிறோம். ஐரோப்பியக் கல்வி நமக்குப் பயன்படாமல் போவதற்குரிய காரணத்தை அக் கல்வியில் தேடியலைந்து பயனில்லை. அதனெதிராக நம்முடைய வாழ்க்கையில் காணப்படும் பொருத்தமற்ற சூழ்நிலையில் தான் காண முற்பட வேண்டும். என்றாலும், ஐரோப்பியக் கல்வி நமக்குப் பயன்படவில்லை என்றே கூறுகிறோம். ஏனென்றால், தோல்வி என்பது அதனுடைய இயல்பிலேயே அமைந்து கிடக்

கிறது. நாம் எவ்வளவுக் கெவ்வளவு அழுத்தமாக அக் கல்வியை வெறுக்கிருேமோ, அவ்வளவுக் கவ்வளவு குறைந்த அளவிலேயே அது நமக்கு நன்மை செய்கிறது. எனவே, நமது வாழ்க்கைக்கும் கல்விக்கும் இடையே உள்ள போராட்டம் வலுப்படுகிறது. இவை இரண்டும் பிரிந்து செல்லச் செல்ல, நம் வாழ்நாளே ஒரு மேடையாக மாறி, அதில் இவை ஒன்றுக் கொன்று நாடகப் பாத்திரங்கள் போல் கேலி செய்து கொண்டும், ஒன்றை யொன்று தாழ்த்திக் கொண்டும் பொழுதைக் கழிக்கின்றன.

கல்வியையும் வாழ்க்கையையும் எவ்வாறு ஒன்றுபடுத்துவது என்பதே இன்று நம்மிடையே காணப்படும் முக்கியமான பிரச்னை யாகும். இந்த ஒற்றுமையை, வங்காளி மொழியும் இலக்கியமுமே உண்டாக்க முடியும். பக்கிம் சந்திர சட்டர்ஜியின் இதழாகிய 'பங்க தர்சன்'[1] வங்காள இலக்கிய ஆகாயத்தில் ஒரு புதிய நாள் தோன்றுவது போலத் தோன்றியதை நாம் அறிவோம். கற்றறி வுடையவர்கள் அனைவர்க்கும் அது ஏன் திருப்தியை அளித்தது? ஐரோப்பியத் தத்துவம், சரித்திரம், அல்லது விஞ்ஞானம் ஆகிய வற்றில் இதுவரைக் காணப்படாத உண்மை எதையேனும் அந்த இதழ் வெளியிட்டதா? 'பங்கதர்சன்' என்ற கருவியின் மூலமாக ஒரு பேரறிஞர் நம்முடைய கல்விக்கும் வாழ்வுக்கும் இடையே இருந்த குறுக்குச் சுவரை உடைத்தெறிந்து, நம் அறிவுக்கும், இருதயத் திற்கும் இடையே உறவை உண்டாக்கினுர். அதுவரை ஐரோப்பியப் பண்பாடு நமக்கு அந்நியமாகவே இருந்து வந்தது. இந்தப் பொருளைத் தான் பங்கதர்சன் நம்முடைய வீட்டிற்குள் கொண்டு வந்தது. அதனுல் நாம் நம்மையே ஒரு புதிய ஒளியில் காண முடிந்தது. 'சூர்யமுகி', 'கமலமணி'[2] ஆகிய பாத்திரங்களின் மூலம் நம்முடைய பெண்கள் எவ்வாறு உள்ளனர் என்பதைப் பங்கதர்சன் காட்டிற்று. 'சந்திரசேகர்', 'பிரதாப்' ஆகிய பாத்திரங்களின் மூலம் வங்காளி ஆண்மையின் இலட்சியத்தை உயர்த்திற்று. நமது அன்ருட வாழ்க் கையின் சிறு சிறு அலுவல்களில் புகழ் ஒளியைப் பாய்ச்சிற்று.

'பங்கதர்சன்' மூலம நாம் பெற்ற மகிழ்ச்சி அன்றுள்ள கற்றறி வுடைய வங்காளிகளைத் தம் தாய்மொழியில் எழுதுமாறு தூண்டிற்று. ஆங்கிலம் அவர்களுடைய தொழில் முறைக்கு உதவுமே தவிர, இலக்கிய காரியங்கட்கு உதவாது என்பதை உணர்த்திற்று. இந்த நாட்டில், எவ்வளவு கவலை எடுத்துக் கொண்டு ஆங்கிலத்தைக் கற்றுக் கொண்டாலும், நீண்ட காலம் வாழ வேண்டிய நூல்கள்

வங்காளி மொழியில் தான் எழுதப்பெற வேண்டும் என்பதையும் அவர்கள் அறிந்தனர். இதற்குரிய முக்கிய காரணம் என்ன வென்றால், ஒரு வங்காளி தன் மனத்தில் தோன்றிய கருத்தை வெளியிடும் கருவியாகப் பயன்படு முறையில், ஆழ்ந்த அந்தரங்க மான அறிவை வெளியிடு முறையில், ஆங்கிலத்தைப் பயன்படுத்த முடியாது. ஆங்கில மொழியைத் தெள்ளத் தெளியக் கற்றிருப்பி னும், வங்காளி ஒருவனின் எண்ணத்தையும் உணர்ச்சிகளையும் வெளியிடும் உயிருள்ள கருவியாக ஆங்கிலத்தைப் பயன்படுத்த முடியாது. எந்த அரிய அழகும், நினைவும் ஆக்க வேலைகளில் நம்மை ஈடுபடுத்துகின்றனவோ, அவை வேற்றுமொழி மூலம் தம் உண்மை வடிவத்தை அடைய முடிவதில்லை. அல்லாமலும் பரம்பரையாகப் பெற்ற குணங்கள், பல தலைமுறைகளாக நம்முடைய மனத்தை ஓர் அச்சில் வார்த்துவிட்டமையின், அவைகளும் அந்த உண்மை வடிவத்தைப் பிற மொழி மூலம் அடைய முடியாது.

நம்முடைய குழந்தைப் பருவமும் இளமைப் பருவமும் எண்ண உள்ளோட்டத்தை விளங்கிக் கொள்ள முடியாத ஒரு மொழியைக் கற்பதிலேயே கழிந்து விடுகின்றன என்று முன்னரே கூறியுள்ளேன். வயது முதிர்ந்தவுடன் இந்நிலை தலைகீழாக மாறி விடுகிறது. அப்பொழுது நம் எண்ணத்தை வெளியிடுவதற்குரிய ஒரு மொழி கிடைக்காமல் திண்டாடுகிறோம். வாழ்க்கையின் முற்பகுதியில் நாம் கற்கும் மொழிக்கும் நமது எண்ணங்கட்கும் தொடர்பில்லாமை யாலேயே ஆங்கில இலக்கியத்தோடு நெருங்கிய தொடர்பு கொள்ள முடிவதில்லை என்பதையும் முன்னரே குறித்துள்ளேன். பிற்காலத்தில் இருந்த அறிவாளிகள் பலரும் ஆங்கில இலக்கியத்தில் திருப்தி காணுமற்போனதற்கும் காரணம் இதுவேயாகும். இந்த அறிவாளி களை எடுத்துக் கொண்டால், அவர்களுடைய எண்ணங்கள் ஆங்கிலத்திலிருந்து மட்டுமல்லாமல் வங்காளி மொழியிலிருந்தும் விடுபட்டு நிற்கக் காண்கிறோம். உண்மையைக் கூறுமிடத்து, வங்காளி மொழிக்குக் கூட அவர்கள் அந்நியர்களாக ஆகி, அதனிடம் ஒரு வெறுப்பையும் பழகி விட்டார்கள். அந்த மொழி தங்கட்குத் தெரியாது என்பதை அவர்கள் பிறர் அறியக் கூற மறுக்கிறார்கள். அதற்குப் பதிலாக, சிந்தனைக்குரிய வேலை செய் வதற்கு அம் மொழி ஏற்றதில்லை என்றும், தம் போன்ற நாகரிக முடைய மக்களுக்கு ஏற்றதில்லை என்றும் கூறுகிறார்கள். ‘சீ! இந்தப் பழம் புளிக்கும்’ என்ற நரியின் கதைதான் இவர்கள் கதையும்.

இந்த விஷயத்தை எந்தக் கோணத்திலிருந்து ஆராய்ந்தாலும், நம்முடைய வாழ்க்கை, நம்முடைய எண்ணங்கள், நம்முடைய மொழி என்பவற்றினிடையே ஓர் ஒன்றல் தன்மை இல்லை. அடிப்படையான இந்த ஒன்றல் தன்மை இல்லாத காரணத்தால் நம்முடைய கால்களை ஊன்றி நிற்க முடியாமலும், நாம் விரும்பியதைப் பெற முடியாமலும், நம்முடைய முயற்சிகளில் வெற்றி பெற முடியாமலும் அவதிப்படுகிறோம். குளிர் கால உடையைக் குளிர் காலத்திலும், கோடைக் கால உடையைக் கோடைக் காலத்திலும் வாங்க விரும்பிய ஓர் ஏழையின் கதையை ஒரு காலத்தில் படித்தேன். அவ்வாறு விரும்பிய அந்த ஏழை, பிச்சை எடுத்த காசை எல்லாம் சேமித்து வைத்தான். கோடைக்காலம் முடிகின்ற வரை கோடைக்கால உடை வாங்குவதற்குத் தேவையான பணத்தை அவன் சேமிக்க முடியவில்லை. ஒவ்வோர் ஆண்டும் இதே நிலை நீடித்து வந்தது. இறுதியாகக் கடவுளே அவன்மேல் இரக்கப்பட்டு அவனுக்கு ஒரே ஒரு வரம் தருவதாகக் கூறினர். அதற்கு அந்த மனிதன் கீழ்வருமாறு கூறினன். "ஆண்டவனே! குளிர்கால உடையைக் கோடைக் காலத்திலும், கோடைக் கால உடையைக் குளிர் காலத்திலும் வாங்கும்படியாக உள்ள என் அதிர்ஷ்டத்திலுள்ள மாறுபாடுகள் ஒழிவதாக".

நாமும் ஆண்டவனை நோக்கிக் கல்வியிலுள்ள மாறுபாடுகள் நீங்கி, குளிர் காலத்தில் அதற்கேற்ற உடையும், கோடைக் காலத்தில் அதற்கேற்ற உடையும் கிடைக்குமாறு செய்ய வேண்டும் என்று பிரார்த்தனை செய்வோவாக. நமக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் ஆண்டவன் நம் எதிரே வைத்திருக்கின்றன். ஆனல், எந்த நேரத்தில் நமக்கு எது தேவை என்று தெரிந்து எடுத்துக்கொள்ள முடியாமல் நாம் அவதிப்படுகின்றோம். ஆகையால்தான் கதையில் வரும் பிச்சைக்காரனைப் போலவே வாழ்கிறோம். எனவே, நமக்குப் பசிக்கும் பொழுது உணவு தரும்படியும் கடவுளைப் பிரார்த்திப்போமாக. நம்முடைய மொழியை நம் எண்ணங்களுடனும், நம்முடைய கல்வியை வாழ்க்கையுடனும் இணைக்கும்படியும் இறைவனைப் பிரார்த்திப்போமாக.

—1892.

# 2. சமுதாயமும் அரசாங்கமும்[1]

நம்முடைய நாட்டைப் பொறுத்தவரை, போர் புரிதல், நாட்டைக் காத்தல், நீதி வழங்கல் என்பவை மட்டுமே அரசனுடைய கடமைகளாக இருந்தன. ஏனைய, குடிநீர் வழங்கல் முதல் அறிவு வழங்கல் வரை அனைத்தும் சமுதாயத்தின் பொறுப்பிலேயே இருந்து வந்தன. இவற்றை மிகச் சிறந்த முறையில் செய்து வந்தமையின், பல நூற்றுண்டுகளாக மாறி மாறிப் புதிய அரசர்கள் வந்தபோதிலும், நம்முடைய ஆன்மீக வாழ்க்கையை அழித்து, நம்மைக் காட்டு மிராண்டிகளாக மாற்ற முடியவில்லை; நம்முடைய சமுதாயத்தை அழித்து நம்மை அநாதைகளாக ஆக்கவுமில்லை.

அரசர்களிடையே ஓயாமல் போர்கள் நிகழ்ந்து வந்தன. என்றுலும், மூங்கில் தோப்பின் இடை வெளிகளிலும், மாந்தோப்பின் இடையேயும் கோயில்களையும், தங்குமிடங்களையும் கட்டிக் குளங்களையும் தோண்டி வந்தோம். கிராமப் பள்ளி ஆசிரியர் எளிய கணக்குகளைப் போதித்து வந்தார். வேத நூல்களிலிருந்து படிப்பதும், கோயில் வாயில்களில் இராமாயணம் படிப்பதும் ஓய்ந்ததே இல்லை. கிருஷ்ண பக்தியைப் பரப்பும் இசைப் பாடல்கள் கிராமச் சாவடிகளில் மிகுதியும் ஒலித்தன. நம்முடைய கிராம சமுதாயங்கள் புறத்திலிருந்து கிடைக்கும் உதவியை என்றும் நாடியதே இல்லை; புறத்திலிருந்து வந்த அதிகார ஆதிக்கம் அதனுடைய கட்டுக்கோப்பைக் கலைத்ததுமில்லை.

நம்முடைய நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள தண்ணீர்ப் பஞ்சத்தைப் பற்றி நாம் கவலைப் படுவது, ஏனைய கவலைகளோடு ஒப்பு நோக்கிப் பார்த்தால் மிகச் சாதாரணமானதாகவே படும். பஞ்சத்தின் முக்கியமான காரணத்தைக் கண்டுதான் நாம் மிகவும் வருந்துகிறோம். இந்தச் சமுதாயம் தன் மேலேயே நம்பிக்கையை இழந்து விட்டு அதனுடைய கவனம் முழுவதையும் புறத்தே செலுத்துவதைக் காணும்பொழுதுதான், அந்த முக்கிய காரணத்தை அறிந்து, நாம் வருத்தம் அடைகின்றோம்.

ஒரு கிராமத்தை அடுத்துப் பல காலமாக ஓடிக் கொண்டிருந்த ஆறு, திசை மாறிப் போனுல், கிராமத் தண்ணீர் வழங்கல், பயிர் நிலைமை, வாணிகம் ஆகியவை அழிவுறுகின்றன. சோலைவனங்கள் பாலைவனங்களாக மாறுகின்றன; முன்னர்ச் செல்வங் கொழித்த இடத்தில் தழைத்து நிழல் தந்த ஆல மரமும் அசோக மரமும் களை

இழந்து கோட்டானும், வௌவாலும் குடி இருக்கும் இடமாகி விடுகின்றது.

ஆற்றின் ஓட்டத்தைவிட முக்கியத்துவத்தில் குறைந்ததன்று மனித மனத்தின் ஓட்டம். வங்காளத்தில் நிழல் தரும் கிராமங்களின் மகிழ்ச்சிக்கும் நல் வளர்ச்சிக்கும் அங்குக் காணப்பட்ட மன ஓட்டமே காரணமாக இருந்து வந்தது. ஆனால், இப்பொழுது வங்காளத்தின் மனம் திசைமாறி விட்டுள்ளது. அதனால்தான், வங்காளத்தின் கோயில்களைப் பழுது பார்ப்பவர்கள் இன்மையால் அக் கோயில்கள் பழுதடைந்து வீழ்கின்றன. தூர்வாரித் தூய்மை செய்பவர் இன்மையால், அதன் குளங்கள் சுகாதார மற்றவையாய்க் காணப்படுகின்றன. செல்வர்களின் மாளிகைகளும், விழாக்கோலம் பூணுமல் பாலைவனமாகக் காட்சியளிக்கின்றன. இப்பொழுது அரசாங்கம்தான் சுகாதாரத்தையும் குடி தண்ணீரையும் வழங்கவேண்டும். கல்வியாகிய வெகுமதியைப் பெறக் கூட அதிகாரிகளின் வாயில்களிற் சென்று பயபக்தியுடன் மண்டி இட வேண்டும். ஒரு காலத்தில் தன் பூக்களைத் தானே பூக்கச் செய்த மரம், இன்று வெறுமையான தன் கிளைகளை உயரத் தூக்கி ஆண்டவனிடம் உதவி நாடுகின்றது. அந்தப் பிரார்த்தனைக்கு ஆண்டவன் செவி சாய்த்தாற்கூட, செயற்கையாக உண்டாகும் அந்த மலர்களால் என்ன பயன் ஏற்படும்?

ஆங்கிலேயர் கொள்கைப்படி துரைத்தனம் என்று கூறப்படுவதை, நம்முடைய நாட்டில் சர்க்கார் அல்லது அரசாங்கம் என்று கூறுகிறோம். இந்த அரசாங்கம் பழங்கால் இந்தியாவில் அரச அதிகாரம் என்ற வடிவில் நிலைத்திருந்தது. என்றாலும், இன்றைய ஆங்கில துரைத்தனத்திற்கும் நம்முடைய பழங்கால அரச அதிகாரத்திற்கும் ஒரு வேற்றுமை உண்டு. சமுதாயத்தின் நலப்பணிகளை எல்லாம் அரசாங்கத்திடம் ஒப்படைத்துள்ளது இங்கிலாந்து; இந்தியா இதனை மிகக் குறுகிய அளவில்தான் செய்தது.

மக்களுக்கு இலவசமாகச் சமயக் கல்வியையும், உலகியற் கல்வியையும் அளித்தவர்களை அரசன் காப்பாற்றிப் பரிசு வழங்காமல் இல்லை அந்த நாளில். ஆனால், ஓர் அளவுக்குத்தான் அரசனுடைய உதவி கிடைத்து வந்தது. இது பற்றிய உண்மையான பொறுப்பு குடும்பத்தாரிடமே இருந்துவந்தது. அரசன் தான் வழங்கும் மானியத்தை நிறுத்திக் கொண்டாலும், அல்லது திடீரென்று

அராஜகம் வந்து விட்டாலும், சமுதாயத்தின் சமய, உலகியற் கல்வி பெரிய அளவில் பாதிக்கப்படவில்லை. அரசன் குளம் தோண்டாமல் இல்லை ; ஆனால், சமுதாயத்தின் ஒரு செல்வந்தன் செய்த அதே அளவுதான் அரசனும் செய்தான். அரசன் மட்டும் கவனக் குறைவாக இருப்பினும், அதனால் குளங்கள் வற்றி வறண்டு போகவில்லை.

இங்கிலாந்தில் உள்ள மக்கள் தம் இன்பங்களையும், வசதிகளை யும் அனுபவிக்கவும், தங்கள் விருப்பப்படி வாழ்க்கையைக் கொண்டு செலுத்தவும், உரிமை பெற்றுள்ளனர். சமுதாயக் கடமைகள் அரசாங்கத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதால், அவர்கள் அந்தச் சுமையைத் தாங்க வேண்டியதில்லை. இந்தியா வைப் பொறுத்தமட்டில் அரசன்தான் சுதந்திரமாக இருந்தான்! சமுதாயக் கடமைகள் மக்களிடமே ஒப்படைக்கப் பட்டிருந்தன. அரசன் போரில் ஈடுபட்டிருந்தாலும், வேட்டைக்குச் சென்றிருந்தா லும், அவனுடைய கடமைகளை நன்கு நிறைவேற்றினாலும், அல்லது இன்ப வேட்டை ஆடினாலும், அவனுடைய செய்கை களின் புண்ணிய பாவங்கட்கு மட்டும் அவன் பொறுப்பாளியாக இருந்தான். தங்கள் சமுதாய நலங்களைப் பொறுத்தமட்டில் மக்கள் அவனை நம்பி வாழவில்லை. இதற்கெதிராகச் சமுதாயத்தில் வாழ்ந்த மக்களின் கடமைகளில் ஒன்றாகச் சமுதாயக் கடமைகள் இடம் பெற்றிருந்தன.

இதன் பயனாக, சமுதாயக் கட்டுக் கோப்பு முழுவதிலும் இன்று நாம் 'தர்மம்' என்று சொல்லும் சொல்லின் பொருள் நிரம்பிக் கலந்திருந்தது. ஒவ்வொரு மனிதனும் தன்னடக்கம் என்ற கட்டுப் பாட்டைக் கற்றுக் கொள்ள வேண்டி இருந்தது. கடமைகளின் உயர்வையும் தூய்மையான தன்மையையும் ஒவ்வொரு மனிதனும் ஏற்றுக் கொள்ள வேண்டி இருந்தது.

பல்வேறு நாகரிகங்களின் அடிப்படையான பலமும் பல்வேறு வகைகளில் அமைந்து கிடந்தது. எங்கு மக்களின் நலன் குவிந்து கிடக்கிறதோ அங்குதான் நாட்டின் இருதயமும் இயங்குகிறது. இங்கிலாந்தில் துரைத்தனம் வீழ்ந்தால், தேசமே ஆபத்திற்கு உள்ளாகலாம். அதனால் தான், அந்த நாட்டில் அரசியலை அவ்வளவு முக்கியமானதாக எடுத்துக் கொள்கிறார்கள். நம்முடைய நாட்டைப் பொறுத்தமட்டில், சமுதாயக் கட்டுக்கோப்பு - அதாவது 'சமாஜம்' குலைந்தால்தான் தேசத்திற்கு ஆபத்து உண்டாகும். அதனால்தான்,

அரசியல் விடுதலைக்கு நம்முடைய முழு உழைப்பையும் கொடுக்காமல், சமுதாய சுதந்திரத்தை எப்பாடு பட்டாயினும் காப்பாற்றுகிறோம். இங்கிலாந்தில் அநாதைகள் பராமரிப்பு முதல் சமயக் கல்வி வரை எல்லாவற்றிற்கும் அரசாங்கத்தின் உதவியை எதிர் பார்க்கிறார்கள்; ஆனால், நம்முடைய நாட்டில் மக்களின் கடமை உணர்ச்சியை நம்பியே இவை நடைபெறுகின்றன. எனவே, இங்கிலாந்து வாழ வேண்டுமானால் அது தன் துரைத்தனத்தைக் காப்பாற்றித் தீர வேண்டும்; நாம் வாழ வேண்டுமானால், சமுதாய உணர்ச்சியைப் பாதுகாக்க வேண்டும்.

இதன் காரணமாக, அரசாங்கத்தை விழிப்புடனும், தொழிற்படு முறையிலும் இருக்குமாறு பார்த்துக் கொள்வது இங்கிலாந்தின் கடமையாகும். ஆங்கிலப் பள்ளிகளில் படித்த காரணத்தால், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தொழிற்படுமாறு அரசாங்கத்தைத் தூண்டிக் கொண்டிருப்பதுதான் பொதுமக்களின் முக்கியமான கடமை என்ற முடிவுக்கு வந்துள்ளோம். மற்றொருவருடைய உடம்பில் கட்டுப் போடுவதால் நம்முடைய உடம்பிலுள்ள காயங்களை ஆற்றிக் கொள்ள முடியாதென்ற உண்மையை ஏனோ நாம் மறந்து விட்டோம்!

இந்நிலையில் ஒரு வினாத் தோன்றக் கூடும். பொதுக் கடமைகளை, பொதுமக்கள் சமுதாயங்களிடம் விட்டு வைப்பது நலமா; அன்றி, அரசாங்கம் என்ற ஒரு தனிப்பட்ட உறுப்பினிடம் ஒப்புவிப்பது நலமா என்பதே அந்த வினா. இத்தகைய ஒரு விவாதம் விவாத அரங்குகளுக்கு ஏற்றதே தவிர, இந்நேரத்தில் நம்மைப் பொறுத்தவரை அது பயன் அற்றதாகும். பிரிட்டிஷ் அரசாங்கம் பொது மக்களின் நன்னம்பிக்கை என்ற பாறையின் மேல் கட்டப் பட்டுள்ளது என்பதை நாம் உணர வேண்டும்; அன்றியும், இயற்கையான வழிகளில் அது வளர்ந்து வந்துள்ளது. வெறும் விவாதத்தின் மூலம் அந்த நிலையை நாம் அடைய முடியாது. அது எவ்வளவு சிறப்புடையதாயினும் இன்றைய நிலைமையில் அது நம் பிடிக்கு அப்பாற்பட்டதாகும்.

நம்முடைய நாட்டிலுள்ள அரசாங்கம் நம்முடைய சமுதாயத்துடன் எவ்விதத் தொடர்பும் கொள்ளாமையால், நமது சமுதாய அமைப்பில் எந்த இடத்தையும் பெற முடியாது. எனவே, அந்த அரசாங்கத்திடமிருந்து நாம் எதனை விரும்பினாலும் ஓரளவு உரிமையைப் பறிகொடுத்துத்தான் வாங்க நேரிடும். அரசாங்கத்திடம் எந்தக் கடமைகளைச் சமுதாயம் ஒப்படைக்கிறதோ அந்தக் கடமை

கள் பற்றிச் சமுதாயம்தான் கைகழுவி விடவேண்டும். இந்த முறை நமக்கு இயற்கையானதன்று. பல்வேறு தேசத்தார்களும், பல்வேறு அரசர்களும் நம்மை அடிமைப்படுத்தித் தலையிட்டதுண்டு; அதை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம். என்றாலும், அக் காலங்களில் எல்லாம் நம் சமுதாயம் தன் கடமையைத் தானே நிறைவேற்றி வந்தது. தன்னுடைய காரியங்களில் வெளியார், அவர்கள் எவ்வளவு பெரியவர்களாயினும் சரி, தலையிடுவதை ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே, நாட்டிலிருந்து அரசன் நீக்கப்பட்டாலும், சமுதாயப் பெருந்தன்மை அங்கேயே நிலைத்திருந்தது.

சமுதாயத்திடம் நிலைத்திருந்த கடமைகளை ஒவ்வொன்றாக அரசாங்கத்திடம் ஒப்படைக்க நாமே விரும்பித் தயாராக இருக்கிறோம். காலாந்தரத்தில் நம்முடைய சமாஜத்தில் எத்தனையோ புதிய சமுதாயங்கள் தோன்றின; அவைகளுக்கேற்ற புதிய சட்டங்களையும் மரபுகளையும் வகுத்துக் கொண்டன; அப்பொழுதும் ஹிந்து சமயத்தின் உள்ளேயே இருந்தன. ஹிந்து சமயம் அவர்களைக் குறை கூறவில்லை. ஆனால், இப்பொழுது அனைத்துமே ஆங்கிலேயரின் வளையாத சட்டத்தின் பிடியில் கட்டப்பட்டுள்ளன; இதிலிருந்து விலகிப் போகின்றவை அனைத்தும் தம்மை ஹிந்து அல்லாதவை என்று பறை சாற்றிக் கொள்ளுமாறு நெருக்கப்படுகின்றன. நம்முடைய சமாஜத்தின் உயிர் நாடியான பகுதி, பல்லாயிரம் ஆண்டுகளாக நம்மால் உயிர்போல் போற்றிப் பாதுகாக்கப்பட்ட பகுதி, இப்பொழுது வெளியாரால் ஆதிக்கஞ் செலுத்தப்படுகின்ற அளவுக்குப் புறத்தே எறியப்பட்டு விட்டது. இதன் பயன் குழப்பந்தான். அங்கேதான் உண்மையான ஆபத்து இருக்கிறதே தவிரத் தண்ணீர் வழங்கலில் ஏற்பட்ட பற்றாக் குறையால் குடிமுழுகி விடாது.

## II

மிகப் பழங்காலத்தில் அரசனால் மிகவும் கௌரவிக்கப்பட்டு, அவர்களுடைய அறவுரைகளை அரசனும் விரும்பிக் கேட்கும் நிலையில் வாழ்ந்த பெரியவர்கள், இவற்றால் மட்டும் திருப்தி யடையவில்லை. அவர்கள் வாழ்ந்து வந்த சமாஜத்தாரின் ஒப்புதலையே அவர்கள் பெரிதும் மதித்துப் போற்றினர். பெயர் விளங்காத கிராமங்களில் உள்ள குடிசை வாயிலில் எந்தப் பெருமைக்காகக் காத்து நின்றார்களோ அந்தப் பெருமையைச் சக்கரவர்த்தியின் தலைநகரான டில்லியுங் கூடத் தரமுடியவில்லை. பொதுமக்களால் தரப்

படும் புகழுரைகள், அரசன் தருகின்ற மிக உயர்ந்த பட்டத்தைக் காட்டிலும் உயர்ந்தவையாக மதிக்கப்பட்டன.

இத்தகைய மதிப்பை இப்பொழுது நாம் சட்டை செய்யாத காரணத்தால், நம்முடைய நாட்டு மக்களுக்காகச் செய்யப்படும் முயற்சியையும் விட்டு விட்டோம். அரசனுடைய ஆசீர்வாதமும், பிச்சையும் இப்பொழுது தள்ள முடியாத தேவையாகி விட்டன. தண்ணீர்த் தேவையைத் தீர்க்க வேண்டுமாளுல், அதற்குரிய ஊக்கத்தையும் அரசனே உண்டாக்க வேண்டும். பிரிட்டிஷாரிடம் நம் ஆன்மாவை ஒப்படைத்து அடிமைச் சீட்டும் எழுதி விட்டோம். நம்முடைய உயர்ந்த ரச ஞானத்தை ஆங்கிலேயரின் கடைகளில் விற்று விட்டது போலவே ஆன்மாவையும் விற்று விட்டோம்.

ஒருவேளை சிலர் என்னைத் தவருகப் புரிந்து கொள்ளவும் கூடும் என்று நினைக்கிறேன். நாம் அனைவரும் நம் கிராமங்களை விட்டு வெளியே சென்று அறிவு, கௌரவம், செல்வம் ஆகியவற்றைத் தேடத் தேவை இல்லை என்ருே, நாம் ஒவ்வொருவரும் பிறந்த மண்ணை விட்டுப் போகாமல் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டும் என்ருே நான் கூறவில்லை. வங்காள மக்களை வெளியே வரச் செய்து, அவர்களுடைய மறைந்து கிடக்கும் சக்திகளைத் தட்டி எழுப்பி, அவர்கள் மேற்கொள்ளும் பணிகளை விஸ்தரிக்கச் செய்வதன் மூலம், அவர்களின் மனத்தை விரிவடையச் செய்யும் சக்திகளுக்கு நாம் நன்றி பாராட்டுகிருேம். வீட்டுக்கும், வெளிநாட்டுக்கும் இயற்கையாக உள்ள உறவை நம் மக்களுக்கு நினைவூட்ட வேண்டிய காலம் வந்துள்ளது. திரை கடலோடித் திரவியந் தேடி, அந்த ஊதியத்தை எடுத்துக் கொண்டு சொந்த இடத்திற்கு வர வேண்டும். ஒருவருடைய முயற்சிகள் வெளி நாட்டில் படர்ந்தாலும், உள்ளம் வீட்டிலேயே நிலை பெற்றிருக்க வேண்டும். வெளி நாட்டில் கற்றுக் கொண்டதை உள்ளூரில் பயன்படுத்த வேண்டும். ஆனால், இன்றுள்ள நாம், வீடு, வெளி நாடு, உறவினர், அந்நியர் என்ற முறையைத் தலைகீழாக்கி விட்டோம்.

நம்முடைய காரியங்களில் ஏற்பட்டுள்ள குழப்பங்கட்கு மாகாண மாநாடுகள்[2] ஒரு சிறந்த உதாரணமாகும். நாட்டிற்கு ஒரு செய்தியை விடுக்கவே இந்த மாநாடு கூடுகிறது என்ருலும், அது பயன்படுத்தும் மொழி அந்நிய மொழியாகும். ஆங்கிலம் கற்றவர்களைப்பற்றி மட்டுமே நாம் கவலை கொள்வதாகத் தெரிகிறது. பொது மக்களுக்கும் நமக்கும் இடையே உடைக்க முடியாத குறுக்குச் சுவரை ஏற்படுத்தியுள்ளோம்.

நாட்டில் ஒரு வலிமையான சிந்தனையை உண்டாக்க வேண்டு மானால், நாம் எவ்வாறு தொடங்கவேண்டும் என்பது பற்றி ஆராய வேண்டும். ஆங்கில முறைப்படி ஒரு கூட்டங் கூட்டுவதற்குப் பதிலாக, இந்திய முறையில் ஒரு விழாவைக் கூட்டவேண்டும். நாட்டுப்பாடல், கிராமிய நாடகம் ஆகியவற்றைக் கொண்ட ஒரு திருவிழா நாட்டின் பல பாகங்களிலிருந்தும் மக்களைக் கவர்ந்திழுக் கும். இவ் விழாவில் சிறந்த பாடகர்கள், நாடகக் குழுவினர், பேச் சாளர் ஆகியவர்கட்குப் பரிசு வழங்கவேண்டும். நாட்டின் விளை பொருள்களைக் கண்காட்சியாக வைப்பதுடன் சுகாதார விதிகளை ஒளிப்படங்கள் முதலியவற்றின் உதவியுடன் விளக்கவேண்டும். எல்லாவற்றையும்விடத் தேசீயத் தேவைகள் பற்றி நாம் கூற வேண்டிய அனைத்தையும் எளிய முறையில் வங்காளி மொழியில் அறிவால் உயர்ந்து, அடக்கத்தால் மேம்பட்டவர்கள் எடுத்துக் கூற வேண்டும்.

நம் மக்களில் அதிகப்படியானவர்கள் கிராமங்களில்தான் வசிக்கிறார்கள். வெளி உலகத்தின் உயிர்த் துடிப்பு கிராமங்களில் பரவவேண்டுமானால், விழாக்கள்தாம் சிறந்த வழி.

இந்த விழாக்கள் மூலம் வெளியுலகத்தை நம் வீட்டிற்குள் கொணர முடியும். இத்தகைய விழாக்களில் கிராமங்கள் குறுகிய பழமை பாராட்டும் இயல்பை மறக்க முடியும். ஏனென்றால், இத்தகைய சந்தர்ப்பங்கள் கொடுக்கவும் வாங்கவும் வாய்ப்பளிக் கும். மழைக் காலத்தில் ஆகாயத்திலிருந்து பெய்கின்ற மழையால் குளங்கள் நிரம்புவது போல, விழாக்காலத்தில் கிராம மக்களின் மனம், வெளியுலக எண்ணங்களால் நிரம்புகிறது.

இந்த விழாக்கள் நம் நாட்டிற்கு இயல்பாய் அமைந்தவை. சாதாரணமான ஒரு கூட்டத்திற்கு நம் மக்களை அழைத்தால், அவர் கள் சந்தேகம் முதலியவற்றுடன் வருவதால், தம் மனத்தை உடன் திறப்பதில்லை. ஆனால், விழாக்களில் கூடுகின்றவர்கள் தம் உள்ளங் களைத் திறந்துவிட்டு வருகின்றனர். கலப்பையையும், அரிவாளையும் மறந்து, விடுமுறைநாள் மனநிலையில் அவர்கள் வருகின்றனர். அந்த நேரந்தான் அவர்கள் அருகே அமர ஏற்ற நேரம்; அந்த நேரந்தான் நாட்டின் உயிர் நிலையைத் தொடக்கூடிய நேரம்.

வங்காளம் முழுவதிலும் ஆண்டு பூராவும் விழாக்கள் நடை பெறுகின்றன. இவற்றை ஒரு பட்டியல் எடுக்கவேண்டும். இந்த

விழா என்னும் திறந்த வாசல் வழியேதான் நம் நாட்டு மக்களை அறிந்துகொள்ள முடியும்.

கற்றறிவுடையவர்கள் அவர்கள் பிராந்தியங்களில் நடைபெறும் விழாக்களில் ஒரு புத்துணர்ச்சியையும், ஒரு புதிய இலட்சியத்தையும் ஊட்ட முன் வருவார்களேயானால், ஹிந்து முஸ்லீம் என்ற இருவரையும் இவ்விழாக்கள் மூலம் ஒன்றுக்க முன்வருவார்களேயானல், நாடு முழுவதும் புத்துயிர்பெற்று இயங்கும். இவ்விடங்களில் பொருளற்ற அரசியல் வாதத்தை விட்டுவிட்டு, மக்களின் உண்மைத் தேவையான, பள்ளிகள், சாலைகள், நீர்த்தேக்கங்கள், புல் தரைகள் என்பவை போன்றவற்றைப் பற்றிப் பேசினல் உண்மையிலேயே புத்துணர்ச்சி ஏற்படும்.

உழைப்பை நல்க விரும்பும் ஒரு குழுவினர் வங்காளத்தின் மாவட்டங்களில் சுற்றித் திரிந்து பாட்டுகள், ஒப்பித்தல், ஒளிப்படம் காட்டுதல் ஆகியவற்றை ஏற்பாடு செய்வதானல், செலவைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. நிலச் சொந்தக்காரருக்கு ஒரு பகுதியைச் செலுத்திவிட்டாற்கூட அவர்கட்கு பண இலாபம் ஓரளவு மிஞ்சும். தேசீயப் பணியில் இதனல் ஏற்படும் இலாபத்தைக் கணக்கிட்டால், இந்தத் தொண்டர்கட்கும் பொது மக்களுக்கும் இடையே வலுவான நட்பை உண்டாக்கிவிடலாம். இந்த முறையில் செய்யப்படும் தொண்டிற்கு ஓர் அளவே இல்லை. நம்முடைய மக்கள் மிகப் பழங்காலத்திலிருந்தே விழாக்கள் ஏற்படுத்தி அவற்றின் மூலந்தான் இலக்கியத்தை அனுபவித்தும், சமய உணர்ச்சியைப் பெருக்கியும் வந்துள்ளனர்.

சமீப காலமாக நம்முடைய நிலக்கிழார்கள் ஏதாவது ஒரு காரணத்தை முன்னிட்டுக் கிராமங்களை விட்டுவிட்டு நகரங்கட்கு நகர்ந்து விட்டார்கள். அவர்களுடைய பிள்ளைகட்கும், பெண்கட்கும் திருமணம் நடத்துகையில் செய்யப்படும் இசைக் கச்சேரிகள், களியாட்டங்கள், பொழுதுபோக்குகள் ஆகியவை அனைத்தும் அவர்களுடைய பணக்கார நகர நண்பர்கட்கே பயன்படுகின்றன. அதே நேரத்தில் அவர்களுடைய வறுமை நிறைந்த ரயத்துக்கள் இந்த விழாக்கட்காகச் செலுத்தும் அதிகத் தொகையை மட்டும் தங்கள் பங்கில் பெறுகிறார்கள். விருந்துக்குரிய இனிப்புப் பண்டங்களைத் தயாரிக்கும் ஏழைகள் அதில் ஒரு வாய் உண்ணவும் முடியாது. எனவே, வங்காள கிராமங்களில் மகிழ்ச்சி என்பது வறண்டு விடுகிறது. இத்தகைய சந்தர்ப்பங்களில் தனிப்பட்ட சிறப்பாக

அமைக்கப்படும் இலக்கிய விழாக்கள், ஒரு காலத்தில் ஆண், பெண், குழந்தைகள் ஆகிய அனைவருக்கும் மகிழ்ச்சி யூட்டியது போக, இன்று பொது மக்களின் பிடிக்கு அப்பூாற்போய்க் கொண்டிருக்கின்றன. நாம் வகுத்துள்ள விழாத் திட்டம் கிராமத்திலுள்ள ஒவ்வொரு வீட்டின் வாயிலுக்கும் இலக்கியத்தையும் மகிழ்ச்சியையும் கொண்டு செல்லக் கூடுமாயின் அப்பொழுது, இந்தப் பயனுள்ள நாட்டின் இருதயம், கொஞ்சங் கொஞ்சமாக வறண்டு போகும் நிலை தவிர்க்கப்படும்.

ஒரு காலத்தில் நமக்குக் குடி நீரையும், நல்ல சுகாதாரத்தையும் தந்த நீர் நிலைகள் இன்று அழுக்காக்கப்படுகின்றன. தண்ணீர்ப் பஞ்சத்தை உண்டாக்குவதோடல்லாமல், அவை, இன்று நோயையும், மரணத்தையும் பரப்புகின்றன. அதேபோல, இன்று நாட்டில் நடைபெறுகின்ற விழாக்கள் அனைத்தும் பொதுமக்கள் கல்வி அறிவைப் பரப்பாமல், ஊழலுக்கு நிலைக்களமாக ஆகிவிட்டன. இந்த அழுகிவரும் அவல நிலையைத் தடுக்க நாம் முயலவில்லையானால் குற்றமும் அவமானமும் நம்மை மூடி மறைத்துவிடும்.

## III

ஒரு மனிதனுக்கும் மற்றொரு மனிதனுக்குமிடையே மனித உறவை ஏற்படுத்துவதே இந்தியாவின் இடைவிடா நோக்கமாக இருந்து வந்தது. மிக நீண்ட தூரத்திலுள்ள உறவினர்களுடன் கூடத் தொடர்பு வைத்திருக்க வேண்டியுள்ளது. பிள்ளைகள் தக்க வயது அடைந்த பிறகுங்கூடத் தாய் தகப்பன்மார்களுடைய தொடர்பு தளர்வதில்லை. கிராமங்களில் சாதி, சூழ்நிலை என்பவற்றைக் கடந்து நம் அயல் வீட்டாரிடமும் பிறரிடமும் உறவு முறை கொள்கிறோம். ஆசிரியர், பூசாரி, விருந்தினர், துறவிகள், நிலக்கிழார், குத்தகைதாரர் ஆகியவர்களிடமும் உறவு முறை ஏற்படுகிறது. இந்த உறவு முறை சாத்திரத்தில் விதிக்கப்படவில்லை எனினும், இருதய பூர்வமாகச் செய்யப்படுவதாகும். ஒருவர் தந்தையைப் போலவும், சிலர் மக்கள் போலவும், சிலர் சோதரர் போலவும், இன்னுஞ் சிலர் நண்பர்கள் போலவும் ஆகின்றனர். ஒருவரைச் சந்திக்கும்பொழுதே அவரிடம் உறவு கொண்டாடிவிடுகிறோம். ஒரு மனிதனை இயந்திரமாகக் காணும் பழக்கமோ, அல்லது நம்முடைய காரியத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளும் கருவியாக நினைக்கும் பழக்கமோ நம்மிடம் இன்னும் வரவில்லை. இப் பழக்கத்திற்கு நன்மை தீமை என்ற இரண்டும் இருக்கலாம். எவ்வாறாயினும், இதுவே நம்

நாட்டின் பழக்கமாகவும், இன்னும் கூறப்போனல் கீழை நாட்டுப் பழக்கமாகவும் இருந்து வருகிறது.

நமது இயல்பு இவ்வாறு அமைந்திருக்கிறது. ஒருவரிடம் அன்பு பூண்டு உறவு கொண்டாடிய பின்னரே அவரிடம் பயன் கருதிய உறவை மேற்கொள்கிறோம். இதன் பயனாகத்தான் போலும், அதிகப்படியான பொறுப்பை மேற்கொள்ள வேண்டியுள்ளது. தேவை பற்றி ஏற்படுகின்ற உறவு குறுகியதாய், அலுவலகத்தில் தொடங்கி அங்கேயே முடிந்து விடுகிறது. தலைவனுக்கும் ஏவலாளனுக்கும் வேறு தொடர்பு இல்லையானல் வேலை முடிந்து கூலி வாங்கியவுடன் அவர்கள் தொடர்பு முடிந்து விடுகிறது. ஆனல், ஒரு மனிதப் பிணைப்பை உணரத் தொடங்கியவுடன் மற்றவருடைய சொந்த மகிழ்ச்சி,துயரம் ஆகியவை பற்றியும் நம் கருத்துச் செல்கிறது. வேலைக்காரனுடைய மகன், மகள், திருமணம் என்பவற்றுடன் இழவிலும்கூடப் பங்கு கொள்ள முடிகிறது.

சமீபத்தில் நிகழ்ந்த ஓர் உதாரணத்தை இங்கே காணலாம். ராஜஸகாயிலும், டாக்காவிலும் நடைபெற்ற மாகாண மாநாட்டில் கலந்துகொண்டேன். இம் மாநாடுகளை நாம் தீவிரமாக எடுத்துக் கொள்கிறோம் என்பதைச் சொல்லத் தேவை இல்லை. ஆனல், வேலை செய்வதில் காட்டப்பட்ட சுறுசுறுப்பைக் காட்டிலும், உபசாரம் செய்யும் சடங்குதான், மிக முக்கியமானதாக இருந்ததும், எனக்கு வியப்பை விளைத்ததுமாகும். கல்யாணப் பெண்ணின் வீட்டுக் காரரைப்போல், தேவைப்பட்ட உணவு, கேளிக்கை, வசதிகள், இன்பம் ஆகியவை மிகமிக அளவு மீறி இருந்ததால், விருந்து உபசரிக்கும் பொறுப்புடையவர்கள் மிகவும் அல்லலுற்றிருப்பார்கள்.

அவர்களாகப் பார்த்து "நீங்கள் உங்கள் நாட்டிற்குத் தொண்டு புரிய இங்குக் கூடி இருக்கிறீர்களே தவிர, எங்கள் விருப்பத்தைத் தட்டாமல் இருப்பதற் கன்று. இவ்வளவு அதிகப்படியான நல்ல உணவையும் மது நீங்கலான குடிக்கும் பொருள்களையும், தங்க வசதிகளையும், போக்குவரத்து சாதனங்களையும் நாங்கள் ஏன் தரவேண்டும்?" என்று கேட்டிருந்தால் அதில் தவறு ஒன்றுமில்லை. கடமை என்ற பெயரில் இவ்வாறு செய்கின்ற நிலை நம்முடைய இயல்பிலேயே இல்லை. கடமைகளைக் கூட ஒரு தனிப்பட்ட உறவு முறையில் வைப்பது நமது மரபு. ஆகவே, மாநாட்டில், நடைபெற்ற நிகழ்ச்சிகளைவிட, கிடைத்த உபசரிப்பே நம்மைப் பெரிதும் கவர்ந்தது. மேனாட்டுப் பாணியில் அந்த மாநாடுகள் நடைபெற்றாலும், இந்திய இருதயத்தை வெட்டிவிட முடியவில்லை. நம்முடைய தேசீய

காங்கிரஸிலும்[3] இதே நிலைமைதான். தேசீய காங்கிர்ஸின் இயல்புகளில், உண்மையான தேசீயம் என்பது, எப்பொழுதுமே சுறுசுறுப்பாக இருந்த அதன் உபசரிக்கும் பகுதியில்தான் காணப்பட்டது. மற்றப்படி அதனுடைய அலுவல்கள் ஆண்டு விழாவில் மூன்றுநாள் கூட்டத்துடன் முடிந்து, ஆண்டு முழுவதும் அதில் வேறு உயிரிருப்பதாகவே காணப்படவில்லை.

மிகத் தீவிரமான அலுவலின் இடையே கூட இந்தியர்கள் மனித இதயம் படைத்தவர்களாகவே உள்ளனர் என்பது நன்கு விளங்கும். நாடு முழுவதிலும் உறவினர், அந்நியர் என்பாரிடையேயும் உயர்ந்தோர் தாழ்ந்தோர் இடையேயும் உள்ள நெருங்கிய உறவுக்கு இதுவே காரணம். ஆகையினுல்தான், கிராமப் பள்ளிக் கூடத்தையும் விருந்தினர் விடுதியையும் காப்பதற்கும், கோயில், குளங்களைக் காப்பதற்கும், அநாதையான குருடர், நோயாளிகள் ஆகியவர்களைக் காப்பதற்கும் வெளியார் கவலை எடுத்துக் கொள்ள வேண்டிய தேவையே இருந்ததில்லை.

எந்த இடங்களில் மிக அதிகமான நன்மைகள் கிடைக்கின்றனவோ, அந்த இடங்களில் நாட்டினுடைய கவனம் முழுவதையும் செலுத்துதல் இயல்பு. நாட்டின் செல்வம் பல வழிகளில் வெளி நாட்டுக்குக் கொண்டுபோகப்படுகிற தென்று நாம் வருந்துகிறோம். ஆனல், நாட்டின் ஆன்மாவும் வேறுவழியில் திருப்பப்பட்டு, ஒவ்வொரு நலந்தரும் தொடர்பும் வெளி நாட்டாட்சியாளர் கையில் சிக்கி, நமக்கு ஒன்றுமே இல்லை என்னும் நிலை ஏற்பட்டால், இந்நிலை நாட்டின் செல்வம் பறிபோவதைவிடக் குறைந்த வருத்தத்தையா உண்டாக்கும்?

## IV

முதலில் ஏற்படும் ஆர்வங் காரணமாகப் பலர் பல மலர்களை மலர வைக்கின்றனர். ஆனல் இறுதியில் இவற்றில் பல மலர்கள் பலனளிக்கக்கூடிய பழம் பழுப்பதில்லை. இவ்வாறு நிகழ்வதற்கு முக்கியமான காரணம், கௌரவம் பற்றிய கவலையும், தான் உறுப்பினனுக உள்ள குழுவின் தேவைகள் பற்றி அறியும் ஆற்றலும் இல்லாமைதான். பொறுப்புணர்ச்சி எளிதாக நம் தோளிலிருந்து நழுவி மறைந்தே விடுகிறது.

வெளியிலிருந்து வரும் சக்திகள், நம்மை வெல்வதற்காக ஒற்றுமையுடனும் வேகத்துடனும் தொழிற்படுவதால், நம்முடைய சமுதாயம் இந்த முறையிலேயே நிலைக்க முடியாது. அச் சக்திகள்

நம்முடைய பள்ளிக்கூடங்கள், நம்முடைய அன்றாடக் காய்கறிக் கடைகள், ஆகியவற்றை ஆக்கிரமித்துக்கொண்டு, நுண்மையாக வும், பருமையாகவும் தெரியும் முறையில் அவற்றின் ஆட்சியை நடத்துகின்றன. சமுதாயம் தன்னைத்தானே காத்துக்கொள்ள வேண்டுமாயின், ஒற்றுமையின் மூலமே அது முடிவதாகும். இதற் குச் சிறந்த வழி, மிக வலிமையான ஆளுமையுடைய ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்து அவரைச் சுற்றி நாம் பணிபுரிய நிற்க வேண்டும். அத் தலைவருடைய ஆட்சிக்குக் கீழ்ப்படிவதால் நம் சுய மரியாதையை இழக்கமாட்டோம். ஏனென்றால், அவர் விடுதலையின் அறிகுறியாகவே இருப்பார்.

சமுதாயத்தின் அத்தகைய தலைவர் சிலநேரங்களில் நல்லவரா கவும், சில நேரங்களில் தீயவராகவும் இருக்கக் கூடும். ஆனால், சமுதாயம் விழிப்புடனும் உயிர்த்துடிப்புடனும் இருப்பின் எந்தத் தலைவரும் நிலையான தீமையைச் செய்துவிட முடியாது. அதன் எதிராக, அந்தத் தலைவரின் நிறுவனம் சமுதாயத்தை விழிப்புடன் வைப்பதற்குச் சிறந்த வழியாகும். தன் ஒற்றுமையின் அறிகுறி யாக ஒரு குறிப்பிட்ட மனிதர் இருக்கிறார் என்பதைச் சமுதாயம் உணர்ந்துவிட்டால், அந்தச் சமுதாயத்தை வெல்லவே முடியாது.

சமுதாயத்தின் ஒவ்வோர் உறுப்பினரும் நாட்டுக்காக என்று ஒரு சிறு தொகையை விரும்பி ஒதுக்குவதை அன்றாடப் பழக்கமாகச் செய்துகொள்ளவேண்டும். இதை யல்லாமல் திருமணம் போன்ற விழாக் காலங்களில், இந்தத் தேசிய சமுதாயத்திற்குச் சந்தா என்ற முறையில், ஒரு தொகையைச் செலுத்தலாம். செம்மையான முறையில் இத்தகைய வசூல்கள் செய்யப்படுமாயின் நிதித் தேவை ஏற்படாது.

விரும்பித் தரப்பட்ட சகாய நிதியால்தான் இந்தியாவில் செல்வம் நிரம்பிய மடங்களும் கோயில்களும் நிறுவப்பட்டன. அதேபோலச் சமுதாயத்தையும நிலைக்கச் செய்ய முடியாதா? அதிலும், தாம் செய்யும் காரியங்களினுடைய பயனைப் பெறுப வர்கள் பாராட்டும் நன்றியுணர்வும் கிடைக்கும்பொழுது இது இயலாமலா போய்விடும்?

இதுவரை வங்காளத்தைப்பற்றி மட்டுமே என் கவனத்தில் கொண்டிருந்தேன். வங்காளத்திலுள்ள நாம் ஒரு சமாஜத் தலை வரைத் தேர்ந்தெடுத்து நம்முடைய சமுதாய உரிமையை நிலைப் பெற்றதாகவும் ஒளியுடையதாகவும் செய்யக்கூடுமாயின், பின்னர்

இந்தியாவின் பிற பகுதிகளும் தொடரும். ஒவ்வொரு இந்திய மாகாணமும் தன்னுள் ஓர் ஒற்றுமையைக் காணக் கூடுமாயின் பிறகு ஒன்றுடன் ஒன்று ஒத்துழைக்க முடியும். ஒருமுறை நிலைக்க வைத்துவிட்டால் ஒற்றுமையின் ஆட்சி வளர்ந்துகொண்டே செல்லும். ஆனால் ஒற்றுமை என்று கூறும்பொழுது தனிப்பட்ட உறுப்புக்களைக் கும்பலாக ஓர் இடத்தில் கொட்டுவது என்பது பொருளன்று.

## V

நம்மிடம் இயல்பாக அமைந்துள்ள சக்திகளை எல்லாம் ஓரிடத்தில் ஒன்று திரட்டி அவற்றை நன்முறையில் பணியாற்றச் செய்வதற்கேற்ற ஒரு வழிமுறையையும் வகுக்க வேண்டியதன் அவசியம் பற்றி இரண்டொரு வார்த்தைகள் கூறினால் அது எவ்வளவு முக்கியமான தென்பது நன்கு விளங்கும். சௌகரியத்தை முன்னிட்டோ அன்றி வேறு காரணத்தைக்கொண்டோ, அரசாங்கம் வங்காளத்தைத் துண்டாட முனைந்தது[4]; அவ்வாறு செய்தால் மாகாணம் பெரிதும் வலியிழந்து நிற்கும் என்பதனால் நாம் அஞ்சுகிறோம். அதனை மறுத்து வேண்டுமானவரை ஒப்பாரி வைத்தாகி விட்டது. ஆனால், நம் முயற்சியில் தோற்றுவிட்டால் அனைத்தும் ஒரு முடிவுக்கு வந்துவிடுமா? இந்தப் பிரிவினையினால் ஏற்பட்ட தீமையைப் போக்குவதற்கு ஒரு வழியும் இல்லாமற் போய்விடுமா?

நோய் உண்டாக்கும் கிருமிகள் உடம்பில் நுழையாமல் இருந்தால் மிகவும் நல்லது. ஒருவேளை அவை நுழைந்துவிட்டால், அவற்றை எதிர்த்துப் போராடி, மறுபடியும் உடலை வலுப்படுத்துகின்ற எதிர்ச் சக்தி இல்லாமற் போய்விடுமா? எதிர்த்துப் போராடுகின்ற ஒரு வலிமைபடைத்த அதிகாரத்தை நம் சமுதாயத்தில் நிறுவிவிட்டால், பிறகு எந்த வெளிநாட்டுச் சக்தியும், வங்காளத்தை வலி இழக்கச் செய்யும் வன்மையைப் பெறமுடியாது. அந்த அதிகாரம், ஒவ்வொரு காயத்தையும் ஆற்றி, ஒற்றுமையின் தளையை வலுப்படுத்தி, அகமனத்தை விழிப்படையச் செய்யும்.

இன்று நம்முடைய நாட்டில் நடைபெறும் நற்செயல்களுக்கு வேற்று நாட்டு அரசர் ஒருவர் பட்டங்களை வழங்குகிறார். ஆனால், நம் நாட்டு மக்களின் அன்பையும் ஆசியையும் பெற்றால்தான் உண்மையிலேயே புகழடைவோம். நம்முடைய சமுதாயமே வெகுமதிகள் வழங்குமாறு உரிமை யளித்தாலன்றி, அதிலிருந்து கிடைக்கும் ஒரு தனிப்பட்ட திருப்தியை இழந்துவிடுவோம். நம்முடைய

நாட்டில் மிகச் சாதாரணமான ஒரு காரணத்திற்காகக்கூட ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கு மிடையே பூசல் தோன்றி விடுகிறது. இத்தகைய பூசல்கள் நேரும்பொழுது உடனே அவற்றைத் தீர்த்து வைக்கவும், மாறுபட்ட கருத்துக்களைச் சந்து செய்வித்து அமைதியையும் நல்லெண்ணத்தையும் விஸ்தரிக்கவும், சமுதாயத்தில் ஓர் உறுப்புக்கு அதிகாரம் அளித்தாலொழிய இச் சமுதாயம் ஒற்றுமை இன்மையால் நாளாவட்டத்தில் வலியிழந்து போகும்.

உங்களுடைய சொந்த வலிமையில் நம்பிக்கை இழந்துவிடாதீர்கள். எதிர்பார்த்த காலம் உறுதியாக வந்துவிட்ட தென்பதை அறிந்து கொள்ளுங்கள். இந்தியாவில், என்றுமே ஓர் ஒற்றுமைப் படுத்தும் சக்தி பணிபுரிந்து வருகிற தென்பதையும் உறுதியாகத் தெரிந்து கொள்ளுங்கள். மிகவும் இக்கட்டான சந்தர்ப்பங்களிற் கூட, இந்தியா நடைமுறையில், அதைக் கடந்து வந்துள்ளது. அதனுல்தான், இந்தியா இன்னும் உயிரோ டிருந்துவருகிறது. இந்த இந்தியாவில்தான் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன். இன்றுங்கூட, இந்த இந்தியா, பழைய மரபையும் புதிய காலத்தையும் இணைக்கும் வகையில் வழி செய்து வருகிறது. நாம் ஒவ்வொருவரும் மனச்சான்றுடன் நம்மால் முடிந்த அளவு நம் பங்கைச் செய்வோமாக. கலக மனப்பான்மையோ அன்றி வெறும் அறியாமையோ காரணமாகக் கூட்டுறவுக்கு எதிரான முறையில், எந்த நிலையிலும், ஒத்துழைக்காமல் இருந்துவிடக் கூடாது.

ஹிந்து சமுதாயத்திற்கும் வெளி உலகிற்கும் இடையே உள்ள முரண்பாடு ஒன்றும் புதியதன்று. ஆரியர்கள் இந்தியாவிற்குள் நுழைந்தவுடன், உள்நாட்டில் வாழ்ந்தவர்களுடன் கடும்போர் புரிந்தனர். இந்தப் போரில் ஆரியர்கள் வெற்றி பெற்றுலும், உள்நாட்டில் வாழ்ந்தவர்களை ஆஸ்திரேலியாவிலும், அமெரிக்காவிலும் செய்ததுபோல அழித்து ஒழித்துவிட வில்லை. ஆரியக் குடிஇருப்புக்களிலிருந்து உள்நாட்டுக்காரர்களை வெருட்டிவிட வில்லை. பழக்க வழக்கங்கள், மரபுகள் ஆகியவற்றில் இந்த இருவருக்கும் இடையே கடல்போன்ற வேற்றுமை இருந்துங்கூட, சமுதாயக் கட்டமைப்பில் அவர்கட்கும் ஒரு குறிப்பிட்ட இடத்தைத் தந்தனர் ஆரியர். இதன் பயனுக ஆரிய சமுதாயம் பலநிறக் கலவையுடையதாய் ஆகிவிட்டது.

பிற்காலத்தில், மறுபடியும், இச் சமுதாயம் தன் பழைய கொள்கைகளை உதறிவிட நேர்ந்தது. புத்த சமய காலத்தில் பல

வெளிநாட்டார்கள் இப் புதிய சமயத்தால் கவரப்பட்டு இங்கு வந்த பொழுது அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டனர் இவர்கள். ஒற்றுமையின் வலிமை, வேற்றுமையைவிடச் சக்தி வாய்ந்தது. ஒற்றுமைக் கணத்தில் அனைத்தும் ஒருமுகப்பட்டுள்ளன. இதுதான் புத்தசமய காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சியாகும். ஆசியா முழுவதும் பரவிய சமய உணர்ச்சி வெள்ளத்தில், பல இனத்தாருடைய சமய உணர்ச்சிகள், மரபுகள், பழக்க வழக்கங்கள், நிறுவனங்கள் ஆகியவைகள் இந்தியாவுக்குள் பாய்ந்தன; அவற்றைத் தடுத்து நிறுத்த யாரும் அங்கில்லை.

இந்தப் பெருங் குழப்பத்தின் இடையேகூட, பலவற்றையுங் கொண்டு ஒரு கலவையைச் செய்யும் இந்தியாவின் சக்தி அதனை விட்டுப் போய்விடவில்லை. மற்றும் ஒருமுறை, தன்னிடமுள்ளவற்றையும், விருந்தினர்களிடமிருந்து வந்தவற்றையும் ஒன்று கலந்து இந்தியா, மறுபடியும் தனது சமுதாயத்தைப் புனரமைப்புச் செய்யத் தொடங்கியது. எனவே, அப் புதுச் சமுதாயம் பழையதைக் காட்டிலும் வளம் மிகுந்ததாய் அமைந்தது.

எங்கும் காணப்பட்ட இந்தப் பரந்துள்ள கலவையில் தனது ஒற்றுமை முத்திரையைப் பதித்தது இந்தியா. இன்று சிலர் பின் வருமாறு கேட்கின்றனர்: "அகத்தினுள் பல மாறுபாடுகளை உடையதும், பலரும் பிரிந்து சென்று வேறு மதங்கட்குச் செல்ல இடந்தருவதும் ஆன இந்த ஹிந்து சமுதாயத்திலும் சமயத்திலும் ஒற்றுமை என்று கூறப்படுவது என்ன இருக்கிறது?" இது ஒரு கடினமான கேள்விதான். மிகப் பெரிய வட்டம் ஒன்றின் மையப் புள்ளியைக் காண்பது எவ்வளவு கடினமோ அவ்வளவு கடினமானதுதான் இந்த ஒற்றுமை எங்கேயுள்ளது என்று காண்பதும் என்றாலும், எப்படியும் வட்டத்திற்கு ஒரு மையப் புள்ளி இருந்துதான் ஆக வேண்டும். ஒரு சிறிய உருண்டையின் வட்ட வடிவத்தைக் கண்ணால் காண்பது எளிது. ஆனால் உருண்டை வடிவமான பூமியைப் பகுதி பகுதியாகக் காண்பவர்கட்கு அது தட்டையாகவே காட்சியளிக்கும். அதேபோல ஒன்றுக் கொன்று பொருந்தாத பல மாறுபாடுகளைத் தன்னுள் அடக்கி வைத்திருப்பதால், அதனிடமுள்ள ஒற்றுமைத் தனை அதனுடம்பின் ஆழத்தில் எங்கோ புதைந்திருக்க வேண்டும். இங்கேதான் இருக்கிறது என்று அந்த ஒற்றுமையைச் சுட்டிக்காட்ட முடியாவிட்டாலும், புறத்தே காணப்படும் மாறுபாடுகளின் இடையே அது இருந்து வருவதை நாம் உணர முடியும்.

பிற்காலத்தில் முஸ்லீம்களின் படையெடுப்பை இந்தியா காண நேர்ந்தது. புறத்தே இருந்து வந்த, போரிடும் இயல்புடைய பொருள்களோடு ஒரு வகையான சமாதான முறை உடனடியாகத் தொடங்கப் பெற்றது. முஸ்லீமுக்கும், ஹிந்துவுக்கும் இடையே உள்ள பொது இயல்பை வளர்த்து வளர்த்து நாளா வட்டத்தில் இவர்கள் இருவரையும் பிரிக்கும் கோடு மெள்ள மெள்ளச் சென்று மறையும் நிலை ஏற்பட்டது. கபீர், குரு நானக் ஆகியவர்களின் பக்தர்கள், அடுத்த நிலையிலுள்ள வைணவ பக்தர்கள் [5] ஆகியோர் இதற்கு உதாரணமாவர்.

சாதாரண மக்களிடையே உள்ள சடங்குகளிலும், பழக்க வழக்கங்களிலும் காணப்படும் ஆயிரக் கணக்கான உடைசல்களை யும், மறுகட்டல்களையும் நம்மிடையே உள்ள கற்றறிந்தவர்கள் கணக்கெடுக்கவில்லை. அவ்வாறு கணக்கெடுத்திருப்பார்களே யாயின், இன்றுங்கூட இரகஸ்யமான முறையில் சரிக்கட்டல் களும், விட்டுக் கொடுத்தல்களும் நடைபெறுமற் போகவில்லை என்பதை அவர்கள் அறிய முடியும்.

இறுதியாக, சமீப காலத்தில், வலிமை மிகுந்த மற்றொரு சமயம் இந்தியாவுக்குள் நுழைந்தது. அதற்கென நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், மரபுகள், கல்வி முறைகள் ஆகியவை இருந்தன. ஆகவே, உலகில் உள்ள நான்கு சமுதாயங்கள் நான்கு பெருஞ் சமயங்களாகிய ஹிந்து, புத்தம், முஸ்லீம், கிறிஸ்துவம் ஆகிய வற்றுடன் இங்கு நிலைத்துள்ளன. மிகப் பெரிய முறையில் சமுதாயக் கூட்டமைப்பைச் செய்து பரிசோதிப்பதற்கு இந்திய மண்ணில் ஆண்டவனே ஒரு பெரிய சோதனைச்சாலை நிறுவியது போல் காணப்படுகிறது.

புத்த சமய காலத்தில் காணப்பட்ட குழப்பங்களும், தலைகீழ் மாற்றங்களும், பிற்கால ஹிந்து சமயத்தில் ஒருவகை அச்சத்தை விட்டுச் சென்றுள்ளன. புதுமை, மாற்றம் ஆகிய இரண்டையும் சந்தேகக் கண்ணுடன் பார்க்கும் இயல்பும் நிலைக்கத் தொடங்கி விட்டது. எப்பொழுதுமே நிலைபெற்றுள்ள அச்சத்துடன் வாழ் கின்ற சமுதாயம், எந்த வகையான முன்னேற்றத்தையும் காண முடியாது. அன்றியும், புறத்தே இருந்து வருகின்ற ஆக்கிரமிப்பை எதிர்த்து நிற்கவும் சக்தியற்றுப் போகிறது. தற்காப்பிலேயே தன் சக்தி முழுவதையும் செலவழிக்கும் சமுதாயம் எளிதில் இயங்கும் வன்மையைப் பெற முடியாது. நிலைபெறுதற்குரிய சக்தி யுடன் இயக்கத்திற்குரிய சில இயல்புகளையும் பெற்றிருந்தாலொழிய

சமுதாயம் தன்னுடைய பழமை பாராட்டும் இயல்பாகிய வலையில் அகப்பட்டு, வளர்ச்சி இன்றி உயிரொடு சாகும் நிலையைப் பெற்று விடும்.

புத்த காலத்தை அடுத்து வந்த ஹிந்து சமுதாயம் புறத்தே இருந்து வருகிற ஆக்கிரமிப்பைக் காத்துக் கொள்ளவும், எஞ்சியுள்ள தன் கொள்கைகளைக் காப்பாற்றிக் கொள்ளவும் விரும்பிப் பல தடைச் சுவர்களை எழுப்பியது. அதன் பயனாக, அந்தச் சமுதாயம் இந்தியாவில் ஒரு புகழ் வாய்ந்த இடத்தைப் பெற முடியாமற் போய்விட்டது.

## VI

ஒரு காலத்தில் உலகத்தின் உச்சியில் இந்தியா இடம் பெற்றிருந்தது. சமயம், தத்துவ சாத்திரம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் இந்தியா ஆன்மீக முன்னேற்றங் காண முற்பட்டமைக்கு ஓர் எல்லையே இல்லை. அதன் பயனாக இந்தியாவின் வலிமை மிக விரிந்து சென்று புதிய இடங்களையும் தன்னுள் அடக்கி இருந்தது. இம்முறையில் பிற இடங்களை வென்று ஆட்சியாளர் இடத்தில் அமர்ந்திருந்த இந்தியா, இன்று அதனை இழந்து விட்டது. இன்று ஆசிரிய நிலை நீங்கி மாணாக்க நிலையில் நிற்கின்றது. இந்தியாவின் ஆன்மாவில் அச்சம் புகுந்து விட்டதுதான் இதற்குரிய காரணம்.

பேரச்சமே நாம் கடல் கடந்து செல்வதைத் தடை செய்தது; அறிவுக் கடலைக் கடப்பதையுங்கூடத் தடை செய்தது. அகில உலகத்துக்கும் உரிமையுடையவர்களா யிருந்த நாம் இன்று ஒரு சிற்றூருக்கு உரிமையுடையவர்களாகி விட்டோம். சமுதாயத்தில் உள்ள அச்சம் நிறைந்ததும் பொருளைச் சேர்த்துக் காப்பாற்றுவதுமான பெண் தன்மை, நம்முடைய ஆண்மையை அடக்கிவிட்டது. அறிவுத் துறையிற்கூட நாம் மரபுக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவர்களாக, ஆண்மை யிழந்து நிற்கிறோம். அறிவுத்துறையில் இந்தியா எந்த அளவுக்கு வாணிகம் நடத்தி இருப்பினும், அந்த வாணிகம் நாளுக்கு நாள் வளர்ச்சி யடைந்து உலகைச் செழிக்கச் செய்ததுபோக, இன்று அதே வாணிகம் மகளிரின் அறைகளில் பொன் பெட்டிகளில் கிடந்து உறங்குகிறது. அது, அங்குப் பாதுகாவலுடன் இருக்கலாம்; ஆனால், அது வளர்ச்சியடையாது; எந்த அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டாலும் அதனை ஈடு செய்யவே முடியாது.

ஆசிரியர் என்ற மதிப்பை இழந்து விட்டோம். அரச நிலை என்றுமே நம் நாட்டில் பெரிதாகக் கருதப்பட்டதில்லை; எனவே,

அதன் அழிவு உயிருக்குத் தீமை உண்டாக்காது. பிராம்மணத்துவ அதிகாரத்தில், கல்வியில், தர்மத்தில், துறவில்தான் நாட்டின் உண்மை உயிர் கொலு வீற்றிருந்தது. துறவு மனப்பான்மை இருந்த இடத்தில் வெறும் சடங்குகள் புகுந்து நிரம்பி விட்டன. தனது தவத்தால் சமுதாயத்தை வளப்படுத்துங் கடமையை மறந்து பிராமணன் சமுதாயத்தின் வாயிலில் நின்று கொண்டு காவற்காரன் கடமையை மேற்கொண்டு விட்டான். இந்த இரண்டு நிலையும் ஏற் பட்டவுடன் உலகிற்கு நாம் தரவேண்டியவற்றைத் தர முடியவில்லை. இதுவரை நம்மிடம் இருந்தவற்றைக் கூடப் பயனற்று வடிவம் மாறும்படி செய்து விட்டோம்.

ஒவ்வொரு தேசமும் மானிடத்தின் ஒரு பகுதி என்பதையும் ஒவ்வொருவரும் கீழ் வரும் வினாவிற்கு விடையளிக்க வேண்டும் என் பதையும் நாம் அறிய வேண்டும். "மனிதனுக்குக் கொடுப்பதற் கென்று நீ என்ன வைத்திருக்கிறாய்? அவனுடைய வாழ்வில் மகிழ்ச்சி பெருக நீ என்ன புதிய வழிகளைக் கண்டு பிடித்தாய்?" இப் புதுவழி காண்பதற்குரிய அடிப்படை வன்மையை இழந்துவிட்ட எந்தச் சமுதாயமும் பிறருக்குப் பாரமாய், அனைத்துலக மனிதனின் உடம்பில் பக்க வாதத்தால் பீடிக்கப்பட்ட ஓர் உறுப்பாக அமைந்து விடுகிறது. பயனில்லாமல் உயிருடன் இருப்பது புகழுக்குரிய செயலன்று.

புதிய சாம்ராஜ்யங்களைச் சேர்ப்பதற்கும், வாணிகத்தைப் பெருக்கி அதன் பயனைப் பெறுவதற்கும் இந்தியா என்றும் ஆசைப்பட்டதில்லை. சீனா, ஜப்பான், திபெத் ஆகிய நாடுகள் ஐரோப்பாவைக் கண்டவுடன் தங்கள் கதவுகளையும், சன்னல்களை யும் அடைத்துக் கொண்டாற்கூட இந்தியாவைப் பொறுத்தமட்டில் ஆத்ம வழிகாட்டியாகத் தம்மிடம் வருமாறு அழைக்கின்றன.

இந்தியா பிற நாடுகளைக் கொள்ளையடிப்பதற்கோ, சூறையாடு வற்கோ தனது படைகளை அனுப்பியதில்லை - ஆனால் நல்லெண்ணம், அமைதி என்பவற்றைப் பரப்பும் குழுவினர்களை அனுப்பியதுண்டு. இந்தியா பெற்ற புகழெல்லாம் அவள் மேற்கொண்ட தவவலிமை யாற் பெற்றதே. தவத்தாற் பெற்ற புகழ் அரசத் தலைமையாற் பெற்ற புகழைவிட மேம்பட்டதாகும்.

அந்தப் புகழ் நீங்கியவுடன், நமக்குரிய அற்பப் பொருள் களுடன் மூலையில் அமர்ந்து விட்டோம். அங்கிலேயில் பிரிட்டிஷார் வருவது தவிர வேறு வழி இல்லை. அச்சமிகுந்து, பல்லிளித்துக்

கொண்டிருந்த நமது சமுதாயத்தைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த பாதுகாப்பு வேலி பிரிட்டிஷாரின் படை எடுப்பின் எதிரே நிற்க முடியாமல் பல இடங்களில் பிளந்தது. நாம் இதுவரை எந்த வெளி உலகைக் கண்டு அஞ்சினின்றோமோ, அந்த வெளி யுலகம் அந்தப் பிளவுகளின் வழியே உள்ளே பாய்ந்தது. யார் அதனைத் தடுத்துத் திருப்பி அனுப்ப முடியும்? நம்முடைய மதில் சுவர்கள் பொடி சூரணமாகும்பொழுது இரண்டு விஷயங்களை அறிந்து கொண்டோம். ஒரு காலத்தில் எவ்வளவு சிறந்த சக்தி நம்மிடம் இருந்தது என்ப தொன்று; அந்தச் சக்தியை இழந்த பிறகு நாம் எவ்வளவு பல வீனர்களாக ஆகி விட்டோம் என்பதே மற்றொன்று.

நீண்ட தூரத்தில் ஒருவன் தன்னை மறைத்துக் கொள்வது தற் காப்பு ஆகாது என்பதையும் அறிந்திருக்கிறோம் இன்று. உண்மை யாக ஒருவர் தற்காத்துக்கொள்ள வேண்டுமாயின் உள்ளே அடங்கி கிடக்கும் சக்தியைத் தூண்டி விட வேண்டும். நம்மிடம் மண்டிக் கிடக்கும் ஜட சக்தியை உதறி எறிகின்றவரை, பிரிட்டன் நம்முடைய ஆன்மாவை அடிமைத் தளையில் வைத்திருந்தே தீரும். ஒரு மூலையில் அமர்ந்து நமது நஷ்டத்தை நினைத்து ஒப்பாரி வைப்ப தால் பயன் ஒன்றும் விளையப்போவ தில்லை. பிரிட்டிஷாரைக் காப்பியடித்து ஒரு மாறுவேடத்தை புனைந்து கொள்வது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும். உண்மையான பொருளில் ஆங் கிலேயராக நாம் ஆக முடியாது; ஆங்கிலேயரைப் போல் வேடம் அணிந்து கொள்வதால், நாம் அவர்களை ஏமாற்றி விடவும் முடியாது.

நம்முடைய அறிவு, உணர்வு, ரசஞானம் ஆகியவற்றை பிரிட் டிஷார்கள் குறைத்து மதிப்பிடாமல் இருக்கச் செய்ய ஒரே வழிதான் உண்டு. நம்முடைய முழு வன்மையோடும், சுறுசுறுப்போடும், மனச்சான்றோடும் நம்முடைய உண்மைச் சொரூபத்தைப் பெற வேண்டும்.

பிற நாட்டாரின் தாக்குதலின் எதிரே, நம்முள் அடங்கி இருக்கின்ற சக்திகளை வெளிப்படுத்த வேண்டும். பழங்கால இந்திய ரிஷிகள்[6] தன்னடக்கக் கட்டுப்பாட்டின் மூலமாகப் பெற்ற விலை யிலாச் சக்திகளை உலகம் விரும்பி நிற்கிறது. இந்தச் சக்திகள் வீணுவதற்கு ஆண்டவன் ஒப்ப மாட்டான். ஆதலால்தான் காலம் வந்தவுடன், இந்தத் துன்பத்தை நமக்குத் தந்து நம்மை எழுப்பி விட்டான்,

## VII

பலவற்றுள் ஒன்றைக் காண்பது, அதாவது வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே இந்தியாவின் ஆழமான கொள்கையாகும். கருத்து வேறுபாடுகளை முரண்பாடாக இந்தியா கருதுவதில்லை. அதேபோல அந்நியர் எவரையும் பகைவர்களாகக் கருதிக் காண்பதுமில்லை. எனவே, யாரையும் ஒதுக்குவதுமில்லை; அழிப்பதுமில்லை. அதற்குப் பதிலாக ஒரு பரந்த சமுதாய அமைப்பில் அனைவருக்கும் ஒவ்வோர் இடத்தைக் காண முற்படுகிறது. எல்லா வழிகளிலும் உண்மை உண்டு என்பதை ஒப்புக் கொள்வதுடன், பெருமையை எங்கே கண்டாலும் அதற்குரிய மரியாதையைச் செலுத்துகிறது.

ஒற்றுமைப் படுத்தும் இந்தப் பெரிய சக்தி இந்தியாவிடம் இருப்பதால் கனவில் கண்ட பகைவர்களைப் பற்றி நாம் அஞ்ச வேண்டியதில்லை. ஒவ்வொரு போராட்டத்தின் முடிவான பயனாகவும், நம்முடைய வளர்ச்சியை நாம் எதிர்பார்க்கலாம். ஹிந்துக்களும், பௌத்தர்களும், முஸ்லீம்களும், கிறிஸ்தவர்களும் இந்திய மண்ணில் போர் புரிந்து சாக வேண்டியதில்லை; அதற்குப் பதிலாக, அவர்கள் இங்கே ஒன்றல் தன்மையைக் காணலாம். அந்த ஒன்றல் தன்மை ஹிந்து அல்லாததாக இராது. அதற்குப் பதிலாகப் புதுமையான ஹிந்துத் தன்மையுடையதாக இருக்கும். பல்வேறு உறுப்புக்களும் எவ்வளவு சர்வதேசாபிமானியாக (cosmopolitan) இருப்பினும், இருதயம் இந்தியாவின் இருதயமாகவே இருக்கும்.

இந்தத் தெய்வக் கட்டளையை மனத்தில் பதிய வைத்துக் கொண்டால், நாம் எடுத்த காரியத்தில் வலுவாக நிற்க முடியும்; நம்முடைய அவமானம் கரைந்து விடும்; இந்தியாவின் மரணமில்லாத உண்மையான வலிமையை நாம் காண முடியும். வெறும் மாணவர்களாகவே இருந்து ஐரோப்பியக் கல்வியைப் பெற்றுக் கொண்டே இருக்க வேண்டியதில்லை என்பதை மனத்தில் பதித்துக் கொள்ள வேண்டும். இந்தியாவின் அறிவுத் தெய்வமாகிய கலைமகள் எல்லாக் கலைகளையும், விஞ்ஞானத்தையும் நூறு இதழ்த் தாமரை போல நம்மிடையே மலருமாறு செய்வாள்.

—1904.

வாழ்வின் பருமையில் செல்வச் சுமைதான் உண்டு
ஆனால் வாழ்வின் முழுத்தன்மையில் சுகவாழ்வுண்டு.

—ரவீந்திரநாத் தாகூர்.

# 3. கல்விப் பிரச்னை

இந்த நாட்டில், இப்பொழுது நம்மால் பள்ளிக்கூடம் என்று சொல்லப்படும் இடம், உண்மையிலேயே ஒரு தொழிற்சாலையாகும். ஆசிரியர்கள் என்பவர்கள் அதன் பகுதியாவார்கள். காலை $10\frac{1}{2}$ மணி யளவில் மணி அடிப்பதுடன் தொழிற்சாலை திறக்கப்படுகிறது. பிறகு ஆசிரியர்கள் பேசத் தொடங்குவதையே யந்திரங்கள் வேலை செய்யத் தொடங்குவதாகக் கருதலாம். மாலை 4 மணிக்கு ஆசிரி யர்கள் பேச்சை முடிக்கிறார்கள்; அதாவது தொழிற்சாலை மூடப் பட்டு மாணாக்கர்கள் யந்திரம் போலக் கற்றுக்கொண்ட சில குறிப்புகளுடன் வீட்டுக்குச் செல்கிறார்கள். பின்னர் ஒரு சமயம் பரீட்சைகளின் மூலம் இந்தப் படிப்பு ஆராயப்பட்டு ஒரு முத்தி ரையும் இடப்படுகிறது.

தொழிற்சாலையைப் பொறுத்தமட்டில் ஒரு வசதி என்ன வென்றால், நாம் விரும்பியபடி பொருள்களை அது செய்து கொடுக் கும். பல்வேறு யந்திரங்களால் பொருள்கள் உற்பத்தி செய்யப் பட்டிருந்தாலும்கூட ஒன்றற்கொன்று அதிக வித்தியாசம் இராது; ஆதலால், செய்யப்பட்ட பொருள்களுக்கு முத்திரையிடுவதும் எளிதாகும்.

ஆனால், ஒரு மனிதனுக்கும் மற்றொரு மனிதனுக்கும் அதிகப் படியான வேற்றுமை உண்டு; அன்றியும், ஒரே மனிதன் கூடப் பல் வேறு நாட்களில் ஒரே விதமாக இருப்பதில்லை.

மேலும், மனிதர்களிடமிருந்து நாம் பெறுகின்ற பொருள்களை யத்திரங்களிலிருந்து பெற முடியாது. நமக்கு எதிரேயுள்ள ஓர் இயந்திரம் ஒரு பொருளை வைத்திருக்குமே தவிர, கைநீட்டி நம்மிடம் கொடுக்க அதற்குச் சக்தி இல்லை. நமக்குத் தேவைப்பட்ட விளக்கை ஏற்றுவதற்குத் தேவையான எண்ணெயை அந்த இயந்திரம் தரக் கூடுமே தவிர, அதனால் விளக்கை ஏற்றித் தரமுடியாது.

ஐரோப்பிய நாட்டில், பிள்ளைகளின் மன வளர்ச்சியில், பள்ளிக் கூடங்கள் மிகச் சிறு பங்கே ஏற்றுக்கொள்ளுகின்றன. அதில் பெரும் பங்கு, பிள்ளைகள் வளருகின்ற நாட்டின் சுற்றுச்சூழ்நிலையைப் பொறுத்திருக்கிறது. ஐரோப்பியக் கல்வி, வாழ்க்கையோடு தொடர் பில்லால் இருப்பதற்குப் பதிலாக, வாழ்க்கையின் ஒரு பகுதியாகவே அமைந்திருக்கிறது. சமுதாயத்திலேயே தோன்றி வளர்ந்து, சுற்றி வந்து, அந்த மக்கள் அன்றாட வாழ்க்கையில் செய்யும் காரியங்கள்

பேசும் பேச்சுக்கள் அனைத்திலும், அக் கல்வி தன் முத்திரையைப் பொறிக்கிறது.

ஆனால், நம்முடைய நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்கள் சமுதாயத்தின் உறுப்பாக அமையாமல், புறத்தே இருந்து சமுதாயத்தின் மேல் சுமத்தப்படும் பொருள்களாக இருக்கின்றன. அப் பள்ளிக் கூடங்களில் கற்பிக்கப்படும் பாடங்கள் சுவையற்றனவாய், கற்பதற்குத் துன்பம் பயப்பனவாய், கற்ற பிறகு எவ்விதப் பயனும் தராதனவாய் இருக்கின்றன. பிள்ளைகள் 10 மணியிலிருந்து 4 மணி வரையில் மண்டையில் ஏற்றிக்கொள்ளும் பாடங்களுக்கும் அவர்கள் வாழும் நாட்டிற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. அதுமட்டுமல்லாமல், அவர்கள் பெற்றோர்களும் சுற்றத்தார்களும் வீட்டில் பேசும் பேச்சுக்களுக்கும், அவர்கள் பள்ளிக்கூடங்களில் கற்கும் கல்விக்கும், முரண்பாடு நிரம்ப இருக்கின்றது. இப்படி நடமாடும் இயந்திரங்களை ஆக்கிப் படைப்பதில் தொழிற்சாலையைவிடப் பள்ளிக்கூடங்கள் ஒன்றும் சிறப்புடையன வென்று சொல்வதற்கில்லை.

ஐரோப்பியப் பள்ளிகூடங்களின் புறப்பகுதிகளை அப்படியே நகல் செய்வதில் நாம் முற்றிலும் வெற்றி யடைந்து விடுவோம் என்பது உறுதிதான் என்றாலும், அதன் உயிர்நாடியை நாம் என்றுமே அடையப்போவதில்லை. மேஜைகள், நாற்காலிகள், பள்ளிக்கூட விதிகள், பாடத் திட்டங்கள் என்பவற்றில் அங்குள்ளவற்றைப் போலவே, எவ்வளவு சிறந்த முறையில் நாம் நகல் செய்தாலும், அவை வெறும் சுமையாகவே அமைந்துவிடும்.

பழங்கால இந்தியாவில், கல்வி, குருமார்களின் பொறுப்பாக இருந்து வந்தது. மன வளர்ச்சிக்கும், ஆன்ம வளர்ச்சிக்கும் எடுத்துக் காட்டாய், இயந்திரங்களைப் போலல்லாமல் மனிதத் தன்மை வாய்ந்தவர்களாய் அவர்கள் விளங்கினார்கள். அவர்கள் கல்வி, மிகப் பரந்த அளவில் இல்லாவிட்டாலும் அன்றைய சமுதாயத்தில் நிலவியிருந்த கருத்துக்கள், எண்ணங்கள் ஆகியவற்றுக்கு முரண்படாமல் இருந்தன. ஆனால், அவற்றை அப்படியே மீட்டும் இப்போது உயிர்ப்பித்தல் என்பதும் பயன்படாமல் போவதுடன்கூட, பெரும் சுமையாகவும் அமைந்து விடும்.

இன்றையத் தேவையை நாம் அறிந்து கொண்டு புதிய பள்ளிக் கூடங்களை அமைக்கத் தொடங்கினால், கீழே காணப்படும் தேவைகளை அவை பூர்த்தி செய்ய வேண்டும். அவையாவன:—பாடத்தி;

டங்கள், கிளர்ச்சியை ஊட்டுவனவாகவும், பல்வேறு வகைப்பட்டன வாகவும் அமையவேண்டும்; மேலும், இளைஞருடைய மனங்களில் வெறுப் புணர்ச்சியையும், பகைமை யுணர்ச்சியையும் தோற்றுவிக் காமல் இருக்கவேண்டும். அவ்வாறில்லாமல் பிள்ளைகளைப் பொறுத்த மட்டில், பள்ளிக்கூடத்தில் இருக்கும் ஒரு சில மணி நேரங்களுக்கு மட்டும் பயன் படக் கூடியனவாய் இருப்பதில் பயனில்லை.

பள்ளிக்கூடங்களை வீடுகளாக மாற்றத் தொடங்கினுல், அவை விடுதிகளோடு கூடிய பள்ளிக்கூடங்களாக மாறுமே தவிர வேறு பயன் ஒன்றுமில்லை. விடுதிப் பள்ளிக்கூடங்கள் திருப்தி யளிக்காத ஓர் இனத்தைச் சேர்ந்தவை. அவை போர் வீரார் தங்கும் பாடி வீடு களையும், பைத்தியக்காரர் மருத்துவ மனைகளையும், சிறைகளையுமே ஒத்துள்ளன.

ஐரோப்பிய முறையில் பள்ளிக்கூடங்களை அமைக்க வேண்டு மென்பதை நாம் அறவே மறந்துவிட வேண்டும். ஏனென்ருல், ஐரோப்பிய வரலாறும், ஐரோப்பிய சமுதாயமும் நம்முடைய வர லாற்றுக்கும் சமுதாயத்திற்கும் முற்றிலும் மாறுபட்டவை. எந்தக் கருத்துக்களும், குறிக்கோள்களும் பழங்காலத்தில் நம்முடைய நாட்டில் முக்கியத்துவம் பெற்றனவோ, அவற்றை நல்ல முறையில் நாம் தெரிந்துகொள்ள முற்பட வேண்டும்.

இதில் பல சங்கடங்கள் உள்ளன. இதுவரை ஆங்கிலக் கல்வியைப் பெற்றுவந்த காரணத்தினுல், அந்தக் கல்வி முறை நம்முடைய கருத்தையும் எண்ணத்தையும் கவர்ந்து, நம்முடைய நாட்டின் சாதனைகளை நாம் அறிய முடியாமல் செய்துவிட்டது. ஆங்கிலேயர்களிடமிருந்து விடுதலை பெறவேண்டுமென்று நாம் செய்கின்ற போரட்டத்தில்கூட ஆங்கிலேய அரசியல் முறைகளைக் கைவிட்டுவிட நாம் தயாராக இல்லை.

இதில் முக்கியமான கஷ்டம் எங்கே நேருகிறது என்ருல், இங்கிலாந்தைப் பற்றி நன்கு தெரியாமையினுல் ஆங்கிலக் கல்வியைப் பற்றியும் சரியான முறையில் நாம் அறிந்துகொள்ள முடியவில்லை. ஆங்கிலக் கல்வி அதற்குரிய ஆங்கிலச் சமுதாயத் தோடு எங்ஙனம் தொடர்பு கொண்டுள்ளது என்பதை அறியாத காரணத்தினுல் இந்திய வாழ்க்கையோடு ஆங்கிலக் கல்வியை எங்ஙனம் பொருத்த முடியும் என்பதை அறிய முடியாமல் அவதிப் படுகின்ருேம். என்ருலும், இதுதான் மிகமிக முக்கியமான பிரச்னை யாகும். இதை விட்டுவிட்டு ஆங்கில நாட்டுப் பள்ளிக்கூடங்களில்

அல்லது கல்லூரிகளில் எத்தகைய பாடப் புத்தகங்கள் அமைக்கப் படுகின்றன, என்ன விதிமுறைகளை அவர்கள் கையாளு கிறார்கள் என்பவைபற்றி ஆராய்வதும், சிந்திப்பதும் காலத்தை வீணடிப்பதாகும்.

நம்மைப் பொறுத்தவரையில், ஒரு கழகத்தையோ அல்லது குழுவையோ நிர்மாணித்துவிட்டால், எதனையும் செய்து முடித்துவிட லாம் என்ற எண்ணம் நம்முடைய உடம்பில் ஊறிப்போயிருக்கிறது. தங்களுக்குச் சுவர்க்கத்தில் இடம் தேடுவதற்காக இங்குள்ள ஒரு லாமாவுக்குப் பணம் கொடுத்துப் பிரார்த்தனைச் சக்கரத்தைச் சுற்றச் செய்யும் திபெத்தியர்களைப் போலவே இந்த விஷயத்தைப் பொறுத்தமட்டில் இருக்கிறோம். பல நாளைக்கு முன்னர் விஞ்ஞானக் கழகம்[1] ஒன்றை நிறுவிவிட்டு, இதுவரையில் இன்னும் இந்த நாட்டில் யாரும் விஞ்ஞானத்தில் கவனம் செலுத்தவில்லையே என்று வருத்தப் பட ஆரம்பித்து விட்டோம். ஏதோ விஞ்ஞானக் கழகத்தைத் தோற்று விப்பதும் ஒரு சமுதாய மக்களை விஞ்ஞானத்தில் ஈடுபடச் செய்வதும் ஒன்றுதான் என்று நினைப்பதுபோல் தெரிகிறது. ஒரு விஞ்ஞானக் கழகத்தை ஏற்படுத்திவிட்டவுடன் நாட்டில் பல்லாயிரக் கணக்கான விஞ்ஞானிகள் தோன்றிவிடுவார்கள் என்று நினைப்பது இயந்திரத் தையே நம்பி வாழும் இக் கால அறிவை எடுத்துக் காட்டுவதாகவே அமைகின்றது.

மக்களுக்கு ஆர்வம் உண்டாகச் செய்வதுதான் முக்கியமான விஷயம். அதைச் செய்து முடிக்கும்போது நம்முடைய முயற்சி பரி பூரணமாக வெற்றி அடையும். பழைய காலத்தில் இந்தியர்கள் தாங்கள் பெற்ற கல்வியில், எவ்வாறு அவ்வளவு ஆர்வம் காட்ட முடிந்தது? இந்தக் கேள்வியைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நான் அறிந்தவரை பிறநாட்டுப் பல்கலைக் கழகங்களின் பாடத் திட்டங்களை மிக ஆர்வத்தோடு ஆதியிலிருந்து அந்தம வரைப் படித்துப் பார்த்தவர்களைக் கண்டிருக்கிறேன். அதில் அவர் கள் அடையும் சந்தோஷத்தைத் தடுக்க விரும்பவில்லை. நம்முடைய பள்ளிக்கூடங்களைப் பொறுத்தமட்டில், என்னென்ன பாடங்களைப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்பது பற்றிச் சிந்திப்பது மிகவும் தேவைதான். என்றாலும், சொல்லிக் கொடுக்கும் பாடங்களின்மூலம் எவ்வாறு அவர்கள் முழுக் கவனத்தையும் திருப்புவது என்பதைப் பற்றி ஆராய வேண்டியது அதைவிட முக்கியமான காரியம்.

பழைய இந்தியாவில் குருமார்கள் குடிசைகளில் வசித்து வந்தார்கள் என்று கர்ண பரம்பரைக் கதைகள் சொல்லுகின்றன. அவர்கள் எவ்வாறு இருந்தார்கள் என்பதைப்பற்றி இன்று நாம் தெளிவான வழியில் அறிந்துகொள்ள முடியவில்லை. என்றாலும், அந்த குரு, ஒரு குடும்பஸ்தனாகவும், அவனிடத்தில் கற்ற மாணாக்கர்கள் அவனுடைய குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் போலவும் வாழ்ந்தார்கள் என்பதுமட்டும் உறுதி. ஆசிரியனும் மாணாக்கர்களும், ஒன்றாக வாழவேண்டுமென்பது நம்முடைய நாட்டைப் பொறுத்தமட்டில் இன்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு விஷயமாக இருந்து வருகிறது. அதனாலேயே இந்துமத போதனை செய்கின்ற பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் (டோல்களும் சதுஷ்பதிகளும்) இன்றுங்கூட இந்த முறை கையாளப்பட்டு வருகிறது.

இந்தப் பள்ளிக்கூடங்களைக் கவனித்தால், அவை புத்தகப் படிப்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்ததாகத் தெரியவில்லை. பண்பாட்டில் ஊறிப்போன ஒரு சூழ்நிலையும் தங்கள் தொழிலில் எல்லையற்ற ஆர்வம் காட்டி, தங்களையே அத்தொழில் முறைக்குத் தியாகம் செய்கிற ஆசிரியர்களும் அங்கே காணப்படுகிறார்கள். அவர்களுடைய மனத்தைப்பற்றி இழுக்கின்ற முறையில் ஆடம்பரப் பொருள்கள் முதலியவை ஒன்றுமில்லாமல் மிக எளிய வாழ்க்கை வாழ்வதாலும், தாங்கள் கற்றுக் கொடுப்பவற்றை வாழ்க்கையோடு நன்கு பதித்துக்கொள்வதற்கு ஓய்வும் அவர்களுக்கு நிறைய கிடைப்பதாலும் அவர்களுடைய வாழ்க்கை மிக எளிமையானதாக அமைந்து இருக்கின்றது. ஐரோப்பாவைப் பொறுத்தமட்டிலுங்கூட, பழங்காலத்தில் கல்விக்குப் பெயர்போன சில இடங்களில் இதே கருத்து நிலவி வந்ததென்பதையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பழங்காலத்தில் இந்தியாவில், மாணாக்கன் ஆசிரியன் வீட்டில் வசிக்கவேண்டுமென்பதும், அவன் பிரம்மச்சரிய[2] விரதத்தை அனுஷ்டிக்க வேண்டுமென்பதும் மிக முக்கியமாகக் கருதப்பட்டன.

பிரம்மச்சரியம் என்று சொல்லும்போது மனைவியோடு வாழாமல் இருக்கவேண்டியது என்ற குறுகிய முறையில் பொருள் கொள்ளக் கூடாது. சமுதாயத்தில் வளருகின்ற ஒரு பிள்ளை பல்வேறு மக்களாலும், பல்வேறு நிகழ்ச்சிகளாலும் உந்தப்படுவதால் அவனுடைய இயற்கை வளர்ச்சி தடைப்படுகின்றது. அவனுடைய உணர்ச்சிகள் பரிணம நிலையில் இருந்தாலுங்கூடப் பொய்த் தூண்டுதல்களுக்கு

திரையாகின்றன. இதன் பயனாக, உடல், மன வலிமைகள் வீணடிக்கப்படுகின்றன. இளைஞருடைய மனம் அதன் வளர்ச்சியைப் பாதிக்கக்கூடிய எல்லாவற்றிலிருந்தும் வேறுபடுத்தப்படவேண்டும். எனவே, பிரம்மச்சரியத்தின் நோக்கம் என்னவென்றால், வளர்கின்ற மனத்தை, அதற்கேற்ற காலம் வருவதற்கு முன்னரே ஆசை, அதனைத் தணிக்கும் வகைகள், ஆகியவற்றால் பாதிக்கப்படாமல் பாதுகாப்பதாகும்.

உண்மையைச் சொல்லப்போனால், இயற்கையின் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு வாழ்வதில் இளைஞர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். இந்தக் கட்டுப்பாடு அவர்களை முழு வளர்ச்சியடையவும், உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்கவும் வளர்கின்ற மனத்தின் பிரதிபலிப்பாக அவர்களுடைய உடலில் ஒரு வகையான ஒளியை' உண்டாக்கவும் பயன்படுகிறது.

பிரம்மச்சரியத்திற்குப் பதிலாக நம்முடைய பள்ளிக்கூடங்களில் இப்போது ஒழுக்கபோதனை செய்யப்படுகின்றது. சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் அதனைச் செய்யவேண்டுமென்ற அளவில் நினைக்கின்றார்கள். ஆனால், நோயாளிக்கு நன்னாரிக் கஷாயம்[3] தருவதுபோல, அல்லது வளர்கின்ற குழந்தைகளுக்கு மணி தவறாமல் ஆகாரம் கொடுப்பதுபோல் இந்த ஒழுக்க போதனையும் ஒரு சாதாரண விஷயமாக ஆகிவிட்டது. இதன் பயனாகப் பல தொல்லைகள் நேரிடுகின்றன. ஓர் இளைஞனுடைய மனத்தைக் கவர்கின்ற முறையில் இது அமைய முடியாது. ஒன்று அது அவன் மனதைப் புண்படுத்துகிறது அல்லது அவனுக்குப் புரியாததாக அமைந்து கூட்டில் நிற்கும் குற்றவாளியைப்போல் அவன் தன்னை நினைக்குமாறு செய்கிறது. ஒழுக்க போதனை என்பது காலத்தையும் முயற்சியையும் வீணடிக்கும் ஒரு செயல் என்று நான் கருதுகிறேன். மேலும், மிக நல்லவர்கள்கூட இதில் இவ்வளவு ஆர்வம் காட்டுகிறார்களே என்று அஞ்சுகிறேன். அது எவ்வளவு விரும்பத்தகாததோ, அவ்வளவு பயனற்றதாகவும் இருக்கின்றது. ஆதலால் சமுதாயத்திற்கு இதைவிடக் கேடு விளைவிக்கும் ஒரு காரியமும் இருக்கமுடியாது என்று நினைக்கின்றேன்.

பொய்களும், தவறான கருத்துக்களும் அன்றாட வாழ்க்கையில் புகுந்து நம்முடைய மனநிலையை நாசம் செய்கின்ற இன்றைய உலகத்தில், 10 மணி முதல் 4 மணி வரை, பள்ளிக்கூடங்கள், சில உயர்ந்த கருத்துக்களைக் கிளிப்பிள்ளைகளுக்குச் சொல்வதைப் போலச் சொல்லிவிடுவதால் உலகத்தைச் சரிப்படுத்தி விடலாம்

என்று நினைப்பது பொருத்தமற்றதாகும். இத்தகைய முயற்சி, இள மனங்களின் இயற்கையான வளர்ச்சியையும், புதுமையையும், எல்லை மீறிய பொய்களாலும், எதிர்பார்த்தல்களாலும் கெடுக்க முனைவதாகும்.

பிரம்மச்சரியம் வெறும் போதனை மட்டு மல்லாமல் உண்மையான சக்தியையும் தருகிறது. நல்லொழுக்கம் என்பது வாழ்க்கைக்கு ஏதோ அலங்காரமாக இல்லாமல் அதன் இன்றியமையாத தேவை களுள் ஒன்று என்றும் பிரம்மச்சரியம் கூறுகிறது. இதனைக் கடைப் பிடிக்கிறவன் சமயத்தையும், மதத்தையும் ஏதோ பிற பொருள் களாகக் கருதாமல் ஓர் உண்மை நண்பனிடத்தில் ஒட்டிக்கொள்வது போலத் தன்னுடைய விருப்பத்தோடு ஏற்றுக்கொள்ளுகிறான். ஒரு மாணுக்கனுடைய மனத்தையும், நடத்தையையும் நன்கு வளர்ப்ப தற்கு நல்லொழுக்க போதனை தேவையில்லை. நட்பு முறையில் கிடைக்கும் நல்வழியும் சிறந்த சுற்றுச் சூழ்நிலையுமே தேவைப்படு கின்றன.

பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடிப்பது மட்டுமல்லாமல், மாணுக் கன், இயற்கையின் நடுவே வாழ்கின்றான். நகரங்கள் நம்முடைய இயற்கையான வாசஸ்தலங்கள் அல்ல; அவை நம்முடைய உலகா யதத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உண்டாக்கப்பட்டவை தாம். நகரங்களில் பிறந்து செங்கல், சுண்ணும்பு இவற்றினிடையே நாம் வளரவேண்டுமென்று திருவருள் நினைக்கவில்லை. இயற்கை யின் மடிகளில் தவழ்கின்ற நம்மைப் பற்றி யிழுத்து, நகரங்கள் தங்க ளுடைய பசிக்கு இரையாக்கிக்கொள்கின்றன. நகரங்களில் வசிக்கின்றவர்கள், நகர வேலைகளில் ஈடுபடுகின்றவர்கள் தங்க ளுடைய வாழ்க்கையில் எதுவும் குறையிருப்பதாகவே நினைப்பது இல்லை. அன்றியும், இந்தப் பரந்த உலகத்திலிருந்து ஒவ்வொரு நாளும் அவர்கள் தூரத்தில் போய்க்கொண்டிருக்கிறார்கள் என்பதை யும் அவர்களால் உணர முடிவதில்லை.

அவர்கள் வளர்ச்சி அடைகின்ற நேரத்தில் இயற்கையின் உதவி மிக இன்றியமையாது தேவைப்படுகின்றது. ஏனைய உலக விஷயங்களாகிய சூழலில் நாம் தள்ளப்படுவதற்கு முன்னர், இயற் கையின் இந்த உதவி மிகமிகத் தேவை. அமர்கின்ற நாற்காலிகள், கரும் பலகைகள், புத்தகங்கள், பரீட்சைகள் ஆகியவற்றைப் போலவே மரங்கள், ஆறுகள், நீல ஆகாயம், இனிய காட்சிகள் ஆகியவை மிகவும் தேவையானவை.

மிகப் பழங்காலந்தொட்டே, இந்தியர்களின் மனம், இயற்கையோடு இடைவிடாது தொடர்புகொண்டு தாவர உயிர்களோடும் விலங்கு உயிர்களோடும் ஒன்றி இருக்கின்ற நிலையில் வளர்ந்து வந்துள்ளது. புராதன இந்தியாவில் இளந் துறவிகள் கீழ்க் கண்டவாறு பாடியதாக அறிகின்றோம் :—

"நெருப்பிலும் நீரிலும் மரத்திலும் செடியிலும்
விருப்புடன் இயற்கையாய் மண்ணிலும் நீண்ட
அண்டத் திலும்உறை ஆண்டவன் எதிரே
தலைவணங் கிடுவோம் தலைவணங் கிடுவோம்"[1]

மண், நீர், காற்று, நெருப்பு ஆகிய நான்கு பூதங்களும் ஒரு முழுத்தன்மை பெற்றுப் பரமாத்மாவோடு தொடர்புடையவையாய் விளங்குகின்றன; இந்த ஞானத்தை நகரங்களிலுள்ள பள்ளிக்கூடங்களின் மூலம் யாரும் பெற முடியாது. நகரத்திலுள்ள ஒரு பள்ளிக்கூடம் வெறும் தொழிற்சாலையாக அமைந்து, இந்த உலகம் முழுவதையும் ஓர் இயந்திரமாகக் கருதும் நாகரிகத்தையே நமக்குக் கற்பிக்கின்றது.

நடைமுறை வாழ்க்கையையே பெரிதாகக் கருதும் மக்கள், இதுபோன்ற கருத்தை, குழப்பத்தைத் தருகின்ற மெய்ப்பொருள் உணர்வு வாதமாகவே கருதுவர். ஆனால், அவர்கள்கூட நீலவானம், காற்று, மரங்கள், பூக்கள் ஆகியவை ஒரு மாணுக்கனின் மன, உடல் வளர்ச்சிக்கு மிக முக்கியமானவை என்பதை மறுக்க முடியாது. ஜன நெரிசலுடைய ஒரு நகரத்தில் ஏதோ ஓர் அலுவலகத்தில் மிகச் சுறுசுறுப்போடு வேலை செய்கின்றவர்கள் இயற்கையோடு மிகவும் நெருங்கிய தொடர்பு கொள்ள முடியாது. ஆகவே, இளைஞராக இருக்கும்போது, அதாவது நம்முடைய மனம் கற்றுக்கொள்ளும் விருப்பத்தோடு பொறி புலன்கள் தீவிரமாக வேலை செய்கின்ற நேரத்தில், அவை இயற்கையின் ஆட்சியின் கீழ் அவசியம இருக்க வேண்டுமென்பது நன்கு விளங்கும். தாய்ப் பாலோடு வளர்கின்ற நாம், மண், நீர், ஆகாயம், காற்று ஆகியவற்ருலும் வளர்க்கப்பட்டாலொழிய, முழுத்தன்மை பெற்ற மனிதர்களாக வளர முடியாது. ஆகவே, சூரிய வெளிச்சமும், மேகமும் விளையாடுகின்ற திறந்த வெளிகளில் குழந்தைகள் நன்கு விளையாடட்டும். மிக உயர்ந்த ஆன்மாவாகிய பூமாவிடமிருந்து குழந்தைகளைப் பிரிக்கவேண்டா; காலைக் கதிரவன் ஒளிக் கதிர்களாகிய நீண்ட கைகளை நீட்டிக் காலைப் பொழுதைத் திறக்கின்ற காட்சியையும், மாலைநேரம் மெள்ள மெள்ள விண்மீன்கள் பூத்துக் குலுங்குகின்ற இரவுப் படுக்கையை

விரிப்பதையும் குழந்தைகள் காணட்டும். வருஷத்தில் ஏற்படுகின்ற 6 பருவங்களாகிய 6 அங்க[5] சங்கீதக் காட்சியைக் குழந்தைகள் கண்டு அனுபவிக்கட்டும். மழை பொழிவதற்கு முன்னர், கருத்த மேகக் கூட்டங்கள் இடியையும் பிறப்பித்து உலகத்தைக் கவிந்திருப்பதையும் அவர்கள் கண்டு அனுபவிக்கட்டும். மழைக்காலம் தீர்ந்தவுடன் மென்காற்றில் அசைகின்ற பச்சையுடன் கூடி, தொடுவானம் வரையில் நீண்டிருக்கின்ற வயல் வெளிகளை அவர்கள் காணட்டும்.

வளர்ச்சி பெறும் காலத்தில் சுதந்திரம் மிகமிக இன்றியமையாதது. அந்தச் சுதந்திரத்தை இயற்கை மிகுதியாகத் தருகின்றது. ஒரு மாணுக்கன் காலை $9\frac{1}{2}$ மணிக்கும் 10 மணிக்குமிடையே அவசரமாகச் சாப்பிட்டுவிட்டுப் பள்ளிக்கூடத்திற்கு ஓடி, சந்தேகாஸ்பதமான ஒரு கேடி, போலீஸ் ஸ்டேஷனில் தினம் சென்று ஆஜர் பட்டியல் தருவதுபோல, பள்ளிக்கூடத்திற்குச் சென்று ஆஜர் பட்டியல் தரவேண்டிய சூழ்நிலையில் அந்த மாணுக்கன் நல்ல முறையில் வளர்ச்சியடைய முடியாது என்பது திண்ணம். வலுவான சுவர்களுக்கு நடுவே பெரிய கதவுகளையிட்டு அதற்கு ஒரு காவற்காரனையும் வைத்து, அதற்குள்ளே குழந்தைகளை அனுப்பி என்ன வழியான முறையில் நாம் கல்வி போதிக்கின்றோம்? இந்த நிலையில் அல்ஜீப்ரா கணக்குகளையும், வரலாற்றின் தேவைகளையும் குழந்தைகள் தெரிந்து கொள்ளவில்லை யென்றால், அவர்களைக் குறை கூற முடியுமா? இதற்காகக் காற்று, வெளிச்சம், சுதந்திரத்தினால் கிடைக்கும் மகிழ்ச்சி ஆகியவற்றை அவர்களுக்கு இல்லாமல் செய்து அவர்களுக்குரிய கல்வி என்பதையே ஒரு தண்டனையாக ஆக்குவதன் அடிப்படைக் கருத்துத்தான் என்ன? குழந்தைகள் அறியாமையுடையவர்களாக பிறப்பதன் காரணமே படிப்படியாக அவர்கள் அறிவு பெற்று, அதைப் பெறுவதில் ஏற்படுகின்ற மகிழ்ச்சியையும் அடைய வேண்டுமென்பதுதான். கல்வியை மகிழ்ச்சி தரக்கூடிய செயலாகச் செய்யும் ஆற்றல் நமக்கு இல்லாமல் போகலாம். ஆனால், அதற்காகப் பள்ளிக்கூடங்களைச் சிறைச்சாலைகளாக மாற்ற வேண்டிய கொடுமை தேவை யில்லை. குழந்தைகள் சுதந்திரமாக இயற்கையோடு பழகி, அதன்மூலம் கல்வி பெற வேண்டுமென்பதுதான் இறைவனுடைய எண்ணம். ஆனால், அந்த எண்ணத்தைத் தோற்கடிப்பதன் மூலம் நம்மை நாமே தோற்கடித்துக் கொள்கிறோம். எனவே, கருணையின் பொருட்டாவது இந்தச் சிறைச்சாலையின் சுவர்களை உடைத் தெறிவோமாக. பிறக்கும்பொழுதே குழந்தைகள்

பண்டிதர்களாகப் பிறக்கவில்லை யென்பதற்காக இந்தச் சிறைத் தண்டனையையும், கடுங்காவல் தண்டனையையும் அவர்களுக்குக் கொடுக்கவேண்டா.

கல்வியைப் பொறுத்தமட்டில், புராதன இந்தியாவின் கொள்கைகளை நாம் கடைப்பிடிக்க வேண்டுமென்பதே என்னுடைய கருத்தாகும். ஆசிரியர்களும் மாணுக்கர்களும் இயற்கையின் சூழ்நிலையில் ஒன்ருக வாழவேண்டும். மாணுக்கர்கள் பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடித்துத் தங்கள் கல்வியை முடிக்கவேண்டும். தொன்று தொட்டு வரும் மனிதப் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்ட, என்றும் மாருத இந்த உண்மைகள், நம்முடைய இன்றையச் சூழ்நிலை எவ்வளவு மாறுபட்ட போதிலும், தங்களுடைய சிறப்பை இழந்துவிட வில்லை.

முன்மாதிரியாக அமையக்கூடிய ஒரு பள்ளிக்கூடத்தை நாம் கட்டவேண்டி ஏற்பட்டால், ஜன நெருக்கமுடைய நகரத்திற்கு மிக நீண்ட தூரத்திற்கு அப்பால் அமைதியான சூழ்நிலையில் திறந்த வெளி, வயல்கள், மரங்கள், ஆகியவற்றின் சுற்றுச் சூழலில் அப் பள்ளிக்கூடத்தை அமைக்கவேண்டும். ஆசிரியர்களும், மாணுக்கர்களும் கல்விக்காகவே தங்களைத் தியாகம் செய்கின்ற ஓர் இடமாக அப் பள்ளிக்கூடம் அமையவேண்டும்.

இயலுமாளுல், அவர்களுக்கு வேண்டிய உணவைத் தயாரித்துக் கொள்வதற்கேற்ப, விவசாயம் செய்யக்கூடிய ஒரு துண்டு நிலமும் அங்கே அமைவது பொருத்தமுடையதாகும். பாலுக்குத் தேவையான பசுக்கள் அங்கே இருப்பதோடு, அவற்றை மாணவர்களே பராமரித்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலையும் இருத்தல் வேண்டும். படிப்பில் ஈடுபடாத நேரங்களில் மாணவர்கள் தோட்டங்களில் உழவும், செடி கொடிகளுக்கு நீர் பாய்ச்சவும், வேலிகள் கட்டவும் முயற்சி செய்யவேண்டும். இந்த முறையில் உடலாலும் மனத்தாலும் அவர்கள் இயற்கையோடு தொடர்பு கொள்ள முடியும்.

வசதியான சீதோஷ்ண நிலைகளில் வகுப்புகள் பெரிய மரங்களின் நிழல்களில் அமைக்கப்பட வேண்டும். ஆசிரியர்களும் மாணவர்களும் மரச் சாலைகளின் நடுவே உலாவப் போகும்பொழுது தங்களுக்குள் நடத்தும் கருத்தரங்குகளின் மூலமாகவே கல்வி போதனையின் ஒரு பகுதி நடத்தப்படவேண்டும். மாலை ஓய்வு நேரங்களில் வானவியல் பற்றிப் படிக்கவும், இசையை வளர்க்கவும், பழைய கதைகளையும் வரலாற்றுக் கதைகளையும் அவர்கள் கேட்கவும் வாய்ப்புளிக்க வேண்டும்,

தவறிழைத்த மாணவன் பழைய இந்திய முறையிலேயே அதற்குப் பிராயச்சித்தம் செய்யவேண்டும். தண்டனை என்பது, குற்றம் இழைக்கப்பட்டவன் குற்ற மிழைத்தவனுக்குச் செய்யும் பழி வாங்கும் செயலாகும். ஆனால், பிராயச்சித்தம் என்பது குற்ற மிழைத்தவன் தானே தனக்குத் தந்துகொள்ளும் தண்டனையாகும். பிராயச்சித்தம் என்பது நமக்கு நாமே செய்துகொள்ள வேண்டிய கடமை யென்பதையும், அந்த ஒரே வழியின் மூலமாகத்தான் நாம் செய்யும் தவறுகளை நிவர்த்தி செய்ய முடியும் என்பதையும் வாழ்க்கையில் இளமையிலேயே நாம் அறிந்துகொள்ள வேண்டும். ஒரு மனிதன் மற்றொரு மனிதனால் தண்டிக்கப்படுவது அவனுக்கு இழைக்கப்படும் மிக இழிவான செயலாகும்.

இது சம்பந்தமாக மற்றொன்றையும் காணவேண்டும். நம்முடைய மாதிரிப் பள்ளிக்கூடத்தில் பெஞ்சுகள், நாற்காலிகள், மேஜைகள் ஆகியவற்றுக்கு என்ன தேவையென்று என்னால் அறிய முடியவில்லை. இவ்வாறு சொல்வதனால் ஐரோப்பிய வாழ்வின் மேல் கொண்ட வெறுப்புக் காரணமாக இவ்வாறு சொல்கிறேன் என்று யாரும் நினைக்க வேண்டா. இவ்வாறு சொல்லும்பொழுது, தேவையில்லாத எல்லாப் பொருள்களையும் ஒதுக்கிவிட வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையில் நின்று சொல்கிறேன். நம்முடைய பள்ளிக்கூடங்களில் இக் கொள்கையை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டு மென்பதும் என்னுடைய விருப்பம். மேஜைகள், நாற்காலிகள், பெஞ்சுகள் ஆகியவற்றை நாம் அனைவருமே பெறுதல் பொருளாதார அடிப்படையில் இயலாத காரியம். ஆனால், அனைவரும் அணுகுவதற்குப் பூமி என்றுமே இடம் தருகின்றது. நாற்காலிகளும், பெஞ்சுகளும் மண்ணோடு நமக்குள்ள உறவை அழித்து விடுகின்றன. நம்முடைய தேசம் குளிர்ச்சி பொருந்திய நாடன்று. அன்றியும், நம்முடைய உடைகளும் பூமியின்மேல் உட்காருவதற்குப் பொருந்தாதவை அல்ல. என்றாலும், பிற நாட்டு வழக்கங்களை அப்படியே 'காப்பி'யடிப்பதற்கு முயற்சி செய்கின்ற நாம், நமக்கு முற்றிலும் தேவையில்லாத தட்டுமுட்டுச் சாமான்களைச் செய்வதில் ஈடுபடுகின்றோம். உண்மையில் பயன்படாத சாமான்களை எவ்வளவுக் கெவ்வளவு இன்றியமையாதவை என்று நினைக்கின்றோமோ, அவ்வளவுக் கவ்வளவு நம்முடைய சக்தியை வீணடிக்கின்றவர்களாக ஆவோம்.

பொருளாதார வசதியுடைய ஐரோப்பாவைப்போல நம்முடைய நாட்டிற்கு நிதி ஆதார மில்லை. அன்றியும், ஐரோப்பியர்களுக்கு மலி

வாகக் கிடைக்கின்ற பொருள்கள் நம் நாட்டில் விலை யுயர்ந்தவை யாக உள்ளன. பொது வாழ்வில் வசதிகளுக்குத் தேவையான வேலைகளுக்குத் திட்டம் போடும்போது, வீடுகள் தட்டுமுட்டுச் சாமான்கள் ஆகிய பொருள்களில் அதிக கவனம் செலுத்தி, அவற் றிற்கு எவ்வளவு செலவாகும் என்பதிலேயே மண்டையை உடைத் துக் கொள்கிறோம். இவை மிக இன்றியமையாதவை யல்ல என் பதை அறியவேண்டும். மண் குடிசையில்தான் தங்கி வேலையைத் தொடங்குவோம் என்றும், நம்முடைய கூட்டங்களைத் தரையில் உட்கார்ந்து கொண்டே நடத்துவோம் என்றும் சொல்வதற்கு நமக்கு ஏன் மனத் திடம் இல்லை? அவ்வாறு செய்தால், நாம் மேற் கொண்ட வேலையின் மேல் ஏவும் கருத்தை ஒரு சிறிதும் குறைக் காமல், ஆனால் செலவழிக்கின்ற சக்தியில் பாதியை மிச்சம் பிடித்து விட முடியும். இன்றுள்ள சூழ்நிலையில் எல்லையற்ற நிதி ஆதாரங் களையும், நிதி வசதிகளையும் உடைய ஐரோப்பிய நாடுகளைப்போலப் பிரம்மாண்டமான திட்டங்களை வகுத்தாலொழிய சாதாரணத் திட்டங் களை வகுக்க நாம் வெட்கப்படுகின்றோம். இவ்வாறு செய்வதால், நம்மிடத்தில் கிடைக்கக்கூடிய குறைந்த அளவு ஆதாரத்தைச் சுற்றுச் சூழ்நிலை வேலைகளுக்குச் செலவழித்துவிட்டு, உண்மை யான வேலையை மேற்கொள்ளும்பொழுது நிதி ஆதாரம் கிடைக் காமல் தொல்லைப் படுகிறோம்.

படிக்கின்ற பையனுக்கு ஒரு துண்டுச் சாக்குக் கட்டியும், எழுது வதற்குத் தரையும் மட்டும் தேவையா யிருந்த வரையில் நம்முடைய நாட்டில் பள்ளிக்கூடங்களுக்குப் பஞ்ச மில்லாமல் இருந்தது; ஆனால் இப்போது அளவுக்கு மிஞ்சிய சிலேட் பலகைகளும், பென்சில்களும் கிடைக்கின்றன. ஆனால், பள்ளிக்கூடங்களுக்குத்தான் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. இன்றியமையாத தேவைப் பொருள்களை விட்டுவிட்டு, தேவையில்லாத பொருள்களின் மேல் அதிக கவனம் செலுத்துகின்ற பழக்கமே வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் இப்போது முடிவாகக் காணப்படுகிறது. நம்முடைய முன்னோர்கள், சமுதாயக் கடமைகளில் அதிக கவனம் செலுத்தினார்களே தவிர அதனுடைய புற நடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்திய தாகத் தெரியவில்லை. ஆனால், இன்று அதற்கு நேர்மாறாக நாம் நடந்து கொள்கின்றோம். தட்டுமுட்டுச் சாமான்களை அவர்கள் செல் வத்தின் அறிகுறியாகக் கருதினார்களே தவிர, நாகரிகத்தின் அறிகுறி யாகக் கருதவில்லை. நாகரிகத்தின் அன்றையப் பாதுகாவலர்கள் தங்களுடைய வீடுகளில் மிகக் குறைந்த அளவே மேஜை, நாற்காலி

போன்ற சாமான்களை வைத்திருந்தார்கள். வறுமையை அணிகலமாகக் கொண்டிருந்த அவர்கள், நாட்டிற்குத் தேவையான அமைதியை, போதுமென்ற மனத்தை வழங்கினார்கள். இளையவர்களாக நாம் இருக்கும்பொழுது எளிய வாழ்க்கை வாழ்வதனுடைய தத்துவத்தை மனத்தில் வாங்கிக் கொள்ளக் கூடுமேயானால், இயந்திரம் இல்லாவிட்டாலும் ஒரு சில சக்திகளையாவது பெற முடியும். தரையில் உட்காருதல், எளிய உடை அணிதல், எளிய உணவை உட்கொள்ளுதல், குறைந்த அளவு முயற்சியில் சிறந்த பயனைப் பெறுதல் ஆகிய சக்திகள் அவற்றின் பாற்படும். இவற்றைச் சாதாரண சக்திகள் என்று நினைக்கக்கூடாது. இவற்றைப் பெறுவதற்குக்கூடப் பெருமுயற்சி செய்யவேண்டி வரும்.

எளிமை, இயற்கையான தன்மை ஆகியவை நாகரிகத்தின் சின்னங்களாகும். ஆடம்பர மிகுதி முதலியவை காட்டுமிராண்டித் தனத்தின் அடிப்படையாகும். உண்மையான பெருந்தன்மை அதனுடைய இயற்கையான சூழ்நிலையில் ஒளிவிட்டுப் பிரகாசிக்குமே தவிர எளிய சூழ்நிலையில் அது எதனையும் இழப்பதில்லை. இது தான் அடிப்படையான உண்மை. நம்முடைய பிள்ளைகள் இந்த உண்மையை உணர்ந்துகொள்ள இதனை ஆணித்தரமாக அவர்கள் மனத்தில் பதிக்க, எல்லாவிதமான முயற்சிகளையும் செய்ய வேண்டும்.

பயன்படாத நல்லொழுக்க போதனையின் மூலம் இதனை அவர்களுக்குக் கற்பித்துப் பயனில்லை. அவர்களுடைய பள்ளிக்கூடங்களிலும், அவர்கள் பார்க்கும் இடங்களிலும் எளிய வாழ்க்கையைக் கடைப்பிடிப்பதன் மூலம் இதனை அவர்கள் மனத்தில் பதிக்க வேண்டும். இதனை அவர்கள் கற்றுக்கொள்ளாவிட்டால், உடலுழைப்பைக் கேவலமானதாகக் கருதித் தரையில் உட்காருவதையும் கௌரவக் குறைவானதாகக் கருதுவார்கள். இதைவிடத் தவறு என்னவென்றால், அவர்களுடைய மூதாதையர்களை வெறுக்கவும் புராதன இந்தியாவின் உயர்ந்த குறிக்கோளைத் தவறாகக் கருதவும் தொடங்கி விடுவார்கள்.

புறத்தே நிகழும் ஆடம்பரங்களையெல்லாம், அவை நம் கவனத்தை இழுக்கக்கூடியவையாக இருப்பினும், விட்டுவிட்டு அடிப்படையான தத்துவத்தில் நம்முடைய கவனத்தைச் செலுத்துவதாக வைத்துக்கொண்டால், அடுத்தபடியாக எழுகின்ற கேள்வி, இதனைக் கொண்டுசெலுத்த நம்மிடத்திலுள்ள ஆதாரங்கள் போதுமானவையா என்பதாகும். ஒரு பள்ளிக்கூடத்தை நிர்மாணிக்கும்

போது அப் பள்ளிக்கூடக் கல்வி போதனை முழுவதையும் குருமார்கள் பொறுப்பில் விட்டுவிட வேண்டியது முதல் கடமையாகும். அவர்களை எவ்வாறு பெறுவது? நம்முடைய விருப்பம்போலக் குருமார்களைத் தயாரிக்க முடியாது. அன்றியும், பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு விளம்பரங்கள் போட்டுப் பெறுவது போலக் குருமார்களைப் பெற முடியாது.

இந்த விஷயத்தில், கிடைக்கும் துணி அளவைக் கொண்டே சட்டை தைக்க வேண்டுமென்ற உண்மையை ஏற்றுக் கொள்ளுகிறேன். நமக்கு ஒரு குரு மிகவும் தேவைப்படுகிறுர் என்ற காரணத்தால் ஒரு யாக்ஞவல்கியரைப்[6] பெற்று விடுவோம் என்று நினைப்பது பெருந்தவறு. இன்றுள்ள சூழ்நிலையில் நம்முடைய நாட்டின் சக்தியில் பெரும் பகுதி முதலீடு செய்யப்படாத பணத்தைப் போலப் பயன்படாமல் அடைந்து கிடக்கிறது என்பதை நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். ஏனென்ருல், அதனைப் பயன்படுத்துவதற்கு வேண்டிய முழு முயற்சியும் நாம் செய்யவில்லை. தபால் தலைகளை ஒட்டுவதற்கு ஒரு குடத்தில் நிறைந்துள்ள தண்ணீரை உபயோகப்படுத்தினுல், குடத் தண்ணீர் முழுவதையும் உபயோகப்படுத்தியதாக ஆகாது. ஆனுல், அதே தண்ணீரைக் குளிப்பதற்கு உபயோகப்படுத்துவதானுல் தண்ணீர் முழுவதையும் பயன்படுத்தி விடுவோம். இதன் மூலமாக அறிந்து கொள்ளக் கூடிய ஓர் உண்மை என்னவென்ருல், நாம் பயன்படுத்தும் காரணத்தின் தன்மைக்கேற்பக் குடத்துத் தண்ணீர் முழுப் பயனையோ அல்லது குறைந்த பயனையோ தருகிறது. இன்றைக்கு ஒரு பள்ளிக்கூட ஆசிரியர் நிறைவேற்றும் கடமைகள் அவருடைய மனே சக்தியில் மிகச் சிறிய அளவையே பயன்படுத்திக் கொள்கின்றன. ஓரளவு மூளையோடு கூடிய ஒரு கிராமபோன் பெட்டி ஒரு பிரம்பை வைத்துக்கொண்டு இக் கடமையை நிறைவேற்றி விடும். ஆனுல், அதே பள்ளிக்கூட ஆசிரியர் ஒரு குருவின் வேலையைச் செய்ய ஏற்றுக்கொண்டால், அவருடைய முழு மனத்தையும் அப் பிள்ளைகளுக்குத் தொண்டு செய்யப் பயன்படுத்துவார். அவருடைய சக்திக்கு மீறின செயல்களை அவரால் செய்ய முடியாது என்பது உண்மைதான். ஆனுல், அதே நேரத்தில் அவரால் செய்யக்கூடிய முழு வேலையைச் செய்யாமல் இருக்கவும் அவர் வெட்கப்படுவார். ஒரு வியாபாரம் நடைபெறுவதற்கு இரண்டு பேர் தேவைப்படும். அதேபோல முழுப் பயனையும் அடைய வேண்டுமென்ருல், அதனை விரும்பிக் கேட்டே பெறவேண்டும். நம்முடைய நாட்டில் உள்ள பள்ளிக்கூட ஆசிரியர்களின் ஆன்ம, மனச் சக்திகளில் மிகச் சிறிய

பகுதியே இன்று பயன்பட்டு வருகிறது. ஆனால், நம்முடைய நாட்டில் உண்மையாகவே குருமார்கள் தேவையென்று விரும்பினால், வேண்டு மான அளவு இச் சக்தி வெளிப்படும்.

ஆசிரியர்கள் தம் பிள்ளைகளை எதிர்பார்க்குமாறு இன்றைய நிலையில் பொருளாதார சக்திகள் செய்கின்றன. ஆனால், இயற்கை யாக இருந்தால் பிள்ளைகளே ஆசிரியரைத் தேடிச்செல்ல வேண்டிய நிலைமை இருக்கும். இன்றைய நிலைமையில், ஆசிரியர் ஒரு வியாபாரி யாக இருக்கிறார். தம்மிடமுள்ள கல்வியை வாங்கக்கூடியவர்களை நாடி அவர் அலைகிறார். அவரிடத்தில் அமைந்து கிடக்கும் வியாபாரப் பொருள்களில் அன்பு, விருப்பம், மரியாதை, கடமையுணர்ச்சி ஆகிய சரக்குகளை எதிர்பார்ப்பதற்கில்லை. அவரிடத்தில் கிடைக்கக்கூடிய கல்வியாகிய சரக்கை விற்றுவிட்டு, அதற்கு எதிராகச் சம்பளத்தை வாங்கிக்கொண்ட பிறகு, அவருக்கும் பிள்ளைகளுக்கும் எந்தவித மான சம்பந்தமும் இல்லை. இன்றுள்ள விரும்பத்தகாத இந்தச் சூழ் நிலையில்கூட, நம்முடைய நாட்டில் தங்களுடைய தகுதியைப் பொருளாதார அடிப்படைக்கு அப்பால் வைத்து எண்ணுகிற ஆசிரி யர்கள் பலர் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஆசிரியர்களில் ஒருவரே குரு பீடத்தில் வைக்கத் தகுதியுடையவர். தம்முடைய வாழ்க்கை யின் மூலம் பிள்ளைகளின் வாழ்க்கையை வளப்படுத்தவும், தம்முடைய கல்வி மூலம் பிள்ளைகளின் அறிவு விளக்கை ஏற்றவும், தம்மிடத்தில் நிறைந்துள்ள அன்பு மூலம் பிள்ளைகளின் வாழ்க்கை யில் மகிழ்ச்சியை ஏற்படுத்தவும், செய்தாலொழியத் தம்முடைய கடமையை முழுவதுமாக நிறைவேற்ற முடியாது என்பதை அவர் அறிந்துகொள்வார். விற்கவும், வாங்கவும் முடியாததாய் விலை மதிப்பிடுவதற்கு அப்பாற்பட்டதாய் உள்ள பொருள்களைப் பிள்ளை களுக்கு வழங்குவார். இவ்வாறு வழங்குவதன் மூலம் கேவலம் பயத்திலிருந்து தோன்றுவதும், சமய உணர்ச்சியைப் போல மனத் தின் அடிப்படையிலிருந்து தோன்றுவதும், இயல்பாய் அமைந்தது மான ஒரு பகுதியை மாணவர்களிடத்திலிருந்து அந்தக் குரு பெற முடியும். அவருடைய வாழ்க்கையை நடத்திச் செல்லுவதற்குரிய அளவு சம்பளத்தை அவர் வாங்கிக்கொள்ள வேண்டியது [illegible] ஏற்பட்டாலும், அவருடைய சம்பளத்தைப் போலப் பல மடங்கு அதிக மதிப்புள்ள ஒரு பொருளைத் தருதலினால் தனிப்பட்ட மதிப்பை அவர் பெறுதல் கூடும்.

கல்வி பெறுவதற்காக வீட்டிலிருந்து பிள்ளைகளை வெளியே அனுப்புவது நல்லதா என்ற அடிப்படையான கேள்வியிலேயே

என் கருத்துக்கு மாறுபடுகின்ற நேயர்கள் பலருக்கு இந்த விரிவான ஆராய்ச்சி பயனற்றதாகக் காணப்படும்.

இன்று கல்வி என்று வழங்கப்படுகின்ற பொருளைப் பெறுவதற்குத் தங்களுடைய பிள்ளைகளைச் சமீபத்திலுள்ள ஒரு பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதோ அல்லது தனியே வீட்டில் வந்து சொல்லிக் கொடுக்குமாறு ஓர் ஆசிரியரை நியமிப்பதோ போதுமானதாகும் என்று நம் பெற்றோர்கள் நினைக்கிறார்கள். இத்தகைய "கல்வி" அந்தப் பிள்ளையைப் பணம் சம்பாதிக்கும் ஓர் இயந்திரமாக மாற்றுமே தவிர, கல்வி என்ற பெயருக்கு அது ஒரு சிறிதும் பொருந்தாது என்பதை முன்னரே எடுத்துக் காட்டியுள்ளேன்.

பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள பலவகையான மக்களால் நிரம்பியுள்ளது இந்த உலகம். இம்மக்கள், நடைமுறையில் பெரிதும் மாறுபடுகின்ற சூழ்நிலையில் தத்தம் வீடுகளில் வசிக்கின்றார்கள். அவர்களுடைய குழந்தைகளும் குழந்தைப் பருவம் முதலே இந்த மாறுபட்ட சூழ்நிலைகளில் அந்தந்தக் குடும்பங்களுக்கேற்ற தனிப்பட்ட பழக்க வழக்கங்களுடன் வளர்ந்து வருகின்றன. அவரவர்கள் மேற்கொண்ட தொழிலின் காரணமாக, வயதடைந்த இளைஞர்கள் வெவ்வேறு பண்பாடுகளைப் பெற்றுத் தனித்தனித் தொகுதியினராக ஆகிவிடுகின்றார்கள். வாழ்க்கையில் பெற்றோர்களின் அச்சிலேயே குழந்தைகளும் வார்க்கப்படுவது அக் குழந்தைகளுக்கு நன்மை பயப்பதில்லை.

ஒரு பணக்காரனுடைய மகனை, உதாரணமாக எடுத்துக்கொள்வோம். அந்தப் பிள்ளை இந்த உலகத்திற்கு வரும்போது தனிப்பட்ட முறையில் எதனையும் கொண்டு வருவதில்லை. ஓர் ஏழையினுடைய மகனுக்கும் அவனுக்கும் எந்தவிதமான வேறுபாடும் இல்லை. அவனை வளர்க்கின்ற முறையில்தான் பணக்காரன் என்ற முத்திரை அவன் மேல் பொறிக்கப்படுகின்றது.

எனவே, சாதாரண மனிதப் பண்பை அவனிடத்தில் வளர்க்க வேண்டியது அவன் பெற்றோர்களின் கடமையாகும். இதனைச் செய்து முடித்த பிறகுதான், எவ்வளவுக்குத் தேவை ஏற்படுகிறதோ அந்த அளவுக்கு ஒரு பணக்காரன் மகனாக அவன் வளர்க்கப்படவேண்டும். உண்மையில் நடைபெறுவது இதற்கு நேர்மாறானதாகும். சாதாரண மனிதப் பண்பை அறிந்து, அதன்படி நடக்கப் பழகுவதற்கு முன்னரே அந்தப் பிள்ளை ஒரு பணக்காரன் மகனாக நடந்துகொள்ளக் கற்பிக்கப்படுகிறான். இதன் பயனாக,

குழந்தைப் பருவத்தில் பெறக்கூடிய பயனுள்ள பல அனுபவங்களை அப் பிள்ளை பெற முடியாமல் போகிறது. அதன் பயனாக, உணர்ச்சி உலகத்தில் மிகக் குறைந்த அனுபவத்தோடு அவன் வளர்ச்சி அடைகிறான். முதலாவதாக, அந்தப் பிள்ளைக்குக் கையுங் காலும் வளமாக இருந்தபோதிலும், ஒரு நொண்டியாகவே வளர்ந்துவிடு கிறான். ஏனென்றால், கூண்டில் அடைத்த அல்லது ஆணியால் அறையப்பட்ட பறவைகளைப்போல அவன் பெற்றோர்களே வாழ்ந்து வருகிறார்கள். ஆதலால், பிள்ளையும் அங்ஙனமே வளர்க்கப்படுகிறது. அவன் நடக்கக்கூடாது; ஆகவே, அவனுக்கு ஒரு வண்டி வாங்கித் தருகிறார்கள். கனம் குறைந்த சமானைக்கூட அவன் தூக்கக் கூடாது என்பதற்காக, அவனோடு வேலையாள் ஒருவன் அனுப்பப் படுகிறான். எதையுமே அவன் செய்யக்கூடாது என்பதற்காக, எப்பொழுதும் அவன்கூட ஓர் ஏவலாள் இருந்துவருகிறான். நல்ல கட்டுமஸ்தான உடம்பைப் பெற்றிருந்தும், பக்கவாத முடையவனைப் போல அவன் நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது. இவையெல் லாம் அவன் செய்யவேண்டி யிருப்பதன் காரணம் அவனுடைய உடம்பில் ஏதோ குறைபாடு இருக்கிறது என்பதனால் அன்று; ஆனால், மற்றவர்கள் அவனுடைய செல்வ நிலையைப்பற்றிக் குறை வாக எண்ணி விடுவார்கள் என்பதனாலேயே, இவ்வாறு நடைபெறு கின்றன. இதன் பயனாக, மிக எளிய காரியமும் அவனுக்கு மிகக் கடுமையான செயலாகவே காட்சி யளிக்கின்றது. சாதாரணமாகப் பிறர் செய்யும் காரியங்களை அவன் செய்ய வெட்கப்படுகிறான். அவன் வளர்கின்ற பணக்கார சமுதாயத்திற்கேற்ப, அவனுடைய பெற்றோர்கள் பயனில்லாத சில பழக்க வழக்கங்களை அவனுக்கு ஏற்றி, சாதாரண மனிதன் அனுபவிக்க வேண்டிய அடிப்படையான சில உரிமைகளைக்கூட அவனுக்கு மறுத்துவிடுகிறார்கள். தானியம் விளைகின்ற வயலில் களையை முளைக்க விடுகின்ற இத்தகைய பெற் றோர்களைக் குழந்தைகளின் பாதுகாவலர்கள் என்று சொல்லி, அவர்கள் பொறுப்பில் குழந்தைகளை வளருமாறு விடுவது பொருத்தம் என்று சொல்ல முடியுமா?

ஆடம்பர வாழ்க்கையால் ஏற்படுகின்ற படாடோபத்தை வயது வந்தவர்கள் அனுபவிப்பதைத் தடுக்கமுடியாது. ஆனால், இத்தகைய படாடோபத்தை விரும்பாத குழந்தைகளை, இதனை விரும்பி ஏற்றுக் கொள்ளுமாறு பிடிவாதம் செய்வது பொருத்த மற்றதாகும். புழுதியும், மண்ணும் கூடிய தரையில் விளையாடுவதுடன், வெயிலை யும், காற்றையும், மழையையும் குழந்தைகள் பெரிதும் விரும்பு

கின்றன. தன் பொறி புலன்களை முழுவதும் பயன்படுத்தி இந்த உலகத்தைக் காண்பதில் குழந்தைகள் பெரிதும் மகிழ்ச்சி யடைகிறார்கள். இயற்கை கொடுத்த உடம்போடு சுற்றித் திரிவதற்கு அவர்கள் வெட்கப்படுவதில்லை யாதலால், உடை உடுத்துவதைக் குழந்தைகள் விரும்புவதில்லை.

இந்த நாட்டில் ஐரோப்பியர்கள் எங்ஙனம் வாழ்கிறார்களோ, அதேபோல் நம்முடைய பிள்ளைகளும் பெண்களும் வளர்க்கப்படுகிறார்கள். ஆயாமார்களை வைத்துக் குழந்தைகளை வளர்க்கவும், வங்காளி மொழியை மறந்துவிட்டுச் சந்தைக்கடை ஹிந்தி மொழி பேசவும், அவர்களுக்குக் கற்றுத் தருகிறோம். தாய் நாட்டோடு குழந்தைகளுக்கு ஏற்படுகின்ற தொடர்பாகிய கொப்பூழ்க் கொடியை, அந்தத் தாய்நாட்டின் சக்தியை அவர்களுக்குத் தருகின்ற கொப்பூழ்க் கொடியை முற்றிலும் வெட்டி விட்டோம். ஆனால், ஐரோப்பிய சமுதாயத்தோடு தொடர்பு கொள்ளவும் அவர்களுக்கு வழியில்லாமல் போயிற்று. அவர்கள் இயற்கையாக வளர்கின்ற காட்டிலிருந்து வேரோடு பிடுங்கப்பட்டு, ஐரோப்பியப் பூந்தொட்டியில் மறு நடவு செய்யப்பட்டுள்ளார்கள். நல்ல வளர்ச்சி யடைந்த ஒரு வங்காளி, விரும்பினால், ஐரோப்பிய வாழ்க்கையை மேற்கொள்ளட்டும். ஆனால், வங்காளிப் பெற்றோர்கள் தம் குழந்தைகளையும் ஐரோப்பிய வழிகளில் வளர்ப்பதற்கு ஏன் இவ்வளவு பாடுபடவேண்டும்? மேல்நாட்டு முறையில் வளர்க்கப்பட்ட ஒரு பிள்ளை, இந்திய முறையில் உடை உடுத்துக்கொண்டு வந்த அவனுடைய சுற்றத்தார்கள் சிலரைப் பார்த்து வெறுப்படைந்து, தன்னுடைய தாயை நோக்கி, "அம்மா, அம்மா! சில பாபுக்கள் இதோ வருகிறார்கள்" என்று கூறியதை என் காதுகளினாலேயே கேட்டேன். இதைவிடக் கேவலமான நிலைமைக்கு நாம் இறங்கிச் செல்ல முடியாது. இந்தச் சூழ்நிலையில் வளர்கின்ற பிள்ளைகள் பெரியவர்களானவுடன் வங்காளிச் சமுதாயத்திற்குத் தகாதவர்களாய், ஐரோப்பிய சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்களாய், இறுதியில் சமுதாயப் பிரஷ்டர்களாகவே வாழவேண்டி நேரிடும்.

உண்மையில், தம் பிள்ளையைத் தவறான வழியில் வளர்ப்பதாக அப் பெற்றோர்கள் நினைப்பதே இல்லை. தம்முடைய குற்றங்களைத் தாமே காண்பதற்குரிய சக்தி பெரும்பான்மையான மக்களிடம் இல்லாத காரணத்தால், தாங்கள் பிறருக்கு இழைக்கின்ற குற்றத்தை இவர்கள் அறிந்துகொள்ளவில்லை. இதனாலேயே தங்கள் வீடுகளில் தீய பழக்க வழக்கங்களும், மூட நம்பிக்கைகளும், உணர்ச்சிப்

போராட்டங்களும் நிறைந்திருந்தாலும்கூடத் தம் பிள்ளைகளை இதிலிருந்து பிரித்து வெளியே அனுப்பிக் கல்வி கற்பிக்க இவர்கள் விரும்புவதில்லை. தங்களுடைய பிள்ளைகள் முழு வளர்ச்சியடைய வேண்டுமானால் அவர்களைக் குருமார்கள் நடத்துகின்ற பள்ளிக் கூடங்களுக்கே அனுப்பிவிட வேண்டுமென்று கட்டாயப்படுத்த வேண்டும். அங்கு பிரம்மச்சரிய விரதம் பூண்டு இயற்கையோடு ஒன்றி அப் பிள்ளைகள் வாழ முடியும்.

கருக்களும், விதைகளும் முறையே கருப்பையினுள்ளும், பூமிக்கடியிலும் பிற தொல்லைகள் இல்லாத மறைவிடத்தில் வளர்கின்றன. அவற்றிற்குத் தேவையான சத்துப் பொருளைப் பகல்-இரவு என்ற வேறுபாடில்லாமல் கருக்களும் விதைகளும் சுற்றுச் சூழ்நிலையிலிருந்தே பெற்றுக் கொள்கின்றன. காற்றும், வெளிச்சமும் உள்ள திறந்த வெளியில் வளரக்கூடிய சக்தியைப் பெறுகின்ற வரையில் அவைகள் இந்த மறைவிடத்திலேயே இருந்து, வளர்ச்சியைப் பெறுகின்றன. புறத்தே இருந்து வருகின்ற சக்திகள் அவற்றைத் தாக்கித் தீங்கு விளைவிக்காமல், அவற்றிற்கேற்ற சூழ்நிலையில் இவை வளருமாறு இயற்கை அருள் செய்திருக்கிறது.

குழந்தைப் பருவத்தில், குழந்தை மனம், கரு நிலைமையிலேயே இருக்கின்றது. ஆகவே, பள்ளிக்கூடப் பிள்ளைகள் புறச் சக்திகள் வந்து தாக்காத சூழ்நிலையில் வளரவேண்டும்; வாழவேண்டும். முயற்சியோடும் முயற்சி யின்றியும் கல்வியையும் வன்மையையும் பெறுவதும் அவர்களுடைய தலையாய குறிக்கோளாக இருக்க வேண்டும். இதற்கேற்ற நிலையில் அந்தச் சுற்றுச் சூழ்நிலை அமைக்கப்படவேண்டும். —1906.

தன்னுடைய புத்தகங்களைத் தின்னத் தெரியாத பைத்தியக்காரன் மனிதனே! என்று கறையான் நினைக்கின்றது.

—ரவீந்திரநாத் தாகூர்.

# 4. அடுத்து என்ன?

ஓவியக் கலைஞன் ஒருவன் தன் ஓவியத்துக்குப் பயன்படுத்துகின்ற கோடுகளையும், வண்ணங்களையும் தகுந்த முறையில் தேர்ந்தெடுத்து, ஒன்று கலந்து, ஓவியம் அமைத்த பிறகு அவற்றைக் கோடுகள் என்றும் வண்ணங்கள் என்றும் பிரித்துக் காட்ட முடியாது. இந்நிலையில், அவை கோடுகள், வண்ணங்கள் என்ற நிலையைக் கடந்து, அக் கலைஞனுடைய மனத்தில் தோன்றிய ஒரு குறிக்கோளுக்கு (இலட்சியத்துக்கு) வடிவு கொடுக்கின்ற வண்ணப்படமாக அமைந்து விடுகின்றன. அதே போல, விடுதலைக் குறிக்கோள் என்று ஒரு குறிப்பிட்ட முடிவை நோக்கிச் செலுத்துவதற்கு, இந்திய நாடு, வாழ்க்கையின் பல்வேறு சக்திகளையும் பழக்கப்படுத்த முயன்றது. இந்திய நாட்டின் கொள்கைப்படி, வாழ்க்கை, உள்-வளர்ச்சியடைந்தவுடன், அதனையும் கடந்து ஒரு கருத்துடையதாக வளர வேண்டும். ஒரு பூ முழு வளர்ச்சி யடைந்து பழமாக மாறுவது போல, வாழ்க்கை ஒரு பயனை நோக்கி வளர வேண்டும். எல்லையுடைய கோடுகள், அந்த எல்லைக்குள் நின்றே, அழகுணர்ச்சியின் அடிப்படையைக் காட்டி, அழகின் எல்லையற்ற தன்மையையும் காட்ட முற்பட வேண்டும். வாழ்க்கையின் ஓட்டமும், ஓர் எல்லைக்குள் அதன் இரு கரைகளின் நடுவே ஓடிச் சென்று, இறுதியில் எல்லையற்ற சுதந்திரக் கடலில் கலக்க வேண்டுமென்பதே இந்தியாவின் குறிக்கோளாக இருக்கிறது. அத்தகைய ஒரு வாழ்க்கைக் கலையின் அடிப்படைக் கொள்கைகளையும், முறைகளையும் ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும். இத்தகைய ஒரு வாழ்க்கைக் கலையையே பழங்கால இந்திய நாடு தன் மக்களுக்குக் கற்றுத் தந்தது.

உடல் தூய்மையற்றது; உலகம் ஆடம்பர மயமானது; எல்லாவற்றையும் உதறிச் செல்லுதலே விடுதலைக்கு வழி என்று கருதுவதே இடைக்கால ஐரோப்பாவின் ஆன்மீக வாழ்க்கையின் குறிக்கோளாக அமைந்திருந்தது. இயற்கையான ஆசைகளோடு கூடிய மனித வாழ்க்கை, சமுதாய நோக்கங்கள் ஆகியவை ஒரு புறமும், நிறைந்த கட்டுப்பாட்டோடு கூடிய ஒரு குறிக்கோளை நோக்கிச் செல்கின்ற ஆன்மீக வாழ்க்கை ஒரு புறமும் நின்று செய்கின்ற போராட்டத்தை, சிறந்த முறையான போராட்டம் என்று நவீன ஐரோப்பா கருத விரும்பவில்லை. அக் கருத்தின்படி இவ் வுலகம் மாயை என்று அழுத்தம் கொடுத்துக் கூறினால், இம் மனித வாழ்க்

கையின் அடிப்படையான தத்துவத்தைத் தகர்த்து விடுகிறோம் என்று அவர்கள் கருதுகிறார்கள். வாழ்க்கைப் பந்தயத்தில் முழு மூச்சுடன் ஈடுபட்டிருக்கின்ற நிலையில் இறந்து வீழ்ந்து விடுவதுதான் புகழ் வாய்ந்த மரணம் என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

மரணத்தைப் பற்றிச் சிந்திப்பதும் உலக நிலையாமையைப் பற்றிச் சிந்திப்பதும் பொருத்தமற்றவை யென்று கருதி, தனது நம்பிக்கை முழுவதையும் இந்த உலகத்தின் மேலேயே செலுத்தியதனால், ஐரோப்பிய நாடுகள் ஓரளவு பயன் பெற்றனவென்பது உண்மைதான். விஞ்ஞானம் சொல்கின்றபடி வாழ்க்கைப் போராட்டத்தில் வலிமையுடைய பொருள்களே எஞ்சும் என்பதற்கிணங்க, அந்தப் போராட்டத்தில் ஈடுபடுவதற்குரிய பயிற்சியை ஐரோப்பியர்கள் பெறுகின்றார்கள். வாழ்க்கையின் முழு அர்த்தமும் இதுதான் என்று ஐரோப்பியர்கள் நினைப்பது போல் தெரிகிறது. இத்தகைய வாழ்க்கைத் தத்துவத்தால் நடைமுறைக்குக் கிடைக்கும் பயன் எதுவாக இருப்பினும், இந்த உலகத்தோடு நமக்குள்ள தொடர்பு நிலையற்றது என்ற உண்மை மறுக்க முடியாமல் அமைந்து கிடக்கின்றது.

மரணத்தைப் பற்றிச் சிந்திக்காமல், வாழ்க்கையில் திடமான நம்பிக்கை கொள்ளும்படி, ஏதோ ஒரு காரணம் பற்றி, இயற்கைச் சக்தியே நம்மைப் படைத்திருக்கிறது; என்றாலும், நம்முடைய உலக வாழ்க்கை முடியத்தான் செய்கின்றது. அன்றியும், இந்த உலகத்தில் நாம் செய்கின்ற எல்லாக் காரியங்களும் முடிவடையும் தறுவாயில், துண்டு துண்டாக அழிந்து போவதையும் காண்கிறோம். மிகப் பெரிய வளமான வாழ்க்கையும் ஒன்று மற்றுப் போகின்றது. மிகச் சிறந்த சாம்ராஜ்யங்களும் அவற்றின் உச்ச நிலையில், கனவாய் மறைந்து விடுகின்றன. தானே விளங்கும் இவ்வுண்மையைத் திருப்பித் திருப்பிச் சொல்வதை நாம் விரும்பாவிட்டாலும், இதனை மறுக்க முடியாது. எனவே, வாழ்க்கையின் அடிப்படையாகிய மரணத்தோடு சேர்த்தே நம்முடைய காரியங்களையெல்லாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

நம்முடைய உலக உறவுகள் வெல்லாம் அழிந்து போகக்கூடியன வென்றாலும், அவை நிலைத்திருக்கின்ற வரையில் அவற்றை நாம் ஒதுக்கிவிட முடியாது என்பதும் உண்மைதான். இவை இல்லை என்று நினைத்து நாம் நடக்க முற்பட்டால், அவை விடாமல் தொடர்ந்து நின்று நம்மைப் பழி வாங்கி விடுகின்றன. நாம் ஏறிச் செல்கின்ற புகைவண்டி, நாம் குடியிருக்கின்ற வீட்டைப்போல் எப்போதும்

நமக்குப் பயன்படுவது இல்லை யென்ற காரணத்தால் பயணச் சீட்டு வாங்க மாட்டேன் என்று சொல்வது தவருகும். உண்மையான பிணைப்புகளை, அவை என்றுமே நிலைத்திராமல் இடைக்காலத்தில் தோன்றியவை என்ற காரணத்திற்காக ஒதுக்க முற்பட்டால், அப் பிணைப்புகள் வலுவடைந்து நம்மை அடிமைப்படுத்துவது தவிர வேறு வழி யில்லை.

ஆகவேதான், இணக்கம் (attachment) ஒதுக்கம் (detachment) ஆகியவற்றை ஒன்று சேர்த்து அவற்றில் ஓர் ஒன்றல் தன்மையைக் (harmony) கண்டாலொழிய அவை நம்மை முடிவான விடுதலைக்குக் கொண்டுசெலுத்துதல் இல்லை. உண்மையின் எல்லையுடைய தன்மைக்கு, நம்மை அழைத்துச் செல்வதுதான் இணக்கம் என்று சொல்லப்படும். அதாவது, அந்த நேரத்தில் எது இருக்கிறதோ, அதனையே எல்லையுடையது என்று குறிப்பிடுகிறேம். இதன் எதிராக, ஒதுக்கம் என்பது, உண்மையின் எல்லையற்ற நிலைக்கு நம்மை அழைத்துச் செல்கிறது. இதுவே குறிக்கோள் தன்மை பெற்ற இயல்பாகும் (ideal aspect). நடத்தலாகிய செயலை எடுத்துக் கொள்வோமானல், பூமியைத் தொடுவதற்குக் காலை வைக்கின்ற செயலை இணக்கம் என்றும், பூமியிலிருந்து மற்ருரு காலைத் தூக்கு கின்ற செயலை ஒதுக்கம் என்றும் கூறலாம். தளை, விடுதலை என்ற இரண்டின் இடையே காணப்படும் ஒன்றல் தன்மைதான் ஆக்கத் தின் தாண்டவமாகும் (dance of creation). இந்திய ஞானிகளின் கருத்துப்படி, சிவம் என்பது பேருண்மையின் அல்லது சத்தியத்தின் ஆண்பால் கொள்கையாகும். அதாவது ஆன்மாவின் சுதந்திர நிலையாகும். சிவை சத்தியத்தின் பெண்பால் கொள்கையாகும். இக் கொள்கை, பொருள்களிடையேயுள்ள தளையைக் குறித்து நிற்கின்றது. சிவனும் சிவையும் ஒன்று சேர்வதில் முழுத்தன்மை இருக்கின்றது.

இந்த மாறுபாடுகளிடையே ஓர் ஒற்றுமைத் தன்மையைக் காண வேண்டுமானல், மனிதனைப் பற்றி நன்கு அறிய வேண்டும். அதாவது, ஒரு குறிப்பிட்ட கடமையைச் செய்கின்ற ஒரு மனிதனுக அவனை ஆக்கிவிடக் கூடாது. நெருப்புக்குப் பயன்படுகின்ற விறகாக மட்டும் மரத்தைக் கருதினல், மரத்தை அறிந்து முடிந்த தாகாது. நாட்டைப் பாதுகாக்கின்ற கடமை உடையவனுகவோ, அல்லது நாட்டின் செல்வத்தை உண்டாக்குகிற கருவியாகவோ மட்டும் மனிதனைக் கருதுவது அவனை ஒரு வீரனுகவோ அல்லது வாணிகனுகவோ அல்லது தூதனுகவோ மட்டும் குறைத்து

மதிப்பிடுவதாகும். இவ்வாறு குறுகிய நோக்கத்துடன் மனிதனைப் பற்றிச்சிந்திப்பது தீமை பயப்பதாகும். யாருக்குப் பெரும் புகழைத் தரவேண்டுமென்று நினைக்கிறோமோ, அவனையே குறைத்து மதிக்கத் தொடங்கி விடுகிறோம். ஒரு தனி மனிதன் செய்து முடிக்கக்கூடிய செயல்களை மட்டும் வைத்துக் கொண்டு அவனை மதிப்பிடாமல், அவனுடைய முழுத் தன்மையையும் மதிப்பிடக்கூடிய இயல்பை, பழங்கால இந்தியர்கள் எங்ஙனம் கொண்டிருந்தார்கள் என்பதை இந்தப் பழைய ஸம்ஸ்கிருதப் பாடல் தெரிவிக்கின்றது :—

" தனி ஒரு குடும்பம் தழைக்க ஓர்உயிரினை
இனியநல் சமூகம் இலங்கஓர் குடியினை
பெற்ற பொன்னூடு பீடுறக் குலத்தினை
உற்றநல் ஆன்மா உய்ந்திட உலகையும்
தியாகம் செய்வது தக்கதே காண்மின்."[1]

" ஆன்மா என்பது யாது?" என்ற கேள்வி கேட்கப்படலாம். அதற்கு முன் இதைவிட எளிமையான "வாழ்க்கை என்றால் என்ன?" என்ற கேள்விக்கு விடை சொல்லிப் பார்க்கலாம். உண்மையைக் கூறுமிடத்து, இந்த உடம்பு மேற்கொள்ளும் மூச்சு விடுதல், ஜீரணம் செய்தல் என்பவை போன்ற சில கடமைகளே வாழ்க்கை அல்லது வாழுதல் என்று கூறுவது தவறு. இவை அனைத்தையும் ஒரு சேர நிகழ்த்துகின்ற கொள்கைதான் வாழ்க்கை என்று சொல்வதும் பொருத்தமன்று. நிகழ் காலத்தின் சூழ்நிலையிலிருந்து வளர்ந்து, எதிர் காலத்தை நோக்கி எட்டிப் பிடிக்கின்ற ஓர் இயல்பும், எதிர்பாராத சூழ்நிலை பற்றிச் சிந்திக்கின்ற ஓர் இயல்பும், ஓயாத மாற்றங்களில் பரிசோதனைகளைச் செய்கின்ற ஓர் இயல்பும், வாழ்க்கைக்கு இயல்பாகவே அமைந்திருக்கின்றன. மேலும் மேலும் விரிந்து கொடுக்கிற எதிர் கால மலர்ச்சியை, இறந்தொழிந்த பொருள்கள் குறுக்கே நின்று தடை செய்யுமானால், அப்பொழுது வாழ்க்கை, தன்மாட்டு வைக்கப்பட்ட நம்பிக்கையைக் கெடுக்கின்ற துரோகியாக ஆகி விடுகிறது.

சீவன் என்பது வாழ்க்கையின் ஆன்மீக இயல்பேயாகும். அதிலேயே நம்முடைய முடிவற்ற தன்மை அடங்கி யிருக்கிறது. குறுகிய இடத்தில் நடைபெறுகின்ற உணர்ச்சிப் போராட்டங்களின் நிலைக்களமாகிய விலங்கு வாழ்க்கையிலிருந்து, விடுதலை பெறுவதற்கு நம்முடைய மனச்சான்றை ஓயாது அது தூண்டிக் கொண்டிருக்கிறது. விலங்குகளைப் போலவே மனிதனும் தன்னலம் என்ற ஒன்றால் ஆட்சி செய்யப்பட்டாலும் கூட, இதனை எதிர்த்துப்

போராடுகின்ற ஓர் இயல்பூக்கமும் அவனுள் மறைந்து கிடக்கின்றது. எப்படி ஒரு காய்ந்த விதையினுள் உயிரோட்டம் தங்கியிருந்து சமயம் நேரும்பொழுது அந்த இருண்ட விதையை உடைத்துக் கொண்டு ஒளியை நோக்கித் தன்னுடைய சுதந்திரக் கொடியை உயர்த்திக் கொண்டு வெளிப்படுகிறதோ, அதேபோல மனித மனத் துள்ளும் தன்னலத்தை எதிர்த்துப் போராடுகின்ற சக்தி மறைந்து கிடக்கிறது. கீழை நாடுகளிலுள்ள நம்முடைய ஞானிகள் சுயக் கட்டு நீக்கம் (self emancipation) ஒன்றே மனித விடுதலையின் சிறந்த பகுதியாகும் என்று கூறி வந்துள்ளனர். என்றும் உள்ள பரம்பொருளின் விருப்பத்திற்கிணங்க இருப்பது இந்த சுயக்கட்டு நீக்கம். அருள் மீட்பு அல்லது வீடு பேறு என்பவற்றால் கிடைக்கும் வெகுமானம் அன்று இது.

பழங்கால இந்தியாவில் இதனைப் பேசியும் பயின்றும் வந்தனர். மிக உயர்ந்துள்ள பிரம்மத்தோடு ஒன்றியிருக்கக்கூடிய மனித ஆன்மாவின் பெரு மதிப்புக்கு எல்லையே இல்லை என்பதை நம் நாட்டு ஞானிகள் அன்றே கண்டார்கள். இதை விட்டு விட்டு மனிதனைப் பற்றிய குறுகிய நோக்கம் கொள்வது தவறானதாகும். அவன் வெறும் பிரஜையாகவோ அல்லது தேசப்பற்றுள்ளவனா கவோ மட்டும் இருப்பதற்கு இல்லை. ஏனென்றால், ஒரு நாடோ அல்லது நகரமோ, இன்னும் சொல்லப்போனால் இந்த உலகம் என்ற நீரில் குமிழியோ கூட அவனுடைய அழியாததும், நித்திய மானதுமான ஆன்மாவைக் கட்டுப்படுத்த முடிவதில்லை.

பழங்கால இந்தியாவில் அரசனாகவும் பெரும் கவிஞனாகவும் இருந்த ஒருவன் கீழ்க்கண்டவாறு பேசுகிறான் :—"ஆசைகள் அனைத்தையும் நிறைவேற்றக் கூடிய அடிப்படையையே நீ பெற் றிருந்தாலும் என்ன பயன்? உன்னுடைய பகைவன் மார்பின் மேல் உன் காலை வைதது அழுத்தக்கூடிய நிலையை நீ பெற்றிருந் தாலும் என்ன பயன்? உன்னைச் சுற்றி நல்ல நண்பர்களைப் பெற்றிருக்கும் நல்ல திட்டமும் உனக்கு இருந்துதான் என்ன பயன்? முழு மாமிச உடம்பைக் கற்பகோடி காலம் அழியாமல் வைத் திருக்கக் கூடிய சக்தியை நீ பெற்றிருந்தால்கூட என்ன பயன்? அடுத்து என்ன?" [2]

மனிதன் விரும்பிப் பெறக் கூடிய எல்லாவற்றையும் காட்டிலும் மனிதனே உயர்ந்தவன் என்பதே இதனுடைய பொருளாகும். மனிதனைப் பற்றிய மிக உயர்ந்த உண்மையை ஓயாது நினைவில்

வைத்துக் கொண்டிருந்தால்தான், மனித வாழ்க்கையை, முழுத் தன்மையை நோக்கிச் செலுத்த முடியும். அந்தப் பேருண்மை என்னவென்றால் மனிதனுடைய ஆன்ம வாழ்க்கை ஒரு முடிவற்ற இடத்திலிருந்து மற்றொரு முடிவற்ற இடத்திற்குச் செல்லுகிறது. அதாவது ஆதியும் அந்தமும் அற்றது என்பதே அந்தப் பேருண்மை.

இந்தப் பரந்துபட்ட மெய்க் காட்சியைக் கண்டதில்தான் நம்முடைய பழைய ஞானிகள் இடைக்கால ஐரோப்பியத் துறவிகளிலிருந்தும் மாறுபட்டார்கள். மனித வாழ்க்கைக்கு, முற்றிலும் மாறுபட்ட ஒரு புதிய மதிப்பை, இந்த இந்திய ஞானிகள் கண்டார்கள். இறுதி வரையில் ஓயாது ஒழியாது முயற்சி செய்வதை இந்திய ஞானிகள் போற்றற்குரிய ஒரு விஷயமாகக் கருதவில்லை. அவர்களுடைய குறிக்கோள் எல்லாம் முயற்சியின் முடிவுக்கு வருவதிலேயே அமைந்திருந்தது. ஆன்ம விடுதலை ஒன்றே மனித முயற்சியின் முடிவான பயன் என்பதில் அவர்கள் எள்ளளவும் சந்தேகம் கொள்ளவில்லை.

ஐரோப்பா தேசம் சலியாமல் விடுதலை அல்லது சுதந்திரத்துக்கு நன்றி பாடிக் கொண்டு நிற்கின்றது. ஆனால் அவர்கள் சுதந்திரம் என்று குறிப்பது—பொருள் சம்பாதிக்கும் சுதந்திரம், அதனை அனுபவிக்கும் சுதந்திரம், வேலை செய்யும் சுதந்திரம் என்பவற்றையே யாகும். இந்தச் சுதந்திரம் சாதாரணமானது அல்லது எளிமையானது என்று சொல்லவில்லை. ஆனால் நம்முடைய ஞானிகள் இந்தச் சுதந்திரங்களில் முடிவான திருப்தியைக் காணவில்லை. அவர்கள் அடுத்து என்ன, அடுத்து என்னவென்று கேட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். அவர்கள் இந்தச் சுதந்திரத்தை முடிவான சுதந்திரமாகக் கருதவில்லை. அவர்களைப் பொறுத்த மட்டில், ஆசையிலிருந்தும், செயல்களிலிருந்தும் பெறக்கூடிய சுதந்திரமே பெரிதாக மதிக்கப்பட்டு வந்தது.

சுதந்திரத்தை அடைகின்ற முயற்சியில் மனிதன் தன்னுடைய உறுதியைக் கட்டிக் காக்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால், தனையிலிருந்து உறுதிக்குப் பெறப்படுகின்ற இந்த வேகம் புறத்தே சிதறிப் போகாமலும் வீணாகாமலும் இருந்தாலொழிய, சுதந்திரத்தை அடைவது கஷ்டமாகி விடும். அரசியல் நிலைமையில் மட்டும் சுதந்திரத்தை விரும்புபவர்கள் கூட, அதனையும் ஒரு கட்டுத்திட்டத்திற்குள் அமைக்க வேண்டியிருக்கிறது. அரசியல் துறையில் மட்டும்

விடுதலையை விரும்புகின்றவர்கள் அந்த விடுதலையை வலுச்செய்து கொள்வதற்கேற்ற முறையில் தங்களுடைய எண்ணங்கள், செயல்கள் ஆகியவற்றைத் தேவையான அளவுக்குக் குறுக்கிக் கொள்ளவும், பல சமயங்களில் மனச்சான்றுக்கு விரோதமாகக் கூட, பெருக்கிக் கொள்ளவும் வேண்டிய நிலை ஏற்படக் காண்கிறோம். இங்கிலாந்தின் போர் வீரர்கள், உண்மையிலேயே சுதந்திரம் உடையவர்களா, அல்லது உயிருடன் வாழும் துப்பாக்கிகளா அவர்கள்? அந்நாட்டில் சுரங்கங்களிலும், தொழிற்சாலைகளிலும் பணி புரிகின்ற தொழிலாளர்கள், அவர்கள் பணி புரிகின்ற யந்திரங்களின் அடிமைகளாகவும், இங்கிலாந்து சக்கரவர்த்தியின் அதிகாரத்தைப் பரப்புவதற்குத் தங்கள் உயிரைத் தியாகம் செய்கின்ற வெறும் யந்திரங்களாகவும் இருக்கின்றார்கள். ஆங்கில மக்களில் எத்தனை சதவீதம் பேர் தங்களுடைய அரசியல் விடுதலையில் நேரிடையாகப் பங்கு கொள்கிறார்கள்? தனிப்பட்ட மனிதனுடைய உரிமைகளுக்காக அதிகப்படியான பிரசாரமும் முயற்சியும் ஐரோப்பாவில் நடைபெற்றன என்பது உண்மைதான். ஆனால் தனிப்பட்ட மனிதன் அடிமையாக இருக்கின்ற நிலை ஐரோப்பாவில் உள்ளது போல் உலகில் வேறு எங்குக் காணப்படுகிறது?

இக் கேள்விகளுக்கு விடை கூறப் புகுந்தால், நான் முன்னரே குறிப்பிட்ட ஒரு முரண் நிலைக்குக் கொண்டுபோய் விடுகிறது. ஒழுங்கு முறைக்கு உட்பட்ட கட்டுப்பாட்டின் மூலமே சுதந்திரத்தை அடைய முடியும். அதில் தனிப்பட்ட மனிதர்களுடைய விருப்பு வெறுப்புக்களைத் தியாகம் செய்ய வேண்டி நேரிடும். தன்னலக் கட்டுப்பாடு என்ற முதற்பொருளைத் தேவையான அளவுக்கு வைத்து வாணிகம் செய்தால்தான் சுதந்திரம் என்ற லாபத்தைப் பெற முடியும்.

'தனி நிலைக் கொள்கை' (individualism) கூட இந்தியாவின் தேட்டைகளில் ஒன்றாக இருந்து வந்தது. ஆனால் தனி நிலைக் கொள்கை என்று சொல்லும்பொழுது அதனுடைய குறுகிய பொருளில் கூறவில்லை. ஐரோப்பாவின் விடுதலைக் குறிக்கோள் யந்திரத் தனைகளின் மூலமே வெளிப்படுவதாயிற்று. ஆனால் இந்திய விடுதலைக் குறிக்கோள் அன்றாட வாழ்க்கையை நெறிப்படுத்துவதன் மூலம் வெளிப்படலாயிற்று. அடிப்படையில் இருக்கின்ற குறிக்கோளை விட்டு விட்டு, புறத்தே காணப்படுகின்ற வெளித் தோற்றத்தில் மட்டும், இன்று நாம் செய்வது போல, நம்முடைய கவனத்தைச் செலுத்தினால், உண்மையில் இந்தியாவின் தனிப்பட்ட மனித உரிமை

முற்றிலும் விலங்கிடப்பட்டதாகவே காணப்படும். மனித வாழ்க்கையின் வரலாற்றில் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பயனை விட வழியே வெற்றி பெற்றுள்ளதை நாம் காண முடியும். பேராசை போன்ற சிறு உணர்ச்சிகள், குறிக்கோளை விட்டு விட்டு, அதனுடைய ஒப்புநோக்கும் மதிப்பைச் சிந்திக்காமல், உலகாயத வழிகளாகிய வேறிடங்களுக்கு இழுத்துச் செல்கின்றன. பல சமயங்களில் மனச் சோர்வு காரணமாக, குறிக்கோளை விட்டு விட்டு, விதிமுறைகளையே, சடங்குகளையே—அந்த விதிமுறைகள் தம் உண்மையான உட்பொருளை இழந்துவிட்டால் கூட—அவற்றையே பெரிதாக மதித்துப் போற்றுகின்ற வழக்கம் ஏற்பட்டிருக்கிறது. இவ்வாறு விதிமுறைகட்கு மரியாதை செலுத்தும்பொழுது நாம் எடுத்துக் கொள்கின்ற முயற்சியைத் தவிர வேறு பயன் ஒன்றையும் அவை தருவதில்லை.

இதேதான் நம்முடைய நாட்டிலும் நிகழ்ந்தது. சமுதாயக் கட்டுப்பாடுகளாகிய தளைகள் எல்லாவற்றிற்கும் நாம் தலை வணங்குகிறோம். ஆனால் இவற்றின் மூலம் கிடைக்கவேண்டிய பயனைப் பற்றி நம்முடைய கவனம் செல்வதே யில்லை. குறிக்கோளை மறந்து விட்டோம்; எந்தக் குறிக்கோளுக்காக நம்முடைய முயற்சி நடைபெறுகின்றதோ, அந்தக் குறிக்கோள் பற்றிய நினைவும் போய் விட்டது. எஞ்சியிருப்பவை பயனற்ற குருட்டுத்தனமான பழக்க வழக்கங்கள் மட்டுமேயாகும். வெளி நாட்டிலிருந்து நம்மைக் காண்கின்ற ஒருவன் இந்தியச் சமுதாயப் பழக்கவழக்கங்கள் அர்த்தமற்ற சடங்குகளாக, மக்களுக்கு வெறும் தளையாக, அமைந்து கிடக்கின்றனவென்று கூறினால், அவன் மேல் கோபப் பட்டாலும், அவன் கூறுவதை மறுக்க முடியாமல் இருக்கின்றீர்கள்.

நம்முடைய வீழ்ச்சியைப் பற்றி ஒப்பாரி வைப்பது என்னுடைய நோக்கமன்று. இப்பொழுது நான் சொல்ல வந்தது என்ன வென்றால், பழங்கால இந்தியா, சமுதாய வாழ்க்கையின் தளைகளை ஏற்றுக் கொண்டதன் அடிப்படையான நோக்கம், அவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலம் சமுதாயத்தின் அப்பாற்பட்டுச் செல்வதற்கேயாகும். எப்படிக் குதிரைச் சவாரி செய்கின்றவன் கடிவாளத்தை இழுத்துப் பிடித்துத் தன்னுடைய அங்கவடிகளை அழுத்தி மிதித்து, அதிக வேகமாகப் போவதற்கு முயற்சி செய்கின்றானோ, அதேபோல முன்னேறிச் செல்வதற்குத் துணையாக இந்தப் பழக்க வழக்கங்களையும் ஒரு காலத்தில் நாம் ஏற்றுக் கொண்டோம். சமுதாயம் என்பது, மனிதன் விரும்புகின்ற முடிவான பயன் அன்று

என்பதை இந்தியர்கள் நன்கு அறிவார்கள். ஆனல் சமுதாயத்தி லுள்ள பல்வேறு உறுப்பினர்களும் சேர்ந்து செய்கின்ற பெரு முயற்சியே விடுதலைக்குச் சிறந்த வழியாகும் என்பதையும் அவர்கள் நன்கு அறிந்துவந்தார்கள். இதன் காரணமாக, இந்தியர்கள் ஏற் றுக்கொண்ட தளைகள், ஐரோப்பியர்கள் ஏற்றுக்கொண்ட தளைகளை விடக் கடினமானவையாகும். இந்தியர்கள் கொண்டிருந்த குறிக் கோள், ஐரோப்பியர்கள் கொண்டிருந்த குறிக்கோளைக் காட்டிலும் உயர்ந்ததாகும். இன்றைய நிலைமையில் அது எவ்வாறு இருக்கிற தென்றல், ஆழமாக இருந்த ஏரி நீர் வற்றிப்போனவுடன் அடித் தளம் மிகப் பள்ளமாகக் காட்சியளிப்பதையே ஒத்திருக்கிறது.

தளை - விடுதலை, வழி - பயன் என்ற முரண்பட்ட பொருள்களை யும் ஒற்றுமைப்படுத்தி, ஈசா உபநிஷதம், கீழ்க்கண்டவாறு பேசு கிறது :—

> "உலகையே பெரிதென மதித்து வணங்குகின்றவர்கள் இருளில் இருக்கின்றர்கள். பிரம்மத்தை மட்டும் பெரிதென மதித்து வணங்குகின்றவர்கள் இன்னும் பெரிய இருளில் இருக்கின்றர்கள். இரண்டையும் ஏற்றுக் கொள்கிறவன், ஒன்றை அறிந்த காரணத்தால், மரணத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, மற்றென்றையும் அறிகின்ற காரணத்தினல் மரணமில்லாப் பெருவாழ்வையும் எய்து கின்றன்."[3]

அதாவது எல்லையற்றதாகிய பரம்பொருளை அடைவதற்கு முன்னர், உலக வாழ்வின் முழுப் பயனையும் அடைய வேண்டு மென்பதையே இது குறிக்கிறது. ஆசை, உழைப்பு என்ற இரண்டையும் கடந்து செல்வதற்கு, உழைப்பு என்ற ஏரில் ஆசையைப் பூட்டிப் பயன்படுத்தவேண்டும். அப்போதுதான் முழு முதற் பொருளோடு ஒன்று கலக்கமுடியும். உலகத்தைத் துறந்து விடுவதால் மட்டும் மரணமில்லாப் பெருவாழ்வை அடைந்து விட முடியாது.

அதே உபநிஷதம் கீழ்க்கண்டவாறும் பேசுகிறது :—

தன் கடமை செய்தே, தரணிதனில் நூறுண்டும்,
இன்பமுறு, வாழ்வுபெற எண்ணுக நீ ;—மன்னும்
வழி இதுவே ; வேறே வழி இலை ; ஈது ஒன்றே
பழிஇல் பயன் தருவதாம்."[4]

பணி புரிகின்ற வாழ்க்கை ஒன்றுதான் மனிதனுடைய கடமையைச் செய்து முடிக்கின்ற வாழ்க்கையாகும். இந்த உலக வாழ்க்கையைச் செம்மையான முறையில் செய்து முடிக்கும்பொழுது அது இயல்பான ஒரு முடிவை அடைகின்றது; அங்ஙிலையில் பணி புரிதல் என்ற தளைகள் தாமே இற்று வீழ்கின்றன. வாழ்க்கை, வாழ்க்கையினுடைய முடிவு ஆகிய இரண்டையும் சாதாரணமான எளிய முறையில் நாம் காணவேண்டுமென்பதற்கு உறுதியாக ஈசா உபநிஷதம், இவ்வாறு பேசுகிறது :—

இவ்வுலகில் எப்பொருளும் ஈசன் உறை கோயில் எனும்
அவ் உண்மை தன்னை அறிந்து நிதம்—செவ்வே
துறவு மனம் கொண்டு இன்பம் துய்ப்போம்; உளத்தும்
பிறர் பொருளைத் தீண்டிடோம் பின்."[5]

இவ்வுலகத்திலுள்ள பொருள்கள் எல்லாம் இறைவனாலேயே சூழப்பட்டுள்ளன என்பதை உணரும்பொழுது உலக வாழ்க்கையின் விஷத்தன்மை முறிக்கப்படுகிறது. அதனுடைய அற்பத்தனம் நீங்கி விடுகிறது. இந்த உணர்ச்சியின் காரணமாக, உலக பந்தங்கள் அல்லது தளைகள் நம்மைப் பற்றிக் கொள்வதில்லை. எந்த நேரத்தில், நாம் அனுபவிக்கின்ற பொருள்கள் எல்லாம் கடவுள் அருளால் கிடைத்தவையென்று உணருகின்றோமோ, அந்த நேரத்தில் பொருள்களைப் பேராசையுடன் பற்றி வைத்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணமும் நம்மை விட்டு நீங்கி விடுகின்றது. பணி புரிதலும் உலகப் பொருள்களை அனுபவிப்பதும், பிரம்மத்தோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ள சிறப்புத்தான் இந்திய சமுதாய வாழ்க்கையின் ஆணி வேராக அமைந்துள்ளது. இந்த முறையில்தான் மனித ஆன்மாவை இந்திய நாடு விடுவிக்க முயன்றது.

ஐரோப்பாவில் மனித வாழ்க்கை இரண்டே பிரிவுகளாக அமைந்து கிடக்கக் காண்கின்றோம். அவை பணிக்குரிய பயிற்சி, பணி புரிதல் என்பனவாகும். அது ஒரு நேர் கோட்டை இன்னும் நீட்ட முயன்று, இறுதியாகக் களைத்துப் போய் பென்சிலைக் கீழே போட்டு விடுகின்றது போலாகும். இவ்வாறு ஒரு நேர்கோட்டை நீட்ட முயலுவதால் ஓர் ஓவியப் படத்தை வரைய முடியாது. ஏனென்றால் நீட்டும் செயலில் ஓவியம் வரையும் நோக்கமில்லை. எனவே, அது அர்த்தமற்ற செயலாக ஆகி விடுகிறது. பணி என்பது ஒரு வழியே தவிர, அதுவே பயனாக இருக்க முடியாது. ஏதோ ஒன்றைச் செய்து முடித்தல் அல்லது ஒரு லாபத்தைப்

பெறுதல் என்பதே நோக்கமாக இருக்க வேண்டும். அப்படியிருந் தும்கூட, பணியின் இயல்பான முடிவை, ஒரு குறிப்பிட்ட குறிக் கோளை ஐரோப்பியர்கள் எடுத்துக் கூறவில்லை. உலகாயதப் பொருள்களையோ அல்லது அறிவையோ சேகரிப்பதற்கு ஓர் எல்லையே இல்லை. இவை இரண்டையும் சேகரிப்பதையே, ஐரோப் பிய நாகரிகம், தன் முதற் கடமையாகக் கொண்டுள்ளது. மனித இன வளர்ச்சிக்கு ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனும் செய்யக் கூடிய உபகாரம், அவன் தன்னுடைய வாழ்க்கையை முழுத் தன்மை பெற்றதாக ஆக்கிக் கொள்வதேயாகும் என்ற உண் மையை ஐரோப்பிய நாகரிகம் மறந்துவிட்டது. எனவே அவர்கள் எதிர்பார்க்கின்ற பயன், பொருள்களின் நடுவே கிடைத்து விடு கிறது. அங்கே விளையாட்டு ஒன்றுமில்லை; வேட்டை மட்டுமே எஞ்சுகிறது.

ஆசைக்கோர் அளவில்லை யென்றும் அதனைத் திருப்திப்படுத்த, அது மேலும் வளர்கின்றது என்றும் நாமும் கூடக் கூறுகிறோம். அப்படியானால் செய்கின்ற பணியின் முடிவை என்று, எப்படிக் காண முடியும்? அந்த வினாவைப் பொறுத்த மட்டில், புராதன இந்தியா விடை கூறப் புகுந்து, இந்தப் புதுச் சட்டத்திற்கு ஒரு விலக்களிப்பு உண்டென்று கூறிற்று. ஒரு குறிப்பிட்ட இடத்தில், பணி முடிந்து பயன் விளைகிறது என்று கூறிற்று. ஆசை என்பது முடிவே இல்லாத ஒரு நீண்ட பாடல் என்று நினைப்போமேயானால், இவ்வுலகம் அர்த்தமற்ற கேலிக்கூத்தாக முடியும். ஒரு பாடலின் நடுவே இசையை நிறுத்தி விடுவது எவ்வளவு வருத்தத்தைத் தருமோ, அதேபோல அப் பாடலை முடிவு வரையில் கொண்டு செல்வது மகிழ்ச்சியைத் தருவதாகும்.

பணி முழு மூச்சாக நடைபெற்று வரும்பொழுது, இடையே விதி வந்து நிறுத்திவிட வேண்டுமென்று இந்தியா சொல்லவில்லை. உலகம் தோற்றுவிக்கப்பட்ட நாட்களிலிருந்து மேடு பள்ளங்களை யெல்லாம் தாண்டி, முடிவில்லாத இந்த உலகை யாத்திரை நடை பெற்றுக் கொண்டே இருக்கிறது. என்றாலும், ஒவ்வொரு தனி மனி தனும் இந்த உலகத்தோடு கொண்டிருக்கும் தொடர்பு ஒருவகை முடிவைப் பெறத்தான் செய்கிறது. தன் பணி முடிந்ததென்ற திருப்தி இல்லாமலேயே ஒவ்வொரு மனிதனும் இந்த உலகை விட்டு நீங்க வேண்டுமா? அப்படி நீங்க வேண்டி நேரிட்டால், அவன் உண்மையிலேயே துரதிருஷ்டசாலிதான்.

ஒரு முறையாக நோக்குமிடத்து, பல்வேறு தலைமுறைகளின் பிரதிநிதியாக, நான், என்னுடைய வாழ்க்கையில் அமைகின்றேன். மனித சமுதாயம் பல்வேறு தலைமுறைகளிலும் பெற்றுப் பெருக்கி வருகின்ற ஞான அனுபவங்களுக்கும், சக்திச் சேர்க்கைக்கும் என்னால் முடிந்த அளவு உதவுகின்றேன். அதே நேரத்தில், தனிப் பட்ட ஒரு மனிதன் என்ற முறையில், தொடக்கமும் முடிவும் கொண்ட ஓர் ஆன்மா என்ற நிலையில், அந்த எல்லையுடைய காலத் தில் ஒருவகையான குறிக்கோளை, முழுத்தன்மையை அடைய முயல்கின்றேன். முடிவிலாத இயக்கம் முழுத்தன்மையை அறிய முடி யாது. இயக்கமே அதன் இயல்பு ஆதலால் ஒரு முடிந்த தன் மையை அதில் காண முடியாது. அந்த முடிவிலாத இயக்கத்தில், ஒரு கண நேரத்திற்கு அதன் ஒரு பகுதியாக அமைந்து, பிறகு மாய்ந்து விடுவது பயனற்ற ஒரு போராட்டத்தை நடத்தியதாகவே முடியும். இவ்வுலகம் என்பது அர்த்தமற்ற கேலிக்கூத்தாய், யாதொரு காரணமும் இல்லாமல் தொழிற்படுகின்ற ஒரு விளையாட்டு இட மென்று கருதுகின்றவர்கள், பேசுகின்றவர்கள், இந்த பைத்தியக் கார உலகம் அர்த்தமற்ற பணி புரிவதற்குத் தாங்களும் உதவியாக இருக்கின்ற முறையில் எதனையும் செய்யக் கூடாது. எல்லாப் பொருள்களின் உள்ளேயும் முடிவிலாத ஒரு வளர்ச்சி அமைந்து கிடப்பதால், அங்கு ஒரு நிறைவும் இருக்க வேண்டும். அதுவே இயக்கத்தின் பொருளாகும். அப்படி அமைந்திருக்கின்ற பயனை, தனிப்பட்ட ஒரு மனிதனே யல்லாமல் வேறு யார்தான் உணர முடியும்? எல்லையுடைய பொருள்களில் ஏற்படுகின்ற இயக்கமும் அவனிடத்தில் உரிமை கொண்டாடுகின்றது. எல்லையில்லாத பொருளில் கிடைக்கின்ற மன நிறைவும் தனி மனிதனிடத்தில் உரிமை கொண்டாடுகின்றது. அந்த உரிமைக்கு நாம் செவி சாய்க் கும் பொழுதுதான் மரணம் என்பது திடீரென்று நம் முன்னர்த் தோன்றி இவ்வுலகத்திலிருந்து நம்மைப் பிரிக்கின்ற பொருளாகக் காட்சி யளிப்பதில்லை.

எனவே, புராதன இந்தியர்கள். மனிதனுடைய உலக வாழ்க்கையைப் பகுத்திருந்த முறையில், பணி அல்லது வேலை என்பது, அவ்வாழ்க்கையின் இடையே தோற்றுவதாகவும், விடுதலை என்பது அவ்வாழ்க்கையின் முடிவில் கிடைப்பதாகவும், அமைந் திருந்தன. ஒரு நாள் என்பது, எவ்வாறு காலை, மதியம், மாலை, இரவு என்று பிரிக்கப்பட்டுள்ளதோ, அதேபோல மனிதனுடைய வாழ்க் கையும் அவனுடைய தேவையைப் பொறுத்து, நான்கு பகுதி

களாகப் பிரிக்கப் பட்டிருந்தது. ஒரு நாள் என்பது ஒளி வளர்ச்சி அடைகின்ற காலை நேரமும், ஒளி தேய்ந்து செல்கின்ற மாலை நேரமும் கலந்து ஒன்றுதல் போல, மனிதனும் அவனுடைய உடல் சக்தி வளர்கின்ற நிலையையும் தேய்கின்ற நிலையையும் பெற்றிருந்தான். இதனை ஏற்றுக் கொண்ட பழைய இந்தியா, மனித வாழ்க்கை தோன்றியது முதல் முடிகின்ற வரை, அதில் ஒரு தொடர்ந்த பொருளைக் கண்டது.

கல்வி பயிலும் காலமாகிய பிரம்மசாரிய காலம் முதலாவதாகவும், உலகப் பணி புரிகின்ற காலமாகிய "கிருஹஸ்த காலம்" இரண்டாவதாகவும், தனைகள் தளர்ந்து விழ்வதற்காக ஒதுங்கி நிற்கின்ற "வானப்பிரஸ்த காலம்" மூன்றுவதாகவும், இறுதியாக மரணத்தின் மூலம் விடுதலையை எதிர்பார்த்துக் கிடக்கின்ற "ப்ரவ்ரஜ்ய காலம்" நான்காவதாகவும் அமைக்கப்பட்டிருந்தன.

இன்றைய நிலைமையில், வாழ்க்கையும் மரணமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையென்று கருதத் தொடங்கி விட்டோம். மரணத்தை இயல்பான முடிவு என்று கருதாமல் குறுக்கே புகுகின்ற பகையாகக் கருதி, அந்த முரண்பாட்டை வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் காணத் தொடங்கி விட்டோம். இளமை கழிகின்ற காலம் வரும்பொழுது, பெரு முயற்சி செய்தாவது அந்த இளமையைப் பிடித்து வைத்துக்கொள்ள முயல்கின்றோம். ஆசையின் கொடுமை தணிகின்ற நிலைமை ஏற்பட்டவுடன், புதிய புதிய வழக்கங்கள் மூலம் அவ்வாசையை மறுபடியும் கிளறிவிட முயல்கின்றோம். நம்முடைய பொறிகள் தளர்ச்சி யடையும்பொழுது மேலும் மேலும் அவற்றைத் தூண்டிப் பழைய முறையில் பணி புரிய ஏவுகிறோம். நம்முடைய பிடி தளர்ந்துவிட்ட நேரத்தில் கூட, நாம் பற்றியிருக்கின்ற பொருள்களை விட்டுவிடத் தயாராக இல்லை. வாழ்க்கையில் காலை நேரம், உச்சி நேரம் என்ற இரண்டையும் வைத்துக் கொண்டு ஏனைய பகுதிகளைத் துறந்துவிட சித்தமாக இருக்கிறோம். இறுதியாக, வாழ்க்கையின் இரவு நேரம் நம்மையும் மீறிப் புகும் பொழுது அதனை எதிர்த்து, முரண்டு பிடித்துப் போராடித் தளர்ச்சி யடைகிறோம். அத்தகைய தவிர்க்க முடியாத முடிவை இயல்பானதென்று ஏற்றுக் கொள்வதில்லை. விட்டுவிட வேண்டியதைப் பெருந்தன்மையோடு விட்டுவிட நாம் தயாராக இருப்பதில்லை. எனவே, அது நம்மிடத்திலிருந்து பலாத்காரமாகப் பறித்துக் கொண்டு போகப் படுகின்ற வரையில் நாம் காத்துக் கொண்டிருக்கிறோம். தவிர்க்க முடியாத அந்த முடிவை, விரும்பத் தகுந்த ஒரு விருத்தாளியை வர

வேற்பது போல வரவேற்க வேண்டிய மனப்பான்மையை நாம் இழந்து விட்ட காரணத்தால், அது பகைவன் போல நம்முள்ளே நுழைகின்றது.

பழத்தின் காம்பை விட்டுப் பழம் நழுவுகின்றது. அந் நிலையில் பழத்தின் சதைப் பகுதி மென்மைத் தன்மையடைந்தாலும் அடுத்த பிறப்புக்கு வேண்டிய சக்தியைத் தன்னுள்ளே கொண்ட விதை, வலிமை பெற்று விளங்குகின்றது. வயது முதிர்ச்சி காரணமாக நம் புற வாழ்க்கையில் ஏற்படுகின்ற நஷ்டங்களுக்கு எதிரே அக வாழ்க்கையில் பல லாபங்கள் கிடைக்கின்றன. ஆனல், மனிதனுடைய அக வாழ்க்கையைப் பொறுத்தமட்டில், அவனுடைய உறுதி (Will) ஒரு முக்கியமான பங்கைப் பெறுகிறது. அக வாழ்க்கையில் பெற்ற லாபங்களை அவன் அனுபவிக்க வேண்டுமேயானல், அது அவன் செய்யும் கட்டுப்பாடுகளோடு கூடிய முயற்சிகளைப் பொறுத்திருக்கின்றது. இதனலேயே கட்டுப்பாடு இல்லாத மனிதனுடைய வாழ்க்கையில் அவனுடைய உடம்பு தேய்ந்து கால்கள் தள்ளாடி, வாழ்க்கையில் பிடிமானமற்ற நிலையிலுங்கூட, அவன் பெருந்தன்மையோடு வாழ்க்கையை விட மறுப்பதையும், இறந்த பிறகுங்கூட இந்த உலகப் பொருள்கள் மேல் அவனுடைய அதிகாரத்தைச் செலுத்த விரும்புவதையும் காண்கிறோம். இப்படிப்பட்ட ஒரு பிடிவாதத்தை மிகப் போற்றத் தகுந்த ஒரு பண்பாடாக நம்முடைய நாட்டில் கூடக் கருதத் தொடங்கி விட்டார்கள். ஆனல் போற்றத் தகுந்த சிறப்பு இதில் என்ன இருக்கிறதென்று தெரியவில்லை.

தியாகத்தை நாம் செய்தேயாக வேண்டும்; அந்தத் தியாகத்தின் மூலம் ஒரு லாபத்தைப் பெற வேண்டுமென்பதே அக உலகத்தின் அடிப்படையான உண்மையாகும். பழத்தைத் தோற்றுவிப்பதற்காக, பூக்கள் தம் இதழ்களை உதிர்ப்பதும், பழம் மற்றொரு மரத்தைத் தோற்றுவிப்பதற்காக, மரத்திலிருந்து கழன்று விழுவதும் நியாயமாகும். உடலும், மனமும் மேலும் வளர்ச்சியடைவதற்காகவே, குழந்தை, பாதுகாவலான தாயின் கருப்பையை விட்டு வெளிப்படுகின்றது. அடுத்தபடியாக மிகக் குறுகியதும், தன்னலமே அடிப்படையாகக் கொண்டதுமான உலகத்தை விட்டு விட்டு, கூட்டத்தோடு கலந்து பல்வகைத் தொடர்பு கொண்ட ஒரு முழு வாழ்க்கையில் புகுகிறன். இறுதியாக உடல் தளர்ந்து, நிறைந்த அனுபவத்தைப் பெற்று, இந்தக் குறுகிய வாழ்க்கையிலிருந்து விடுபட்டு ஒரு பெரு வாழ்க்கைக்கு அவன்

செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது. இங்நிலையில் ஒரு புறத்தில் அவன் பெற்ற பெரிய அனுபவத்தை, அந்த அனைத்துலக வாழ்க்கைக்குத் தந்து, மறுபுறத்தில் மரணமிலாப் பெரு வாழ்வில் பங்கு கொள்ளவும் தேவையேற்படுகிறது. எனவே, இந்த உடம்பு, சக்தி இழந்து வாழ்க்கைப் பயணத்தை முடிக்கின்ற நிலையில் உடம்பை விட்டுப் போவதற்கு ஒரு சிறிதும் வருத்தப்படாமல் எல்லையற்ற பரம் பொருளில் மறு பிறப்பு எடுப்பதற்கு ஆன்மாவானது எதிர்பார்த்து விரும்பிச் செல்கிறது.

தனிப்பட்ட உடம்பிலிருந்து, சமுதாயத்திற்கு, சமுதாயத்திலிருந்து, உலகத்திற்கு, உலகத்திலிருந்து பூரணத்துவத்துக்கு என்ற இந்த முறையில்தான் சாதாரண ஆன்ம யாத்திரை அமைந்து கிடக்கிறது.

ஆன்மாவின் இந்த யாத்திரை முறையை நன்கு மனத்தில் பதித்துக் கொண்ட நம்முடைய முனிவர்கள், வாழ்க்கையில் முதல் நிலையாகிய கல்வி கற்கும் நிலையில், வெறும் ஏட்டுக் கல்வியை மட்டும் கற்க வேண்டும் என்று கூறவில்லை. அதற்குப் பதிலாக, பிரம்மச்சரியமும், கட்டுப்பாடான வாழ்க்கையும் தேவை என்று கூறினர். இவற்றின் மூலம் வலுவடைந்த பண்பாட்டிற்கு, அனுபவம், துறவு என்ற இரண்டும் எளிதாகக் கிடைத்தன. இவ்வுலக வாழ்க்கை பரம்பொருளிடத்தில் முற்றுப் பெறும் ஒரு யாத்திரையே யாகும். ஆகவே, வாழ்க்கை என்பது, அதன் பல்வேறு நிலைகளிலும், எளிமை, மரியாதை, விழிப்பு ஆகியவற்றுடன் கூடிய ஆன்மப் பயிற்சியாகவே அமைய வேண்டும். மாணுக்கன் என்பவன் மாணவப் பருவத் தொடக்க முதலே இந்த முடிவைக் கவனத்தில் பதித்துக் கொள்ள வேண்டும்.

பௌதிக வாழ்க்கையில், அகத்திலும் புறத்திலும் உள்ள பல்வேறு சக்திகளின் மோதல்களைச் சரிக்கட்டுவதே பழக்கவசம் ஆகி விடுகின்றது. ஆனால் மனிதனைப் பொறுத்தமட்டில், விழிப்புடன் கூடிய சோதனைகளை ஓயாமல் நடத்திக் கொண்டு வருவதால் அவனுடைய மனமே அமைதியைக் குலைக்கும் கருவியாக அமைந்து விடுகிறது. அனைத்து உலக சட்டத்துடன் அம் மனத்தினுடைய செயல்களை ஒத்திடுவதற்குள் பெருந் தொல்லை உண்டாகின்றது. உதாரணமாக, சாப்பிடுகின்ற நேரத்தில் வயிற்றுக்குத் தேவையான அளவு உணவை உண்டு விடுகிறோம்; ஆனால் மனம் அந்த அளவில் திருப்தி அடைவதில்லை. வயிற்றின் தேவை தீர்ந்து

விட்ட பிறகும்கூட மனம் திருப்தி அடையாத காரணத்தால் நாவையும், வயிற்றையும் இன்னும் உணவை ஏற்றுக் கொள்ளு மாறு மனம் தூண்டுகிறது. பல காலமாக வந்துள்ள ஜீரண அளவைக் கெடுத்து மேலும் மேலும் தேவையைப் பெருக்கிக் கொண்டு, தேவை இல்லாத பொருள்களையும் சம்பாதிக்கும் முயற்சியில் ஈடுபடுத்துகிறது.

உண்மையான தேவை பூர்த்தியானவுடன் தனது ஆசையைக் கட்டுப்படுத்திக் கொள்ளாமல் மனம் மேலும் ஆசைப்படத் தொடங்கிவிட்டால், எந்த அளவில், போதும் என்று திருப்தியடையும் என்று அறுதியிட்டுக் கூற முடியாது. பொருள்களை மேலும் மேலும் சேகரிக்கத் தொடங்கினல், ஆசை அடங்குவதற்குப் பதிலாக, நெருப்பை எண்ணெயை ஊற்றி அவிக்க முற்பட்டதுபோலக் கொழுந்துவிட்டு எரியத் தொடங்குகிறது. ஆதலால்தான் தொடக்கத்திலிருந்தே இயல்பான தேவைக்கு மேல் ஆசைப்படாமல் இருக்கும்படி மனத்தைப் பழக்குவது இன்றியமையாததாகிறது. மற்ருெரு வகையாகக் கூறுமிடத்து உலக இயற்கையோடு மனத்தை ஒரு நிலைப்படுத்திப் பழக வேண்டும். அதாவது ஒவ்வோர் உரிமையும் தன் பல்வேறு வடிவங்களைக் காட்டும்பொழுதும் மனம் அவற்றில் ஈடுபடாமல், கடவுள், சத்தியம் என்பவற்றுடன் முரணுமல் இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

இத்தகைய கல்வியைப் பயிலும் காலம் முடிந்த பிறகுதான் உலக வாழ்க்கை தொடங்குகிறது. நமது சட்டம் வகுத்த மனு கீழ்க்கண்ட முறையில் கூறுகிருர் :—

"அறிவுடன் கூடி உலக வாழ்க்கையில் ஈடுபடும்பொழுது, நம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடிவதுபோல், உலகத்தோடு தொடர்பில்லாத வாழ்க்கை நடத்தும்பொழுது கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது."[6]

இவ்வாறு கூறுவதனுல் வாழ்க்கையை முழுவதும வாழ்ந்தாலொழிய, மெய்யறிவைப் பூரணமாகப் பெற முடியாது என்பது விளங்கும். அறிவுடன் கலந்து செய்யப்படாத கட்டுப்பாடு, உண்மையான கட்டுப்பாடாகாது. அறியாமையின் பயனுக விளையும் வெறும் பழக்கவழக்கமாகவே அது முடியும்.

ஆசை, தன்னைத்தான் அடக்கிக் கொள்ளப் பழகிக்கொள்ளும் பொழுதுதான் குடும்பம் என்பது சமுதாயத்தின் நலனை நாடும் இடமாக அமைகின்றது. இறுதி விடுதலைக்குத் தடையாக அமை

யாமல், அக் குடும்பம் அதற்கும் உதவும் உறுப்பாக அமைகின்றது. தன்னலத்தை அறவே நீக்கி, பற்றற்றுப் பணிபுரியும்பொழுது, அப் பணி ஆன்மாவின் விடுதலையைத் தடை செய்வதில்லை.

வாழ்க்கையின் இரண்டாம் நிலையை இவ்வாறு செலவிட்டால் உடம்பின் சக்தியும் வன்மையும் குறையும் காலத்தில், அஞ்சாமல், இந்த உடம்பு இயல்பாக முடிய வேண்டிய கட்டத்தை அடைந்து விட்டது என்று கருத முடியும். தனது உத்தியோகத்தை விட்டு விட ஒரு சிறிதும் மனமில்லாதவனுக்கு எதிரே நீட்டப்பட்ட, வேலையைப் போக்கும் அறிவிப்பாக இதனைக் கருதாமல், உயர்ந்த உத்தியோகத்திற்கு மாற்றும் நியமன ஆணையாக இதனைக் கருத வேண்டும்.

வலுவான உடற்கட்டும் அதன் பயனாகிய தெளிந்த பொறியுணர்வும், தீவிரமான ஆசைகளும் இப்பொழுது பின்தங்கி விட வேண்டும். கதிரை அறுவடை செய்து தானியத்தைக் களஞ்சியத்தில் இட்டாகி விட்டது; மாலைக் காலம் வந்து விட்டது; செய்கின்ற பணியை நிறுத்திவிட்டு வீட்டிற்குச் சென்று ஓய்வெடுக்க வேண்டும். இன்பத்தைத் தரும் அந்த வீட்டை அடைவதற்காக வாழ்நாள் முழுவதும் நாம் உழைக்கவில்லையா? "எந்த இன்பத்திலிருந்து நாம் வந்தோமோ அந்த இன்பத்திற்கே மீண்டு செல்லுவோம்"? அவ்வாறு இல்லாவிட்டால் வேறு எதன் பொருட்டு இவ்வாறு உழைத்தோம்?

தாயின் கருப்பையை விட்டு வெளியே வந்தும்கூட, தாயின் அரவணைப்பிலேயே குழந்தை சில காலம் இருக்கவேண்டி இருக்கிறது. விடுதலை பெற்றும் இப் புதிய இடத்தில் வாழ்வதற்குரிய பழக்கத்தைப் பெறுகின்ற வரையில், தாயின் அணைப்புத் தேவைப்படுகின்றது. மனித வாழ்வின் மூன்றாவது கட்டத்தில் இதே நிலை தான் ஏற்படுகிறது. இக் கட்டத்தில் உலகத்திலிருந்து பிரிந்து வாழ்ந்தாலும், தொடர்பை விடாமல் இருக்கிறான். பழுத்து மரத்திலிருந்து விழுந்துவிட்ட பழத்தின் விதை, மண்ணில் புதைந்து புதிய மரமாக ஆவதற்கு முன் அப் பழம் உணவாக ஆவதுபோல, அவன் இந்த உலகத்திற்குத் தனது பழுத்த அனுபவத்தைத் தருகிறான். அவனுடைய அனுபவ ஞானம் அனைவருக்கும் பயன்படும் மழையைப்போல் பலருக்கும் பயன்படுகிறது. ஏனென்றால், அந்த அனுபவம் பற்றும் தன்னலமும் அற்ற மனநிலையுடன் வழங்கப்படுகிறது.

இத்தகைய தொடர்புகூட அற்றுவிடும் நாள் ஒன்றும் வருகிறது. அன்று இந்த உலகப் பணியை முடித்துவிட்ட ஜீவ ஆன்மா பரமாத்மாவைச் சந்திக்கத் தயாராகி விடுகிறது.

ஒவ்வொரு நிலையிலும் மரணத்துடன் போராடி இறுதியில் மரணம் வெற்றி பெற்றுவிடாத முறையில் வாழ வேண்டுமானால், இந்த வழியில்தான் உண்மையான வாழ்வு வாழ வேண்டும்.

புராதன இந்தியா கண்டறிந்ததும், இந்த நான்கு நிலைகளில் வாழப்படுவதுமான வாழ்க்கைதான், அகில அண்ட நியதியுடன் பொருத்தமுடையதாய், அழிவுப் பாதைக்குக் கொண்டுசெல்லும் பேராசைக்கு இடம் தராததாய், பரமாத்மாவிடம் இறுதியில் கொண்டு செலுத்துவதாய் அமைந்திருக்கிறது.

நாட்டுப்பற்று, வள்ளல் தன்மை என்பன போன்ற பெரிய பெயர்களுடன் கூடிய வேறு எந்த வழிகளாக இருப்பினும் அந்த வழிகள், இறுதி முடிவுக்கு நம்மை அழைத்துச் செல்லமாட்டா. அதற்குப் பதிலாக நம்முடைய பல்வேறு பணிகளினிடையே திடீரென்று நட்டாற்றில் விட்டுவிடும். "அடுத்து என்ன? அடுத்து என்ன?" என்ற வினாதான் நம் காதுகளில் ரீங்காரம் செய்யும்.

இந்நிலையில் ஓர் ஐயம் தோன்றுதல் இயல்பே. இந்த வழியில் ஒரு நாட்டு மக்கள் அனைவரையும் சீராக்க முடியுமா என்பதே அந்த ஐயம். விளக்குத் திரியின் நுனி மட்டுமே எரிந்தாற்கூட விளக்கு முழுவதும் எரிவதாகவே கூறுகிறோம் என்பதுதான் அந்த ஐயத்துக்குரிய விடையாகும். வாழ்க்கையின் மிகச் சிறந்த குறிக்கோள்கள் சமுதாயத்தின் மிகச் சிறந்த ஒரு சிலரிடமே ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றன. எந்த நாட்டிலும், ஒரு சிலராவது குறிக்கோளை அடைவதில் வெற்றி பெற்றால், அந்த நாட்டு மக்கள் முழுவதும் இலாபமடைந்ததாகவே கருதவேண்டும். இந்தியாவில் உள்ள தலைவர்கள் பேருண்மை, பெருநலம் என்பவற்றை மிக உயர்வாகக் கொண்டு, அவர்கள் வாழ்க்கையை அவற்றிற்கேற்றபடி மாற்றியமைத்துக் கொண்டு நடக்கும் நாள் வருமேயானால், அன்றுதான் அனைவருடைய முயற்சிக்கும், அவர்கள் நல்வழி காட்டிச் சக்தியையும் அளிக்கமுடியும்.

மிகப் பழைய இந்தியாவில் பெரிய அறிஞர்கள் பலர், இத்தகைய கட்டுப்பாட்டுடன் கூடிய வாழ்க்கையை நடத்திப் பரம்பொருளுடன் தொடர்புகொண்டு வாழ்ந்த காலம் உண்டு. அவர்களுடைய ஆன்மீக சக்தி, சமயத் துறைகளில் மட்டும் செல்லாமல் நாட்

டாட்சி, போர்க்கலை, வாணிகம், இலக்கியம், கலை ஆகியவற்றிலும் சென்றது. மைத்திரேயி தேவி மட்டுமல்லாமல், நாடு முழுவதும் அவளுடன் சேர்ந்துகொண்டு, "மரணமிலாப் பெரு வாழ்வல்லாத மற்றதை வைத்துக்கொண்டு நான் என்ன செய்வேன்?"[8] என்றே ஓலமிட்டது.

நம்முடைய நாட்டில் எதிர்த்துப் போராடும் சக்தி முற்றிலும் அழிந்துவிட்டது என்றால், வெற்றி கொள்ளுகின்ற வெளிநாட்டாரிடம் முழுவதும் சரணடைகின்ற ஒரே வழிதான் நமக்கு எஞ்சி இருக்கிறது. இறந்தவற்றைப் பிழைக்க வைக்கும் பைத்தியக்கார முயற்சியைவிட இவ் வழி மேலானது.

இதனைத்தான் நாம் ஒத்துக்கொள்ள முடியாது. வெளிப் பார்வைக்கு நாம் எவ்வளவு தூரம் மட்டமாகச் சென்றுவிட்டதாகக் காணப்பட்டாலும்கூட, நம்முள் ஒரு பகுதி அழியாமல் உயிருடன் இன்னும் இருந்து வருகிறது. பெறவேண்டிய முடிவான பேறு பரம்பொருளே என்பதை, அழியாமல் இருக்கும் அப்பகுதி, அறிந்துள்ளது. இன்றுகூட ஒரு பெரியவர் மிக உயர்ந்த கொள்கை ஒன்றை எடுத்துக் கூறும்பொழுது, நம்முடைய ஆன்மாவும்கூட, உலக பந்த பாசங்களைக் கடந்து அதற்குச் செவி சாய்க்கிறது. உலகாயதப் பொருளுக்கு அடிமையாக நாம் போட்டி போட்டுக்கொண்டு முன்னேறும் பொழுதுகூட, நம்முடைய அந்தராத்மா முற்றிலும் மறைந்து போவதில்லை.

இந்நாட்களில், விசேஷ காலங்களில் நம்முடைய நாட்டின் பழைய வாத்தியங்களுடன்கூட வெளிநாட்டு பாண்டு வாத்தியங்களையும் சிலர் பயன்படுத்துகிறார்கள். இதன்மூலம் பெரிய ஒலிக் குழப்பத்தையே விளைவிக்கிறார்கள். என்றாலும், இத்தனை ஒலிக் குழப்பத்தின் ஊடேயும் நாம் விரும்புகிற இந்திய நாட்டு இசையின் சுரங்கள் நம் காதுகளில் வந்து பாய்கின்றன. வீட்டின் முகப்பில் வீட்டுக்காரரின் செல்வச் செருக்கையும், நாகரிகச் சிறப்பையும் உலகுக்கு அறிவுறுத்துவதுபோல் வெளிநாட்டு பாண்டு வாத்தியம் முழங்குகிறது. ஆனால் வீட்டின் உட்புறத்தில் நம் மனம் ஈடுபடும் இடத்தில் தெய்வீகமான சங்கொலி எழும்புவதை அந்தப் பாண்டு வாத்தியம் மறைப்பதில்லை. ஐரோப்பிய நாட்டின் நாட்டாட்சி முறை, சமுதாயப் பழக்க வழக்கங்கள், வாணிக முறை என்பவற்றின் பெருமைகளை எவ்வளவுதான் தொண்டை கிழியக் கத்தினாலும் நம்முடைய தேவைக்கு அவை பயன்படா. நாம் கொண்டுள்ள மிக

உயர்ந்த குறிக்கோளை அவை பாதிக்கின்றன; நம் ஆன்மா அவற்றை எதிர்த்துக் குரல் எழுப்புகின்றது.

பட்டம், பதவி இவற்றை அடைவதற்கும், நம்முடைய மதிப்பை உலகத்தார் எதிரே மிகைப்படுத்திக் காட்டுவதற்கும், ஒருவரை ஒருவர் காட்டுமிராண்டித்தனமாகத் தள்ளிக்கொண்டு முன்னேறும் சந்தைக் கூட்டத்தைப்போல் இன்றுள்ளோம் எனினும், நாம் எப்பொழுதுமே இவ்வாறு இருந்ததில்லை. பிறரிடம் காணப்படும் பெருந்தன்மை, கௌரவம் ஆகியவற்றை விட்டு விட்டுக் கேவலம் 'காப்பி'யடிப்பதும் ஏமாற்றுதலுமட்டுமே கற்றுக் கொண்டுள்ளோம். இந்தப் பொய்யான வாழ்க்கையை மேற்கொள்வதன் முன்னர் நம்மிடையே ஓர் ஆழமான கௌரவம் இருந்து வந்தது. எளிய வாழ்க்கை காரணமாக அந்தக் கௌரவம் பாதிக்கப்படவில்லை. உலக வாழ்வில் ஏற்படும் சோதனைகள், இழிவுகள் ஆகியவற்றைத் தாங்கிக் கொள்ளும் ஓர் அங்கியாக அது அமைந்திருந்திருந்தது. அந்த அங்கி போய்விட்டபடியால் பொய்யான ஆடம்பரத்தின் உள்ளே சென்று நம்மை மறைத்துக்கொள்ள முயல்கிறோம். புறத்தே தோன்றும் பகட்டு வாழ்க்கை என்ற துணியின் மூலமே, புற கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டியுள்ளது. இந்த டம்பத்துக்குரிய சாமான்களை வெளிநாட்டுக் கடைகளில்தான் தேடவேண்டி இருக்கிறது; என்றாலும் அவற்றை வேண்டுமான அளவு தேடிக்கொள்ளவும் முடியவில்லை. இந்த வேட்டையையே உண்மையான இன்பம் எனக் கருதத் தொடங்கிவிட்டோம். ஆதலால், இதுவரை அரைகுறை அடிமைகளாக இருந்த நாம், அந்நியர்களின் முழு அடிமைகளாக இன்று ஆகிவிட்டோம்.

இவ்வாறு இருந்தும்கூட நம்முடைய அக மனம் வரையில் இது அரித்துக் கொண்டு போய்விடவில்லை. அது உள்ளே புக முடியாமையினால் புறத்தே அனைவருக்கும் தெரியும்படி துருத்திக்கொண்டு நிற்கின்றது. இந்தப் புதிய பொருள்களைப் பயன்படுத்த முடியாமையின், புதிதாக நீச்சல் கற்றுக் கொள்பவன் கையையும் காலையும் அடித்துக் கொள்வதுபோல, இப்புதிய பொருள்களைப் பிரமாதப் படுத்துகிறோம்.

இந்த நிலையிலுங்கூடத் தகுதி வாய்ந்த பெரியவன் ஒருவன், நம் எதிரே வந்து நின்று, "இந்தப் பைத்தியக்காரப் போட்டி, இந்த அர்த்தமற்ற செல்வம், இந்தக் காரணமற்ற எக்களிப்பு என்பவை நமக்கு ஏற்றவை யல்ல; ஒவ்வொரு செயலுக்கும் ஓர் இயல்பான

முடிவு உண்டு, அந்த முடிவு சிறப்பாக இருப்பதில்தான் நம்முடைய குறிக்கோள் பூர்த்தியாகின்றது; அந்தப் பூர்த்தியான பூர்ணத்தைத் தவிர மற்றவை அனைத்தும் வெறும் ஆடம்பரம்'' என்று கூறுவானே யானால், அப்பொழுது இந்தச் சந்தை இரைச்சலைத் தாண்டிக்கூட அந்த உபதேசம் நம் காதுகளில் விழாமற் போகாது. “உண்மை! உண்மை!! இதைவிட வேறு உண்மை இல்லை!'' என்று நம் மனம் கூவும். அப்பொழுது பிறர் கழுத்தை அறுத்துப் போட்டியிட்டுச் சம்பாதிக்கும் இலாபம், பிறரைப் பலியிட்டுக் காட்டும் தேசப்பற்று என்று பள்ளிப் பாடங்களில் கற்றவையும், காலாட்படை, கப்பற்படை இவற்றின் பெருமையும் நம் கவனத்தைக் கவராமல் ஒழிந்து விடும்.

உலகத்தின் ஒரு குறிப்பிட்ட பாகத்தில் வாழக்கூடிய மக்களுக்கு மட்டும் நன்மை பயப்பது என்று சொல்லக்கூடிய எதுவும் மனிதனுடைய உயர்ந்த வாழ்க்கையில் இருக்க முடியும் என்று நான் ஒத்துக் கொள்ள முடியாது. நாம் இளைத்தவர்களாக இருத்தலின் அடக்கத்தில் சரண் புகவேண்டும் என்பதும் உண்மையன்று. போர்வையால்தான் மூடி மறைக்க வேண்டும் எனபதும் உண்மையன்று. உலகப் பெரியார்களால் உபதேசிக்கப்பட்ட குறிக்கோள்களை ஏற்றுக் கொள்வதற்கு நிலையான மனத் திடம் வேண்டும். அன்றியும், நாம் பள்ளிப் பாடங்களில் கற்ற போட்டியால் விளையும் இலாபத்தைப் பெறவும், பிறரை வருத்திப் பயனடையும் தேசப்பற்றைப் பெறவும் தேவைப்படுகின்ற பயிற்சியையும், தியாக உணர்ச்சியையும் விட, இதற்கு அதிகம் தேவைப்படும்.

இவ்வுலக வாழ்க்கையில் ஈடுபடும் தியாகம், தன்னடக்கம் ஆகியவை மூலம் ஆன்மா முழு வளர்ச்சியை அடையும் முறையில் இளமைக் காலத்திலேயே வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். இவ்வுலக வாழ்க்கை முடிந்தவுடன் முடிவிலா ஒளியைக் காண வேண்டும். அதுவே முழுப் பயனை அடையும் வழியாகும்.

இதுவே நம்முடைய நம்பிக்கை எனில், இந்தக் குறிக்கோளை அடைய, அனைவரும் தளராது முயன்று உழைக்க வேண்டும் என்பதையும் கவனத்திற்குக் கொணர வேண்டும். அங்கிலையில் தனி மனிதனின் செல்வச் செருக்கு, தேச மக்களின் வலிமை என்பவை எல்லாம் இரண்டாம் இடத்தை அடைந்து விடும். மனித ஆன்மா, தன்னைத்தான் விடுவித்துக் கொண்டு வெற்றி முழக்கம் செய்யும். சரிதங் கண்ட அவனுடைய கடமையை மனிதன் முடித்து நிற்பான்.

இவ்வாறு இல்லாமல், ஒரு மந்திர சக்தியினுல் சிறந்த முன்னேற்றத்தையும் குறையாத இலாபத்தையும் பெற்று, ஒரு விஞடியில் கோடிக் கணக்கானவர்களைக் கொன்று குவிக்கக் கூடிய கருவியைக் கண்டு பிடித்து, இந்த மனித உடம்பை ஆயிரக் கணக்கான ஆண்டுகள் அழியாமல் காப்பாற்றும் காயகல்பத்தைப் பெற்றிருந்தாற்கூட, "அடுத்து என்ன? அடுத்து என்ன?" என்ற விஞத் தோன்றியே தீரும்.

—1906.

பனியால் மூடப்பட்ட மலை, தோற்றுவிட்டது போலக் காட்சியளிப்பினும்

பனியின் எதிரே மலை அசைந்து கொடுப்பதில்லை.

—ரவீந்திரநாத் தாகூர்.

## 5. தலைமை உரை

தேசீய மாநாட்டிற்குத் தலைமை வகிக்கும் பெரிய கௌரவத்தை எனக்கு அளித்திருக்கிறீர்கள். ஆனால் அதற்கு நான் தகுதி யற்றவன் என்பதைச் சொல்லிக் கொள்ளத் தேவையில்லை. சிலருக்கு இத்தகைய கௌரவங்கள் எளிதாக அமைகின்றன. ஒரு சிலருக்கு இது பெரும் பாரமாக அமைந்து விடுகிறது. தகுதி யற்ற ஒருவரை மிக உயர்ந்த ஸ்தானத்திற்குத் தள்ளுதல் அவரை அவமரியாதை செய்வதற்கு மற்றொரு வழியாகும்.

வேறு காலமாக இருந்திருப்பின், இந்த உத்தியோகப் பொறுப்புக்களை ஒதுக்கிவிட முயன்றிருப்பேன். ஆனால் நிலத்தில் இருந்து பாய வருகின்ற புலிக்கும், நீரில் இருந்து கவ்வ முனையும் முதலைக்குமிடையே நாம் வாழ்ந்து வருகின்றோம். உள்நாட்டுக் குழப்பம் ஒரு புறமும், வெளிநாட்டு ஆபத்து ஒரு புறமும் நம்மை எதிர்நோக்கி நிற்கின்றன. மரணத்தின் தெய்வமாகிய யமனைப் போல ஆட்சியாளர்கள் ஒருபுறம் அச்சுறுத்துகின்றார்கள். நம்மில் ஒருவருக்கொருவர் செய்து கொள்ளும் காரியங்களை மிகவும் பொறுமையோடு செய்து கொள்ள வேண்டியிருக்கிறது. இன்றைய நிலைமையில் தலைமைப் பொறுப்பு என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று அன்று என்பதை நான் நிச்சயமாக அறிவேன். ஒரு வேளை, கௌரவமான பதவிகூட அல்லவோ என்றும் நினைக்கிறேன். பிறர் காட்டும் அவமரியாதை, இழிவு படுத்தும் இயல்பு ஆகியவை நம்மைச் சுற்றி வட்டமிடுகின்றன. இத்தகைய ஒரு சூழ்நிலையில் என்னுடைய எளிமைத் தன்மையை எடுத்துக்காட்டி உங்கள் வரவேற்பை மறுக்க விரும்பவில்லை.

தகுதியற்றவர்களைக்கூடத் தகுதியுடையவர்களாக மாற்றிவிடும் சில சந்தர்ப்பங்கள் உண்டு. இதுவரையில் நம்முடைய அரசியல் வாழ்க்கையில் ஓர் இடத்தைத் தேடிக்கொள்ள நான் விரும்பியதே இல்லை. இது என்னிடத்திலுள்ள சக்திக் குறைவையும், என் இயல்பிலேயே அமைந்து கிடக்கும் ஒரு குறைவையும் எடுத்துக் காட்டுவதாகும். இக் குறைவு காரணமாக, பலர் கூடும் கூட்டங்களை இதுவரை நான் ஒதுக்கி வந்துள்ளேன். அதனால்தான் போலும் இந்த இடத்திற்கு என்னைத் தேர்ந்தெடுத்து இருக்கிறீர்கள். எக் காரணத்தைக் கொண்டும் தலைமைப் பதவியின் பெருமையை நான் குறைத்துவிடக் கூடாது.

சென்ற முறை நடைபெற்ற இந்திய தேசீயக் காங்கிரஸில்[1] நிகழ்ந்த உட்குழப்பத்தை, எந்த ஒரு கட்சியிலும் சேராதிருந்த காரணத்தால் தூரத்தே இருந்து கொண்டு, விருப்பு வெறுப்பற்ற மனப்பான்மையோடு நான் காண முடிந்தது. அதில் நேரடியாக ஈடுபட்டவர்கள் இந் நிகழ்ச்சிக்கு, தேவைக்கு அதிகமான முக்கியத்துவத்தைக் கொடுத்திருக்கிறார்கள். பின்னே வரக்கூடிய பயனை நினைந்து அவர்கள் அஞ்சுகிறார்கள். ஆனால், நிகழ்ந்து முடிந்ததும், பின் வருத்தத்தை விளைப்பதுமான நிகழ்ச்சியை விடாமல் பற்றி வைத்துக் கொண்டு இருப்பது தேவையில்லை. காய்ந்து போன மரக்கட்டை உடையும்பொழுது ஒரேயடியாக உடைந்து விடுகிறது. ஆனால் உயிருள்ள ஒரு மரத்தில் ஒரு கிளையை வெட்டினால் அதிகச் சுறுசுறுப்போடு அது மறுபடியும் கிளைத்துப் பூக்கின்றது. நல்ல வலிமையுடைய உடம்பு தன் காயங்களைத் தானே ஆற்றிக் கொள்வது போலக் காங்கிரஸிலுள்ள பிளவுக் காயங்களை நாம் ஆற்றிக் கொள்வோமாக. இதிலிருந்து தப்பிப் பிழைப்பது, மேற் கொண்டு புதிய முயற்சிகள் செய்வதற்கு ஒரு தூண்டுதலாக அமைகின்றது. ஆனால் அதே நேரத்தில் இந்நிகழ்ச்சி நமக்குக் கற்றுக் கொடுத்த பாடத்தைத் தாழ்மையோடு ஏற்றுக் கொள்வோமாக.

அந்தப் பாடத்தின் சாரம் இதுதான். நாம் செய்ய வேண்டிய பணியின் நிகழ்ச்சி நிரலில், கருத்து வேற்றுமைகள், முரண்பாடுகள் ஆகியவை இருக்கத்தான் செய்யும் என்பதை நாம் முழு மனத்தோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். இதுவரையில் உறங்கிக் கிடந்த நாம் உறக்கத்தில் ஒரு வகை ஒற்றுமையைக் கடைப்பிடித்து வந்தோம். ஆனால், விழித் தெழும்போது, வாழ்க்கை பல்வேறு வகைகளில் வெளிப்படும்பொழுது அதனை ஏற்றுக்கொள்ளப் பொறுமை வேண்டும். நமக்கு விருப்ப மில்லாத நிகழ்ச்சிகளை வலிமை காரணமாக அமிழ்த்திவிட முயலக் கூடாது. நமக்கு எதிராக உள்ளவற்றை அழித்துவிட முயலக்கூடாது. பல சமயங்களில் விட்டுக் கொடுத்து வெற்றி பெற முயல வேண்டும். பல்வேறு கருத்து வேறுபாடுகளுக்கு இடம் கொடுப்பதோடு மட்டுமல்லாமல், தனிப்பட்ட ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் உழைப்பை நல்கக் கூடிய முறையில் நம்முடைய வழிகளை மாற்றியமைக்க வேண்டும். இத்தகைய வழி, கற்றுக் கொடுக்கும் புதிய படிப்பினைகளுக்கு நம்மை நாம் தயார் செய்து கொள்ளாமல் போனால், அதனால் பெறக் கூடிய பயனை அடையாமல் போனால், சுயாட்சி என்பது வெறும் சொல்லடுக்காகவே இருக்கும்.

விடுதலை பெற்ற அரசாங்கத்தில் கருத்து வேறுபாடுகளை நசுக்கி விடுவதில்லை. அத்தகைய ஆட்சியில் ஒவ்வொரு கருத்துக்கும் அததற்குத் தகுதியான இடமுண்டு. பல்வேறு சக்திகளும் எதிர்த் திசையில் இழுக்கின்ற காரணத்தால் ஒன்றுக்கொன்று உதவியாக நின்று, முடிவான பயன் எதுவாக இருக்க வேண்டுமென்பதை அவை நிர்ணயம் செய்யும். தொழிற் கட்சி, சோஷலிஸக் கட்சி ஆகியவற்றின் கொள்கைகள் ஐரோப்பாவில் இன்றுள்ள சமுதாய அடிப்படையைப் புரட்சி மூலம் மாற்ற விரும்புகின்றன. என்றாலுங்கூட, அவர்களுடைய பாராளுமன்றங்களில் அந்தக் கட்சிகளுக்கும் இடம் கொடுக்கப்பட்டுள்ளது.

வெவ்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள், தாங்கள் ஒற்றுமையாகக் காரியங்களைச் செய்வதன் இரகசியம் என்ன? அவர்களுடைய தேசீய ஒற்றுமையைக் கட்சி வேறுபாடுகள் அழிக்காமல் காப்பாற்றுவதன் கருத்தென்ன? இதனுடைய அடிப்படை அந்த மக்களினுடைய தேசீயப் பண்பாட்டில் ஊறிக் கிடக்கின்றது. அதாவது அங்குள்ள எல்லாக் கட்சிகளும் சட்டத்தின் ஆட்சிக்குக் கட்டுப்பட்டு நிற்கின்றன. அக் கட்சிகள், சட்டங்களை அசட்டை செய்வதன் மூலம் தாங்கள் விரும்பிய பயனை அடைய முற்படுவதில்லை. சட்டங்களுக்குக் கீழ்ப்படிகின்ற அதே நேரத்தில், பொறுமையோடிருந்து வெற்றி பெற அவர்கள் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய தன்னடக்கமே அவர்கள் வன்மைக்கு அறிகுறியாகும். இதன் காரணமாக அவர்கள் தங்களுக்குள் ஒன்று கூடி விவகாரங்களையும், சொற்போர்களையும் நடத்துவதுடன், மாறுபட்ட கருத்துடைய பலரின் உதவியைக் கொண்டு பெரிய ராஜ்யங்களையும், சாம்ராஜ்யங்களையும் ஆள முடிகின்றது.

எந்த ஒரு ராஜ்யத்தையோ அல்லது சாம்ராஜ்யத்தையோ ஆள வேண்டிய பொறுப்பு காங்கிரஸுக்கு இல்லை. நம் நாட்டிலுள்ள படித்த கூட்டத்தார், காங்கிரஸ் இயக்கத்தில் ஒன்று சேர்ந்து தேச மக்களினிடையே விழிப்புணர்ச்சியைத் தூண்டவும், அவர்களுடைய உறுதியை வளர்க்கவும், இதனை ஒரு கருவியாகப் பயன்படுத்த முற்பட்டிருக்கிறார்கள். நாளாவட்டத்தில் பராபரியாகக் கிடக்கின்ற விடுதலை இயக்கம் வலுப்பெற்று விடுதலையடைவதற்குரிய வழிகளில் பரிணமிக்க வேண்டுமென்பதே நம்முடைய குறிக்கோளாகும். இங்கிலையில், இப் பெரிய காரணத்திற்காகக் கூட்டப்பட்ட ஒரு சபை, நம்முடைய நாட்டிலுள்ள பொறுக்கி யெடுத்த பண்பட்ட மக்கள் நிறைந்துள்ள சபை, கருத்து வேறுபாடுகளுக்குச்

சகிப்புத் தன்மை காட்டவில்லை யென்றால், நம்முடைய சக்தியில், நாம் நிறைவேற்றியுள்ள முடிவுகளில் ஒரு வறுமை இருக்கிறதென் பதை உலகறியக் காட்டிவிடுவோம்.

காங்கிரஸுக்கும் மாநாட்டுக்கும் பிரதிநிதிகள் பொறுக்குவதற் குக் குறிப்பிட்ட விதிகள் எதனையும் நாம் இன்னும் ஏற்படுத்தவில்லை. மக்களிடையே ஒருவிதமான கவலையின்மை இருந்த வரையில் காங் கிரஸில் ஒருவித ஒற்றுமை நிலைத்து வந்தது. ஏனென்றால் நம் முடைய அரசியல் விருப்பம் எது என்பதைப் பற்றிக் கருத்து வேறு பாடு ஒன்றுமில்லை. அத்தகைய சந்தர்ப்பத்தில் ஓர் அரசியலமைப் புத் தேவையென்ற நிலைமை ஏற்படவில்லை. ஆனால் இப்பொழுது நாட்டில் விழிப்புணர்ச்சி ஏற்பட்டுவிட்டபடியால் தேச சேவையில் அது செலுத்தப்பட வேண்டும். நம்முடைய பிரதிநிதிகளைத் தேர்ந் தெடுப்பதற்கு மக்களின் சம்மதம் இன்று தேவையாக இருக்கிறது. உண்மையைக் கூறுமிடத்துப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு மட்டுமல்லாமல் காங்கிரஸ், அதனுடைய மாநாடு ஆகியவற்றின் நடைமுறைகள் பற்றியும், நடைமுறை விதிகள் வகுக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

இவ்வாறு செய்வதை விட்டுவிட்டு, நாட்டிலுள்ள பல்வேறு கட்சிகளும் தனித்தனி முறையில் ஜாதி அடிப்படையில் கழகங் களை[2] அமைக்கத் தொடங்குமேயானால் காங்கிரஸ் அதனுடைய உண்மையான தன்மையை இழந்துவிடும். நாடு முழுவதிலும் வாழ் கின்ற மக்களினுடைய ஒருமித்த மனப்போக்கைப் பிரதிபலிப்பதாக இருந்தால்தான் காங்கிரஸ் வாழ முடியும். கருத்து வேறுபாடு தோன்றியவுடனேயே அனைத்தையும் தழுவிக்கொள்ளும் இயல்பை விட்டுவிடுவோமேயானால், நமது உறுப்பினர்களை அதிகப்படுத்து வதனால் ஏற்படப் போகின்ற பயன்தான் என்ன?

வங்காளத்தைத் துண்டாடுவதைப் பற்றி நாம் பெரியதொரு போராட்டம் நடத்தினோம். இப்போது தலைதூக்கி நிற்கின்ற உட் பிளவுகளைப் போக்குவதற்குப் பெரிதும் முயலவேண்டும். ஒன்றும் தெரியாதவர்களின் எதிரே கோழையாக நடந்துகொள்கின்ற ஒரு வன், அதற்கு ஈடு செய்யும் முறையில், தன் சுற்றத்தாரின் எதிரே முரட்டுத்தனமாக நடந்துகொள்ளத் தேவையில்லை. வெளிநாட்ட வர்களால் கொண்டுவரப்பட்ட பிரிவினை ஒரு காயத்தை உண்டாக்கு வது உண்மைதான்; ஆனால் நாமே ஏற்படுத்திக்கொள்ளும் உட் பிளவு பெரிய பாவமாகும். அந்தப் பாவம் நம்முடைய மனத்தின்

ஆழத்துள் புகுந்துவிடுகின்றது; பெருந் துன்பத்தை அனுபவிப்பதன் மூலந்தான் அதைப் போக்க முடியும்.

விடுதலையை நோக்கி நாம் முன்னேறிக் கொண்டிருக்கிறோ மாதலால், நம்மை நாம் மறந்துவிடக் கூடாத ஒரு சூழ்நிலையில் நின்றுகொண்டிருக்கிறோம். குறிக்கோளை நோக்கிச் செல்லும் நம்முடைய போக்கைத் தடை செய்கின்ற முறையில் பற்பல ஆசைகள் காட்டப்படுகின்றன. இந்த ஆசைகளுக்கு இடம் கொடுத்தால் குறிக்கோளை இழந்து விடுவோம். நம்முடைய சகோதரர்களை எதிர்த்து ஓங்கப்படும் கைகளைத் தடுத்து, அவ்வாறு ஓங்குவதற்குக் காரணமான கோபத்தையும் கட்டுப்படுத்த வேண்டும். இத்தகைய கருத்து வேறுபாட்டைத் தோற்றுவித்த நம்முடைய சுற்றத்தார்களை மறுபடியும் மன்னிக்க வேண்டும். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கின்ற மனப்பான்மை இன்மையால் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளையும், சிறு பூசல்களையும் உடனே சரி செய்தாக வேண்டும். நெருப்பு நம்முடைய வீட்டையும் பற்றிக் கொண்டது. இந்த நேரத்தில், எதிர்த்து நிற்கின்ற பிற கட்சிகளும், கோப வார்த்தைகளை வீசுவதன் மூலம் நெருப்பை ஊதிவிடத் தொடங்கினால், அது பெரு நெருப்பாக மாறிவிடும் என்பதை மறந்து விடக் கூடாது.

பிரிவினை என்ற வாளாயுதம் நாட்டின் மேலே தொங்கிக் கொண்டிருக்கிறது. ஹிந்துக்களும், முஸ்லீம்களும் ஆகிய நாம் பல நூற்றாண்டுகளாக இதே தாய் நாட்டால் ஊட்டி வளர்க்கப்பட்டோம் என்றாலும், இன்றுங்கூட, நம்மிடையே எவ்வளவு வேறுபாடு இருந்து வருகிறது. இத்தகைய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துகின்ற குறைபாடுகளைக் களைந்தெறிந்தாலொழிய, நம்முடைய அரசியல் முன்னேற்றத்தின் ஒவ்வொரு படியிலும் புதிய புதிய முட்டுக்கட்டைகள் தோன்ற ஆரம்பித்து, நம்முடைய பெரும் கனவு எதனையும் நிறைவேற்ற முடியாத நிலைமைக்கு வந்து விடுவோம்.

ஹிந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கு மிடையேயுள்ள முரண்பாட்டை வெளியார்கள் பயன்படுத்திக்கொள்ள முயல்வார்கள் என்பதைப் பற்றி நாம் அஞ்ச வேண்டியதல்லை. நம்முடைய உட்பிளவுகளைச் சரிசெய்துகொள்ளக் கூடுமேயானால், நம் ஒருவர் மேல் ஒருவரைத் தூண்டிவிடும் எல்லாவித முயற்சிகளையும் பார்த்து நாம் அனைவரும் சிரிக்க முடியும். அத்தகைய முயற்சிகள் வருங்காலத்தில் மறைந்துவிடும். வேற்றுமை யுணர்ச்சியைத் தூண்டி,

அதனைப் பெரு நெருப்பாகச் செய்ய அரசாங்கத்தினிடம் கூடப் போதுமான வாய்ப்புக்கள் இல்லை. மேலும், இத்தகைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வேற்றுமையை விரிவுசெய்து, நெருப்பைப் பெரிதாக வளர்ப்பார்களேயானல், இறுதியில் அரசாங்கமேகூடத் தீ யணைக்கும் படையினருக்குச் சொல்லியனுப்பக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படலாம். குடி மக்களுடைய வீடுகளைப் பற்றிக் கொண்ட நெருப்பு, எந்த வழியிலாவது, எந்த ஒரு நாளிலாவது அரண்மனையையும் பற்றிக்கொண்டுதான் தீரும்.

ஹிந்துக்களை அடக்குவதற்காக முஸ்லீம்களுக்கு அதிகப்படியான சலுகைகள் தரப்படுகின்றன வென்பது உண்மையானல், அரசாங்கத்தின் நடவடிக்கைகளைக் கொண்டு முஸ்லீம்கள் அவ்வாறு நினைப்பார்களேயானல், இங்ஙனம் பிரிவினை செய்வதனல்[3] ஏற்படக்கூடிய பயனை என்ருவது ஒரு நாள் அரசாங்கம் அனுபவித்தே தீரவேண்டும். இயல்பாக ஏற்படுகின்ற பசியை எவ்விதமாவது தணித்து விடலாம். தகுதியுடையவர்கள் கோருகின்ற உரிமைகளுக்கு ஓர் எல்லை யுண்டு. ஆனல் சலுகைகள் காரணமாகக் கோரப்படுகின்ற உரிமைகளுக்கு எல்லையே இல்லை. வரன்முறை நீங்கிய முறையில் உணவு ஊட்டத் தொடங்கினல் அதனை என்றுமே திருப்திப்படுத்த முடியாது. முழுவதும் ஓட்டையான குடத்தில் தண்ணீர் கொண்டுபோகின்ற முயற்சியையே இது ஒத்திருக்கும்.

இந்தச் சூழ்நிலையில், நமக்குச் சாதகமான சில பகுதிகளும் அமைந்துள்ளன என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆதி நாளிலிருந்தே பிரிட்டிஷார் வைத்து நடத்துகின்ற பள்ளிக்கூடங்களில் அதிக கவனம் செலுத்தி, ஹிந்துக்கள் அந்தக் கல்வியைப் பெற்றிருக்கிருர்கள். அதன் பயனுக அரசாங்கத்தின் சலுகைகளையும், உத்தியோகங்களையும் நம்முடைய முஸ்லிம் சகோதரர்களைக் காட்டிலும் அதிகமான அளவு நாம் அனுபவித்து வந்திருக்கிறோம். இதன் பயனுக ஒரு தாரதம்மியம் ஏற்பட்டுள்ளது. இந்தத் தாரதம்மியத்தைப் போக்கினலொழிய மன நிலையில் நாம் இரு கூட்டத்தாரும் ஒன்றுபட முடியாது. எப்பொழுதுமே பிரிவினை செய்கின்ற ஒரு பொருமைச் சுவர் நம்மிடைய இருந்து கொண்டிருக்கும். அரசாங்கத்தின் உத்தியோகங்கள் ஆகியவற்றில் முஸ்லீம்கள் போதுமான அளவு பங்குகொள்வார்களேயானல், தாரதம்மியமுடைய இந்த இரண்டு கூட்டத்தாரிடையேயும் உள்ள மனக்கசப்பு நீங்கி ஒற்றுமை நிலவ முடியும். எனவே இதுவரையில் நாம் அனுப

வித்து வந்த அரசாங்கச் சலுகைகள் முஸ்லீம் சகோதரர்களுக்குப் பரிபூரணமாக வழங்கப்படட்டும் என்று முழு மனத்தோடு பிரார்த்தனை செய்வோமாக. இங்ஙனம் பெறுகின்ற சலுகைகளுக்கு ஓர் எல்லை உண்டு. அந்த எல்லையை அடைந்தவுடன், பிறகு மனத்தில் தோன்றுகின்ற ஒரு வெறுமையை, பிறர் கொடுக்கின்ற சிறிய பரிசுகளின் மூலம் போக்க முடியாதென்பதை அவர்களே கண்டு கொள்வார்கள். உண்மையான அதிகாரம் கொடுத்தாலொழிய, வளமான வாழ்க்கைக்கு வழி இல்லை யென்பதையும் ஒற்றுமையின் மூலமாகத்தான் அதிகாரத்தைப் பெற முடியு மென்பதையும் அவர்கள் தெரிந்துகொள்வார்கள். நாம் பிறந்த பொன்னுட்டின் ஒற்றுமையைக் குலைப்பது சமயத்திற்கு விரோதமாகச் செய்யப்படும் கொடுமை என்பதை அவர்கள் உணர்வார்கள். நம்முடைய இயல்பான குணத்தை மீறுவது என்பது தன்னலத்திற்குக் கூட நன்மை செய்யாது என்பதை அவர்கள் அறிவார்கள். அப்போதுதான், இரு சகோதரர்களைப் போல ஒன்று சேர்ந்து உழைக்கும் முயற்சியில் நாம் கைகோத்து நிற்க முடியும்.

ஹிந்துக்களும், முஸ்லிம்களும் இந்தியாவின் இரண்டு பெரும் சமூகங்களாக இருக்கிருர்கள். இந்த இரண்டு சமூகங்களையும் ஒரே அரசியல் நிறுவனத்தில் ஒன்று சேர்ப்பதற்குத் தேவையான தியாகம் பொறுமை, தன்னடக்கம் ஆகியவற்றை நாம் கைக்கொள்ள முற்பட வேண்டும். இந்த ஒரு காரியங்கூட நம்முடைய சக்தியை எல்லை வரையில் சோதித்து விடுகிறது. அத்தகைய ஒரு சந்திர்ப்பத்தில், வாழ்க்கைப் போரட்டத்தில் தேவையை யொட்டித் தோன்றுகின்ற கட்சிகள், நாட்டைத் துண்டாடுகின்ற வெறுப்புணர்ச்சியை ஊட்டுகின்ற கட்சிகளாக இருக்கக் கூடாது என்பதைப் பகுத்தறிவும், சமயமும் ஒன்று சேர்ந்து காட்டும். அதற்குப் பதிலாக ஒரே அடித்தளத்தில் புதிய வலிவுள்ள பல்வேறு கிளைகள் காட்சியளித்து வளர்ந்து வருகின்ற நாட்டின் அரசிய லறிவின் வெளிப்பாடாகவும் அது காட்சி யளிக்கும்.

பழைய கட்சியிலிருந்து ஏதாவது புதிய கட்சி தோன்றுமேயானல் உடனே அதை விரும்பத் தகாத ஒரு கட்சியாக, தவருக எடுத்துக் கொள்கிரேம். அந்தக் கட்சியைப் பற்றி ஒன்றும் தெரியாதாகையால் அதன் மேல் வெறுப்புக் கொள்கிரேம். ஆனல், உண்மையில், பழமையிலிருந்து தோன்றித் தீர வேண்டிய ஒரு வளர்ச்சியாகும் இது என்பதை நாம் உணர்வதில்லை. அதே காரணத்திஞல், அப்புதிய கட்சியும், நிலைபெறுவதற்குரிய தனது தன்மையை எல்லை மீறி

வலியுறுத்தத் தொடங்குகிறது. இயல்பாகப் பிறந்திருந்தால் இருக்கக்கூடிய ஓர் அமைதி, இவ்வாறு தோன்றுகின்ற புதிய கட்சியிடம் காணப்படுவதில்லை. எனவே, அப்புதிய கட்சி நம்மோடு உறவு கொண்டதாக இருந்துங்கூட, அதனை விரோதமாகக் கருதத் தொடங்கி விடுகிறோம்.

ஒன்று மட்டும் உறுதி. விதையிலிருந்து தோன்றும் வேர், விதையைப் பிளந்துகொண்டு வெளிப்படுத்துவதுபோல, இயற்கைச் சட்டத்தையொட்டி எவ்வளவு மறுப்புக்கள் இருப்பினும் கூடப் புதிய கட்சி தோன்றி விடுகிறது. பழைய கட்சிக்கும் சூழ்நிலைக்கும் மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டதாகவே அது இருக்கிறது. கட்சி புதியதாக இருக்கலாமே தவிர, அது நம்முடையது என்பதற்கும், அதிலுள்ள உறுப்பினர்கள் நம்மவர்கள் என்பதற்கும் ஐயமில்லை. அவர்களிடத்திலிருந்து நாம் சில சமயங்களில் மாறுபடத் தேவைப் பட்டாலுங்கூட, அவர்களையும் இழுத்துப் பிடித்து நம்மோடு தோளோடு தோள் கொடுத்து நாட்டுத் தொண்டில் ஈடுபடுத்த முற்பட வேண்டும்.

எந்த வரம்புக்கும் கட்டுபடாத தீவிர வாதிகள் கட்சி ஒன்று இக்காலத்தில் இருப்பதாகக் கேள்விப்படுகிறோம். அத்தகைய ஒரு கட்சி எங்கே இருக்கிறதென்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். மிகத் தீவிரவாதி என்று சொல்லப்படக் கூடியவர்கள் யார் இந்த நாட்டில்? தீவிர வாதத்திலுள்ள அடிப்படையான தத்துவம் என்னவென்றால், ஒரு கட்சி தீவிர வாதத்தை மேற் கொண்டால் அதற்கு எதிர்க் கட்சியும்கூட விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் தீவிர வாதத்திற்குத் தள்ளப்படுகிறது. வங்காளப் பிரிவினையால் ஏற்பட்ட துயரம், இந்தியாவில் இதற்கு முன்னர் யாராலும் அனுபவிக்கப்படவில்லை. குடி மக்களுடைய இந்தத் துயரம் ஆள்வோரையும் பொறுப்பில்லாமல் செய்துவிடுவதோடுகூட, கோபமும், கொடுமையும் உடையவர்களாகவும் ஆக்கிவிட்டது. இத்துயரம் போதாது என்பது போல லார்டு மார்லி* (செகரடரி ஆப் ஸ்டேட் ஆக அவர் நியமிக்கப் பட்டதை இந்தியா முழுவதும் பாரட்டிக் கொண்டிருக்கிறது.) நீண்ட தூரத்திற்கு அப்பால் இருந்து கொண்டு, செய்யப்பட்ட பிரிவினை முடிவானது என்றும், அதனை மாற்றுவது இயலாத காரியமென்றும் தகவல் அனுப்பியிருக்கிறார்.

வங்காளத்தின் இருதயத்தில் தோன்றியுள்ள இந்தப் பெரும் துயரத்தைப் பற்றிக் கவலைப்பட மாட்டோம் என்று சொல்வது தீவிர வாதத்தின் உச்ச கட்டம் அல்லவா? இப்படிப்பட்ட செயல்

மக்களிடத்திலும் அதற்கேற்ற ஓர் எதிர்ச் செயலை உண்டாக்கி விடாதா? அப்படித் தோன்றுகிற எதிர்ச்செயல் வெறும் வருத்தத்தைத் தெரிவிப்பதாய், சாத்வீகமானதாய்த்தான் இருக்கும் என்று எதிர்பார்க்க முடியுமா?

---

இயல்பாகத் தோன்றுகின்ற இந்த எதிர்ச் செயலைப் பற்றி அதிகாரிகள் கவலைப்படுவதாகவே தெரியவில்லை. அதற்குபதிலாக அவர்களுடைய அடக்குமுறைகள் இன்னும் அதிக உச்ச நிலையை அடைந்தன. தாங்கள் உண்டாக்கிய அலைகளைத் தடுப்பதற்கு, மேலும் அடுத்து அடுத்து அலைகளை உண்டாக்குகிறார்கள். இத்தகைய ஒரு செயல் அவர்களுடைய அதிகார எல்லையைக் காட்டுகிறதே தவிர அறிவு எல்லையைக் காட்டவில்லை. அதனை எதிர்ப்பதற்குரிய வன்மையும், சக்தியும் இல்லாதவர்களாக நாம் இருக்கலாம். ஆனால் ஆண்டவனால் படைக்கப்பட்ட நமது இருதயம் ஒரு பிடி மண்ணால் செய்யப்பெற்ற தன்று. திடீரென்று தாக்கப்பட்டால் நாம்கூட ஓர் எதிர்ச் செயலில் ஈடுபடுகிறோம். இப்படி எதிர்ச் செயலில் ஈடுபடுவதை ' மறிவினைச் செயல் ' (Reflex action) என்று சொல்வார்கள். இந்த எதிர்ச் செயலை அவர்களுக்குக் காட்டப்படும் அவமரியாதை என்று கருதுவார்களேயானால் அவர்கள் செய்த செயல்களின் விளைவுதான் இது என்பதை அவர்கள் மனத்தில் பதித்துக் கொள்ள வேண்டும். இரண்டையும் இரண்டையும் கூட்டி விட்டு முடிவு நான்காக ஆகும்பொழுது அதன் பேரில் கோபங் கொள்வது தவறு.

ஆட்சியாளர்கள், சட்டத்தைக் காற்றில் பறக்க விட்டு விட்டு, மேற்கொள்ளும் செயல்களாகக் சிறைக்கூடம், அடக்குமுறை, அடித்துத் துன்புறுத்தல் ஆகியவை அமைந்துள்ளன. இதற்கு எதிராக, ஆளப்படுகின்ற மக்களோ என்றால், வெறுப்பின் எல்லையில் இருக்கின்றார்கள். இது வரையில் மக்களுடைய நாக்கின் நுனியிலே மட்டும் நின்று வந்த வெறுப் புணர்ச்சி கொஞ்சங் கொஞ்சமாக அவர்களுடைய குருதியில் கலக்கத் தொடங்கிவிட்டது. மக்கள், அதிகாரத்தின் கொடுங்கோன்மைக்கு எதிரே பணிந்துபோகாமல் புரட்சி செய்வார்களேயானால் அது பெரும் தொல்லையில் கொண்டு விட்டு விடலாம் என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். என்றாலும் இத்தகைய நிகழ்ச்சிகளில்கூட ஒரு நம்பிக்கை இருக்கக் காண்கிறோம். நம்மைப் பொறுத்தமட்டில் நம்முடைய சக்தியும் செத்துவிடவில்லை யென்பதையே அது அறிவிக்க விரும்புகின்றது. பல நூறு

ஆண்டுகளாக நம்மை அழித்து வந்த சோம்பல் குணம் இருந்துங் கூட வேலையை உணர்வதற்குரிய சக்தியை நாம் இன்னும் இழந்து விடவில்லை யென்பதையே இது அறிவுறுத்துகின்றது.

தீவிர வாதக் கொள்கை என்பதில், அக்கொள்கை ஒரு திசை நோக்கிச் செல்வதில்லை யென்பதும் அடங்கி யிருக்கிறது. இவைகள் எங்கே முடிவாகக் கொண்டுவிடும் என்பதைப்பற்றி ஒருவரும் ஒன்றும் சொல்ல முடியாது. தீவிர வாதத்தை மேற்கொள்கின்றவர்கள் அதனுடைய சக்தியையும், வேகத்தையும் தடைப்படுத்த முடியாது. தீவிர வாதக் கொள்கையைத் தொடங்கி விடுவது எளிதாக இருக்கலாம். ஆனால், அதைத் தடை செய்தல் என்பது மிகமிகக் கடினமான காரியம். நம்முடைய ஆட்சியாளர்கள் இப்படிப்பட்ட செயலில் ஈடுபடும்போது எந்த அளவுக்கு அது போய் நிற்கும் என்று சிந்திக்கவில்லை யென்றே தோன்றுகிறது. தங்களுக்குக் கீழே இருக்கிற சிறு தேவதைகள், இந்த அளவுக்குக் கொடுமை விளைவிப்பார்கள் என்பதைப்பற்றி ஆட்சி பீடத்தின் மேலே இருக்கின்றவர்கள் எதிர்பார்க்கவில்லை யென்றே தோன்றுகிறது. ஆனால் அரசாங்கம் என்பது தெய்வீகத்தன்மை வாய்ந்ததன்று என்பதை நாம் நினைவி லிறுத்த வேண்டும். அதிகாரம் செலுத்துகின்ற அதிகாரிகள் ரத்தம், சதையோடு கூடிய சாதாரண மக்களே. எனவே, கையில் அதிகாரம் கிடைத்தபோது அந்த வெறி, குறைவாகவோ, அதிகமாகவோ அவர்களிடம் ஏறி விடுகிறது. ஆனால், அனுபவம் பெற்ற குதிரையோட்டி கடிவாளத்தை இழுத்துப் பிடிக்கும்பொழுது குதிரைகள் கழுத்தை வளைக்கத்தான் வேண்டியிருக்கிறது. ஆனால் இவ்வாறு செய்வது அரசன் செல்லுகின்ற வண்டியின் கௌரவத்திற்கு ஏற்றதன்று என்று யாரும் சொல்ல முடியாது. அந்த நேரத்தில் குதிரைகளின் குளம்பொலி ஏறத்தாழ ஒரே நிலையில் இருக்கின்றது. அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் நடைபாதையில் உள்ளவர்கள் ஒதுங்கி வழிவிடுவார்களேயானால் அவர்களுக்கு எந்தவிதமான தீங்கும் நேராது. ஆனால் அதிகார பீடத்திலுள்ளவர்கள் கடிவாளத்தை இழுத்துப் பிடிக்காமல் இக்கட்டான சந்தர்ப்பங்களில் விட்டு விடுவார்களேயானால் அதிகாரத்தைக் கொண்டு செலுத்துகின்றவர்கள் இந்தப் பொறுப்பற்ற தன்மையை உடனே உணர்ந்து விடுகிறார்கள். அவர்களுக்கும் இப் பொறுப்பற்ற தன்மை ஒட்டிக் கொள்கிறது. குற்றமற்ற மக்களின் மண்டைகள் எப்போது போலீஸ்காரர்களின் தடிகளால் பிளக்கப்படும் என்பதையும், உணர்ச்சி வசப்பட்ட நீதிபதிகளின் கையில்

அகப்பட்டு, சட்டம் எப்படி நிறைவேற்றப்படும் என்பதையும் யாரும் முன்கூட்டியே எதிர்பார்க்க முடியாது.

இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் ஜனங்களில் ஒரு பகுதியினருக்குத் தனிப்பட்ட சலுகைகள் கொடுக்கப்பட்டால், இந்தச் சலுகைகள் எவ்வளவு தூரத்தில் கொண்டுவிடும் என்பதை அவர்கள் அறிய முடிவதில்லை. ஆட்சியாளரினுடைய பலவீனம் முழுவதும், விளக்கமாக இச் சந்தர்ப்பங்களில் வெளிப்படுவதோடு, தான் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைப் பற்றி அரசாங்கமே வெட்கப்பட நேரிடுகிறது. தன்னிடத்திலுள்ள குறைபாடுகளை மூடி மறைப்பதற்காகப் பூசி மெழுகுகின்ற கழகங்களை ஏற்படுத்தி, அவர்களுடைய அறிக்கைகளை அரசாங்கம் வெளியிடுகிறது. துன்பம் அடைந்தவர்கள், பொய்யர்கள் என்ற பட்டம் சூட்டப்படுகிறார்கள். கொடுமை இழைத்தவர்கள், கொடுமை இழைக்கப்பட்டவர்களாகவும், அவர்கள் செய்த கொடுமைகள் மன்னிப்பதற்குரியன என்றும் அறிக்கைகள் வெளி வருகின்றன.

மக்களினுடைய பக்கத்திலும் இதேதான் நடைபெறுகிறது. மக்களும் தங்களுடைய கருத்துக்களைத் தீவிரமான முறையில் காட்டத் தொடங்கினால் அதனையும் கட்டுப்படுத்துதல் என்பது இயலாத காரியம். கட்சியிலுள்ளவர்கள் இம்மை முறைகளை மேற்கொள்வதால் கட்சித் தலைவர்களும் அதற்கு உடன்பட வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட நிகழ்ச்சிகளுக்கோ அல்லது கருத்துகளுக்கோ, அந்தத் தலைவர் பொறுப்பாளி யாவார் என்றும் சொல்வதற்கில்லை.

மற்றொன்றையும் நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். தீவிர வாதம், மித வாதம் என்பவற்றினிடையே உள்ள வேறுபாட்டை நாமாக உண்டாக்கவில்லை. நம்மை ஆள்வோர் கொடுத்த அப்பிரிவினை எங்கே, எப்போது, என்ன காரணத்திற்காக முத்திரையிடப்படுகிறதென்றும் நாம் சொல்வதற்கில்லை. உண்மையைக் கூறுமிடத்து, எந்தக் கொள்கையையும் அடிப்படையாகக் கொண்டு இப் பெயர் சூட்டப்பெற்றதாகத் தெரியவில்லை. அதற்குப் பதிலாக ஆள்வோர்களுடைய விநோதமான எண்ணங்களைப் பொறுத்தே இப் பெயர் சூட்டல் நடைபெறுவதாகத் தெரிகிறது.

எனவே, அரசாங்கம் தொடர்புகொள்ள வேண்டிய எந்த ஒரு கட்சியும் தீவிர வாதம் பேசும் கட்சி என்பதை நாம் ஒப்புக்கொள்ள

முடியாது. ஒரு தேசீய இயக்கத்தின் அடையாளமே அதுதான். அந்த இயக்கத்தைத் தூண்டுவதற்குரிய காரணம் இருந்து வருகின்ற வரையில் அதுவும் இருந்து வரும். ஒரு வகையில் அதை அடக்குமுறை மூலம் அடக்கினால், மற்றொரு வகையில் அது வெளிப்படும். இன்றேல் காலம் வரும் வரையில் காத்திருக்கும்.

மனித மனத்தின் இயல்பான வெளிப்பாட்டை நாம் வெறுக்கும் பொழுது, ஒரு தனிப்பட்ட கூட்டத்தார் சதி செய்து கொண்டிருப்பதன் பயன் இது என்றுதான் கூறுகிறோம். 18-ம் நூற்றாண்டில் சுயநலவாதிகளாகிய கோயில் குருமார்கள் கூடித்தான் சமயத்தை அல்லது மதத்தை உண்டாக்கினார்கள் என்று ஐரோப்பாவில் கூறிக் கொண்டிருந்தார்கள். இந்தக் குருமார்களை ஒழித்துக் கட்டிவிட்டால், சமயம் என்ற தீமை தானே ஒழிந்துவிடும் என்றும் அவர்கள் நம்பினார்கள். ஹிந்து சமயத்திற்கு விரோதமாக உள்ளவர்கள் பிராம்மண சூழ்ச்சிதான் இந்த விளைவு என்று இங்கேயும் கூறுகிறார்கள். எனவே, இந்தியாவிலிருந்து பிராம்மணர்களை துரத்திவிட்டால் ஹிந்து சமயம் என்பதையே ஒழித்துவிடலாம் என்றும் பேசுகிறார்கள். அதுபோல, வெறுப்படைந்த சில மனிதர்கள் ஏதோ ரகசியமான ஒரு சோதனை சாலையில் தீவிர வாதம் ஒன்றைத் தயாரிப்பதாகவும் அவர்களையெல்லாம் பிடித்துப் போலீசில் அடைத்து விட்டால் தொல்லையை ஒழித்துவிடலாம் என்றும் ஆட்சியாளர்கள் கருதுகிறார்கள்.

இவ்வாறு நினைப்பது, அவர்களைப் பொறுத்தமட்டில் போதுமானதாக இருக்கலாம். ஆனால் உண்மைப் பிரச்னை மிக ஆழமானது. புறக்கண் கொண்டு இந்தப் பிரச்னையைக் காண முடியாது. மிக ஆழ்ந்து சிந்திப்பதன் மூலம்தான் இதனை அறிந்து கொள்ள முடியும். பிறர் அறியாத உண்மையை முதல் முதலில் எடுத்துச் சொல்லும்போது, மிக மென்மையான குரலில் அதனை எடுத்துச் சொல்ல முடியாது. ஒரு பெரிய புயல் காற்றைப் போலத்தான் அது வெளிப்படுகிறது. ஏனென்றால் பொருத்த மில்லாதவை ஒன்றோடொன்று மோதும்போதுதான் உண்மை பளீர் என்று தோன்றுகிறது.

கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்குச் செய்திப் போக்குவரத்தில் ஏற்பட்ட வசதியும், சரித்திரப் படிப்பும், அரசாங்க ஒற்றுமையும், இலக்கிய வளர்ச்சியும், காங்கிரஸின் முயற்சியும் பலகாலமாக ஒன்று சேர்ந்ததன் மூலம், நாம் அனைவரும் ஒரு தேசத்தைச்

சேர்ந்த ஓர் இனத்தவர் என்ற எண்ணம் நம் மனத்தில் தோன்றலாயிற்று. வாழ்விலும், தாழ்விலும் நம்முடைய விதி ஒன்ருகவே இருக்கிற தென்பதும், நம்மை ஒன்றுபடுத்தும் பிணைப்பைக் கண்டுபிடித்து, அதனை வலுப்படுத்தினுலொழிய, நாம் வளர்ச்சி யடைய முடியாது என்பதும் இப்போது நம்மால் அறியப்பெற்ற பாடங்களாகும்.

இதுவரையில் இத்தகைய ஓர் அறிவு, ஏதோ சில சமயங்களில் தோன்றுவதாகவும், அறிவுடையவர்கள் மட்டும் காணக் கூடியதாகவும் இருந்தது போக, இப்போது நம் அனைவருக்கும் தோன்றத் தொடங்கிவிட்டது. இவ் வுண்மையை நாம் முழுவதும் உணராதிருந்த காரணத்தினுல்தான் நாட்டுக்குச் செய்கின்ற தொண்டுகளில் நாம் முழு மனத்தோடு ஈடுபடாமல் இதுவரை இருந்துவிட்டோம்.

இத்தகைய ஒரு சூழ்நிலை இன்னும் நெடுங் காலத்திற்கு இப்படியே இருந்திருக்கும். ஆனல் லார்டு கர்ஸன் பிரபு திடீரென்று வலுவாகத் திரையைக் கிழிந்துவிட்டமையின், இதுவரையில் மறைந்திருந்த இந்த உணர்ச்சி இப்போது மறைக்கப்பட முடியாமல் வெளிப்படலாயிற்று. வங்காளத்தைத் துண்டாட வேண்டுமென்ற ஆணை பிறந்தவுடனேயே கிழக்கிலும், மேற்கிலும் இருந்த வங்காளிகள் அனைவரும் ஒருவரே என்ற கோஷம் கிளம்பலாயிற்று. வங்காளத்தைச் சேர்ந்த பல்வேறு உறுப்பினர்களிடையே இத்தகைய ஒரு மனப்பான்மை இருந்திருக்கும் என்பதையும் இந்த ஒற்றுமை மனப்பான்மை வங்காளிகளின் எலும்பிலும், குருதியிலும் கலந்திருக்கின்றது என்பதையும் இதுவரையில் நாம் உணராமல் இருந்துவிட்டோம்.

பிரிவினையின் வலி பொறுக்க முடியாத நிலையை அடைந்தவுடன், நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து அரசரிடத்தில் முறையிட்டால் இதற்கு ஒரு வழி காண முடியும் என்று நினைத்தோம். ஆனல் அரசருடைய கருணைக்கு மனுச் செய்துகொள்வது தவிர, இத்துயரத்தைப் போக்கிக் கொள்வதற்கு வேறு வழிகளும் உண்டென்பதை அந்த நிலையில் நாம் அறியவில்லை.

திக்கற்றவர்களுக்கு மிகவும் தேவைப்படுவதாகிய பிற நாட்டாருடைய கருணை நம்மைப் பொறுத்தமட்டில் மறுக்கப்பட்டு விட்டது. தன்னை நொண்டி யென்று நினைத்துக்கொண்டு, இருந்த இடத்தை விட்டு அசையாமல் பல நாட்களாக இருந்த ஒரு மனிதன், தன்னுடைய வீடு தீப்பற்றிக் கொண்டவுடன், தன்னல் ஓடக்கூட முடியுமென்ற உண்மையைத் திடீரென்று கண்டு பிடித்ததைப் போலவே, இன்று நாமும் இருக்கின்ருேம். இந்த உணர்ச்சிப் போராட்டத்தில்,

ஏற்பட்ட கொந்தளிப்பின் காரணமாக, வெளிநாட்டுச் சரக்குகளை இனிப் பயன்படுத்த மாட்டோம் என்று பலரும் அறியச் சொல்கின்ற அளவுக்கு நாம் தைரியத்தைப் பெற்றுவிட்டோம்.

பல்வேறு கண்டுபிடிப்புகளைப் போல, இந்தக் கண்டுபிடிப்பும் ஒரு குறிப்பிட்ட அனுபவத்தின் மூலம் பிறந்ததாகும். இதைப்பற்றிச் சிந்திக்கும்பொழுது எந்த ஒரு சந்தர்ப்பம் காரணமாக இக் கண்டு பிடிப்புக் கிடைத்ததோ, அந்தச் சந்தர்ப்பத்தைவிட இந்தக் கண்டு பிடிப்பு மிகப் பெரியது என்பதையும் உணரத் தொடங்கிவிட்டோம். இந்தக் கண்டு பிடிப்பில் சக்தியும், செல்வமும் அடங்கி இருக்கின்றன வென்பதையும் உணர்ந்தோம். வெளிநாட்டுப் பொருள்கள் பகிஷ்காரம், பிறரைத் துன்புறுத்துவதற்காகமட்டு மன்று; நம்மை வலுப்படுத்திக் கொள்ளவும் தேவைப்படக்கூடிய ஆயுதம் என்பதையும் உணர்ந்துவிட்டோம். இதனால் வேறு பயன் ஏதேனும் விளைந்தாலும் விளையாவிட்டாலும், உடனடியாக ஓர் உணர்வை நாம் பெறுவதற்கு இது இடம் தந்து விட்டது.

நம்முடைய சக்தியை நாம் உணருமாறு செய்த இந்த விழிப்புணர்ச்சி, ஒரு புதிய மனோவலிமையால் ஏற்படும் மகிழ்ச்சியை நமக்குத் தந்துள்ளது. இந்த மகிழ்ச்சி இல்லையானால், பிற நாட்டுப் பொருள்களைப் பகிஷ்காரம் செய்வதால் நமக்கு ஏற்படுகின்ற துன்பத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாது. கோப உணர்ச்சி, நீண்ட நாளைக்கு நிலைபெற்றிருப்பதில்லை. இன்னுஞ் சொல்லப் போனால், வலிமையுடைய அதிகாரத்தின் எதிரே வலிமை யற்றவர்களுக்குத் தோன்றும் கோப உணர்ச்சி நிலைத்து நிற்கவே முடியாது.

நாம் எவ்வளவுக் கெவ்வளவு துயரம் அனுபவிக்கிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு உண்மையையும் உணரத் தொடங்கி விட்டோம். நம்முடைய துயரம் மிகுதிப்படுவதனால் நம்முடைய வலிமை, உரமும், உறுதியும் பெறுகின்றது. துன்பம் காரணமாகப் பெறப்பட்ட இந்த அனுபவம் மிக விரும்பத் தகுந்ததும், நம்மோடு கலந்துவிட்டதுமான ஒரு சிறந்த உதாரணமாக அமைந்து விடுகிறது. துயரத்தில் நம் மனம் உருகிக் கொண்டிருக்கின்ற நேரத்தில் பெறுகின்ற உணர்ச்சிகள், பிறகு மாற்றப்பட முடியாதவை. துன்பத்தைப் பொறுத்துக் கொள்வதற்கு நமக்கு எவ்வளவு சக்தி உண்டென்பதை எடுத்துக் காட்டக்கூடிய ஒரு முத்திரையாகும் இது. துன்பத்தைப் பொறுக்கும் இந்தச் சக்தியை மேலும் வளர்ப்பதன் மூலம் எத்தகைய துயரத்தையும் நாம் பொறுத்துக் கொள்ள முடியும்.

உண்மையின் அடிப்படையில் பிறக்கின்ற மகிழ்ச்சி எவ்வளவு வலிமையுடைய தென்பதைக் கண்டபொழுது நானே வியப்படைந் தேன். உடல் லுழைப்பைக் கேவல மென்று கருதி, சர்க்கார் அலுவலகங்களில் வேலை தேடுவதே சிறப்புடையது என்று இருக் கின்ற மனப்பான்மையினால் நம்முடைய மனிதத் தன்மையே கெட்டுவிடுகிறதென்று பெரியோர்கள் சொல்லி வந்திருக்கிறார்கள். இதனைக் கேட்பவர்கள் அனைவரும், இது மிகச் சிறந்த புத்திமதி என்று சொல்லிக்கொண்டிருக்கிற அதே நேரத்தில், அரசாங்க உத்தி யோகத்திற்கு ஒரு மனுவையும் தயாரித்துக் கொண்டிருந்தார்கள். இன்று அவை யனைத்தும் மாறிவிட்டன. எனவே, பணக்காரனுடைய மகன் நெசவுத் தொழிலைத் தொடங்குகிறான்; அந்தணனுடைய மகன் பெருமிதத்தோடு கலப்பையைப் பிடிக்கின். நம்முடைய நாட் டில் இத்தகைய ஒரு சூழ்நிலை ஏற்படுமென்று கனவுகூடக் கண்ட தில்லை. ஒரு வாதத்தை மற்றொரு வாதத்தால் அழிக்க முடியாது. பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக வருகின்ற நம்பிக்கைகள் புத்தி சொல்வதன் மூலம் மாற்றப்பட முடியா. ஆனால், சிறிய விளக்கைப் போல, உண்மையானது, அறையின் ஒருமூலையில் தோன்றியவுடன் அறையைக் கவ்வி யிருந்த இருள் முழுவதும் ஓடி மறைகின்றது.

முன்பெல்லாம் நாட்டில் தேவை ஏற்பட்டபோது, வீடு வீடாகச் சென்று பிச்சை எடுத்தால்கூடப் பணம் கிடைப்பதில்லை. அதற்குப் பதிலாக அவர்களுடைய கேலிப் பேச்சுக்களே கிடைத்தன. ஆனால் இன்று திடீரென்று தேசத்தின் அறைகூவல் கேட்டபோது எது உடனடியாகத் தேவை யென்பதைப்பற்றிக்கூடக் கவலைப்படாமல், தங்களுக்கு எது முக்கியம் என்றுகூடச் சிந்திக்காமல், தங்களிட முள்ள அனைத்தையும் உடனடியாகத் தியாகம் செய்ய முற்பட்டு விட்டார்கள். பழங்காலத்தில் நம்முடைய சொந்த முயற்சியால் ஒரு தேசீயப் பள்ளிக்கூடத்தை நிறுவ முடியு மென்பதை மிகமிகச் சிலரே நம்பினார்கள். நம்மிட முள்ள பலத்தை ஓரளவு உணரத் தொடங்கியவுடன் சிந்தனைக்கு அப்பாற்பட்டு இருந்த காரியங்களெல்லாம், இன்று நம் கண்முன்னரே நிகழத் தொடங்கி விட்டன. இதுவரையில் ஒரு பெரிய தொழிற்சாலையைப் பலரும் சேர்ந்து நடத்துவதற்குரிய அனுபவம், சக்தி, பயிற்சி ஆகிய மூன்றையும் வங்காளிகள் பெற்றிருக்கவில்லை. ஆனால் இன்று இத்தனை குறைகள் இருந்தும்கூட, ஒரு பெரிய தொழிற்சாலையை நிர்மாணித்து அதனை நடத்தி வருகிறார்கள். இதனை யல்லாமல் இன்

னும் பல பெரிய, நடுத் தரத் தொழிற்சாலைகளை நிறுவவும் திட்ட மிட்டுள் ளார்கள். தேச மக்களின் உறவு என்ற அடிப்படையில் முதல் குறிக்கோளை அடைந்தவுடன், துயரம், துன்பம், இவற்றின் பிறகு உள்ள தேசீய வலிமை வெளிப்பட்டவுடன், நம்முடைய கனவுகளைப் பல்வேறு துறைகளிலும் ஒவ்வொன்றுகப் பூர்த்தி செய்யத் தொடங்கி விட்டோம்.

திடீரென்று நம்முடைய தேசீய பலத்தை உணரத் தொடங்கி விட்டோம். அந்த உணர்ச்சி, நம்மிடத்திலுள்ள ஒரு பெரும் குறை பாட்டையும் காட்டிக்கொடுத்தது. இவ்வளவு பெரிய சக்தியைக் கட்டுப்படுத்துவதற் குரிய ஒரு தகுந்த அமைப்பு அல்லது நிறுவனம் நம்மிடம் இல்லை யென்பதை உணர்ந்து கொண்டோம். இன்று நம் முடைய நாட்டில் கிடைக்கின்ற பெரும் சக்தியாகிய இந்த நீராவி, தகுந்த முறையில் கட்டுப்படுத்தப்பட்டு, தேசீய காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுமேயானுல், பல வழிகளிலும் சென்று இவ்வாறு வீணுகாமல் இருக்குமே என்றும் வருந்துகின்றேம்.

நம்முடைய பெரிய தேவை ஒன்று, இன்னதென்று விளக்கப்பட முடியாமல் அல்லது போக்கிக் கொள்ள முடியாமல் உள்ளேயிருந்து வாட்டுமேயானுல், உணர்ச்சி வசப்பட்டவர்களாக ஆகிவிடு கின்றேம். காரண மில்லாமல் ஒரு குழந்தை தன்னுடைய தாயைச் சீறி அடிக்குமேயானுல், தாயானவள் குழந்தையின் கோபத்திற்குத் தான்தான் காரணமென்று நினைக்கக் கூடாது. இன்னதென்று விளக்கப்பட முடியாத தன் கோபத்தைக் தாயினிடம் காட்டு கின்றது குழந்தை என்றே கருத வேண்டும். துயரத்தைத் தரும் காரணம் நீக்கப்பட்டவுடன் குழந்தை அத் துயரத்தை உடனே மறந்து மகிழ்ச்சியில் திளைக்கின்றது. எனவே, நம்முள்ளே நாம் பூசலிடுவோமேயானுல், அதற்குரிய ஏதோ ஒரு காரணம் உள்ளே இருக்கிறது என்பதுதான் பொருள். நம்முள்ளே பிறந்துள்ள புதிய சக்தியை உணர்கின்றேம் என்றுலும், அதனை எவ்வாறு பயன்படுத் துவ தென்று தெரியாமல் விழிக்கின்றேம். தேசீய சக்தியை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய தக்க நிறுவனம் ஒன்று இல்லாமையால் ஏதோ ஒன்றை இழந்துவிட்ட உணர்ச்சி ஏற்படு கின்றது. இதன் காரணமாகத்தான் நம்முடைய மக்களையே நாம் பொறுத்துக் கொள்ள முடியாமல் கோபித்துக் கொள்ளுகிறேம்.

குடும்பம் பெருத்து, வருவாய் சிறுத்து இருக்கின்ற இந்த ஏழை நாட்டில்கூட, ஒருநாள் முயற்சி சேய்வோமேயானுல் தேசீய நிதி வசூலித்துவிட முடியும் என்பதைக் கண்டு விட்டோம். இந்த நிலையில்

ஒரு நாள் நிலைபெறுகின்ற இதனை என்றும் நடை பெறக்கூடிய ஒன்றாகச் செய்ய முடியாமைக்குக் காரணம், ஒரு தக்க நிறுவனம் இல்லாமைதான் என்பதை நாம் எப்படி மறுக்க மடியும்? இது மட்டு மல்லாமல், வசூலித்த இந்தப் பணத்தை என்ன செய்ய வேண்டு மென்பதையும் நம்மால் முடிவு செய்ய முடியவில்லை. பிள்ளைக்குப் பால் கொடுக்கின்ற தாய் தனக்குப் பால் சுரக்காதபொழுது பெரிதும் வருந்துகிறார்கள். பயன்படுத்த முடியாமல் தேங்கிக் கிடக்கின்ற நம் முடைய பணம் இதே போலத் துயரத்தை உண்டாக்குகிறது. நாட்டு மக்கள், கொடுக்கவும் உழைக்கவும் இன்று காத்து நிற்கின்றார்கள். யாரிடம் எதனைக் கொடுக்க வேண்டுமென்பதை அறிய அவர்கள் விரும்புகிறார்கள். நாட்டின் இந்த விழிப்புணர்ச்சிக்குத் தகுந்த முறையில் வழி காட்டாமல், வரன்முறை இல்லாமல் எல்லாவற்றையும் அப்போதைக் கப்போது தோன்றிய மனோநிலையுடன் செய்து முடிப் போமேயானால், இதனால் ஏற்படுகின்ற தோல்வி மனப்பான்மையை யும், வருத்தத்தையும், சகோதரப் பூசலையும் கண்டு வியப்படைவதில் பயனில்லை.

இத்தகைய நிகழ்ச்சி ஏற்படும்போது, இந்தப் பூசலுக்குக்குரிய காரணத்தைப் பற்றி ஆராய்வது பொருத்தமற்றது. பிரிட்டிஷ் காமன் வெல்தின் கீழ்ப் பணியாற்றும் சுயாட்சியே தேவை யென்று நம்மில் சிலர் கேட்கின்றோம். இன்னுஞ் சிலர் பிரிட்டிஷாருடைய தொடர்பே இல்லாமல் உள்ள சுதந்திரம் வேண்டுமென்று கேட்கிறோம். இவை கள் எல்லாமே வெறும் வார்த்தை ஜாலங்கள் என்பதை நாம் மறந்து விடுகின்றோம். இவைகளெல்லாம் மிக நீண்ட தூரத்திற்கு அப்பா லுள்ளவை. நம்முடைய அன்றாடப் பொறுப்புக்களுக்கும் இவற்றிற் கும் எவ்வித சம்பந்தமுமில்லை. ஒரு வேளை கடவுளே நம் முன் தோன்றி ஒரு கையில் காமன்வெல்தின் கீழ் உள்ள சுயாட்சியை யும், மற்றொரு கையில் இங்கிலாந்தோடு தொடர்பற்ற சுயாட்சியை யும் வைத்துக் கொண்டு, உடனே ஏதாவதொன்றைப் பொறுக்கி எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினால் அப்போது இவை இரண்டில் எதனை எடுத்துக்கொள்ளவேண்டு மென்பதைப்பற்றிச் சண்டை போட்டுக் கொள்வதில் அர்த்தமுண்டு. ஆனால் நிலத்தை உழாமல் இருக்கும் பொழுதே விளைச்சலை எவ்வாறு பங்கிட வேண்டு மென்று நீதி மன்றத்தில் வழக்குத் தொடுப்பது எவ்வளவு அர்த்த மற்ற செயல்?

தேசத்தைப் போலவே, தனி மனிதனுக்கும் விடுதலை என்பது தான் முடிவான லட்சியமாகும். இந்தத் தனி மனிதனின் விடுதலையை

யடைவதற்கு ஏற்பட்டுள்ள தடைகள் அனைத்தும் நம்முடைய குணங்களிலேயே மறைந்து கிடக்கின்றன என்றும், அவற்றை முதலில் போக்க வேண்டுமென்றும் நம்முடைய வேத நூல்கள் சொல்கின்றன. அதேபோலத் தேசீய விடுதலைக்குக் குறுக்கே கிடக்கும் பெரிய முட்டுக் கட்டைகள் பல்வேறு வடிவங்களில் நமக்குள்ளேயே கிடக்கின்றன. அவற்றைச் செயல் மூலம் நாம் போக்கவில்லையானால், வெறும் சொற்போர் மூலம் அவற்றை ஒன்றும் செய்ய முடியாது. அதற்குப் பதிலாக, சொற் போர்கள் இந்த முட்டுக் கட்டைகளை வலுவுடையனவாக ஆக்கிவிடும். தேவைப்பட்டால் அமைதியான முறையில் விடுதலையின் பல்வேறு வடிவங்களைப் பற்றியும், பிறரோடு தொடர் பில்லாத விடுதலை சிறந்ததா அல்லது பிறரோடு தொடர்பு கொள்ளும் விடுதலை சிறந்ததா என்பதைப் பற்றியும் சொற்போர் நடத்தலாம். ஆனால், தொடர்புடைய அல்லது தொடர்பற்ற சுதந்திரமாயினும் அதனைச் செயல் மூலம் அடைய முடியுமே தவிர, வேறு ஒன்றாலும் முடியாது. இரண்டு கட்சிக்காரர்களும் இதனை நன்கு மனத்தில் பதித்துக்கொள்ள வேண்டும். அதாவது வாதமோ அல்லது சண்டையோ நம்முடைய இன்றையக் கடமை யன்று என்பதை அறிந்து, நம்முடைய தேசீயப் பண்பாட்டில் உறங்கிக் கிடக்கின்ற நம்மை ஏழைகளாகவும், வலிமை யற்றவர்களாகவும், பிரிவு மனப்பான்மை உடையவர்களாகவும், அடிமைகளாகவும் ஆக்குகின்ற பண்பாடுகளை உடனே களைந் தெறிவதற்குரிய வழிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

நாட்டுக்குச் செய்யப்படும் சேவை என்ன என்பது பற்றியும் அது எந்த முறையில் நடைபெறவேண்டு மென்பதைப்பற்றியும் நம்முள் யாருக்கும் கருத்து வேற்றுமை இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. நம்முடைய குறிக்கோள்கள் எல்லாம் உடனடியாக ஏதோ ஒரு லட்சியத்தை அடைந்து விட வேண்டும் என்பதன்று. இப்போது தேவைப்படும் செயல், நம்முள் மறைந்து கிடக்கும் சக்தியை ஒருமுகப்படுத்துவதேயாகும். சக்தி வெளிப்படுவதற்குரிய வாய்ப்பான சூழ்நிலை ஏற்பட்டால் அது மிகச் சிறந்த, ஆச்சரியப் படத் தகுந்த, எதிர்பாராத வழிகளில் வெளிப்படுகின்றது.

நம்முடைய முயற்சியையும், சக்தியையும் பயன்படுத்தாமல் பயனைப் பெறக்கூடுமானால்கூட, அப்படிப் பெறும் பயன் நமக்கு நன்மை செய்யாது. ஆனால் உண்மையைக் கூறுமிடத்து, அவ்வாறு பயன் ஒன்றும் கிட்டாது. பிறருடைய கருணையின் மூலமாக எந்த ஒரு நன்மையையும் நாம் பெற முடியாது. அதற்கு எதிராக நம்முடைய

சக்தியின் மூலமாகத்தான் அதனை அடையமுடியும். இந்தச் சட்டத்தித்குப் புறம்பே (விலக்கே) இல்லை. நம்முடைய மனிதத் தன்மையை நாம் மாசுபடுத்திக்கொள்ள விரும்பினால் கடவுள் நம்மை அழித்து விடுவாரே யல்லாமல், போனால் போகட்டும் என்று விட்டு வைத்திருக்க மாட்டார்.

எனவே, எங்கெங்கே அரசாங்கம் நமக்குத் தந்திருக்கின்ற சலுகைகளை நம்முடைய சக்தியோடு பொருத்தமாக ஏற்றுக் கொள்ள முடியவில்லையோ, அந்த இடங்களிலெல்லாம், அந்தச் சலுகைகள் புளித்துப் போவதுடன், நமக்குத் தீமை செய்யும் நிலைக் களன்களாகவும் அமைந்துள்ளன என்பதை நாம் காண்கின்றோம். போலீசார்கள் தமக்குள்ள உரிமைகளை வைத்துக்கொண்டு, கொள்ளைக்காரர்களாக மாறுவார்களேயானால், அவர்களுடைய கொடுமைகளைத் திருத்துவதற்கு வழியே இல்லாமல் போய்விடும். அரசாங்கத்தினுடைய தனிப்பட்ட சலுகைகளை அனுபவித்து வருகின்ற கிராமக் குழுக்கள் ஒற்றர் குழுவாக மாறிவிடுமேயானால், அந்தக் கிராமத்திற்கு அதைவிடப் பெரிய தலைவலி வேறு வேண்டியதில்லை. ஒரு குறிப்பிட்ட இனத்தாருக்குப் பிரத்தியேகமான சலுகைகள் கொடுக்கப்பட்டால் நம்மிடையே அது வெறுப்பையும், பொருமையையும் வளர்க்கத் தொடங்கி விடுகிறது. ஆனால் நம்மிடையே சக்தியும் பலமும் வேண்டுமான அளவுக்கு இருந்திருக்குமேயானால், இத்தகைய பிழைகள் நிகழ்ந்திரா. அப்போது இந்தச் சலுகைகளைப் பெறவும், அனுபவிக்கவும் நாம் சக்தியுடையவர்களாக ஆகியிருப்போம். அந்த நேரத்தில் இந்தச் சலுகைகள் சரணடைவதற்குரிய வழிகளாக ஆக மாட்டா.

இவ்வாறு சொல்வதால் நம்முடைய வேலைத் திட்டங்களுக்கு அரசாங்கம் தரும் உதவிகளை நாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்பது கருத்தன்று. இவ்வாறு கூறுவதன் நோக்கம் என்னவென்றால், நாம் மேற்கொண்ட வேலைகளில் முழு மூச்சாக, முழு மனத்துடன் ஈடுபடக் கூடுமேயானால், யார் எந்தப் பொருளை நமக்களித்தாலும் அதனை ஏற்றுக் கொள்ள நமக்குத் தகுதியுண்டு என்பதேயாகும். இது எதுபோல் இருத்கிறதென்றால், காளி தேவிக்கு[7] ஒரு எருமை மாட்டைப் பலி கொடுக்கத் தன்னால் முடியாது என்று தெரிந்திருந்துங்கூட, எருமையைப் பலி கொடுப்பதாக ஒப்புக் கொண்ட ஒருவன் இறுதியில் அந்தத் தேவி, 'எருமை இல்லாவிட்டாலும், ஒரு வெட்டுக் கிளியையாவது எனக்குக் கொடு' என்று கேட்டபோது, வெட்டுக் கிளியைக் கூட நீயே சம்பாதித்துக்

கொள்ளலாம், என்று கூறிய கதையைப் போல நம்முடைய நிலைமையும் ஆகிவிடும். பெரிதாகப் பேசிக் கொண்டிருப்போமே தவிர, செயல்படுவதற்குரிய நேரம் வந்தவுடன், நாம் நம்முடைய கடமைகளிலிருந்து வழுவி விடுவோம்.

எடுத்துக் கொண்ட கடமையில் நாம் உண்மையாக ஈடுபடுவதானால் கோபம், கர்வம் ஆகிய எந்தக் காரணங்களைக் கொண்டும் நமக்கு எதிரே இருக்கின்றவற்றைப் புறக்கணிக்கக் கூடாது. படுக்கையில் படுத்துக் கொண்டு சோம்பியிருக்கும் பொழுது, கண்ணை மூடிக்கொண்டு நமக்கு எதிரே இருக்கின்ற பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கவனிக்காமல், கவலைப்படாமல் இருக்கலாமே தவிர, செயல் முறையில் அவ்வாறு இருப்போமேயானால் அதனால் ஒவ்வொரு நேரமும் நாமே துன்பமடைய நேரிடும். நாம் இல்லையென்றே நினைத்து பிரிட்டிஷார் நடந்துகொள்கிறார்கள் என்பது உண்மைதான். 30 கோடி மக்களிடையே வாழ்ந்துங்கூட, அவர்கள் நீண்ட தூரத்தில் இருப்பதாகவே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் போலும் நம்மிடத்தில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதைப் பற்றி எவ்விதமான பொறுப்போ, கவலையோ இல்லாதவர்களாக இருக்கிறார்கள் அவர்கள். அதன் காரணமாகத்தான் போலும் முன்னேற்றக் கருத்துக்கள் கொண்டிருந்த ஒரே குற்றத்திற்காக 15 வயதுள்ள பள்ளிப் பையனைச்[8] சிறைச்சாலையில் சவுக்கால் அடிக்கிறார்கள். அதன் பயனாகத்தான் போலும் பட்டினியால் உயிர் போகும் தறுவாயில் கதறுகின்ற மக்களைப் பார்த்து, மிகைப்படுத்திப் பேசுகிறார்கள் என்று கூறுகிறார்கள். அதன் பயனாகத்தான் போலும் மார்லியைப் போன்ற ஒரு மனிதர், வங்காள மக்களின் உணர்ச்சியைப் பற்றி ஒரு சிறிதும் கவலைப்படாமல் வங்காளப் பிரிவினை நிலை பெற்று விட்ட ஒரு நிகழ்ச்சி என்று பேசுகின்றார். ஆங்கிலேயர்கள் நினைப்பது, நடந்துகொள்வது, ஆட்சி செய்வது ஆகியவற்றைப் பார்த்தால் நம்மை யெல்லாம் பொருளற்ற பூஜ்யங்களாக மதிப்பதாகவே தெரிகிறது. எனவே, அவர்களுக்கு இதனைத் திருப்பிச் செய்யும் முயற்சியில் நாமும் கூடுமான வரை, அவர்கள் இருப்பதைப் பற்றிக் கவலைபடாமல் நடந்துகொள்கிறோம்.

ஆங்கிலேயர்கள் அவர்களுடைய கணக்குப் புத்தகங்களில் நம்மைப் பூஜ்யங்களாக எழுதிவிட்ட ஒரே காரணத்தால், நாம் பூஜ்யங்களாக ஆகிவிடப் போவதில்லை. அதற்கு எதிராக ஆங்கிலேயர்கள் தங்களுடைய கணக்குப் புத்தகத்திலுள்ள எண்களுக்குத் தகுந்த மதிப்புக் கொடுக்காத காரணத்தால், அவர்கள் போடுகின்ற

கணக்குகள் எப்போதுமே தவருக முடிகின்றன. "ஆம்" என்பதை "அல்ல" என்று பிடிவாதமாக மாற்றிவிட்டால், கணித இயல் நம்மை மன்னிக்கவே மன்னிக்காது. அவர்கள்மேல் கொண்ட கோபத்தால் தூண்டப்பட்டு, இதே குற்றத்தை நாம் இழைக்கலாமா? பிறர் மேல் கொண்டுள்ள வெறுப்புக் காரணமாக நம்மை நாமே துன்புறுத்திக் கொள்ளலாமா?

ஒவ்வொரு போரட்டத்தையும் நம்முடைய சக்தியைச் செலவழித்தே நடத்தியாக வேண்டியிருக்கிறது. எனவே, தேவையில்லாத போராட்டங்கள் நம்முடைய சக்தியை வீணடிப்பனவாகவே முடியும். தாய் நாட்டிற்குத் தொண்டு செய்ய வேண்டுமென்ற விரதம் பூண்ட அனைவரும் முள்ளின் மேல் நடக்க வேண்டியிருக்கிறது என்பதற்காக நம்முடைய பாதையில் நாமே முள்ளை நடுவது தேசபக்தி யாகுமா? அன்றி அறிவுடைமை யாகுமா? வெளிநாட்டுப் பொருள்களை பகிஷ்காரம் செய்யவேண்டுமென்று நாம் எடுத்துக் கொண்ட முடிவு பல கடமைகளை நம் மேல் சுமத்துகிறது. ஐரோப்பாவில்கூட, முதலாளிகள் தங்களுடைய இலாபத்தை மேலும் பெருக்க வேண்டி, தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில் மிகக் கடுமையான சட்டங்களைச் செய்கிருர்கள். இப்பிரச்னை காரணமாக, அங்கே கடும் போராட்டங்கள் நடைபெறுகின்றன. நம்முடைய நாட்டைப் பொறுத்தமட்டில், முதலாளி பணக்காரனுக இருப்பதோடு மட்டுமல்லாமல், சிறைச்சாலை அதிகாரியாகவும் இருந்து, தன்னையே லிவர்பூலுக்கு (இங்கிலாந்திலுள்ள தொழில் நகரம்) அடகு வைத்திருக்கின்ருன்.

ஆங்கிலேயர்கள் நம்மைச் சுரண்டுவதன் மூலமாகத்தான், இன்று உலக நாடுகளுள் தலைமையிடத்தை வகித்து வருகிருர்கள். எனவே, தம்முடைய பிடியை எளிதாக அவர்கள் விட்டுவிடுவார்கள் என்று எப்படி நாம் நம்ப முடியும்? நம்மை எதிர்நோக்கியிருக்கின்ற போராட்டம் குழந்தை விளையாட்டன்று. எனவே, நம்முடைய எல்லாச் சக்திகளையும் பொறுமைகளையும் தேவைக்கு வைத்துக்கொள்ள வேண்டும். ஏற்கனவேயுள்ள இந்தத் துன்பங்களுக்கு மேலாகப் பயனற்ற வார்த்தைகளைப் பேசி, யாரேனும் நம்முடைய பணிக்கு இடையூறு உண்டாக்குவார்களேயானல், அது பெரிதும் வருந்தத்தக்க விஷயமாகும். நாம் எடுத்துக் கொண்டிருக்கின்ற பணியின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்கிறோம். அது தோல்வி யடைய ஒருக்காலும் சம்மதியோம். நம்முடைய தொழில்களைப் பிறர் பிடியிலிருந்து விடுவித்து, கல்வியையும் தகுந்த முறையில் மாற்றி யமைத்து, பணி புரிவதற்

குரிய வலிமையை நம்முடைய சமுதாயமே பெறுமாறு செய்வோம். இவ்வாறு செய்வதற்கு நம்முடைய முழு வன்மையும் தேவைப்படும். எனவே, இப் பெரும் பணியை முடிப்பதற்கு நம்முடைய இறுதி மூச்சு உள்ள வரையில் முயல்வோம். எவ்வாறுயினும், பொருளற்ற பூசலுக்கும், பொறுப்பற்ற சண்டைக்கும் இனி அகத்தும் புறத்தும், இடங் கொடுக்கமாட்டோம். வெறும் வாய்ப் பேச்சினால் நாட்டுப் பணியை யாரும் செய்ய முடியாது. தன்னடக்கத்தினாலும், விடா முயற்சியினாலுமே நாம் தொண்டு செய்ய முடியும். நம்முடைய பணியை மேற்கொண்டு தொடர்வதற்கு எவ்வாறு, எங்கே, தொடங்க வேண்டும்? எவ்வளவுக் கெவ்வளவு கோபுரம் உயரமாக அமைகின்றதோ, அவ்வளவுக் கவ்வளவு அஸ்திவாரமும் ஆழமானதாகவே இருக்க வேண்டும். நம்முடைய தேசீய விருப்பத்தைப் பிரதிபலிக்கக்கூடிய முறையில் ஒரு பெரிய மாளிகை எழுப்ப வேண்டுமென்றால், ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் பணியைத் தொடங்கி, ஒவ்வொரு மாகாணத்திற்கும் அவை பிரதிநிதிகளாக அமைகின்ற முறையில் பணி புரிய வேண்டும். இந்த மாகாண மாநாடுகள், ஒவ்வொரு கிராமத்திலும் கிளை நிறுவனங்களை அமைத்து, மாகாணத்தின் ஒவ்வொரு பகுதியைப் பற்றிய எல்லாவிதமான தகவல்களையும் சேகரிக்கத் தொடங்க வேண்டும். செம்மையான முறையில் பணி புரிவதற்குத் துல்லியமான அறிவு தேவையென்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

கிராமங்கள் தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளப் போதுமான சக்தியைப் பெற வேண்டுமென்பது நம்முடைய லட்சியமாகும். பல கிராமங்களை ஒன்று சேர்த்து ஒரு பிராந்திய யூனிட்டாக அமைக்க வேண்டும். இந்த யூனிட்டுகளின் தலைவர் அந்த யூனிட்டைச் சேர்ந்த கிரமாங்களின் தேவைகளையெல்லாம் அறிந்து, செயல்படுத்தக்கூடிய சக்தியைப் பெறுகின்ற பொழுதுதான் சுயாட்சி என்பது பொருளுடையதாக இருக்கும். அவர்கள் தங்களுக்குத் தேவையான பள்ளிக்கூடங்கள், தொழிற்பட்டறைகள், களஞ்சியங்கள், கூட்டுறவுப் பண்டசாலைகள், பாங்குகள் ஆகியவற்றைத் தோற்றுவித்து வளர்த்துக் கொள்ளப் பழக வேண்டும். ஒவ்வொரு சமுதாய யூனிட்டும் தாங்கள் அனைவரும் கூடுவதற்குரிய ஒரு பொது இடத்தை உண்டாக்கி, அங்கே நியமிக்கப்பெற்றுள்ள தலைவர், அவர்களுடைய வழக்குகள் முதலியவற்றை விசாரித்து, அப்போதைக் கப்போது முடிவு சொல்ல ஏற்ற இடமாகவும் அதை அமைக்க வேண்டும்.

நிலச் சொந்தக்காரனும், உழவனும் ஆளுக்கு ஒரு வழியில் போகின்ற வரையில் இருவருமே உருப்பட முடியாது. உலகம் முழுவதிலும் மக்கள் தங்களுடைய சக்திகளைச் சேகரிப்பதற் கேற்ற முறையில் யூனியன்களை உண்டாக்கிக் கொள்கிறார்கள். நவீன உலகில் யரேனும் பிரிந்து தனியே வாழ முற்பட்டால் அவர்கள் அடிமைகளாகி, விறகு பிளக்கும் வேலையைத் தவிர, வேறொன்றும் செய்ய முடியாதவர்களாக ஆகிவிடுகிறார்கள். நாம் அனைவரும் ஒன்று கூடி, கரையை உயர்த்தும் வேலையில் ஈடுபட்டாலொழிய, ஆற்றிலுள்ள தண்ணீர் கசிந்து சென்று பிறருடைய குளங்களை நிரப்புவது போல, நம்முடைய முயற்சியும் பயனற்றுப் போவதுடன், பிறருக்குப் பயன்படுவதாகவும் முடியும். அங்நிலையில் நாம் தயாரிக்கும் உணவை யெல்லாம் பிறருக்கு அளித்துவிட்டு, நாம் பட்டினி கிடக்க நேரிடும். ஏன் பட்டினி கிடக்கிறோம் என்பதைக்கூட அறிந்துகொள்ள முடியாத நிலையில் நாம் இருக்க நேரிடும். எனவே, யாருக்குப் பணி புரிய விரும்புகின்றோமோ, அவர்களை யெல்லாம் ஒன்று சேர்ப்பதே நமது முதல் வேலையாகும்.

உழைப்பைக் குறைக்கின்ற எத்தனையோ கருவிகள் ஐரோப்பாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன; ஆனால் நம்மில் ஒவ்வொருவரும் பெற்றிருக்கின்ற நிலங்களின் அளவு மிகச் சுருங்கி இருப்பதால், இந்த ஐரோப்பியக் கருவிகள் நம்மைப் பொறுத்த மட்டில் பயன்படாமல் இருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திலுள்ள, அல்லது அதனையும் விடச் சிறப்பாகச் சமுதாயத்திலுள்ள குடியானவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கூட்டுறவு முறையில் தங்கள் நிலங்களைப் பயிர் செய்வார்களேயானால், அதிகப்படியான சாகுபடி கிடைக்கும் முறையில் மேலை நாட்டு யந்திரங்களை உபயோகப்படுத்தி, அதனால் அதிகப்படியான பயனையும் பெற முடியும். கிராமத்திலுள்ள கரும்பு முழுவதையும் ஒரே யந்திரத்தில் சாறு பிழிவதானால், அந்நிலையில் விலை யுயர்ந்த ஒரு யந்திரத்தை வாங்குவதுகூட இலாபகரமாகவே இருக்கும். கிராமத்தில் விளைகின்ற எல்லாச் சணல் பயிரையும் பொதுவான ஓர் இடத்திற்குக் கொண்டுவருவதானால், கிராமம் முழுவதற்கும் ஒரு சணல் அமுத்தும் யந்திரத்தை வைத்துக் கொள்வதில் கூடுமேயானால், கால்நடை வளர்ப்புத் துறையில் நல்ல முன்னேற்றம் காண முடியும். கிராமத்திலுள்ள நெசவாளிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து கூட்டுறவு முறையில் பணி புரியக்கூடுமேயானால், நல்ல விசைத் தறிகளை வைத்துக் கொள்வதுகூட இயலக் கூடியதாகும்.

நகரங்களில் பெரு முதலாளிகளால் அமைக்கப்பெற்ற பெரும் தொழிற்சாலைகளில் வேலை செய்வதற்காக, தொழிலாளர்கள் கிராமங்களை விட்டுச் சென்று விடுவதால், எத்தகைய ஓர் அழிவு நிலைமை ஏற்படுகிற தென்பதை நாம் அறிவோம். நம்முடைய நாட்டைப் போலக் குடும்பங்களை அடிப்படையாகக் கொண்ட சமுதாயக் கட்டுக்கோப்புகள் நிறைந்த இடங்களில் இதனால் ஏற்படுகின்ற தீமை மிகவும் அதிக மாகும். குடும்ப வாழ்க்கை இங்ஙனம் குலைக்கப்பட்டால், சமய வாழ்க்கையின் அடிப்படையே கெட்டுச் சமுதாயத்தினுள்ளே தீமைகள் நிறையத் தொடங்கி விடுகின்றன. பெரிய பெரிய தொழிற்சாலைகள் ஏற்பட்டு அவைகள் பெரிய நீர்ச் சுழல்களைப் போல, ஏழைக் கிராமவாசிகளைத் தன்னுள்ளே இழுத்துக்கொள்ளுமேயானால், அத் தொழிற்சாலைகளில் எவ்வித மான மகிழ்ச்சியும் இல்லாமல், யந்திரங்களைப் பராமரிக்கும் தொழிலில் இந்தக் கிராம மக்கள் ஈடுபடுவார்களேயானால், இத்தகைய தொழிலினால் ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஏற்படக்கூடிய பெரும் துன்பத்தை எளிதாக நாம் நினைந்து பார்க்க முடியும். யந்திரங்களைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்குவதற்காக மனிதனுடைய மதிப்பைக் குறைத்து விடுகின்ற எந்த ஒரு முயற்சியையும் சமுதாயம் பொறுக்க முடியாது. கிராமத்தார்கள் பலரும் ஒன்று கூடி, தங்களுடைய கிராமச் சூழ்நிலையிலேயே அவர்களால் பயன் படுத்தக் கூடிய யந்திரங்களை நிறுவுவார்களேயானால், அதனால் பெரும் பயன் விளையும். பொருளாதார முறையில் ஏற்படுகின்ற இலாபத்தை யல்லாமல், ஒற்றுமையாகப் பணிபுரிவதால் பெரும் பாலான மக்களுக்கு ஏற்படக்கூடிய பயனையும் இது எடுத்துக் காட்டும். ஒவ்வொரு மாகாண மாநாடும், இந்த முறையில் ஒரு சமுதாய யூனிட்டை நடைமுறையில் தயாரித்துக் காட்டக்கூடுமே யானால் அதனுடைய வெற்றி வெகு விரைவில் நாடு முழுவதும் பரவி விடும்.

இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாநிலமும் இம் முறையைக் கை யாண்டு தன்னம்பிக்கையோடு, வாழக்கூடுமேயானால் நாடு முழு வதற்கும் சேர்த்து மத்திய யூனிட் ஒன்றை நிறுவுவதற்குரிய காலம் விரைவில் வந்து சேரும். அங்ஙனம் நிறுவப்பட்ட மத்திய இடந்தான் இந்தியாவின் கேந்திர ஸ்தானமாகும். இம்மாதிரி நடைபெறுத வரையில் மத்திய நிறுவனம் என்பதெல்லாம் பொருளற்றதாகி விடும். இன்று, வட்டமே இல்லாதபொழுது 'மையம்' என்றும் 'மத் தியம்' என்றும் சொல்வதற்குப் பொருளேயில்லை. காங்கிரஸ் தேசீயப் பணியில் ஈடுபடாமல் சபைகள் கூட்டி, பரிதாபமான முறையில்

தன்னுடைய குறைகளை வெளியிடவும், பொறுப்பற்ற முறையில் புத்திமதி கூறவும்மட்டும் செய்யுமேயானால் நாட்டின் ஆட்சித் துறையில் தனக்கு ஒரு பங்கு வேண்டுமென்று கேட்கக்கூடிய சக்தியை அது எங்ஙனம் பெற முடியும்?

நம்முடைய கைத்தொழில்களை யெல்லாம் பெரிய யந்திரங்கள் ஒருபுறம் கொன்று குவிக்க, நம்முடைய கிராம நிறுவனங்களை யெல்லாம் வெளிநாட்டு அரசாங்கம் கொஞ்சங் கொஞ்சமாகக் கொன்று வருகிறது. ஒரு சிறிய யூனிட் நம்முடைய தேவைகளுக்கு ஏற்பப் பெருகுகின்ற நிலையில் வலுவுடையுமானால், அதனால் விளையும் பயனும் நன்றாக இருக்கும். ஆனால் அதே நேரத்தில் இந்தப் பெருக்கம் இயல்பானதாக இருக்க வேண்டும். நம்மிடத்திலிருந்த கிராம நிறுவனங்கள் சிறியனவாக இருந்திருக்கலாம். ஆனால் அவை நம்முடையனவாக இருந்தன. ஆங்கிலேயர்கள் நியமித்த நிறுவனங்கள் மிகப் பெரியனவாக இருக்கலாம்; ஆனால் அவை நம்முடையன அல்ல. அவை நம்மைச் செயல்படாத சோம்பேறிகளாக ஆக்கியதோடுகூட, நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்ய முடியாமலும் இருக்கின்றன. நம்முடைய கண்களை இழந்துவிட்டோம் என்பதற்காக அந்த இடத்தில் பிறருடைய கண்களைப் பயன்படுத்தத் தொடங்கினால் அதனால் எவ்விதமான இலாபமும் விளையப் போவதில்லை.

இக் காலத்திய கிராம மக்கள், தொண்டு செய்வது பற்றிய உயர்ந்த குறிக்கோளையோ அல்லது தன்னலத் தியாக வாழ்க்கையையோ பெற்றிருக்கவில்லை. அந்தராத்மாவிலிருந்து வெளிப்படுகின்ற கட்டுப்பாடுகள் எதுவும் அவர்களிடம் இப்போது இல்லை. குழப்பம் விளைவிக்காமல் அவர்கள் அடங்கி யிருப்பதற்குள்ள ஒரே காரணம் உயிரற்ற சட்டங்களைக் கண்டு கொள்ளும் அச்சமேயாகும். பொய்யான வழக்குகளை ஜோடித்து ஒருவரையொருவர் பிராண்டிக் கொண்டிருக்கின்ற காட்சிகள் நிறைந்துள்ள இந்தக் கிராமங்களில், அவர்களுக்கு நீதியை எடுத்துச் சொல்வோர் யாரும் இல்லை. இதனிடையில் கிராமங்கள் எல்லாம் பெரும் காடுகளாக மாறிக் கொண்டிருக்கின்றன. அன்றியும் மலேரியா போன்ற கொள்ளை நோய்கள் அங்குத் தாண்டவமாடுகின்றன. பல வருஷங்களுக்கு ஒரு முறை வந்த பஞ்சம் இப்போது அடிக்கடி வரத் தொடங்கி விட்டது. இரண்டு அறுவடைகளின் இடைப்பட்ட காலத்தில் மக்களுடைய பசியைப் போக்க வைக்கப் பட்டிருக்கும் உணவு எங்கேயோ சென்று மறைந்து விடுகிறது.

கிராமங்களிலுள்ள வீடுகளைத் திருடர்கள், கொள்ளைக்காரர்கள் ஆகியவர்களிடமிருந்து பாதுகாக்க இளைஞர்கள் கூட்டமோ அல்லது சமுதாயப் பொறுப்போ கிராமங்களில் இல்லை. குற்றங்களை விசாரிப்பதற்காக என்று சொல்லிக்கொண்டு போலீசார் புகுந்து செய்யும் அட்டூழியங்கள் மிகுந்துள்ளன. உடலில் உயிரை ஒட்ட வைப்பதற்கும், நோயை எதிர்த்துப் போராடுவதற்கும் தேவையான சக்தியைத் தருகின்ற உணவு எங்கே? பாலின் விலை எல்லை கடந்து விட்டது, நெய்யில் கலப்படம்; மீன் என்பது காண முடியாத பொருள். எண்ணெய் என்ற பெயரில் கலப்பற்ற விஷம் விற்கப்படுகிறது. பெருத்துப் போன நம்முடைய நுரையீரலிலும், பித்தப் பையிலும் எல்லையற்ற உள் நாட்டு வியாதிகள் இருந்து ஆட்சி புரிகின்றன. இவற்றையல்லாமல் வெளி நாட்டு வியாதிகள் பலவும் நம்மைத் தேடி முகாம் செய்துவிட்டன.

உணவு இல்லை; உடல் வசதி இல்லை; மகிழ்ச்சி இல்லை; நம்பிக்கை இல்லை; அடுத்தவனுக்கு உதவும் ஆளும் இல்லை. அடி விழும் பொழுது தலையைக் குனிந்து கொண்டு அதனை ஏற்றுக் கொள்கிறோம். மரணம் பயமுறுத்தும்பொழுது எதிர்த்துப் போராடச் சக்தியற்று அதனிடம் சரணடைகிறோம். நியாயம் மறுக்கப்படும்பொழுது நம்முடைய காலம் கெட்டு இருக்கிறதென்று சமாதானம் செய்து கொள்கிறோம். நம்முடைய அடுத்த வீட்டுக்காரர்கள் துன்பப்பட்டால் ஆண்டவன் காப்பாற்றுவான் என்று சொல்லி விடுகிறோம். வேரில் பிடித்த புழுவின் காரணமாக இன்றைய நிலை இவ்வாறு உள்ளது. உயிரை வளர்க்க வேண்டிய மண் காய்ந்து விட்டது. தேச மக்களைத் தாய்போன்று இருந்து காப்பாற்றியும், தேசத்தின் முயற்சிகளுக்குச் சுமைதாங்கியாக இருந்தும் வந்த கிராம சமுதாயங்கள் அழிக்கப்பட்டு இன்று உயிரற்ற நிலையில் உள்ளன. உயிரூட்டம் தருகின்ற கிராம நிறுவனங்கள் வேரோடு பறிக்கப்பட்டுக் காலம் என்ற ஆற்றில் மிதந்து செல்கின்ற கட்டைகளாக மாறி விட்டன.

புறத்தேயிருந்து மாற்றங்கள் புகுத்தப்படுமேயானல், பழைய சமுதாய நிறுவனங்கள் கேட்பாரற்ற நிலையில் இறந்துவிடுகின்றன. புதிய புதிய காலங்களில் ஏற்படுகின்ற புதிய தேவைகளையொட்டி, புதிய நிறுவனங்களை உண்டாக்க முடியாத தேசங்கள் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் கனவாய் அழிந்து மறைந்து விடுகின்றன என்று சரித்திரம் பேசுகிறது. நம்முடைய இனம் கொஞ்சங் கொஞ்சமாக அழிந்து போவதைக் கண்ணயராமல்

இருந்து நாம் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறோமா? மலேரியா, பஞ்சம், தொத்து நோய், என்பவை திடீரென்று தோன்றுகின்றன என்று யாரும் நினைக்கவேண்டா. நம்மைப் பற்றி விடாது நிற்கின்ற நோயின் அடையாளங்களே அவை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இவற்றை யெல்லாம்விட., வருத்தத்தை விளைவிக்கக் கூடிய ஒன்று, நம்முடைய மனத்திலே புகுந்திருக்கின்ற சரணகதி தத்துவம்தான். என்று ஒரு நாடு தன்னம்பிக்கையை இழக்கிறதோ, என்று தனக்குத்தானே எதுவும் செய்துகொள்ள முடியாது என்று நினைக்கிறதோ, என்று எல்லா நிகழ்ச்சிகளையும் விதியின் விளையாடல் என்று சொல்லிவிட்டு வாளாவிருந்துவிடுகிறதோ, என்று உதவியற்ற நிலையில் நம்பிக்கையை இழந்து வாய்மூடி நின்றுவிடுகிறதோ, அன்று புறத்தேயிருந்து வருகின்ற சிறு எதிர்ப்பையும் சமாளிக்க முடியாமல் மிகச் சிறு காயத்தால்கூட அந்த நாடும், இனமும் உயிரிழக்க நேரிடலாம். அத்தகைய நிலையில், மரணத்தைக் கண்டு அஞ்சுவதன் மூலமே, அந்த இனம் மரணத்தை வரவேற்கின்றது.

நம்முடைய தேசீய விழிப்புணர்ச்சி, சமுதாயம் முழுவதிலும் சமமாகப் பரவியிருக்கவில்லை யென்பதை மிக எளிய சோதனை ஒன்றின் மூலம் எடுத்துக் காட்டலாம். நம்முடைய விழிப்புணர்ச்சி நகரங்களில் மட்டும், அதிலும் நகரச் சமுதாயங்களின் ஒரு சிலவற்றில் மட்டிலுமே ஏற்பட்டுள்ளது. சுதேசி இயக்கம்[9] நகரங்களிலுள்ள கற்றறிந்த மக்களாலேயே தொடங்கப்பெற்றது. நாளாவட்டத்தில் அதற்குரிய விலையைக் கிராமத்தார்கள் கொடுக்கப் போகிறார்களே தவிர நகரத்தார்கள் அல்லர். இளமையில் பாட்டி சொல்லும் கதைகளில் உலகத்தையே நசுக்குகின்ற "ஜகத்தால் கல்"[10] என்ற கல்லைப் பற்றிக் கேட்டிருக்கிறோம். இந்தக் கல்லைப் போன்ற போலீஸ் படை ஒவ்வொரு கிராமத்தின் நெஞ்சின் மேலும் வைக்கப்பட்டுள்ளது. எளிய கிராம மக்களை நசுக்குகின்ற இந்தப் பாரத்தை நாமும் ஏன் பங்கிட்டுக் கொள்ளக்கூடாது? அவர்களுடைய வருத்தத்தை நாம் ஏன் அடையவில்லை? அதனைப் பங்கிடுவதன் மூலம் பாரத்தையாவது பங்கிடலாம் அல்லவா? சுதேசிய இயக்கத்தைப் பற்றிப் பிரசாரம் செய்வது குற்றம் என்றால், நாம் அனைவருமே சமமான குற்றவாளிகளாவோம். நாம் அனைவரும் இந்தக் கொடுமையைச் சகித்துக் கொள்ளப் பழகிக் கொண்டால் அப்போது அது பாரமாக இராமல் தேசிய முன்னேற்றத்திற்குரிய ஒரு பாதையாக அமைந்து விடும்.

என்றாலும், தூரத்தில் இருந்துகொண்டு தருமம் செய்வது போல் அதற்குச் செலவழிப்பது எந்தப் பயனையும் தராது. சில நாளைக்கு முன்பு மிக உயர்ந்த போலீஸ் அதிகாரி ஒருவர் சில செம்படவர்களுக்கு நஷ்டத்தை உண்டாக்கியதோடு திருப்தி யடையாமல் உள்ளூர் விசாரணை என்ற பெயரில் ஒரு கிராமம் முழுவதையும் அலைக்கழித்தார் என்று கேள்விப்பட்டேன். அந்தச் செம்படவர்களை வரவழைத்து, அவர்கள் வழக்கை எடுத்து நடத்தக் கூடிய ஒரு சிறந்த வழக்கறிஞரைக் கல்கத்தாவில் இருந்து அனுப்பும் செலவை நான் ஏற்றுக்கொள்வதாகக் கூறினேன். குவித்த கைகளோடு அவர்கள் என்னை நோக்கி, "ஐயா, வழக்கில் நாங்கள் வெற்றி பெற்றால்தான் என்ன பயன்? போலீஸார் என்றும் எங்கள் கூடவே இருந்து வருவார்கள். ஆகவே, இனி அமைதியாக வாழவே முடியாமல் போய்விடும்" என்று கூறினார்கள். அவர்கள் சொல்வதில் ஒரு நியாயம் இருப்பதை நானும் உணர்ந்தேன். பல மற்றவர்கள், வெற்றியில்கூடத் துன்பத்தைத்தான் அடைகிறார்கள். ஆபரேஷன் என்று சொல்லப்படும் அறுவை மருத்துவம் மிக வெற்றிகரமாக நடைபெறலாம். ஆனால் வலு விழந்த நோயாளி அவ்வளவு பெரிய சோதனையில் வெற்றி பெறுவதில்லை. உண்மை யான கொடை என்பது வன்மையைக் கொடுப்பதாகும். ஏனைய நன்கொடைகள் பயனற்ற கொடைகளாகும்.

ஒரு குழந்தை ஆண்டவனிடத்தில் அழுது கொண்டே சென்று "ஆண்டவனே, உலகத்திலுள்ள எல்லா உயிர்களும் என்னையே விழுங்க முயலுகின்றனவே, ஏன்?" என்று கேட்டதாம். அதற்கு ஆண்டவன், "அருமைக் குழந்தையே, அதற்காக நான் என்ன செய்ய முடியும்? உன்னை நான் பார்க்கும்பொழுது, உன்னை விழுங்க வேண்டுமென்று எனக்கேகூடத் தோன்றுகிறது" என்று பதில் கொடுத்தாராம்.

தகுதியற்றவருக்கும், வலிமையற்றவருக்கும் நியாயம் வழங்கப் படும் என்ற உறுதியை ஆண்டவன்கூடத் தரமுடியாது. இந்நிலையில் ஆட்சியாளரோ அல்லது பாராளுமன்றமோ நியாயத்தை வழங்க வேண்டுமென்று நாம் ஏன் ஓயாமல் கேட்க வேண்டும்? நல் லெண்ணம் என்பது இந்தச் சமயத்தில் பொருத்தமற்ற வாதமாகும். வலிமையற்றவர்களோடு சேரும்பொழுது சட்டமும் வலிமையற்ற தாகி விடுகிறது. போலீஸார் கொடுமை இழைப்பவர்களாக இருக் கிறார்கள். போலீஸாரின் கொடுமைகளுக்குப் பயந்து நாம் யாரி டத்தில் சரண் புகுகிறோமோ, அவரே போலீஸாரின் சிறந்த துணைவ

ராகிறார். தம்மால் ஆளப்படும் மக்களை வலிமையுடையவர்களாகச் செய்யவேண்டு மென்பது நம்மை ஆள்வோரின் கொள்கைக்கு விரோதமானது என்பதை நாம் உணர வேணடும். போலீஸ் விசாரணைக் கழகத்தில் உறுப்பினராக இருந்து நீதி வழங்குகின்ற நேரத்தில், போலீஸாரே அதிகப்படியான குற்றம் புரிந்திருக்கிறார்களென்று எந்த ஒரு மனிதன் சொன்னாரோ, அதே மனிதன், ஆட்சி செய்கின்ற நேரத்தில் போலீஸாரினுடைய பொறுப்பற்ற அதிகாரத்தை ஒரு சிறிது குறைக்க வேண்டுமென்று சொன்னால் கூட அது முடியாது என்று மறுத்துப் பேசுகின்றான். ஒருவேளை தன்னால் ஆளப்படும் மக்கள் பலம் பெற்று விட்டால் தன்னையே எங்கே எதிர்த்துவிடுவார்களோ என்ற அச்சம் அவனுக்கு இருக்கலாம். தங்களுடைய வாய் மெல்லுவதற்கேற்ற மென்மைத் தன்மை பெற்றிருக்கின்ற உணவை இன்னும் வலுவடையச் செய்து விட்டால் அவர்களால் மென்மையாக மெல்ல முடியாமல் போகலாம். வலிமை யற்றவர்களை வாட்டி வதைக்கின்ற இவர்கள் சிறு தெய்வங்கள் போலும்!

எனவே என்னுடைய நாட்டிலுள்ள நிலச் சொந்தக்காரர்கள் அனைவரையும் ஒன்று வேண்டிக் கொள்கிறேன். இவர்கள் தங்கள் நிலங்களில் வாழ்கின்றவர்களைக் கல்வி உடையவர்களாகவும், வலிமையும் வளமும் உடையவர்களாகவும் ஆக்க வேண்டும். நிலக்கிழார் முதல் மற்றவர் வரை எந்தப் பகுதியிலிருந்து பகை தோன்றினாலும், அந்தப் பகையை எதிர்த்துச் சமாளிக்கக் கூடிய வலிமையைப் பெற வேண்டும். அவ்வாறு இல்லாமல்போனால் அரசாங்கச் சட்டத்தின் மூலம் குத்தகைதாரருடைய உரிமையை கொடுத்துவிட முடியாது. அவர்களுடைய குறையைக் காண்கின்ற ஒவ்வொருவரும் அவர்களை எப்படியாவது விழுங்கிவிடவே நினைப்பார்கள்.

நம்முடைய நாட்டின் பெரும் பகுதியான மக்கள், நிலச் சொந்தக்காரர்களுக்கும், லேவாதேவிக்காரர்களுக்கும், போலீஸார்களுக்கும், வரி வசூல் அதிகாரிகளுக்கும் சட்ட மன்றக் குமாஸ்தாக்களுக்கும் ஆகாரமாகக் கூடிய நிலையில் இருந்தால் நாட்டின் இளைஞர்களை எவ்வாறு கரையேற்ற முடியும்?

இறுதியாக, எவ்விதமான இன்னல்களையும் பொருட்படுத்தாமல் விருப்பத்தோடு முன்வந்து, நாட்டின் சேவைக்கு உங்களையே அர்ப்பணித்துள்ள இளைஞர்களாகிய உங்கள் அனைவருக்கும் தாய்

நாட்டின் ஆசிர்வாதம் முழுவதும் கிடைப்பதாக. விடியற்கால நேரத்தில் எழுந்து, அன்றைப் பகல் வேளையில் ஏற்படக்கூடிய எல்லாத் துன்பங்களையும் ஏற்றுக்கொள்ள, அனைவருக்கும் முன்னரே எழுந்து வந்திருக்கிறீர்கள். உங்களுடைய ஆண்மை, போர் முரசொலியில் மட்டுமல்லாமல் வறண்ட பூமியில் பெய்கின்ற கருணை மழையிலும் விளங்குகின்றது. கீழே தள்ளப்பட்டு, மிதிக்கப்பட்டு, பிறருடைய பழிச் சொல்லுக்கும், எள்ளலுக்கும் நிலைக்களமாய் தம்முடைய குடும்பத்தை யல்லாத பிறரிடமிருந்து எந்த விதமான மரியாதையையும் எதிர்பார்ப்பதற் கில்லாதவர்களாய், மனிதர்கள் என்ற முறையில் தங்களுக்குக் கிடைக்கின்ற உரிமைகளைக் கூட அறியாதவர்களாய் வாழ்கின்ற மக்கள், உங்களுடைய தூண்டுதலினாலே மனித சகோதரத்துவம் என்றால் என்னவென்பதை அறிந்து கொண்டிருக்கிறார்கள்.

இன்று உங்களிடத்தில் இயல்பாக அமைந்துள்ள சக்தி அன்பாகப் பரிணமித்திருக்கின்ற காரணத்தால், வேற்றுமைத் தடைகளை உடைத்துத் தள்ளிப் பாலைவனம் சோலைவன மாகின்ற நிலை ஏற்பட்டு விட்டது. ஏனென்றால் யாருக்கும் ஆண்டவன் தன் கருணையை மறுப்பதில்லை. "பகீரதனுடைய[11] தவம் கங்கா தேவியை மேலேயிருந்து கொண்டுவந்து, அவனுடைய முன்னோர்களின் சாம்பலின் மேல் பாயச் செய்து மீண்டும் உயிர் பெறுமாறு செய்தது" போல உங்களுடைய முயற்சிகள் புதிய இந்தியாவுக்குப் புத்துயிரை ஊட்டுகின்றன. எப்படிக் கங்கையின் போக்கை, இந்திரன் யானையாகிய ஐராவதமும் தடுத்து நிறுத்த முடியவில்லையோ, அதுபோல இந்த முன்னேற்றத்தையும் யாரும் தடுத்து நிறுத்த முடியாது. இந்தியாவின் விதியை முடிவு செய்கின்ற ஆண்டவனே அனுப்பிய தூதுவர்களாக இன்று உங்களைக் காண்கின்றேன். இதே நேரத்தில் நாட்டு சேவைக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொள்ளுதல் என்பது அர்த்தோதய[12] திருவிழாவில் ஆற்றில் ஒரு முறை மூழ்கி எழுந்திருப்பது போல ஒரு வினாடியில் அல்லது ஒரு நேரத்தில் முடிந்து போகின்ற காரிய மன்று என்பதை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். திக்கற்ற இந்தியக் குழந்தைகள் அனுபவித்த துன்பமும், கொடுமையும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்தில் நிகழ்ந்தவையல்ல. அவர்களுடைய முயற்சி யில்லாமல் உங்கள் முயற்சியால் மட்டும் அவர்களை நீங்கள் காப்பாற்றிவிட முடியும் என்று நினைத்துவிட வேண்டா.

வலிமையுடையவர்களாகவும் தத்தமைக் காத்துக் கொள்ளக்கூடியவர்களாகவும் இருக்குமாறு அவர்களுக்குப் பயிற்சி அளியுங்கள்; அந்த ஒரே வழிதான் உண்டு. நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு கிராமத்தை உங்களுடைய பொறுப்பில் எடுத்துக் கொண்டு, அதனைச் செம்மைப்படுத்த முயலுங்கள். கிராமத்தார்களுக்குக் கல்வியறிவு, புதிய முறையில் விவசாய உற்பத்தி ஆகியவற்றைக் கிராமங்களிலேயே செய்யப் பயிற்சி அளியுங்கள். அந்த மக்கள் தங்களுக்குத் தேவையான அழகிய வீடுகளைச் சுத்தமாகவும், வசதியோடும் கட்டிக்கொள்ளுமாறு அவர்களுக்கு ஊக்கம் அளியுங்கள். கூட்டுறவு முறையின் பயனை அவர்களுக்கு எடுத்துச் சொல்லி, அவர்களுடைய சமுதாயத் தேவைகளைப் பூர்த்திச் செய்வதற்குரிய ஒற்றுமையான பலத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு செய்யுங்கள். இம் முயற்சியில் புகழோ, பெருமையோ கிடைக்குமென்று எதிர்பார்க்க வேண்டா. யாருக்காக நீங்கள் உயிரைக் கொடுத்து உழைக்கப் போகின்றீர்களோ, அவர்களிடமிருந்து அவநம்பிக்கை, எதிர்ப்பு என்ற இரண்டையும் நீங்கள் எதிர்பார்க்கலாமே தவிர, நன்றியறிதலை ஒருநாளும் எதிர்பார்க்க முடியாது. இந்த வேலைத் திட்டத்தில் எந்தவிதமான மனக் கிளர்ச்சியோ, போராட்டமோ, மனச் சந்துஷ்டியோ இருக்க முடியாது. இதற்குத் தேவைப்படுவதெல்லாம் எல்லையற்ற பொறுமை, அன்பு, மௌனமான முயற்சி ஆகியவையேதாம். என்றாலும் ஒரு முழுமூச்சான தீர்மானம் உங்களுடைய மனத்திலிருந்து இந்த வேலையைச் செய்யுமாறு தூண்ட வேண்டும். இந்த நாட்டில் யார் மிகுதியும் துன்பப்படுகிறார்களோ, அவர்களுடைய துன்பத்தில் பங்கு கொள்வதே உங்கள் வாழ்க்கையின் நோக்கமாக அமைய வேண்டும். நீங்கள் அந்தத் துயரத்தில் பங்குகொள்வதன் மூலம் அதனை வேரோடு களைந்தெறிவதற்குரிய வழிகளைக் காண முயல வேண்டுமென்பதே நீங்கள் செய்து கொள்ள வேண்டிய தீர்மானமாகும்.

இத்தகைய குழுக்களை ஒவ்வொரு ஜில்லாவிலும் அமைக்க வேண்டிய பொறுப்பை இந்த மாகாண மாநாடு ஏற்றுக்கொள்ளுமேயானால், அவ்வாறு அமைக்கப்பட்ட ஒவ்வொரு ஜில்லா நிறுவனமும், ஒவ்வொரு கிராமத்திற்கும் பரவுமேயானால் அப்போதுதான், அந்த நிலைமை ஏற்பட்ட பிறகுதான், நம்முடைய தாய் நாடு நம்முடையது என்று சொல்லக் கூடிய நிலையை அடையும். அப்போதுதான் நாட்டின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் உயிருள்ள இரத்த ஓட்டம்

காங்கிரஸில் பாயும். அப்போதுதான் பல்வேறு இரத்த நாளங்களின் வழியே நல்ல இரத்தம் ஓடி, இந்தியாவின் இருதயம் என்றும், அதன் உயிர்த் துடிப்பின் அடையாளம் என்றும் சொல்லக்கூடிய நிலையைக் காங்கிரஸ் பெற முடியும்.

இந்தத் தலைமை உரையில் நடைமுறை நிகழ்ச்சி நிரலில் காணப்படுகின்ற எந்த ஒரு விஷயத்தையும்பற்றி நான் குறிப்பிட வில்லை. ஆனால் நாட்டுப் பணியில் நம்முடைய கடமைகள் எவையாக இருக்க வேண்டுமென்ற அடிப்படைக் கொள்கைகளைப் பற்றி ஒருவாறு எடுத்துக் காட்டியுள்ளேன். இவற்றைக் குறித்து மறு படியும் உங்கள் முன்னர்க் கூற விரும்புகிறேன் :—

(1) நவீன யுகத்தின் தேவைகளையும், நம்முடைய சமுதாய நிலைமைகளையும் ஒற்றுமைப்படுத்தினாலொழிய, நாம் இருளில் தள்ளப்படுவோம். நிறுவுதல், ஒற்றுமைப்படுத்தல், ஒன்றுக்கல் என்பவைதாம் இன்று நம்முடைய தாரக மந்திரம். தனிப்பட்ட மனிதர்கள் பலர் கூடிய தொகுப்பில் பல நற்பண்புகள் காணப்படலாம். ஆனால், ஒழுங்கு முறை யில் நிறுவப்பெற்றுள்ள ஒரு மக்கள் கூட்டத்தோடு இத் தொகுப்பு நின்று போராட முடியாது. எனவே உயிர் பிழைக்கும் போராட்டத்திற்கு நம்முடைய கிராமங்களைத் தயார் செய்ய வேண்டும். மரணத்தை நோக்கி அவர் களைச் செலுத்திக் கொண்டிருக்கின்ற பிரிவினை உணர்ச்சியை ஒரே அடியாக ஒழிக்க வேண்டும்.

(2) நம்முடைய தேசீய விழிப்பு மனப்பான்மை நாடு முழுவதும் ஒரே அளவில் பரவியுள்ள தென்று கூறுவதற்கில்லை. ஓர் உறுப்பைப் பலப்படுத்திக் கொண்டிருக்கின்ற அந்த நேரத்தில் மற்றொரு பகுதி வாடி வதங்குகின்றது.

கற்றறிந்த கூட்டத்தாரும், பொதுமக்கள் கூட்டமும் வெவ்வேறு பிரிந்து நிற்பதனால் தேசீய ஒறறுமை என்பது கிடைக்காத பொருளாக இருக்கின்றது.

(3) தேசீய விழிப்பு மனப்பான்மை, அதில் ஏற்படுகின்ற ஒற்றுமை ஆகியவை, விவகார மூலமாகவோ புத்திமதிகள் மூலமாகவோ கிடைப்பதற்கில்லை. கற்றறிந்த கூட்டத் தாரும் பொது மக்களோடு ஒன்று சேர்ந்து ஒற்றுமை யுணர்ச்சியுடன் ஒரே வேலைத் திட்டத்தில் ஈடுபடும் பொழுதுதான் சகோதரத்துவ மனப்பான்மை நாடு முழுவதிலும் பரவும்.

கல்வி யறிவுடைய இன்றையக் கூட்டத்தார் தங்களுக்குள் ஒற்றுமை யில்லாமல் பிரிந்து இருக்கின்ற வரையில் அவர்கள் அனைவரையும் ஒரு சேர ஈர்க்கின்ற ஒரு தேசீய வேலைத் திட்டத்தைச் செய்வது இயலாத காரியம். பல் வேறு வழிகளும், துறைகளும் இருக்கலாம்; அவ்வா றிருப்பது முடிவான நன்மைக்கே என்றுகூடச் சொல்லலாம். இவை பற்றிய நீண்டகால ஆராய்ச்சியை எதிர் காலத்திற்கும், சொற்போர் அரங்குகளுக்கும் வைத்துக்கொள்ள லாம். அனைவரும் சேர்ந்து ஈடுபட வேண்டிய ஆபத்தான பிரயாணத்தை உடனே தொடங்க வேண்டு மென்பதிலும், நாட்டைத் துண்டாடி அழித்து விடுவதிலிருந்து காப்பாற்ற வேண்டுமேயானல் நம்முடைய வேற்றுமைகளை யெல்லாம் அடக்கிக் கொண்டு, இந்தப் பிரயாணத்திற்கு உடனே புறப்பட வேண்டுமென்பதிலும் கருத்து வேற்றுமை இருப்பதற்கில்லை. இந்தப் பிரச்னைபற்றிக் கூடக் கருத்து வேற்றுமை எழுமேயானல் நம்மைச் சூழ்ந்து இருக்கின்ற ஆபத்துக்கள் என்ன வென்பதைக்கூட அறியாமல் இருக்கிறோம் என்று முடிவு செய்வதில் எவ்விதத் தவறுமில்லை. அன்றேல், செய்வ தறியாது திகைக்கின்ற சோம்பேறித்தனம் நம்மை மிஞ்சிவிட்ட தென்று முடிவு செய்ய வேண்டும். இத்தகைய சோம்பேறித்தனம் ஏனைய தீமைகள் எல்லாவற்றையும்விட மிகக் கெடுதலானது.

நண்பர்களே! துன்ப அனுபவம், தியாகம் என்பவற்றின் மூல மாக எந்தப் பெரிய காரியங்களைச் சாதித்து மனிதன் தன்னுடைய காம்பீரியத்தை வெளியிடுகின்ருனே, அத்தகைய காரியங்களுக்காக இன்று நம்மை நாம் அர்ப்பணித்துக் கொள்வோம். தங்களுடைய நாடுகள் பூரணத்துவத்தை அடைய வேண்டுமென்பதற்காக நீண்ட காலத்தையும், கடுமையான உழைப்பையும் தந்து தொண்டு செய்த பெரியோர்களுக்கு நம்முடைய வணக்கத்தைச் செலுத்துவோமாக. அப்போதுதான், இந்த மாநாடு எதனைச் சாதிக்க வேண்டுமென்று வங்காளம் எதிர்பார்த்து நிற்கின்றதோ, அதனை வெற்றியோடு முடிக்கத் தொடங்குவோம். இதனை நாம் நினைக்காவிட்டால் வெறும் வாக்கு வாதங்களின் மூலம் நம்மை மறந்து தனிப்பட்டவர்களுடைய பெருமை முதலியவற்றினுல் நம்முடைய லட்சியத்தைப் பாழடித்து, அதனையும்விடக் கேவலமான முறையில் நாம் பெறுகின்ற சிறுசிறு கட்சி வெற்றிகளையே தேசத்தின் வெற்றி என்று நினைக்கின்ற மா பெரும் தவற்றைச் செய்து விடுவோம்.

இன்றுள்ள நாம் நாளை அழிந்து விடுவோம். அப்போது தனிப் பட்ட நம்முடைய அற்பத்தனமான பொருமைப் பூசல்களை, சிறு

விவகாரங்களை யார் நினைக்கப் போகின்றார்கள்? ஆனால் காரண காரியத் தொடர்பு பெற்று வருகிற முடிவிலாத நம்முடை செயல்கள் ஆண்டவனுடைய வழிபாட்டுக் கருணைக் கிணங்கத் தல முறை தலை முறையாகத் தொடர்ந்துவந்து தேசத்துக்கு ஒ வடிவையும் ஆக்கத்தையும் தரக் கூடும். இன்றுள்ள வறுமை கொடுமை ஆகியவற்றினிடையே நாளை இக் கொடுமைகள் நீங்கி நிலையில், உயிர் பிரிகின்ற நேரத்தில் நம்முடைய பேரன்மார்கள் பேசப் போவதைக் கனவு கண்டு பார்ப்போமாக ; " இங் நிலங்களை செழிப்புடையன வாகவும், இங் நீரைத் தெளிவுடையதாகவும், இ காற்றைத் தூய்மையுடையதாகவும் ஆக இவற்றை யெல்லாம் நாமே மாற்றுவோம்" இந்த அறிவுத் திறனை யெல்லாம் வெளி நா களிலும் பரப்பி, " அச்சம் என்பதை நம் உள்ளத்திலிருந்து போ கடித்து விட்டோம்" என்று அவர்கள் பேசிக் கொள்வர். அல்ல மலும், " எங்களுடைய இந்தப் புண்ணிய நாட்டில் நீர் வளத்திற்கு குறைவில்லை ; நில வளம் செழிக்கின்றது. மனித சமுதாயத்திற் உழைக்கின்ற முறையில் தேவைப்படுகின்ற ஆள் பலத்தையு தன்னடக்கத்தையும் பெற்றுள்ளோம். இங் நாட்டில் இள காற்று வீசுகின்றது ; இவை அனைத்தையும் நாமே முயன் பெற்றோம். இந்நாடு முழுதும் உயிர்த் துடிப்போடுகூட இன்ப பாட்டை இசைக்கின்றது. எங்குத் திரும்பினாலும் எங்களுடை லட்சியங்களும், முயற்சிகளும் பலனளித்து வருகின்றன. கற்பனை நாட்டை நோக்கிப் பல்வேறு வழிகள் செல்கின்றன. அந்த எல்ல வழிகளிலும் ஓயாது ஒழியாது யாத்திரை செய்கின்ற மக்கள கூட்டம் நிறைந்துள்ளது" என்றும் அவர்கள் பேசுவார்களாக.

—1908.

வாழ்வதற்குரிய முழு விலையையும் செலுத்திய பிறகே நாம் விடுதலையைப் பெற முடியும்.

—ரவீந்திரநாத் தாகூ

# 6. கிழக்கும் மேற்கும்

இந்தியாவின் சரித்திரமா? அப்படியானால் அது யாருடைய கதை?

மிகப் பழங்காலத்தில்[1] வெள்ளைத் தோலுடைய ஆரியர்கள் இயற்கையினுடைய மிகப் பெரிய தடைகளையும், மனிதர்களுடைய எதிர்ப்புக்களையும் சமாளித்துக் கொண்டு இந்தியாவிற்குள் புகுந்தார்கள். மறைத்திருந்த அடர்ந்த பெரிய காடுகளை ஒரு பக்கமாக ஒதுக்கிப் பார்த்தபொழுது, அழகிய வளமான பூமி, நிறைந்த பயனோடு கூடிய நிலம், மிக நீண்ட அளவில் காணப்பட்டது. தங்களுடைய அறிவு, வன்மை, ஒற்றுமையுடன் கூடிய முயற்சி ஆகியவற்றால் ஆரியர்கள் இந்திய வரலாற்றுக்கு அடிகோலினார்கள். ஆனால் அவர்கள் "இது எங்களுடைய இந்தியா" என்று கூறிக் கொள்ளவில்லை.

இந்த நாட்டில் முன்னரே இருந்த ஆரியர்க ளல்லாதவர்களோடு அவர்கள் கலக்கத் தொடங்கினார்கள். அவர்கள் இன வலிமை பெற்றிருந்த அந்தக் காலத்திலேயே ஆரிய ரல்லாத பெண்களை மணஞ் செய்து கொண்டார்கள். இந்த இனக் கலப்பு புத்த காலத்தில்[2] மிகவும் அதிகமாக நடைபெற்றது. புத்த கால முடிவில் இங்ஙனம் கலந்த முறையில் திருமணம் செய்து கொள்வதைப் பிராம்மண சமுதாயம் எதிர்த்து, இன எல்லைகளை மறுபடியும் ஸ்தாபித்து, அவற்றை வலிமையுடையனவாக ஆக்க வேண்டுமென்று முயன்றது. ஆனால் அதற்குள் நிலைமை கட்டுக் கடங்காமல் சென்று, நாட்டின் பல்வேறு பகுதிகளில், வைதீகச் சடங்கை செய்வதற்குக்கூட ஒரு தூய பிராம்மணனைக் கண்டுபிடிப்பது இயலாமல் போய்விட்டது. மிக நீண்ட தூரங்களிலிருந்து பிராம்மணர்களைக் கொண்டு வரவும் அல்லது அரசன் ஆணைப்படி பூணூல் அணிவித்துப் பிராம்மணக் கூட்டங்களைப் புதிதாக உண்டாக்கவும் வேண்டியிருந்தது. எந்த வெள்ளைத தோலை வைத்துக்கொண்டு ஆரியர்கள் கர்வம் காட்டினார்களோ, அந்தத் தோல் மெள்ள மெள்ளக் கருமை அடையத் தொடங்கி, சூத்திரச் சடங்குகளும், ஐதீகங்களும் ஆரியர்களுடைய சமுதாயத்தில் கலக்கலாயின. "ஹிந்து" சமுதாயம் என்ற பெரிய சமுதாயம் இவ்வாறு தோன்றிற்று. எனவே, வேத காலத்தில் சொல்லப்பெற்ற ஆரிய சமுதாயத்திலிருந்து இந்த ஹிந்து சமுதாயம் வேறுபடுவதோடு அல்லாமல் பல வழிகளில் அதற்கு முரணாகவும் அமைந்திருந்தது.

இந்திய வரலாறு[3] இந்த நிலையில் முடிந்து போய்விடவில்லை. இந்தியாவின் வரலாறு ஹிந்துக்களுக்கு மட்டும் உரியது என்று சொல்லிக்கொள்ள ஆண்டவன் திருவருள் இடங் கொடுக்கவில்லை. தற்கொலைக் கொப்பான உள்நாட்டுப் போரில் ராஜபுத்திர அரசர்கள் ஒருவருக் கொருவர் வீரங்காட்டி ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில், நாட்டில் ஏற்பட்டிருந்த இந்த விளைவைப் பயன்படுத்திக்கொண்டு இந்தியாவின் அப்பாலுள்ள முஸ்லீம்கள் இந்நாட்டுக்குள் புகுந்து ஒவ்வொரு பிரதேசத்திலும் பரவ ஆரம்பித்தார்கள். தலைமுறை தலைமுறையாக அவர்கள் இந்த நாட்டில் வாழ்ந்து, இங்கேயே மடிந்து, இந்த நாட்டைத் தம்முடைய நாடாக ஆக்கிக்கொண்டார்கள்.

இந்த நிலையில் ஒரு கோட்டைக் கிழித்து, "நிறுத்துங்கள்! இதற்குமேல் நாம் செல்லவேண்டிய தில்லை" என்று கூறி, ஹிந்துக்கள், முஸ்லீம்கள் ஆகியவர்களுடைய வரலாறுதான் இந்திய வரலாறு என்று கூறுவோமேயானால், நம்முடைய இந்தப் படாடோபத்திற்குச் செவி சாய்க்கும் முறையில், உலகத்தை யெல்லாம் ஆக்கிப் படைக்கின்ற ஆண்டவன் மனித உறவு நீண்டு வளர்ந்து செல்வதை நமக்காக வேண்டித் தடை செய்யப் போகின்ருரு?

இந்தியா, ஹிந்துக்களுக்கு அதிகப்படியாகச் சொந்தமா? அல்லது முஸ்லீம்களுக்கு மிகுதியாகச் சொந்தமா? அல்லது இந்தியாவுக்கு வருகின்ற மற்றோர் இனத்தார் இதில் அதிக உரிமை கொண்டாடப் போகிருர்களா என்பதைப் பற்றி ஆண்டவன் திருவருள் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. ஆண்டவனுடைய சந்நிதியில் ஹிந்துக்கள், முஸ்லீம்கள், மேல் நாட்டார்கள் ஆகியவர்களுடைய வழக்கறிஞர் கூடித் தங்கள் உரிமைகளை நிலைநாட்ட முயன்று, அதில் வெற்றி பெற்றவர்களுக்கே இந்தியா சொந்தமாகி அவர்கள் வெற்றிக்கொடி நாட்டப் போகிருர்கள் என்று நினைப்பதும் தவறு. பல கட்சிகள் தங்களுடைய உரிமைகளை நிலை நாட்ட வேண்டி ஓயாது போராடிக்கொண்டிருக்கின்றன வென்று நினைப்பது நம்முடைய ஆடம்பரமான எண்ணத்தையே காட்டுகிறது. உண்மை நிலைபெறுவதற்காக அநாதி காலந்தொட்டு நடைபெறுகின்ற போராட்டந்தான் உண்மையில் நடைபெறுகின்ற போராட்டம்.

நன்மை என்பதும், உண்மை என்பதும் அனைத்திற்கும் பொதுவாகும். எத்தனை தடைகள் ஏற்பட்டாலும், எவ்வளவு எதிர்ப்புச் சக்திகள் இருந்தாலும் இவை யிரண்டும் இறுதியில் தோன்றியே தீரும். ஆனல் இவை யிரண்டும் எவ்வளவு விரைவில் நிலைபெறு

கின்றன என்பது அவற்றை நிலைபெறுத்துவதற்கு நாம் செய்கின்ற முயற்சிகளைப் பொறுத்தே யிருக்கும். அகில உலகப் படைப்புத் திட்டத்தில் ஆர்வமுடைய ஒரு மனிதன் வெற்றியின் முடிவில் கூட ஓய்வெடுத்துக்கொள்வதற்கு இடமோ, நேரமோ இல்லை. அந்த வெற்றி அவனுக்கோ அல்லது அவனுடைய இனத்துக்கோ யாருக்காக இருப்பினும், நிலைமை இதுதான். அலெக்ஸாண்டர் கூட இந்த உலகத்தைக் கிரேக்க நாட்டுக் கொடியின் கீழ்க் கொண்டுவர முடியாமற்போய்விட்டது என்பதே இந்தகைய முயற்சிகளின் பயனற்ற தன்மையை எடுத்துக் காட்டுகின்றது. கிரேக்கர்களின் கர்வத்தோடு கூடிய பேராசை இன்று அர்த்தமற்ற கனவாகிவிட்டது. அகில உலக சாம்ராஜ்யக் கனவு கண்ட கிரேக்கர்களின் முயற்சி காட்டுமிராண்டிகளால் முடிவு செய்யப்பட்டது. ரோம் நாட்டின் இந்த சாம்ராஜ்யப் பேராசை இங்ஙனம் அடிபட்டதை நினைந்து யார் வருத்தம் அடைகிறார்கள்? கிரேக்க, ரோம் நாடுகள் காலம் என்ற பெரும் படகில், தங்களுடைய பண்பாடு என்னும் சரக்குகளை ஏற்றிவிட்டன என்றாலும், அதில் அவர்கள் ஏறிக்கொள்ளத் தவறி விட்டார்கள் என்பதனால் நஷ்டம் ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லை. உண்மையில் அது படகின் பாரத்தைக் குறைப்பதற்கே பயன் பட்டது.

இந்திய வரலாற்றின் அடிப்படை நோக்கம் ஹிந்துக்களையோ, அல்லது வேறெவரையோ முக்கியமானவர்களாகச் செய்வதன்று. அதனுடைய உண்மையான நோக்கம் மனித சமுதாயம் முழுவதற்கும் இலாபமாக இருக்கக்கூடிய ஒரு பூரணத்துவத்தை உண்டாக்குவதுதான். இந்தப் பூரணத்துவ முயற்சியில் ஹிந்துக்களும், முஸ்லீம்களும், பிரிட்டிஷார்களும் தங்களுடைய அகம்பாவத்தோடு தனித் தன்மையையும் இழக்க நேரிட்டால், அதனால் அவர்களுடைய வெளிக் கர்வம் பங்கமடையுமே தவிர, மனித உரிமைக்கும், சத்தியத்திற்கும் எவ்விதமான நஷ்டமும் ஏற்பட்டதாக யாரும் நினைக்க வேண்டியதில்லை.

ஒரு பெரிய இந்தியாவைச் சமைப்பதற்காக நாம் இங்கே இருக்கின்றோம். இக் காரியம் நிகழ்வதற்குத் தேவையான மூலப் பொருள்களில் நாமும் ஒரு பகுதியாவோம். இதில் எந்த மூலப் பொருளாவது முரண்டு செய்து தனக்கு அதிகப்படியான முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்று வாதித்தால், மற்றவற்றோடு ஒன்று கலக்க மறுத்தால், நிர்மாண வேலை கொஞ்சம் தடைப்படு மென்பது தவிர, வேறொன்றுமில்லை. தனித்து நிற்க வேண்டு

மென்று சொல்லிக் கொள்ளும் பகுதி பூராவும் ஒதுக்கி எறியப்படும். ஆனால், தனக்கென்று ஒரு தனித் தன்மை இல்லை யென்றும், முழுப் பொருளில் தான் ஒரு பகுதியே என்றும் அறிந்து கொள்கின்ற ஒரு பகுதி, தன்னுடைய சிறுமை நீங்கி, அம் முழுப் பொருளில் ஐக்கிய மாகிவிட்ட காரணத்தால் சிரஞ்சீவித்துவம் பெற்று விளங்கும்.

கனவு காண முடியாத அப் பணியில் தனித் தியங்க வேண்டு மென்று நினைக்கின்ற இந்தியாவின் பகுதி—இந்தியாவின் விதியை ஆக்கிப் படைக்கின்ற தெய்வத்தால் நசுக்கப்பட்டு ஏனையவற்றோடு ஒன்றுக்கப்படவேண்டும். அன்றேல் பயனற்ற குப்பையாகக் கருதப்பெற்று இப் பகுதி ஒதுக்கப்பெற்றுவிடும். இந்திய வரலாறு ஹிந்துக்களின் கதை மட்டுமன்று; அந்தச் சரித்திரத்தில் நாமும் ஒரு பகுதி யாவோம். அந்தத் திட்டத்தில் நமக்குரிய இடத்தில் நாம் அமைக்கப்பட விரும்பவில்லையானால் நாம்தான் போக வேண்டும். “ தூய்மை ” என்று சொல்லிக்கொண்டு இந்தத் தனித்த நிலையில் ஏற்படுகின்ற கர்வத்தை, நம்முடைய அடுத்த தலைமுறைகளிடமும் வழங்குவோமேயானால், நம்முடைய சமுதாயத்தையும், சமுதாயப் பழக்க வழக்கங்களையும் நமக்கு மட்டும் உரியதாகச் செய்து கொள்ளுவோமேயானால், நாம் வழிபடும் கோயில்களைப் பிறர் நுழைய முடியாத இடமாகச் செய்துவிட்டால், நம்முடைய பழைய சாஸ்திரங்களையும், கதைகளையும் பெட்டியில் பூட்டி வைத்து விட்டால், அங்கிலையில் மனித சமுதாய நீதிமன்றத்தில் நாம் ஒதுக்கித் தள்ளப்பெற்றுக் கொல்லப்பட்டவர்கள் என்பதை நாமே சொல்லிக் கொண்டவர்க ளாவோம். நாமே முயன்று கட்டிய சிறைக் கூடத்தில் தண்டனை நிறைவேறும் வரையில் நம்மை நாம் அடைத்துக்கொண்டவர்களாவோம்.

சமீப காலத்திய இந்திய வரலாற்றில், பிரிட்டிஷார்கள் ஒரு முக்கியமான இடத்தை வகித்து வருகிறார்கள். இது எதிர்பாராத ஒரு நிகழ்ச்சி யன்று. மேலை நாடுகளுடன் இந்தியா இத் தொடர்பு கொள்ளவில்லையானால் அது அரைகுறையான நிலையிலேயே இருந் திருக்கும். ஐரோப்பா தன்னுடைய விளக்கை ஏற்றிக் கொண்டது. நாமும் நம்முடைய விளக்குகளை அவர்களுடைய விளக்குகளி லிருந்து ஏற்றிக்கொண்டு காலமெனும் பெரு வழியில் பயணத்தைத் தொடங்குவோமாக. இந்த உலகம் பெறக்கூடிய அனைத்தையும், மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நம்முடைய முன்னோர்கள் பெற்றுவிட்டார்கள் என்ற காரணத்தால் இந்த உலகம் வறுமையடைந்து வற்றிப் போய்விடவில்லை. இனி ஒன்றும் பெற

முடியாத நிலைமைக்குச் செல்ல நாமும் அவ்வளவு துரதிருஷ்ட சாலிகளாக ஆகிவிட வில்லை. எவை எவை செய்ய வேண்டித் தேவைப்படுகின்றனவோ, அவை யெல்லாம் ஒரேயடியாக முன்னரே செய்து முடிக்கப்பெற்றன என்பது உண்மையானால் நாம் மறுபடியும் தொடர்ந்து இப் பூமியில் இருந்து வருவது, பூமிக்குப் பாரமே தவிர வேறில்லை. தங்களுக்கு வேண்டிய பூரணத்துவம் முழுவதையும் தங்கள் மூதாதையர்கள் காலத்திலேயே பெற்று விட்டதாகவும், நவீன காலம் தங்களைத் தூண்டாமல் இருப்பதற்காகத் தங்களுடைய நம்பிக்கைகளையும், கொள்கைகளையும் மூடி மறைத்துக் கொள்ள வேண்டும் என்றும் கருதுபவர்கள், எதிர் காலத்தில் என்ன நம்பிக்கை வைத்துக்கொண்டு, நிகழ் காலத்தில் எதற்காக வாழ்கிறார்கள் என்று தெரியவில்லை?

ஆகாயத்திலிருந்து வருகின்ற தேவ தூதர்களைப் போல நம்மைச் சுற்றியுள்ள உடைந்து போன சுவர்களிடையே பிரிட்டிஷார்கள் புகுந்து, நம்முடைய இருப்பையும் இந்த உலகம் விரும்புகிறது என்ற உண்மையை எடுத்துச் சொல்லி, ஒரு நம்பிக்கையை ஊட்டினார்கள். நாம் எந்த மூடப்பட்ட இடத்தில் இருக்கிறோமோ, அந்தக் குறுகிய எல்லைக்கு அப்பால் விரிந்து பரந்துள்ள அறிவுலகம், தொழி லுலகம், புதியன புனையும் உலகம் ஆகியவற்றிலும் நாம் தேவைப்படுகிறோம் என்பதை எடுத்துக் கூறினார்கள். அவர்களுடைய இந்த அறைகூவலுக்கு விடை சொல்லும் முறையில் நாமும் அவர்களுடைய தோளோடு தோள் நின்று போரிட்டாலொழிய, அவர்கள் நம்முடைய உறக்கத்தைக் குறைக்கின்ற முறையில் துன்பம் இழைத்து நம்மைச் சுரண்டுவார்கள். பயிற்சித் துறையில் இந்தியா தன் பங்கைச் செலுத்த வேண்டியது அகில உலக மக்களுக்கும் தேவைப்படுகிறது. இந்த நாடு நமக்கு மட்டுமே சொந்த மென்று சொல்வதற்கு நாம் யார்? உண்மையைக் கூறுமிடத்து, "நாம்" என்று சொல்வது யாரை? வங்காளி, மராத்தி, பஞ்சாபி, ஹிந்து, அல்லது முஸ்லீம் என்பவர்களுள் இந்த 'நாம்' என்பது யாரை? ஹிந்து, முஸ்லிம், பிரிட்டிஷார் ஆகிய அனைவரும் ஒன்று சேர்ந்துள்ளோமே, அந்த "நாம்" தான், இந்தியா என்பது எது? வெளிப் பகுதி என்பது எது என்பவற்றை முடிவு செய்யத் தகுதி பெற்றிருக்கும்.

இந்தப் பெரிய இந்தியாவை நிர்மாணிக்கும் வேலையில் ஈடுபடுவது என்பது, பிரிட்டிஷாரோடு நமக்குள்ள தொடர்பை நற்பயன் விளையுமாறு நாம் பயன்படுத்திக் கொள்வதாகும். நாம் தனிப்பட்டவர்களாக நின்று இந்த அறைகூவலுக்குச் செவி சாய்க்காதவர்

களாகக் கொடுக்கல், வாங்கல் எதிலும் பங்கு கொள்ளாதவர்களாக இருப்போமேயானால் அது இந்திய வரலாற்றையே வறுமையுடைய தாகச் செய்துவிடும்.

ஆகவேதான், நவீன இந்தியாவிலுள்ள மிகப் பெரியவர்கள் கிழக்கையும், மேற்கையும் ஒன்றுக்கும் பணியைத் தங்களுடைய வாழ்க்கைப் பணியாக ஏற்றுக் கொண்டுள்ளார்கள். உதாரணமாக ராம் மோகன்ராய்[4] வாழ்ந்தார். மனித சமுதாயம் என்ற அடிப் படையில் அகில உலகத்தோடு இந்தியாவும் ஒன்றுபட வேண்டும் என்ற கொள்கையை அவர் ஒருவராக நின்று எடுத்துக் கூறினார். எந்த ஒரு குருட்டு நம்பிக்கையும், எந்த ஒரு பழக்க வழக்கமும் அவருடைய இந்த உயர்ந்த காட்சியை மறைக்க முடியவில்லை. ஒரு விரிந்த மனப்பான்மையில், ஒரு பரந்துபட்ட அறிவில் கிழக்கைத் தியாகம் செய்யாமலேயே அவர், மேற்கை ஏற்றுக் கொண்டார். அதன் மூலமாகத் தனி மனிதனாக நின்று புதிய வங்காளத்தை உண்டாக்கினார். சுதந்திரத்தை நோக்கிச் செய்யப்படுகின்ற முயற் சியில் நமக்குள்ள தள்ளமுடியாத உரிமையை நிலைநாட்டுவதற்காக அவர் பிரிட்டிஷாரால் வேட்டையாடப்படக் கூடிய நிலையில் இருந் தார். நமக்கும் இந்த உலகம் சொந்தம் என்பதை நமக்கு உணர்த் துவதற்காக அவர் பாடுபட்டார். அவர் ஒருவர் மட்டுமே, புத்தரும் ஏசுவும் முகம்மதுவும் நமக்காகவே வாழ்ந்தார்கள் என்பதையும் நம் முடைய பழைய ஞானிகள் கண்ட கட்டுப்பாடுகள் அனைத்தும் நம் ஒவ்வொருவருக்கும் உரிமையுடையவை என்பதையும் முதன்முத லில் எடுத்துக்கூறினார். மேலும் மெய்யுணர்வுப் பாதையிலுள்ள தடங்கல்களை யெல்லாம் யார் நினைக்கின்றார்களோ, மனிதனுடைய சக்தி தடைப்பட்டு நிற்பதை யார் விடுவித்தார்களோ, அவர்கள் நம்மவர்கள் என்ற முறையில் அவர்களோடு உறவு கொண்டாடி, அவர்களுடைய புகழில் நாம் பங்குகொள்ள வேண்டு மென்பதையும் அவரே முதன் முதலில் எடுத்து கூறினார்.

இந்தியாவுக்கும், ஐரோப்பாவுக்குமிடையில் ராஜாராம் மோகன் ராய் அமைத்த பாலம் இன்று வரையில் நிலைத்திருந்து நமது ஆக்க வேலைகளுக் கெல்லாம் ஒரு தூண்டுகோலாக இருந்து வருகிறது. காலத்தின் போக்கை அவர் சரியாக உணர்ந்து கொள்வதை எந்தப் பழமையான குருட்டு நம்பிக்கையும், கர்வமும் தடை செய்ய வில்லை. காலம் என்பது பழமையிலேயே நின்று விடுவ தன்று என்பதையும், எதிர் காலத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிற தென்பதையும் அவர் நன்கு அறிந்திருந்தார்.

தென் இந்தியாவில் ரானடே[5] இத்தகைய ஒரு பாலம் அமைப்தில் ஈடுபட்டிருந்தார். வேற்றுமைகளை நீக்கி மனித உறுதிக்குச் சுதந்திரம் அளிக்கக் கூடிய செயலைச் செய்து முடிக்கும் ஆற்றலை அவர் பெற்றிருந்தார். கருத்து வேறுபாடுகளுக்கும், தன்னலங்களுக்கு மிடையே ஏற்படுகின்ற போராட்டங்களை யெல்லாம் சமாதானப்படுத்தி; பிரிட்டிஷார்களின் கொள்கைகளில் எவை எவை நம்முடைய வரலாற்றுக்கு பயனுடையனவோ அவற்றை யெல்லாம் ஏற்றுக்கொள்ளுமாறு வழி செய்தார்.

விவேகாநந்தர்[6] என்ற பெயருடைய அந்த மகாத்மா, இத்தகைய ஒரு காரியத்தையே செய்து, சமீபத்தில் காலஞ் சென்றதனுல் நாம் அவருக்காக வருந்தினேம். இந்தியாவுக்கும் மேல் நாடுகளுக்கு மிடையே கருத்துப் பரிமாறல் செய்யவும், சில குறிக்கோள்களை ஏற்றுக்கொண்டு, நம்முடையதோடு ஒற்றுமைப் படுத்திச் சிலவற்றைப் புதியனவாக உண்டாக்கவும் அவருடைய பேரறிவு முயன்றது.

பங்கிம் சந்திரர்[7] தம்முடைய 'பங்க தர்சன்' என்ற தாளில் கிழக்கும் மேற்கும் சந்திக்கின்ற பெரு விருந்தை நமக்கு ஆக்கிப் படைத்த வளமுண்டு. வங்காளி இலக்கியத்தில் காணப்படும் அகில உலகத் தன்மை அன்றிலிருந்து வளர்ச்சி யடைந்து உலக இலக்கிய மரபோடு ஒத்துச் செல்கின்றது.

கற்றறிவுடையவர்களாகிய நம்மில் சிலர், நம்முடைய நாட்டிலுள்ள பல்வேறு இன மக்களை ஏதோ ஓர் அரசியல் காரணத்திற்காக ஒற்றுமைப்படுத்த முயல்கிறோம் என்று நினைப்பதாகத் தோன்றுகிறது. இவ்வாறு நினைப்பது, ஒரு பெரு முயற்சியின் பெருமையை அற்பத்தனமான நோக்கத்தைக் காட்டிக் குறைவு படுத்துவதாகவே தெரிகிறது. இந்தியாவிலுள்ள நமக்கு, ஒற்றுமையை உண்டாக்குதல் என்பதே, வேறெந்தவித நோக்கங்களைக் காட்டிலும் மிகச் சிறந்த நோக்கமாகும். இந்த நோக்கத்தில் நாம் தோல்வி யடைந்தால் வாழ்க்கையின் அடிப்படையான தத்துவத்திலேயே தோல்வியடைந்து, நம்முடைய சக்தி முழுவதையும் சிறையிட்டு வீணாக்கிவிடுவோம்.

மனிதனுடைய பொதுச் சமயம் என்ற அடிப்படையிலிருந்துதான் ஒற்றுமையை உண்டாக்கும் இம் முயற்சியை நாம் காண வேண்டும். அப்போதுதான் அது வெற்றி யடையும். அற்பத்தன

மான கர்வத்திற்கும், சமய சந்தர்ப்ப இலாபத்திற்கும் அப்பாற்பட்டதாக இருக்கின்ற அந்த உண்மையான சமய உணர்ச்சியே, இன்று நம்முடைய கொள்கையாக இருக்குமேயானால், அதனால் செய்யப்படும் முயற்சி, இந்தியர்கள் அளவில் நின்றுவிடாமல் பிரிட்டிஷாரையும் இணைத்துக்கொண்டு முன்னேற வேண்டும்.

பிரிட்டிஷாருக்கும், இந்தியருக்குமிடையே இப்போது நடைபெற்று வருகின்ற போராட்டத்தைப் பற்றி நாம் என்ன நினைப்பது? இதில் ஒன்றும் உண்மை இல்லையா? சில சூழ்ச்சிக்காரர்கள் சேர்ந்து செய்கின்ற ஒரு மாய வித்தையா இது? நம்முடைய வரலாற்றில் காணப்படுவதும் இந்தப் பெரு நாட்டிலுள்ள பல்வேறு மக்களினிடையே நிகழ்ந்த கருத் தொற்றுமை, பூசல்கள் ஆகியவற்றுக்கும் எதிராக இந்தப் புதிய போராட்டம் நிகழ்கின்றதா? இன்றுள்ள கருத்து வேறுபாடுகளின் பொருளை ஆழ்ந்து அறிய முயல வேண்டும்.

இந்தியாவிலுள்ள பக்தி சாஸ்திரங்களில், மோட்சத்தை அடைவதற்கு, முரண்பாடுகளையும் ஒரு வழியாகவே சொல்லியிருக்கிறது. உதாரணமாக இராவணன்[8] இந்த வழியில் மோட்சத்தை அடைந்தான் என்று சொல்லப்படுகிறது. இவ்வாறு சொல்வதன் அடிப்படைக் கருத்து என்னவென்றால், சத்தியத்தை முதலில் எதிர்த்துப் போராடி இறுதியில் தோல்வி பெறுவது, அதனை முற்றிலும் அறிந்து கொள்வதற்குத் தகுந்த வழியாகும் என்பதேயாகும். கேள்வி கேட்டு ஆராய்ந்து பாராமல் உடனேயே எடுத்துக்கொள்வதென்பது சத்தியத்தை முழுவதும் ஒப்புக்கொண்டதாகாது. இதனால்தான்போலும் எல்லா விஞ்ஞானமும் ஆழமான சந்தேகத்தின் பேரிலேயே தொடங்குகிறது.

ஒரு காலத்தில், ஐரோப்பாவின் பெருமைகளில் நம்மை மறந்து எவ்வித ஆராய்ச்சியும் இல்லாமல், பிச்சைக்காரர்கள் போல, அந்த நாகரிகம் கொடுத்தவற்றையெல்லாம் ஏற்றுக் கொண்டோம். உண்மையான இலாபத்தைப் பெறுவதற் கேற்ற வழி அது வன்று. மெய்ஞ்ஞானமாக இருப்பினும், அரசியல் உரிமையாக இருப்பினும் அதனை முயன்றுதான் பெற வேண்டும். அதாவது அதனைத் தடுத்து நிறுத்துகின்ற சக்திகளோடு போரிட்டு வெற்றி பெற்றால் தான் அது நம்மைப் பொறுத்தமட்டில் மெய்யானதாக இருக்கும். யாரேனும் அதனை நம்முடைய கைகளில் பிச்சை போடுவதைப் போலப் போட்டுவிட்டால் அதை நாம் நீண்ட நாளைக்கு வைத்திருக்க முடியாது. இவ்வாறு அதனைப் பெற்றுக் கொள்வதால் நம்மை நாமே

இழிவுபடுத்திக்கொள்கிறோம்; அன்றியும் அது நன்மையை விடத் தீமையையே அதிகம் செய்யும்.

ஐரோப்பியப் பண்பாட்டில் நமக்கு எழுகின்ற எதிர்ச் செயல் இதன் மூலமாக ஏற்பட்டதுதான். நம்முள் புதிதாகத் தோன்றிய சுய கௌரவம் நமக்குள்ளேயே நாம் அடங்கி விடுமாறு, நம்மைத் தூண்டுகிறது.

இந்தியா என்ற நாட்டில், காலம் என்று சொல்லப்படும் ஒன்று வரைந்து வருகின்ற வரலாற்று ஏட்டில், இந்த வெறுப் புணர்ச்சி மிகவும் தேவைப்படுகிற தென்பதை முன்னமேயே கூறியுள்ளேன். எதிர்த்துக் கேள்வி கேட்காமல், நம்முடைய மன வறுமையின் காரணமாக, மேலை நாடுகளிலிருந்து பெற்று வந்த பொருள்கள் நம்முடையனவாக ஆக முடியாது. ஏனென்றால் அவற்றின் உண்மையான மதிப்பை நாம் அறியாமையாலும் அவற்றைக் காட்சிப் பொருள்களாகப் பயன்படுத்தத் தொடங்கியமையாலும் அவை நம் முடையனவாக ஆகவில்லை. இதனை நாம் அறிந்துகொண்டவுடன், இதில் ஒரு மாற்றம் வேண்டுமென்று விரும்புவது நியாயமானதே.

ஐரோப்பாவின் குறிக்கோள்களை யெல்லாம் ராஜாராம் மோகன் ராய் முழுவதும் ஜீரணம்செய்ய முடிந்தது. ஏனென்றால் அவற்றைக் கண்டு அவர் மயங்கிவிட வில்லை. அவரைப் பொறுத்தமட்டில் அவற்றுக்குப் பணிந்து போகின்ற நிலைமையும் இல்லை. அவருடைய சொந்த நாட்டின் பண்பாட்டில் வேரூன்றி யிருந்த காரணத்தால் பிரிட்டிஷாரிடமிருந்து பெறப்பட்ட பொருள்களை மதிப்பிட்டுப் பெறுவதற்குரிய அளவுகோல் அவரிடம் அமைந்திருந்தது. நவீன இந்தியாவின் முதல் கலைஞராகிய அவரிடம் இயல்பாகவே அமைந் திருந்த இந்தச் சக்தியை, இன்று நாம் நம்முடைய முரண்பட்ட கருத்துக்கள், செயல்கள், எதிர்த் தாக்குதல்கள் ஆகியவற்றி னிடையே கூட வளர்த்து வருகின்றோம். ஆதலால்தான் ஒரு அதீதத்திலிருந்து மற்றொரு அதீதத்திற்கு நாம் செல்ல வேண்டி யிருக்கிறது. இதன் பயனாக மிக விருப்பத்தோடு ஒரு முறை ஏற்றுக்கொள்வதும், வேண்டா வெறுப்பாக ஒரு முறை ஒதுக்கு வதும் செய்து, நம்மையும் அறியாமல் குருட்டுத்தனமாக முன்னேறி வருகின்றோம்.

பிரிட்டிஷாருக்கும், இந்தியர்களுக்கு மிடையே இருக்கின்ற பல்வேறு மனவிறைப்புக்களுள் உணர்ச்சியில் ஏற்பட்ட எதிர்த் தாக்குதலே முக்கியமானதாகும். பிரிட்டிஷாருடைய உயர்ந்த

அறிவையும் அதிகமான வலிமையையும் பார்த்துப் பார்த்து வா
பேசாமல் அதனை ஏற்றுக் கொள்வதனால் நம்முடைய உள்ளத்
உணர்ச்சியில் ஒரு வகை வெறுப்பு வளரலாயிற்று. அந்த வெறுப்
படிப்படியாக வளர்ந்து இன்று நாடு முழுவதையும் பற்றிக் கொண்டு
ஓர் இம்சைப் போராட்டத்தில் நம்மைச் செலுத்தி விட்டது.

இவற்றை யல்லாமல் பிற காரணங்களும் உண்டு. மேல்
நாட்டார்கள் நம்முடைய வீடுகளில் புகுந்துவிட்டாலும்கூட, அவ
களை விரும்பத் தகாத விருந்தினர்களைப் போல வெளியே நிற்
வைக்க முடியாமல் இருக்கின்றோம். சகோதரத்துவ ஒற்றுமை
யில்லாத காரணத்தால் காலத்தின் இந்த நோக்கத்தை நா
தோற்கடித்து விட்டோம். அதே நேரத்தில், மேல் நாடும் நமக்கு
கொடுக்கக் கூடிய சிறந்த பொருள்களைக் கொடுக்காமல் வை
திருப்பதால் இதே நிலைமைக்கு ஆளாகிறது.

ஆங்கிலேயனிடத்தில் உள்ள சிறந்த இயல்புகளோடு நா
தொடர்பு கொள்ளாவிட்டால், அவனை ஒரு ராணுவத்தினனாகவு
வாணிகனாகவும், அதிகார வெறிபிடித்தவனாகவும் மட்டும் காண்
தாக இருந்தால், அதாவது ஒரு மனிதனோடு மற்றொரு மனித
தொடர்பு கொள்கின்ற நிலையில் அவனை வைத்துக் காணவிட்டா
இந்தியனும் ஆங்கிலேயனும் தனித்தனியேதான் நிற்க வேண்
மென்றால், அப்பொழுது ஒருவரை யொருவர் வெறுத்துக்கொள்ள
கூடிய நிலைதான் ஏற்படும். இத்தகைய சூழ்நிலையில், அதிகாரத்தி
இருப்பவர்கள், ஆளப்படுகின்றவர்களுடைய வளர்ந்து வருகின்
வெறுப்பை இரும்புச் சங்கிலிகளால் பிணைப்பதற்காக ராஜ
துரோகம்பற்றிய சட்டங்கள் சிலவற்றை நிறைவேற்றலாம். ஆன
இதன் மூலம் வெறுப்பை அடக்கி வைக்கலாமே தவிரப் போக்
விட முடியாது.

பரந்துபட்ட மனப்பான்மையுடைய 'டேவிட் ஹேர்'[9] போன்
ஆங்கிலேயர்கள், நமக்கு மிகவும் அன்புடையவர்களாக நெருங்
இருந்து பிரிட்டிஷாரின் பெருந்தன்மையை நாம் உணருமா
செய்த காலமும் உண்டு. அத்தகைய காலங்களில், பிற நாட்ட
களாக இருப்பினுங்கூட, அவர்களிடத்தில் நம்முடைய இளைஞர்க
தம் மனத்தைப் பறிகொடுத்தார்கள். இற்றை நாளில் பள்ளிக்கூட
களில் இருக்கின்ற பிற நாட்டு ஆசிரியர்கள் தங்களிடமுள்
சிறந்தனவற்றை மாணவர்களுக்குத் தருவதில்லை. அதற்கு
பதிலாக ஆங்கிலேயர்களுடைய குறிக்கோளையே குறைத்து விடு
வர்களாக இருக்கிறார்கள். ஆங்கில இலக்கியத்தின் உயிர் நாடியை

தொட முடியாத காரணத்தால், தங்களுக்கு முன்னர் வைக்கப் பெற்ற இலக்கியத்தை அனுபவிக்கத் தெரியாமல் விழுங்கி விடுகிறார்கள். ஷேக்ஸ்பியர், பைரன் ஆகியவர்களை விரும்பிக் கற்ற காலம் போய்விட்டது. அந்த இலக்கியங்களை விரும்பி அனுபவிப்பதால் ஏற்படக்கூடிய மனத் தெளிவு இப்போது ஏற்படவில்லை.

இந் நாட்டில் வாழ்கின்ற ஆங்கிலேயர்களில் ஒரு பேராசிரியரையோ, ஒரு நீதிபதியையோ ஒரு வாணிகரையோ அல்லது ஒரு போலீஸ் தலைமை அதிகாரியையோ யாரை வேண்டுமானாலும் எடுத்துக் கொண்டு பார்ப்போமேயானால், ஆங்கிலப் பண்பாட்டை, அதன் உயர்ந்த நிலையில் நமக்கு வழங்கக் கூடிய சக்தி உள்ளவர்கள் ஒருவரைக்கூடக் காண முடியாது. இந்தியாவில் ஆங்கிலப் பண்பாடு வந்து மோதுவதால் ஏற்படக்கூடிய உண்மையான நற்பயன்களை நமக்கு வழங்காமல் இருப்பதோடு, நம்முடைய ஆற்றலின் வளர்ச்சியையும்கூடத் தடுத்து நிறுத்தி, நம்முடைய சுயமரியாதைக்கும் இவர்கள் ஊறு விளைவிக்கின்றனர். நல்ல சட்டங்களும், வலிமையான ஆட்சியும் மட்டும் மானிடத் தேவை அனைத்தையும் பூர்த்தி செய்துவிட முடியாது. மனிதப் பண்பு தான் முக்கியமாகக் காணக்கிடைப்பதில்லை. மனிதப் பண்பை எதிர்பார்க்கின்ற இடத்தில், வெறும் நியாயத்தை மட்டும் வழங்குவது, சாப்பாட்டை எதிர்பார்த்து வருகின்ற இடத்தில் கல் கிடைப்பது போலாகும். அக் கல் மிக உயர்ந்த மாணிக்கக் கல்லாக இருக்கலாம்; ஆனாலும் அது பசியைத் தணிப்பதில்லை.

கிழக்கும் மேற்கும் ஒன்று சேர முடியாமல் இருக்கின்ற சூழ்நிலை தான் இன்றுள்ள தொல்லைகட்கெல்லாம் பெரும் காரணமாகும். ஒருவருக் கொருவர் இவ்வளவு சமீபத்தில் இருந்துங்கூட, ஒருவரை யொருவர் சந்திக்க முடியாமல் இருப்பது பொறுக்க முடியாத மனத் துயரத்தைத் தருகின்றது. விரைவிலோ அல்லது கொஞ்ச காலம் பொறுத்தோ இத்தகைய சூழ்நிலையை எதிர்த்துப் போராட வேண்டு மென்பது தள்ள முடியாத உணர்ச்சியாக ஆகிவிடுகிறது. மனத்தில் தோன்றுகின்ற இந்தப் போராட்ட உணர்ச்சி, எந்த வரையறைக்கும் கட்டுப்படாமலும் முடிவைப்பற்றிக் கவலைப்படாமலும் தன்னைத் தான் அழித்துக் கொள்ளக்கூடிய நிலைக்கும் சென்று விடுகின்றது.

என்றாலும் கூட, வெறும் புணர்ச்சிகள் நிலையானவை யல்ல. மேல் நாட்டோடு நாம் கொண்டுள்ள தொடர்பு எத்தனை தடைச் சக்திகள் இருந்தாலும்கூட ஒரு முழு ஒற்றுமையைக் கொடுக்க

வேண்டும். மேல் நாட்டில் எவை எவை எடுத்துக் கொள்ளக் கூடிய தகுதிபெற்றுள்ளனவோ, அவற்றை எடுத்துக்கொண்டா லொழிய நாம் தப்பிக்க முடியாது. பழுக்காத பழம், கிளையோடு ஒட்டிக் கொண்டுதான் இருக்க வேண்டும், இன்றேல் அது பழுக் கவே முடியாது.

இதை முடிப்பதற்கு முன்னர் ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். பிரிட்டிஷார்கள் தங்களிட முள்ள சிறந்தனவற்றை நமக்குத் தரவில்லை யென்றுசொன்னால், அதற்குரிய குற்றம் ஓரளவு நம்மையும் சாரும். நம்மிடத்திலுள்ள வறுமைத் தன்மையைப் போக்கிக் கொண்டாலொழிய, அவர்களுடைய கஞ்சத்தனத்தையும் போக்க முடியாது. பைபிள் கூறுவது போல " யார் யாரிடம் ஏற் கெனவே இருக்கிறதோ, அவர்களுக்கே கொடுக்கப்படும் ". எல்லாவகையிலும் நாம் வலிமை யுடையவர்களாய் இருக்க வேண்டும். அப்போதுதான், பிரிட்டிஷார்கள் எதனைக் கொடுப் பதற்காக இங்கே வந்திருக்கிறார்களோ, அவற்றைத் தருவார்கள். மதிப்புக் குறைவுடன் நம்மைக் கீழ் நோக்கிப் பார்க்கின்ற வரையில் நம்மோடு அவர்கள் சமத்துவம் கொண்டாட முடியாது. அவர் களுடைய வாயிற்படிகளில் கையேந்திக்கொண்டு நிற்போமானால் மறுபடியும் மறுபடியும் நம்மை விரட்டுவது தவிர அவர்கட்கு வேறொரு வழியும் இல்லை.

நம்முடைய மனிதப் பண்பாட்டின் மூலம் அவர்களுடைய மனிதப் பண்பாட்டைத் தட்டி யெழுப்ப வேண்டும். அவர்கள்கூட மிகப் பெரிய நன்மைகளைப் பெறுவதற்குப் பெரும் உழைப்பைத் தந்து, பெருந் துன்பத்தை அடைந்தார்கள். அந் நற்குணங்களைப் பெறுவதற்கு நாமும் வலிமை யுடையவர்களாக ஆக வேண்டும். குவிந்த கையோடும் குனிந்த தலையோடும் பிரிட்டிஷாரிடத்தில் செல்வது, அவர்களிடமுள்ள தாழ்மையான அற்பத்தனத்தைத் தூண்டி விடுவதாகும், அதன் எதிரே கோபித்துக்கொண்டு, அக் கோபத்தை வெளிக்காட்டுவதன் மூலம் அவர்களிடமுள்ள தீய பண்புகளையே வெளிக் கொணர நேரிடும். எனவே. பிரிட்டிஷாரிட முள்ள அவ மரியாதை செய்யும் இயல்பு, கோழைத்தனம், மனிதப் பண்பாட்டிற்கு விரோதமான மன நிலை ஆகியவற்றையே இந்தியா தூண்டி விடுகிறது என்பது உண்மையானல், அதற்கு அவர்களை மட்டும் குறை சொல்லிப் பயனில்லை ; நம் மேலும் அக் குறையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அவர்களுடைய நாட்டிலும்கூட மக்களின் தாழ்ந்த இயல்புகளை அடி பணியச் செய்து, சிறந்த பண்பாடுகளைத் தூக்கிவிடக் கூடிய நிலையில் சமுதாயச் சக்திகள் ஓயாமல் பணி புரிகின்றன. அங்குள்ள ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனையும் ஓர் உயர்ந்த படியில் ஏறி நின்று அதே இடத்தில் நிலைக்குமாறு அவனுடைய சமுதாய மனச்சான்று ஓயாது விரும்புகிறது. ஆனால், இந்தியாவிலுள்ள ஆங்கிலேயன் அந்தச் சமுதாயத்தில் உள்ளவன் அல்லன். அதற்குப்பதிலாக ஆட்சிப் பணியிலோ (சிவில் சர்வீஸிலோ) அல்லது வாணிக இனத்திலோ அல்லது போர்ப் படையிலோ அவன் ஓர் உறுப்பினனாக இருப்பதால், இந்த ஒவ்வோர் இனத்தின் குறுகிய நோக்கையும், குறிப்பிட்ட மரபையும், நடைமுறைக் கொள்கைகளையும் அவன் பெற்றுள்ளான். எனவே, அவன் கட்டுப்பாட்டோடு கூடிய ஆட்சி அதிகாரியாகவோ, அல்லது நல்ல வாணிகனாகவோ, அல்லது முழுவதும் போர் வீரனாகவோ ஆகிவிடுகிறானாதலால் அவனிடத்திலுள்ள மனிதத் தன்மை மறைந்து விடுகிறது.

அதன் எதிரே, அந்த ஆங்கிலேயன் தொடர்பு கொள்ளக்கூடிய இந்தியாவின் வீட்சியடைந்த நிலை, அந்த ஆங்கிலேயனுடைய நல்ல இயல்புகளைத் தூண்டக் கூடியனவாகவும் இல்லை. ஆகவே இருவருமே நஷ்டம் அடைகிறார்கள். நாமும், சிறந்த ஆங்கிலேயனைச் சந்திக்காமல், கோளாறுபட்ட பிம்பத்தையே சந்திக்கிறோம். ஆகையால் நமக்கு ஏற்படுகின்ற பழிச் சொற்களும், துன்பங்களும் இதன் பயனாய் விளைகின்றன.

தியாகம் பணி ஆகியவைதாம், சக்தியின் அடிப்படையாக அமைய முடியுமே தவிரக் கடுமையான வார்த்தைகளும், இம்சைச் செயல்களும் அவ்வாறு அமைய முடியாது. நாட்டின் நன்மைக்காக நம்முடைய சக்தி முழுவதையும் செலவழித்து, இந்தியாவை நம்முடையதாக ஆக்கிக்கொள்ளும்பொழுதுதான் இந்தியாவிலுள்ள ஆங்கிலேயர்கள் நாம் சொல்கின்றபடி நடக்கக் கடமைபடுவார்கள். என்று வரை நம்முடைய சகோதரர்களிடத்தில் தனிப்பட்ட முறையிலும் சமுதாய முறையிலும் தாழ்வாக நடந்துகொள்கிறோமோ, என்று வரை நிலச்சொந்தக்காரர்கள் அவர்களிடம் பணியாற்றும் உழைப்பாளிகளைத் தங்களுடைய சொந்த உடைமையாகக் கருதுகின்றார்களோ, என்று வரை இளைத்தவர்களைத் தள்ளி மிதிப்பதைத் தங்களுடைய உரிமை யென்று வலிமை யுடையவர்கள் நினைக்கின்றார்களோ, என்று வரைத் தாழ்ந்த வகுப்பினரை விலங்குகளைவிடக் கேவலமாக உயர்ந்த வகுப்பினர் நடத்துகின்றார்களோ

அன்று வரை பிரிட்டிஷாரிடமுள்ள உயர்ந்த பண்பாடுகளை வெளி
கொணர முடியாமல் போவதோடுகூட நாமும் அவர்களால் ஒதுக்க
பெற்று அவமானப்படுத்தப்படுவோம்.

தன்னுடைய சட்டங்கள், பழக்க வழக்கங்கள், சமய - சமுதா நிறுவனங்கள் ஆகிய அனைத்திலும் ஒவ்வொரு நிலையிலும் இந்திய தன்னைத் தானே ஏமாற்றிக் கொண்டு பழித்துக் கொள்ளவும் செ கின்றது. இதன் காரணமாகத்தான், நம்முடைய நாட்டில் கிழக்கு மேற்கும் சந்திப்பது என்பது இயலாததாக இருக்கிறது. அவ்வா சந்திக்கும்பொழுதெல்லாம் துன்பத்தைத் தவிர வேறொன்றும் மி சுவதில்லை. ஏதோ ஒரு வகையாக ஆங்கிலேயனை விரட்டி விட்டா கூட இத் துன்பம் இருந்தே தீரும். நம் மனத்துள்ளேயே இருக்கின் போராட்டம் ஒழிந்து அவை இரண்டி னிடையே ஓர் ஒன்றல்தன்ம ஏற்பட்டாலொழிய இத் துன்பத்தைப் போக்க முடியாது. அப்போ தான் இந்தியாவில் கிழக்கும் மேற்கும் சந்திக்க முடியும். நாட்டுட நாடும், இனத்துடன் இனமும், அறிவுடன் அறிவும், முயற்சியுட முயற்சியும் ஒன்று கலக்க முடியும். அப்போதுதான் இந்தி வரலாற்றின் இன்றைய அத்தியாயம் முடிந்து புதிய தோர் அத் யாயம் தொடங்கும். அந்த அத்தியாயம் மனித வரலாற்றிலே( மிக மிக உயர்ந்ததாக இருக்கும்.

—1908

மரத்தில் மறைந்துள்ள நெருப்பு ஆற்றல் மலர்களை மலர்
விக்கிற
அத் தளையிலிருந்து விடுபட்ட அதே ஆற்றல் சாம்பலாகி
அழிகிற

—ரவீந்திரநாத் தாகூ

# 7. ஹிந்துப் பல்கலைக் கழகம்

உலகத்தின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள மக்களிடையே போக்குவரத்து இன்று மிகுதியாக இருந்து வருகிறது. அனைத்துலகத் தொடர்பு, நாளும் வளர்ந்துகொண்டே வருகிறது. எனவே தேசீய, இன வேற்றுமைகளை ஒற்றுமையில் அமிழ்த்திவிட உரிய காலம் இப்போது வந்துவிட்டதென்று நினைப்பதில் தவறில்லை.

என்றாலும், இந்த எண்ணத்திற்கு முரணாக மக்களிடையே பிரிவு மனப்பான்மையும் வளர்ந்து வலுவடைந்து வருகிறது. புற உலகத்தை நோக்கித் திறக்கப்படுகிற கதவுகள் திறக்கப்படும் பொழுது, ஒருவருக் கொருவர் போக்குவரத்துச் செய்வதற்குள்ள தடைகள் ஒதுக்கித் தள்ளப்படுகின்றன. ஒரு காலத்தில் ஒருவரோ டொருவர் தொடர்பு கொள்வதற்குரிய வசதிகள் இல்லாத காரணத்தால்தான் மக்கள் பிரிந்திருந்தார்கள் என்று கருதப் பெற்றது. அந்த வசதிக் குறைவு இப்போது நீக்கப்பட்டாலும்கூடப் பிரிவு மனப்பான்மை தொடர்ந்து இருந்து வருகிறது.

பல்வேறு ஐரோப்பிய நாடுகளில், ஒன்றாக வாழ வேண்டிய சூழ்நிலையிலுள்ள பல இனத்தவர்களும் தத்தமக்குரிய தனிப்பட்ட இன் இயல்புகளை விரிவுபடுத்தித் தங்கள் உரிமைகளை நிலைநாட்ட விரும்புகிறார்கள். நார்வேயும், ஸ்வீடனும் பிரிந்து விட்டன. அயர்லாந்து நீண்ட நாட்களாக உரிமைப் போராட்டம் நடத்தி வருகிறது. ஐரீஷ் காரர்கள் தங்களுடைய தாய் மொழிக்கும் இலக்கியத்துக்கும்கூடப் புத்துயிர் ஊட்ட விரும்புகிறார்கள்; வெல்ஷ்காரர்களும் அங்ஙனமே. பெல்ஜியத்தில் இதுவரையில் முதன்மை பெற்றிருந்த பிரெஞ்சு மொழியை நீக்கிவிட்டு பிளமிஷ் இனத்தார் தங்கள் தனித்தன்மையையும் மொழியையும் நிலை நாட்டப் பார்க்கிறார்கள். ஆஸ்டிரியப் பேரரசு ஒன்றாக இணைந்து, பல்வேறு பேரினங்களும் ஒன்றாக இணையும் என்று கருதிய எண்ணம் நாளாவட்டத்தில் மறைந்து கொண்டே வருகிறது. பின்லாந்து மக்களை எடுத்துக்கொள்வோம் என்று கருதிய ரஷ்யர்கள், அந்த இனத்தை விழுங்குவதைக் காட்டிலும் அதை ஜீரணம் செய்வது கடினமென்று அறிகிறார்கள். எவ்வளவு தான் போரிட்டாலும் துருக்கிய சாம்ராஜ்யத்தில் வாழ்கின்ற பல்வேறு இனத்தார்களையும் ஒன்றாக ஆக்குதல் என்பது இயலாத காரியமாக இருக்கிறது.

இங்கிலாந்தில் திடீரென்று சாம்ராஜ்யப் புயல் அடித்து வருகிறது. கடல் கடந்துள்ள தனது இடங்களையெல்லாம் ஒன்றாக

இணைத்துச் சக்கரவர்த்தியின் கீழ்க் கொண்டுவந்து ஒரு மிகப் பெரிய பேரரசாக விளங்க வேண்டுமென்று ஓயாது நினைந்து வருகிறது. ஆனால் இங்கிலாந்தில் சமீபத்தில் கூடிய வல்லரசு மாநாட்டில்[1] எல்லா இனங்களையும் ஒன்றாக்க வேண்டுமென்ற பேச்சு அடிபட்டுப் போய்விட்டது. டொமினியன் சுயாட்சியில் கைவைக் கப்படுவதை அவர்கள் மிகவும் வெறுப்பதாகத் தெரிகிறது.

நெருங்கிய உறவில்தான் வலிமை இருக்கிற தென்பதையும் அளவால் பெருகி இருப்பதுதான் பெருமை யடைவதற்குரிய வழி என்பதையும் தற்காலத்தில் யாரும் நம்புவதாகத் தெரியவில்லை. இதில் அடிப்படையான உண்மை என்னவென்றால், பிரிவு மனப் பான்மை வலுப் பெற்றிருக்கிற இடங்களில், பெரியதொரு யூனிட்டை உண்டாக்கவேண்டு மென்பதற்காகக் குருட்டுத்தன மாகச் செய்யப்படுகின்ற முயற்சிகள், உண்மையோடு மாறுபடு கின்ற காரணத்தால் நடைமுறையில் எடுபடுவதில்லை. மறைந்து கிடக்கின்ற பிரிவு மனப்பான்மை திடீரென்று வெடிக்கக்கூடிய ஒரு சக்தியாகும். என்றாவது ஒருநாள் அழுத்தங் காரணமாகத் திடீ ரென்று வெடித்து அது பெருங் குழப்பத்தை உண்டாக்கலாம். ஒற்றுமைக்குச் சிறந்த வழி என்னவென்றால் உண்மையில் பிரிந்து நிற்பதை ஏற்றுக்கொண்டு அதற்கு மரியாதை செலுத்துவதே யாகும்.

எப்போது மனிதன் தனது தனித் தன்மையை உணர்கின்றானோ, அப்போதுதான் பெருமை அடையவேண்டு மென்பதையும் அவன் உணர்வான். இந்த உணர்ச்சி யில்லாவிட்டால் கூட்டத்தில் ஒரு வனாகக் கலந்து விடுகிறான். உறங்கும்பொழுது மனிதர்களுக்குள் வேறுபாடு காணப்படுவதில்லை யென்றாலும், அவர்கள் எழுந்த வுடன், ஒவ்வொருவருடைய அடையாளங்களும் பல்வேறு வழி களில் வெளிப்படுகின்றன. வளர்ச்சி என்பதே, ஒற்றுமையிலுள்ள வேற்றுமை விரிவடைவதுதான். விதையில் வேற்றுமை இல்லை. மொக்காக இருக்கும்பொழுதும் இதழ்கள் அனைத்தும் ஒன்றாக மூடப்பெற்றுள்ளன. இந்த இதழ்கள் ஒன்றிலிருந்து ஒன்று விடுபட்டு விரியும்பொழுதுதான் மொக்கு விரிந்து மலர் முழுத்தன்மையை அடைகிறது. ஒவ்வொரு இதழும் பல்வேறு துறைகளில் தத்தமக் குரிய வேலையைச் செய்து முடிக்கும்பொழுது மலர் தன்னுடைய கடமையை முடித்துவிடுகின்றது. இன்று பல்வேறு மக்களும் ஒருவரோ டொருவர் தொடர்பு கொள்கின்ற காரணத்தால் உலகம் முழுவதிலும் ஒரு வகையான கிளர்ச்சி ஏற்பட்டுள்ளது. வளர்ச்சிச்

சட்டத்தின் தள்ளமுடியாத ஒரு பகுதியாகிய தற்காப்பு உணர்ச்சியால் உந்தப்பெற்றுத் தம்மைத்தாம் காத்துக்கொள்ள வேண்டுமென்று ஒவ்வொரு சமுதாயமும் முயற்சி செய்வதனால், சம்பிரதாயங்களி னிடையேயுள்ள வேறுபாடுகள் வெளிப்பட்டுத் தோன்றுகின்றன. தன்னைத்தான் அழித்துக்கொண்டு அதன்மூலம் விரிவடைகின்ற கொள்கையை. எந்த மனிதனுடைய மனமும், பெரியதாக ஏற்றுக்கொள்வதில்லை. எவ்வளவு சிறிய பொருளும் தனக்குரிய தனித் தன்மையை உணர்ந்தவுடன் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவே முயலுகின்றது. இதுதான் வாழ்க்கைச் சட்டம். உண்மையைக் கூறுமிடத்து, விரிந்த தன்மையில் சாவதைவிடச் சுருங்கிய தன்மையில் வாழவே உயிர்கள் விரும்புகின்றன.

பின்லாந்து தேசத்தவர்கள் எவ்விதமேனும் ரஷ்யர்களாக மாறக் கூடுமேயானால் அவர்களுக்குள்ள பல்வேறு தொல்லைகளும் நீங்கி, சிறிய இனத்தாராக இருக்கின்ற அல்லலையே போக்கிக் கொள்ள முடியும். ஒரு தேசீய இனத்தில் சிறு பிரிவுகள் இருப்பது அதனுடைய வலிமையைக் குறைத்துவிடும் என்ற அச்சத்தின் காரணமாக, பின்லாந்து மக்களை ரஷ்யாவுக்குள் அமைத்துவிட ரஷ்யர்கள் விரும்புகிறார்கள். ஆனால் பின்லாந்துக்குரிய தனித் தன்மை என்பது மறக்கமுடியாத உண்மை. ரஷ்யாவின் நன்மைக்காகத் தன்னைத் தியாகம் செய்துகொள்ள பின்லாந்து விரும்பவில்லை. இந்தப் பிரிவு மனப்பான்மையைப் போக்கிக்கொள்வதற்கு நியாயமான வழிகளில் முயலலாம். அதற்கு மறுதலையாக, அதனை முரட்டுத்தனமாகப் போக்கிக்கொள்ளவதென்பது கொலைக் குற்றமேயாகும். இங்கிலாந்துக்கும் அயர்லாந்தைப் பொறுத்தவரை இதே தொல்லைதான் இருந்து வருகிறது. சமய சந்தர்ப்ப வசதி, உண்மையோடு மாறுபடுவதாக இருக்கிறது. இந்தப் பிரச்னை உலகத்தின் பல்வேறு பாகங்களிலும் இன்று காணப்படுகிறதென்றால் அதற்குரிய காரணம், உலகம் முழுவதிலும் புதியதொரு வாழ்க்கைத தத்துவம் கிளர்ந்து எழுகிறது என்பதுதான்.

இவை யனைத்தும் சேர்ந்து எங்கே கொண்டுபோய்விடும்? மனிதன் தன்னுடைய தனித் தன்மையின் சிறப்பை உணரும் பொழுதுதான் துன்பத்தைப் பொறுத்துக்கொண்டாகிலும் உயர் நிலையை அடைய முயலுகின்றான் என்ற உண்மைக்குத்தான் இது கொண்டுவிடுகிறது. அந்த உயர் நிலையைத் தனிப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் அடையும்பொழுதுதான் மக்களுக்குள் ஒற்றுமை என்பது உண்மையில் நடைபெறுவதாகிறது. வறுமையில்

ஒற்றுமை, அடிமைத்தனத்தில் ஒற்றுமை, கட்டுப்படுத்தப்படுவதால் ஒற்றுமை என்பவையெல்லாம் அந்தந்த நேரத்திற்கு மட்டும் பெறப் படுகின்ற ஒற்றுமைகளாகும்.

நம்முடைய இலக்கியக் கழகமாகிய "சாகித்ய பரீஷத்தில்" ஒரு கூட்டத்தில் நான் படித்த ஒரு கட்டுரையின்மேல் நடைபெற்ற விவாதத்தில், இலக்கணத்தைப் பொறுத்தவரை, கூடுமானவரை வங்காளி மொழி ஸம்ஸ்கிருதத்தோடு இணைந்துபோக வேண்டு மென்றும், அவ்வாறு செய்தால் குஜராத்திகள், மராத்திகள்[2] ஆகி யோருடன் மற்றும் பலரும் அதைப் புரிந்துகொள்வார்கள் என்றும் கூறப்பெற்றது நினைவிற்கு வருகிறது.

வங்காளி மொழியின் தனித் தன்மைதான் வங்காளி அல்லாத வர்கள் அம் மொழியைப் புரிந்துகொள்வதற்குரிய பெரிய தடையாகு மென்பதை யாரும் மறுக்கமுடியாது. என்ருலும் அந்த மொழிக்கு ஏதேனும் சக்தியோ, அழகோ இருக்குமாஞல் அவை இந்தத் தனித் தனித் தன்மையின் காரணமாகப் பெறப்படுபவையே யாகும். வங் காளி மொழி செயற்கை முறையில் ஸம்ஸ்கிருத அச்சில் வார்க்கப்படாத மொழியாக இருப்பினும் கற்பதற்குக் கடுமையான மொழியாக இருப்பினும்கூட, குஜராத்தி, இன்று வங்காளி மொழி யைக் கற்றுக்கொள்ள முயல்கிருன். சந்தாலி மொழியிலுள்ள தனித் தன்மையை, சந்தாலித் தன்மையைப்[3] போக்கிவிட்டால் மட்டும் நாமும் அந்த இலக்கியத்தை அனுபவிக்க முடியுமா? வங்காளி-சந்தாலி உறவை வலுப்படுத்துவதற்கு இந்த அளவு முட்டுக் கொடுத்தால் மட்டும் போதுமானதாகுமா?

வங்காளி மொழியில் காணப்பெறும் தனித் தன்மையுடன் வங் காளி இலக்கியம் வளர்ச்சி அடைந்தால்தான் வங்காளிகளுக்கும், ஹிந்தி பேசும் மக்களுக்குமிடையே ஒரு நிலையான ஒற்றுமை ஏற்பட முடியும். ஹிந்துஸ்தானி பேசும் மக்களோடு எளிதாகத் தொடர்பு கொள்ளவேண்டு மென்பதற்காக ஹிந்தி மொழியைப் போலவே வங்காளி மொழியையும் ஒரு வங்காளி செய்துவிடுவானேயாஞல், அவனுடைய இலக்கியம் இறந்துபோவதோடு மட்டுமல்லாமல் எந்த ஹிந்துஸ்தானியனும் அவனைச் சட்டை செய்யமாட்டான். ஒரு காலத்தில், நன்கு கற்றறிந்த அறிவுடைய ஒருவர், கீழ்க்கண்டவாறு என்னிடம் கூறிஞர்:—"நம்முடைய தேசீய ஒற்றுமைக்கு வங்காளி இலக்கிய வளர்ச்சி ஒரு தடையாக இருந்து வருகிறது. ஏனென்ருல் இந்த இலக்கியம் நல்ல வயதை அடைய அடைய எளிதில்

இறக்க மறுத்துவிடும். இதன் பயனாக வங்காளி மொழி வங்காள பூமியில் நிலைத்துவிடும். எனவே இந்தியாவின் மொழி ஒற்றுமைக்கு வங்காளி ஒரு பெரிய தடையாக ஆகிவிடும்.'' எல்லாவித வேற்றுமை களையும் ஒன்றாகப் போட்டு உருத் தெரியாத பிண்டமாக அடித்து விட்டால் தேசீய ஒற்றுமை தானே கிடைத்துவிடுமென்று அக்காலத் திலுள்ள மக்கள் கருதினார்கள். உண்மையைக் கூறுமிடத்துத் தனித் தன்மையைத் தியாகம் செய்வதால் ஏற்படக்கூடிய இலாபம் பெயரளவில்தான் உண்டு. உண்மையான ஒரே இலாபம், தனித் தன்மையை மேலும் வளர்ப்பதால் ஏற்படுவதேயாகும்.

இங்கு, இந்தியாவில், அரசியல் ஒற்றுமையை வளர்க்கின்ற முயற்சி வலுவடைந்ததும், அதாவது நம்மிடைய விழிப்பு ஏற்பட்ட வுடன் முஸ்லீம்களை நம்மோடு சேர்த்துக்கொள்ள முயன்று தோல்வி யடைந்தோம். ஒருவேளை நாம் வெற்றி பெற்றிருப்போமேயானால் அது நமக்கு நன்மையாக முடிந்திருக்கும். ஆனால் நன்மை யென்பவை எல்லாம் ஒற்றுமையை உண்டாக்கி விடுவதில்லை. ஹிந்துக்களுக் கும், முஸ்லீம்களுக்கு மிடையே ஓர் உண்மையான வேற்றுமை இருந்துவருகிறது. அதை ஒதுக்கிவிடுதல் என்பது இயலாத காரியம். நம்முடைய தேவைகளினால் உந்தப்பெற்று, இந்த வேற்று மையை நாம் அறிந்துகொள்ளத் தவறினால், அந்த வேற்றுமையும் நம்முடைய தேவைகளை அறிந்துகொள்ள மறுத்துவிடும்.

ஹிந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்குமிடையே உண்மையான முழு ஒற்றுமை ஏற்படாத காரணத்தால்தான் அரசியல் துறையில் அவர்களை ஒன்று சேர்க்கச் செய்த முயற்சிகள் சந்தேகத்திலும், அவ நம்பிக்கையிலும் முடிந்தன. இந்தச் சந்தேகத்தை அர்த்தமற்ற தென்று ஒதுக்கிவிடுவதால் பயனில்லை. முஸ்லீம்களை நம்மவர் களாகக் கருதி அழைக்காமல், நம்முடைய காரியம் முடிய உதவிக்கு வேண்டுமென்று மட்டும் அழைக்கிறோம். அவர்களால் இனிப் பயனில்லை யென்று என்றாவது ஒரு நாள் காண்போமேயானால், அவர்களைத் தூக்கி யெறிய நாம் தயங்கமாட்டோம். அவர்களை உண்மையான கூட்டாளிகளாகக் கருதாமல் நம்முடைய தேவை களைப் பொறுத்து ஏற்றுக்கொள்ளும் ஒரு கருவியாகவே கருதி வருகிறோம். தாரதம்மியமுடைய இரண்டு கட்சிகள் கூட்டாளி களாகச் சேர்ந்தால், புறத்தே இருந்து வந்த இடையூற்றைப் போக்கி முடிகின்ற வரையில்தான் அந்தக் கூட்டு நிலைத்து நிற்கும். அந்தத் தேவை முடிந்தவுடன், வெற்றியால் கிடைத்த பொருளைப் பங்கிட்டுக்

கொள்வதில் அவர்கள் ஒருவரை யொருவர் ஏமாற்ற முற்படுவார்கள். இந்த முறையில் சந்தேகப்பட்டுத்தான், நாம் அழைத்த பொழுது, முஸ்லீம்கள் வரவில்லை. நாம் இருவரும் ஒன்ருக நிற்கக் கூடுமேயாஞல் இருவருமே மிகுந்த பயனை அடையமுடியும். ஆஞல் தனித்தே இருப்பதால்[4] இதைவிட அதிகமான பயனை அடைய முடியுமோ என்று யோசித்து வருகிருர்கள் முஸ்லீம்கள்.

சில காலத்திற்கு முன்பு ஹிந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கு மிடையேயுள்ள இந்த வேறுபாடு இன்றுள்ளது போல அவ்வளவு வெளிப்படையாக இல்லை. நம்மிடையேயுள்ள இந்த வேற்றுமையை அறிய முடியாதபடி ஒன்ருகக் கலந்திருந்தோம். வேறுபாட்டு உணர்ச்சி யின்மை, உடன்பாட்டு நிகழ்ச்சியாக இல்லாமல், ஓர் எதிர்மறைப் பொருளாகவே இருந்து வந்தது. மற்ருெரு வகையாகக் கூறிஞல், வேற்றுமையை நாம் உணரவில்லை என்பதால் வேற்றுமையே இல்லை என்று நினைக்கக்கூடாது. உண்மையைக் கூறுமிடத்து, நடைமுறை நிகழ்ச்சிகளை அறிய முடியாத ஓர் ஆழ்ந்த உறக்கத்தில் நாம் அமிழ்ந்திருந்தோம். ஹிந்துவாக இருப்பதன் பெருமையை ஒவ்வொரு ஹிந்துவும் அறிந்துகொள்ள வேண்டிய ஒரு காலம் வந்தது. ஒருவேளை இந்தப் பெருமையை அறிந்துகொண்டு முஸ்லீம்கள் வாய் மூடி இருந்திருப்பார்களேயாஞல் ஹிந்து அதன் மூலம் பெரு மகிழ்ச்சி அடைந்திருப்பான். ஆஞல், இதற்கு எதிராக, எந்தக் காரணங்களுக்காக ஹிந்துவாக இருப்பதன் பெருமையை ஹிந்து உணர்ந்தாஞே, அதேபோல முஸ்லீமாக இருப்பதன் பெருமையை முஸ்லீம்கள் உணரத் தொடங்கிஞர்கள். இன்று முஸ்லீம்கள் வலுவுடையவர்களாக இருக்க விரும்புகிருர்கள். ஆஞல் ஹிந்துக்களுடன் தம்மை அமிழ்த்திக்கொண்டு அவ்வாறு இருக்க விரும்பாமல், ஒரு முஸ்லீமாக இருந்தே இந்த வலிமையை அடைய விரும்புகிருர்கள்.

இன்று உலகத்திலுள்ள பெரிய பிரச்னை, எல்லாவிதமான வேறுபாடுகளையும் அழித்து விடுவதால் எவ்வாறு ஒற்றுமையைப் பெற முடியு மென்பதன்று. ஆஞல் அத்தனை வேற்றுமைகளையும் அறிந்து வைத்துக்கொண்டு, எவ்வாறு ஒற்றுமையைப் பெறுவது என்பதுதான் அந்தப் பிரச்னை. இந்த முயற்சி மிகக் கடினமானது என்பதில் ஐயமில்லை. ஏனென்ருல், சம்பிரதாயத்தின் வழியாக அல்லாமல் உண்மையாகவே ஒருவருக் கொருவர் விட்டுக் கொடுத்தால்தான் இதனைச் செய்து முடிக்க முடியும். ஆஞல் எளிதாகக் காணப்படுகின்ற ஒன்று, செய்து முடிக்கும்பொழுது கடினமான

தாக ஆகி விடுகின்றது. அதன் எதிரே, கடினமாக உள்ளதும் காளாவட்டத்தில் எளிதாக ஆகி விடுகின்றது.

நம்முடைய நாட்டிலுள்ள முஸ்லீம்கள் ஒரு தனிப்பட்ட சமுதாயமாக வளருவதற்கு முயல்கிருர்கள். இந்த நேரத்திற்கு நம்மைப் பொறுத்தமட்டில் அம் முயற்சி எவ்வளவு விரும்பத்தகாத தாகவும், கேடு விளைவிப்பதாகவும் இருந்தாலுங்கூட எதிர்காலத்தில் என்ருவது ஒரு நாள் உண்மையான ஒற்றுமையை அடைவதற்கு அது ஒன்றுதான் சிறந்த வழி. பணக்காரர்களாக இருந்தாலொழிய, கொடுப்பது கடினமான காரியம். நிரம்ப இருக்கும் பொழுதுதான் ஒன்றைத் தியாகம் செய்ய முடியும். தேவையும், அற்பத்தனமும் இருக்கின்ற வரையில் பொருமையும் போராட்டமும் இருந்தே தீரும். வறுமை, அற்பத்தனம் என்ற இவற்றினிடையே காணப்படும் ஒற்றுமை வலுக்கட்டாயமான ஒற்றுமையாகும்; அது உண்மையில் ஒற்றுமையே அன்று.

நவீனக் கல்வி முறையில் காலாகாலத்தில் கவனம் செலுத்தாமையால் பல்வேறு துறைகளில் ஹிந்துவைவிட இந்திய முஸ்லீம் பின் தங்கியிருக்கிருர். அவர் ஹிந்துவின் அளவுக்கு இத் துறையில் முன்னேற வேண்டும். இந்தத் தாரத்தம்மியத்தைப் போக்குவதற்கு ஒவ்வொரு நிலையிலும் ஹிந்துவை விட அதிகம் பெற விரும்புகிருர். அவருடைய இந்த விருப்பம் நம்முடைய முழுச் சம்மதத்தையும் பெறவேண்டும். முஸ்லீம்கள், கல்வி, கௌரவம், பெருமை ஆகியவற்றில் ஹிந்துக்களோடு சமமாக ஆவதனுல் ஹிந்துக்களுக்கே நன்மை யேற்படும்.

வெளியிலிருந்து எவ்வளவு பெறலாம் என்பதற்கு ஓர் எல்லை யுண்டு. ஹிந்துவாக இருப்பினும், முஸ்லீமாக இருப்பினும் இந்த எல்லையின் அளவு ஒன்றுதான். அந்த எல்லையை அடைகின்ற வரையில், எல்லையே இருக்கமுடியாது என்ற பைத்தியக்கார நம்பிக்கை இருக்கக்கூடும். முடிவான பயன் இம் முறையில்தான் கிடைக்குமென்று பலர் தவருக எண்ணுகிருர்கள். பயனைத்திறகு வேண்டிய தேவைப் பொருள்களில் அதிகமாக யாருக்குக் கிடைத்துள்ளதென்பதனுல் ஏற்பட்ட பொருமையின் காரணமாகக் கட்சிக்காரர்களிடையே போராட்டம் உண்டாகிறது.

ஓரளவு தூரம் சென்றுவிட்ட பிறகு நிலையான நன்மையைப் பெறுவதற்கு ஒருவருடைய தகுதியும், வன்மையுமே காரணமாக இருக்க முடியும் என்பது நன்கு விளங்கும். உரிமைகளை

வைத்துக் காப்பாற்றக் கூடிய தகுதியைப் பெற்றுலொழிய, உரிமைகளை மட்டும் பெறத் தகுதி இல்லை. இதை எவ்வளவு விரைவாக அறிந்து கொள்ளுகிறோமோ, அவ்வளவுக்கும் நன்மையுண்டு. எனவே, உயர்ந்த இடத்தையும், கௌரவத்தையும் அடைவதற்குத் தனிப்பட்ட பாதை எதனையும் முஸ்லீம் கண்டிருந்தால் தடையில்லாமல் அவர் அந்த வழியில் முன்னேறிச் செல்லட்டும். நம்மைப் பொறுத்த வரையில், பெருந்தன்மையோடு, அவர் நல்ல முறையில் முடிவு இடத்தை அடையட்டும் என்று பிரார்த்தனை செய்வோமாக.

புறத் தோற்றத்திலுள்ள இந்தத் தாரதம்மியத்தைப் பற்றி அளவுக்கு மிஞ்சின அழுத்தம் கொடுத்துப் பேச நான் விரும்பவில்லை. இதனை மாற்றியமைப்பதும் கடினமான காரியமன்று. உண்மையான மனிதத் தனித் தன்மையைத்தான் நான் மனத்துள் கொண்டு பேசுகிறேன். அந்தத் தனித் தன்மையை அழிப்பது தன்னைத் தானே அழித்துக்கொள்வதாகும்.

ஒரு தனிப்பட்ட பல்கலைக் கழகத்தை அமைப்பதில் முஸ்லீம்களுக்கு ஏதாவது போட்டி மனப்பான்மை இருக்குமேயானுல், அந்த மனப்பான்மை உண்மையானதாகவோ, நிலையானதாகவோ இராதென்று நான் உறுதியாக நம்புகிறேன். ஒவ்வொருவருடைய தனித் தன்மையையும் உணர்ந்துகொள்வதே இதில் காணப்படும் முடிவான உண்மையாகும். அவருடைய சொந்த இயல்பை வைத்துக்கொண்டு அதில் உயர்நிலையை அடைவதுதான் ஒரு முஸ்லீமின் உண்மை விருப்பமாக இருக்க முடியும்.

வேறுபட்ட தனித்தன்மை ஒன்று இவ்வாறு தோன்றும் பொழுது, தொடக்கத்தில் ஒருவகையான அச்சம் ஏற்படுகிறது. பகைமையை வளர்க்கின்ற இத் தனித் தன்மைகள் மேலும் இடங் கொடுக்கப்பட்டு வளர நேர்ந்தால் அதன் பயனுக மக்களுக்குள் ஒற்றுமைக் குறைவே ஏற்படுமென்று தோன்றுகிறது.

இவ்வாறு அஞ்சுவதற்குரிய காலம் ஒன்றிருந்தது. அக்காலத்தில் ஒவ்வோர் இனமும், ஜாதியும் தன்னுடைய எல்லைக்குள்ளேயே நின்று, தன்னுடைய தனித் தன்மையை அளவுக்கு மீறி வளர்த்துக்கொண்டு, மனித சமுதாயத்திற்கே தீங்கு செய்யக் கூடிய ஒரு நிலையை யடைய முற்பட்டதுண்டு.

அத்தகைய ஒரு வளர்ச்சி இந்த நாளில் இயலாத காரியம். மனித சமுதாயத்தின் நடுவே நாம் ஒவ்வொருவரும் வழி கண்டு

வாதுவிட்டோம். தனிப்பட்ட ஒருவன் எல்லை மீறி வளர்ந்து, பேய் வடிவம் எடுப்பதற்குரிய இடந்தரும் முறையில், எந்த மூலையிலும் இடம் காலியாக இல்லை.

இன்றுள்ள கல்வியையும், அறிவையும் கிழக்கு, மேற்கு ஆகிய பகுதிகளிலுள்ள எல்லா மக்களும் பெற முடியும். யாரும் தனக்குரிய விஞ்ஞானத்தைத் தானே வளர்த்துக்கொள்ள இடமில்லை. இதுதான் வரலாறு காட்டும் வழி. அறிவு என்பது அனைத் துலக விஷயமாக வளர்ந்து வருகிறது. இதன் மூலம் மனித சமுதாயம் முழுவதும் அறிவுத் துறையில் ஒற்றுமைப்பட வழி வகுக்கப்படுகின்றது.

வரலாற்றின் இந்தப் பகுதி, ஹிந்து, முஸ்லீம் என்ற இருவரிடையேயும் வேறுபாடு கருதாமல் அனைவருடைய கதவுகளையும், தட்டிக்கொண்டு நிற்கின்றது. இதுவரையில் நாம் பெற்றிருந்த கல்வி, முற்றிலும் மேனாட்டுக் கல்வியாகவே இருந்து வந்தது. அக் கல்வி முறை இந் நாட்டில் தொடங்கப்பெற்றபொழுது, அதனையல்லாத கீழ்த் திசைக் கல்வி முழுவதும் எள்ளி நகையாடப்பட்டு வந்தது. இன்றுவரை அந்த எழுச்சியின் மேலேயே நாம் வளர்க்கப் பட்டோம். இதன் பயனாகக் கல்வித் தேவியின் வீட்டில்கூட சிறு கலகங்கள் தோன்றலாயின. கீழ்ப் பகுதி அறைகளில் வசிக்கின்ற குழந்தைகள் மேல் பக்கமாக உள்ள ஜன்னல்களை மூடிவிட்டார்கள். மேற்கு அறைகளில் வசிக்கின்றவர்கள் கிழக்கிலிருந்து அடிக்கும் காற்றுக்கூட நுழையாதபடி தங்கள் காதுகள் வரையில் இழுத்துப் போர்த்துக் கொண்டார்கள். கீழ்த் திசையிலிருந்து அடிப்பது முழுவதும் விஷத் தன்மையுடைய நச்சுக் காற்று என்றே அவர்கள் கருதினார்கள்.

இதனிடையே காலம் மெள்ள மெள்ள மாறத் தொடங்கியது. எல்லா இடங்களிலும் கீழ்த் திசைக் கல்வி அதனுடைய தாழ்த்தப் பட்ட நிலையிலிருந்து மெள்ள மெள்ள உயிர் பெற்று எழலாயிற்று. மனித அறிவு வளர்ச்சிக்குக் கீழ்த் திசைக் கல்வி நிறைந்த அளவு கொடை கொடுத்துள்ள தென்பதை உலகம் மெள்ள மெள்ள அறியத் தொடங்கியது.

என்றாலும், நம்முடைய கல்விக் கொள்கைகள் மட்டும் பழைய முறையையே இன்னும் பின்பற்றி வருகின்றன. நம்முடைய பல் கலைக் கழகங்கள், உள் நாட்டுக் கல்வியைத் தவிர எஞ்சியுள்ள எல்லாக் கல்விக்கும் இடந் தருகின்றன. ஜெர்மனியில் படிக்கின்ற

ஒரு மாணவன் ஹிந்து, இஸ்லாமிய சமயங்கள் பற்றிப் படிப்பதற்குப் பெற்றுள்ள வாய்ப்பைக் கூட நாம் பெறவில்லை. இத்தகைய கல்வி முறை நமக்குத் தீமையே விளைவித்திருக்கிற தென்பதை நமக்கு உணர்த்திய, காலத்தின் போக்கிற்கு நன்றி செலுத்துவோமாக. மேனுடு நமக்கு என்ன கற்றுக் கொடுத்ததோ, அதனைக் கிளிப் பிள்ளையைப் போல் நாம் சொல்லிக்கொண்டிருந்தால் நம் எதிரே யுள்ளவர்களுக்கு ஓரளவிற்கு அது வேடிக்கையாக இருக்கலாம். ஆனல் உலகிற்கு அதனல் பயன் ஒன்றும் விளையாது. நாம், நம்முடைய மொழியைப் பேச வேண்டுமென்றுதான் உலகம் எதிர்பார்க்கிறது.

உலகம் எதிர்பார்க்கின்ற இதனை நாம் நிறைவேற்ற வில்லையானல், மனித சமுதாயத்தினிடமிருந்து நம்முடைய மதிப்பை நாம் பெற முடியாது. அந்த மதிப்பைப் பெறுவதற்குரிய எல்லா முயற்சிகளையும் நாம் செய்து தீர வேண்டும். இதுதான் அந்த மதிப்பைப் பெறுவதற்குரிய வழியாகும்.

இதன் பயனுகத்தான் நம்முடைய கல்வி முறையையும், கற்பிக்கும் முறையையும்[5] மாற்றி யமைப்பதற்குரிய ஒரு முயற்சி மேற்கொள்ளப்பெற்றது. அந்த முயற்சி இதுவரையில் நன்கு பயனளிக்கவில்லை யென்ருல் அது இதுவரையில் நாம் பெற்ற ஒருதலைப்பட்சமான கல்வியின் பயனே யாகும். உண்மையிலேயே விரும்பினல் கூடத் தகுந்த அளவில் நாம் பெருத ஒன்றை, நம்மால் திருப்பிக் கொடுக்க முடியாது.

நம்முடைய நாட்டிற் கென்று ஒரு தனிப்பட்ட அறிவுத் திறன் இல்லை யென்றுகூடச் சொல்கின்றவர்கள் உண்டு. ஆனல் அவர்களைப்பற்றிக் கணக்கில் எடுத்துக்கொள்ளத் தேவையில்லை.

இன்னும் பலர், இத்தகைய தனிப்பட்ட அறிவுத் திறன் உண்டென்பதை ஒப்புக்கொண்டாலும்கூட, வாழ்க்கை முறையில் அதைப்பற்றிக் கவலைப்படுவதாகவே தெரியவில்லை. ஆனல், அவர்களுடைய சமயதிற்குரிய பழமையான சடங்குகளை அப்படியே செய்வதன் மூலமும் அவர்களுடைய பழமையான சமய நிலைகளைப் பற்றிப் பேசுவதன் மூலமும் வாழ்கிருர்களே தவிரத் தேசீய இலட்சியத்திற்கு அவர்கள் உண்மையில் நன்றி செலுத்தவில்லை; அவர்களுடைய செயல்கள், அவர்கள் பேசும் சொற்களோடு மாறுபட்டும் உள்ளன. பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் அவர்கள் கற்றுக்கொண்டவற்றைக் கிளிப்பிள்ளைகள் போல் திருப்பிச் சொல்வதைத் தவிர, அதற்கப்பால் செல்வதுமில்லை.

துக்கொள்கிறார்களே தவிர உண்மையில் மிகக் குறுகிய நோக்க முடையவர்களாகவே இருக்கிறார்கள். என்றாலும், நிலைபெற்றிருக்கக் கூடியவற்றைப்பற்றி அழுத்தம் கொடுத்துப் பேசாமல் நடைமுறை யில் இருப்பவற்றைப்பற்றி மட்டுமே அவர்கள் பேசுகிறார்கள். இந்தப் பெருங் குற்றம் நம்முடைய வீழ்ச்சிக் காலத்தில் மிகப் பெரியதாக வளர்ந்து ஏனைய மனித சமுதாயத்தோடு முரண்பட்டவர்களாக நம்மை ஆக்கிவிடுகிறது. அன்றியும், நம்மை இரண்டாகப் பிளந்து வலிமை யற்றவர்களாக ஆக்கி, வரலாற்றில், அடிக்கடி நாம் தலைகுனியுமாறும் செய்துவிடுகிறது. இவற்றையே நம்முடைய தேசீயப் பண்பாடு என்று கூறிக் கற்பனையான பல நற்பண்புகளை யெல்லாம் இதற்கு ஏற்றுகிறார்கள். கால மென்னும் குப்பை மேட்டைக் கிண்டித் தங்களுடைய இனம் பற்றி அறிந்துகொள்ள அவர்கள் முயல்கிறார்கள். அன்றியும், இந்த முயற்சியைத் தொடர்ந்து நடத்தியும் வருகிறார்கள். இத்தகைய மக்கள், சதுப்பு நிலத்தில் தோன்றுகின்ற கொள்ளிவாய்ப் பிசாசை, சூரியனையும், சந்திரனையும்விட மிகப் பழமையானதென்று போற்றுவார்கள் போலும்!

ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் தனித்தனியாகப் பல் கலைக் கழகம் அமைப்பது கண்டு அஞ்சுகிறவர்களுடைய அச்சம் முற்றிலும் அர்த்தமற்றதென்று சொல்ல நான் தயாராக இல்லை. என்றாலும், எல்லாவகையான கல்விக்கும் இடந்தருகின்ற ஒரு கல்வி முறை, அதாவது கீழ்கலைக் கல்வி, மேல்கலைக் கல்வி ஆகியவற் றிற்கு இடந்தருகின்ற கல்வி எக்காலத்தும் ஒரு கட்சியினுடைய அதீதத்தைக் கொண்டுவர முடியாது. வேறுபாடுகள் அமைந்திருக் கின்ற நிலையே, ஒவ்வொன்றின் அதீதத்தைப் போக்கி உண்மையான மதிப்புடையனவற்றை விளைவிக்கும். தன்னுடைய அறையில் இருக் கின்ற வரையில் ஒரு மனிதன் அவனுடைய விருப்பத்திற்கேற்ப மிகத் பெரிய ஆசனத்தை அமைத்துக் கொள்ளலாம். ஆனால், அதே மனிதன் பலர் மத்தியில் வந்து அமரும் பொழுது, கிடைக்கின்ற ஆசனத்தில் அமர வேண்டுமே தவிர வேறு வழி இல்லை; அதாவது அவனுக்குக் கிடைக்கின்ற இருக்கை, அங்கேயுள்ள இருக்கைகளைப் பொறுத்ததே தவிர, வேறு இல்லை. ஒரு ஹிந்து அல்லது முஸ்லீம் பல்கலைக் கழகம் அனைத் துலகக் கல்வியை மேற்கொள்ளும் அதே நேரத்தில் தன்னுடைய தனித் தன்மையையும் வளர்த்துக் கொள் ளுமேயானால் அதில் வருந்தவேண்டியது ஒன்றுமில்லை. உண்மை யைக் கூறுமிடத்து, தனித் தன்மையின் மதிப்பை உள்ளூர அறியச் செய்யும் வாய்ப்பாகும் இது.

இன்றுள்ள மேலைநாட்டுக் கல்விமுறை பயன்படுத்துகின்ற விஞ்ஞானம், சரித்திரம், ஆகிய அறிவுத்துறை ஆராய்ச்சி வழிகளைக் கையாண்டு, நம்முடைய பழைய கல்வி முறையை ஆராயவில்லை. கூர்தல் தத்துதம் (Law of evolution) இந்தியாவைத் தவிர உலகத்தின் மற்ற பாகங்களுக்கு மட்டுமே ஏதோ ஏற்பட்டது போலவும், இந்தியாவைப் பொறுத்தமட்டில் பொருள்களின் தொடக்கத்திற்குக் கால எல்லையே இல்லையென்பது போலவும் நினைப்பதாகவே தெரிகிறது. இந்தியாவிலுள்ள பல்வேறு கலைகளும் வெவ்வேறு தெய்வங்களால், அதாவது இலக்கணம் ஒரு தெய்வத்தாலும், ரசாயனம் ஒரு தெய்வத்தாலும், மருத்துவம் மற்றொரு தெய்வத்தாலும் முழுவதுமே வளர்க்கப்பட்டது போல நம்புகிறோம். ஒரு தெய்வத்தின் உறுப்புக்களிலிருந்து நான்கு ஜாதிகளும் அப்படியே முழுவதாக வந்ததுபோல நினைக்கிறோம். தெய்வங்களும், ஞானிகளுமாகச் சேர்ந்து ஒரே நாளில் ஒரேயடியாக இந்த நிலைகளை யெல்லாம் உண்டாக்கிவிட்டது போலவும் இவற்றைப்பற்றிக் கேட்பதும், ஆராய்வதும் தவறு என்பது போலவும் கருதப்படுகிறது. ஆதலால் தான் இன்றைய வரலாற்றை எழுதும்பொழுது மனித முயற்சிக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சிகளையும், தெய்வீக நிகழ்ச்சிகளையும் கலக்காமல் இருக்க முடியவில்லை. பகுத்தறிவுக்கும் முடிவு கூறலுக்கும் நம்முடைய சமுதாயப் பழக்க வழக்கங்களில் இடம் இருப்பதாகவே தெரியவில்லை. எந்த ஒரு காரியத்தையும் நாம் ஏன் செய்கிறோம் ஏன் செய்யாமல் விடுகிறோம் என்று கேட்பது தவறானதாகவே கருதப்படுகிறது. அனைத் துலகத்திலும் காரண காரியச் சட்டம் பயன்பட்டு, இந்தியாவில் மட்டும் இதற்கு விலக்களிக்கப் பெற்றுள்ளது போலத் தெரிகிறது. இந் நாட்டைப் பொறுத்தவரை காரியங்களுக்குரிய காரணங்கள் வேத சாஸ்திரங்களில் மறைந்து கிடப்பதாகக் கருதுகிறோம். கப்பல் யாத்திரை நல்லதா கெட்டதா, என்பதைக்கூட சாஸ்திரங்களே சொல்லவேண்டும். நம்முடைய ஹுக்காவிலுள்ள தண்ணீர் நம்முடைய அறைக்குள் எவனோ ஒருவன் நுழைவதால் தீட்டுப்பட்டு விடுகிறதா இல்லையா என்பதைக்கூடப் பண்டிதர்கள் தான் சொல்ல வேண்டும். தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒருவன் தொட்ட தண்ணீருக்குத் தீட்டு உண்டென்றும்; ஆனால், அதே சமயத்தில் அது பாலாகவோ, பழச் சாறாகவோ இருந்தால் அதற்குத் தீட்டு இல்லையென்றும், ஹிந்து அல்லாத இனத்தைச் சேர்ந்த ஒருவன் தயாரித்த சோற்றைச் சாப்பிட்டால் அதனால் ஜாதியை இழந்து போகிறோம் என்றும், ஆனால், அதே நேரத்தில் அவன் தொட்ட மதுபானத்தைச் சாப்பிடுவது தவறு இல்லை

என்றும் பேசப்படுவதன் காரணத்தை நாம் அறிய முடியவில்லை. யாரேனும் துணிந்து கேள்வி கேட்டுவிட்டால் ஜாதிப் பிரஷ்டம் செய்து விடுவதாகப் பயமுறுத்தி அவர்கள் வாயை அடைத்து விடுகிறார்கள்.

கற்றறிந்த மக்கள்கூட அறிவுக்குப் பொருத்த மில்லாத இந்தப் புதுமையான முறையில் ஏன் நடந்துகொள்கிறார்கள் என்பதற்கு, அவர்கள் பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் மேனாட்டுக் கலை, அறிவியல்களைப் படித்துவிட்டுக் கீழைநாட்டுக் கலைகளை வேறுபட்ட இடங்களில் வேறுபட்ட முறையில் கற்பதும் ஒரு காரண மாகலாம். எனவே இவைபற்றிய நம்முடைய கருத்துக்கள் ஒரு வேற்றுமையை வளர்க்கின்றன. மேலை நாட்டு விஞ்ஞானத்திற்கு மட்டுமே காரண வாதம் பயன்படும் என்ற ஒரு தவருன எண்ணம் நம்முள் படிந்துவிடுகிறது. இரண்டு வகையான கல்வி முறைகளையும் ஒரே இடத்தில் கற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புக் கிடைக்குமேயானுல் இவை இரண்டும் வேறுபட்டவை என்ற மயக்கம் நம்மினின்று நீங்கிவிடும்.

நாம் பிரிந்து நிற்கக்கூடிய ஒரு தனிப்பட்ட இனமென்ற எண்ணம் கற்றறிவுடையவர்களிடையே அதிகம் பரவி வருகிறது. தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்கின்ற இந்த எண்ணம் தோன்றியவுடன், உருவாக ஆராய்ந்து பார்ப்பதைக் காட்டிலும், முரட்டுத் தனமே மிகுதியாகக் காணப்படுகிறது. இன்றுவரையில் நம்முடையது என்று சொல்லிக் கொள்ளக்கூடிய அனைத்தையும் ஒரு காரணமற்ற உதாசீனத்தோடு ஒதுக்கி வந்திருக்கிறோம் என்பதே இது இவ்வாறு இருக்கிறதென்பதை விளக்கும். சக்தி வாய்ந்த எதிர்ச் செயலில் அகப்படும்பொழுது, ஏதோ விஞ்ஞான ரீதியாக முடிவுக்கு வந்ததுபோல ஒரு நாடக மாடுகிறோம். முடிவெடுத்துக் கொள்ளாமல் இருப்பதைக் காட்டிலும் இது மிக மோசமானதாகும்.

தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளும் வலிமையான இந்த ஜ "ய்" என்றுமே நிலைத்திருக்கப் போவதில்லை. இந்த எதிர்ச் செயலின் கொதிப்பு நாளாவட்டத்தில் அடங்கியே தீர வேண்டும். சக்தியத்தை அகத்திலும் புறத்திலும் இருந்து அப்போதுதான் நம்மால் காப்பாற்ற முடியும்.

முழு வளர்ச்சி யடைந்துள்ள ஹிந்து சமுதாயத்தைப் பற்றிய நேரிடையான அனுபவம் இன்னும் நமக்கு ஏற்படவில்லை. எனவே, ஒரு ஹிந்து என்ன செய்துள்ளான்? என்ன செய்ய முடியும்? என்பவைபற்றி நாம் கொண்டிருக்கின்ற எண்ணமெல்லாம் பனிப்

12

படலம் போல விளக்கம் இல்லாமல் இருக்கின்றன. நம் கண்ணெதிரே எதைக் காண்கின்றோமோ அதுதான் இந்த நேரத்தில் நம் முன்னர்ப் பெரிதாகக் காட்சியளிக்கிறது. ஹிந்து சமுதாயத்தின் இன்றைய அமைப்பு முறை ஹிந்துவினுடைய உண்மையான சக்தியையும், இயற்கையையும் பல்வேறு வழிகளில் அமுக்திக் கொண்டிருக்கிறதென்பதை நாம் உணர்வது கஷ்டமாக இருக்கிறது. ஹிந்துப் பஞ்சாங்கங்களில் மாதக் கடைசியில் செய்ய வேண்டிய சடங்குகளைப் பற்றி விளக்கம் கூறுகின்ற படங்கள்தாம் ஹிந்து நாகரிகம் என்று நினைக்கின்ற அளவுக்கு வந்துவிடும். இந்தப் படங்களில் எப்போதும் புறத் தூய்மையுடனும் பிரிவினை செய்கின்ற கோலத்துடனும் பட்டினியாலும், சமயச் சடங்குகளாலும் நொய்ந்து போன வடிவங்களும் உலகப் பொருள்களிலிருந்து எங்கோ ஒரு மூலையில் முடங்கிக் கிடக்கின்ற வடிவங்களுமே காட்சியளிக்கின்றன. ஆனால், ஒரு காலத்தில் ஹிந்து நாகரிகம் முழு வலிமை பெற்றதாய்ப் பல்வேறு செயல்களில் ஈடுபட்டதாய் இருந்ததும் உண்டு. அக் காலங்களில் ஹிந்துக்கள் கடல் கடந்து சென்று குடியேற்ற நாடுகளை அமைத்துத் தங்களுடைய கலைகள், கைத்தொழில்கள், வாணிகம், பெருந் தொழில்கள் ஆகியவற்றை வளர்த்த நிலையும் உண்டு. அக் காலங்களில் ஹிந்துவினுடைய புதிய புதிய கருத்துக்களைச் சரித்திரம் கண்ட துண்டு. அவனுடைய சமுதாயத்தில் சமுதாய, சமயப் புரட்சிகளுக்கும் இடமிருந்தது. அந் நிலையில் பெண்கள் கூட உடல் வலிமை, கல்வி யறிவு, ஆன்ம விசாரணை ஆகியவற்றைப் பெற்றிருந்தார்கள்.

மகா பாரதத்தின் ஏடுகளைப் புரட்டிப் பார்த்தால் சமுதாய மாறுபாடுகளும், பழக்கங்களும் மாற்ற முடியாமல், இரும்பில் செய்யப் பட்டவை போல எக்காலத்திலும் இருந்ததில்லை யென்பதை நிரம்பக் காணலாம். பல்வேறு வடிவம் கொண்ட பெரிய ஹிந்து சமுதாயம் வாழ்வில் முழுக் கிளர்ச்சி கொண்டு, எப்போதும் விழித்திருக்கின்ற மனத்தால் தூண்டப்பெற்று, புதிய புதிய வழிகளில் செல்ல முயன்றது. பிழைகள் நேர்ந்தாலுங்கூட உண்மையை நோக்கிச் சென்றும், பல தோல்விகளைத் தாண்டி இறுதியில் ஒரு முடிவைக் கண்டும், பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு இறுதியில் காரிய வெற்றியைக் கைகொண்டும், அந்தச் சமுதாயம் நடைபெற்று வந்தது. பழைய சாஸ்திரங்கள் எழுதப்பெற்ற ஏடுகளில் கட்டியுள்ள நூலின் அடியில் தொங்கும் தண்டுபோல உயிரற்ற ஒரு நாடகத்தை நாள்தோறும் அந்தப் பழைய சமுதாயம் நடத்தி வரவில்லை. அந்தப் பழைய சமுதாயத்தில் புத்தர்களும், ஜைனர்களும்

கூட இடம் பெற்றிருந்தார்கள். முஸ்லீம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும்கூட அது இடம் அளித்திருக்கும். அந்தப் பெரிய சமுதாயத்திலுள்ள ஒருவர்[6], ஒரு காலத்தில் ஆரியர் அல்லாதவர்களைக்கூடத் தம்முடைய நண்பர்களாக ஏற்றுக் கொண்டார் என்றால், மற்றொருவர் வேதச் சடங்குகளாகிய விலங்குகளிலிருந்து மனிதனுடைய செயல்களை விடுவித்துச் சமுதாயத்தைப் புறச் சடங்குகளாகிய கட்டுமானத்திலிருந்து விடுவித்தார் என்றால், அந்தச் சமுதாயம் உண்மையிலேயே மிகவும் பிரசித்தி பெற்றதாக இருந்திருக்க வேண்டும். இவ்வாறு புறச் சடங்குகளிலிருந்து சமயத்தை விடுவித்ததனால் எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய நிலைக்குச் சமயத்தை அவர் கொண்டு வந்தார். அந்தப் பெரிய சமுதாயத்தை இன்றுள்ள நாம் ஹிந்து சமுதாயம் என்று ஏற்றுக்கொள்வதில்லை. இன்று ஹிந்து சமுதாயம் என்று நம்மால் சொல்லப்படுவது உயிரற்ற ஒரு பிண்டமாகும். வாழ்வுச் சட்டந்தான் ஹிந்து சமுதாயச் சட்டம் என்பதை இன்று நாம் ஏற்றுக்கொள்வதில்லை. ஏனென்றால் வாழ்வுச் சட்டந்தான் கூர்தல் முறைச் சட்டமாகும்; அதாவது ஓயாது மாறுதல் செய்து, சிலவற்றை ஒதுக்கித் தள்ளிச் சிலவற்றை ஏற்றுக்கொள்வதே கூர்தல் சட்டமாகும்.

ஆகவேதான் ஹிந்துப் பல்கலைக் கழகம் என்ற ஒன்றை ஏற்படுத்தவேண்டும் என்பவர்கள் ஹிந்து சமுதாயத்தைப் பற்றி என்ன கருத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதில் அச்சங் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால், அதே நேரத்தில், இத்தகைய ஒரு சந்தேகம் தோன்றுகிறது என்ற காரணத்தால், இந்தத் திட்டத்தையே கைவிட்டுவிட வேண்டுமென்று நாம் சொல்லவில்லை. ஏனென்றால் ஹிந்து சமுதாயத்தை மேலும் பெரிதாக்க வேண்டுமென்று கூறுகிறோமே தவிர, அதனை அழித்துவிட வேண்டுமென்று கூறவில்லை. சுய உரிமைக்கு இடம் கொடுப்பதாக இருந்தால் மேலும் பெரிதாக வளர்வதற்கு அதற்கு இடமுண்டு; ஒரு குழியில் தள்ளிக் கட்டுப்படுத்தி வைத்திருந்தால் அது வளர்ச்சி யில்லாமல் விகாரமாக முடிந்துவிடும். ஒரு பல்கலைக் கழகம் என்பது இத்தகைய சுய உரிமைக்கு, சுய உரிமை வெளிப்பாட்டுக்கு இடம் தருவதாகும். அறிவை வேலை செய்யுமாறு இடங்கொடுத்து, அது வேலை செய்கிறது என்பதை மனம் அறியுமாறு செய்கிறது. மனம் அதனை அறியத் தொடங்கிவிட்டால் கொஞ்சங் கொஞ்சமாக வளர்ச்சி யடையும். அவ்வாறு வளர்ச்சி யடைந்து ஒரே எண்ணத்தைச் சுற்றிச் சுற்றி வருகின்ற குறுகிய மனப்பான்மையைப்

போக்கிக் கொள்ளும். மனித மனத்தில் முழு நம்பிக்கை கொண்டிருக்கிறேன் நான். ஒருவன் தவருகவே ஒன்றைத் தொடங்கினல் கூட அதை விரும்பி ஏற்றுக்கொள்ளலாம். ஏனென்ருல் ஒரு காரியத்தைத் தொடங்கினலொழிய அதில் நேரும் பிழையைப் போக்கிக் கொள்ள முடியாது. மனத்தை விடுதலை அடையுமாறு செய்வோமேயானல் அது ஓயாது இயங்கிக் கொண்டேயிருக்கும். இயக்கமே இல்லாமல் கல் போல இருப்பதுதான் முடிவான நன்மை என்று நினைக்கின்ற சமுதாயம் இயக்கமே இல்லாமல் இருக்கின்ற நிலையை வரவேற்றல் கூடும். ஏதோ போதைப் பொருளை உண்டது போன்ற ஒரு நிலை மனித மனத்திற்கு ஏற்பட்டு விடுகின்றது, ஆனல் மனம் இயங்கிக் கொண்டே இருக்குமாறு செய்வதே ஒரு பல்கலைக் கழகத்தின் உண்மையான தொழிலாகும். சாஸ்திரத்தில் குறிப்பிட்ட கட்டுப்பாடுகளின்படி என்றுமே எவ்விதமான இயக்கமும் இல்லாமல் தான் இருக்கவேண்டும், அதுவே உயர்ந்த பண்பாடமகும், என்று எப்போதாவது ஒரு ஹிந்து, நினைப்பானேயானல் அவன் பல்கலைக் கழகத்தை எக்காரணத்தைக் கொண்டும் நெருங்கக் கூடாது. பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட பழக்க வழக்கத்தைப் பல்கலைக் கழகத்தில் ஒப்படைத்தால், அதைத் தவருன ஓர் இடத்தில் ஒப்படைப்பதாகும்.

அதே நேரத்தில், அனைத்துலகக் கல்வியும், தூய்மையான காற்றும் மனித மனத்தைச் சுற்றி நிரம்ப வேண்டுமென்று கதவுகளை யாரேனும் திறந்து வைக்க முன் வந்ததால், ஹிந்து சமயம் இத்தகைய புறச் சூழல்களின் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றப்படவேண்டு மென்று நம்புகிறவர்கள் செய்துவிட்ட பைத்தியக்காரத்தனமான ஒரு காரியமாக, இதனை யாரும் கருத வேண்டா. பல சமயங்களில் ஒரு மனிதன் பேசுகின்ற மிகுதியான சொற்கள் அவனுடைய கருத்தை உண்மையாக விளக்குவது இல்லை. அவன் பேசுகின்ற வார்த்தைகள், பல சமயங்களில் அவனுடைய அக மனத்தில் தோன்றுகின்ற எண்ணங்களின் மறுப்பாகக்கூட இருக்கலாம். குறிப்பாக, நாட்டின் இன்றைய வரலாற்றில், புதிய கருத்துக்கள் பழைய நம்பிக்கைகளோடு போட்டியிடுகின்ற நேரத்தில், நம்முடைய மனத்தை வெளியிடும் அறிகுறிகளாக வார்த்தைகளைக் கணக்கிட முடியாது. சில சமயங்களில் பங்குனி மாதத்தில் திடீரென்று இளவேனிற் காலம் முடிந்தது போல வட காற்று அடிக்கத் தொடங்கிவிடுகிறது. அந்நிலையில் மாசி மாதம் மீண்டும் வந்து விட்டதோ என்றுகூட நினைக்கத் தோன்றும்.

என்றாலும் பங்குனி மாதத்தின் உண்மையை இந்த வட காற்றி லிருந்து முடிவு செய்யக் கூடாது. பங்குனி மாதத்தின் உண்மை யான வடிவத்தைக் காண வேண்டுமானால் பூத்துக் குலுங்குகின்ற மாமரத்திலும், அதனுடைய இளந் துளிர்களிலுமே காண வேண்டும். நம்முடைய நாட்டில் கூட, உயிர்க் காற்று மெள்ள வீசத் தொடங்கி விட்டது. எனவே நம்முடைய சோம்பல் ஒழிந்து அதன் பயனாக இன்றுள்ள சூழ்நிலையை அப்படியே வைத்துக்கொள்ள வேண்டு மென்று வலுவாக நாம் கூச்சலிடுகிறோம். பொருள்களை அப்படியே இருக்குமாறு விட்டுவிட விரும்பினால், எவ்விதமான இயக்கமும் இல் லாமல் இருப்பதே அதற்குச் சிறந்த வழி என்பதை நாம் மறந்து விடு கின்றோம். களைகளை வளர்ப்பதற்காகவே வயல்களில் உழவும், மண் கொத்துதலும் நடைபெறவேண்டு மென்று யாரும் கூறுவதில்லை. ஒரு சிறு முயற்சி செய்தால் கூட அதனால் ஏற்படுகின்ற இயக்கம் அழிவையும் மாற்றத்தையும் உடனே கொண்டு வந்து விடும்.

இன்று நாம் அனுபவிக்கின்ற புத்துணர்ச்சி, ஏற்கெனவே மடிந்து போனவற்றை, இதன்மூலம் மறுபடியும் உயிர் உண்டாக்க முடியும் என்று நினைக்கத் தூண்டுகிறது. என்றாலும் இறந்த வற்றை உடனே அழித்தும் புதிய தோற்றத்தின் மூலம் உயிரோட் டத்தைத் தருவதுதான் வாழ்வுச் சட்டமாகும். அச் சட்டம் எதனை யும் இயக்கம் இல்லாமல் நிலைத் திருக்குமாறு செய்வதில்லை. எவை வளரக் கூடிய சக்தி யுடையனவோ, அவற்றை வளருமாறு அது தூண்டி விடும். எவை எவை வளர்ச்சி இல்லாமல் இருக்கின்ற னவோ அவற்றை உடனே அழித்து விடும். ஆகையினால்தான், நம் முள்ளே தோன்றியிருக்கின்ற புதிய உயிர்ச் சத்து மேலும் நம்மை இயங்குமாறு தூண்டுவதுதான் இக்காலத்தின் உண்மையான இயல்பு என்பதை அடிக்கடி கூறிவந்துள்ளேன். இக் காலத்தின் சூழ்நிலை, புதிய புதிய வழிகளில் மரணத்தை உண்டாக்கினாலும் கூட அது பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. இது நிலைத்து நிற்கக் கூடியது அன்று; ஒரு கண நேரத்தில் வந்து போகின்ற ஒன்றாகும்.

கோகலே அவர்கள் கொண்டுவந்துள்ள கட்டாய ஆரம்பக் கல்வி மசோதாவைக் கண்டு, ஒரு சிலர், நவீனக் கல்வி மக்களி னுடைய மனத்தை மாற்றிவிட்டது என்றும் எல்லா மக்களையும் ஏன் இந்தத் தொல்லைக்கு ஆளாக்கவேண்டு மென்றும், கேட் கின்றார்கள். ஆனால், இவ்வாறு பேசுகிறவர்கள் கூடத் தம்முடைய பிள்ளைகளை நவீனப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பத் தவறுவதில்லை. சொல்லிலும், செயலிலும் ஏன் இத்தகைய மாறுபாடு? இதில்

வஞ்சகம் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. உண்மை என்னவென்றால் அவர்களுடைய மனத்தின் ஆழத்தில் புதிய நம்பிக்கை பிறந்துவிட்டாலுங்கூட, உதட்டளவில் பழைய கொள்கைகளுக்கு வணக்கம் செலுத்துகிறார்கள். ஆகவேதான் எதனைச் செய்ய வேண்டுமோ அதனைச் செய்துகொண்டிருக்கும்போது, இறந்து போன காலத்தின் பேச்சையே பேசிக்கொண்டிருக்கிறோம். நவீனக் கல்வி முறையில் இருக்கின்ற ஆபத்துக்களை அறிந்தாலும், அக்கல்வியின் நன்மைகளைப் பற்றியும் நாம் உணர்ந்து கொண்டோம். எவ்விதமான ஊறும் இல்லாமல் செத்துப் போவதை விரும்பாமல், வீரர்களைப் போல் வாழ்வின் எல்லாத் துன்பங்களையும் பொறுத்துக் கொள்ள நாம் தயாராகிவிட்டோம். இதன் மூலம் எத்தனை ஏமாற்றங்கள் ஏற்படுமோ? எத்தனை தவறுகள் ஏற்படுமோ? இவையனைத்தையும் நாம் அறிவோம். பழைய வழக்கங்களை ஒருவன் உதறித் தள்ள முயலும்போது, முறைமை கெட்டுப்போவதனால் ஏற்படும் துன்பத்தையும் அவன் அனுபவிக்கவேண்டுமென்பதையும் நாமறிவோம். நீண்ட காலமாகப் பயன்படுத்தாமல் இருந்த ஓர் அறையைத் தூசி தட்டத் தொடங்கினால் அதன் பயனாக தூசும் முழுவதும் மேலே கிளம்பி நம்மைத் திணறச் செய்யும் என்பதையும் அறியவேண்டும்.

உலகம் முழுவதிலும் உள்ள நாடுகள் அனைத்தும் தங்களுடைய தனித் தன்மையைக் காப்பாற்றிக் கொள்ளப் பெரிதும் முயன்று வருகின்றன. அதே நேரத்தில், பெரிதாக உள்ள மானிட இனத்தோடு தமக்குள்ள தொடர்பையும், ஒவ்வொரு நாடும் அறிகின்றது. இதனை அறிகின்ற காரணத்தால், ஒவ்வொரு நாடும், தனக்கேயுரிய தனித் தன்மையைப், பிற உலகத்தோடு சம்பந்தப் படாமல் இருக்கவேண்டுமென்று விரும்புகின்ற தனித் தன்மையை உதறி விடுகின்றது. ஒவ்வொரு நாடும் தன்னிடத்திலுள்ள பொருள்களை எல்லாம் அனைத்துலகமும் காணுமாறு வெளிப்பட எடுத்துக் காட்டுகின்றது. ஒருவருக்குச் சொந்தமாகவும் தனித்தும் இருக்கின்ற அறைக்குள் புகுந்துகொண்டு தம்முடைய தனித் தன்மையை வாய் கிழியப் பேசுவதால் இனிப் பயன் ஒன்றுமில்லை. ஒவ்வொருவருடைய தனித் தன்மையையும் மானிட சமுதாயத்தின் ஓர் அங்கமாக ஆக்க வேண்டுமென்ற ஒரு கிளர்ச்சி ஒவ்வோர் ஆன்மாவிலும் ஏற்பட்டுள்ளது.

குறுகிய மாகாண வெறியைத் தேசப்பற்று என்று சொல்லக் கூடிய காலம் மலையேறிவிட்டது. பழக்க வழக்கங்கள் என்றும்,

நம்பிக்கைகள், என்றும் சொல்லப்படுகின்ற செயற்கை முறையான குறுக்குச் சுவர்களையும், நம்முடைய இயக்கத்திலும் எண்ணத்திலும், செயலிலும், கொடுத்து வாங்குவதற்குத் தடையாக உள்ள குறுக்குச் சுவர்களையும் உடைத் தெறிய வேண்டும். அவ்வாறு செய்யவில்லையானல், நாம் மானிட சமுதாயத்தின் மத்தியில் எல்லையில்லாத அவமானம் அடைய நேரிடும். நாம் வாய்திறந்து சொன்னலும் சொல்லாவிட்டாலும் இதை நம்முடைய மனத்திலுள்ளே உணரத் தொடங்கிவிட்டோம். நம்முடைய நாட்டில் மட்டும் வழங்குகின்ற வழக்கங்களையும் சடங்குகளையும் விட்டுவிட்டு, அகில உலகமும் ஏற்றுக்கொள்ளக் கூடியவற்றை நாம் பெற வேண்டுமென்று பல வழிகளில் முனைந்து வருகின்ருேம். அவற்றை நாம் காணமுற்படும் பொழுதுதான் உண்மையிலேயே மீட்கப்படுவோம். இவற்றைப் பெறவேண்டு மென்ற ஆசையின் காரணமாகத்தான் ஒரு மூலையில் கைகட்டி அமர்ந்து இருக்க முடியவில்லை. இன்று நாம் பெறவேண்டுமென்று விரும்புகின்ற நிறுவனங்கள் அனைத்தும் நம்முடைய தேசீய மன நிலையையும், பரந்துபட்ட மன . நிலையையும் குறிப்பனவாகும். 50 வருஷங்களுக்கு முன்னர் ஹிந்துப் பல்கலைக் கழகம் என்று சொல்லியிருப்பின் அந்தக் கருத்தே மிக விநோதமாகப் பட்டிருக்கும்.

நம்முடைய நாட்டின் ஆன்மாவில் குடி கொண்டிருக்கும் தெய்வத்தை ஏதோ ஒரு கோயிலின் இருட்டான மூலையில் எப்போதுமே அடைத்து வைத்திருக்க இனி முடியாது. அந்தத் தெய்வம் தன்னுடைய தேரில் ஏறி[7] உலாப் போகும் நாள் வந்துவிட்டது. அந்தத் தெய்வம் உலகத்தின் நெடுஞ் சாலையில் மனிதர்களுடைய சுகம், துக்கம்,—மனிதர்களுடைய கொண்டு கொடுத்தல் ஆகிய நெடுஞ் சாலைகளின் வழியே உலாப் புறப்பட்டு விட்டது. நம்முடைய சக்திக் கேற்ப அந்தத் தெய்வத்திற்குரிய தேரைக் கட்டுகின்ருேம். அந்தத் தேருக்குரிய பொருள்கள் விலை யுயர்ந்தனவாகவோ, மலிவானவையாகவோ இருக்கலாம். ஒரு சிலர் கட்டுகின்ற வாகனங்கள் வழியில் சுக்கு நூருக உடைந்து விடுகின்றன. ஒரு சிலருடைய வாகனங்கள் பல வருஷங்கள் நீடிக்கலாம். என்ருலும் இதில் முக்கியமானது என்னவென்ருல் தொடங்க வேண்டிய புண்ணிய காலம் இதோ வந்து விட்டது. யாருடைய வண்டி எவ்வளவு தூரம் முன்னேறும் என்பதைப்பற்றி நாம் கணக்குப் போட முடியாவிட்டாலும், நாம் பெரிதும் விரும்புகின்ற அந்த நாள் வந்துவிட்டது என்பதை மட்டும் நம்ப வேண்டும். இனிப் பூசாரிகளினுடைய

உத்திரவுகளுக் குள்ளேயோ, சாம்பிராணி, விளக்கு ஆகியவை கக்குகின்ற புகையினுள்ளேயோ அந்த நாளை மறைத்துவிட முடியாது.

இதுவரையில் நான் பேசிவந்தது இத்தகைய ஒரே ஒரு தேரைப் பற்றியதாகும். இதன் பயன் என்னவாக இருக்குமென்று நாம் உறுதியாக ஒன்றும் சொல்ல முடியாது. என்றாலும் மகிழ்ச்சிக்குரிய காரியம் என்னவென்றால் உலகம் செல்கின்ற வழியில், அதாவது சுய கருத்தை வெளியிடும் முறையில், இந்தத் தேர் புறப்பட்டு விட்டது. இச் செயலில் ஏற்படுகின்ற மகிழ்ச்சியினால் உந்தப் பெற்று நாம் அனைவரும் ஒன்றுகூடி அந்தத் தேரை இழுத்து, அதன் மூலம் நம்முடைய தெய்வத்தையும் போற்றுகிறோம்.

—1911.

வளர்கின்ற மண்ணிலிருந்து விடுதலை பெற வேண்டுமென்று
மரம் நினைக்குமேயானால்,
அது உண்மையான விடுதலையாகாது.

—ரவீந்திரநாத் தாகூர்.

## 8. புறப்பாட்டுக்கு முன்னுள்

வயல்களின் நடுவே நம்முடைய குடிசை[1] இருக்கிறது. இங்கே இயற்கைச் சூழலின் நடுவே இளைஞரும், முதியவரும் ஆசிரியரும் மாணாக்கரும் — ஒரே விதமான வாழ்க்கையில் பங்கு கொண்டு வாழ்கின்றனர். காலைக் கதிரவன் தன் இளங் கரங்களால் நம்மைத் தழுவுகிறான். வான் நோக்கி நிமிர்ந்துள்ள நம்முடைய முகங்களில் விண்மீன்கள் ஒளியை வீசுகின்றன. புயல் தோன்றுவதன் முன்னரே நீண்ட தூரத்துக்கு அப்பாலுள்ள தொடு வானத்தில் எழும்பும் தூசிப் படலத்தால் புயல் வருவதை அறிகிறோம். நம்மைச் சூழ்ந்துள்ள மரங்களின் இலைகள், பருவ மாறுபாட்டை முதன் முதலில் நமக்கு அறிவிக்கின்றன. இயற்கையை, நம் வாழ்வில் புகவிடாமல் மூடிவிடவில்லை; அது நேரிடையாகவும் எளிமையாகவும் நம்மிடத்து வருகின்றது.

தனித்திருந்து இங்கே வாழும் நாம், வாழ்க்கையில், புற உலகத்தோடும் நேரடித் தொடர்பு கொள்ள விரும்புகிறோம். மனித சமுதாயத்தில் வீசும் புயலையும் அதில் ஏற்படும் பல மாறுதல்களையும், சூரிய உதயம், சூரிய அத்தமனம் ஆகியவற்றையும் நாம் பார்க்க விரும்புகிறோம். வாழ்க்கையின் ஆரவாரம் நிறைந்த பகுதிகட்கு அப்பால் இருப்பதால் உலக நிகழ்ச்சிகளை நம்மால் அப்படியே ஏற்றுக்கொள்ள முடிகிறது. அந் நிகழ்ச்சிகளை, பழைய நினைவுகளாகிய எந்த அச்சிலும் வார்க்காமல், அவற்றின் இயல்பை உள்ளவாறு அறிய முடிகிறது.

நம்முடைய சிறிய கிராமப் பள்ளிக்கூடம் பரந்த உலகத் தொடர்பை விட்டுவிடாமல் இருக்க உலகத்தைச் சுற்றி வரும் தேவையை நாம் அறிந்துள்ளோம். உலகமும் நம்மை வரவேற்கிறது. அந்த வரவேற்பை ஏற்றுக்கொண்டு நாம் இருநூறு பேரும் வெளியே புறப்படுதல் இயலாத காரியம். ஆகவே உங்கள் அனைவர் பொருட்டாகவும் அந்த அழைப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன். நீங்கள் அனைவரும் இந்த யாத்திரையின் பயனை, என் மூலமாக அனுபவிப்பீர்கள். வெளி உலகத்தின் சில பகுதிகளை பண்ணுள் அடைத்துக்கொண்டு வந்து, உங்கள் குடிசைக்கு மீளும் பொழுது கொண்டு வருவேன்.

அப்பொழுது அதைப்பற்றி நிரம்பப் பேசலாம். இதனிடையில், புறப்பாட்டுக்கு முன்னாளாகிய இன்று இரண்டொரு விஷயங்களைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்,

பலர் "நீங்கள் ஏன் ஐரோப்பாவில் பிரயாணம் செய்ய விரும்பு கிறீர்கள்?" என்று என்னைக் கேட்டுள்ளார்கள். இதற்கு என்ன விடையளிப்பதென்று தெரியவில்லை. பிரயாணத்தைப் பிரயாணத் திற்காகவே மேற்கொண்டேன் என்று கூறினால் அது தக்க விடை யாகாது. ஒரு செயலின் முழுத் தன்மையையும் கூறி, அதில் ஏற் படும் இலாப நஷ்டத்தைக் கணக்கிட்ட பிறகுதான் மனத்திற்கு அமைதியை உண்டாக்க முடியும்.

ஒரு மனிதன் காரண மின்றி ஏன் பிரயாணம் செய்ய வேண்டும் என்று நம்முடைய நாட்டில் மட்டும்தான் கேட்கிறார்கள். பிரயாணம் செய்யவேண்டும் என்று எழுகின்ற ஆசைக்குக் காரணம் கூற முடி யாது. நாம் நம்முடைய வீடுகளில் ஆழமாகப் பதிக்கப்பெற்றுவிட் டோம். வீட்டுப் பூச்சிகளாகிய நாம் வெளியில் கிளம்புவது என்ற வுடனே சகுனம், பிரிவினால் ஏற்படும் கண்ணீர் ஆகியவற்றால் ஏற் படும் அச்சம் பெரிதாக இருத்தலின் நம்முடைய பார்வையிலிருந்து வெளி உலகம் நழுவிச் சென்றுவிட்டது. நம்முடைய சுற்றத்தார்கள் மிக நெருங்கி இருத்தலின் அந்த வட்டத்திற்கு அப்பால் உள்ள வர்கள் அந்நியர்களாகவே காணப்படுகின்றனர். அதனால்தான் ஒரு குறுகிய காலத்துக்கு வீட்டை விட்டு வெளியே புறப்பட்டாற்கூடப் பல கேள்விகட்கு விடை கூறவேண்டி நேரிடுகிறது. பயன் படுத்தா மல் இருந்த காரணத்தால் இறக்கைகள் வலுவிழந்தும் மறத்தும் போயின. பறப்பதால் ஏற்படும் இன்பங்கூட மறந்துவிட்டது.

முதல் முறையாக யான் வெளி நாடு சென்ற பொழுது இளைஞ னாக இருந்தேன். சிவில் சர்வீசுக்கோ அன்றி வழக்கறிஞனாக ஆவ தற்கோ போகிறேன் என்ற சமாதானம் போதுமானதாக இருந்தது. ஆனால் இன்று எனது ஐம்பத்திரண்டாவது ஆண்டில் அத்தகைய சமாதானம் ஒன்றையும் கூற முடியாதாகலின் ஆன் மார்த்தமான சமாதானம் எதையாவது கூறவேண்டும்.

ஆன்மார்த்த காரியங்கட்காகப் பிரயாணம் செல்வதை இந்தி யர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். அந்தக் காரணத்தை என்மேல் சாற்ற விரும்புகிறவர்கள்கூட, நான் வெளி நாட்டுக்குச் செல்வதால் என்ன நன்மை விளையப் போகிறது என்று ஆச்சரியப்படுகின்றார்கள். என்ன இருந்தாலும் இந்தியாவிலுள்ள புண்ணியப் பகுதிகட்குப் போனால்தானே மோட்சமாவது கிட்டும்.

ஆனால் போவதற்காகவே நான் போகிறேன் என்று கூறு கிறேன். இந்தப் பிறவி எடுப்பதற்குப் புண்ணியஞ் செய்திருக்

கிறேன். எனவே இந்த உலகை எவ்வளவு அதிகமாகப் பார்க்க முடியுமோ, அவ்வளவு அதிகமாகப் பார்க்க விரும்புகிறேன். இரண்டு கண்கள் எனக்கு அளிக்கப்பெற்றுள்ளன. அவற்றின் உதவியால் இந்த உலகின் பரந்துபட்ட தன்மையை எத்தனை கோணங்களில் முடியுமோ அத்தனை கோணங்களிற் பார்த்துவிட விரும்புகிறேன்.

அதே நேரத்தில், ஓர் இலாபத்தையும் எதிர்பார்க்கிறேன் என்பதையும் ஒப்புக்கொள்கிறேன். பிரயாணத்தால் உண்டாகின்ற மகிழ்ச்சியைப் பெறுவதோ டல்லாமல் அவற்றின் மூலமாக என் கருத்தையும் நிறைவேற்றிக்கொள்ள விரும்புகிறேன்.

மனத்தில் ஒருவித பக்தியோடு இந்தியாவில் பிரயாணம் செய்யும் ஐரோப்பியன் ஒருவன் யாத்திரை செய்கின்ற பயனை அடைகின்றுன். அத்தகைய ஐரோப்பியர்களை யான் அறிவேன்; அத்துடன் அவர்களிடம் அதிக மதிப்பு முண்டு எனக்கு. இவ்வாறு கூறுவதால் ஐரோப்பியர்கள் மூலந்தான் இந்தியாவின் சிறப்பை நான் அறிந்துகொள்கிறேன் என்பது கருத்தன்று! அவர்களுடைய ஆன்ம பலத்தின் எதிரே யான் தலை வணங்குகிறேன். முன் பின் பழக்க மில்லாத பொருள்களை ஊடுருவி நோக்கி அவற்றின் பின்னே உள்ள நன்மைகளைக் கிரகிப்பதே இந்த பலம்; அது மிக மிக அரிதுதான். உண்மையின் இடையே சஞ்சரிக்கின்ற சக்தி பிறநாடுகளில் உலாவும்பொழுதுதான் பரீட்சிக்கப்படுகிறது. குறுகிய மனம் படைத்தவன் தனக்குப் பழக்கமானவற்றில்தான் உண்மை இருக்கிறதென்று கூறி, மற்றவற்றை முக்கியமற்றவை, பொய்யானவை என்று ஒதுக்கி விடுகிருன். உண்மையின்மேல் நாம் பக்தி கொண்டிருக்கிருேமா என்பது பழக்கமில்லாத பொருள்களை நெருங்கிச் சென்று கண்டு, அவற்றின் அப்பால் என்ன இருக்கிறது என்று கண்டு, அதற்கு வணக்கஞ் செலுத்துவதன் மூலம்தான் சோதனைக் குள்ளாகிறது. அவ்வாறு செலுத்தப்படும் வணக்கம் குருட்டுப் பழக்கத்தால் செலுத்தப்படாமல், திறந்த மனத்துடன், விருப்பத்துடன் செய்யப்படுவதாகும்.

ஓர் இந்தியனுக்கு, அவனுடைய மனம் பழமைக் கொள்கைகளால் கட்டுண்ணுமல் கண்கள் உண்மையைக் காணுமேயானுல், ஐரோப்பியப் பிரயாணம் உண்மையில் பயனளிக்கக் கூடிய யாத்திரையாகும். யாத்திரை நோக்குடன் இந்தியாவுக்கு வந்த ஐரோப்பியர்கள், நம்முடைய புற வாழ்க்கையில் நிரம்பியுள்ள துன்பங்களையும் தொல்லைகளையும் கவனிக்காமல் இல்லை, மேலாகக் காட்சியளிக்கும்

இந்தத் தூசிப் படலத்தின் அப்பாற் காணப்படும் உண்மைகளையும் அவர்கள் கண்டு கொள்ளாமல் இல்லை.

ஐரோப்பாவில் மட்டும், உண்மைகள், அனைவரும் கண்டு கொள்ளும்படி வெளிப்படையாக உள்ளன என்று கூற வரவில்லை. அங்கும் அவை மறைந்துதான் கிடக்கின்றன. என்றாலும் உடைந்த சமான்களின் அடியில் மறைந்து கிடக்காமல், அழகிய படுதாக்களின் பின்னர் மறைந்துள்ளன. அதன் காரணமாக, அவற்றைக் கண்டுகொள்வது இன்னும் கடினமாகவும் இருக்கலாம். கற்கள் பதிக்கப்பெற்ற அந்த அழகிய திரைச் சீலையைப் பார்த்து விட்டுக் கண் கூச்சமடையும்பொழுது அதுவே மேனாட்டின் மிக உயர்ந்த, காண வேண்டிய பொருள் என்று நினைத்து ஏமாந்தும் விடலாம். அந்தத் திரைச் சீலையின் பின்னர் உள்ள தெய்வத்தைக் கண்டெடுத்துப் பாராமலும் வந்துவிடலாம்.

கற்கள் பதித்த அந்தத் திரைச் சீலைதான் அங்கே இருக்கிறது என்ற எண்ணத்துடனேயே செல்வதானால், அந்தப் பயணம் முற்றிலும் பயனற்ற ஒன்றாகும்.

ஐரோப்பிய நாகரிகம் உயிரற்ற உலகாயாதமான ஒன்று என்ற அவச் சொல், இன்று பலரிடையேயும் வழங்கி வருகிறது. அவ்வாறு கூறுவதற்கு ஆதாரமே தேவைப்படுவதாகத் தெரியவில்லை. சிலர் கூறுவதை மற்றவர் அப்படியே எதிரொலிக்கின்றனர். இவ்வாறு கூறும் ஆட்களின் அதிகப்படியான எண்ணிக்கை காரணமாக, அதுவே போற்றப்படும் மெய்மையாகி, அறிவால் ஆராயப்பட்ட உண்மையின் ஸ்தானத்தைப் பெற்றுவிடுகிறது அந்த அவச் சொல்.

எங்கேயாவது சிறிதளவு நன்மை காணப்பெற்றால், அதன் அடிப்படையில் ஆன்ம பலம் இருந்தே தீர வேண்டும் என்பதை நாம் நினைவுப்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனென்றால், ஆன்மாவின் மூலந்தான் உண்மையை அடையமுடியுமே தவிர, எவ்வளவு பலம் பொருந்திய யந்திரமாக இருப்பினும் யந்திர சாதனத்தின் மூலம் உண்மையைக் காண முடியாது. ஐரோப்பாவில் ஏதாவது முன்னேற்றம் இருப்பதாக நாம் கண்டால் அதன் அடிப்படையில் ஆன்ம பலம் இருக்கிறதென்பது சந்தேகத்திற்கு இடமில்லாத உண்மையாகும். செத் தொழிந்த சடப் பொருள் முன்னேற்றத்தைத் தராது. உலகாயதப் பொருள்களிற்கூட ஆன்ம பலந்தான் வெளிப்பட்டுத் தோன்றுகிறது.

ஐரோப்பா மானிட ஆன்மாவை வெளிப்படுத்தாமல், வெறும் உலகாயதப் பொருள்களை மட்டுமே சேகரிக்கின்றது என்று கூறுவது, ஒரு மரம் தான் உதிர்க்கும் காய்ந்த சருகுகள் மூலம் தன்னுடைய உயிர்ச்சக்தியை வெளிக் காட்டுவதில்லை என்பது போல் இருக்கிறது. மரத்திலுள்ள உயிர்ச்-சக்திதான் காய்ந்த சருகுகளை உதிர்க்கச் செய்கிறது. காய்ந்த சருகுகள் உதிர்வதனுல் மரம் இறந்து போனதாகக் கருதக் கூடாது. வாழ்வுதான் ஒவ்வொரு விஞடியும் சாக முடியும்; சாவு சாகும் பொழுதுதான் உண்மை மரணம் நேரும்.

நவீன ஐரோப்பாவில் உள்ள மனிதன் ஓயாமல் சோதனை செய்வதிலும் மாற்றத்திலும் ஈடுபட்டிருக்கிருன். அவன், இன்று ஏற்றுக் கொள்வதை நாளை உதறிவிடுகிருன். இயக்கமில்லாமல் ஓரிடத்தில் இருக்க அவன் விரும்பவில்லை. இந்த ஓயாத மாற்றத்தில் ஆழமே இராது எனப் பலர் நினைக்கின்றனர்.

அனைத் துலகிலும் உள்ள எல்லாப் பொருள்களும் பிறப்பு, இறப்பு என்ற வளையத்துள் அகப்பட்டிருக்கின்றன. என்ருலும் இதே அனைத் துலகைப் பற்றிக் கூறிய நம் ஞானிகள் அனைத்தும் மகிழ்ச்சியின் பயனுகவே தோன்றுகின்றன[2] என்று கூறவில்லையா,? மரணத்தின் மூலந்தான் அழியாமை தன் இருப்பை ஓயாது காட்டிக் கொண்டிருக்கிறது. புறத் தோற்றத்தை, முடிவான பயன் என்று நாம் தவருகக் கணக்குப் போட்டு விட்டால், ஆன்மாவைக் காண முடியாது போவதுடன், புறத் தோற்றத்தை ஏற்றுக் கொள்வதிலும்கூட இன்பம் காண முடியாமற் போய்விடும். ஐரோப்பாவிற்கும் ஓர் ஆன்மா உண்டு; அதற்குரிய வலிமையை அது இழந்துவிடவில்லை. ஐரோப்பாவின் ஆன்மீக இருதயத்தை நாம் காணும் பொழுது, அதனுடைய உள் உண்மையையும் காண முடியும். அந்த உண்மை வெறும் அறிவாக இராமல், வெறும் உலகாயதமாக இராமல், வாழ்வின் இன்பமாகவே இருப்பதை அறிய முடியும்.

நான் சொல்லிக் கொண்டு வருவதை, சமீபத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியால் விளக்க முடியும். இரண்டாயிரம் பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு அட்லாண்டிக் கடலைக் கடந்து சென்று கொண்டிருந்த ஒரு கப்பல் நடு நிசியில் பனிக் கட்டியில் மோதி உடைந்து விட்டது. கப்பல் மூழ்குந் தறுவாயில், அதில் இருந்த ஐரோப்பியர்களும் அமெரிக்கர்களுமான ஆண்கள், தங்கள் உயிரைக் காத்துக் கொள்வதை விட்டுப் பெண்களையும் குழந்தைகளையும் காப்பதில் முனைந்தனர். அந்த அஞ்சத் தகுந்த, திடீரென்று தோன்றிய

ஆபத்து, இந்த மக்களுடைய அக வாழ்வு எவ்வாறு உள்ள தென்பதை, திரையைக் கிழித்து நமக்குக் காட்டுவதுபோல இருக் கிறது. அவர்களுடைய பெருந்தன்மைக்கு எதிரே நம் மரியாதை யையும் வியப்பையும் காட்டத் தலை வணங்குகிறோம்.

சில நாட்களுக்கு முன்னர், நம்முடைய நண்பர்கள் சிலர் டாக் காவிலிருந்து ஆற்று வழியாக நீராவிப் படகின் மூலம் வந்து கொண் டிருந்தனர். நடு ஆற்றில் எதிர்பாரா விதமாக ஒரு சாதாரணப் படகு இந்த நீராவிப் படகில் மோதிக் கவிழ்ந்து விட்டது. அந்தப் படகிலிருந்த மூவரும் நீரில் மூழ்கி இறக்குந் தறுவாயில் இருந்தனர். அந்த நேரத்தில் விசைப் படகில் இருந்தவர் பலரும் அவ் வழியே சென்ற மற்றொரு படகில் உள்ளவர்களைக் கூவி உதவி செய்யுமாறு வேண்டினர். ஆனால் அந்தப் படகில் உள்ளவர்கள் திரும்பிக்கூடப் பாராமல் சென்று விட்டனர். நீரில் விழுந்தவர் களைக் காப்பதில், ஒரு வித ஆபத்தோ கஷ்டமோ இல்லை என்றாலும், அந்தப் படகோட்டிகள் அதுபற்றிக் கவலைப்படாமல் சென்று விட்டனர்.

இது, மற்றொரு நிகழ்ச்சியை எனக்கு நினைவூட்டுகிறது. இரவு முழுவதும் பெரும் புயலடித்து விடியற்கால நேரத்தில் கொஞ்சம் தணிந்திருந்தது. என்றாலும், ஆறு கடிய வேகத்துடன் சென்று கொண்டிருந்தது. என்னுடைய படகு கரையில் கட்டப்பட் டிருந்தது. திடீரென்று ஒரு பெண்ணின் உடம்பு வெள்ளத்தில் செல்வதைக் கண்டேன். அவளுடைய நீண்ட கூந்தல் மட்டுமே நீரின் மேலே தெரிந்தது. பக்கத்தில் நின்றிருந்தவர்களை நோக்கி என்னுடைய படகை எடுத்துச் சென்று ஒருவேளை, அந்தப் பெண் உயிருட னிருந்தால் அவளைக் காப்பாற்றுமாறு கூறினேன். ஒரு வரும் அசையக்கூட வில்லை. அடுத்து அவளைக் காப்பாற்றப் போகின்ற ஒவ்வொருவருக்கும் ரூ. 5/- தருவதாகக் கூறினேன். உடனே பலர் படகில் ஓடிச் சென்று நினைவிழந்து கிடந்த அந்தப் பெண்ணைக் கொண்டுவந்து சேர்த்தனர். சில மணி நேரம் சென்று அவள் நினைவு வரப்பெற்றாள். இந்த ஐந்து ரூபாய் வெகுமானம் இல்லையானால் அவள் உயிரை இழந்திருப்பாள்.

மற்றொரு சந்தர்ப்பத்தில், அதிக ஆழ மில்லாத ஒரு நீர்ப்பகுதி யைப் படகு மூலம் கடந்து கொண்டிருந்தேன். ஆறு வந்து ஏரியில் விழும் முகத்தில் செம்படவர்கள் ஆற்றின் அகலத்தைக் குறைப் பதற்குக் கழிகளை நட்டு வைக்கிறார்கள். அவர்கள் மீன்பிடிப்பதற்கு இவ்வாறு செய்வது வசதியாக இருப்பினும், ஆற்றின் வேகத்தை

அச்சமூட்டும் வகையில் இச் செயல் அதிகப்படுத்துகிறது. அந்த இடங்களில் பல படகுகள் துன்பமடைவதை நானே கண்டிருக்கிறேன். இரண்டு கழிகளின் இடையேயுள்ள குறுகிய பகுதியில் செல்லுகையில் ஓர் ஆபத்தான இடத்தில் என் படகு சிக்கிக் கொண்டது. சில கஜ தூரத்தில் செம்படவர்கள் இருப்பினும், நாங்கள் உதவிக்கு அழைத்ததை அவர்கள் பொருட்படுத்தவே இல்லை. என்னுடைய படகோட்டிகள் வெகுமதி தருவதாகக் கூறியபொழுது கூட வெகுமதித் தொகையை உயர்த்துவதற்காக அவர்கள் காதுகளில் எங்கள் கூப்பாடு விழாததுபோலப் பாவனை செய்தனர். ஆனாலும், எங்கள் படகு இக்கட்டில் சிக்கிக் கொள்ள அவர்கள் நட்டிருந்த கழிகளே காரணம். எங்கள் வெகுமதித் தொகை கணிசமாக உயர்த்தப்பெற்றவுடன் திடீரென்று அவர்களுடைய காதுகள் கேட்கும் சக்தியைப் பெற்று விட்டன.

சில நாட்கள் முன்னர் போல்பூர்[3] கடைத் தெருவில் தீப்பிடித்துக் கொண்ட நிகழ்ச்சி உங்கட்கு நினைவிருக்கலாம். அப்பொழுது நான்கு ஆப்கானியர்கள்தாம் நெருப்பை அணைக்க உதவினர்களே தவிர, பக்கத்தில் வாழ்ந்த மக்கள் அல்லர். உண்மையைக் கூறப்போனல், அவர்கள் தம்முடைய தண்ணீர்க் குடங்களைக்கூடக் கொடுக்க மறுத்து விட்டனர். ஏன் தெரியுமா? ஆப்கானியர்கள் தொட்டுவிட்டால் அக் குடங்கட்குத் தீட்டு ஒட்டிக் கொள்ளுமாம்!

எல்லாக் காலங்களிலும் இப்படிப்பட்ட ஆன்மீக வறுமையைப் பார்த்துக் கொண்டே இருக்கிறோமாகலின் இதுபற்றிய உதாரணங்களை அடுக்கிக் கொண்டே போக வேண்டியதில்லை. தற்காப்பு என்ற முறையில் எதனைக் கூறினலும், இது பண்பாடற்ற செய்கை என்பதை நம் உள்ளம் நன்கு அறியும்.

தன்னலமின்மை என்ற பண்பிற்கும், ஆன்மீகத்திற்கும் உறவே இல்லாமற் போய்விட்டதா? உலகத்திலிருந்து ஒதுங்கி நின்று, மறைவான இடத்தில் அமர்ந்து ஆண்டவன் பெயரை முணுமுணுப்பதுதான் ஆன்மீகம் என்பதா? மக்களைத் தைரியமுடையவர்களாகச் செய்வது ஆன்ம பலமல்லவா?

'டைடனிக்' என்ற கப்பல் மூழ்கிய தருணத்தில், ஆண்களில் ஒரு கூட்டத்தார், மரணத்தின் எதிரே நிற்பதைக் காண்கிறோம். மரணம் அவர்களை எதிர்ப்பட்ட அந்த நேரத்திலும் அவர்களைச் சுற்றி ஓர் ஒளி பிரகாசிக்கிறது. தனிப்பட்ட எந்த ஒரு மனிதனுடைய சிறப்பான மனத் திடத்தையும் இந்த நிகழ்ச்சி எடுத்துக் காட்டவில்லை.

இதில் மிகவும் அதிசயக்கத்தக்க நிலை என்னவென்றால், தங்களை உயர்ந்தவர்கள் என்று எண்ணிக்கொண்டு செல்வச் செருக்கில் வாழ்ந்த செல்வந்தர்கள் பலர், தம்மைத் தியாகம் செய்து கொள்ளத் தயாராக இருந்ததுதான். அவர்களாகவே விரும்பி ஒதுங்கிக் கொண்டு வலிமை யற்றவர்கட்கும், உடல் ஊனம் உடையவர்கட்கும் முதலிடந் தந்தனர்.

திடீரென்று தோன்றுகிற பேராபத்து, மனிதனுடைய மிருக இயல்புகளைக் கிளப்பி விட்டு, நாகரிகத்தினால் அவன் பெற்ற கட்டுப் பாட்டைத் தகர்த்து விடுகிறது. நின்று நினைப்பதற்கு நேரமிருந் தால் தன்னடக்கம் செய்வதற்கு ஒரு வாய்ப்பு உண்டு. அந்த நடு நிசியில், 'டைடனிக்' கப்பலில், சிலர் ஆழ்ந்த உறக்கத்திலும் சிலர் பெரும் கேளிக்கைகளிலும் ஈடுபட்டிருந்த அந்த நேரத்தில், அவர்கள் திடீரென்று எழுப்பப்பெற்றனர். எழுந்த அவர்களை எதிரே நின்று வரவேற்றது மரணத்தின் சாயல்தான். என்றாலும் அவர்கள் பீதியால் பைத்திய மாகவில்லை; தங்கள் தங்கள் உயிர்களை காத்துக் கொள்ளப் போரிடவில்லை. இந்நிலையில் காட்டப்பெற்ற வீரம் ஏதோ அகஸ்மாத்தாக அந்த நேரத்தில் தோன்றியது என்று கருதிவிட வேண்டா; ஒரு தனிப்பட்டவரின் பண்பாடு என்றுங் கருத வேண்டா. அவர்கள் பல காலமாக முயன்று பெற்ற தன்னடக்க மாகிய தேசீயப் பண்பாட்டின் காட்சி வெளிப்பாடாகும் அது. மரணத்தை வெல்லும், மனித ஆன்ம பலத்தின் வெற்றியாகும் அது.

இந்த ஒரு நிகழ்ச்சியில் வெளிப்பட்ட ஆன்ம பலம், பல்வேறு துறைகளில், பல்வேறு வகைகளில், மேனாட்டார் வாழ்க்கையில் காணப்பட்ட தில்லையா? நாட்டுக்காகவும், சமுதாயத்திற்காகவும் முற்றிலும் தன்னலத் தியாகம் செய்து கொண்ட உதாரணங்கள் எண்ணற்றவை. இத்தகைய தியாகங்கள் பல ஒன்று சேர்ந்ததன் விளைவாகவே, ஐரோப்பிய நாகரிகம் கடல் நடுவே தோன்றும் பவளக் குன்று போல் தோன்றி வளர்ந்துள்ளது.

துயரத்தை அனுபவிக்காமல் எந்தச் சமுதாயமும் முன்னேற் றத்தைப் பெற முடியாது. இந்தத் துயரத்தை அனுபவிக்க உலகாயதவாதிக்கு ஆற்றலே இல்லை. அவனுடைய இன்பம் அனைத்தும் உலகப் பொருளில் மட்டும் காணப்படுவதால் அவன் ஏன் அவற்றைத் துறக்க வேண்டும்? கௌரவம் அடையக் கூடுமானால் துன்பத்தை பொறுத்துக் கொள்ள மக்கள் சித்தமாக

டள்ளனர். இவ் வழி சாத்திரங்களில் கூறப்பெற்றிருப்பதாலும், கௌரவம் என்பது உலகப் பொருள்கள் போல் பயன்படக் கூடிய தாகலானும் அவர்கள், அதனைப் பெறத் துன்பத்தையும் ஏற்றுக் கொள்கின்றனர். ஆனல் உலகப் பொருள்கட்கு மட்டும் வணக்கஞ் செலுத்துபவன், மனத்தில் உதித்து எழுகின்ற ஓர் உணர்ச்சிக்காக மட்டும் உயிரைக் கொடுக்கச் சித்தமாக மாட்டான்.

தேசத்திற்காகவும், மானிட சமுதாயத்துக்காகவும், காதலுக் காகவும், அறிவின் வளர்ச்சிக்காகவும், இருதயத்தின் தூண்டுதல் ஒன்றையே காரணமாகக் கொண்டு நாள்தோறும் துயரத்தை அனுபவிக்கச் சித்தமா யிருப்பவர்கள் ஐரோப்பாவில் உண்டு.

இவை அனைத்தும் உண்மையானவை யல்ல. இதில் பெரும் பகுதி வீம்புக்காகச் செய்யப்படுவதாகவும் இருக்கலாம். ஆனல் அதற்காக உண்மையாக உள்ளவற்றையும் குறைத்துப் பேசுதல் முறையற்றதாகும். சில இரவுகளில் சந்திரனைச் சுற்றி ஓர் ஒளி வளையம் தோன்றக் காண்கிறேம். அது வெறும் சாயைதான் என்பதை நாம் அறிவோம். உண்மையில் உள்ள சந்திரனைச் சுற்றிக்கூட மாயையாக இருக்கிற இந்த வளையம் காட்சியளிக் கிறது. ஒவ்வொரு சமுதாயத்திலும் உண்மை ஒளியைச் சுற்றிப் போலிக் கௌரவம் இருத்தல் கூடும். ஆனல், உண்மைப் பொருள் இருக்கின்றது என்பதற்கு இந்தப் போலியே தக்க சான்றகும்.

மேனடுகளில் உள்ள வியக்கத் தகுந்த மனிதர்களைப் பற்றிப் படித்துள்ளோம். எனினும் அவர்களை நெருக்கத்தில் வைத்துக் கண்டதில்லை. நாம் பார்த்துள்ளவர்கள் ஐரோப்பாவின் புகழ்பெற்ற வர்களைச் சேர்ந்தவர்க ளல்லர். பல காலம் முன்பு நாம் 'ஹோமர்கிரன்'[4] என்ற ஸ்வீடன் நாட்டவரைக் கண்டோம். அவர் ராம் மோகன்ராயைப் பற்றிப் படித்தமாத்திரத்தில், இந்தியா வில் ஈடுபாடு கொண்டு இந்த நாட்டில் வந்து வசித்து வந்தார். வசதிக் குறைவு காரணமாக, இங்கு வசிப்பதுகூடக் கடினமாக இருந்தது. இங்குள்ள மக்களையோ, அவர்கள் மொழியையோ அவர் அறியவில்லை எனினும், ஒரு வங்காளியின் வீட்டில் தங்கி ராம் மோகன் ராயின் நாட்டைத் தம்முடைய நாடாகச் செய்து கொண்டார். சில காலமே வாழ்ந்தார் எனினும், அவரை அறிந்தவர்கள் எவ்வளவு உறுதியான முறையில், எவ்வளவு துன்பங்களைப் பொறுத்துக் கொண்டு அவர் நம்மவர்கட்குத் தொண்டாற்றினர் என்பதை அறிய முடியும்.' எனினும் நிம்தோலாச் சுடுகாட்டில் அவர் சடலம் எரிக்கப்பட்டபொழுது, ஹிந்துச் சுடுகாடு எவ்வாறு "தீட்டுப்படுத்

தப்பட்டது" என்பது பற்றி நம்முடைய வார இதழ்களில் ஒ
ஒப்பாரி வைத்தது:

'சகோதரி நிவேதத்தா'[5] விவேகானந்தரிடம் கொண்ட பற்
காரணமாக அவருடைய வாழ்க்கையை எவ்வாறு இந்தியாவிற்
தியாகம் செய்தார் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

ஆனால், இங்குக் காட்டப்பெற்ற உதாரணங்கள் ஒரு வ
யானவை. இவர்களுடைய அன்றாட வாழ்க்கைப் பரிசோத
களிலிருந்து முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலையில் இவர்களுடை
சர்வ பரித்தியாகம் நடந்தது. இவர்கள் கண்டவை அனைத்தும் இ
களுடைய இயல்புக்கு மாறாகவே இருந்தன. இவர்கள் செய்ய மு
வந்த தியாகத்தை மட்டும் அல்லாமல், அத் தியாகத்தைச் செய்வ
குரிய வழி துறைகளையும் இவர்களே வகுத்துக் கொள்ள வேண
இருந்தது. ஏனென்றால் அதற்கு முன்னர்க் காணப்பட்ட பழ
மான வழிகள் அனைத்தும் இவர்கட்கு அடைக்கப்பட்டு விட்டன.

இத்தகைய ஓர் இலட்சியத்தையும், அதற்குத் தம்ம
தியாகம் செய்யும் வலிமையையும் இவர்கள் பெற்றது சந்
மில்லாமல், இவர்களுடைய தேசீயப் பண்பாட்டிலிருந்தே யார
கேவலம் உலகாயத மரபிலிருந்து வியக்கத் தகுந்த இத்த
வலிமை கிடைக்குமா? நம்முடைய நாட்டில் அடிக்கடிக் க
முடியாத இது போன்ற உண்மைகளை ஆன்ம பலம் என்று கூற
வேறு என்ன என்று கூறுவது?

நம்முடைய நாட்டில் ஆன்ம பலம் இல்லை என்று நான் சொ
வரவில்லை. இங்குங்கூட அதன் ஒரு பகுதி நல்ல முறையில் வெ
பட்டு விளங்கக் காண்கிறோம். நம்மிடையே யுள்ள உண்ம
தொண்டர் அனைவரும், துண்டுபட்டுக் கிடக்கின்றவற்
இடையே காணப்படும் முடிவான பொருளை அறிவுக்
கொண்டோ அல்லது உணர்வின் மூலமோ, காணும் சக்தி
றுள்ளனர். பல நூற்றாண்டுகளாக உள்ள, தீவிர தியானம் செய்
இயல்பும், முயற்சி செய்யும் இயல்பும் இந்தச் சக்தியின் பின்
தான் அடங்கிக் கிடக்கின்றன. அதனால்தான் இந்த நாட்
உள்ள புண்ணியவான்கள் முடிவிலாப் பொருளுடன் எளித
தொடர்பு கொள்ள முடிகிறது.

நம்முடைய தேசீயப் பண்பாட்டின் இந்தப் பகுதியை நாடி
நாட்டுக்கு வருகின்ற கூர்மையான அறிவு படைத்த மேனாட்
ஒருவர், தாம் காண விரும்பி வருவதை உறுதியாகக் காண முடி

அவரிடமுள்ள ஒரு குறைவை இக் காட்சி நிறைவு செய்யும். ஆனல் அவர்களிடம் உள்ளது போன்ற ஒரு குறை நம்மிடமும் உண்டு. அந்தக் குறையால்தான் நீண்ட காலமாக நம்முடைய களைப்பும் பல மின்மையும் தொடர்ந்து இருந்து வருகின்றன. அந்தக் குறையை யும் நிரப்ப வேண்டும்.

மழைய மரபில் கர்வங் கொள்ளுகின்ற ஒருவர நம்மிடம் ஆன்மார்த்தத்துக்குக் குறைவில்லை என்றும், மேனுட்டார் உலக ஆதிக்கம் செலுத்தக் காரணமாயிருப்பது உலகாயதப் பொருள்கள் பற்றிய அறிவுதான் என்றும், அதுதான் நம்மிடம் குறைவாக உள்ளது என்றும் கூறலாம்.

ஆனல், உலகாயதப் பொருள்களினுல் மட்டும் எந்த ஒரு நாடும் வளர்ச்சி யடைந்துவிட வில்லை என்பதும், வெறும் உலகியல் அறிவால் மட்டும் வலிமையைப் பெற்றுவிட வில்லை என்பதும், நன்கு அறியப் பெற்ற உண்மைகள். விளக்கில் எண்ணெய் ஊற்றித் திரியைத் தயாரித்து வைப்பது மட்டும் போதாது; எவ்வாருவது விளக்கைக் கொளுத்தித்தாளுக வேண்டும்.

ஐரோப்பா தன் உலகாயத பலத்தால்தான் உலகை ஆள்கிறது என்று மனித சமுதாயத்தில் நம்பிக்கை இல்லாதவனே கூறுவான். ஐரோப்பாவின் வலிமை உண்மையிலேயே ஆன்மார்த்தத்தில் தான் இருக்கிறது. அந்த பலம் இருப்பதற்குக் காரணமாக வேறு எந்த ஆதாரத்யையும் காட்ட முடியாது.

பௌத்தம் உலகாயத இலாபத்தைக் கருதுகின்ற ஒரு சமயம் என்று யாரும் கூற முடியாது. என்ருலுங்கூட அந்த சமயம் வளர்ந்து உச்ச நிலையில்[6] இருக்கும்பொழுதுதான் விஞ்ஞானம், தொழில் வளர்ச்சி ஆகியவற்றுடன் ஏகாதிபத்திய அதிகாரமும் மிக உச்ச நிலையை அடைந்தன. நமது வரலாற்றிலேயே மறுபடி எட்டி இராத நிலையை அப்பொழுது அவை அடைந்தன. இதனுடைய காரணம் ஒன்றுண்டு. மனித ஆன்மா அசையாத் தன்மையிலிருந்து விடுதலை யடையும் பொழுது, அதனுடைய சக்தி விரி வடைந்து எல்லாத் திசைகளிலும் வளர்ச்சி யடைகிறது. எல்லா வகையான வலிமைக்கும் ஆன்மார்த்தமே இயல்பாகும்; நிறை வெய்துவதும், அதனுடைய இயல்பில் அமைந்துள்ளது. மனிதனுயை வளர்ச்சியை அகத்திலோ, புறத்திலோ தடை செய்ய முயன்று அதன் பயனுக அது, தன்னைத்தானே தோற் கடித்துக் கொள்வதில்லை.

ஐரோப்பாவின் வலிமை புறத்தே எவ்வாறு காட்சியளித்தாலும், அதனுடைய அகப் பகுதியில் ஆன்ம பலமே இருக்கிற தென்பதில் நான் ஐயங் கொள்ளவில்லை.

இது தன்னெஞ்சு அறிந்த சக்தியாகும். மனிதனின் துயரத்தைக் கண்டு அதனைச் சகிக்காத சக்தியாகும்; மறுப்பையும் அது ஏற்றுக்கொள்வதில்லை. எல்லாவகையான துன்பங்களையும் களையக் கூடிய பெரு முயற்சியை எப்பொழுதும் அது பூண்டு நிற்கிறது. என்றும் அழிவில்லாத ஆன்மா ஒன்றே இத்தகைய நன் முயற்சிகளின் பின்னே நின்று வலிமையைத் தரல் கூடும். இந்த நல்லெண்ணந்தான் மனிதனை அவனுடைய சுகமான படுக்கையிலிருந்து வெளியே இழுத்து, எல்லை யற்ற தியாகத்தைச் செய்யும்படியும், மரணத்தின் அழைப்பைக்கூடச் செவிசாய்த்துக் கேட்கும்படியும் செய்கிறது.

கிறிஸ்துவின் வாழ்க்கை என்ற மரத்திலிருந்து உதிர்ந்த ஓர் ஆன்ம விதை ஐரோப்பிய மனச் சான்று என்ற மண்ணில் புகுந்து, இத்துணை யளவு பழம் பழுக்கும் நிலையை அடைந்தது. அந்த விதையி னுள்ளே இருக்கும் உயிர்ச் சக்தி யாது? துன்ப அனுபவத்தில் வலிமை பெறுவதே அச் சக்தியாகும்.

அனைத் துயிர்களின் துயரத்தையும் தனதாகப் பாவிக்கும் ஆண்டவனின் கருணையைப் பற்றிப் பிரார்த்தனை, கீதம், சடங்கு ஆகியவற்றின் மூலம் ஐரோப்பா கேள்வியுற்றுள்ளது. பல்லாயிரம் ஆண்டுகளாக இந்தக் கருத்து ஐரோப்பியர்களின் மனத்தில் ஊறி, அவர்களுடைய அக மனத்துள் நிரம்பி உள்ளது. அக மனத்துள் இந்த விதை புதைந்தவுடன் மனித முயற்சிக்கு அடிப்படை வகுத்து விட்டது.

இதே காரணத்தால்தான், ஐரோப்பாவில், கிறிஸ்துவ சமயத்துக்கு எதிராக உலகாயதப் பொருள்களின் புகழ் பாடுகின்றவர்கள்கூடத் தேவை ஏற்படும்பொழுது கொஞ்சமும் தயங்காமல் தங்களைத் தியாகம் செய்துகொள்கின்றனர். அத் தியாகம் செய்யும் பொழுது எல்லாவகைத் துன்பங்களையும் ஏற்றுக் கொண்டு அவமானங்களையும் வீரத்துடன் சகித்துக் கொள்கின்றனர். அவர்களையும் அறியாமலே, அவர்கள், அழியும் மதிப்பை விட உயர்ந்ததாக அழிவின்மையின் மதிப்பை உயர்த்தி, தன்னலத்தைக் காட்டிலும் பொது நலனைப் பெரிதாகப் போற்றுகின்றனர்.

'டைடனிக்' கப்பலில் தங்கட்கு ஏற்பட விருக்கும் ஆபத்தைக் கண்டு கவலைப்படாமல், பிறர் உயிரைக் காப்பாற்ற முயன்ற மக்கள் அனைவரும் பக்தி நிறைந்த கிறிஸ்தவர்கள் அல்லர். அவர்களில் பலர் நீரீஸ்திகவாதிகளாகவும், கடவுளைப் பற்றிக் கவலை கொள்ளாதவர்களாகவும் இருந்திருக்கலாம். தங்கள் சமயம் வேறு என்று கூறிக் கொள்வதால் மட்டும் அவர்கள், பரம்பரையாக வந்த ஆன்மீக மரபிலிருந்து விடுபட்டுப் போய்விட முடியுமா? ஒரு நற் காரியத்துக்காகத் தம் உயிரைத் தியாகம் செய்பவர், அந்த மக்கள் அனைவர் பொருட்டாகவும் ஒற்றையாக நின்று போராடுகிருர் என்றுதான் கொள்ளவேண்டும். மக்கட் கூட்டம் தங்களுடைய அறியாமை காரணமாக அந்த ஒருவரை எள்ளி நகையாடலாம்; என்ருலும் அவருடைய முயற்சியின் பயனை அவர்கள் அனைவரும் அனுபவிக்கிருர்கள்.

ஆண்டவன்பாற் கொண்ட பக்தியின் ஓர் உறுப்பாகம் பிறருடைய துயரத்தை ஏற்றுக் கொள்ளும் ஆற்றலோ அன்றிப் முயற்சியோ நம்மிடம் பரவலாகக் காணப்படவில்லை என்ற உண்மையை, அது எவ்வளவு மனத்திற்கு வெறுப்பை அளிப்ப தாயினும், நாம் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். பக்தியின் உணர்ச்சிப் பகுதி நல்ல வலுவடைந்தும், அதன் பல்வேறு வடி வங்களில், பல் வேறு நிலைகளில் நம்மிடம் நிறைந்தும் காணப் படுகிறது என்பதில் ஐயமில்லை. ஆனுல், தொண்டு மனப்பான்மை, தன்னலத் தியாகம், துயரத்தை எளிதாகப் பொறுத்துக் கொள்ளும் ஆற்றல் ஆகியவை அவ்வளவாக நம்மிடம் காணப்படவில்லை. தெய்வீக அன்பினுல் ஏற்படும் இன்பத்தை மட்டும் நாம் விரும்பி ஏற்றுக் கொள்கிருேமே தவிர, அதில் வருகின்ற துன்பத்தை விரும்புவதாகத் தெரியவில்லை.

வேறு ஏதாவது ஒரு பயனைக் கருத்திற் கொண்டு துன்பத்தை ஏற்றுக்கொள்வதில் ஆன்மீகம் ஒன்றுமில்லை. அன்பு காரண மாகத் துன்பத்தை ஏற்றுக் கொள்வதில்தான் உண்மை ஆன்மீகம் இருக்கிறது. ஓயாது செல்வங் தேடும் மனிதன் அடைகின்ற துன்பத்திலும், மறு உலகத்தில் இடம் தேடுவதற்காகக் கடுந்தவம் இயற்றுபவன் அடையுங் துன்பத்திலும் நிறைவு இல்லை; அவை அவனுள்ளே இருக்கும் வறுமையைக் காட்டுகின்றன. அன்பு காரணமாக வெளிப்படும் தியாகத்தில்தான் ஆன்மா எல்லையற்ற அளவிற்கு உயர்கின்றது; அதன் பயனுக வலிமை, இன்பம் ஆகிய வற்றைப் பெற்ற வாழ்வு, மரணத்தையும் வெல்வதற்கு உதவி புரிகின்றது.

துன்பத்தில் நாம் பெறும் இன்பமே, அகங்காரத்திலிருந்து நம்மை விடுவித்து அப்பாலும் சென்று அனைத் துலக நிலைமைக்கு உய்க்கிறது. சத்தியத்தின் விலை துன்ப அனுபவமேயாகும். துன்ப அனுபவமே ஆன்மா வளமடைவதற்குள்ள வழியாகும். துன்ப அனுபவ மூலமே ஆன்மா தன் வலிமையை வெளியிடுகிறது; அதன் மூலமே நாம் நம்மையும், மானிட சமுதாயத்தையும் அறிந்து கொள்ள முடிகிறது. அதனால்தான் போலும், "வலுவற்றவர்கள் ஆன்மாவை அறிய முடியாது[7]" என்று சாத்திரங் கூறுகிறது. மற்றொரு வகையாகக் கூற வேண்டுமானால், துன்பத்தை அனுபவிக்கச் சக்தி யற்றவன் தன்னைத்தான் உணர முடியாது.

துன்பத்தின் பயனாகக்கூட நாம் ஒருவருக் கொருவர் நெருங்கி வரப் பழகிக்கொள்ளவில்லை. நம்முடைய மக்களை நம்முடையவர்கள் என்று கூறிக் கொள்ள வேண்டுமானால் அதற்குரிய விலையைக் கொடுத்தாக வேண்டும். தான் பெற்ற குழந்தையைத் தனதாக்கிக் கொள்ள வேண்டுமானால், பெற்ற தாய் கூட, அதற்குரிய தொண்டைப் புரிந்து துன்பத்தை அனுபவிக்க வேண்டும். நம்மால் உண்மையாக மதிக்கபடுகின்ற பொருள்களைப் பொறுத்தமட்டில் பிறர் தூண்டுதல் இல்லாமற்கூட இந்த விலையைக் கொடுக்கிறோம் ஆனால் நம்மைச் சுற்றி வாழ்கின்ற மக்களை நம்முடையவர்கள் என்று நெஞ்சார ஏற்றுக்கொள்ளத் தவறி விட்டோம். ஆகவேதான் அவர்கள் பொருட்டாக எந்தத் தியாகத்தையும் செய்வதில் நாம் இன்பங் காண முடிவதில்லை.

மற்றவர்களும் வாழ்கிறார்கள் என்ற உண்மையை அன்பே வடிவான அகக் காட்சியின் மூலமாகத்தான் அறிய முடியும் அனைத்துயிர்களும் ஒன்றுதான் என்று தத்துவ சாத்திரம் கூறும் பொழுது, நான் என்ற அகங்காரத்துடன் பிறர் என்பவற்றையும் ஒன்றாக்கிக் காண, நுண்மையான அத் தத்துவ சாத்திரக் கருத்து நமக்கு உதவ முடியாத நிலையில் உள்ளது. இதனைச் செய்து முடிக்க அன்பு ஒன்றினால்தான் முடியும். அன்பே ஆன்மாவின் இயக்க சக்தியாய், எல்லை யற்ற பொறுமை யுடையதாய், தன்னை தியாகம் செய்துகொள்வதில் இன்பங் காண்கிறது. இந்த இயக்க சக்தி மூலமே தேசபக்தன் தன் நாட்டின் அனைத் துலக ஆன்மா வையும், மானிடவாதி உலகத்து மக்களையும் காண்கிறான்.

தொண்டின் மூலமாக வெளிப்படுகிற துன்பத்தை ஏற்று கொள்ளும் அன்புச் சமயமே ஐரோப்பாவின் சமயமாக உள்ளது அது ஒரு மனிதனை மற்றொரு மனிதனிடம் நெருங்கச் செய்கிறது

அணையா நெருப்பாகிய துன்ப அனுபவமே அதனுடைய வேள்வித் தீயாக உள்ளது. அந்த வேள்வித் தீ அணையாமல் எரிய, ஆயிரக் கணக்கானவர்கள் அதில் குதித்து, அதன் மூலம் தேசம் முழுவதற்கும் சக்தியைத் தருகின்றனர். என்றும் அழிவின்மை என்னும் நித்தியத்துவம் இந்த ஆழமான தியாகத்திலிருந்துதான் பிறக்கிறது. அந்த நித்தியத்துவமே விஞ்ஞானம், கலைஞானம், இலக்கியம், அரசியல், வாணிகம் ஆகியவற்றிலும் வெளிப்பாட்டுத் தோன்றுகிறது. இவற்றை இயந்திர சாதனத்தின் மூலம் தயாரிக்க முடியாது. அதன் எதிராகத் தவத்தின் மூலமே செய்ய முடியும். தவம் என்பது ஆன்மாவின் செயலாகும்; அதுவே மனிதனுடைய சமயமும் ஆகும்.

இதே முறையில்தான் பௌத்த சமய காலத்தில், இந்தியா, தன்னலத் தியாகம், அன்புள்ளம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட சமயத்தை ஏற்றுக் கொண்டது. ஐரோப்பா இன்று அடைந்துள்ள நிலைமையை ஒத்த ஒரு நிலையை அக் காலத்தில் இந்தியா அடைந்தது. மனிதர்கட்கு மட்டுமல்லாமல் கீழ்நிலை உயிர்களாகிய விலங்குகட்கும்கூட மருத்துவ உதவி கிடைத்தது அப்பொழுது. எல்லா உயிர்களின் துயரத்தையும் துடைக்கும் முயற்சியே பல்வேறு வடிவமெடுத்துக் காணப்பட்டது. சமயத் தலைவர்கள் தாண்ட முடியாத தடைகளை எல்லாம் தாண்டிச் சென்று, வெளிநாடுகளில் துன்புற்ற அந்நியர்களை மீட்பதற்கு, எல்லையற்ற துன்பங்களை அனுபவித்தனர். அக் காலத்தில் துன்ப அனுபவத்தின் மூலமாகவே இந்தியா தனது தொண்டர்கட்கு, வலிமையையும் கௌரவத்தையும் அளித்தது. ஆகவேதான், இந்தியா, தன்னுடைய ஆன்மாவை மட்டுமல்லாமல் உலகத்தையும். வெற்றி கண்டது. ஐரோப்பாவின் கிறிஸ்துவ நாகரிகம் என்ற ஒன்று கனவிலும் கருதப்படாத காலத்தில், ஆன்மீக, உலகாயத வளங்களை இந்தியா கொண்டு வந்தது. அந்தத் தன்னலத் தியாகத்தின் ஒளி, செயற்கை, மன எழுச்சிக் கொந்தளிப்பு ஆகியவற்றால் இன்று ஓரளவு ஒளி மழுங்கியுள்ளது. அன்றி ஒருவேளை அது ஒரேயடியாக அவிந்து விட்டதோ? ஒருவேளை அதனைப் பிறரிடம் காணும் பொழுது நம்மிடம் என்ன இருக்கிறது என்பது பற்றி நினைக்கக் கூடுமன்றோ ?

எங்கே பெரு நெருப்புப் பற்றி எரிகின்றதோ அங்கே சாம்பலும் மிகுதியாக இருக்கும் என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். சிறிய நெருப்பு சூட்டைத் தருவதில்லை அன்றி

யும் அதனுடைய நற்பயனும் மிகக்குறைவு, அழிக்கும் சக்தியும் குறைவுதான். ஐரோப்பாவில் பாபமும் எல்லை மீறிய அளவு இருக்கிறதென்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். நம்முடைய நாட்டில் காண முடியாத அளவில் எல்லை மீறிய அமைதி இன்மை அங்கிருக்கிறது. என்றாலும் இந் நிலையைப் பார்த்துக்கொண்டு ஐரோப்பிய மக்கள் வாளா இருந்துவிடவில்லை; விழிப்புடையவர்களாகவே உள்ளனர் அவர்கள். பைசாசம் எத்தனை வடிவில் இருப்பினும் அவை அனைத்தையும் அவர்கள் எதிர்க்கின்றனர். மலேரியாக் கொசுவிலிருந்து சமுதாயக் கொடுமைகள் வரை, உயிரையே விட்டுப் போரிடுவதாயினும் போர் செய்கின்றனர். "ஒரு சிறிய நற்குணங் கூடப்பெரும் அச்சத்திலிருந்து நம்மைக் காக்கும்"[8] என்று கீதை பேசுகிறது. சமுதாயத்தில், சிறிய அணு அளவில் காணப்படும் நற் பண்பு மிகப் பெரிய ஊழலையும் தடுக்க வல்லது.

வலுக் குறைந்த மக்களை நடத்தும் விதத்தில் ஐரோப்பாவில் நடு நிலைமை நீங்கிய நிலைமையும் இருக்கிறது. அந்த நிலை ஒன்றுமட்டும் நடைமுறையி லுள்ளது என்று கூறுவதற்கில்லை. அதனுடைய பேராசை கொடுமை நிரம்பியதாகவும், அதிகாரப் பித்துடையதாகவும் இருப்பினும், அது செய்யும் காரியம் மானமிழந்ததாக உள்ளது என்ற குரலும் அந்த நாட்டிலிருந்தே எழும்புகிறது. அதிகார வர்க்கத்தின் கொடுமையை எதிர்த்துப் போராடும் வீரர்கட்கும் ஐரோப்பாவில் பஞ்சமில்லை. அத்தகைய நேர்மையுடைய வீரர்கள் மிக நீண்ட தூரத்தில் கண் காணு நாட்டிலுள்ள மக்களுக்காக வாதாடி அதனால் ஏற்படும் துன்பத்தையும் அனுபவிக்கின்றனர். தங்கள் நாட்டிற்கு சுய ஆட்சியை விரும்பி நிற்கும் இந்தியர்கட்கு நண்பர்கள் யார்? தடை, அவமரியாதை என்பவற்றைப் பொருட்படுத்தாமல், தங்களுடைய நாட்டாரைப் பார்த்து, தன்னலத்தைக் கைவிட்டு நியாயத்தை நிலை நிறுத்துமாறு கேட்கின்ற, ஐரோப்பிய நாட்டில் உள்ள, சிலரே யாவர். மேலாகப் பார்க்கும் பொழுது அவர்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்களாக உள்ளனர்; ஆனால் உண்மையில் அவ்வாறில்லை. ஏனென்றால் இவர்களை எண்ணிக்கையால் மட்டும் மதிப்பிடக் கூடாது; இவர்கள் ஒருதனிப்பட்ட மரபின் பகுதியாவார்கள். இவர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் ஒரே முடிவுக்காக உழைப்பதில்லை; ஆனாலும் அவர்களே சமுதாயத்தின் உண்மை மனச் சான்று ஆவர். வலிவற்றவர்களைக் காக்க விரதம் பூண்ட கருணை மறவர்கள் இவர்கள். உலகமக்களின் பாவங்களைத் தன்

மேல் ஏற்றுக்கொண்டு, அவர்களின் ஆன்மாக்களைக் காப்பாற்றி, இருளிலிருந்து ஒளிக்கு அழைத்துச் சென்ற தெய்வீகத் தூதர் ஏசுநாதரின் இரத்தந் தோய்ந்த அடிச் சுவடாகிய கடுமையான பாதையில் இவர்களும் செல்கிருர்கள். ஐரோப்பாவின் இருதயத்தின் ஆழத்தில் இன்னும் அந்த ஒளி விளங்கிக் கொண்டிருக்கிறது.

இதற் கெதிராக, நாம் ஆன்மீக முடையவர்கள் என்றும், கடவுளுக்குப் பயந்து நடக்கிறவர்கள் என்றும் உலகப் பொருள்களுக்கு ஆசைப்படாதவர்க ளென்றும், அதனுல்தான் உலக விஷயங்களில் நாம் நன்கு முன்னேற வில்லை என்றும் கூறிக்கொண்டு நமக்கு நாமே சமாதானம் செய்துகொள்கிறோம். இவ்வாறு சொல்லிக் கொண்டுதான் நம் அவமானத்தையும், வறுமையையும் குறைத்துக் கொள்ள முயல்கிறோம். நம்முடைய பெரிய முதல், வறுமையே என்று மார் தட்டிக் கொள்ளுகிறவர்களும் நம்மிடையே உண்டு.

செல்வத்தில் வாழக்கூடியவர்கள் வறுமையில் வாழ்வதுதான் பெருமை. செல்வத்தைத் தியாகம் செய்வதில்தான் பெருமை இருக்கிறதே தவிர, வேறு வழி இல்லாமல் வறுமையுற் றிருப்பதில் பெருமை ஒன்றுமில்லை. உணவில்லாத காரணத்தால் அரை வயிற்றுடன் உயிரை எவ்வாருவது காப்பாற்றிக்கொண்டு இருப்பவர்களின் வறுமையில் பெருமை ஒன்றுமில்லை. அவர்கள் வறுமையாயிருப்பதால், மற்ற வறிஞரைச் சமயம் நேரும்பொழுது சுரண்டுகின்றனர். அதிகார மின்மையால், அதிகாரம் கிடைத்தவுடன் வலிமை யற்றவர்களை வதைக்கின்றனர்.

நம்முடைய வறுமையும், தாழ்வெனும் தன்மையும் ஆன்மாவை விரிவுபடுத்துகின்ற நற் பண்பின் பயனுக ஏற்பட்டவை அல்ல. ஆன்மீகத்தை அடைய மானிட வர்க்கம் முழுவதையும் அழைக்காமல், தனிப்பட்டவர் பக்தி வழிபாட்டிற்கு மட்டும் ஆன்மீகத்தை விரும்புகிறோம். சமயம் பற்றி நாம் கொண்டுள்ள பிடிவாதம் அடிமைத்தனத்தைத் தவிர வேறொன்றுக்கும் தகுதி யில்லாமல் நம்மைச் செய்துவிட்டது. நம்முடைய குறைகளை எல்லாம் சட்ட மூலம் சரிப்படுத்தி விடலாம் என்றும், சட்டசபையில் ஓர் இடம் பிடித்து அமர்ந்தவுடன் நாம் முழுத் தன்மை பெற்ற மனிதர்களாகி விடலா என்றும் கனவு காணுகிறோம். ஒரு நாட்டின் முன்னேற்றம் யந் முறையில் கிடைப்ப தன்று. அதற் கேற்ற விலையை நாம் த தயாராக ஆகின்றவரை அதைப் பெற முடியாது.

ஆகவே, ஐரோப்பாவிற்குச் செல்லும் பிரயாணத்தை, யாத்திரை என்ற முறையில் மேறகொண்டால், அது வீண் போகாது. ஐரோப்பாவின் மக்கள் கூட்டத்தின் ஆழத்தில் சென்று கண்டால், நம்முடைய குருவை அங்கு கூடக் காணலாம். பக்தி நிரம்பிய கண்களால் குருவை எல்லாவிடங்களிலும் தேடவேண்டும். சாதாரணமாகப் பார்த்தால் போதாது. நம்முடைய கர்வம், குருட்டுத் தனம் என்பவை காரணமாக அவரைக் காணுமலேகூடத் திரும்பி விட நேரலாம். இதைவிட, இங்கிலாந்தின் சக்தி அதன் பார்லிமெண்டிலும், ஐரோப்பாவின் செல்வம் யந்திர சாதனத்திலுமே உள்ளன என்றும், மேனுட்டின் பெருமை அனைத்தும் படை பலம், வாணிகம், மற்றும் உலகப் பொருள்கள் ஆகியவற்றில்தாம் உள்ளன என்று கருதிக்கொண்டும் திரும்பலாம்.

தங்களுக்குள் மறைந்து கிடக்கும் அக பலத்தை அறிய முடியாத மக்கள், புறப் பொருள்களிலேயே சக்தி அமைந்திருக்கிற தென்றும், அதனைப் பெற்ற உடனேயே அனைத்தையும் வென்று விடலா மென்றும் கருதுகின்றனர். இந்தியாவின் குரலைப் பிரதிபலிப்பதுபோல ஐரோப்பா "மரணமிலாப் பெருவாழ்வை நல்காத பொருள்களை வைத்துக்கொண்டு, நான் என்ன செய்வேன்?" என்று கேட்கிறது. பெருமை என்பது, ரயில்வே, தந்திக் கம்பங்கள், தொழிற்சாலைகள், தொழில் நுட்பங்கள் ஆகியவற்றின் பயனுகக் கிடைப்ப தன்று என்பதை ஐரோப்பா அறிகின்றது. அதனுல்தான் ஒரு வீரனைப்போல் சத்திய விரதத்தை மேற்கொண்டுள்ளது. தன்னுடைய செல்வம், வாழ்வு ஆகியவற்றை, அதற்கென்றே தியாகம் செய்துள்ளது. ஒவ்வொரு பிழையிலிருந்தும் ஒவ்வொரு தோல்வியிலிருந்தும் தனது முயற்சியைப் புதிய ஆர்வத்துடன் தொடங்குகிறது. ஒன்றுக் கொன்று உராயும்பொழுது தீ உண்டாவது போலும் "பாற்கடலைக் கடைந்தபொழுது ஆலகாலம் உண்டானது"[10] போலவும் அடிக்கடித் தீமை உண்டானுலும், தீமையை இயல்பு என்று எடுத்துக்கொள்ள மறுக்கிறது ஐரோப்பா. ஐரோப்பாவின வீரர்கள் வீரமுடையவர்களாகவும், கூரிய ஆயுதங்களைப் பெற்றவர்களாகவும், சத்தியத்தில் ஈடுபட்டிருத்தலின் மரணத்தை வென்றவர்களாகவும் உள்ளனர். நம்மைப் பொறுத்தவரை உண்மையைக் காணக்கூட முடியாத அளவுக்குச் சோம்பேறிகளாகவும், அதைக் காணும் முயற்சி எடுக்கக்கூடக் கவலைப்படாதவர்களாகவும், நாமே ஏற்றுக்கொண்ட அடிமைத் தளையைத் தங்குவதற்குரிய நிழல் என்ற தவருன கருத்தில் மூழ்கியவர்களாகவும் இருக்கிறோம்.

ஓர் இக்கட்டான நிலை ஏற்பட்டு, உண்மை வழி தவிர வேறுவழி இல்லை என்ற நிலை ஏற்படும்பொழுது, அந்தச் சந்தர்ப்பத்தைச் சந்திக்கும் சக்தி நம்மிடம் இல்லை என்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. விளையாட்டில் ஈடுபட்டுக்கொண்டே அதனை அலுவல் என்று கூறிக்கொண்டு, ஏமாற்ற - இல்பொருளில் வாழ்ந்துகொண்டு உள் பொருளின் இலாபத்தை எதிர்பார்க்கிறோம். கையில் எடுத்த வேலை முடிகின்ற வரை உண்மையற்ற பொய்யான ஊக்கத்தை நிலைக்க வைக்க முடியாமையின், சித்தாந்த விளக்கம், உணர்ச்சிப் பெருக்கம் ஆகிய வலைகளில் சிக்குண்டு, நம்முடைய பணிகளில் திருப்பத் திருப்ப வீழ்கிறோம். ஆகவே ஒரு யாத்திரிகனைப் போல ஐரோப்பாவிற்குச் செல்லுதலும், அங்கே வாழ்வின் மிகச் சிறந்த மதிப்புக்களைக் காண முற்படுதலும் பயனற்ற செயல்க ளல்ல. ஆனால் யாத்திரிகன் ஒரு பக்தியோடும், மானிட ஆளுமையை வளப்படுத்தும் நோக்கத்துடனுமே செல்லவேண்டும்.

நம்மைப் பல வழிகளிலும் துன்புறுத்துகின்ற சுய நலம் என்ற ஒரு முரண்பாடு மேனுட்டிற்கும் நமக்கும் இடையே உள்ளது என்பதை நான் அறிவேன். நம்முடைய ஆன்மீக வறுமையிலிருந்தே இது தோன்றி இருப்பினும், நாம் சேர்த்து வைத்துள்ள பாவங்கட்கு இது ஒரு கழுவாய் என்று அறிந்திருப்பினும், அது நம்மைத் துன்புறுத்துகிறது. நம் எதிரிகள், தங்கள் அற்பத்தனமான மனத்தைக் கர்வம் என்ற முகமூடியில் மறைத்துள்ளனர். தங்களைப் பற்றிக் குருட்டுத்தனமாகக் கொண்டுள்ள உயர்வான எண்ணத்தால் தங்களைத் தவிரப் பிறர் யாரிடமும் நன்மை எதுவும் இருத்தற் கில்லை என்று கூறுகின்றனர். இந்த ஆழமான காயம் நம் மனத்தில் இருக்கும் வரை, ஐரோப்பாவில் காணப்படும் நன்மைகளை, நாம் காண்பதும் ஒத்துக்கொள்வதும் மிகவும் கடினம். ஐரோப்பிய நாகரிகத்தின் அடிப்படையில் உள்ள சமய ஆற்றலை நம்பாமல், அது உலகாயத சம்பந்தமானது என்று மறுத்து விடுகிறோம். நம்முடைய ஆன்மாவும் அவர்களுடன் சேர்வதால், சத்தியத்தின் பீடத்தில் பலத்தை வைத்து, அதன் எதிரே தாழ்மையுடன் வணங்கும் நிலைமை ஏற்பட்டுவிடுமோ என அஞ்சுகிறோம். பிறருடைய மதிப்பைக் கௌரவமான முறையில் ஏற்றுக்கொள்ள மறுத்து, களைத்துப் போய்த் தன்னைத் தானே தாழ்த்திக் கொள்ளும் மன நிலையில் நம்முடைய நம்பிக்கைகளைக்கூடத் தளரவிட்டுவிட நேரிடுமோ என அஞ்சுகிறோம். அவர்களைப் பார்த்துப் போலியாக நடித்து அவர்களின் நிழலாக மாறி, இம் முறையில் வாழவே முடியாமல் அழிந்து விடுவோமோ என்று அஞ்சுகிறோம்.

இந்த ஆபத்துக்களே, இந்தப் பயணத்தைச் சத்தியத்தின் யாத்திரையாக ஆக்கிவிடுகின்றன. தடைகளை எல்லாம் தாண்டிச் சென்று கஷ்டமான பாதையில் செல்லும் துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளவேண்டும். தற்பெருமை என்ற அனுவசியமான பாரத்தை ஒருபுறத்தில் ஒதுக்கிவிட வேண்டும். அதே நேரத்தில் உண்மையில் நாம் கர்வமடையக்கூடிய காரணங்களைக் கவனத்துடன் பாதுகாக்க வேண்டும். உண்மையைக் கூறவேண்டுமானால் இந்தப் பயணத்தில் உள்ள இடையூறுகளே இதனைப் பயனுடையதாகச் செய்கின்றன. ஏனென்றால் எளிதாகக் கிடைத்துவிடுபவை நம்மால் அனுபவிக்கப் பெற்று நம்மில் ஒரு பகுதியாக ஆவதில்லை. என்றாலும், மனச் சான்று முழுவதும் விரிவடைய எல்லா உண்மை இலாபங்களும், உதவவேண்டும். மற்றொரு வகையாகக் கூறுமிடத்து நாம் உண்மையாகச் செய்து முடிப்பவை, நம்மையே அறிதற்குப் மேலும் பெரிய அளவில் பயன்பட வேண்டும். அவ்வாறு செய்யவில்லையானால் பிற இலாபங்கள் புறத்தே தங்கி விடும்; மேலும் அவை பொய்யானவையாகவே இருந்து விடும்.

—1912.

தன்னிடமுள்ள முள்ளுக்கு மன்னிப்புக் கோருவதைவிட ரோஜாப் பூ இன்னும் அதிகப் பயனுடையதாகும்.

—ரவீந்தரநாத் தாகூர்.

# 9. "தலைவன் விருப்பமே நடைபெறும்

காற்றும் மழையும் வரவேண்டியதுதான் தாமதம்; எங்களுடைய சந்து[1] முழுவதிலும், தெருவிற்குப் போகும் தூரம் வரையில், அப்படியே குளம் போலத் தண்ணீர் நின்றுவிடும். அந்த நேரத்தில் நடந்து செல்கின்றவர்கள் தங்களுடைய காலணிகளைத் தலைக்குமேல் குடையைப் போலத் தூக்கிப் பிடித்துக் கொண்டு செல்வார்கள். சந்தில் குடியிருப்பவர்களோ வென்றால், அந்தச் சந்தில் வாழ்வதற்கு, நீர்வாழ் பிராணிகளைப் போலத் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கிறது. என்னுடைய குழந்தைப் பருவத்திலிருந்து என்னுடைய தலைமுடி நரைக்கின்ற வரையில் ஆண்டுதோறும் எங்களுடைய வாசலிலிருந்து இந்தக் காட்சியைப் பார்த்திருக்கின்றேன்.

இதனிடையில் அறுபது ஆண்டுகள் கழிந்து விட்டன. அக்காலத்தில் யந்திர சாதனப் போக்குவரத்துக்கு நீராவி மட்டுமே பயன் பட்டு வந்தது. ஆனால் இப்பொழுதோ எனில் மின்சாரம் நீராவியை பார்த்துக் கேலி செய்கின்ற முறையில் கண்ணைச் சிமிட்டுகின்றது. அக்காலத்தில் அணுக்களைக் கண்ணால் காண முடியாது என்ற முறையில் அணுக்கள் சித்தாந்தம் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆனால் இப்பொழுதோ வென்றால், அதைப் புரிந்துகொள்ளவும் முடியாது என்று சொல்லக்கூடிய அளவுக்கு வந்துவிட்டது. எறும்புகள் மரணமடைவதற்கு முன்னர் இறக்கைகளை விரித்துப் பறப்பது போல, மனிதனும் ஆகாயத்தில் இறக்கையை விரித்துப் பறக்கத் தொடங்கி விட்டான். இப்பொழுதேகூட, ஆகாயத்தில் ஆணை செலவிட நினைக்கின்ற வல்லரசுகளுள் ஏற்படப் போகின்ற உரிமைப் போராட்டத்திற்கு, வக்கீல்கள் தங்களைத் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக வளர்த்து வந்த தங்கள் ஜடைகளை ஒரே இரவில் சீனர்கள் வெட்டித் தள்ளிவிட்டார்கள். ஜப்பானியர்களோ வெனில் காலமென்னும் கடலில் 500 ஆண்டுகளை 50 ஆண்டுகளாகக் குறுக்கி ஒரே தாண்டில் தாண்டி விட்டார்கள். ஆனால் எங்கள் சந்தைப் பொறுத்தமட்டில், மழைத் தண்ணீரின் வெள்ளமாக அன்றிருந்த சந்து, இன்றும் அப்படியே இருந்து வருகிறது. இந்திய தேசீயக் காங்கிரஸுக்கு அஸ்திவாரக் கல் நாட்டுவதற்கு முன்பேகூட, மழைக் காலத்தில் எங்கள் சந்தில் வாழ்கின்ற பெண்கள் கீழ்க் கண்டவாறு பாடுவார்கள்:

"கால்களால் நடந்து செல்லும் யாத்ரீகனே!
துயரம் எனும் பெருங்கடலை நீந்திக்
கடப்பதற்கு எத்துணைக் காலம் பிடிக்கும்"[2]

ஆனால், சுயாட்சி நம்முடைய பிடிக்குள் அகப்படுகின்ற நேரத்தில், நம்முடைய வாயின் எதிரே பழுத்த பழம்போல அது தொங்கிக் கொண்டிருக்கின்ற நேரத்தில், இன்றுங்கூட, நம்முடைய பெண்கள் அதே பாட்டை மழைக்கேற்ற அதே ராகத்தில் பாடிக் கொண்டிருக்கிறார்கள்.

நம்முடைய குழந்தைப் பருவத்திலிருந்து சந்தில் மழைத் தண்ணீர் நிரம்பி யோடுவதைப் பார்த்துக் கொண்டே யிருக்கிறோம். அதனால்தான் அதில் ஒன்றும் ஆச்சரியம் ஏற்படவில்லை. எதிர் பார்த்து நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளைப் பற்றி யாரும் கவலைப் படுவதில்லை. ஆகையினால்தான்போலும் இதுபற்றிக் கவலைப் படாமல் அப்படியே இதை ஏற்றுக் கொண்டோம்.

ஒரு கடிதத்தில் எழுதப்பெற்றுள்ள வரிகளில் தனிப்பட்ட முறை யில் குறிப்பிடப்படாத வார்த்தை நம்முடைய கண்களுக்குத் தப்பி விடலாம். ஆனால் ஒரு வார்த்தையை அடிக் கோடிட்டுக் குறிப் பிட்டுக் காண்பித்தால் நம்முடைய கவனத்தை அது கட்டாயம் கவர்ந்தே தீரும். அதேபோல என்னுடைய மனமும், சித்பூர் சாலையில்[3] சந்தின் வழியில் இரட்டையாக இடப்பட்ட டிராம் தண்ட வாளங்களில் என்னுடைய வண்டிச் சக்கரங்கள் சிக்கிக் கொண்ட போதெல்லாம் என் கவனத்தைப் பற்றி இழுத்தது, டிராம்வே கம்பெனியார் எங்களுடைய சந்தில் தண்ணீர் தேங்குவதை, அடிக் கோடிட்டு நினைவூட்டியதுபோல இருந்தது. டிராம் தண்டவாளங் களைப் பழுது பார்க்கும் நிகழ்ச்சி மழைக் காலத்தில் தொடங் கினாலும்கூட, டிராம்வே கம்பெனியார்களுடைய தர்க்கத்திற்குக் கட்டுப்படாத விஞ்ஞானத்தில், பழுது பார்க்கும் வேலை முடிவடைவ தாகவே காணோம். இதனை ஏன் தர்க்கத்திற்குக் கட்டுப்படாத விஞ்ஞானம் என்று கூறுகிறேனென்றால், தர்க்க சாஸ்திரப்படி தொடக்கமுடைய பொருள்களெல்லாம் ஒரு முடிவு பெற்றே தீர வேண்டும். ஆனால் தண்டவாளம் பழுதுபார்க்கும் இந்த நிலைமைக்கு முடிவே இல்லையாதலின் இவ்வாறு கூறினேன். இந்த முறையில்தான் டிராம் தண்டவாளங்கள் போடுவதையும், நூற்றுக் கணக்கான மனிதர்கள் வெள்ளத்தோடு போராடுவதையும் பார்த்துக் கொண் டிருந்தபோது என்னுடைய உடம்பும் மனமும் தண்ணீரில் மூழ்கின.

அப்போதுதான் மிக ஆழ்ந்த முறையில், நாம் ஏன் கீழ்ப்படிய வேண்டுமென்பது பற்றிச் சிந்திக்கத் தொடங்கினேன்.

இதனைச் சகித்துக் கொள்ள முடியவில்லை யென்றால், நீங்கள் அவ்வாறு நினைப்பதில் தவறு இல்லை என்பதை அறிந்து கொள்ள சௌரங்கியில் ஐரோப்பியர்கள் வாழும் பகுதியில் காலை வைக்க வேண்டியதுதான் தாமதம். நாம் அனைவரும் ஒரே நகரத்தில், ஒரே நகராட்சியின் கீழ் வாழ்கிறோம் என்றாலும் ஐரோப்பியர்களுக்கும் இந்தியர்களுக்கும் ஒரு பெரிய வேறுபாடு உண்டு. இந்தியர்கள் விட்டுக் கொடுத்துப் பணிந்து போகிறார்கள். ஐரோப்பியர்கள் அவ்வாறு செய்வதில்லை. சௌரங்கியில், சாலைகளின் அகலத்தில் எட்டில் ஏழு பங்கில் குழிகள் தோண்டி ஆக்கிரமித்துக்கொண்ட பிறகு, சித்பூர் சாலையில் பணியாற்றுவதைப் போல மிகச் சாவதான மாகவும், யானைபோல அசைந்து கொண்டும் டிராம்வே கம்பெனி யார் வேலை பார்த்திருப்பார்களேயானால், அவர்களுக்குப் பகலில் உணவும் இரவில் உறக்கமும் நிச்சயமாகக் கிடைத்திருக்காது.

நம்மிடையே உள்ள அமைதியை நாடுகின்ற சில அன்பர்கள், "நமக்கு ஏற்படுகின்ற சிறு தொல்லைகளுக்குப் பயந்து டிராம் தண்டவாளங்களைப் பழுது பார்க்காமேலே இருந்து விட வேண்டு மென்று நினைக்கிறீர்களா?" என்று கூடக் கேட்கலாம்.

"கண்டிப்பாக அவை பழுது பார்க்கப்பட வேண்டும். ஆனால் இவ்வளவு மெதுவாக அவர்களுடைய வசதிப் பிரகாரம் பார்க்கப் படக் கூடாது!'

"அது முடியக் கூடிய காரியமா?"

நம்மிடையே யுள்ள நல்லவர்கள், இன்று நடப்பதை விட நல்ல முறையில் காரியங்கள் நிகழக் கூடுமென்பதை நம்புவதில்லை. அதனால்தான் நம்முடைய தெருக்களும், சந்துகளும் மழைத் தண்ணீரால் வெள்ளமாக்கப்படுகின்றன. அதனால்தான் துன்ப மாகிய சேற்றை உடம்பு முழுவதும் நாம் பூசிக் கொள்வதுடன், அதை உடைந்துபோன நகரத்திலிருந்து கொட்டுகின்ற தாரைப் போலக் கொட்டுகின்றோம்.

இதுவரை நான் சொல்லிக்கொண்டிருந்தது, அதனைப் படிக் கின்ற நீங்கள் நினைப்பதுபோல அவ்வளவு அற்பமான காரிய மன்று. எதன்மேலாவது செலுத்தக் கூடிய ஏதாவதொரு அதிகாரம் நம்மிடம் இருக்கிறதென்று இதுவரை நாம் சிறிதும் உணரவே இல்லை. கண்ணாடி ஜாடிக்குள் வைக்கப்பட்டிருந்த ஒரு மீன், பலமுறைகள்

அந்த ஜாடியில் சென்று முட்டிக் கொண்ட பிறகு, கடைசியாக, கண்ணாடி, தண்ணீர் அல்ல என்பதை அறிந்து கொண்டதாக என்றோ ஒரு கதை படித்ததாக ஞாபகம். பிறகு அந்த மீன் ஒரு குளத்தில் விடப்பட்டதாம். குளத்தில் வந்த பிறகுகூடக் குளத்துத் தண்ணீர் கண்ணாடி அல்ல வென்று தெரிந்துகொள்கின்ற தைரியம் அந்த மீனுக்கு வரவே யில்லையாம். இதன் பயனாக அகன்ற குளத்தில் நீச்ச லடிக்காமல் மிகச் சுருங்கிய எல்லையில் சுற்றிச் சுற்றி வந்ததாம் அம் மீன். அந்த மீனைப்போல, அச்சம் என்பது நம்முடைய உடம்பிலேயே ஊறிப்போயிருக்கின்ற காரணத்தால் வசதியாக நீச்சல் அடிக்கக்கூடிய இடத்தில்கூட நீச்ச லடிப்பதற்குரிய தைரியம் வருவதில்லை. பழைய கதையில் பேசப்படும் அபிமன்யூ[5] பகைவர்களுடைய கோட்டைக்குள் புகுந்து செல்கின்ற வித்தையை அவனுடைய தாயின் கருவிலிருக்கும்போதே கற்றுக் கொண்டானாம். ஆனால், அந்தக் கோட்டைக்குள் இருந்து வெளியே வருகின்ற வித்தையை அவன் கற்றுக் கொள்ளாத காரணத்தால், கோட்டைக்குள் நுழைந்த பிறகு, ரதத்தில் ஏறியிருந்த 7 போர் வீர்ரர்கள் அவனை அடித்துக் கணுகணுவாக முறித்து விட்டார்களாம். நாமும் கூடப் பிறப்பதற்கு முன்னரே சுற்றி வளைத்துக் கொள்வதைக் கற்றுக்கொள்கிறோமே தவிர, அதிலிருந்து விடுபட்டு வருகின்ற வித்தையைக் கற்றுக்கொள்ளவில்லை. ஆதலால்தான், பிறந்த அந்தக் கணத்திலிருந்தே, நாம் நினைக்கின்ற காரியங்கள், செய்கின்ற காரியங்கள் அனைத்திலும் சிக்கிக் கொள்கிறோம். அதன் பயனாகச் சிறியவர்கள், பெரியவர்களாகிய எல்லோரிடத்திலிருந்தும் உதையும் அடியும் வாங்க நேரிடுகிறது. பல தலைமுறைகளாகப் பிற மக்களுக்கும், புத்தகங்களில் சொல்லப்பட்ட சட்டங்களுக்கும், இன்னுஞ் சொல்லப் போனால் பலவகை அடையாளங்கட்கும் குறியீடுகளுக்கும் உடனடியாகக் கீழ்ப்படிந்து இந்த உலகத்தில் எந்த இடத்திலும் நமக்கென்று ஓர் அதிகாரம் உண்டென்பதை உணராமலே போய் விட்டோம்.

அதிகாரத்தைப் பெற்றிருப்பதே ஆண்மையைப் பெற்றிருப்பதாகும் என்பதை ஒரு மனிதன் முக்கியமாக அறிய வேண்டும். எந்த ஒரு நாட்டில், இத் தவறான அறிவு, சமயச் சடங்குகள், சமய போனைகள் என்ற பாரத்தின் கீழ் அமுக்கப்படுகின்றதோ, எந்த ஓர் இடத்தில், ஏதோ கொள்கைக்குத் தீங்கிழைத்து விடுவோம் என்ற காரணத்தால், மனிதன் தான் நடந்துகொள்ளும் முறையில் கையையும் காலையும் தானே கட்டிக்கொள்கிறானோ, எந்த ஓர் இடத்தில், தான் அதிக தூரம் சென்றுவிடக் கூடும் என்பதற்காகத் தன்

கையாலேயே தான் நடந்து செல்கின்ற சாலையை அழிக்கின்றனோ, அந்த ஓர் இடம், அல்லது நாடு, ஆன்மீகம் என்ற பெயரில் மனித சமுதாயத்திற்கு எல்லை யற்ற அவ மரியாதையைச் செய்கின்றது. அம் மட்டோ டல்லாமல் உலகத்திலேயே அடிமைகளை உற்பத்தி செய்கின்ற மிகப் பெரிய தொழிற்சாலையாகவும் அது ஆகிவிடுகிறது.

சாஸ்திரங்களை எடுத்துக் காட்டுவதுபோல, நம்மை ஆள்கின்றவர்கள் "உனக்குத் திறமை போதாது; நீ நிச்சயம் பிழைகளைச் செய்வாய்; ஆகவேதான் அதிகாரத்தை உன்னிடம் ஒப்படைக்க முடியாது" என்று கூறுகிறார்கள்.

இந்த வார்த்தைகளை நம்முடைய பழைய முனிவர்களும், சட்ட ஞானிகளுமாகிய மனு, பராசரர் ஆகியவர்கள் கூறியிருப்பின் பொருந்தும். ஆனால், இவை ஆங்கிலேயர்களால் சொல்லப்படக் கூடிய தகுதி யுடையன அல்ல. ஆகவேதான், நம்மை ஆள்கின்றவர்கள் மேலே பறக்காமல் இருக்கும்போது சாதாரணமாகப் பேசுகின்ற அதே மொழியில் நாமும் விடை கூறுகிறோம். "பிழை செய்வது என்பது அதிகாரத்தை இழப்பது போன்ற அவ்வளவு பெரிய இழப்பன்று. பிழை செய்வதற்குரிய உரிமை இருக்குமே யானால்தான் உண்மையைக் காணக் கூடிய உரிமைகளும் இருக்கும். குற்ற மில்லாதவர்களாக ஆகவேண்டு மென்று எதிர் பார்க்கின்ற முறையில் உயிரில்லாத வாழ்க்கை நடத்துவதைக் காட்டிலும், நாங்கள் குற்றம் செய்வதையே விரும்புகிறோம்" என்பதே நாம் அவர்கட்குக் கூறும் விடை.

இன்னும் அதிகமாகக்கூடக் கூற முடியும். சுயாட்சி என்று சொல்லப்படுகின்ற மோட்டார் காரில் இன்று அவர்கள் ஊர்வலம் வந்தாலுங்கூட, முதன் முதலில் அவர்கள் அரசியல் வாழ்க்கையைத் தொடங்கியது ஒரு சிறிய பெட்டி வண்டியில்தான் என்பதையும், அப்பொழுது பொழுது விடிவதற்கு முற்பட்டுள்ள உஷா காலமாக இருந்த தென்பதையும், இன்று நம்மை ஆள்கின்றவர்களுக்கு நினைவூட்டலாம். அந்த நாளில் அவர்களுடைய சிறிய பெட்டி வண்டி சாலையிலுள்ள சிறு பள்ளங்களில் சிக்கிக்கொண்டு எழ முடியாமல் ஒலமிட்டது, வெற்றி முரசைப் போல ஒலிக்கவில்லை. சாலையை அமுக்கிச் சீர்படுத்தும் நீராவி யந்திரத்தோடு கூடிய உருளையை ஓட்டி, கப்பி போடப்பட்ட சாலையில் ஆங்கிலப் பாராளுமன்றம் அதன் தொடக்க காலத்தில் செல்லவில்லை. அதனுடைய வரலாறு முழுவதிலும் இப்புறமும், அப்புறமுமாக உந்தப்பட்டு, ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் முன் நிகழ்ச்சியை எதிர்பார்த்தே அது

நடந்து வந்துள்ளது. அளவு மீறிய லஞ்ச ஊழல்கள், முரண்பா
கள், கருத்து வேற்றுமைகள், நியாய மற்ற செயல்கள், தவறு
ஆட்களால் ஆளப்படுதல் ஆகிய பல்வேறு குற்றங்களிடை(
வீழ்ந்தும் எழுந்தும் அது பயின்று வந்திருக்கிறது. சிற்சில சமய
களில் அரசனுடைய தேவைக்குப் பணி புரிந்தும், பிற நேரங்களி
நிலச் சொந்தக்காரர்களுக்குப் பணி புரிந்தும், மற்றும் பல சமய
களில் சாராயம் காய்ச்சுபவர்களுடைய நன்மைக்குக்கூடப் ப
புரிந்தும் அது வளர்ந்துள்ளது. பாராளுமன்ற அங்கத்தினர்க
அங்கே போடப்படும் அபராதத்திற்கும் குற்றச்சாட்டுக்களுக்கு
பயந்து தவறுமல் பிரசன்னமாக இருந்த காலமும் உண்டு. செய்
குற்றங்களை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டுமேயானு
அயர்லாந்து, அமெரிக்கா ஆகிய இடங்களில் இழைக்கப்பட்
குற்றங்களில் தொடங்கி, போயர் யுத்தம், டார்டனல், மெ
டோமியா ஆகியவற்றில் கடைசியாக இழைக்கப்பட்ட குற்றங்க
வரையில் நீண்டதொரு பட்டியலைத் தயாரித்துக் கொடுக்க முடியு
அளவில் குறைவாக இல்லாவிட்டாலும் இந்தியாவில் அவர்க
இழைத்த குற்றங்கள் பற்றி இன்று பேசாமலிருப்பதே நல்ல
அமெரிக்க அரசியலில் சாத்தானைப் பூசை பண்ணுகின்றவர்க
இழைத்த அநீதிகள் கொஞ்ச மல்ல. டிரைபஸ் வழக்கின் மூல
வெளிப்பட்ட பிரெஞ்சுப் படைத் தலைவர்களின் லஞ்ச ஊழ
சமாசாரங்கள் அக் காலத்தில் பிரெஞ்சு நாட்டு அரசியல் எவ்வா
குருட்டுத்தனமான அதிகார வர்க்கத்தால் மிகத் தாழ்ந்த மடே
நிலையுடன் நடத்தப்பெற்றது என்பதை அறிவிக்கும். இவை யனை
தும் இருந்துங்கூட, சுயாட்சி செய்ய வேண்டுமென்ற உறுதியா
ஊக்கம் மனிதனைப் பல்வேறு பிழைகளையும் செய்தாயினும், போரா
யாயினும் ஒவ்வொரு வீழ்ச்சிக்குப் பிறகும் தலைமை யிடத்த
அடைய வேண்டுமென ஊக்கி வந்திருக்கிறது. அதனால்தா
மனிதனைக் கட்டிப்போட்டு, செவ்வையான உணவைத் தருவதை
காட்டிலும், அவன் பசியைத் தணிக்க வேண்டிச் செய்ய
முயற்சிகளில் தோல்வியுற்றுப் பட்டினி கிடக்கும்படி நேரிட்டாலு
நல்லது என்றே தெரிகிறது.

அரசியல் விடுதலை, நன்றாக வளரும் சக்தியையும், பொது
புணர்ச்சியையும் தருவதுடன் முக்கியமாக மனத்தையும் வ
வடையச் செய்கிறது. கிராம சமுதாயங்களாலும் அற்பத்த
மான சமுதாயப் பிரிவினைகளாலும் சூழப்பெற்றுள்ள மக்க
அரசியல் அதிகாரத்தைப் பெறும்பொழுது வாழ்வை ஒரு பரந்

சூழ்நிலையில் காணக் கூடிய சக்தியைப் பெறுகின்றார்கள். இந்தச் சந்தர்ப்பம் கிடைக்காத காரணத்தால் அவர்கள் மிகச் சிறிய மனிதர்களாகவே வாழ வேண்டி நேரிடுகிறது. மானிட சமுதாயம் முழுவதிலும் பரந்து விரிந்துள்ள நிலையில் அவர்களுடைய வாழ்வை அவர்கள் காண முடிவதில்லை. இதன் பயனாக அவர்களுடைய உடல், மனச் சக்திகள், அவர்களுடைய நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள் ஆகிய அனைத்தும் அளவால் சுருங்கி விடுகின்றன. இவ்வாறு மனிதனுடைய ஆன்மாவை வெளிவிடாமல் சுருக்குவது அவனுடைய உயிரைப் போக்குவதைக் காட்டிலும் மிகக் கொடுமையான தொன்றாகும். 'அற்பத்தனம் இல்லாத அதிகப்படியான நிறைவே இன்பத்தைத் தருகிறது[6].' சுயாட்சி கேட்கும் முயற்சியில், நிறைந்த குற்றங்களை இழைக்கக் கூடும் என எதிர்பார்க்கிறோம் என்பதை, நம்மை ஆள்பவர்களிடத்தில் நாம் சொல்கிறோம். எங்கோ ஒரு நேரத்தில் கீழே விழ நேரிட்டாலும் மேலும் தொடர்ந்து நடக்கத் தயாராக இருக்கிறோம் என்பதையும், நாங்கள் விழுவதையே அடிக்கடி எடுத்துச் சொல்லி, எங்களுடைய முற்போக்கைத் தடை செய்யாமல் இருக்கவும் அவர்களை வேண்டிக் கொள்கிறோம்.

இது ஒரு நியாயமான விடையாகும். பிடிவாதமுடைய ஒரு மனிதன் அதிகாரிகளிடத்தில் இதே விடையைத் திருப்பித் திருப்பிச் சொன்னால், அவர்கள் அவனைத் தண்டிக்கத்தான் செய்யவார்கள். ஆனால், அதே நேரத்தில் தேசீயவாதிகள் அவனைப் போற்றிப் புகழ்வார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் நம்முடைய சமுதாயத் தலைவர்களிடம் இதைப் போன்ற ஒரு விடையைச் சொன்னால் என்ன நடைபெறுமென்று பார்க்கவேண்டும். நம் சமுதாயத் தலைவர்கள் நம்மைப்பற்றிச் சொல்பவை எல்லாம் நியாயமானவையென்றே ஒத்துக் கொள்வதாக வைத்துக் கொள்வோம். அவையாவன: மிக மட்டமான ஒரு காலத்தில் நாம் வாழ்கிறோம்; நம் சுய அறிவை உபயோகப்படுத்தப் புகும்பொழுது குற்றமிழைக்கிறோம்; சுதந்திரமாக நடந்துகொள்ளும்பொழுது பிறருக்குத் தீங்கு இழைக்கிறோம்; ஆகவே நம்முடைய மூளையை உபயோகப்படுத்தாமல் நீதி சாஸ்திரங்கள் உபதேசிக்கின்ற கொள்கைகளைத் தலைவணங்கி ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றும் சொல்வதாக வைத்துக் கொள்வோம். இவை யனைத்தையும் ஏற்றுக் கொண்டாலும் இவற்றுக்குப் பணிந்து போவதன் மூலம் நம்மை நாமே கேவலப்படுத்திக் கொள்ளத் தயாராக இல்லை யென்று நம் சமுதாயத் தலைவர்

களிடம் சொல்வோமேயானால் உடனே கோபத்தால் அவர்கள் கண்கள் சிவந்து, நம்மைச் சமுதாயப் பிரஷ்டம் செய்வதற்கு ஆணை இட்டு விடுவார்கள். அரசியல் ஆகாயத்தில் பறப்பதற்கு இறக்கையை அடித்துக் கொள்கிற மக்கள் அனைவரும், சமுதாயக் கிளையில் வலுவாகத் தங்கள் கால்களை ஊன்றி வைத்துக் கொள் கிறார்கள்.

இந்தப் பிரச்னையின் இருதய ஸ்தானம் எது என்பதை நாம் அறிய வேண்டும். படகை இடப் புறம் திருப்புவதாயினும், வலப் புறம் திருப்புவதாயினும் ஒரே சுக்கானையே உபயோகிப்பது போல, அரசியல் பகுதியாயினும் சரி, சமுதாயப் பகுதியாயினும் சரி இவை யிரண்டிலும் ஒரு மனிதன் உண்மையோடு இருக்க வேண்டுமேயானால் ஒரு முக்கியமான கொள்கையில் அவன் தலைமை பெற்றிருக்க வேண்டும். சித்பூர் சாலைக்கும், சௌரங்கிக்கு முள்ள வேற்றுமை, இந்தக் கொள்கையினிடத்து அவர்கள் இரு வரும் காட்டுகின்ற மதிப்பையே பொறுத்திருக்கிறது. சித்பூர் சாலை, அனைத்துமே மேல் அதிகாரிகள் கையில் இருக்கிறதென்ற முடிவுக்கு வந்து, தன்னுடைய கடமை ஒன்றையுஞ் செய்யாமல், மல்லாந்து படுத்து உறங்குவதுதான் முறை என்ற முடிவுக்கு வந்து விட்டது. சௌரங்கியில் வாழ்பவர்கள், தங்களோடு தொடர் புடைய பொருள்கள் எதுவாயினும் அதைப்பற்றிப் பேசவும் அதில் தலையிடவும் தங்களுக்கு உரிமை உண்டென்ற கொள்கையை மேற்கொண்டுள்ளனர். அதிகாரிகளுக்கும், தங்களுக்கும் வலிமை யான ஒரு தொடர்பு இருக்கிறதென்று சௌரங்கிப் பகுதியினர் நம்புவதால், அந்த நம்பிக்கையின் காரணமாக உலகத்தையே தம் அதிகாரத்துள் வைத்திருக்கின்றனர். இந்த நம்பிக்கை யில்லாத காரணத்தால்தான், சித்பூர் சாலைப் பகுதி, உலகத்தைத் தன் பிடி மானத்திலிருந்து விட்டுவிட்டுக் கண்களைப் பரக்க விழித்துக் கொண்டு, மல்லாந்து படுத்துக் கிடக்கிறது.

நம்முடைய வீட்டில் செய்யப்பெற்ற மிகக் குறுகிய சட்டங் களே மிக உயர்ந்தவைகள் என்று நினைத்துக்கொள்ள வேண்டு மானால் நம்முடைய கண்களை மூடிக் கொள்ள வேண்டும். கண் களைத் திறந்து பார்க்கும் பொழுது உலகம் முழுவதும் ஒரு பெருங் கொள்கை வியாபித்திருக்கக் காண்போம். அந்தக் கொள்கையை ஏற்றுக் கொள்வதன் மூலமே அதிகாரம், செல்வம், இன்பம், ஆகிய வற்றைப் பெற முடியும். ஒரு தனிப்பட்ட மனிதன் வெற்றி பெறு வதற்கு, அனைத்துலகமும் சேர்ந்து அவனுக்கு அதனை வழங்க

வேண்டுமே தவிர, மற்றொரு தனிப்பட்ட மனிதன் வழங்க முடியாது. இதுபற்றிய தீர்க்கமான அறிவுதான் ஐரோப்பிய நாகரிகத்திற்கு வலுவான அதிகாரத்தை அளித்திருக்கிறது.

உலகத்தின் இப் பகுதியிலுள்ள நாம் கைகள் இரண்டையும் மேலே தூக்கி, மிக்க வருத்தத்தோடு பெரு மூச்சுவிட்டு, "தலைவன் விருப்பமே நடைபெறும்" என்று கூறுகிறோம். தந்தை, மூத்த சகோதரன், போலீஸ் பார்வையாளர், பூசாரி, அரசன், சித்தாலா (மாரியாயி), மனசா (நாகதேவதை), ஒலபிபி (காலராத் தெய்வம்), தஷ்கின்ரே (புலித் தெய்வம்) என்ற பெயர்களோடுமட்டு மல்லாமல் ஆகாயத்திலுள்ள சனி, செவ்வாய், ராகு, கேது [7] ஆகிய பெயர்களையும் தலைவனுக்குச் சூட்டுகிறோம். நம்முடைய சக்தி முழுவதையும் ஆயிரம் துண்டுகளாக உடைத்து அவற்றைக் காற்றில் வீசுகிறோம்.

கல்லூரியில் உள்ளவர்கள் கீழ்க்கண்டவாறு பேசலாம்:— "பழைய பழக்க வழக்கங்களையும், நம்பிக்கைகளையும் நாங்கள் இப்போது அநேகமாகக் கொண்டாடுவதில்லையே. அம்மை குத்திக் கொண்டிருக்கிறோம். காலராவை எதிர்த்துப் போராட, உப்புத் தண்ணீர் ஊசி போட்டுக் கொண்டிருக்கிறோம். மலேரியாக் கொசுக்களின் மூலம் பரவுகின்ற காய்ச்சலைத் தெய்வம் என்று நம்பாமல் அவை ஒரு கிருமியினால் வருகின்றன என்றே நம்பு கிறோம். என்றாலுங்கூட, வயிற்றுக் கட்டியால் ஊதிப் போயிருக் கின்ற எங்கள் வயிற்றைச் சுற்றி மட்டும் ஒரு மந்திரத் தாயத்துக் கட்டியிருக்கிறோம்" என்று சொல்லக் கூடும்.

இதனை வெளிப்படையாக நாம் ஏற்றுக் கொள்கிறோமோ, இல்லையோ அதுபற்றிக் கவலையில்லை. கீழ்ப் படிதல் என்ற விஷச் சத்து நம்முள் நிரம்பி யிருக்கிறது என்ற உண்மையை யாரும் மறுக்க முடியாது. மனத்தின் கோழைத்தனம் என்பது, இன்ன தென்று குறிக்கப்படாத அனைத்தையும் சூழ்ந்துள்ள ஓர் அச்சத்தின் காரணமாகவே வருகிறது. அனைத் துலகச் சட்டத்தின் மூலம் வெளிப்படுகின்ற அனைத் துலகச் சக்தியை நாம் அறிந்து கொள்ள முடியாத காரணத்தால், முற்கூட்டியே, நம்முடைய அறிவு பைத்தி யக்காரத்தனமானது என்று ஒதுக்கி விட்டு, ஆயிரக்கணக்கான சந்தேகங்களுக்கு இடம் கொடுக்கிறோம். நம்முடைய அறிவைச் சந்தேகிக்குமாறு, அச்சம் என்றுமே தூண்டுகிறது. எப்போதும் எதனையும் மேற்கொண்டு செய்ய வேண்டாமென்றும், அந்த

அச்சம் சொல்லிக் கொண்டிருக்கிறது. நம்மை ஆள்கின்றவர்கள் கூட, அவர்களுடைய அரசியல் ஆட்சித் துறையில் அச்சம் என்ற பொருள் புகுந்துவிடும்பொழுது, ஒரு விநாடி நேரத்தில் தங்கள் மேனாட்டுக் கொள்கைகளைக் காற்றில் பறக்க விட்டுவிடு வதைக் கண்டித்திருக்கிறேன். அவர்களுடைய அதிகாரத்தில் ஆணி வேராகவுள்ள மாற்ற முடியாத சட்டத்தைக்கூடக் குருட்டுத் தனமாக அவர்கள் உடைத்தெறிகிறார்கள். அந்த நிலையில் நியாயத் தின் மேலிருந்த நம்பிக்கைகூடத் தளர்ந்து, அவர்களுடைய அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்வதையே முக்கியமாகக் கருது கிறார்கள். அனைத் துலகச் சட்டத்தில் உள்ள நம்பிக்கையை இழந்து, ஒருவனுடைய தனிப்பட்ட அதிகாரத்தை மட்டும் நம்பி வாழ் வதாகும் இது. அற்பத்தனமான அச்சம், அற்பத்தனமான பேராசை, அல்லது ஒருவன் செய்ய வேண்டிய காரியங்களை எளிதாக்குவதற் காகச் செய்யப்படும் அற்பத் தந்திரங்கள் ஆகியவற்றிலிருந்து இவை தோன்றுகின்றன. குருட்டுத்தனமான அச்சத்தால் தூண்டப்பட்டு மிக அடிப்படையானதாகிய நம்முடைய ஆண்மை யைக்கூடப் பலியிட்டு, இந்தப் பூமியில் உள்ளதும் இல்லாதது மாகிய அனைத்திற்கும் வணக்கம் செலுத்திக் கீழ்ப்படியத் தயாராக இருக்கிறோம். சேதன ரசாயனத்தை அல்லது அசேதன ரசா யனத்தை கற்றாலும், வரலாறு, அரசியல் ஆகியவற்றைக் கற்றாலும், தேர்வுகளில் தேறினாலுங்கூட, தலைவன் விருப்பமே நடைபெறும் என்ற அற்பமான அறிவை மட்டும் நம்முடைய மனத்திலிருந்து போக்க முடியவில்லை.

அதிருஷ்டவசமாகத் தற்காலத்தில் நம்முடைய நாட்டில் பொது முயற்சியான பல பணிகளுக்கு அஸ்திவாரம் போடப்பெற்றுள்ளது. ஆனால் நம்முடைய பழங் கால வாழ்க்கையின் காரணமாக இந்தப் பொதுப் பணிகளைத் தனிப்பட்டவர்கள் தேவையாக மாற்றிக் கொள்ளப் பெரு முயற்சிகள் நடைபெறுகின்றன. எங்கோ ஓர் இடத்திலிருந்து என்ன காரணத்திற்கு என்று சொல்ல முடியாத வகையில் ஒரு தலைவர் தம் தலையை ஆட்டுகிறார். உடனே அந்த ஒரு தலை அசைப்பிற்காக ஒரு கூட்டத்திலுள்ள தனிப்பட்டவர்கள் அனைவரும் எழுந்து, உட்கார்ந்து, மணம் செய்து, சாகிறார்கள். இறந்த பிறகு கூட, அந்தத் தலைவரின் விருப்பத்திற் கிணங்க அவர் களுடைய பிரச்னைகள் எதுவாக இருப்பினும், அவை புண்ணியச் செயல்களா, பாவச் செயல்களா என்பதையும் இந்தத் தலைவரே கவனிக்கிறார். குளிப்பதற்குத் தேவையான கிணறு தோண்டப்

படும்பொழுது கூட, அதனுடைய கன அளவைச் சரி பார்ப்பது, அந்தத் தண்ணீரைக் குளிப்பதற்குப் பயன்படுத்தலாமா என்பது, அதே முறையில் வெளிநாட்டில் தயாரித்த மதுவின் தன்மையை அறிவது, பிற சமயத்தான் தொட்ட தண்ணீரின் சுத்தம் பற்றி ஆராய்வது, ஆகிய இத்தகைய பிரச்னைகள் அனைத்தையும் தீர்க்குமாறு தலைவரிடம் விட்டுவிடுகிறார்கள். அவர்களை நோக்கி, ஹிந்துவாக இருக்கின்ற ஒருவன் வழங்குகின்ற தண்ணீர் அழுக்கான பாத்திரத்தினுல் முகக்கப்பட்டதாயின் அது குடிப்பதற்குத் தகுதியான தன்று என்றும், முஸ்லீமால் வழங்கப்பட்ட தண்ணீர் வடிகட்டித் தூய்மைப்படுத்தப்பட்டதாயின் அது தூய்மையுடையது என்றும் கூறினுல் நம்முடைய அற்ப அறிவைக் கொண்டு ஆராயப் பட்டதென்றும், தலைவருடைய விருப்பம் இதற்கு நேர் மாருக இருக்கிறதென்றும் கூறிவிடுவார்கள். இதை எதிர்த்து நாம் தலைவருடைய ஆணை இவ்வாறு இல்லை யென்று போரிடுவோமேயானுல் மறுமுறை அவர்கள் வீட்டு விழாவுக்கு அழைக்க மாட்டார்கள். நம்மிடையே யுள்ள சமுதாயத் தொடர்பு உடனே அறுந்து விடும். இத்தகைய மக்கள் மிகக் குறுகிய நோக்கத்துடன் கொடூரமான முறையில் தங்களைத் தாங்களே குறுக்கிக் கொள்கிருர்கள். தாங்கள் எதைச் செய்ய வேண்டும்? யாரைத் தொடலாம் என்ற அடிப்படையான உரிமைகளைக்கூட விட்டுக் கொடுத்து, இவ்வாறு செய்யப்படுகின்ற கட்டுப்பாடுகள் நன்மை பயக்கும் என்று கருதுகிருர்கள். இப்படிப் பட்ட மக்கள், எவ்விதக் கட்டுப்பாடும் இல்லாத அரசியல் உரிமைகளை எந்த விதமான மனத்தயக்கமும் இல்லாமல் கேட்பதற்கு என்ன உரிமை பெற்றிருக்கிருர்கள்?

ஒரு நாட்டு மக்கள், தாங்கள் எடுத்துக் கொண்ட காரியங்களைத் தங்களுடைய சக்தியைச் செலவழித்துச் செய்ய முடியாத பொழுது அச்சத்திலும், பிச்சை யெடுப்பதிலும், மற்ற மக்களை வேண்டிக் கொள்வதிலும், இத் தொல்லையிலிருந்து தங்களை விடுவிக்குமாறு தெய்வங்களையும் கிரகங்களையும் வேண்டிக் கொள்வதிலும் தங்கள் காலம் முழுவதையும் கழிக்கிருர்கள். இதுபற்றிய விவரமான குறிப் பொன்று வங்காளத்தில் மங்கள காவியங்களில்[8] காணப்படுகின்றது. சந்தாளர் என்பவன் மிக உயர்ந்த இலட்சியங்களோடு வாழ்ந்தாலும் ஒரு சாதாரண தெய்வத்தின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிய மறந்துவிட்ட காரணத்தால் மிகவும் துன்பமுற்றுக் கடைசியில் தோல்வியை ஏற்றுக் கொள்ள வேண்டிய

நிலையை அடைந்தாலும். அந்தந் தெய்வம் அறிவுக்கும், நியாயத் திற்கும் விரோதமான ஒரு சக்தியின் பிரதிநிதியாக இருந்து மிகவும் கொடூரமான முறையில் மிகக் கேவலமான கீழ்ப்படிதலை விரும்பி நின்றது. அனைத் துலகையும் ஆள்கின்ற[6] ஒரு தெய்வத்தின் இப்படிப்பட்ட குணாதிசயங்களை அக் காலத்திலிருந்த அரசியல் நிலைமையோடு ஒப்பிட்டுக் கவி கங்கன்[9] என்பவர் 'ஷாந்தி' கவிதை யின் முகவுரையில் கூறியுள்ளார். வலிமை யுடையவர்கள் செய்யும் அட்டூழியங்களை நியாயமான வழியில் சட்டபூர்வமாக எதிர்த்துப் போராடுவதற்கு வேண்டிய சட்டமோ, நியாயமோ அக் காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. யாருக்கு மிருக பலம் அதிகமாக இருந்ததோ, அவர்களுக்கே நிலம சொந்தமாக இருந்தது. வலிமை குறைந்தவர்கட்கு லஞ்சம், முகஸ்துதி என்ற இரண்டு வழிகளை யல்லாமல் ஓடிப் போய்விடுவது என்ற ஒரு வழிதான் கிடைத்தது. அன்றுள்ள சமுதாய, அரசியல் நிலைமைகளுக் கேற்பவே, தெய்வங் களைப் பற்றிய நம்பிக்கையும் இருந்ததாகத் தெரிகிறது.

என்றாலுங்கூட, என்றுமே நியாயத்தைக் கடைப்பிடிப்பதும், ஒழுங்கு முறையைக் கைக்கொள்வதும், என்றும் நிலைத்திருப்பது மான ஒரு தெய்வீகத்தைப் பற்றி உபநிஷதங்கள் ஒரு காலத்தில் கூறியுள்ளன. அந்தத் தெய்வீகம் ஊழியூழி காலமாக இருந்து வருகிற தென்றும், கால மாறுபாட்டுக்குத் தகுந்தபடி மாறுவதில்லை என்றும், ஞானத்தின் மூலமாக நாம் ஒவ்வொருவரும் அதை நமதாக ஆக்கிக் கொள்ளலா மென்றும் கூறியுள்ளன. எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாக அந்தத் தெய்வீகத்தை நாம் பெற்றிருக் கிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு அதிகமாகப் புதிய புதிய தடை களை யெல்லாம் நாம் வென்று செல்ல முடியும் என்றும் கூறின. என்றும் உள்ளதும், நியாயமானது மாகிய இந்தத் தெய்வீகத்தை நல்ல முறையில் தெரிந்துகொள்வதுதான் விஞ்ஞானமாகும். விஞ்ஞானத்தை அறிந்து கொண்டிருப்பதன் காரணமாக, மலேரியா முதலிய நோய்களை அடியோடு ஒழித்துவிட முடியும் என்றும், மானிட சமுதாயத்திலிருந்து அறியாமையையும், வறுமையையும போக்கி விட முடியும் என்றும் ஒவ்வொரு குழந்தையும் உடலாலும் மனத்தாலும் வலிமை பெற்று வளர முடியும் என்றும், அரசியல் பகுதியில் தனி மனிதன் உரிமைக்கும், பொது நலத்திற்கும் ஒரு முழு ஒன்றல் தன்மையை உண்டாக்க முடியு மென்றும் ஐரோப்பா பெரிதும் நம்பிக்கை கொண்டிருக்கிறது.

இந்தியாவும்கூட, ஒரு காலத்தில், ஆன்மீக முறையில் காணும் பொழுது அறியாமைதான் தளை யென்றும், அறிவுடைமையே

விடுதலை யென்றும், உண்மையை நாடுவதால் நம்மை நாமே விடு வித்துக் கொள்ள முடியும் என்றும் கூறியுள்ளது. உண்மை அல்லா தது என்பது என்ன? தனித்து நிற்கக்கூடிய பொருளாக, ஒருவன், தன்னைத் தான் கருதிக் கொள்வதே உண்மை அல்லாத தாகும். இந்த மிகப் பெரிய அண்டத்துடன் தனக்குள்ள ஒற்றுமையை அறிவதும், தன்னுடைய ஜீவாத்மாவை இந்த அனைத் துலக ஆன்மாவுடன் இரண்டறக் கலக்கச் செய்வதும்தான் உண்மை அறிவாகும். பழங் காலத்திலுள்ள இந்தியர்கள் இவ்வளவு பெரிய உண்மையைச் சாதாரண மனிதனும் அறிந்துகொள்ளும்படியாகச் செய்தது எவ்வளவு பெரிய காரியம் என்பதை இன்றுள்ளவர் களாகிய நாம் எளிதில் புரிந்துகொள்ள முடியாது.

பழங் கால இந்தியா ஆன்மீகப் பகுதியில் எத்தகைய விடு தலையைப் பெற முயன்றதோ, அதே போன்ற ஒரு விடுதலையைத் தான் நவீன ஐரோப்பா உலகாயதப் பகுதியில் பெற முயல்கிறது. இங்குங்கூட, அறியாமை யென்பது ஒரு தளையாகவும், அறி வுடைமை என்பது விடுதலையாகவும் இருந்து வருகிறது. விஞ் ஞானத்தின் உண்மைகள், தனித்துவத்திலிருந்து அனைத் துலகத் தன்மைக்கு மனித மனத்தை அழைத்துச் செல்வதுடன், தனி மனித னுடைய சக்தியை அனைத் துலகச் சக்தியோடு இணைக்க முயல் கிறது.

இந்தியாவில், உலகத்தைத் துறந்து, ஆன்மீக முயற்சிகளில் ஈடுபட்ட ரிஷிகளின் காலம் நாளாவட்டத்தில் மறைந்து, அதனைத் தொடர்ந்து பௌத்த காலம் வந்தது. இந்தியா தான் கற்றிருந்த பேருண்மையை வாழ்க்கையிலிருந்து தள்ளி வைத்துவிட்டு, துறவு தான் விடுதலைக்கு மிக முக்கியமான ஒரு வழியாகும் என்று சொல்லத் தொடங்கியது. இதன் பயனாக, சட்டபூர்வமாகச் சுவர் வைத்துப் பிரிக்கப்பட்ட இரண்டு நிலங்கள் அடுத்தடுத்து இருப் பதைப் போல, அறியாமையும் அறிவுடைமையும் தனித் தனியே பிரிக்கப்பட்டு இன்று வரையில் பிரிந்தே இருந்து வருகின்றன. குறுகிய மனப்பான்மை, முரட்டுத்தனம், அறியாமை ஆகியவைகள் இந்த உலகத்தில் நிறைந்து காணப்பட்டாலுங்கூட, மிகப் பெரிய உண்மைகளைத் தங்கள் வாழ்க்கையில் காண்கின்ற பெரியவர்கள் இவற்றை மறுத்துப் பேசாமல், ஓரளவுக்கு இவற்றை ஒப்புக் கொண்டே இருந்து வருகிறார்கள். ஒரு மரத் தடியில் அமர்ந்து கொண்டு ஞானி ஒருவன் "அனைத்திலும் தன்னையும், தன்னில் அனைத்தையும் எவன் ஒருவன் காண்கின்றானோ, அவனே

உண்மையைக் கண்டவன் "[10] என்று கூறிக் கொள்ளலாம். இதனைக் கேட்டுச் சாதாரண உலக மனிதன் உடனே மனங் கசிந்து, பக்திப் பரவசப்பட்டு, அந்த ஞானியினுடைய பைகளைப் பரிசுப் பொருள்களால் நிரப்பலாம். உலக மனிதன் ஒருவன் தன்னுடைய மாளிகையின் அறை ஒன்றில் அமர்ந்து கொண்டு, "எந்த ஒரு முட்டாள் பிறரைத் தன்னிடம் நெருங்க விடாமல் பார்த்துக் கொள்ளவில்லையோ, அவன் அழிவைத் தேடிக் கொள்கிறான்" என்று கூறுவதைக் கேட்டு ஞானி அவனை நீண்ட ஆயுளைப் பெறுமாறு வாழ்த்திவிட்டுச் சென்றுவிடுகிறான். இதன் பயனாகத் தான் சோம்பேறித்தனத்தை எதிர்த்துப் போராடுகின்ற சக்தி கொஞ்சங் கொஞ்சமாக நம்மைவிட்டு மறைந்து, செயல்பட வேண்டிய துறையில் நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக நாம் அவமானப்படுத்தப்பட்டும் தோல்வியைப் பெற்றும் வருகிறோம்.

ஐரோப்பாவைப் பொறுத்தமட்டில் விஷயங்கள் நேர் எதிர்மாறாக இருந்தன. கொள்கை, நடைமுறை என்ற இரண்டு பகுதிகளிலும் அவர்கள் உண்மையை நாடினார்கள். அவர்களுடைய அரசியல், சமுதாய நிறுவனங்களில் காணப்பெற்ற பிழைகளைத் திருத்திக் கொள்வதற்காக மக்கள் ஒன்றுகூடி, தங்களுக்குள் ஆராய்ந்து உண்மையின் ஒளியில் தேவையான திருத்தங்களைச் செய்து கொண்டார்கள். உண்மையின் பயனாகக் கிடைத்த சக்தி, சுதந்திரம் என்பவை அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பெற்று, அனைவருக்கும் நம்பிக்கையையும், தைரியத்தையும் ஊட்டியது. சமயச் சடங்குகள், மந்திர உச்சாடனங்கள் என்பவை போன்ற பனிப் படலத்தால் மூடப்படாமல், உண்மை என்பது நல்ல திறந்த வெளியில் தானும் வளர்ந்ததோடு, பிறரையும் வளருமாறு செய்தது.

நூற்றுக் கணக்கான ஆண்டுகளாகச் செயல் உலகத்தில் நாம் அனுபவித்து வந்த அவமானம், அரசியல் அடிமைத்தனம் என்ற பெயரில் வெளிப்படலாயிற்று. நம்முடைய உடம்பில் நோவாக இருக்கின்ற உறுப்பை நோக்கி நம்முடைய கைகள் இழுக்கப்படுவது போல, நம்மை ஆள்கின்ற ஐரோப்பியர்கள் நிறுவிய அரசியல் நிறுவனத்தின் மேல் நம்முடைய கவனம் இழுக்கப்பெற்றது. மற்றவற்றைப் பற்றி ஒரு சிறிதும் கவலைப்படாமல் கண்ணை மூடிக் கொண்டு, இந்திய அரசாங்கத்தைப் பற்றிய நம் கருத்தைத் தெரிவிக்கும் ஒரே நோக்கத்துடன் மேலே திணிக்கப்படும், முரட்டுத்தனமான ஆணைகள் எவற்றுக்கும் பணிய மறுத்து விடுகி

றோம். ஒருவர் தம் தோளில் சுமக்கவேண்டிய நிலை ஏற்பட்டவுடன் அதிகாரம் என்பதுகூடப் பெரும் பாரமாக ஆகி விடுகிறது. ஆகவே தான், அந்தப் பாரத்தை ஒரு வண்டியில் ஏற்றி நம்முடைய கைகளினுல் தள்ளிக்கொண்டு போக விரும்புகிறோம்.

பிற ஒரு நாட்டாரால் அவர்களுடைய இலாபததையே கருதி, எந்த ஒரு மனிதனும் ஆட்சி செய்யப்பெறக் கூடாதென்று உலகம் முழுவதிலும் இன்று கோஷம் கிளம்புகிறது. இந்தப் புதுக் கோஷத்தில் சேர்ந்துகொள்ளும் முறையில் இந்தக் காலத்திற்கேற்ற கோலம் கொண்டிருக்கிறோம் நாம். இவ்வாறு செய்யாமல் என்றைக்கும் இந்த அரசியல் அடிமைத்தனத்தை ஏற்றுக்கொண்டிருப்போமேயானுல், மிகக் கேவலமான முறையில் நம்மை நாமே தாழ்த்திக் கொண்டிருப்போம். ஒரு சிறிய துவாரத்தின் மூலமாக உண்மை வெளிப்பட்டாலுங்கூட, அது வெளிப்பட்ட அளவில் நமக்கு நன்மையே பயந்துள்ளது.

ஆகவே, புதிதாகத் தோன்றியுள்ள தேசீய சுயமரியாதை, நம்மை முன்னுக்குத் தள்ளுகின்ற பணியைச் செய்கின்ற அளவுக்கு அதைப் பெருமைப் படுத்த நான் துணிகின்றேன். ஆனுல், அதே நேரத்தில், யாகத்துக்குக் கட்டப்பட்ட ஆட்டைப் போலப் பழமையோடு சேர்த்து அது நம்மைக் கட்டியிருக்கின்ற செயலைக் கண்டிக்கிறேன். தேசீய சுய மரியாதை, முன் நோக்கிச் சென்று அரசியல் அதிகாரத்தைக் கேட்குமாறு நம்மை செய்கிறது. ஆனுல், இதே சுய மரியதை நம்முடைய நாட்டைப்பொறுத்தவரை எல்லா வகையான சமய, சமுதாய, விஷயங்களை அல்லாமல் மனிதர்களின் சொந்த விஷயங்களில்கூடத் தலைவரின் ஆணைக் கப்பால் ஒரு அடிகூட எடுத்துவைக்கக் கூடாது என்று சொல்லுகின்ற கொள்கையைக் கடைப்பிடிக்கச் செய்து விடுகிறது. இதனைத்தான் ஹிந்து சமுதாயத்தின் மறுமலர்ச்சி யென்று நான் சொல்லுகின்றேன். ஒரு கண்ணை விழித்துக்கொண்டு, அதே நேரத்தில் மற்ெருரு கண்ணை இறுக்கி மூடி உறங்க வேண்டுமென்ற முடியாத செயலைச் செய்யுமாறு தேசீய சுய மரியாதை நம்மை ஏவுகிறது.

[illegible] என்ற முறையில் மேலிடத்திலிருந்து நம்முடைய முதுகில் பிரம்படி விழும்பொழுது நம்முடைய தேசீய சுய மரியாதை விழித் தெழுகின்றது. எழுந்தவுடன், பிரம்புக் காடு முழுவதையும் எரித்து ஒழித்துவிட வேண்டுமென்று கேட்கிறதே தவிர, பிரம்புக் காடு அழிந்தாலும் அதற்குப் பக்கத்தில் மூங்கில் காடு உண்டென்பதை இந்தத் தேசீய சுய மரியாதை மறந்துவிடு

கிறது. குற்றத்தைப் பிரம்பின் மேலேயும், மூங்கிலின் மேலேயும் போடுவதை விட்டுவிட்டு, நம் மேலேயே சாற்றிக் கொள்ளவேண்டும். உண்மையைக் காட்டிலும் தலைவனுக்கு அதிக மரியாதை கொடுத்து, அவருடைய சொற்களுக்குக் கீழ்ப்படிகின்ற நம்முடைய இயல்பும், கண்களைக் காட்டிலும் இமைகளை அதிகம் நம்புகின்ற நம் இயல்புந்தான் குற்றத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும். இந்த நிலைமை நீடிக்கின்ற வரையில் உலகத்தில் எங்காவது ஒரு மூலையி லிருந்து நம்மை நோக்கிப் பிரம்புகள் வந்துகொண்டே யிருக்கும்.

ஐரோப்பாவில்கூட மனிதர்களுடைய எல்லா விஷயங்களிலும், மாதா கோயில் தலையிட்ட காலம் ஒன்றுண்டு. இந்த விலங்கு களை உடைத் தெறிந்தபொழுதுதான் ஐரோப்பிய தேசங்கள் சுயாட்சியை நோக்கி அடி யெடுத்து வைக்க முடிந்தது. இங்கி லாந்து ஒரு தனித் தீவாக இருந்ததும், மாதா கோவிலின் தலைமை யிடம் ரோம் நாட்டில் இருந்ததும், ஆங்கிலேயர்கள் ரோமாபுரியின் அதிகாரத்தை எதிர்த்துப் போராடுவதற்கு ஒரு தனிப்பட்ட வழி யையும், வசதியையும் அளித்தது. இங்கிலாந்தில் மாதா கோயி லுக்கு எந்த விதமான அதிகாரமும் இல்லை யென்று சொல்ல வர வில்லை. ஆனால், உயர்ந்த குடும்பத்தில் பிறந்த ஒரு பெண், தான் கைம்பெண்ணானவுடன் குடும்பத்தில் தனக் கிருந்த பழைய மரியா தையை இழந்துவிட்ட நிலையில்தான், இன்று இங்கிலாந்தில் மாதா கோயிலின் நிலைமை இருந்துவருகிறது. பிறருக்குத் துன்பம் கொடுக்கக்கூடிய சக்தியை ஒரு காலத்தில் அந்தப் பெண் பெற்றிருந் தாலும், இன்று அவள் மாதாந்திரப் படியைப் பெற்றுக்கொண்டு ஒரு மூலை யறையில் வாழ்கிறாள். வீட்டிலுள்ள இளைஞர்கள் பயம் காரணமாக அவளுக்கு மரியாதை செலுத்துகிறார்களே தவிர, யாரும் அவளுக்குக் கீழ்ப்படிவதில்லை. முன்னைப்போல் அவளுக்கு அதிகாரமும் சக்தியும் இருந்திருக்குமேயானால் இளைஞர்களை அடக்கி யாண்டு இருப்பாள்.

இந்தக் கிழவியின் அதிகார நுகத்தடியை, நீண்ட காலத்திற்கு முன்பே இங்கிலாந்து தேசம் உதறி யெறிந்துவிட்டது. ஸ்பெயின் தேசம், முற்றிலும் அவ்வாறு செய்ய இன்னும் முடியவில்லை. ஒரு காலத்தில் கடல் முழுவதிலும் ஸ்பெயின் தேசம் தன்னுடைய ஆணையைச் செலுத்திப் பல்வேறு நாடுகளிலும் தன்னுடைய கொடியை ஊன்றியது. ஆனால் இன்று ஸ்பெயின் தேசம் அந்தச் செல்வாக்கை இழந்ததற்குக் காரணம் அந்தக் கிழவி அதிகார பீடத்தில் இருப்பதுதான். ஸ்பெயின் தேசம் மிகத் தீவிரமான

நிலையில் புறப்பட்டாலுங்கூட, கிழவியைத் தோளில் தாங்கிக் கொண்டிருக்கின்ற காரணத்தால் மூச்சிழந்து தோற்க ஆரம்பித்து விட்டது. ஸ்பெயின் மக்களின் கப்பல் படை என்று இங்கிலாந் தால் தோற்கடிக்கப்பட்டதோ, அன்றே ஸ்பெயின் தேசம் மூச்சு விட முடியாமல் திணறிக் கொண்டிருப்பதைக் காண முடிந்தது. சமய நம்பிக்கையில் எப்படிப் பழைய மரபுகள், பழக்கங்கள் ஆகிய வற்றால் ஸ்பெயின் தேசம் கட்டுப்பட்டிருந்ததோ, அதேபோலக் கப்பல் சண்டை செய்யும் முறையிலும்கூட மரபுகளாலும், பழக்க வழக்கங்களாலும் ஸ்பெயின் தேசம் கட்டுப்பட்டிருந்தது. இங்கி லாந்துக் கப்பல் படை தண்ணீர், காற்று என்ற இரண்டுடன் மிகவும் ஒற்றுமை கொண்டு எளிதாக இங்கு மங்கும் நகர்ந்த நேரத்தில் ஸ்பெயின் தேசம் பழைய சாஸ்திரீய முறைகளில் பிணிக்கப் பட்டிருந்தது. இங்கிலாந்துக் கப்பல் படையில் ஒரு மனிதன் தேவையான தகுதிகளைப் பெற்றிருந்தால் அவனுடைய பிறப்பைப் பற்றி ஒரு சிறிதும் கவலைப்படாமல், படைத் தலைவனாகக் கூட ஆக முடியும். ஆனால், அதே நேரத்தில், ஸ்பானியக் கப்பல் படையில் மிக உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர்கள் மட்டுமே இந்தப் பதவிகளை அடையமுடியும். இன்று, ஐரோப்பாவிலுள்ள எல்லாப் பொது மக்களும் அவர்கள் சிறுவர்களாயினும் பெரியவர்களாயினும், மாதா கோயிலின் குருட்டு அதிகாரம் தளர்ந்துவிட்ட காரணத்தால், தாங்கள் தலை நிமிர்ந்து நடக்கவும், தம்மைத்தாமே மதித்து நடந்து கொள்ளவும் சக்தி பெற்றார்கள். சார் மன்னர் ஆட்சி செய்த ரஷ்யா போன்ற நாடுகள் மானிட சமுதாயத்தின் மேல் கொண் டிருந்த இந்த மரியாதைக் குறைவு காரணமாகத் தலைவன் இல்லாத தரிசு நிலங்கள் போல முள்ளும், புதரும் மண்டிய காடுகளாக மாறி விட்டன. இத்தகைய நாடுகளில், மனிதர்களை, பணக்காரர் களுடைய அமீனாக்களும், பழமையினுடைய சாஸ்திர புத்தகங் களும், குருட்டு அதிகாரத்தின் பிற கருவிகளும் அவமானப்படுத் தியும் கொடுமைப்படுத்தியும் கீழ் நிலையை அடையச் செய்தன.

ஆன்மாவுக்கும், சமயச் சடங்குகளுக்கு முள்ள வேற்றுமை நெருப்புக்கும், சாம்பலுக்கும் உள்ள வேற்றுமை போல ஆகும் என்பதை மனத்தில் தவறாமல் பதித்துக் கொள்ள வேண்டும். ஆன்மாவைக் காட்டிலும் சடங்குகள் முக்கியத்துவம் பெறும் பொழுது, ஆற்றிலுள்ள தண்ணீரைக் காட்டிலும் அங்குள்ள மணல் முக்கியத்துவம் பெறும்பொழுது, ஆற்றின் நீரோட்டம் நீங்கிப் பாலை வனமே முடிவாக எஞ்சுகிறது.

ஒரு மனிதனிடத்தில், காட்டப்படும் அவமரியாதை, காட்டு கின்றவனுக்கு எவ்வித நன்மையும் புரியாமல், காட்டப்படுபவ னுக்கும் எவ்வித நன்மையையும் புரிவதில்லை யென்று உண்மைச் சமயம் பேசுகிறது. அதே நேரத்தில், மற்ருெரு மனிதனை எவ்வாறு கொடுமையாக நடத்த வேண்டும், இல்லாவிட்டால் சமயப் பிரஷ்டம் செய்ய நேரிடும் என்று சமயச் சடங்குகள் விவரமாகப் பேசுகின்றன. நம்முடைய சகோதரர்களுக்குத் தேவையற்ற துன் பத்தை உண்டாக்குவதன் மூலம், நம்முடைய ஆன்மாவையே அழித்துக் கொள்கிறோம் என்று உண்மைச் சமயம் சொல்கிறது. ஆனுல், மகளின் பசியைப் போக்க வேண்டிய பெற்றோர்களை நோக்கி, அவள் கைம்பெணகை[11] ஆகிவிட்டால், குறிப்பிட்ட நாளில் உணவு, தண்ணீர் முதலியவைகளைக் கொடுக்கக் கூடா தென்று போலிச் சமயச் சடங்குகள் சொல்கின்றன. நம்முடைய தீய நினைவுகள், தீய செயல்கள் ஆகியவற்றுக்குக் கழுவாய் தேடும் முகமாக நற் காரியங்களைச் செய்து நம்முடைய பிழையை நினைத்து வருந்த வேண்டுமென்று உண்மைச் சமயம் சொல்கிறது. ஆனுல், அதே நேரத்தில், சூரிய, சந்திர கிரஹண காலங்களில் புண்ணிய நதிகளில் குளித்துவிட்டால் போதும் என்று போலிச் சமயச் சடங்குகள் சொல்கின்றன. உண்மைச் சமயம், கடல்களையும், மலைகளையும் தாண்டிச் சென்று பரந்த உலகத்தைப் பார்ப்பதன் மூலம் நம்முடைய மனத்தை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்று சொல்கிறது. ஆனுல், போலிச் சடங்கு, கடல் கடந்து செல்வ தற்குத் தடை விதிக்கின்றது. உண்மைச் சமயம், மற்றவர்கள் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாயிருப்பினும், அவர்களிடத்திலுள்ள நல்ல வற்றைப் பாராட்ட வேண்டுமென்று சொல்கிறது. ஆனுல்,ஒரு பிரா மணன் எவ்வளவு தகுதி யில்லாதவனுக இருப்பினும் அவனுக்கு மரியாதை செய்ய வேண்டுமென்று போலிச் சடங்குகள், சொல் கின்றன. சுருங்கக் கூறுமிடத்து விடுதலையை நோக்கி உண்மைச் சமயம் அழைத்துச் செல்கின்ற நேரத்தில், அடிமைத் தனத்தை நோக்கிப் போலிச் சடங்குகள் அழைத்துச் செல்கின்றன.

சமயத்திற்குக் காட்டப்படும் பக்தியில் ஒருவகை அழகு இருப் பது உண்மைதான். வெளி நாட்டிலிருந்து நம்முடைய நாட்டைப் பார்க்க வருகின்றவர்கள் பலரும், புறத்தே யிருந்து இதனைக் கண்டு, இதைப் பற்றிப் புகழ்ந்து பேசியுள்ளனர். இது எவ்வாறு உள்ள தென்ருல், ஓர் ஓவியக் கலைஞன் குடியிருப்பதற்குத் தகுதி யற்று அழிந்து போன ஒரு பழைய வீட்டை வெளிப்புறத்திலிருந்து பார்த்து

அதனுடைய சிதைந்த அழகைப் புகழ்வது போலிருக்கிறது. அன்ருெரு நாள், ஸ்நான யாத்திரை[12] திருவிழாவில் பாரிசாலியிலிருந்து கல்கத்தாவுக்கு நான் மீண்டு வருகையில் ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள், பெரும்பாலும் பெண்கள், ரயில் நிலையத்திலும், படகிலும் எல்லை யில்லாத அவமானத்தையும், துன்பத்தையும் சகித்துக் கொண்டு, கங்கையில் முழுகுவதற்காக வந்தார்கள். இவ்வாறு துன்பத்தைச் சகித்துக் கொள்வதை மேலாகப் பார்த்தால் அதில் ஓர் அழகு இருக்கக் காண்கிறோம். ஆனால் நம்முடைய அக மனத்தைக் காணக்கூடிய சக்தி படைத்த கடவுள் குருட்டுத் தனமான இந்தப் பக்தியை ஏற்றுக் கொள்வதில்லை. தங்கள் குழந்தைகளின் தலைகளில் அளவு மீறிய விரதங்களை ஏற்றி அதன் பயனாக, இந்த உலகத்தில் உள்ள எல்லாப் பொருள்களுக்கும் தலை வணங்குவதோடு இந்த உலகத்திற்கு அப்பால் இருக்கின்ற எல்லா நிழல்களுக்கும் தலை வணங்குகின்றார்கள் பெண்கள். தங்களுடைய சுதந்திரச் செயல்களுக் கெதிரே வேண்டுமான முட்டுக் கட்டைகளைப் போடுவதுதான் அவர்கள் செய்யும் பணியாக இருந்து வருகிறது. உண்மையான வளர்ச்சியின் எதிரே ஆகாயத்தை அளாவிய குறுக்குச் சுவர்களை எழுப்புவதே முன்னேற்றம் என்று அவர்கள் கருதுகிறார்கள். உண்மைக்காக அனுபவிக்கப் படும் துன்பம் அழகுடையது. அதன் எதிரே குருட்டுத்தனத்தினாலோ அல்லது வலிமை யின்மையினாலோ அனுபவிக்கப்படும் துன்பம் அழகற்றதாக ஆகி விடுகிறது. தியாகம் செய்வதற்குத் தேவையான வீரம் நிறைந்த சக்தியைக் கவலை யில்லாமல் செலவழிப்பதுதான் ஆண்டவன் நமக்குக் கொடுத்திருக்கின்ற பெரும் பேருகும்.

வரவை விடச் செலவு அதிகமாக ஆகின்ற முறையில்தான் இன்று நம்முடைய கணக்கு இருந்து வருகிறது. ஆண்களும் பெண்களுமாக ஆயிரக் கணக்கான யாத்திரிகர்கள் கங்கையில் ஒரு முழுக்குப் போட்டுப் பெருமையை யடைவதற்கு ஓடிச் செல்வதை என் கண்ணாலேயே பார்த்திருக்கிறேன். இத்தகைய கூட்டத்தில் உடல்நல மில்லாதிருக்கின்ற ஒரு யாத்திரிகன் கீழே விழுந்து இறக்குந் தறுவாயில் இருந்தாலுங் கூட, அவன் எந்த ஜாதியைச் சேர்ந்தவன் என்று தெரியாத காரணத்தால் அவனைத் தொட்டு அவனுக்குச் சௌகரியஞ் செய்ய யாரும் முன் வருவதில்லை. உண்மையைக் கூறுமிடத்து ஆன்மீக வறுமை என்பது இதைத் தவிர வேறில்லை. இந்த யாத்திரிகர்களின் பக்தி, இறக்

கும் நிலையிலுள்ள ஒரு மனிதனிடத்தில் கூட அவர்களைக் கருணையில்லாமல் செய்து விட்டது ஆச்சரியப்படத் தகுந்த ஒன்றுதான்.

பக்தியின் காரணமாக ஏகலைவன்[13] தன்னுடைய கட்டைவிரலைக் கொடுமை நிறைந்த துரோணாச்சாரியாருக்கு வெட்டிக் கொடுத்தான். இந்த ஒரு செயலின் மூலமாக அவன் வாழ்நாள் முழுவதும் முயன்று கற்றுக்கொண்ட வில் வித்தையை அவனுடைய இனத்தவர்கள் யாரும் கற்றுக் கொள்ள முடியாதபடி செய்து விட்டான். இத்தகைய பயனற்ற, முட்டாள்தனமான பக்தியை ஆண்டவன் அன்போடு ஏற்றுக்கொள்வதில்லை. ஏனென்றால், ஆண்டவன் மனிதனுக்கு அளித்த அரிய பெரிய சக்தியை அவமானப்படுத்துவனவாகும் இத்தகைய செயல்கள்.

கண்களை மூடிக்கொண்டே நடந்து பழகிய ஒருவன் கண்களைத் திறந்து கொண்டு நடக்க நேரிட்டால் செம்மையாக நடக்க முடியாது. பிறப்பிலேயே அடிமையாக இருக்கின்ற ஒருவன், தன்னுடைய தலைவனுக்காகத் தன்னுடைய உயிரைத் தியாகம் செய்கின்ற பழக்கமுடைய ஒருவன், தானே தேர்ந்தெடுத்த ஒரு சிறந்த காரணத்திற்காகத் தன்னுடைய உயிரைத் தியாகம் செய்ய முடியாது. ஏனென்றால் இத்தகைய தியாகத்தில் அவனே தலைவனாக இருந்து முடிவு செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது.

நம்முடைய கிராமங்களில் நடைபெறுகின்ற பொதுநல வேலைகள்[14] அனைத்தும் கௌரவத்தையும், பெருமையையும் சம்பாதிக்கும் ஒரே நோக்கத்துடன் செய்யப்பட்டதே, இந்தக் கிராமங்களின் தீராத வேதனையாக இருந்து வருகிறது. ஆண்டவனைத் தவிர, இத்தகைய புகழ் வேட்டையாடும் தொண்டர்கள்தாம் கிராமங்களைப் பராமரிக்கும் பணியை இன்னும் செய்து வருகிறார்கள். இவர்களை யல்லாத மற்றவர்கள் அனைவரும், தங்கள் கைகளைப் பயன்படுத்தி ஒரு கூடை மண் வெட்டுவதைக் காட்டிலும், தாகத்தினால் உயிரைக்கூட விட்டு விடுவார்கள். கிராம மக்கள் இதுவரையில் எவ்வாறு இருந்தார்களோ, அதேபோலத்தான் இன்றும் இருந்து வருகிறார்கள். அதாவது ஒரு மூதாட்டியின் கையில் அகப்பட்டக் குழந்தைகளாக, ஒவ்வொரு ஆணும் பெண்ணும் என்னென்ன செய்ய வேண்டுமென்று அவள் முடிவு செய்திருக்கிறாளோ அதை அப்படியே ஏற்றுக்கொண்டு நடப்பவர்களாக இருந்து வருகிறார்கள். அவர்களுக்குத் தேவையானவை என்று சொல்லும்பொழுது அவர்களுடைய ஜாதி மத அடிப்படைகள், ஆன்மீகத் துறையிலும் லௌகீகத் துறையிலும் அவர்கள் செய்ய

வேண்டிய காரியங்கள், அவர்களுடைய நன்மை தீமைகள் இன்னுஞ் சொல்லப் போனால் அவர்கள் எப்பொழுது படுக்க வேண்டும்? எப்பொழுது எழுந்து நிற்க வேண்டும் என்பவை முதலான அனைத்தும் அந்த மூதாட்டியினாலேயே நிச்சயிக்கப்படு கின்றன. இவற்றிற் கெல்லாம் கிராம மக்களைக் குறைகூறிப் பயன் இல்லை. ஏனென்றால் அந்த மூதாட்டி கஞ்சாவை உபயோகப் படுத்தி அவர்களுடைய மனங்களை உறங்குமாறு செய்துவிட்டாள். இதில் ஆச்சரியப்படத் தகுந்த விஷயம் என்ன வென்றால் இன்றுள்ள கற்றறிவுடைய மாந்தர்கள்கூட, அதாவது பல்கலைக் கழகத்தில் படிக்கின்ற மாணவர்கள் உள்படப் பலரும், இந்த மூதாட்டியின் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்படுகிறார்கள். காலம் கணிக்கப்பட முடியாத இந்த மூதாட்டி தன் இடையில் இந்தியாவைத் தூக்கிக் கொண்டு செல்வது பார்ப்பதற்கே மகிழ்ச்சி யளிப்பதாக இருக்கிறது போலும்! அவ்வளவு உயர்ந்த ஸ்தானத்தில் இருப்பதால் இந்தி யாவின் கால்கள் பூமியில் படுவது இல்லையென்று அவர்கள் பெருமையுடன் சொல்லிக்கொள்கிறார்கள். மேலும் மூதாட்டியின் இடையி லிருந்தபடியே இந்தியா சுயாட்சி என்று சொல்லப்படும் செங்கோலைக் கையில் வைத்துக் கொண்டிருந்தால் அது பார்ப் பதற்கு எவ்வளவு அழகாக இருக்கும்?

அது எவ்வாறு இருப்பினும், வறுமை, பசி என்று சொல்லப் பெறுகிற மரணத்தின் தூதுவர்கள் நம்முடைய வீடுகளை அவர் களுடைய சொந்த வீடாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. இந்தத் தூதுவர்கள் நம் மேல் பாய்ந்து நம்முடைய குரல்வளையில் அவர்களுடைய நகங்களைப் பதிக்கும்பொழுதுதான் நம்மிடம் துப்பாக்கிகள் இல்லை யென்ற உண்மையை அறிய முடிகிறது. இந்தத் தூதுவர்களை எதிர்த்துப் போராடக் கூடிய ஆயுதங்களை நாம் வைத்துக்கொள்ளக் கூடாதென்று நம்முடைய சமுதாயத்திற்குச் சட்டம் விதிக்கின்ற பெரியவர்கள் ஆணையிட்டுள் ளார்கள். புலிகள், கொள்ளைக்காரர்கள் ஆகியவர்களிடமிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ளக்கூட நாம் ஆயுதங்களை வைத்துக் கொள்ளக் கூடாதென்று நம்முடைய அரசாங்கம் தடைசெய்வதைப் போலவே இவர்களும் தடை செய்கிறார்கள். இந்தப் பிசாசுகளை வெருட்டி யடிக்கவேண்டுமானால் அறிவு, பகுத்தறிவு, ஞானம் ஆகிய ஆயுதங்களை நாம் பெற்றிருக்க வேண்டும். மூதாட்டியின் ஆட்சியில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருக்கின்ற பெரியவர்கள், இந்த ஆயுதங்களை நாம் வைத்துக் கொள்ளலாம் என்றும், விஞ்ஞானம் முதலியவற்றைக் கற்கலாம் என்றும், முடிந்த அளவு

அவற்றைப் பயன்படுத்தலாம் என்றும் கூறுகிருர்கள். ஆனல், பயன்படுத்துவதற்குரிய சட்ட திட்டங்களைப் பார்த்தால், அவற்றைப் பயன்படுத்தாமல் இருப்பதற்காகவே சட்ட திட்டங்கள் வகுக்கப் பட்டனபோல் தெரிகின்றன. அளவு மீறிய கட்டுப்பாடுகள் வகுக்கப் பெற்றதுடன், கட்டுப்பாடுகளைச் சிறிதளவு மீறினலும் மிகக் கடுமையான தண்டனை விதிக்கப்படுகிறது. நம்மிடையேயுள்ள குருமார்கள், பூசாரிகள், தாயத்துக்கள், மந்திரங்கள், தாய் மொழியிலுள்ள பழமொழிகள் ஆகியவை யனைத்தும் நம்முடைய கவனத்தையும், பக்தியோடு கூடிய கீழ்ப் படிதலையும் எதிர்பார்க்கின்றன. எனவே ஒரு கொள்ளைக்காரன் நம்மை எதிர்ப்பட்டால் நாம் பயன்படுத்தியே பழக்கமில்லாத அந்தத் துப்பாக்கியை உபயோகப்படுத்தி அல்லல் அடைவதைக் காட்டிலும், அவன் தரும் தொல்லையே தேவலாம் என்றே தோன்றுகிறது.

நம்மிடத்தில் அன்புடைய மக்கள், "உங்கள் காலில் உள்ள தளைகள் இன்றுபோல் என்றும் இருக்கட்டும்" என்று ஆசிர்வதிப்ப தோடு கூட, "மற்றவர்கள் தோள்மேல் ஏறிக்கொண்டு, அவர்கள் கால்களை உபயோகப்படுத்தி நடந்து செல்வீர்களாக" என்றும் கூறினல் பொருத்தமாக இருக்கும்போல் தெரிகிறது. இந்த மக்கள் நம்முடைய பழங்காலச் சமுதாயத்தின் குறுக்குச் சுவர்களையும், சட்டங்களையும் மறுபடியும் தோண்டி யெடுத்து அவற்றை வலுப் படுத்துவதையே மறு மலர்ச்சி என்று பேசுகிருர்கள். இவ்வாறு செய்வதால் வாழ்வில் ஓட்டம் அற்றுப் போவதையும், அறிவு சுருங்கிப் போவதையும் கண்டு, அவர்கள் கர்வம் கொள்கிருர்கள். இதன் பயனகக் கோடிக் கணக்கான மக்கள் அநாதைகளாகவும், பசிப் பிணியோடும் வாட நேரிடும்போது, இவர்கள், அவர்களுக் காகப் பொறுப் பேற்றுக்கொள்ளவேண்டி நேரிடும் என்பதையும் அவர்களுக்குச் சொல்லிவிட வேண்டும். ஒன்றுக் கொன்று முரண் பட்டுள்ள இரண்டு கருத்துக்களுக்கு, ஒருவன் எவ்வளவு கெட்டிக் காரனக இருப்பினும், தொண்டு செய்ய முடியாது. தண்ணீர் கொண்டு வருவதற்காகத் தாகமுடைய ஒருவன் வைத்திருக்கின்ற பாத்திரங்கள் அனைத்தையும் உடைத்துவிட்டு, ஆற்றுக்கும் வீட்டுக்கும் ஆகப் பலமுறை சென்று, இந்த பெருமக்கள் சல்லடையின் மூலம் தண்ணீர் கொண்டுவர முயல்கிருர்கள்.

நம்முடைய நாட்டின் இன்றைய வருந்தத் தகுந்த நிலை, பிற நாட்டாரின் ஆட்சியின் பயனகவே ஏற்பட்டுள்ளது என்று நம்மில் பலரும் கொண்டிருக்கின்ற கருத்தைக் கொஞ்சம் கவனத்தோடு ஆராய வேண்டும்.

ஆள்பவர்களின் சக்தியையும், ஆளப்படுவோரின் சக்தியையும் ஒன்றாக இணைப்பதே ஆங்கில அரசியலின் அடிப்படைக் கொள்கையாகும். இங்கிலாந்தில் இந்தக் கொள்கை எதேச்சாதிகாரக் கொள்கையோடு மிக நீண்ட நாட்களாகக் கடும்போர் புரிந்து வருகிறது. அத்தகைய போராட்டத்தின் வரலாறு நம்மிடமிருந்து மறைக்கப்படவில்லை. அரசாங்கப் பள்ளிக்கூடங்களிலேயே இதை நாம் கற்றுக்கொள்ள முடிகிறது. அதே பள்ளிக்கூடங்களில் நாம் பரீட்சை தேறுகின்றோம் ஆதலால் இதனை நம்மிடத்திலிருந்து போக்கிவிட முடியாது. இந்த மண்ணில்தான் காங்கிரஸ் போன்ற நம்முடைய அரசியல் நிறுவனங்கள் வேரூன்றியுள்ளன.

ஐரோப்பிய விஞ்ஞானத்தை நாம் கற்றுக்கொள்ளக் கூடிய உரிமை எப்படி அந்த விஞ்ஞானத்தின் இயல்பிலேயே அமைந்திருக்கிறதோ, அதேபோல ஆங்கில அரசியலை நாம் அறிந்துகொள்வதற்குரிய இயல்பை அந்த அரசியலே பெற்றிருக்கிறது. ஒரு குறுகிய அளவு எண்ணிக்கையுள்ள ஆங்கிலேயர்கள், இந்திய மாணவர்கள் விஞ்ஞானத்தைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பைப் பெறக் கூடாது என்று சொல்லலாம். ஆனால், விஞ்ஞானமே தன்னுடைய பலத்த குரலில், எந்தச் சாதி நிறம் உடையவர்களாயினும் அனைவரும் தன்னைக் கற்று வலுவடையலாம் என்று சொல்லி, அந்த ஆங்கிலேயர்களை அவமானத்திற் குள்ளாக்குகிறது. அதே போல ஒரு சிறு எண்ணிக்கையுள்ள ஆங்கில அரசியல் வாதிகள் அல்லது அவர்களில் பெரும்பாலோர்கூட இந்தியா சுயாட்சி அடைவதற்குப் பல்வேறு தடைகளை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லலாம். ஆனால் ஆங்கில அரசியல், அவர்கள் கூறும் புத்திமதிகளை உதறியெறிந்து ஒவ்வொரு இந்தியனும் அவனுடைய நிறம், சாதி என்பவை பற்றிக் கவலைப்படாமல் இந்திய அரசியலில் அவன் உரிமையைக் கோருமாறு உபதேசிக்கிறது.

அறிவுத் துறையிலும், ஆன்மீகத் துறையிலும் சூத்திரனுக்கு[15] எவ்விதமான உரிமையும் இல்லையென்று பழங்கால இந்தியாவில் எப்படிப் பிராமணன் கூறினானோ, அதேபோல ஆங்கில அரசியல் நிறுவனங்களில் பங்கு கொள்வதற்கு நமக்கு உரிமையில்லை யென்று கடுமையாக எச்சரிக்கப்படலாம். அடியிலிருந்து நுனி வரையில் சூத்திரனுடைய மனத்தையும் உடம்பையும் ஒடிப்பதற்காகவே, பிராமணன் வலுவான பிரிவினைச் சட்டங்களை வரன்முறையாகச் செய்திருக்கிறான். ஒரு மனிதனுடைய செயல்கள், ஒரு மரத்திலுள்ள கிளைகள் போலாகும். மரத்தினுடைய வேர்

போன்றுள்ள அறிவு அழியுமாறு செய்தால் கிளைகள் தாமே பட்டுப் போகும். சூத்திரனுடைய வேர்களை வெட்டுவதாகிய எளிய செயலைப் பிராமணன் செய்து முடித்த பிறகு, சூத்திரனுடைய தலை, தானே பிராமணனுடைய பாதங்களில் வந்து விழுந்தது. ஆனால், சுதந்திரத்திற்குத் தலைமை வாயிலாகிய அறிவு வாயிலை ஆங்கிலேயர் கள் மூடிவிடவில்லை. பல ஆங்கிலேய அதிகாரிகள் இவ்வாறு செய்த தற்கு வருந்துவதையும், கல்வித் துறையில் இவ்வளவு வேகமாக முன்னேறுமல் தடுக்கவேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள் என்பதையும் நான் அறிவேன். ஆனால் ஒருவனுடைய சுயநலத் திற்காக அவனுடைய மனிதப் பண்பாட்டைப் பலியிடுதல் என்பது தற்கொலைக் கொப்பாகும் என்பதை அவர்கள் முற்றிலும் மறுக்க முடியாது.

சுயாட்சிக்காகச் செய்யப்பெறும் நம்முடைய நியாயமான கோரிக்கைகளைக் கட்டாயம் புரிந்துக் கொள்ளக்கூடிய மன நிலையை ஆங்கிலேயன் இயல்பாகப் பெற்றுள்ளான் என்ற கருத்தை நாம் வலுவாக நம்பி, அந்த நம்பிக்கையில் நிலைக்கக் கூடுமேயானால், அப்பொழுது எல்லையற்ற துன்பங்களைச் சகிக்கவும் பல்வேறு தியாகங்களைச் செய்யவும் அவற்றின் பயனாக நம்முடைய கருத்தை நிறைவேற்றிக் கொள்ளவும் நம்மால் முடியும். இதற்கு மாருக, எல்லாவற்றையும் தலைவனின் மாற்ற முடியாத உறுதியினிடத்தில் விட்டுவிடும் நம்முடைய வாழ்வையே மேற்கொள்ளுவோமேயானால் அதனால் ஏற்படும் ஆழ்ந்த ஏமாற்றம் இரண்டு வழிகளில் வெளிப்படும். அவையாவன :—மூலைகளிலும், முடுக்குகளிலும் சதிக் கும்பல்கள் தோன்றித் திடீரென்று வெளிப் படும் புரட்சி இயக்கங்களாக மாற முடியும். அல்லது ஒரு குறிப் பிட்ட வைஸ்ராய் நல்லவர் என்ருே கெட்டவர் என்ருே ரகசியமாக ஒருவருக் கொருவர் பேசிக் கொள்வதிலும், குறிப்பிட்ட ஒருவர் வைஸ்ராயின் நிறைவேற்றக் குழுவில் உறுப்பினராக இருக்கின்ற வரையில் இந்தியாவுக்கு எந்த நன்மையும் விளையாது என்று பேசிக் கொள்வதிலும், மிஸ்டர் மார்லி இந்தியாவுக்கு ராஜ்யக் காரியதரிசி யாக (Secretary of State for India) வரப் போகின்ற நாளே நன்னாள் என்று பேசிக் கொள்வதிலும் மற்றும் இது போன்ற பயனற்ற பேச்சுக்களிலும் ஏமாற்றம் வெளிப்படும். சுருங்கக் கூறுமிடத்து இந்த ஏமாற்றம், நம்முடைய சக்தியை வீணடித்து அதனைப் பூமிக்கு அடியில் தள்ளவோ அல்லது பயனற்ற பேச்சுக் களில் பொழுதைக் கழிக்கவோ செய்துவிடும்.

என்றாலும் மானிடத்தின் மேல் எனக்குள்ள நம்பிக்கையை நான் இழக்க மாட்டேன். அன்றியும், ஆங்கில அரசியலில் அதிகாரத்தைவிட ஒழுக்கத்திற்கு அதிக இடமுண்டு என்பதையும் நம்புவேன். அன்றாடம் இவற்றுக்கு எதிராக எவ்வளவுதான் சான்றுகள் கிடைத்த போதிலும் ஆங்கிலேயர்கள் தன்னலம், அதிகார வெறி, பேராசை, துரோகம், கோழைத்தனம், கர்வம் ஆகியவற்றுக்கு எவ்வளவுதான் அதிகமாக இடம் கொடுத்தாலும், என்னுடைய நம்பிக்கை மட்டும் தளராது. ஆங்கிலேயர்களிடத்திலுள்ள இக் குற்றங்கள் நம்மை ஏன் வருத்துகின்றன வென்றால், அதே குற்றங்கள் நம்மிடம் இருப்பதாலும், எளிதாக அச்சுறுத்தப்பட்டு, அதைவிட எளிதாக ஆசைக் குட்படுத்தப்படுவதாலும் நம்முடைய இருதயத்தில் பொறாமை, வெறுப்பு, அவ நம்பிக்கை ஆகியவை நிறைந்து இருப்பதாலுமே இவை நம்மை வருத்துகின்றன. ஆனால், நாம் வீரர்களாகவும், பெரியவர்களாகவும், பெருந் தன்மை, நற் பண்பு, நம்பிக்கை ஆகியவற்றைப் பெற்றவர்களாக வும்இருந்து, நம்முடைய பகைவர்களிடத்தில் காணப்படுகின்ற பெருந்தன்மையையும் பெற்றிருந்தால்தான் உலகியல் முறைகள் எல்லாவற்றிலும், மனப் பண்பு முறையிலுங்கூட அவர்களை நாம் வெல்ல முடியும். நம்முடைய பகைவர்களின் குறைகள் காரணமாக நமக்கு எவ்வளவு புண்கள் ஏற்பட்டிருந்தாலும் இந்த வெற்றியை அடைய முடியும். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சிறப்புகளைக் குறைத்து மதித்து, அவர்களுடைய குறைகளுக்கு அதிக மதிப்பை நாம் கொடுப்பதற்குக் காரணம் நம்முடைய கோழைத்தனம்தான். ஒரு கொடுக்கல் வாங்கலுக்கு இரண்டு கட்சிகள் இருக்கும்பொழுது அந்த இருவருடைய பலமும் சேர்வதுதான் வெற்றிக்கு வழியாகிறது. பிராமணனுடைய அதிகாரத்தை அடிபணிந்து ஏற்றுக் கொண்டதன் மூலம் சூத்திரன் பிராமணனுடைய வீழ்ச்சிக்கு ஆழமான குழியைத் தோண்டி விட்டான். வலிமையுடையவர்களுக்கு எதிரே வலிமை யற்றவர்கள்கூடப் பலமான எதிரிகளாக ஆகி விடுகிறார்கள். அதுபோல வலிமை யற்றவர்களின் எதிரேகூட வலிமை யுடையவர்கள் பலமான எதிரிகளாக ஆகி விடுகிறார்கள்.

அநியாயத்தை எதிர்த்துச் செய்யப்படும் போராட்டத்தில் கேவலம் மிருக பலம் மட்டு மல்லாமல் கடமை யுணர்ச்சியில் தோன்றுகின்ற நீதியின் சக்தியும் பயன்படுகிறது. என்றும் தீராத போலீசாரின் அட்டுழியத்திலிருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்கு மனத்திடமும், உடல் வலிமையும் உடைய மக்கள் பலர் தேவை.

அவர்கள் ஓயாது இந்தக் கடமையை எடுத்துக் காட்டி, அந்த எடுத்துக் காட்டுவதற்காகத் தங்கள் உயிரையும் விட நேரிடும். மிகத் தாழ்ந்த ஒரு போலீஸ் அதிகாரிகூடச் சாதாரண மனிதன் என்ற நிலையில் அல்லாமல் ஒரு பெரிய அதிகாரி என்ற நிலையில் இருக்கிறன். ஆகவே, ஒரு சாதாரணப் போலீஸ் ஒற்றன் சட்ட மன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டால் அவனைக் காப்பாற்றுவதற் காக ஆயிரக் கணக்கான ரூபாய்களை அரசாங்கம் செலவழிக்கத் தயாராக இருக்கிறது. உருவக மூலமாகக் கூற வேண்டுமானல் போலீஸ் ஒற்றன், நீதி மன்ற வழக்கு என்ற கடலைத் தாண்ட அரசாங்கம் என்ற நீராவிக் கப்பலைப் பயன்படுத்த முடியும். ஆனல், ஏழை வழக்காளி ஒருவன், பிடித்துக்கொண்டு நீந்துவதற்கு ஒரு சுரைக் குடுக்கைகூட இல்லாமல், தன் பலத்தைக் கொண்டே இந்தக் கடலை நீந்த வேண்டியிருக்கிறது. குற்ற மிழைக்கப்பட்ட மனிதனை நோக்கி அரசாங்கம், "நண்பனே, உன்னை அடித்துப் போட்டு விட்டார்கள் என்ருல் நீ உன்னுடைய மறுப்பைத் தெரிவிக் காமல் இறந்து போவது நல்லது. ஏனென்ருல் நீ இறந்து விடுவதன் மூலம் மறுபடியும் உன்னை அடிக்க முடியாதல்லவா?" என்று சொல்வது போல் இருக்கிறது. பெருமிதம்! இந்தப் பெருமிதம் என்னும் பெண் நமக்கு ஏற்கனவே பழக்கமானவள் தான். கவி கங்கனின் கவிதையில் 'சண்டி' என்ற பாத்திரமாக வும், பெகுலா கவிதைகளில்[16] 'மனசா' என்ற பாத்திரமாகவும் இவளை முன்னரே சந்தித்திருக்கிறேம். அவள், நியாயம் நடு நிலைமை என்பவற்றுக்கு அப்பாற்பட்டு இருப்பதோடு யாருக்கும் எதற்கும் மேம்பட்டு இருத்தலின், நம்முடைய உடம்பிலுள்ள எலும்புகள் நொறுக்கப்படாமல் இருக்க வேண்டுமென்ருல் இந்தப் பெருமிதம் என்னும் பெண்ணைப் பூஜிப்போமாக. ஆகவே நாம் அனைவரும் சேர்ந்து இந்தப் பாடலைப் பஜனை செய்வோமாக:—

"அரசாங்கத்தில் பெருமிதம் என்னும் பெயருடன்
வீற்றிருக்கும் தேவதையே, உனக்கு எங்கள்
வணக்கம், எங்கள் வணக்கம், எங்கள் வணக்கம்.

ஆனல், இது அறியாமையின்பாற்பட்டது; மாயையின்பாற் பட்டது. புறக் கண்ணுக்கு இவ்வாறு தோற்றினுலுங்கூட இதில் உண்மை யில்லை. அரசாங்கம், மக்களின் பிரதிநிதியாகவின் அரசாங்க அதிகாரிகள் அனைவரையும் ஒன்று சேர்த்தால்கூட அவர்கள் அனைவரையும்விட அரசாங்கம் மேம்பட்டதாகும். பிரிட்டிஷார்களின் உண்மையான சக்தி இந்த உண்மையின்

மேலேயே கட்டப்பெற்றுள்ளது. அவர்களுடைய சக்தியே நம்முடைய சக்தியாகும். உண்மையை நாம் இழந்தால் அவர்களும் இழந்து விடுவார்கள். பிரிட்டிஷ் அரசியலில் உள்ள நீதியை நம்பாமல் இருக்கக்கூடிய அளவுக்கு நாம் கோழைகளாக இருந்தால், பிறகு போலீசார் கொடுமைப்படுத்துவார்கள்; மாஜிஸ்ட்டிரேட்டுகள் நியாயம் வழங்க முடியாமல் திண்டாடுவார்கள். பெருமிதம் என்ற அந்தத் தேவதை மானிடப் பலி கேட்டுக் கொண்டேயிருப்பாள்; வரலாறு முழுவதிலும் காணப்படுகின்ற ஆங்கிலேய வாழ்க்கை முறையைக் கேலிக் கூத்து என்று சொல்லும்படி இந்தியாவில் பிரிட்டிஷாரின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டேயிருக்கும்.

இப்பொழுது நான் கூறியவற்றுக்கு விடையாகக் கீழ்க்கண்டவை இருக்கக்கூடும் :—

> "அரசியலில் ஆற்றலைக் காட்டிலும் நீதிதான் பெரிய உண்மை என்ற கொள்கை கொள்கையளவில் இருக்கலாமே தவிர, நடைமுறையில் ஆபத்தானதாகும். ஆகவே ரகசியமான சதியாலோசனை என்ற கடுமையான வழியை மேற்கொள்வது, அல்லது பத்திரிகைச் சட்டத்தின் பற்களையும், நகங்களையும் எதிர்த்துப் போராடாமல் அமைதியாக இருக்கும் எளிமையான வழியை மேற்கொள்வது என்ற இரண்டு வழிகளே நமக்கு உள்ளன."

"உண்மையைக் கூறுமிடத்துத் தொல்லைகள் நிரம்ப இருக்கின்றன. என்றாலும் கொள்கையளவில் உண்மை யென்று நாம் அறிந்துகொண்டிருக்கின்ற ஒன்றை நடைமுறையிலும் உண்மை என்று நிரூபிக்கவேண்டும்."

"நம்முடைய மக்களே அச்சம், பேராசை என்ற இரண்டின் காரணமாக நமக்கு எதிராகச் சாட்சியம் கூறுவார்கள்."

"உண்மைதான்! ஆனாலும் உண்மையின் வழியைக் கடைப்பிடிக்க வேண்டும்."

"புகழ் அல்லது வெகுமானம் என்ற இரண்டினாலும் ஆசையூட்டப்பெற்று நம்முடைய மக்களே முதுகுப் புறத்தில் நம்மை குத்தி விடுவார்கள்."

"அதுவும் உண்மைதான்! என்றாலும் உண்மையைக் கடைப்பிடித்து ஒழுகவேண்டும்."

"உண்மையிலேயே அவ்வளவு தூரம் எதிர்பார்க்க் முடியுமா?"

ஆம். அவ்வளவு தூரம் எதிர்பார்த்தே யாக வேண்டும். ஒரு அணு அளவும் குறையக் கூடாது. நம்முடைய தேவைகளை அரசாங்கத்திற்குத் தெரிவிப்போம். ஆனால் அதைவிடப் பெரிதாகவுள்ள தேவைகளை நாமே நிறைவேற்றினலொழிய, அரசாங்கம் நம் தேவைகளைப் பூர்த்திச் செய்யாது. மனிதர்கள் பல மற்றவர்கள் என்பதையும், அவர்களில் பெரும்பாலோர் உண்மையிலேயே வலு விழந்து இருக்கிறார்கள் என்பதையும் நாம் அறிவோம். ஆனால் உலகத்தின் ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு நாளும் மனித சமுதாயம் முழுவதிலும் பூரணத்துவ முள்ள மனிதர்கள் பிறக்கத்தான் செய்கிறார்கள். இத்தகைய மனிதர்கள் உலகத்தின் கேடுகள் அனைத்தையும் தங்களுடைய முதுகில் தாங்கிச் செல்கிறார்கள். அவர்கள் இதனைத் தாங்குவதோடுமட்டு மல்லாமல் உலகம் முழுவதும் பின்பற்றக்கூடிய ஒரு பாதையைத் தங்கள் கைகளாலேயே அமைக்கிறார்கள். எவ்வளவு எதிர்ப்புத் தோன்றியபோதிலும், மானிடத்தின் மேல் அவர்களுக்குள்ள நம்பிக்கை அசைக்க முடியாததாக இருக்கிறது. எல்லை யற்ற ஏமாற்றமாகிய காரிருளில் கூட அவர்கள் விழித்திருந்து, கதிரவனின் தோற்றத்தைக் கிழக்குத் திசையில் எதிர்பார்க்கிறார்கள். அவ நம்பிக்கை யுடையவர்கள் பலரும்கூடிக் கூச்சலிட்டும்கூட அவர்கள் பெரும் குரலில் "வளையத்தின் மத்தியில் தோன்றும் சிறு ஒளிகூட, வளையத்தின் விளிம்பிலுள்ள பேரிருளைப் போக்கிவிடும்"[18] என்று கூறுகிறார்கள். ஆகவே அச்சத்தின் காரணமாக நாம் தலைவணங்க மாட்டோம். அரசியலில் நீதியை எங்கே கண்டாலும் அதற்குச் சிரஞ் சாய்த்து வணக்கம் செலுத்துவோம். நற் பண்புகளை நம்புகிறோம் ஆதலால் அதனைத் தொடர்வதற்காக நம்முடைய உயிரையும் தியாகம் செய்யத் தயாராவோம்.

150 ஆண்டுகள் பிரிட்டிஷாரின் அரசாட்சி நடைபெற்ற பிறகு, சென்னை அரசாங்கம் செய்கின்ற ஒரு கொடுமையை நினைத்து வங்காளி மக்கள் ஒரு பெரு மூச்சுக்கூட விடமுடியாது என்ற உண்மை அறிவிக்கப்பெறுகிறது. இதுவரையில் பிரிட்டிஷ் ஆட்சியில் சென்னை, வங்காளம், பஞ்சாப், மகாராஷ்டிரம் இன்னும் இந்திய மாகாணங்கள் அனைத்தும், ஆக்க முறையிலும் பிற முறையிலும், ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன என்றும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மணி மகுடத்திலுள்ள கோஹினூர் வைரம் போன்றது "இந்த

ஒற்றுமை என்றும் நமக்குச் சொல்லப்பெற்றது. மேனாடுகளில் இந்த விநாடியில் பெல்ஜியம், பிரான்ஸ் ஆகிய இரு நாடுகளின் கவலைகளைத் தங்களுடைய கவலைகள் என்றே ஆங்கிலேயர்கள் கருதுகிறார்கள். அவ்வாறு கருதுவதோடுமட்டு மல்லாமல் பெல்ஜியம், பிரான்ஸ் நாடுகளில் உள்ள யுத்த களங்களில் தங்களுடைய உயிரைச் சமர்ப்பிப்பதற்காக ஆங்கிலேயப் போர்வீரர்கள் தண்டு எடுத்துச் செல்கிறார்கள். இத்தகைய சந்தர்ப்பத்தில், கீழை நாடுகளில், சென்னை மக்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி, துயரம், இன்பம், துன்பம் ஆகியவற்றில் வங்காளிகள் கவனம் செலுத்தக்கூடாதென்ற கொள்கை நின்று நிலைபெற முடியுமா? இப்படிப்பட்ட ஓர் ஆணைக்கு நாம் அடக்கத்துடன் அடி பணிய வேண்டுமா? எவ்வளவுதான் உரக்கக் கூவினாலும்கூட இத்தகைய ஓர் ஆணையின் பின்னே இழைக்கப்பட்ட கொடுமைகளால் ஏற்பட்ட அவமானம் இருக்கிறதென்பதை நாம் அறிவோம். ஆகவே ரகசியத்தில் ஏற்பட்ட இந்த அவமானத்திற்கு ஏற்ற முறையில் நம்முடைய ஆண்மை சென்று தாக்க வேண்டும். ஆங்கிலேயர்களும் இந்தியாவும் உண்மையின் மூலமாகவே பிணைக்கப்பெற்றுள்ளனர். ஐரோப்பிய நாகரிகத்தின் பொறுப்புக்களை ஏந்திக்கொண்டுதான் அவர்கள் கீழை நாட்டுக்கு வந்திருக்கிறார்கள். இந்தப் பொறுப்பை நாமும் கௌரவிப்போம். அவ்வாறு கௌரவிப்பதன் மூலம், இந்தியாவை வெட்டிக் கொத்திக் கொல்வதற்காகத்தான் இவ்வளவு நீண்ட பிரயாணத்தை மேற்கொண்டோம் என்று ஆங்கிலேயர்கள் சொல்வதற்கு இடங் கொடாமல் இருப்போமாக.

ஒரு தேசம் சம்பாதிக்கின்ற செல்வம் உண்மையிலேயே பிற தேசங்களோடு பகிர்ந்துகொள்ள வேண்டிய ஒன்றாகும். இதனை விட்டுவிட்டு எந்த ஒரு தேசமாவது அந்தச் செல்வம் முழுவதையும் தானே வைத்துக்கொண்டால் அந்தச் செல்வம் அந்தத் தேசத்துக்கேகூடப் பயன்படாமல் போய்விடும். விஞ்ஞானம், தேசீய மனப்பான்மை, ஜனநாயகம் என்பவைதாம் ஐரோப்பாவின் முக்கியமான செல்வங்கள். இந்தியாவுக்கு இந்தச் செல்வங்களைப் பகிர்ந்து கொடுக்க வேண்டுமென்பதுதான், பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஆண்டவன் இட்ட மீற முடியாத கட்டளை. நம்மை ஆள்பவர்களை நோக்கி நாம்கூட இதனை அடிக்கடி நினைவூட்ட வேண்டும்.

ஆங்கிலேயர்கள் தங்களுடைய வரலாற்றை எடுத்துக் காட்டி, "ஜனநாயகத்தைத் தோற்றுவிப்பதற்கு நாங்கள் பெரு முயற்சி செய்யவேண்டியிருந்தது. அதனுடைய பெருமையை அறிவதற்

குப் பல்வேறு புரட்சிகளை மேற்கொள்ளவேண்டி யிருந்தது '' என்று கூறலாம். நானும் இதனை ஒப்புக் கொள்கிறேன். உலகத்தி லுள்ள முன்னேற்றமான தேசங்கள் அனைத்தும் உண்மையின் பல்வேறு பகுதிகளைக் கண்டுபிடித்துள்ளன. இந்த ஒவ்வொரு கண்டுபிடிப்பின் அடிப்படையிலும் பல பிழைகளும், எல்லை யற்ற துன்பங்களும் பலமான துயரங்களும் இருக்கின்றன. ஆனால் இந்தக் கண்டுபிடிப்பின் பயன்களை அனுபவிக்கின்ற தேசங்கள் அனைத்துமே இந்தப் பிழைகள், துன்பங்கள், துயரங்கள் ஆகிய வற்றையும் அனுபவிக்க வேண்டும் என்ற தேவையில்லை. வங்காளி, மாணுக்கர்கள் அமெரிக்காவுக்குச் சென்று இரயில் இன்ஜின் செய் யும் விஞ்ஞானத்தைச் சித்தாந்த முறையிலும், நடைமுறையிலும் கற்றுக்கொள்கிருர்கள். அவர்கள் மிகச் சில ஆண்டுகளுக்குள் ளாக இதனைச் செய்து முடிக்கிருர்கள். இதை விட்டுவிட்டு, நீராவி யந்திர வளர்ச்சி விஞ்ஞானத்தைக் கெட்டில் கொதிப்பதிலிருந்து படிப்படியாக அவர்கள் கற்றுக்கொள்ள நேரிட்டால், 'மெது சூலாவைப்' போலப் பன்னூறு ஆண்டுகளுக்கு மேலாக அவர்கள் வாழ்ந்தால்தான் முடியும். ஐரோப்பிய விஞ்ஞானம், ஐரோப்பிய மண்ணில் அந்தச் சூரியன், அந்த மழை, அந்தக் காற்று, அந்தப் புயல் ஆகியவற்றுடன் சேர்ந்து பல யுகங்களாக வளர்ச்சி யடைந்தது என்ருலும், அதனை ஜப்பானில் பெயர்த்து நடட் பொழுது அது வளர்ச்சி யடைவதற்கு இவ்வளவு காலம் எடுத்துக் கொள்ளவில்லை.

நம்முடைய நடத்தையிலும் பண்பாட்டிலும் அழுத்தம் இல்லை யென்பது உண்மையானல் அதுவே நமக்கு அதிகப்படியான அதி காரம் வேண்டு மென்பதற்குச் சிறந்த காரணமாகும். ஒரு குறிப் பிட்ட மனிதனிடத்தில் ஒன்றும் இல்லை யென்ற எண்ணத்துடன் தொடங்கினல் அவனிடத்தில் என்ன இருக்கிற தென்பதை நீங்கள் கடைசி வரையில் காணமுடியாது. பிரிட்டிஷார் நமக்குச் சுயாட்சி வழங்குவதன் மூலம் நமமிடையே மறைந்து கிடக்கின்ற புதிய சக்தி களைக் காணுமாறு வழி வகுக்க முடியும். சுயாட்சி வழங்காமல் விட்டு வைத்து அதன்மூலம் அகில உலகமும் கண்டு சிரிக்கின்ற நிலையில் நம்மைச் செய்துவிட்டால், நம்முடைய தலையாய பகைவர்கள் அவர்களே என்பதை நிரூபித்து விடுவார்கள். எப்பக்கம் திரும்பினு லும் ஓரிரு அடிகள் எடுத்து வைத்தாலும் முட்டிக்கொள்ளக்கூடிய அல்லது இடித்துக்கொள்ளக்கூடிய சிறிய அறையில் வைத்துப் பூட்டப்பெற்ற ஒரு மனிதன் வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளிலும்

தன்னுடைய திறத்தை எடுத்துக்காட்ட வேண்டு மென்று விரும்புவது இயலாத காரியம்.

6

வரலாற்றின் ஒரு புதிய நாளில் பொழுது விடியும் பொழுது கிழக்கில் புறப்படுகின்ற சூரியன் தன்னுடைய ஒளியை மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய திசைகளிலும்கூடப் பரப்புகிறுன். இந்த வளர்ச்சியின் அளவு ஒவ்வொரு முறையிலும் ஒரே ஒரு அங்குலம் முன்னேறுவதாக இருப்பின் எந்தத் தேசமும் அதனுடைய இலக்கைக் கற்பாந்த காலத்தில் கூட அடைய முடியாது. பிரிட்டிஷார்கள் நம்மை நோக்கி, சுதந்தரம் பெறுவதற்குத் தகுதியிருந்தாலொழிய எந்தத் தேசமும் சுதந்தரமாக இருக்கக் கூடாது என்று கூறுகிருர்கள். இது உண்மையாக இருக்குமேயானுல் எந்த ஒரு தேசமும் இன்று சுதந்தரமாக இருக்க முடியாது. அவர்களுடைய ஜனநாயகத்தைப் பற்றிப் பெருமையடித்துக் கொள்கிருர்கள். ஐரோப்பாவிலுள்ள பொதுமக்கள் பல்வேறு விதமான பெரிய குற்றங்களைச் செய்கிருர்கள் எனினும் அதனைப்பற்றி நான் பேச விரும்பவில்லை. இத்தகைய குற்றங்களை அவர்கள் செய்கின்ற வரையில் அவர்களுக்கு ஜனநாயக உரிமை இருக்கக்கூடா தென்று யாரேனும் ஒரு சர்வாதிகாரி கூறுவானேயானுல், அப்பொழுதும் கூட இந்தக் குற்றங்கள் இருந்தே தீரும். அன்றியும் இந்தக் குற்றங்களைப் போக்குவதற்குரிய இயல்பான ஒரே வழியும் அடைக்கப் பெற்றுவிடும்.

நம்முடைய சமுதாய வாழ்க்கையிலும், தனிப்பட்ட வாழ்க்கையிலும் காணப்படுகின்ற பல்வேறு குற்றங்களையும் நாம் மறைக்க விரும்பவில்லை; அப்படி விரும்பினுலும் அதில் வெற்றி பெறக் கூடாது. என்றுலும்கூட, சுயாட்சியை நாம் விரும்புகிறேம். என்னுடைய அறையில் நான்கு மூலைகளிலும் நான்கு விளக்குகள் எரிந்துகொண்டிருக்கும் பொழுது அதில் ஏதோ ஒரு விளக்குக் குறைந்த அளவில் எரிகிறது என்ற காரணத்திற்காக மற்றொரு விளக்கை ஏற்றும் உரிமை எனக்கு மறுக்கப்படக் கூடாது. இதில் முக்கியமானது எனனவென்றுல், எந்த ஒரு மூலையி லிருந்தாயினும் எந்த ஒரு விளக்கில் இருந்தாயினும் என்னுடைய விளக்கைப் பற்ற வைக்க வேண்டு மென்பதுதான். மானிட சமுதாயத்தின் மாபெரும் விளக்கு விழாவில்[10] எந்த ஒரு தேசமும் தன்னுடைய விளக்குகள் அனைத்தையும் ஏற்றியதாக இது வரைக் காணவில்லை என்றுலும், விளக்கு விழா நடந்து கொண்டேதான் இருக்கிறது. நம்முடைய விளக்குச்சில,காலத்திற்குமுன்பு அணைந்துபோனபடியால் இப்போது

இங்கிலாந்தின் விளக்கிலிருந்து அதை மறுபடியும் பற்ற வைக்க விரும்புகிறோம். இதனால் எவ்விதமான மனக் கசப்பும் ஏற்படப் போவதில்லை. இதனால் இங்கிலாந்தின் விளக்கு ஒளி குறைந்துவிடப் போவதில்லை. அதன் எதிராக அது திருவிழாவை இன்னும் ஒளியுடையதாக ஆக்கும்.

இன்னும் நம்பிக்கை கொள்வதற்குரிய காரணங்கள் இருந்து வருகின்றன. அக் காரணங்கள் பிரிட்டனிலும் நம்மிடத்தும் இருக்கின்றன. வங்காளத்திலுள்ள மக்களை நான் மரியாதையோடு போற்றுகிறேன். வங்காள இளைஞர்கள் கிழக் கோலம் என்ற முக மூடியைக் கடன் வாங்கிப் போட்டுக்கொண்டு எப்போதும் அறிஞர்கள்போல் காட்சியளிக்க வேண்டிய அவசியமில்லை. ஆங்கிலேய மக்களிலும் பெரிய ஆன்மாக்கள் சிலரை நான் அறிவேன். ஆங்கிலேய வரலாறு என்ற மரத்திலிருந்து பயன் தரும் பழங்கள் சிலவற்றை இந்தியாவுக்குக் கொணரவே அவர்கள் விரும்புகிறார்கள். நம்முடைய நாட்டிலும்கூட அரசாங்கத்தார் கொடுக்கும் தண்டனைகளையும், நம்முடைய மக்கள் தருகின்ற ஏச்சுக்களையும், பேச்சுக்களையும் ஏற்றுக் கொண்டு தோல்வியைக் கண்டு அஞ்சாமல் இருக்கின்ற ஆண்மையோடு கூடிய மனத் திடம் வாய்ந்த மக்கள் பலர் தேவை.

என்றும் இளையதும், எப்பொழுதும் விழித் திருப்பதுமாகிய இந்தியா என்ற தெய்வம் நம்முடைய ஆன்மாவை அறை கூவி அழைக்கின்றனது. அளத்தற் கரியதாய், வெல்ல முடியாததாய், உள்ள நம் ஆன்மா நித்தியத்துவத்திற்கு, மாற்ற முடியாத உரிமையைப் பெற்றுள்ளது. இப்பொழுது அதனுடைய முகம் புழுதியில் கிடந்து மங்கினாலும், குருட்டுத்தனமான பழக்க வழக்கங்கள், கண்மூடித்தனமான அரசியல் அதிகாரங்கள் ஆகியவற்றின் கீழ் அது கிடந்து நசுக்குண்டாலும் இந்த உரிமை என்றும் அதனிடம் உள்ளது. நமக்கு கொடுக்கும் அடியின் மூலமும் வழங்கும் அருளின் மூலமும் தன்னை உணருமாறு இந்தியத் தெய்வம் விரும்பி அழைக்கின்றது.

இன்று, மனிதனுடைய உலகம் எத்துணைப் பெரியது என்பதையும் மனிதனுடைய வரலாறு எவ்வளவு உயர்ந்தது என்பதையும் நாம் தெளிவாகக் காண்கிறோம். மனிதனிடத்தில் "பூமன்" என்று சொல்லப்படும் பரமாத்மாவை இன்று நாம் காண்கிறோம். சக்தி என்ற வண்டியில் ஏறி முடிவின்மை என்ற ராஜ பாட்டையில் அவன் செல்கிறான். நோய், துன்பம், ஆபத்து, மரணம் ஆகியவை அவனை ஒன்றும் செய்ய இயலாது. அனைத் துலக இயற்கைச் சக்தி

அவனுடைய கழுத்தைச் சுற்றித் தன்னுடைய மாலையை அணிவித்துள்ளது. மெய்ஞ் ஞானத்தின் ஒளி அவனுடைய நெற்றியில் பரவுகிறது. நீண்டு கிடக்கின்ற எதிர்காலம்கூட அவனை மகிழ்ச்சியோடு வரவேற்கின்றது. அந்த பூமன்தான் என்னுடைய இருதயத்தில் கொலு வீற்றிருக்க விரும்புகிறான். என் இதயத்தில் மட்டுமல்லாமல், இளமையிலேயே முதுமை யெய்திக் களைப்புற்றும், தன் னம்பிக்கை யின்மையினால் கோழையாகியும், பொய்களின் பெரும் பாரம் தாங்காமல் முதுகு வளைந்தும் இருக்கின்ற எல்லா மனிதர்களுடைய இருதயத்திலும் அதே பூமன் கொலு வீற்றிருக்க விரும்புகிறான்.

நம்மிடமுள்ள அற்பத்தனமான பொறாமை, அற்பத்தனமான விரோதம் ஆகியவற்றின் காரணமாக நமக்குள் சண்டை போடுவதற்கு இப்போது காலம் இல்லை. சிறு அதிகாரங்கள், சிறு கௌரவங்கள் ஆகியவற்றைப் பெறுவதற்குப் பிச்சைக்காரர்கள் போல் நாம் அடித்துக்கொண் டிருக்க இப்போது நேரம் இல்லை. தன்னுடைய சிறிய வீட்டினுள் இருளில் இருந்துகொண்டு கையையும் காலையும் ஆட்டினாலும், உலகத்தார் கண்ணெதிரே அவமானப்படுகின்ற அந்தப் பொய்யான கர்வத்தை வைத்துக் கொண்டு நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ள இப்போது நேரமில்லை. பிறரைப்பற்றித் தவறான கருத்துக்களைப் பரப்பி அதனால் பொழுது போக்கும் இயல்பு, பல மற்றவர்களின் பொழுதுபோக்காகும்; அதனைச் செய்வதன் மூலம் சிறு திருப்தி யடைய நாம் விரும்பக் கூடாது. நெடுங் காலமாக நம்மிடம் சேர்ந்துள்ள குற்றங்கள் ஒன்று சேர்த்து அழுத்துகின்ற காரணத்தால் நம்முடைய ஆண்மை நசுங்கிப் பகுத்தறிவும் தொழிற்படாமல் போய்விட்டது. அந்தக் குற்றங்களை மேற்கொண்டதற்காக நம்மை நாமே குற்றம் கூறிக்கொள்ள வேண்டிய நாள் இது. பல நூற்றாண்டுகளாக நம்மிடம் சேர்ந்துள்ள குப்பை, மலை போல் குவிந்து கிடத்தலின், நம்முடைய சக்தி முழுவதையும் பயன் படுத்திக் கூட்டித் தள்ளவேண்டும். நம்முடைய முன்னேற்றத்தைத் தடை செய்கின்ற மாபெரும் தடை நமக்குப் பின்னேதான் இருக்கின்றது. நம்முடைய பழமை, நம்முடைய எதிர் காலத்தில் தன்னுடைய அம்பை எய்திருக்கின்றது. நம்முடைய பழமை கிளப்பிய தூசியும், சருகுகளும் புதிய யுகத்தின் காலைக் கதிரவனை நாம் காண வொட்டாமல் தடை செய்கின்றன. புதிதாக விழிப்படைந்த நம்முடைய இளமையின் பலத்தை யெல்லாம் அது கொஞ்சங் கொஞ்சமாக உறிஞ்சுகிறது.

கொஞ்சமும் கருணை காட்டாமல் நம்முடைய பழமையிலிருந்து நாம் பிரிந்துவிட வேண்டும். அன்றியும் உலகத்தில் ஓயாத விழிப் போடும், ஓயாத உயிர்த் துடிப்போடும், ஓயாத முன்னேற்ற சக்தி யோடும் ஓயாமல் முனையும் மக்களின் வரிசையில் நாமும் நிற்க வேண்டும். இத்தகைய ஆண்களும் பெண்களும் இந்த அண்டத் தின் சிற்பியாகிய விஸ்வகர்மாவின் வலக் கை போன்றவர்கள் ஆவார்கள். சலியா உழைப்புடன் உண்மையை நாடி அவர்கள் மேற்கொள்ளும் பாதை அறிவின் ஒளி பெற்று விளங்குகின்ற காரணத்தால், ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு நகரமும் அவர்க ளுடைய வெற்றியை எதிரொலிக்கின்றது.

ஆடி மாதத்து அடை (ஸ்ரவண[20]) மழையைப் போலத் துன்பங் கள் நம் மேல் பொழிந்து கொண்டேயிருந்தமையின் அதன் பயனாக நம்முள்ளே கருமையான ஓர் அசுத்தம் நிரம்பிவிட்டது. அதனைப் போக்க வேண்டும். அதனை எவ்வாறு போக்குவது? துன்பங் களை எல்லாம் யாக குண்ட நெருப்பாக ஏற்றுக்கொள்வோமே யானால், நம்முடைய குற்றங்கள், அறியாமைகள், இயக்க மின்மை ஆகியவற்றைப் பொசுக்கும் நெருப்பாக ஏற்றுக்கொண்டால் அது இயலும். எனவே முழு முதற் பொருளை விரும்பி யழைத்து அவனுக்கு எதிரே நம்முடைய அற்பத்தனத்தைப் படைக்காமல், நித்தியத்துவம் பெற்று நம்முள்ளே இருக்கின்ற ஜீவாத்மாவைப் படைப்போமாக. நம்முடைய ஜீவ ஆன்மாவைப் பரம ஆன்மா தன்னுடைய சிம்மாசனத்தின் வலப் புறத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று நாம் பிரார்த்திப்போமாக. தாழ்மை அவமானப் படுத்தப்பட்டு, அடிமைத்தனம் அழிக்கப்பட்டு, முட்டாள்தனம் முறியடிக்கப்பட்டு, இவை யனைத்தும் நம்மை விட்டு நீங்குமாறு செய்யப்படுவதாக.

—1917.

# 10. இந்தியப் பண்பாட்டு நிலையம்

தனக்கென ஒரு மனம் இருக்கிற தென்பதையும், அதற்குத் தோன்றிய முறையில் வாழ்க்கைப் பிரச்னைகளை ஆராய்ந்து, முடிவு காண மிகவும் கவலை எடுத்துக் கொள்கிற தென்பதையும், இந்தியா நிரூபித்துவிட்டது. கல்வித் துறையில், இந்த மனத்தை அதன் விருப்பப்படி, விருப்பமான வழியில் ஆராய்ச்சி செய்யுமாறு உதவி புரிவதே இந்தியாவின் இலட்சியம் ஆகும்.

இச் செயலை நிறைவேற்றுவதற்கு இந்தியாவின் மனம் ஒழுங்கு முறைப்படுத்தப்பெற்று, தன்னறிவு உள்ளதாகச் செய்யப்பெற வேண்டும். அப்பொழுதுதான், அதனுடைய ஆசிரியர்களிடத்திலிருந்து என்ன முறையில் கற்றுக் கொள்ள வேண்டுமோ, அந்த முறையில் கல்வியை அது ஏற்றுக் கொள்ளும். அப்பொழுதுதான், தனக்கேற்ற மதிப்பீட்டு அளவைகளால் அந்தக் கல்வியை ஆராய்ந்து, தன்னுடைய ஆக்க சக்திக்கு அக் கல்வியைப் பயன் படுத்திக்கொள்ள முடியும். கொடுப்பதற்கும் வாங்குவதற்கும் விரல்களை முதலில் குவிக்க வேண்டும். சிதறுண்டு கிடக்கிற மனங்களை ஒன்று சேர்த்துத் தொழிற்படும் செயலுக்குச் செலுத்தினுல், அந்த மனங்கள், ஏற்றுக் கொள்ளக் கூடிய சக்தியையும், ஆக்க சக்தியையும் நல்ல முறையில் பெறக் கூடும். அப்பொழுதுதான் வாழ்வு என்ற தண்ணீர், ஓட்டைகளின் வழியாகப் பூமியில் விழுந்து பயனற்றுப் போகாமல் இருக்கும்.

கல்வியில் மிக முக்கியமான பகுதி என்னவென்ருல், ஆக்கச் செயலில் ஈடுபடும் சூழ்நிலையே யாகும். அந்தச் சூழ்நிலையில்தான் அறிவின் துணைகொண்டு புதியன காணும் இயல்பு நல்ல வாய்ப்பைப் பெறும். போதித்தல் என்பது, பண்பாடாகிய ஊற்றிலிருந்து தானே வெளி வரும் தண்ணீர் போன்று தடை இல்லாமல் உடனே கொட்டுகின்ற இயல்புடன் வெளி வர வேண்டும். வாழ்ந்து, வளர்ந்து வருகின்ற மெய் யறிவின் பயனுகக் கல்வி என்பது கிடைக்கும் பொழுதுதான் இயற்கையானதாய், முழுத்தனமை பெற்றதாய் இருக்க முடியும்.

மேலும் நம்முடைய பொருளாதார அறிவியல், அழகியல், சமுதாய, ஆன்மீக முழு வாழ்க்கை என்பவையோடு நம்முடைய கல்வி ஓயாது தொடர்பு கொண்டிருக்க வேண்டும். சமுதாயத்தின் இருதய ஸ்தானத்தில் பல்வேறு வகையாலும் ஒத்துழைக்கின்ற பிணைப்புக்களோடு பொருந்தியதாய் நம்முடைய பள்ளிக்கூடங்கள் அமைய வேண்டும். ஏனென்ருல், உண்மையான கல்வி என்பது ஒவ்வொரு

வேளையிலும் எவ்வாறு நம்முடைய பயிற்சியும், அறிவும் சூழ்நிலை யோடு உயிர்த் தொடர்பு கொண்டிருக்கின்றன என்பதை உணர் வதே யாகும்.

II

இந்தியா முழுவதிலும், இன்றுள்ள கல்வி முறையைப் பற்றிப் பனிப் படலம் போன்ற ஒரு வெறுப்புத் தோன்றியுள்ளது. சமீப காலத்தில் இதில் பெரு மாற்றம் தேவை யென்பதை அறிவிக்கப் பல அறிகுறிகள் தோன்றியுள்ளன. நம்முடைய தேசீய மனப் பான்மையின் ஆழத்தில் உயிர்த் துடிப்புக் காணப்படுகிறது. அந்த உயிர்த் துடிப்பே, புதிய நிறுவனங்களை உண்டாக்கிப் புதிய சோதனை களை[1] மேற்கொள்ளுமாறு செய்கிறது. மனிதனுடைய விருப்பம் திடீரென்றும் வலிமையாகவும் தோன்றுவதால் இந்த விருப்பத்தின் மூல காரணம் எங்கே யென்று ஆராய்ந்து, அது எதனை உள்ளூர விரும்புகிறது என்பதையும் ஆராய்ந்து முடிவு செய்வது கடினமாக ஆகி விடுகிறது.

இன்று நாம் பெறுகின்ற கல்வி முறையும் அதில் தோய்ந் திருக்கின்ற நம் மனநிலையும் நம்முடைய பௌதீக உடம்பைப் போலப் பருப் பொருளாக இருத்தலின், அதில் மாற்றம் ஏற்படக் கூடுமென்று நம்மால் நினைக்க முடியவில்லை. நம்முடைய கற்பனை, அதனுடைய எல்லையைத் தாண்டிப் பறக்கத் துணிவதில்லை. அதனைப் புறத்தேயிருந்து கண்டு தீர்ப்புச் சொல்ல நம்மால் முடிவ தில்லை. நம்முடைய அறிவுவாழ்க்கைகூட இந்தக் கல்வி முறையின் பயனாகப்பெற்ற தாதலின், அதன் மேல் ஏற்பட்டுள்ள இயல்பான பற்றுக் காரணமாக, இந்தக் கல்வி முறையை வேறொன்றால் மாற்றி யமைக்க வேண்டுமென்று சொல்ல நமக்குத் தைரியமோ, விருப்பமோ வருவதில்லை.

என்றாலும் நம்முடைய மந்தத் தன்மையினுள்ளேகூட ஒரு முள் இருந்து கொண்டு, நம்மைச் சௌகரியமாகத் தூங்கவிடாமல் செய்கிறது. இரகசியமாக இந்த முள் குத்தும் போதெல்லாம் அதனால் ஏற்படும் எரிச்சல் தாங்க முடியாமல் ஏதோ புறத்தே யிருந்து நம்மை யாரோ செய்வதாக நினைத்து எரிச்சலின் காரணத்தை அங்கே தள்ள முயல்கிறோம். நம்முடைய கல்வி முறை யிலுள்ள ஒரே குறை அது நம்முடைய அதிகாரத்தின் கீழ் இல்லை யென்பதே என்று கூறுகிறோம். படகு கடலில் செல்லத் தகுதியுடைய தென்றும் சுக்கானை நம்முடைய கைகளில் கொடுத்து விட்டால் அதில் எவ்வித ஆபத்தும் இல்லாமல் போக முடியும் என்றும்

சொல்லுகிறேம். சமீப காலத்தில் தேசீயப் பள்ளிக்கூடங்களேயும் கல்லூரிகளேயும் ஏற்படுத்த நாம் செய்த முயற்சிகள் எல்லாம் நமக்கு ஏதோ, புறத்தே ஒரு சுதந்திரம் வேண்டு மென்பதையே கருத்திற் கொண்டு செய்ததாகத் தெரிகிறது. நம்முடைய பண்பாட்டில், இயல்பாக உள்ள குறைபாடுதான் 'காப்பி'யடிக்கின்ற சுறுக்குப் பாதையில் நம்மை கொண்டுசெலுத்தி விடுகிறது. அன்றியும், நம்முடைய சுதந்திரம் கேவலம் புறத்தே மட்டும் அமைவதாக இருப்பின், இதே நிலேமை அன்றும் நீடிக்கும். ஏனென்ருல், அந்த சுதந்திரம் என்பது வெளிநாட்டு நிறுனங்களேப் பார்த்துப் பிரதி செய்யக் கூடிய சுதந்திரமாக அமைந்து, அதன் பயனுக நம்முடைய அதிருஷ்டம் இரண்டு தீய கோள்களின் சந்திப்பிலும், செல்வாக்கிலும் வளர நேரிடும். அந்த இரண்டு தீய கோள்கள் என்ன வென்ருல், பிரதிசெய்தலும், பிரதிசெய்தலினுல் உண்டாகின்ற தீமையு மாகும். இதன் பயனுக, யந்திரத்தில் செய்யப் பெற்றது போன்ற பல்கலேக் கழகங்களே, அதிலும் கெட்டுப்போன யந்திரத்தில் செய்யப்பட்டவை போன்ற பல்கலேக் கழகங்களே நாம் உண்டாக்குகிறேம்.

தோற்றுப் போன ஒரு கட்சியார்கள், தோல்விக்குக் காரணம் காட்டும் முறையில் கட்சிக்குள் உள்ள ஒவ்வொருவரையும் 'நீ' 'நான்' என்று சொல்லிக் கொள்வது நாமறிந்ததே. இன்று எள்ளி நகையாடப்பெறும் நம்முடைய கல்வித் திட்டத்தில் கூட்டாளிகளாகவுள்ள நாமும் அன்னிய நாட்டாரும் இதே முறையில் ஒருவரையொருவர் குறை கூறிக்கொண்டு திரிகிறேம். இதில் உண்மை என்ன வென்ருல், குற்றத்தை நம் இருவர் பேரிலும் சமமாகப் பங்கிட முடியும். என்றுலும், பொதுவாக நிகழ்ந்த தோல்விக்கு நம் ஒவ்வொருவருடைய பொறுப்பு எவ்வளவு என்று ஆராய்வது வெறும் பள்ளிக் கணக்கே தவிர வேறு பயன் விளேக்காது என்றே நான் நம்புகிறேன். இதைவிடப் பயனுள்ள காரியம் என்ன வென்ருல், தோல்விக்கு நம்முடைய பங்கு எவ்வளவு என்று ஆராய்வதே யாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் எதிர்க் கட்சியை ஓரளவு மறந்து விட்டிருக்கலாம். நம்மிடத்தில் கால்கள் இல்லே யென்று கற்பனே செய்துகொண்டு, அதற்கு ஈடு செய்யும் முறையில் வெளிநாட்டில் செய்யப்பெற்ற மரக் காலே வைத்துக் கொண்டால்தான் நாம் முழுத் தன்மை அடைய முடியும் என்ற எண்ணம் நம்மைப் பிடித்து ஆட்டுவதே நம்முடைய பெருங் குறையாகும். ஆழமில்லாத தண்ணீரில்கூடத் திசைமாறி விட்டதாகக் கற்பனே செய்து

16

கொண்டு, நீரில் மூழ்கி இறந்துபோன ஒரு மனிதனுடைய கதியை ஒத்திருக்கிறது இந்த நிகழ்ச்சி.

ஒரு பல்கலைக் கழகத்தைப்பற்றி நாம் நினைத்தவுடனேயே ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் போன்ற பல்வேறு ஐரோப்பியப் பலகலைக் கழகங்களின் நினைவு நம்முடைய மனத்தில் வந்து நிறைந்துவிடுவதுதான் தொல்லை தருவதாக இருக்கிறது. உடனே அந்தப் பல்கலைக் கழகங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள சிறந்த பகுதிகளை எடுத்து ஒன்றாக ஒட்டிவிட்டால், அதுவே நம்முடைய பல்கலைக் கழகத்தைச் சிறந்ததாகச் செய்யும் வழி யென்று நாம் கற்பனை செய்து கொள்கிறோம். ஐரோப்பியப் பல்கலைக் கழகங்கள் அவர்கள் வாழ்க்கை முறையில் ஒன்றியுள்ள உயிர்ப் பகுதிகளாகும் என்பதையும், அங்குள்ள ஒவ்வொரு பல்கலைக் கழகமும் அந்த வாழ்க்கை முறையில் இயல்பாகப் பிறந்தது என்பதையும் நாம் மறந்து விடுகிறோம். நவீன அறுவை சிகிச்சை முறையில் தேவைப் பட்ட ஒரு துண்டுத் தோலை, மற்றொருவருடைய உறுப்பிலிருந்து எடுத்து ஒருவருக்கு ஒட்ட வைப்பது நியாயமானதாகக் கருதப் பெறுகிறது. ஆனால், இப்படியே கடன் வாங்கி ஒட்ட வைத்து ஒரு முழு மனிதனை ஆக்க வேண்டுமென்று நினைப்பது இன்றுள்ள விஞ்ஞான நிலையில் ஆகக் கூடிய காரிய மன்று. எக்காலத்திலும் இப்படி ஆகக் கூடாதென்று நாம் பிரார்த்திப்போமாக.

ஐரோப்பியப் பல்கலைக் கழகங்கள் முழு வளர்ச்சி யடைந்து இன்று நம் கண் எதிரே காணப்படுகின்றன. அதனால்தான் முற்றிலும் வளர்ச்சி யடையாத ஒரு நிறுவனத்தைப் பல்கலைக் கழகமாக நாம் கருத முடியாத நிலையில் இன்று இருக்கிறோம். என்னுடைய அண்டை வீட்டுக்காரனுடைய மகன் நல்ல வலுவான உடம்புடன் வீட்டுக்காரனுக்கு உதவி செய்வதைப் பார்த்தவுடன், எனக்கும் அத்தகைய ஒரு பிள்ளை இருந்தால் தேவலாம் யென்று தோன்றுகிறது. அதேபோல, நன்கு வளர்ந்த ஒரு பிள்ளை உடனே வேண்டுமென்று கருதினால் எனக்குப் பக்கத்திலேயே இருக்கின்ற நன்கு வளர்ந்துள்ள யாராவது ஒருவரை ஏற்றுக் கொள்ள முடியுமே தவிர, அவன் எனக்கு மகனாக இருக்க முடியாது. உடனடியாகப் பலனை எதிர்பார்க்கின்ற ஒரு பொறுமை யற்ற தன்மையும், பிரதி செய்வதில் நமக்குள்ள துரதிருஷ்டவசமான விருப்பமும் சேர்ந்து ஒரு தேசீயப் பல்கலைக் கழகத்தை உண்டாக்க வேண்டுமென்ற நியாய மற்ற விருப்பத்தைத் தோற்றுவித்துள்ளது. அந்தப் பல்கலைக் கழகம் தொடக்கத்திலேயே முழுத் தன்மை பெற்றதாக அமைய

வேண்டுமென்று விரும்புவதால் நம்முடைய முயற்சிகள் பயனற்றுப் போய்விடுகின்றன. அல்லது அதனால் கிடைக்கின்ற பயன் உண்மைப் பயனாக இல்லாமல் ஈடாக வுள்ள அல்லது மாற்றாக வுள்ள பயனாக அமைகிறது. மாற்றாக வுள்ள பயன் மூலத்தைப் போல் வடிவம், நிறம், உருவம் ஆகியவற்றைப் பெற்றிருந்தாலும், அந்தப் போலிப் பழத்தைக் கடிக்கவோ, விழுங்கவோ முடியாது. முழு வளர்ச்சி யடைந்த இந்தப் பல்கலைக் கழகங்களை எவ்வளவுதான் பெறவேண்டு மென்று நம்முடைய நாட்டார் விரும்பினாலும், அவை வேக வைக்கப்பட்ட முட்டைக ளாதலால் அவற்றிலிருந்து குஞ்சுகள் எவையும் கிடைக்கா தென்பதை மனத்தில் கொள்ள வேண்டும்.

நாம் மட்டுமல்லாமல், நம்முடைய ஐரோப்பிய ஆசிரியர்களுங் கூட அவர்களுடைய பல்கலைக் கழகங்கள் எந்த எந்த தேசத்தில் பிறந்தனவோ, அந்தத் தேசத்தின் இயல்பை யொட்டியே வளர்ந்துள்ளன என்பதையும் அவற்றினுடைய லௌகீகச் சிறப்புக்கள் எல்லாம் அவற்றினுடைய பழைய வளர்ச்சியைப் பொறுத்தவை அல்ல என்பதையும் மறந்து விட்டதாகத் தெரிகிறது. அவர்களுடைய பல்கலைக் கழகங்களில் ஆதியில் கல்வி போதிக்கும் கடமையை மேற்கொண்டவர்கள் சமயச் சாமியார்கள் என்பதையும், அவர்களிடம் கற்ற மாணாக்கர்களில் பெரும்பான்மையானவர்கள் மிகவும் ஏழைகளாக இருந்தார்கள் என்பதையும் இன்றைய ஆசிரியர்கள் மறக்கலாம். ஆனால், இன்றைய ஆசிரியர்கள், இந்தியாவைப்போன்ற வறுமை நிறைந்த ஒரு நாட்டில் தேவைக் கதிகமான அளவுக்குப் பல்கலைக் கழகத்தில் லௌகீகப் பகுதிகளைப் பெரிது படுத்தக் கூடா தென்பதை மறக்கக்கூடாது. மேலும், வசதிக் குறைவுடைய நம்முடைய பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் தேவைகளைக் குறைத்துக்கொண்டு மேஜைகளையும், நாற்காலிகளையும் அதிகப்படுத்த வேண்டு மென்று அந்த ஆசிரியர்கள் நினைக்கும்பொழுது நம்முடைய மக்களின நிலைமை மிகவும் ஆபத்தான தாகிவிடுகிறது.

மனிதனுக்கு உணவும், உணவை வைத்துச் சாப்பிட வேண்டிய பாத்திரங்களும் தேவை யென்பதை நான் அறிகிறேன். ஆனால், உணவு நெருக்கடி ஏற்படும்பொழுது பாத்திரங்களில் சிக்கனம் தேவை யென்பது மிக மிக அதிகமாக வலியுறுத்தப்பெற வேண்டும். கல்விக்குரிய கருவிகளை மிகவும் விலை யுயர்ந்ததாகச் செய்வதனால் கல்வியைப் பெறுவதே கடினமாக ஆக்கப்படும்பொழுது, அது,

இருக்கின்ற பணத்தை யெல்லாம் செலவழித்துப் பணப் பைகள் வாங்குவதைப் போலவே இருக்கும்.

கீழை நாட்டி லுள்ளவர்களாகிய நாம், வாழ்க்கைப் பிரச்னை யைப்பற்றி நமக்கேற்ற முறையில் தீர்வு காணவேண்டும். நம் முடைய உணவும் உடையும் நம்முடைய சீதோஷ்ண நிலைக் கேற்ற படி பாரமாக இல்லாமல் அமைந்துள்ளன. சுவர்களைக் காட்டிலும், சுவர்களிலுள்ள துவாரங்கள் மிகுதியாகத் தேவைப்படுகின்றன. நெசவாளியினுடைய தறிகளைக் காட்டிலும் நம்முடைய உடைகளைப் பொருத்தமட்டில் சூரியனும், காற்றும் அதிகம் பயன்படுகின்றன. பிற நாடுகளில் உணவு மூலம் கிடைக்கின்ற சக்தியை நம்முடைய நாட்டில் சூரியனே தருகிறான். இயற்கையின் இந்த வசதிகள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட முறையில் நம் வாழ்க்கையில் அமைந் துள்ளன வாதலால், சக்தியைப் பொறுத்தமட்டில் இந்த வசதிகளை மறந்துவிட வேண்டுமென்று சொல்வது இலாபகரமாக இருக்கு மென்று நான் நம்பவில்லை.

வறுமையைப் புகழ்கிறேன் என்பது கருத்தன்று. ஆனாலும், படாடோபத்தின் இணைப்புகளைக் காட்டிலும் எளிமை மிகவும் மதிப்புடையதாகும். நான் சொல்லுகின்ற எளிமை, செல்வம் இல்லாமையினால் ஏற்படுகின்ற எளிமை யன்று. நான் சொல்லு கின்ற எளிமை இலட்சியத் தன்மையில் ஒரு பகுதியாகும். மானிட சமுதாயத்தில் இந்த எண்ணம் உதிக்கும்பொழுது நாக ரிகத்தை இன்று மூடியுள்ள சுகாதாரக் கேடான, மூடு பனி முற்றி லும் மறைந்து போகும். இந்த எளிமை இல்லாத காரணத்தால் தான் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள்கூட மிகவும் விலை யுயர்ந்தனவாய், எளிதில் அகப்படாதனவாய் ஆகிவிட்டன.

நாகரிக உலகத்தில் உணவு, பொழுது போக்கு, கல்வி, பண் பாடு, ஆட்சி முறை, வழக்கு ஆகிய பெரும்பான்மையான விஷயங் கள் அவ்வவற்றிற்குரிய இடத்தில் இல்லாமல் அதிக இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கின்றன. இவற்றின் பெரும்பான்மையான பாரங்கள் தேவை யற்ற சுமைகள் ஆகும். அனாவசியமாக இவற் றைத் தாங்கிக் கொண்டிருக்கிற காரணத்தால் நாகரிகமுடைய மனிதன் தன்னுடைய பலத்தைக் காட்டுகிறானே தவிர, திறமை யைக் காட்டவில்லை. மானிட சமுதாயத்தை, மேலே யிருந்து பார்க் கின்ற தெய்வங்கள், மானிடனாகிய ஒரு பெரிய இராட்சஸன், வாழ வேண்டிய இடந் தெரியாமல், எவ்வாறு நீந்துவது என்றும் தெரியா மல் திண்டாடுவதாகவே நினைக்கும். அந்த மானிடன் பயனற்ற

முறையில் கையையும், காலையும் அடித்துக்கொண்டு குட்டையைக் குழப்பும்பொழுதுகூட, இவ்வாறு தன்னுடைய பலத்தை வெளியிடுவதில் ஒரு சிறப்பு இருக்க வேண்டுமென்று கருதும் தவறான எண்ணத்தைக் கைவிட்டதாகவும் தெரியவில்லை.

## III

சேதனப் பொருள்கள் அனைத்துமே, நெருப்பைப் போல, தங்கள் வடிவுக்கு அப்பாற்பட்டும் வாழ்கின்றன. எனவே சிறிய உடம்பு ஒன்றும் பெரிய உடம்பு ஒன்றும் அவைகளுக்கு உண்டு. சிறிய உடம்பைக் கண்ணால் பார்க்கலாம்; கையால் தொடலாம்; பிடித்து வைத்துக் கொள்ளலாம். ஆனால் பெரிய உடம்பு அளவில் கட்டுப்படாததாய், குறிப்பிட்ட எல்லையுள் அடங்காததாய், காலம், இடம் இரண்டிலும் விரிந்து நிற்கும். பிற நாட்டுப் பல்கலைக் கழகங்களைக் காணும்பொழுது அவற்றின் சுருங்கிய உடம்பை அதாவது கட்டடங்கள், தட்டுமுட்டுச் சாமான்கள், விதி முறைகள், பாடத் திட்டங்கள் ஆகியவற்றைமட்டும் காண்கிறோமே தவிர, அவற்றின் விரிந்த பகுதியைக் காண முடிவதில்லை. ஆனால் தேங்காயின் பருப்பு தேங்காய் முழுவதிலும் பரவியிருப்பதுபோல, ஐரோப்பியர்களைப் பொறுத்தமட்டில் அவர்களுடைய பல்கலைக் கழகம் என்பது அவர்களுடைய சமுதாயம், பாராளுமன்றம், இலக்கியம் என்பவற்றோடு அல்லாமல் அவர்கள் சமுதாயம் ஈடுபடுகின்ற எல்லாச் செயல்களையுமே ஊடுருவி நிற்கிறது. அவர்களுடைய கருத்துக்கள், அவர்களுடைய நூல்களில்மட்டு மல்லாமல், உயிரோடு வாழ்கின்ற மக்களிடத்திலும், அந்த எண்ணங்களைச் சிந்தித்துத் திறனாய்வு செய்து ஒப்பிட்டு வழங்கக் கூடிய பண்பாட்டிலும், அமைந்து கிடக்கின்றன. அந்த ஆசிரியர்களையும், மாணாக்கர்களையும் ஒன்றாக இணைக்கிற ஒரே ஊடுநிலை அவர்களுடைய உறவு வழிகளை ஒளி பொருந்தியதாய்ச் செய்கிறது. சுருங்கக் கூறுமிடத்து, அவர்களுடைய கல்வி, அவர்களுடைய மனத்தையே நிலையான வாகனமாகவும், அவர்களுடைய பண்பாட்டையே நிலையான ஆதாரமாகவும், அவர்களுடைய சமுதாய வாழ்க்கையை நிலையான சேர்பாய்க்கும் இடமாகவும் கொண்டு வளருகிறது. மனம், வாழ்வு, பண்பாடு ஆகியவற்றி னிடையே யுள்ள இந்தச் சேதன ஒற்றுமை, உலகத்தின் பல்வேறு இடங்களில், பல்வேறு காலங்களில் காணப்படுகின்ற உண்மைகளை யெல்லாம் எடுத்து அவர்களுடைய பண்பாட்டில் இவற்றை ஒன்றவைக்கின்ற சக்தியைப் பெறுகின்றது.

இதன் எதிராக, மன வளர்ச்சிக்கு அல்லாமல் புறத்தே கிடைக்கின்ற ஓர் இலாபத்திற்காகப் புத்தகங்களை மட்டும் நம்பிக் கல்வி கற்கும் இந்திய மாணுக்கர்கள் செயற்கைப் பாலையே உண்ணுகின்ற குழந்தைகளைப் போல அறிவுச் சோகை பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை. அவர்கள் கற்றுத் தீர வேண்டிய பாடங்களுக்கும், சுற்றுச் சூழ்நிலையில் ஏற்படுகின்ற எண்ண வளர்ச்சிக்கும் எவ்விதமான சம்பந்தத்தையும் காணமுடியாத காரணத்தால் அவர்களுக்கு அறிவுத் துறையில் தைரியம் பிறப்பதேயில்லை. அச்சடித்த புத்தகத்தில் காணப்படும் வார்த்தைகளை அவர்கள் மனம் ஏற்றுக்கொள்கிறதே தவிர, அந்த வார்த்தைகளுக்கும் மனிதர்களுக்கு முள்ள தொடர்பை அறிய முடிவதில்லை. பிறநாட்டுப் பண்பாட்டைக் கடன் வாங்குவதோடு அல்லாமல், முடிவு செய்வதற்குரிய அளவு கோலையும் பிற நாட்டிலிருந்தே பெறுகிறுர்கள். அவர்களுடைய கல்வியான வண்டி, அவர்களைத் தாங்கிச் செல்லாமல், அவர்களைப் பின்னே கட்டி யிழுத்துச் செல்கிறது. இது பார்ப்பதற்கு வேடிக்கையாகமட்டு மல்லாமல், துயரம் விளைவிக்கின்ற காட்சியாகவும் இருக்கிறது. நவீன ஐரோப்பியப் பண்பாட்டு உண்மையின் பலம் அதனுடைய இயங்கும் சக்தியிலேயே இருக்கின்றது. ஆனல் அதே இயங்கும் சக்தி நம்மிடத்தில் வரும்போது, நம்முடைய சாத்திரங்களைப் போல, இயங்கும் சக்தியை இழந்து அசைக்க முடியாது ஊன்றப்பட்டப் பொருள்களாக வருகின்றன. நம்முடைய சாத்திரங்கள் தெய்வங்களால் கூறப்பெற்றவை யென்று நம்புவதால் அவற்றை ஆராயவோ, சிந்திக்கவோ உரிமை யிழந்து, அவற்றை அப்படியே ஏற்றுக்கொள்கின்ற நிலையில் நாம் இருக்கின்றோம்.

எனவே, உயிருள்ள உண்மையின் சக்தியை, இயங்கும் ஆற்றலை நாம் இழந்துவிட்டோம். விக்டோரியா காலத்தின் தொடக்கத்திலிருந்து விக்டோரியாவின் பிற்காலம் வரை ஆங்கிலேயர்களுடைய மனம் பல்வேறு நிலைகளில், தரங்களில் புகுந்து புறப்பட்டிருக்கிறது. ஆனல், ஆங்கிலேயர்களிடத்திலிருந்து பாடங்களைப் படிக்கின்ற நாம் அந்த நிலைகளில் அல்லது தரங்களில் நிலைத்து நிற்கின்ற ஒன்றிரண்டைத்தான் ஏற்றுக்கொள்ள முடியும். நம்முடைய ஆசிரியரின் மனம் இயங்குவதுபோல நாம் இயல்பாக அதனுடன் இயங்க முடியாது. அதற்குப் பதிலாக ஒரு கருத்திலிருந்து மற்றொரு கருத்துக்குத் தாவிச் செல்ல முடியுமே தவிர, இயல்பாக ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு அலைபோலச் செல்ல முடி

யாத நிலையில் இருக்கிறோம். 'பென்ஹாம்', 'மில்' ஆகியவர்களுடைய பண்பாட்டுத் தத்துவத்திலோ, 'கார்லைல்', 'ரஸ்கின்' ஆகியவர்களுடைய ஆன்மீகத் தத்துவத்திலோ, 'செஸ்டர்டன்', 'பெர்னாட்ஷா' போன்றவர்களின் இரட்டைத் தத்துவத்திலோ நாம் நம்முடைய அறிவை வலுவாகக் கட்டுப்படுத்த வேண்டியிருக்கிறது. இதில, கடைசியிலுள்ள தத்துவம், சோர்வுற்றிருக்கின்ற மனங்களை, உண்மையை நோக்கி, அதிர்ச்சியுடன் அழைத்துச் செல்வதாகும். இவற்றில் கட்டுப்பட்டு நிற்பதால் தத்துவங்களில் ஏற்படுகின்ற செயல்களையும், எதிர்ச் செயல்களையும் நாம் அறிய முடியாமற் போகிறது. நம்முடைய கல்வி மிக முற்போக் குடையது என்று பெருமையடித்துக் கொள்கிறோம். ஆனால், நிகழ் காலத்திற்கப்பால் நம்மை அழைத்துச் செல்ல வேண்டியதுதான் எல்லாக் கல்வியினுடைய கடமையும் என்பதை நாம் மறந்துவிடுகிறோம்.

## IV

வாழ்வின் போக்குவரத்து என்பது வாழ்கின்ற நிறுவனத்தின் மூலமே நடைபெறக் கூடியதாகும். மனத்தின் வாழ்வாகிய பண்பாடு எனப்படுவது ஒரு மனிதன் மற்றொரு மனிதனுக்கு மட்டும் வழங்கக்கூடிய ஒன்றாகும். ஏட்டுக் கல்வி வறட்டுப் பண்டிதனாக நம்மை ஆக்குகிறது. அக் கல்வி இயக்கம் இல்லாமல் இருந்து அளவால் மட்டும் பெருத்திருக்கிறது. வலுவான பாதுகாவலின் கீழ் அளவு மீறிச் சுமத்தப்பட்டுக் குவித்து வைக்கப்படுகிறது. ஆனால் பண்பாடோ வெனில், வளரும் இயல்புடையதாய், இயங்கும் இயல்புடையதாய், வாழ்வில் பல்கிப் பெருகுவதாய் அமைந்துள்ளது.

ஐரோப்பியப் பல்கலைக் கழகத்திலுள்ள மாணாக்கர்கள், அவர்களுடைய சமுதாயங்களில், மானிடப் பண்பாட்டின் சூழ்நிலையில் வளர்வதோடு, அவர்களுடைய ஆசிரியர்களோடு நெருங்கிய உறவு கொள்கின்ற காரணத்தாலும் இலாபத்தை அடைகிறார்கள். ஆசிரியர்களுக்கும் மாணாக்கர்களுக்கு மிடையே யுள்ள மனித உறவு அவர்களுக்கு ஒளிதரும் சூரியனாக அமைந்துள்ளது. நம்மைப் பொறுத்தமட்டில், வலுவாக அடிக்கப்படும்பொழுது ஒன்றிரண்டு தீப் பொறிகளைத் தருகின்ற சிக்கிமுக்கிக் கற்களே உள்ளன. இதில் ஒளியைக் காட்டிலும் சப்தமே அதிகமாக இருக்கிறது. இந்தச் சிக்கிமுக்கிக் கற்கள் கல்வியின் கூறுபோலும்! குறிப்பிட்ட

வழிகளாகவும், மாற்ற முடியாத முறைகளாகவும், சுவை யற்ற கற்பிக்கும் முறைகளாகவும் அவை அமைந்துள்ளன.

நம்முடைய துரதிர்ஷ்டவசமாக, ஐரோப்பியப் பல்கலைக் கழகங்களில் கிடைக்கின்ற எல்லாத் தட்டுமுட்டுச் சாமான்களையும், உயிருள்ள ஆசிரியர்களைத் தவிர, நாம் பெற்றுள்ளோம். புத்தகக் கடையிலுள்ள புத்தகங்கள் அனைத்திலும் சொல்லப்பெற்றுள்ளவற்றை ஏடுகளுக்குப் பதிலாக வாயினால் பேசுகின்ற புத்தகப் பூச்சிகளை நிரம்பப் பெற்றிருக்கிறோம். ஆகவேதான் நம்முடைய பேராசிரியர்கள்கூடத் தங்களுடைய மாணவர்களைத் "தீண்டத்தகாதவர்களாக"க் கருதுகிறார்கள். இந்த ஆசிரியர்கள் வேண்டா வெறுப்புடன் மிக நீண்ட தூரத்திலிருந்து கொண்டு, தங்களையும், மாணாக்கர்களையும் பிரிப்பதற்கு நோட்டுப் புத்தகங்கள் என்ற குறுக்குச் சுவர்களைக் கட்டிக்கொண்டு, மனத்திற்குக் கொடுக்க வேண்டிய உணவைப் பங்கிட்டு வழங்குகிறார்கள். இத்தகைய உணவு விரும்பி உண்ணப்படுவதுமில்லை; போதுமான அளவு உயிர்ச் சத்தையும் அது தருவதில்லை. இது பஞ்ச காலத்தில் அளிக்கப்பெறும் படியாகும். இவ்வாறு அளவு முறையோடு தரப்படுகின்ற இந்த உணவு நம்மை மரணத்திலிருந்து பாதுகாக்குமே தவிர, மனிதனுடைய தேவைக் கப்பாற்பட்டுக் காணப்படுகின்ற நல்ல பண்பாடு என்பதை நாம் பெறமுடியாத நிலையில் வைத்திருக்கிறது. இது தேவைக்கே மிகவும் குறைவாக இருத்தலின் எக் காரணத்தைக்கொண்டும் இதனை ஒரு விருந்து என்று சொல்வதற்கே யில்லை.

இந்த உலகம் நம்மை நாடி நிற்கின்றது என்றும், நாம் இல்லாமல் இந்த உலகம் நிற்க முடியா தென்றும் என்றைக்கு நாம் நிரூபிக்கிறோமோ, திருப்பிக் கொடுக்க முடியாத பிச்சைக்காரர்கள் அல்லர் நாம் என்பதை என்று நிரூபிக்கிறோமோ, அன்றுவரைப் பிறருடைய தயவைக் கெஞ்சி நாடிக்கொண்டிருக்க வேண்டிய நிலையில்தான் நாம் இருக்கவேண்டும். ஒப்பாரி வைத்தல், புகழ் பாடல், சட்ட முறைக்கு அப்பாற்படாது வாலைக் குழைத்தல் ஆகிய முறைகள் மூலமாகத்தான் இவற்றைப் பெற முடியும்.

உலகம் பார்த்து மரியாதையோடு ஏற்றுக் கொள்ளக்கூடிய எதனையும் நாம் தர முடியா திருக்கின்ற வரையில் நம்மைப்பற்றி யாரும் கவலைப்பட மாட்டார்கள். இதற்கு யாரைக் குறை கூறுவது? பூமியில் பல பகுதி தரிசாகக் கிடந்துங்கூட, அதில் ஒன்றையும் உற்பத்தி செய்ய வேண்டுமென்று நினைக்காமல் சோம்பலுடன்

வாழ்கின்ற மக்களே என்ன வென்று சொல்வது? நாடு முழுவதையும் சக்தி யில்லாத மனிதர்களே வைத்துக் காப்பாற்றுகின்ற அநாதை இல்லங்களாகச் செய்ய முடியுமா? ஏனென்ருல், நம்மிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற ஒரே காரணத்தால் ஒரு பொருளே நம் முடையதாக முற்றிலும் ஆக்கிக்கொள்ள முடியாதென்ற கடின மான உண்மையை நாம் மனத்தில் பதித்துக்கொள்ள வேண்டும். ஆகாயத்திலிருந்து மேகம் பொழிகின்ற நீரைப் பெற்ற ஓர் ஏரிதான் உயிர்களேக் காப்பாற்ற முடியுமே தவிர, பாலேவனம் அவ் வாறு செய்ய முடியாது. ஏனென்ருல், ஏரியின் ஆழத்தில், பெற்றுக் கொள்வதும் கொடுத்தலும் ஒரே நிலேயை அடைந்துவிட்டன. யாரிடத்தில் ஏற்கெனவே இருக்கின்றதோ, அவனுக்கே மறுபடியும் கொடுக்கப்படுகின்றது. அவ்வாறு இல்லேயாளுல் கொடுக்கப்பெற்ற பொருளும், அதனேப் பெற்றுக்கொள்பவனும் அவமானப்படுத்தப் படுகிருர்கள்.

## V

தேசீய மண்ணில் தோன்றி வளர்ந்த ஒரு பல்கலேக் கழகம், அதனுடைய வரலாற்றில் நிகழ்ந்த ஒரு திருப்பத்தால் எவ்வாறு தோல்வியுற்றது என்பதை ஓர் உதாரணத்தின் மூலம் காட்டுகிறேன்

ஐரோப்பாவின் இருண்ட காலத்தில் காட்டுமிராண்டிகளின் தாக்குதலிளுல் ரோமாபுரி வீழ்ச்சி யடைந்தபொழுது, மேளுடுகளி லேயே, அயர்லாந்து தேசம் ஒன்று மட்டும்தான் தன்னுடைய மரபை யும், பண்பாட்டையும் காப்பாற்றி வந்தது. ஐரோப்பாவின் பல் வேறு பகுதிகளிலிருந்த மாளுக்கர்கள் அங்கே கல்வி கற்க வந்தார் கள். நம்முடைய சம்ஸ்கிருதப் பாடசாலேகளேப்[2] போல அவர் களுக்கு உண்டி, உறையுள், புத்தகங்கள் ஆகிய அனேத்தும் இலவசமாக வழங்கப்பெற்றன. அயர்லாந்து தேசத்திய சாமியார் கள் கிறிஸ்துவ சமுதாயம், பண்பாடு ஆகியவற்றைப் பற்றி அணேந்து கிடந்த ஒளியை ஐரோப்பா முழுவதிலும் மறுபடியும் தூண்டிவிட்டார்கள். பாரிஸ் பல்கலேக் கழகத்தைத் தோற்றுவிப் பதற்கு 'கிளமன்ஸ்' என்ற ஐரிஷ்காரரின் உதவியைத்தான் 'ஷார்லமேன்' நாடிஞர். ஐரிஷ் பண்பாடு அன்று அடைந்திருந்த பெருமைகளே எடுத்துக்காட்டப் பல்வேறு உதாரணங்கள் உண்டு. இந்தப் பண்பாடு ஆதியில் ரோமாபுரியில் தோன்றிஞலும் மிக நீண்ட காலமாக ரோமாபுரியோடு தொடர் பில்லாமல் வளர்ந்த காரணத் தால் ஐரிஷ் மக்களினுடைய மனப்பாங்கு, வாழ்வு ஆகியவற்ருேடு,

இரண்டறக் கலந்து முற்றிலும் ஐரீஷ் அமைப்பைப் பெற்ற ஒரு பண்பாடாக விளங்கியது. இந்தப் பண்பாடு ஐரீஷ் மொழியாகிய இடைநிலையின் மூலமே வளர்ந்தது.

டேனர்களும், ஆங்கிலேயர்களும் அயர்லாந்தில் படையெடுத்த பொழுது ஐரீஷ் கல்லூரிகளுக்கு நெருப்பு வைத்து, அவர்களுடைய நூலகங்களை அழித்து, அந்தச் சாமியார்களையும், மாணாக்கர் களையும் கொன்றும் வெருட்டியும் விட்டார்கள். என்றாலும்கூட, இந்தக் கொடுமைக் காளாகாமல் தனித்து நின்ற பகுதிகளில் எல்லாம் தாய்மொழி மூலமே கல்வி போதிக்கப்பெற்று வந்தது. எலிசபெத் மகாராணி காலத்தில்தான் அயர்லாந்து தேசம் முற்றிலும் வெல்லப்பட்டு அதனுடைய பழைமையான பல்கலைக் கழகங்கள் அழிக்கப்பட்டன. பண்பாட்டுக்கு மூல மொழியாக இருந்த நிலைமை மாறி, படிப்பார் அற்ற நிலையில் ஐரீஷ் மொழி பிறரால் எள்ளி நகையாடப்பெற்றது. தாழ்ந்த நிலையிலுள்ள மக்கள் பேசக்கூடிய மொழி என்று ஒதுக்கப்பெற்றது. மறுபடியும் 19 ஆம் நூற்றாண்டில் தேசீயப் பள்ளிக்கூடக் கிளர்ச்சி தொடங்கியவுடன் ஐரீஷ் மக்கள் கல்வியின் மேற்கொண்ட பேரார்வம் காரணமாகச் சிந்தனைக்கு அப்பாற்பட்ட பேரார்வத்தோடு அதனை வரவேற்றார்கள்.

இந்தத் தேசீயப் பள்ளிக்கூடக் கிளர்ச்சியின் நோக்கம் என்ன-வென்றால் ஐரீஷ் வழியையும், ஆங்கிலோ-சாக்ஸன் வழியையும் ஒன்றாக இணைப்பதே யாகும். ஆனால் நல்லதற்கோ அன்றிக் கெட்டதற்கோ தெரியவில்லை இந்த இரண்டு இனங்களையும் வெவ்வேறு வகையில் தெய்வம் படைத்தவிட்ட காரணத்தால், ஒரு இனத்தார் மற்றொரு இனத்தாரின் சட்டையைத் தரித்துக் கொள்வதனால் நற்பயன் ஒன்றும் விளையப்போவ தில்லை. தேசீயப் பள்ளிக்கூட இயக்கம் தொடங்கப்பெற்றபொழுது 80 சதவீதம் ஐரீஷ் மக்கள் தங்களுடைய தாய் மொழியைப் பயன்படுத்தி வந்தார்கள். ஆனால் ஐரீஷ் குழந்தைகள் தாய்மொழியைக் கற்காமலும், தாய் மொழியின் வரலாற்றைக் கற்காமலும் பிரம்பின் உதவி கொண்டு செய்யப்பட்டார்கள்.

எதிர்பார்த்த பலனே இதனால் விளைந்தது. மனம் மரத்துப் போகின்ற நிலை மெள்ள மெள்ள நாடு முழுவதும் பரவிற்று. ஐரிஷ் மொழி பேசுகின்ற மாணாக்கர்கள் அறிவும் ஆர்வமும் நிரம்பப் பெற்றவர்களாய்ப் பள்ளிக்கூடத்தில் நுழைந்தாலும், வெளிவரும் பொழுது மன முடைந்தவர்களாய், கல்வியைப் பற்றியே வெறுப் படைந்தவர்களாய்ச் சென்றார்கள். இதற்குரிய காரணம் "யந்திர

சாதன முறையில் கல்வி கற்பிக்கப்பெற்றதாகும். அதன் பயனுகக் கிளிப் பிள்ளைகளே தோன்றினுர்கள்.

வளமான கல்வி வேண்டுமானுல் பிற மொழியைப் போதனு மொழியாகக் கொண்டு அதைப் பெற முடியாது. இத்தகைய ஒரு செய்கை நம்முடைய நாட்டைத் தவிர வேறெந்த நாட்டில் நடைபெற்றிருந்தாலும் ஆபத்தான வதந்தி என்றே இதனைக் கருது வார்கள். இவ்வாறு போதிக்கப் பெற்ருல் பிறநாட்டார் அதற்குச் செவி சாய்க்காமல் உறங்கிப் போய்விடுவார்கள். நம்மைப் பொறுத்தவரை பகைமை யுணர்ச்சியைத் தூண்டி விட்டு, இன்னும் சொல்லப் போனுல் ஒரு ரத்த விருத்தி மருந்தைப் போல அது வேலை செய்யும். பயனற்ற ஒன்றைப் பயனுடையது போலப் பேசுவதால் அதிகப்படியான ஒரு பயன் கிடைக்கிறது. ஆகவேதான், ஆங்கில மொழியின் மூலமாகப் பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டு மென்று நம்மைக் கட்டாயப்படுத்தும் பொழுது கதவை இடிப் பதிலும், சாவியைப் போட்டுத் துழாவுவதிலும் வாழ்க்கையின் சிறந்த பகுதி கழிந்து விடுகிறது. அறையி னுள்ளே நமக்குரிய விருந்து தயாராகக் காத்துக் கொண்டிருக்கலாம். என்ருலும்கூட, உள்ளே போவதற்குரிய தடைகளும், கால தாமதமும் நம்முடைய பசியைப் போக்கி விடுவதுடன், இவ்வாறு நீண்ட காலம் பசியோடு இருப்பதனுல் நம்முடைய வயிறு சாசுவதமாகக் கெட்டும் விடுகிறது. அனுவசியமான இலக்கணத்தில் உழல்வதும், பகுத்தறிவுக்குப் பொறுத்த மற்ற முறையிலுள்ள எழுத்துக்களை உச்சரிப்பதிலும் எல்லை யில்லாத காலத்தைச் செலவழித்து இறுதியாகக் கருத்துக் களாகிய உணவு வரும்போது அதன் மேலுள்ள ஆசையே போய் விடுகிறது.

மழை இல்லாத ஒரு பாலைவனத்தில் மணற் பாங்கான பூமியில் ஒரு மரத்தை முளைவிக்க வேண்டுமானுல் அந்த விதையை மிக நீண்ட தூரத்திற் கப்பாலுள்ள மற்ருெரு நாட்டிலிருந்து பெறுவதோடு, அந்த நாட்டிலுள்ள மண் வளத்தையும், தண்ணீரையுங்கூட கடன் வாங்க நேரிடும். என்ருலும், இவ்வளவு கஷ்டங்களையும் எடுத்துக் கொண்ட பிறகும்கூட, அந்த மரம் நன்கு வளர்ச்சி யடையாமல் குன்றிப் போய் நிற்கிறது. ஒருவேளை அது பழுத்துப் பலன் தந்தாலுங் கூட அந்தப் பழத்திலுள்ள விதைகள் நன்கு முற்றி யிருப்பதில்லை. நம்முடைய பல்கலைக் கழகங்களில் நமக் களிக்கப்படும் கல்வி, ஏதோ இங்கே ஒரு பாலைவனம் இருப்பதாக நினைத்து அதை மாற்றுதற் காகவே அக் கல்வி கொடுக்கப்பெறுவதுபோல் தெரிகிறது.

அன்றியும், மன வளர்ச்சி அறிவு வளர்ச்சியோடு இல்லாமல், முழு மொழியையும்கூடக் கடல் கடந்து இங்கே இறக்குமதி செய்ய வேண்டு மென்று நினைப்பதாகத் தெரிகிறது. ஆகையினால்தான் இங்கு நாம் பெறுகின்ற கல்வி ஒரு வடிவ மற்றதாய், மிக நீண்ட தூரத்தி லுள்ளதாய், உருவ மற்றதாய், வாழ்வோடு ஒரு சிறிதும் தொடர்பு இல்லாததாய், சமயங்களில் எல்லை மீறிய செலவு வைப்ப தாய், நம்முடைய உடலையும், வசதிகளையும் கொடுப்பதாய் இருப்ப தோடுகூட, முடிவில் பயனிலும் மிக அற்பமானதாக இருக்கிறது.

கல்வி போதிப்பதில் நாம் பெற்றுள்ள அனுபவத்தைக் கொண்டு பார்க்கும்பொழுது மாணக்கர்களில் பெரும்பான்மையானவர்கள் மொழியைக் கற்றுக்கொள்வதில் அவ்வளவு நல்ல சக்தி பெறவில்லை யென்றே அறிகிறேன். ஆங்கில மொழியை அரை குறையாகத் தெரிந்து கொண்டுள்ள அளவில் மெட்ரிகுலேஷன் தேர்ச்சி பெறுவதே மிகக் கடினமான வேலையாக இருக்கிறது; அதைவிட உயர்ந்த படிகளில் ஆபத்து நிச்சயம். இந்தியாவி லுள்ள பெரும்பான் மையான பிள்ளைகளால் ஆங்கில மொழியை நன்கு பயில முடியாத தற்குப் பல்வேறு காரணங்கள் உண்டு. முதலாவதாகக் கீழை நாட்டு மொழிகளுள் ஒன்றின் மூலமாகவே சிந்தனை செய்யும் அவர் கள் தங்களுடைய மனத்தில் இந்தப் புது மொழியைப் புகுத்துவது என்பது ஆங்கில உடைவாளைத் துருக்கியர்களுடைய வாளைப் போடும் உறைக்குள் செலுத்த முயல்வது போன்றதாகும். அன்றி யும் தக்க தகுதி யுள்ள ஆசியர்களிடத்தில் தகுந்த முறையில் ஆங்கில மொழியில் பயிற்சி பெறுவது என்பது பல பிள்ளைகளின் பொருளாதாரத்திற்கு அப்பாற்பட்டதாகும். ஏழைப் பிள்ளைகள் நிச்சயமாக அதனைப் பெற முடியாது.

அதற்கு மறுப்பாகவுள்ள விவாதம் என்ன வென்பதையும் நான் அறிவேன். "உயர்தரக் கல்வி இந்திய மொழிகளின் மூலமாகப் போதிக்கப்பெற வேண்டு மென்று நீங்கள் விரும்புகிறீர்கள். அப்படி யானல் அதற்குரிய பாடப் புத்தகங்கள் எங்கே?" என்பதே அந்த வினு. இந்திய மொழிகளில் இதனைப் போதிப்பதற்குரிய பாடப் புத்தகங்கள் ஒன்றும் இல்லை யென்பதை நான் அறிவேன். ஆனல் உயர்தரக் கல்வியை நம்முடைய சொந்த மொழிகளின் மூலமாகக் கொடுக்கத் தொடங்கினு லொழிய, பாடப் புத்தகங்கள் எவ்வாறு வரமுடியும்? அச்சடிக்கப்படுகின்ற நாணயங்களுக்குச் செலவாணி இல்லை யென்ருல், நாணய சாலையில் மேலும் மேலும் நாணயங்களை உற்பத்திபண்ணிக் கொண்டிருக்க மாட்டார்கள்.

## VII

அயர்லாந்தின் உதாரணத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளக் கூடிய மற்றொரு பாடம் என்ன வென்றால், நிகழ்ச்சிகள் நியாயமாக நடைபெறுகின்ற முறையில் முதலில் தண்ணீர் தோன்றி, பிறகே மீன்கள் தோன்ற முடியும் என்பது ஒன்று. கற்றறிருந்த மனிதர்கள் இருப்பதனாலேதான் அவர்களைச் சுற்றி மாணாக்கர்கள் வருகிறார்கள்.

மன வெழுச்சி பெற்றிருந்த அந்தப் பழைய காலத்தில், சில மனிதர்களுடைய மனத்தில் கல்வியும், சிந்தனையும் பொங்கித் ததும்பிய நேரத்தில், இந்தியாவில் "நாளந்தா" "தக்ஷசீலம்" ஆகிய இடங்களில் பண்பாட்டு நிலையங்கள் தோன்றின. புதிய புதிய நிறுவனங்களைத் தோற்றுவிப்பதையே பழக்கமாகக் கொண்டிருக்கின்ற நாம், தேசீயப் பல்கலைக் கழகங்களைத் தோற்றுவிப்பதில் கூடத் தவறான இடத்தில் தொடங்கி இருக்கிறோம். இப் பல்கலைக் கழகங்களில் முதலில் பிள்ளைகளைச் சேர்த்துவிட்டுப் பிறகு, ஆசிரியர்களுக்கு வலை வீசுகிறோம். மறதி நிறைத்த ஒரு கர்த்தாவானவன் மிகவும் சிரமப்பட்டு ஒரு வாலைப் படைத்துவிட்டுப் பிறகு தலையைப் படைக்க வில்லையே என்று கூறுவதைப் போன்றுள்ளது இது. நம்முடைய விருந்தினர்களை யெல்லாம் மேஜையில் அமருமாறு செய்த பிறகு சமையலுக்கு இன்னும் தொடங்கக் கூட இல்லை யென்பதை அறிந்துகொள்வது போல் இருக்கிறது.

நம்முடைய மனம் தூய்மையடையவும், எடுத்த காரியத்தைப் பகுத்தறிவோடு கொண்டுசெலுத்தவும் ஒரு முறையாவது நம்முடைய பாடத் திட்டங்களையும், மாணாக்கர்களையும் பற்றிய கவலைகளைக்காற்றில் பறக்க விடுவோமாக. இன்று நிலைத்துள்ள கல்வி நிறுவனங்களைப்பற்றிய மாற்ற முடியாத கருத்துக்களை நம்முடைய எண்ணங்களிலிருந்து வெருட்டி யடிப்போமாக. அதன் பின்னரே, தங்களுடைய மனத்தைக் கட்டுப்பாட்டுடன் பழக்கி அதில் வெற்றி பெற்றவர்கள், சிறந்த முறையில் உற்பத்தி செய்து அதன் பயனாக அதை இறக்குமதி செய்யக் கூடியவர்கள், ஒன்றுகூடி, இந்தச் சிறந்த முயற்சியில் பங்கெடுத்துக் கொள்வார்களாக என்று பிரார்த்தனை செய்வோமாக. அத்தகையவர்கள் ஒன்றுகூடி அறிவு உலகத்தில் அமைதியான முறையில் ஆழ்ந்த ஆராய்ச்சிகளைச் செய்து புதியனவற்றைக் கண்டு பிடிப்பார்களாக. இந்த முறையில் தான் உடனடியாக ஒரு பல்கலைக் கழகத்தைத் தோற்றுவிக்கக் கூடிய ஒரு சக்தியை ஒரு முனையில் குவித்து நாம் பெற முடியும்.

இந்தப் பல்கலைக் கழகத்தை நம் உள்ளத்தி னுள்ளே இருக்கும் உண்மையை அடிப்படையாகக் கொண்டு நாமே தோற்றுவிக்க முடியும்.

ஒரு பல்கலைக் கழகத்தின் மிக முக்கியமான நோக்கம் என்ன வென்றால், நாட்டிலுள்ள அறிவாற்றல்களை யெல்லாம் ஓர் இடத்தில் குவியுமாறுச் செய்வதே யாகும். ஏனென்றால் அவ்வாறு குவிவது தான் உயிரோடு இருக்கின்ற உயிர் அணுக்களின் கூட்டத்தைப் போன்றதாகும். அதுவே தேசீய மனத்தின் உயிர்த் தத்துவத்தின் ஆக்கத்திற்கு நிலைக்களனாகும்.

## VIII

இந்தியா முழுவதிலும் அறிவுத் துறையில் ஓர் ஒற்றுமையை ஏற்படுத்துவது மிகக் கடினமான தென்றும், ஏறத்தாழ முடியா தென்றும் பேசப்பெறுகிறது. இதன் காரணமாக இந்தியாவிலுள்ள பல் வேறு மொழிகளையும் எடுத்துக் காட்டுகிறார்கள்.

என்றாலும், உலகத்திலுள்ள ஒவ்வொரு தேசமும் தன்னுடைய பிரச்னைகளுக்குத் தானேதான் தீர்வு காண வேண்டும். இன்றேல் தோல்வியை ஒப்புக் கொண்டு அழிய நேரிடும். உண்மையான எல்லா நாகரிகங்களும் இடையூறுகள் என்ற வலிமையான பாறை யின் மேலேயே கட்டப்பெற்றுள்ளன. தேவையான தண்ணீரைக் கொடுக்கக்கூடிய ஆற்றைப் பெற்றுள்ளவர்களைப் பார்த்து நாம் பொறாமைப்படலாம். ஆனால் ஆறு இல்லாதவர்கள் கிணறு தோண்டி பூமியின் ஆழத்தில் தண்ணீரைப் பெற முயல வேண்டும். அதே நேரத்தில், மிக எளிதாகக் கிடைக்கின்ற காரணத்தால் புழுதி யையே தண்ணீருக்குப் பதிலாகப் பயன்படுத்தலாம் என்று மட்டும் நினைக்கக்கூடாது. வேறுபட்ட பல்வேறு மொழிகளும் இருப்பதைத் தைரியத்தோடு நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். ஆனால், அதே நேரத்தில், வெளிநாட்டு மொழி என்பது புறத்தே யிருந்து கொண்டு வரப்படுகின்ற மண்ணைப் போல் ஒரு சிறிய தொட்டியில் போட்டுப் பயிர் செய்வதற்குப் பயன்படுமே தவிர வாழ்வுக்குத் தேவையான பயிர்ச் செலவு செய்வதற்கு ஒருக்காலும் பயன்படாது.

ஐரோப்பாவிலுள்ள ஒரே மொழியைக் கொண்ட ஒரு நாட்டைப் போல அல்லாமல், பல்வேறு மொழிகளையும், பல்வேறு மக்களையும் கொண்ட ஐரோப்பா தேசம் போன்றதாகும் இந்தியா தேசம் என் பதை ஒப்புக்கொள்வோமாக. என்றாலும்கூட, அறிவுத் துறையில் ஏற்பட்ட ஒற்றுமையோடு கூடிய ஒரு பொது நாகரிகத்தை

ஐரோப்பா தேசம் பெற்றுள்ளது. அந்த நாகரிகம் மொழி ஒற்றுமையினால் ஏற்பட்ட தன்று என்பதையும் அறிய வேண்டும்.

பழங் காலத்தில் ஐரோப்பாவின் பண்பாடு முழுவதும் லத்தீன் மொழியைப் போதனா மொழியாகக் கொண்டே பெறப்பட்டது. அக்காலந்தான் ஐரோப்பாவின் அறிவுத் துறை முகிழ்க்கத் தொடங்கிய காலம். சுய வெளிப்பாடுகளாகிய இதழ்கள் அனைத்தும் இந்த ஒரே திசையில் மடங்கியிருந்த காலம் அது. ஐரோப்பாவின் மனம் விரிவடைந்து முழுத் தன்மையை எய்துகின்ற நிலை, அவர்களுடைய இலக்கியம் முழுவதும் ஒரே மொழியில் ஆக்கப்பெறவில்லை என்பதால் தடைப்பட வில்லை. பெரிய ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் தங்கள் தங்கள் மொழியை ஏற்படுத்திக் கொண்ட பிறகுதான், மேனாடுகளிலேயே பண்பாடுகளின் கூட்டணி அமைவதாயிற்று. பல்வேறு வழிகளின் மூலமாக இக் கருத்துக்கள் வந்தமையின் ஐரோப்பியப் பண்பாடு, நிறைந்த சத்துள்ளதாய், வேறுபட்ட இயல்புகள் நிறைந்ததாய் அமைந்தது. உண்மையைக் கூறுமிடத்து இயல்பான மாறுபாடுகள் ஓர் ஒன்றல்தன்மையை அடையும் பொழுது, அதனையே உண்மையான ஒற்றுமை என்று கூற வேண்டும். அதற்கு எதிராக, செயற்கையாகச் செய்யப்படும் ஒரே தன்மை, உயிரிழந்த பொம்மைக் கூத்தாகி விடுகிறது. பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி, இங்கிலாந்து ஆகிய நாடுகள் தங்கள் தங்கள் தனிப்பட்ட நிறுவனங்களின் மூலம் தங்கள் தங்கள் தனிச் சம்பாத்தியங்களை ஐரோப்பாவின் பொதுக் கருவூலத்தில் சேர்க்க வில்லையானால் ஐரோப்பிய நாகரிகத்திற்கு இது எவ்வளவு பெரிய நஷ்டமாகும் என்பதை நாம் நன்கு கற்பனை செய்ய முடியும். ஜெர்மானியப் பண்பாடு தன் ஆதிக்கத்தை வலியுறுத்தத் தொடங்கியவுடன், அதனை ஒரு பெருந் தொல்லையாகக் கருதி ஐரோப்பா முழுவதும் எதிர்த்துப் போராடியதையும், அதன் காரணம் என்னவென்பதையும் நாம் அறிவோம்.

இந்தியா முழுவதிலும்கூடப் பொதுப் பண்பாட்டு மொழியாக ஸம்ஸ்கிருதம் இருந்த ஒரு காலம் உண்டு. ஆனால், இந்தியா முழுவதிலும் கருத்துப் போக்குவரத்து முற்றுப் பெறுவதற்கு, அந்தத் தேசத்திலுள்ள எல்லா மொழிகளும் முழு வளர்ச்சி யடைந்து, அதன்மூலமாகத்தான் அந்நாட்டின் ஒவ்வொரு மக்கள் தொகுதியும் தமக்கே உரிய தனிச் சிறப்பை வெளியிட முடியும். பிற நாட்டிலிருந்து வந்த மற்றொரு மொழியால் இதனை ஒருநாளும் செய்து முடிக்க முடியாது. அந்த மொழி தனக்கே உரிய சிறப்பான

கூட்டுறவுகளால் நம்முடைய எண்ணத்திலும், ஆக்கத்திலும் சுதந்திரம் ஏற்படாதபடி செய்து விடுகிறது. ஆங்கிலத்தைப் பயன்படுத்துவதனால், நம்முடைய மனம் தன்னையும் அறியாமல் ஊக்கத்தைத்தேடி மேற்கே செல்கிறது. அந்த மேற் றிசையோடு நாம் ஒரு நாளும் அந்தரங்கத் தொடர்பு கொள்ள முடியாது. அதன் பயனாக, நம்முடைய கல்வி பயன் விளைக்காததாய், அப்படி ஒருவேளை விளைத்தாலும் பொருத்த மற்ற பயனையே விளைவிக்கக் கூடியதாய் இருக்கும். நம்மிடத்திலுள்ள பல்வேறு மொழிகளையும் கண்டு நாம் அஞ்ச வேண்டியதில்லை. ஆனால் நம்முடைய பண்பாட்டு மொழியாக மிக நீண்ட தூரத்திற் கப்பால் இருக்கின்ற ஒரு தேசத்தின் மொழியைக் கடன் வாங்கி, அதன் பயனாக நம்மிடத்தில் இருக்கின்ற ஓடிச் செல்லும் ஆற்றை, ஓடாத ஆழமில்லாத, குட்டையாக மற்றுவதால் ஏற்படக் கூடிய தீய பலனைக் கண்டு நாம் அஞ்ச வேண்டும்.

## IX

ஆகவே, நாம் பெற வேண்டிய இந்தியக் கல்வியைத் தருகின்ற நிறுவனங்கள், பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருக்கும் பள்ளிக்கூடங்கள் கல்லூரிகள் ஆகியவற்றை விட்டு, அப்பால் இருக்க வேண்டும். பயனற்ற இந்த யந்திரங்கள் நம்முடைய நீதிமன்றங்களிலும், அலுவலகங்களிலும், சிறைச்சாலைகளிலும், பைத்தியக்கார ஆஸ்பத்திரிகளிலும் இன்னும் நம்முடைய நாகரிகத்தை வெளியிடும் ஆடம்பரப் பகுதிகளிலும் இடம் பெறட்டும்.

நம்முடைய நாடு பழத்தையும், நிழலையும் விரும்பினால் சுண்ணாம்பாலும், செங்கல்களாலும் கட்டப்பெற்ற கட்டிடங்களை விட்டொழிக்க வேண்டும். பழங்கால மாணாக்கர்கள் வேத காலத்தில் காட்டில் வாழ்ந்த ஆசிரியர்களைத் தேடிச் சென்று பெற்றதுபோல நாமும் சென்று, நம்முடைய உயிர்ச் சக்தியைப் வளர்த்துக் கொள்ள வேண்டு மென்று தைரியமாகச் சொல்வதற்கு நமக்கு ஏன் நெஞ்சுரம் இல்லை ? இவ்வாறு இல்லாவிட்டாலும், பௌத்த காலத்தில் நாளந்தாவிலும், தக்ஷசீலத்திலும் இருந்த பள்ளிக்கூடங்களைப் போல அவைகள் இல்லாவிட்டாலும், கொஞ்சங் கொஞ்சமாகச் சீரழிந்து கொண்டிருப்பினும் இந்தக் காலத்தில்கூட உயிரோடிருக்கின்ற 'டோல்கள்', 'சதுஸ்பாதிகள்' ஆகியவற்றிலாவது சென்று ஏன் நாம் கல்வியைப் பெறக் கூடாது ?

அதனை ஒரு பல்கலைக் கழகம் என்று அழைக்கக்கூட நாம் அஞ்சவேண்டும். அந்தப் பெயரைக் கேட்டவுடனேயே, அதை ஒப்பிட்டுப் பார்க்கவும், வருந்தத் தகுந்த முறையில் பிரதி செய்யவும் நம்மையும் அறியாமல் எண்ணத் தோன்றுகிறது. நூற்றுக் கணக்கான கைகளின் மூலம் சக்தியை வெளிப்படுத்துகின்ற ஒரு பெரிய கருவியைப்போல இதனை ஆக்கி, நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பல்வேறு வயதுடையவர்களையும் அதனிடத்தில் ஈர்த்து, அவர்களுக்குப் பல்வேறு வகையான கல்வியையும் அளித்து, அதன் பயனாக முழு இந்தியப் பண்பாட்டை உயிர்ச்சக்தி யுள்ளதாக ஆக்க வேண்டும்.

## X

அலகாபாத்திலுள்ள ஆங்கில - வட்டார மொழிப் பள்ளிக் கூடத்தில் வாசிக்கும் ஒரு மாணவனைப் பார்த்து, ஓர் ஆற்றை வருணிக்குமாறு கேட்டார்கள். அந்தக் கெட்டிக்காரப் பையன் சிறந்த முறையில் அதற்கு விளக்கம் தந்தான். ஆனால், அவன் எந்த ஆற்றைப் பார்த்தான் என்று கேட்டபோது, கங்கையும் யமுனையும் கூடுகின்ற திரிவேணி சங்கமத்தில் அவன் குடியிருந்த போதிலும், தான் எந்த ஆற்றையும் பார்த்ததில்லை யென்று அவன் பதில் கூறினன். அவன் அடிக்கடிப் பார்த்துப் பழகிய அந்த ஆறும், ஊரும் மிக உயர்ந்ததாகிய பூகோள சாஸ்திரத்தில் இடம் பெறமுடியா தென்று கருதினன் போலும்! அவனுடைய பிற் காலத்தில், அந்தப் பெரிய பூகோள சாஸ்திரத்தில் அவனுடைய நாட்டுக்குக்கூட ஓர் இடமுண்டு என்பதையும், அந்த நாட்டில்கூட ஆறுகள் உண்டென்பதையும் ஒருவேளை தெரிந்து கொண்டிருக் கலாம். ஒருவேளை யாராவது வெளி நாட்டான் அவனிடத்தில் வந்து, அவனுடைய தேசமும் பெரிய தேசம்தான் என்றும், இமய மலை மிகப் பெரிய மலை என்றும், சிந்து, கங்கை, பிரமபுத்திரா ஆகிய நதிகள் மிகப் பெரிய நதிகள் என்றும் சொல்கின்ற வரையில், அவன் அதுபற்றித் தெரியாமல்கூட இருந்திருக்கலாம். இவ்வாறு சொல்லப்பட்டால், அதனல் ஏற்பட்ட அதிர்ச்சி தாங்காமல் அதற்கு எதிர் நிகழ்ச்சியாகவும், இதுவரையில் அவனுக்கிருந்த அறியாமை யின் காரணமாகவும், அவன் வீட்டுக் கூரையின்மேல் ஏறிக்கொண்டு உலகத்திலேயே தன்னுடைய நாடுதான் சிறந்த சொர்க்கம் என்றும், மற்ற நாடுக ளெல்லாம் நாடுகளே அல்லவென்றும் கூறலாம். அவனு டைய உலகத்தைப் பற்றிய பழைய அறிவு, அவனுடைய அறியா மையின் காரணமாக, தவருக இருந்தது. ஆனல் பின்னர்

அறிந்த அறிவு, அந்த அறியாமையைவிட மோசமானது. ஏனென்றால் அவனுடைய உணர்ச்சி காரணமாக முழுப் பொய்யைச் சொல்லத் தொடங்கிவிடுகிறான்.

இந்தியப் பண்பாட்டைப் பொறுத்தவரையில் இதே நிலைமை தான் நிகழ்ந்து வருகின்றது. கல்வி நிலையங்களிலுள்ள குறைபாடு களின் காரணமாக இந்தியாவிற்குப் பண்பாடே இல்லை யென்றும், அப்படி யிருந்தாலும் அது சொல்லிக்கொள்ளக்கூடிய அளவுக்குக் கௌரவம் வாய்ந்த தன்று என்றும் நினைத்துக் கொண்டிருக்கிறோம். பிறகு யாராவது வேற்று நாட்டு அறிஞன் ஒருவன் இந்தியப் பண்பாட்டைப் புகழ்ந்து பேசும்போது, அதற்குமேல் நம்மால் பொறுக்க முடிவதில்லை. உடனே மற்ற நாட்டுப் பண்பாடுகள் எல்லாம் கேவலம் மனிதப் பண்பாடுகள் என்றும், நம்முடைய பண்பாடுதான் தெய்வீகப் பண்பாடு என்றும் தொண்டையைக் கிழித்துக் கொண்டு கத்துகிறோம்.

தனிப்பட்ட முறையில் ஆண்டவனால் படைக்கப் பெற்றவர்கள் என்றும், கடவுளின் மிகவும் நெருங்கிய இனத்தார் என்றும் சொல்லிக் கொள்கின்ற பேச்சுக்கள் காட்டுமிராண்டிக் காலத்தைச் சேர்ந்தவை. இன்று அவை பொய்யாகிவிட்டன என்பதை நம் மனத்தில் நன்கு பதித்துக்கொள்ள வேண்டும். இந்த நவீன காலத் தில் அனைத் துலகப் பண்பாட்டோடு தொடர்பில்லாத எந்த ஒரு தனிப்பட்ட பண்பாடும் உண்மையாக நிலைக்க முடியாது என்பதை அறிகிறோம். ஆயுள் முழுவதும் தன்னந் தனியனாகச் சிறையில் அடைக்கப்பட்ட ஒரு கைதி உலகத்திலிருந்து முற்றிலும் பிரிக்கப் பட்டு இருக்கிறான். அறிவுத் துறையில் தன்னந் தனியாக இருக்க வேண்டுமென்றே கடவுள் இந்தியாவுக்குத் தண்டனையிட்டுள்ளார் என்று யாரேனும் ஒருவன் கூறுவதும், இந்தியாவுக்குப் பெருமை தேடித் தராது.

நம்முடைய பண்பாட்டில் பல குறைபாடுகளும், வைத்தியக்கார நம்பிக்கைகளும் இருக்கின்றன வென்று எடுத்துக் காட்டப்படலாம். அதேபோலத்தான் ஐரோப்பியப் பண்பாட்டில் அரசியல் துறை யிலும், விஞ்ஞானத்திலும் இத்தகைய குறைகள் நிரம்பியுள்ளன. ஆனால், அந்தப் பண்பாடுகள் மாறிக்கொண்டும், இயங்கிக் கொண்டும் இருக்கின்ற காரணத்தால் அவற்றிலுள்ள குறைகள், ஆபத்தை விளைவிப்பதில்லை. உதாரணமாக ஐரோப்பாவிலுள்ள ஜாதிப் பிரிவினைகள் ஓயாது மாறிக்கொண்டே யிருந்தலின், அவ் வளவு கொடுமையை விளைப்பதில்லை.

சில ஆண்டுகளுக்கு முன்தான், "வலிமை பொருந்திய உயிர்கள் நிலைப்பதற்குச் செய்யும் போராட்டம்" என்ற பைத்தியக் காரக்கொள்கையின் அடிப்படையில் உலகம் முழுவதையும் பனிப் படலத்தின் மூலம், ஐரோப்பா பார்க்கத் தொடங்கியது. இத்தகைய ஒரு கொள்கை ஐரோப்பாவின் பார்வையையே கோணலாக்கி, அதனுடைய கருத்தையே ஒருவிதமாகச் செல்லுமாறு செய்து விட்டது. நாமும்கூடக் கீழ்ப் படியும் இயல்புடைய மாணுக்கர்களைப் போல இந்தக் கொள்கையை அவர்களிடத்திலிருந்து கடன் வாங்கிக் கொண்டேம். இந்தக் கொள்கையை நம்பவில்லை யென்று சொல்வது நமக்குக் கல்வி இல்லை யென்று சொல்வதுபோலக் கருதப்பெற்றது. ஆனுல், இப்பொழுதேகூட இந்தக் கொள்கையில் மாறுதல் தோன்ற ஆரம்பித்திருக்கிறது. இயற்கை தேர்ந்தெடுக் கும் சட்டத்தில்கூட (Laws of Natural Selection) உடன்பாட்டுச் சக்தி, பரிவுச் சக்தி, இணைக்கும் சக்தி ஆகியவையே அடிப்படை யாகும். 19-ம் நூற்றுண்டில் அரசியல் பொருளாதாரத்தின் அடிப் படை கட்டுப்பாடில்லாத போட்டியாகவே இருந்து வந்தது. ஆனுல் 20-ம் நூற்றுண்டில் அது கூட்டுறவாக மாறிக்கொண்டு வருகிறது.

இதே நேரத்தில், இந்தியாவிலுள்ள நாம் வாழ்க்கைப் பிரச்னை பற்றி ஆராய்ந்து கொண்டு வந்தோம். நாம் செய்த இந்தப் பரிசோதனையில் கிடைத்த விடைகள் ஐரோப்பாவில் கிடைத்த விடைகளுடன் மாறுபடுகின்ற காரணத்தால் இவற்றை ஒதுக்கிவிட முடியாது என்றுலும், அவை அப்படியே நிலைத்து நிற்கவும் கூடாது. மனிதன் புதிது புதிதாகக் காணும் காட்சிகளோடு இவையும் ஒன்று சேர்ந்து வாழ்க்கையில் மேலும் தொடர்ந்து செல்லவேண்டும்.

## XI

மிக நீண்ட காலமாக நம்முடைய பண்பாட்டை ஸம்ஸ்கிருதப் பாடசாலைகளிலேயே நிலைபெறுமாறு செய்து, அதனைத் தீண்டத் தகாததாகக்கூடச் செய்துவிட்டோம். அளவுக்கு மிஞ்சிய அவ மரி யாதையைப்போல், அளவு மீறிய மரியாதையும்கூடத் தீண்டத் தகாத சாதியை உண்டாக்க முடியும்.

ஒரு காலத்தில் ஜப்பானியச் சக்கரவர்த்தியாகிய மெக்காடோ, அவருடைய மக்களால் காட்டப்பெற்ற அளவு மீறிய மரியாதையின் காரணமாக, அவருடைய அரண்மனையிலேயே ஒரு கைதியாக இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. அதன் பயனுக, நாட்டை உண்மையாக ஆளும் சக்தி அவரிடம் இல்லாமல் ஷோகூன்

இடத்தில் அமைந்து விட்டது. அரசரே உண்மையில் ஆளவேண்டிய நிலை ஏற்பட்டவுடன் அவருடைய தனிப்பட்ட இடத்திலிருந்து, பொதுமக்கள் காணுமாறு, அவரை வெளியே கொண்டுவர வேண்டிய நிலை ஏற்பட்டது. இதேபோல நம்முடைய ஸம்ஸ்கிருதப் பாடசாலைப் பண்பாடு, ஏனைய பண்பாடுகளை யெல்லாம் கௌரவிக்காத முறையில், தன்னுடைய மறைவிடத்தில் தானே அடங்கி யிருந்தது. அந்தப் பண்பாட்டை, பிரம்மனுடைய வாயிலிருந்தே நேரிடையாக வந்தது என்றும், சிவனுடைய ஜடையிலிருந்து வந்தது என்றும் அதனால், அது உலகத்திலுள்ள மற்றப் பண்பாடுகளைப் போன்றதன்று என்றும், ஆகவே அதனைத் தனியாக வைத்துப் பாதுகாக்க வேண்டு மென்றும், சாதாரண மக்கள் அதனைத் தொட்டுத் தீட்டுப் படுத்திவிடக் கூடா தென்றும் அதன் புகழ் பாடிக்கொண்டிருந்தோம். இந்த முறையில் நம்முடைய நாட்டின் மெக்காடோவாக நம்முடைய பண்பாடு அமைந்துவிட்டது. ஆனால், அதே நேரத்தில் வெளிநாட்டுப் பண்பாடு, சுதந்திரத்தோடு சுற்றிவந்த காரணத்தால் ஷோகுனைப்போல ஆட்சிச் சிறப்புப் பெற்றுவந்தது. நம்முடைய மரியாதை யெல்லாம் ஒன்றுக்கும், ஆனால், செலுத்தும் வரிகளை யெல்லாம் மற்றொன்றுக்குமாகச் செலுத்திவந்தோம். ஆட்சி செய்யும் அந்தப் பண்பாட்டை வெறுத்துத் தனிப்பட்ட முறையில் எவ்வளவு திட்டினாலும், அந்தப் பண்பாட்டிற்கு நாம் அடிமையாக இருக்கின்ற நிலைமையை எவ்வளவு வெறுத்து ஒதுக்கினாலும், அதே நேரத்தில், நம்முடைய மனைவியின் ஆபரணங்களை விற்றோ அல்லது நம்முடைய பூர்வீகமான வீட்டை விற்றோ நம்முடைய பிள்ளைகளை இந்த வெளிநாட்டுப் பண்பாட்டின் தர்பாருக்கு அனுப்ப நாம் தவறவில்லை.

நம்முடைய பண்பாட்டை இவ்வளவு மரியாதையுடன் பொன் விலங்கிட்டு வைத்திருப்பதால் பயன் ஒன்றுமில்லை. செயற்கையான வேலிகள் எல்லாம் தகர்க்கப்படுகின்ற காலம் வந்துவிட்டது. எந்த ஒன்று அனைத்துலகப் பான்மையோடு அடிப்படையில் ஒற்றுமை கொண்டுள்ளதோ அதுவே நிலைத்து வாழ முடியும். தனித்திருக்கின்ற பொந்துக்குள் புகுந்து தன்னைத் தான் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்று நினைப்பது எதுவும் நிச்சயம் அழிந்து விடும். கைக் குழந்தையைத் தாங்கி யிருக்கின்ற தொட்டில், தனியான ஓர் இடத்தில் பாதுகாவலாக இருக்கவேண்டும். ஆனால், குழந்தை வளர்ந்து பெரியவனான பிறகும் இதே நிலைமை நீடிக்குமேயானால் அந்தப் பிள்ளை உடலாலும் மனத்தாலும் சோனியாகவே ஆகிவிடுவான்.

சீனு, பர்சியா, எகிப்து, கிரேக்கம், ரோம் ஆகிய நாடுகள் தனித் தனியான முறையில் தங்கள் தங்கள் நாகரிகங்களைப் பாது காத்து வந்த காலம் ஒன்று உண்டு. இந்த ஒவ்வொரு நாகரிகமும் ஓரளவு அனைத் துலகப் பான்மையைப் பெற்றுத் தனித்துவம் என்ற உறைக்குள் பலத்துடன் வளர்ந்தன. ஆனால், கூட்டுறவு, ஒன்று சேர்ந்து உழைத்தல் ஆகியவற்றுக்குரிய காலம் இப்போது வந்துவிட்டது. குறிப்பிட்டதும் மூடி மறைக்கப்பட்டதுமான இடங்களில் நாற்று விட்ட விதைகள், இப்போது திறந்த வயல்களில் மறுபடியும் பிடுங்கி நடப்பெற வேண்டும். அவற்றின் முழு மதிப்பையும் பெற வேண்டுமே யானால் உலகச் சந்தையில் போட்டியிட்டு அவற்றைப் பெறவேண்டும்.

ஆகவேதான், உலகப் பண்பாடுகள் அனைத்தையும் ஒன்றுக்கிக் கொடுக்கல், வாங்கல் என்ற இந்தப் புதிய வயலைத் தயார் செய்கிறோம். பிற நாட்டு முறைகளை, அறிவுத் துறைகளை ஒப்பு நோக்கிப் படிப்பதால் நம்முடைய அறிவுத் துறையில் ஒருவகை மாற்றத்தை மேற்கொண்டு, அதன் பயனுக முன்னேற்றத்தைச் செய்யும் அறிவுத் துறைக் கூட்டுறவை நவீன காலத்தின் உயிர் நாடி என்று சொல்லுகிறோம். நம்முடைய தனித் தன்மையைப் பாதுகாவலான இடமென்று கற்பனை செய்யப்பெற்ற ஓர் இடத்தில் வைத்துக் காப்பாற்ற வேண்டுமென்று நாம் விரும்பினுலும், நம்முடைய பாதுகாவலான இடத்தை விட, உலகம், தான் வலிமை யுடைய தென்பதைக் காட்டிவிடும்.

உலகத்திலுள்ள பிற பண்பாடுகளைப் பார்த்து, அறிந்து, அவற்றோடு கூட்டுறவு செய்வதற்கு முன்னர், இந்தியாவினுள்ளே இருக்கின்ற பல்வேறு மாறுபட்ட மூலப் பொருள்களிலிருந்தும் ஒரு கலப்புப் பண்பாட்டை நாம் உண்டாக்க வேண்டும். அத்தகைய ஒரு கலப்புப் பண்பாட்டின் மேல் நின்று, மேனுட்டைத் திரும்பிப் பார்த்தால் நம்முடைய பார்வையில் கோழைத்தனமோ கண் கூச்சமோ இராமல், நம்முடைய தலைகள் நிமிர்ந்து நிற்க முடியும். அப்போது இந்த உயர்ந்த ஸ்தானத்தில் நின்று சத்தியத்தை நேருக்கு நேராகக் கண்டு அதற்குரிய புதிய வழிகளையும் சிந்தனைகளையும் காண முடியும். இவ்வாறு செய்யும்போது உலகம் நமக்கு நன்றி பாராட்டும்.

## XII

எல்லாப் பெரிய நாடுகளும் தம்முடைய அறிவுத் துறை வாழ்வை முன்னேற்றக்கூடிய முக்கியமான நிலையங்களைப் (மையங்

களைப்) பெற்றுள்ளன. அந்த இடங்களில் கல்வியின் நிலை மிக உயர்தரமானதாகப் போற்றப் பெற்று மக்களின் மனங்கள் மகிழ்ச்சிகரமான சூழ்நிலையில் தங்களுடைய தகுதியை நிரூபிக்கின்ற நிலையில் உள்ளன. நாட்டின் பண்பாட்டிற்கு வேண்டிய உதவிகளைச் செய்து, அறிவுத் துறையில் ஒரு தியாகத் தீயையே அணையாமல் இந் நிலையங்கள் வைத்துள்ளன. இந்தத் தீ எல்லாத் திசைகளிலும் தன்னுடைய புனிதமான ஒளியைப் பரப்புகின்றது.

ஏதன்ஸ், ரோம் ஆகிய இடங்கள் இத்தகைய மையங்களாக இருந்தது போக, இன்று பாரீஸ் இதே நிலையைப் பெற்றுள்ளது. நம்முடைய ஸம்ஸ்கிருதப் பண்பாட்டிற்கு இத்தகைய ஒரு நிலைக்களமாக பனாரஸ் இன்றும் இருந்து வருகிறது. ஆனால் ஸம்ஸ்கிருதத்தைக் கற்பதன் மூலம் இந்தியாவிலுள்ள எல்லாப் பண்பாடுகளையும் அறிந்துகொள்ள முடியாது.

ஒரு சிலர் கூறுவது போல், நவீன காலத்தில், பண்பாடு என்ற பெயருக்கே ஐரோப்பியப் பண்பாடு ஒன்றுதான் தகுதியுடையது என்பதை நாமும் ஏற்றுக்கொண்டால், அடுத்தபடியாக, அந்தப் பண்பாட்டை வளர்க்கக் கூடிய நிலையங்கள் ஏதேனும் இந்தியாவில் உண்டா என்ற வினாத் தோன்றுகிறது. இந்திய வாழ்க்கையோடு என்றும் வற்றாத் தொடர்பு எதையேனும் அந்தப் பண்பாடு கொண்டுள்ளதா என்பதையும் சிந்திக்கவேண்டும். அதற்கு விடை என்னவென்றால், இதுவரையில் அத்தகைய தொடர்பு எதுவும் இல்லையென்பதோடுகூட, இனியும் அவ்வாறு இருக்க முடியாது என்பதேயாகும். ஐரோப்பியப் பண்பாட்டின் வற்றாத ஊற்று ஐரோப்பாவில்தான் இருக்க முடியும். இந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டு, நம்முடைய வாழ்வுக்கு அது ஒன்றுதான் ஆதாரம் என்று நினைப்போமேயானால், அது, நம்முடைய விடியற் காலத்துக்குச் சூரியனை அல்லாமல் ஏதோ தூரத்திலுள்ள மற்றொரு நட்சத்திரத்தையே நம்பியிருப்பது போலாகும். அத்தகைய ஒரு நட்சத்திரம் நமக்கு ஒளியைத் தருமே தவிர, பகல் நேரத்தைத் தர முடியாது. நம்முடைய பயணத்தில் அந்த நட்சத்திரம் திசை காட்ட முடியுமே தவிர, உண்மையின் முழு வடிவத்தை நம் எதிரே திறந்து காட்ட முடியாது. உண்மையைக் கூறப்போனுல், ஆழ [illegible] முடியாத வாழ்க்கையில் ஒரு தூண்டுதலைச் செய்யவோ அல்லது நம்முடைய வாழ்க்கைக்கு நிறத்தையும், மலர்ச்சியையும் தரவோ இந்த நட்சத்திர ஒளியால் முடியாது.

இதனால்தான் இந்தியாவைப் பொறுத்தமட்டில், ஐரோப்பியக் கல்வி என்பது பண்பாட்டுப் படிப்பாக இல்லாமல் வெறும் பள்ளிப்

படிப்பாகவே நின்றுவிட்டது. அந்தக் கல்வி, பல்வேறு வகைகளில் பயன்படக்கூடிய நெருப்புப் பெட்டியாக இருக்கின்றதே தவிர, உயிர்த் தத்துவமும், அழகும், பயனும் ஒன்ருகக் கலந்துள்ள காலை ஒளியாக ஒருநாளும் இருக்க முடியவில்லை. இதே காரணத்தினுல்தான் இந்தியாவிலேயே பல நிலையங்களைத் தோற்றுவிக்க வேண்டு மென்றும், அந்த நிலையங்களில் இந்தியாவின் அறிவாற்றல் முழுவதும் ஆக்க வேலைக்கு ஒன்றுகூட வேண்டு மென்றும் கீழ்நாடு—மேஞடு ஆகியவற்றிலுள்ள அறிவு ஆதாரங்கள், சிந்தனை ஆதாரங்கள் அனைத்தும் ஒன்று கலந்த முறையில் இங்கே குவிய வேண்டு மென்றும் இந்தியாவின் அந்தராத்மா கூவி அழைக்கிறது. பழங்காலத்திய பிரம்மவிருத்தம், ஜனகன் காலத்திய மிதிலை, விக்கிரமாதித்தன் காலத்திய உஜ்ஜயினி[3] ஆகியவற்றை நவீன முறையில் அமைக்கவேண்டு மென்று இந்தியா விரும்புகிறது. தன்னுடைய மனத்தைத் தானே தெரிந்துகொண்டு, அதனை உலகம் முழுவதற்கும் வழங்குகின்ற சந்தர்ப்பத்தை இந்த நாடு எதிபார்க்கிறது. அப்போதுதான் பிரிந்து கிடக்கின்ற ஆற்றலால் ஏற்படும் குழப்பத்திலிருந்து விடுபட்டுக் கடன் வாங்கிய சக்தியால் வலுவிழக்காமல் இருக்க முடியும்.

## XIII

ஒரு பண்பாடு வெளி நாட்டில் தோன்றியது என்பதற்காக, அதில் நாம் நம்பிக்கை இழக்கவில்லை யென்பதை மிகத் தெளிவாக இங்கே சொல்லிவிட விரும்புகிறேன். அதற் கெதிராக, வெளியிலிருந்து வருகின்ற சக்திகள் கொடுக்கின்ற அதிர்ச்சியின் மூலந்தான் நம்முடைய அறிவுச் சக்தியை நிலைபெறச் செய்ய முடியும். கிறிஸ்துவச் சமயத்தின் தத்துவம் முழுவதும், ஐரோப்பாவின் பழைய பண்பாட்டிற்கும், ஐரோப்பியர்களுடைய குண நிலைகளுக்கும் எதிராகவே அமைந்துள்ளன என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும். என்ருலுங்கூட, ஐரோப்பாவின் இயல்பான எண்ணங்களுக்கு எதிராகச் சொல்லப் பெறுகின்ற இந்த இயக்கம் தான் ஐரோப்பாவின் நாகரிகத்தை வலுப்படுத்தவும், வளப்படுத்தவும் முக்கியமான காரணமாக இருந்தது. உண்மையைக் கூறுமிடத்து, எந்தத் திசையிலிருந்து எதிர்ப்புத் தோன்றியதோ, அந்தத் திசையிலேயே அது மிகவும் வலுவடைந்தது. பிற நாட்டில் தோன்றியதாகிய இந்தக் கிறிஸ்துவச் சமயக் கொள்கைகளால்தான், அதாவது அந்தக் கொள்கையின் கீழை நாட்டுவடிவம், உணர்ச்சி ஆகியவற்ருல்தான், ஐரோப்பிய மொழிகள் முதன் முதலில் விழிப்படைந்து

பயனுள்ள தெம்பைப் பெற்றன. இதே சம்பவந்தான் இந்தியாவிலும் நிகழ்ந்துகொண் டிருக்கிறது. ஐரோப்பியப் பண்பாடு, தன்னுடைய அறிவை மட்டும் நம்மிடம் கொண்டு வராமல், அதனுடைய வேகத்தையும் நம்மிடம் கொண்டுவந்து விட்டது. அந்தப் பண்பாட்டை நாம் ஏற்றுக்கொண்டு ஜீரணம் செய்வது நல்ல முறையில் அமையாவிட்டாலும், அதன் பயனாகப் பிழைகள் பல நேர்ந்தாலும், அது நம்முடைய பழகிப்போன பழக்க வழக்கங்களிலிருந்து நம்முடைய அறிவு வாழ்க்கையை விடுவிக்கப் பயன்பட்டது. நம்முடைய மரபுக்கு விரோதமாக அது தருகின்ற செய்திகள், நம்முடைய மனச்சான்றை ஒளி பெறச் செய்கின்றன.

பிற நாட்டுப் படிப்பானது நம்முடைய தேசீய மனத்தை முழுதும் கொள்ளை கொண்டு, உண்மையின் அமைப்புகளைக் கண்டு புதிய எண்ணங்களை நாம் பெற முடியாமல் செய்து விடுகின்ற இந்தச் செயற்கை அமைப்புச் சூழ்நிலையைத்தான் எதிர்க்கிறேன். இதன் காரணமாகத்தான் நம் பண்பாட்டிலுள்ள எல்லா உறுப்புக்களையும் வலுப்படுத்தவேண்டு மென்று நான் கூறுகிறேன். மேல்நாட்டுப் பண்பாட்டை எதிர்த்துப் போராடாமல் அதனை ஏற்றுக் கொண்டு ஜீரணிக்கவேண்டு மென்று சொல்லுகிறேன். அது நமக்கு ஊட்டமாக வரவேண்டுமே தவிர, பாரமாக வரக் கூடாது. அந்தப் பண்பாட்டைப் பெற்றுக்கொண்டு, நாம் தலைவர்களாக இருக்க வேண்டுமே தவிர, வெறும் ஏட்டுக் கல்வியையும் புத்தகப் படிப்பையும் ஏற்கின்ற பாரம் தாங்கிகளாக ஆகி விடக் கூடாது.

## XIV

இந்தியப் பண்பாட்டின் முக்கியமான ஆறு நான்கு கிளைகளாகப் பாய்ந்தது. வேத பௌராணீக[4], பௌத்த, ஜைனக் கிளைகளாகும் அவை. இந்திய மனச்சான்று என்ற உயரமான இடத்திலிருந்து இந்த முக்கியமான ஆறு தொடங்கியது.

ஒரு நாட்டிற்குரிய ஆறு, அந்த நாட்டிலுள்ள தண்ணீரை மட்டும் பெறுவதில்லை. திபெத்தில் தோன்றுகின்ற பிரம்மபுத்திரா, இந்தியாவில் தோன்றுகின்ற கங்கையோடு கலக்கின்றது. அதே போல, இந்தியாவின் மூலப் பண்பாட்டிற்கும் இத்தகைய உபநதிகள் சேர்ந்துள்ளன. உதாரணமாக, முஸ்லீம்கள் வெளி நாட்டிலிருந்து பலமுறை இந்தியாவிற்குள் வந்து தங்களுடைய அறிவுக் களஞ்சியத்தையும், ஆச்சரியப்படும்படியான சமய • ஜனநாயகத்

த்தையும் கொண்டு வந்து சேர்த்து, இந்த ஆற்றை வெள்ளம் பெருக் கெடுத்தோடச் செய்தார்கள். நம்முடைய இசை, கட்டடக் கலை, ஓவியக் கலை, இலக்கியம் ஆகிய அனைத்திற்கும் முஸ்லீம்கள் தங்களுடைய நிலையான உயர்ந்த தானங்களைச் செய்துள்ளார்கள். இடைக் காலத்தில் நம்முடைய நாட்டில் வாழ்ந்த ஞானிகளுடைய வரலாற்றையும், நூல்களையும் கற்கின்றவர்களும், முஸ்லீம்கள் நம்முடைய நாட்டை ஆண்ட காலத்தில் இங்குத் தோன்றிய சமய இயக்கங்களை அறிந்தவர்களும் மட்டுமே வெளி நாட்டிலிருந்து வந்த இந்த வெள்ளம் நம்முடைய வாழ்க்கையோடு எந்த அளவுக்கு இரண்டறக் கலந்துள்ளது என்பதையும், எவ்வளவு தீவிரமான முறையில் நாம் இவர்களுக்குக் கடன்பட்டுள்ளோம் என்பதையும் அறிந்துகொள்ள முடியும்.

இதனை யடுத்து, மேலை நாட்டுப் பண்பாடாகிய பெரு வெள்ளம் புகுந்து எல்லாக் கரைகளையும், அடைப்புகளையும் உடைத்துக் கொண்டு, மற்ற எல்லா ஆறுகளையும்கூட அதனுடைய வேகத் தினால் ஒன்றாக்கி விட்டது. இந்த வெள்ளம் ஓடிச் செல்வதற்குரிய ஒரு கால்வாயை உண்டாக்கினாலொழிய நம்மை மூழ்கடித்து விடக்கூடிய இந்த வெள்ளத்திலிருந்து தப்பித்தல் என்பது முடியாத காரியம்.

பல்வேறு வகைப்பட்ட இந்தப் பண்பாடுகளை யெல்லாம், அதாவது வேத, பௌராணிக, பௌத்த, ஜைன, இஸ்லாமிய, சீக்கிய, சொரேஸ்டானியப் பண்பாடுகளை யெல்லாம் ஒற்றுமைப் படுத்திப் படிப்பதற்குரிய வாய்ப்பை நம்முடைய இந்தியக் கல்வி நிலையத்தில் உண்டாக்க வேண்டும். இவைகளை யடுத்துக் கூடவே, ஐரோப்பியப் பண்பாடுகளையும் கற்றால்தான் இவற்றை ஜீரணிக்க முடியும். கரைக்குள் அடங்கி ஓடுகின்ற ஆறு உண்மையி லேயே நம்முடையதுதான். ஆனால், வெள்ளம் வரும்பொழுது நமக்கும் ஆற்றுக்கும் உள்ள தொடர்பு ஆபத்துக்களால் நிறைந்துள்ளது என்பதை மறக்கக் கூடாது. பழங்காலச் செல்வ மாகிய ஞானக் களஞ்சியங்களைப் பெற்றுள்ள நம்முடைய மொழி களைக் கற்பதோடு, நவீன இந்தியாவின் பண்பாடுகளைத் தாங்கி நிற்கும் எல்லா மொழிகளையும் கற்றே தீர வேண்டுமென்று சொல்லத் தேவையில்லை. இன்று உயிரோடு வாழும் இம் மொழிகளை அல்லாமல் நாடோடி இலக்கியத்தையும் கற்க வேண்டும். அந்த நாடோடி இலக்கியந்தான் நம்முடைய மக்களின் மனோதத்துவத்தை நாம் அறியுமாறு செய்து, நம்முடைய நாட்டு மக்களின் புறத்தே

காணப் பெருததும், ஆழமானதுமான வாழ்க்கை ஓட்டம் எந்தத் திசையில் செல்கிறது என்பதையும் நமக்கு அறிவுறுத்தும்.

ஒரு சிலர், பழமையை அவமானப்படுத்துகின்ற முறையில் புதுமைக் கோலம் தாங்கி, பழமையில் ஒன்றுமே இல்லை யென்றும், கடனைத தவிர வேறொன்றையும் பழமை நமக்கு விட்டுச் செல்ல வில்லை யென்றும் நம்புகிறார்கள். முன்னே படையெடுத்துச் செல்கின்ற படை வீரர்களுக்குப் பின்னே இருந்துதான் உணவளிக்க முடியும் என்பதை அவர்கள் நம்ப மறுக்கிறார்கள். வரலாற்றி லுள்ள மறு மலர்ச்சிக் காலங்கள் எல்லாமே, அந்த மக்கள் தங்களுடைய பழமையாகிய களஞ்சியத்திலிருந்து புதுமை வித்தை எடுத்துக் கொண்ட காலம்தான் என்பதை அத்தகைய மக்களுக்கு நினைவூட்ட வேண்டும்.

பழங்காலத்தின் அறுவடையை இழந்துவிட்ட துரதிர்ஷ்டம் பிடித்த மக்கள், நவீனக் காலத்தையும் இழந்ததாகவே கருதப் பெறும். விளைவைச் செய்வதற்குரிய வித்தை இழந்துவிட்ட அவர்கள் அன்றாட வாழ்க்கைக்குக்கூடப் பிச்சை யெடுக்க வேண்டிய நிலையில் உள்ளார்கள். உலகத்திலுள்ள சிலரைப் போல நாமும் பெற்றோர்களால் வெருட்டி அடிக்கப்பட்ட மக்கள் என்று கற்பனை செய்துகொள்ள வேண்டா. நம்முடைய மூதாதையர்களின் கருவூலங்களை உடைத்து, நம் வாழ்வு நாகரிகத்திற்குப் பயன்படுத்த வேண்டிய காலம் வந்துவிட்டது. இனிமேலாவது அந்தப் பழமை யினுடைய உதவியால் நம்முடைய எதிர்காலத்தை வலுவுடைய தாகச் செய்து கொள்வோமாக. இனிமேலாவது மற்றவர்களுடைய குப்பைத் தொட்டிகளில் கந்தல் துணியைப் பொறுக்குகின்ற வேலையை விட்டு விடுவோமாக.

## XV

இதுவரையில் கல்வியின் அறிவுப் பகுதியைப் பற்றி மட்டும் பேசிக் கொண்டு வந்தேன். இது ஏனென்றால், சந்திரன், சூரியனுக்கு ஒரே பாகத்தைக் காட்டுவதுபோல, நவீன இந்தியாவி லுள்ளவர் களாகிய நாம் உலகப் பண்பாட்டிற்கு நம்முடைய வாழ்வின் அறிவுப் பகுதியை மட்டுமே காட்டிக்கொண்டு வந்திருக்கின்றோம். நம்முடைய மற்றொரு பாகத்தையும் கூட ஒளி பெறச் செய்ய வேண்டுமே யானால் அப் பகுதியையும் சூரியனை நோக்கித் திருப்பவேண்டு மென்பதை இன்னும் நாம் புரிந்து கொள்ளவில்லை. கல்வித் துறையிலிருந்து நோக்கும் பொழுது, ஐரோப்பாவின் விஞ்ஞானப் பகுதியையும்

இலக்கியப் பகுதியையும் நாம் நன்கு காணுகின்றோம். எனவே, நவீனப் பண்பாடு என்பது பற்றிய நம்முடைய கருத்துக்கள் எல்லாம் இலக்கணம், சோதனை சாலை என்ற இரண்டு எல்லைக்குள் அமைந்து விடுகின்றன. இதன் பயனாக மனிதனுடைய முருகியல் (aesthetic) வாழ்க்கையையே மறந்து விட்டு அதில் முள்ளும் கல்லும் மண்டுமாறு விட்டுவிட்டோம்.

எனவே, இசையும் நுண் கலையுமே தேசீய சுய வெளிப்பாட்டைக் காட்டுகின்ற மிக உயர்ந்த வழிகள் என்பதையும், இவை இல்லையானால் அந்த மக்கள் சுய வெளிப்பாடு இல்லாமல் சமைந்து விடுவார்கள் என்பதையும் மறுபடியும் வலியுறுத்த விரும்புகின்றேன்.

விழிப்புடைய நம்முடைய புறமனம், வாழ்வின் புறப் பகுதிகளை மட்டுமே பற்றி நிற்கின்றது. குவிந்துள்ள நம்முடைய அக மனம் எல்லை காண முடியாத ஆழ முடையது. பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக வளர்ந்துள்ள ஞானம் அங்கேதான் தழைத்து நிற்கின்றது. நம்முடைய கண்ணெதிரே மாறி மாறி நடைபெறு கின்ற நிகழ்ச்சிகளில் நம்முடைய புற மனம் தன்னைத் தான் காணு கின்றது. ஆனால் நம்முடைய ஆன்மா தங்கி யிருக்கின்ற அக மனமும்கூடத் தன்னை வெளிப்படுத்திகொள்ளக் கூடிய சூழ்நிலை களைப் பெற வேண்டும். இந்தச் சூழ்நிலைகள் கவிதை, இசை, கலைகள் ஆகியவை தாம். இங்கேதான் மனிதனுடைய முழு ஆளுமையும் வெளிப்பாட்டைக் காணுகின்றது.

மர வியாபாரி ஒருவன் மரத்தின் சிறு கிளைகளும், பூக்களும் மரத்திற்குரிய அர்த்த மற்ற அலங்காரங்கள் என்று நினைக்கலாம். ஆனால், இந்தக் கிளைகளையும் பூக்களையும் வெட்டி விட்டால் மரமும் கூடவே பட்டுப் போகும் என்பதை அவன் அறிய வேண்டும்.

மொகலாயர்கள் காலத்தில் இசையும், கலையும் அரசருடைய ஆதரவைப் பெற்றிருந்தன. இது ஏனென்றால், ஆட்சிக்காக மட்டும் இந்தியாவில் வாழாமல் அவர்கள் முழு வாழ்க்கையையும் இங்கேயே கழித்தார்கள். மனிதனுடைய முழு வாழ்வின் முழுத் தன்மையிலிருந்துதான் கலை பிறக்கிறது. நம்முடைய ஆங்கில ஆசிரியர்கள் இடைத் தங்கலாக இங்கே வந்திருக்கின்ற பறவைகள். நம்மிடத்தில் அவர்கள் குரல் எழுப்புகிறார்களே தவிர, பாட முடிய வில்லை. அவர்களைப் பொறுத்தமட்டில், தேசப் பிரஷ்டம் செய்யப் பெற்றவர்களைப் போன்று இந்த நாட்டில் இருப்பதால் அவர்களுடைய மனம் இங்கு லயிப்பதில்லை. அவர்களுடைய கலைக்கும் இசைக்கும்

இயல்பான இடம் ஐரோப்பாதான். அங்கே அவர்களுடைய கலை களும், இசையும் மிக ஆழமாக வேர் விட்டிருக்கின்ற காரணத்தால் அந்த மண்ணையே இங்குப் பெயர்த்து வைத்தாலொழிய, அந்தக் கலைகளை இங்கே வளர்க்க முடியாது.

இந்தியாவில் நாம் காணுகின்ற ஐரோப்பியர்கள் கற்றறிவுடைய வர்களாய், தலைமையிடத்தி லுள்ளவர்களாய், வாணிகத்திலும் அரசியலிலும் சுறுசுறுப்புடன் ஈடுபட்டவர்களாய் இருக்கிறார்க ளாத லால், அவர்களை மட்டும் காணுகின்ற நாம், அவர்கள் கலைத் திறமையோடு ஆக்க வேலையில் ஈடுபட்டிருப்பதைக் காண முடிவ தில்லை. இதனால்தான் நவீன ஐரோப்பா நமக்கு முழு ஆளுமையுடன் காட்டப்படவில்லை. நாம் காணுகின்ற தெல்லாம் அதனுடைய அறிவாற்றல் பகுதியையும், பயன்படு பகுதியையுமே யாகும். ஆகவேதான், நவீன ஐரோப்பா நம்முடைய அறிவையும், பயன் படுத்துகின்ற பேராசையையும் மட்டும் தொட்டு விட்டுவிட்டது.

பண்பாட்டின் இந்தக் குறுகிய மனப்பான்மை நம்முடைய வாழ்வை அலைக்கழிக்க இனி நாம் விடக் கூடாது. நாம் நிறுவப் போகும் பண்பாட்டு நிலையத்தில் இசையும் கலையும் மிக முக்கியமான இடத்தைப் பெற வேண்டும். இவ்வாறு கூறுவதால் ஏதோ அவையும் இருந்துவிட்டுப் போகட்டும் என்று நினைக்கின்ற மனப் பான்மையை மட்டும் குறிப்பிடவில்லை.

முருகியல் ரசனையில் ஒரு முக்கியமான தரத்தை இந்த முறையில் வளர்க்க வேண்டும். இதன் உதவியால் நம்முடைய கலைகள் வலுவும் வளமும் பெறும். இதன் பயனாக, பிற நாட்டுக் கலைகளை யெல்லாம் நடுநிலைமையோடு கண்டு, அவற்றைப் பிரதி செய்தோம் என்ற கெட்ட பெயர் இல்லாமல், அவற்றின் தகுதி களையும், வடிவங்களையும் நாம் பெற்று ஜீரணிக்க முடியும்.

## XVI

இரண்டு மாபெரும் பிரச்னைகள் நம்மை எதிர்நோக்கி இருக் கின்றன. ஒன்று நம்முடைய அறிவு வாழ்க்கையில் ஏற்பட்ட வறுமை. மற்றொன்று நம்முடைய உலகாயத வாழ்க்கையில் ஏற்பட் டுள்ள வறுமை.

முதலாவது வறுமையைப் பற்றி இந்தக் கட்டுரையில் விரி வாகப் பேசியுள்ளேன். நம்முடைய மன வாழ்வு முழுத் தன்மை அடைய வேண்டுமானால், நம்முடைய பண்பாட்டு ஆதாரங்கள்

அனைத்தையும் ஒன்று சேர்க்க வேண்டியது முக்கிய மென்ற முடிவுக்கு வந்துள்ளேன். நம்முடைய மனத்தைப் பொறுத்தவரை, அதனை நிலைபெறச் செய்வதற்குத் தேவையான பல உறுப்புக்களில் ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டும் நவீனக் கல்வி பெற்றுள்ள தென்பதைக் கண்டு பிடித்தேன். அந்த ஒரு பகுதிகூடப் புதியதாக இல்லாமல் காயவைத்துத் தகர டப்பாக்களில் அடைக்கப் பெற்ற பொருளாகவும் இருக்கக் கண்டேன். சீரான உணவுக்குப் (சமன் செய்த உணவு) பல்வேறு பொருள்களும் கலந்த ஓர் உணவு வேண்டும். இந்தப் பொருள்கள்கூடப் பரிசோதனை சாலையில் தயாரிக்கப்படாமல், காயவைத்து டப்பாக்களில் அடைக்கப்படாமல் வளர்ச்சி யடைகின்ற நம்முடைய உறுப்புக்களைப் போல உயிருள்ள, வளர்கின்ற பொருள்களாக இருக்க வேண்டும்.

நம்முடைய லெளகீக வறுமையைக்கூடத் தனிப்பட்ட சக்தி களை ஒன்று சேர்த்துக் கூட்டுறவு முறையில் முயல்வதன் மூலந்தான் போக்க முடியும். ஆகவே இந்த நிறுவனங்கள்கூடப் பொருளாதாரக் கூட்டுறவு முறையில்தான் அமைக்கப்பெற வேண்டும். அது வெறும் ஆசிரியப் பணியை மட்டும் புரியாமல் வாழ்ந்து காட்டுவதாய், வெறும் சிந்தனை சக்தியோடு நின்று விடாத தாய் அமைய வேண்டும். ஒரு காலத்தில் இயல்பாக நமக்கு அமைந் துள்ள பல்கலைக் கழகங்களாகிய தபோவனங்கள்[5] வாழ்க்கையி லிருந்து பிரிந்து நிற்கவில்லை. அங்கு ஆசிரியர்களும் மாணவர் களும் முழு வாழ்வையும் கழித்தார்கள். அங்கே, அவர்கள் பழங் களையும் விறகுகளையும் சேகரித்ததோடு, ஆடு மாடுகளையும் புல் மேய ஓட்டிச் சென்றார்கள். மாணவர்கள் பெற்ற ஆன்மீகக் கல்வி, அவர்கள் வாழ்ந்து காட்டிய ஆன்மீக வாழ்வோடு தொடர்புடைய தாகவே இருந்தது.

நாம் நிறுவப்போகும் பண்பாட்டு நிலையம் இந்தியாவின் அறிவு வாழ்க்கையின் மையமாக இருப்பதோடுகூட, அதன் பொருளாதார வாழ்க்கையின் மையமாகவும் இருக்க வேண்டும். நிலத்தைப் பயிரிடுதல், மாடுகளை வளர்த்தல் ஆகியவற்றைச் செய்து, தன்னை யும் மாணவர்களையும் பீடித்திருக்கும் பசிப் பிணியைப் போக்குவ தோடு, சிறந்த மூலப் பொருள்களை உபயோகப்படுத்தி, விஞ்ஞானத் தின் உதவி கொண்டு சிறந்த பொருள்களைத் தயாரித்துத் தேவை களை யெல்லாம் பூர்த்தி செய்துகொள்ள வேண்டும். கூட்டுறவு முறையில் அந்த நிலையம் மேற்கொள்ளும் தொழில் முயற்சிகளைப் பொறுத்தே நிலையத்தின் வாழ்வும் வெற்றியும் அமையும். இந்தக்

கூட்டுறவு முறையால்தான் ஆசிரியர்களும், மாணவர்களும் உயிர்த் தொடர்பு கொண்டவர்களாக நெருங்கிய பிணைப் புள்ளவர்களாக வாழ முடியும். மேலும் இதனால் இலாபத்தையே பெரு நோக்கமாகக் கொள்ளாத முறையில், தொழில்முறைப் பயிற்சியும், நடைமுறைப் பயிற்சியும் நமக்குக் கிடைக்கும்.

அத்தகைய ஒரு நிறுவனம், அதன் அண்மையிலுள்ள கிராமங் களை யெல்லாம் தன்னுடன் இணைத்துக்கொண்டு பொருளாதார முயற்சிகளில் ஈடுபட வேண்டும். இந்தக் கிராம மக்களுடைய வீடுகள், சுகாதாரம் என்பவற்றோடு, அவர்களுடைய நல்லொழுக்க, அறிவு வாழ்க்கையையும் சீர்திருத்த முற்படுவதே சமுதாயத் துறையில் நிறுவனத்தின் பணியாகும். சுருங்கக் கூறுமிடத்து, ஏதோ ஓர் உலகத்தின் ஒரு துண்டமாகவுள்ள எரி நட்சத்திரமாக இல்லாமல், தன்னைத் தானே காத்துக்கொள்ளக் கூடியதாய், மேலும் மேலும் புதிய வாழ்வு பெருகுவதாய், காலம் இடம் இரண்டையும் தாண்டி ஒளிவீசக் கூடியதாய், தன்னைச் சுற்றிப் பல ஸ்தாபனங்கள் நிலைபெற இடமளிப்பதாய், மனிதனுடைய முழு வாழ்வுக்கு உயிர்ப்பு அளிப்பதாய், அறிவு நிறைந்ததாய், பொரு ளாதார வசதி கூடியதாய், ஆன்மீக விடுதலைக்கு ஏற்ற முறையில் சமுதாய அமைப்புக் கொண்டதாய் உள்ள ஒரு முழு உலகமாக அது அமைய வேண்டும்.

## XVII

இந்தக் கட்டுரையை நான் முடிக்கும் முன்னர் இங்கித மறிந்த ஒரு வினவை ஆராய வேண்டும். 'விசுவபாரதி' என்று பெயரிட விரும்பியுள்ள இந்த இந்தியப் பண்பாட்டு நிலையத்தில் எத்தகைய சமய போதனை கற்பிக்கப்பெற வேண்டும்? இதுவரையில் நாம் தேசீயப் பள்ளிக்கூடங்கள் என்று சொல்லிக் கொள்ளும் நிறுவனங் களில் எல்லாம் இந்தக் கேள்வியைக் கவனிக்காமல் ஒதுக்கிச் சென்றிருக்கிறார்கள். தேசீயப் பல்கலைக் கழகம் என்பது ஹிந்துப் பல்கலைக் கழகத்திற்கே மற்றொரு பெயர் என்று நம்பிக் கொண் டிருக்கிறோம். இந்தப் பிரச்னையை ஆராயும்பொழு தெல்லாம் ஹிந்து சமயத்தை மட்டுமே நாம் கருத்தில் கொண்டிருக்கிறோம். ஒரு மாபெரும் இந்தியாவைப் பற்றிச் சிந்திக்க முடியாத காரணத்தால் சமுதாயப் பழக்க வழக்கங்களிலும், சமயச் சடங்குகளிலும் பிரிவினை செய்வதுபோலப் பண்பாட்டிலும் பிரிவினை செய்து விடுகிறோம். மற்றொரு வகையாகக் கூறுமிடத்து, நாம் நம்மிடையே உண்டாக்கக் கூடுமென்று நினைக்கின்ற ஒற்றுமை, எல்லா உள்ளங்

களிலும் கிளர்ச்சியை உண்டாக்குவதற்குப் பதிலாக, சில உள்ளங்களில் பகைமை யுணர்ச்சியைக்கூடத் தூண்டி விடுகிறது.

இது எவ்வாறிருப்பினும், உலகத்தில் பல்வேறு சமயங்கள் இருக்கின்றன என்பதும், அவை எப்போதும் இப்படியே தான் இருக்குமென்பதும் மறுக்க முடியாத உண்மை. இந்த மெய்ம்மையை நினைத்து வருந்துவதோ, அல்லது சண்டையிடுவதோ அர்த்த மற்ற செயலாகும். என்னுடைய வீட்டில் ஒரு மூலையில் தனிமையான முறையில் ஒரு மேஜையின் மேல் எழுதுகோல், மைக்கூடு, தாள்கள் ஆகியவை வைக்கப்பட்டிருக்கின்றன. இங்கே என்னுடைய எழுத்து வேலை, பிற வேலைகள் ஆகியவற்றை நான் சிறந்த முறையில் செய்ய முடியும். இந்தத் தனித்த மூலையில் என்னுடைய நண்பர்களுக்கும், விருந்தினர்களுக்கும் ஆசனம் அளிக்க முடியாது என்ற காரணத்தால் இந்த மூலையை விட்டு விட்டு ஓடவோ, ஒதுங்கவோ தேவையில்லை. இந்த மூலை மிகக் குறுகியதாகவோ, மிகவும் நெருக்க முள்ளதாகவோ, அசுத்தம் உள்ளதாகவோ இருப்பதனால் இதில் நான் அமரக்கூடா தென்று என்னுடைய மருத்துவர் கூறலாம்; என்னுடைய நண்பர்கள் என்னை எள்ளி நகையாடலாம்; என்னுடைய பகைவர்கள் கேலி செய்யலாம். என்றாலும், அவை யனைத்தும் கையிலுள்ள பிரச்னைக்குச் சம்பந்த முடையவை அல்ல. நான் சொல்ல வருவது என்ன வென்றால், என்னுடைய வீட்டிலுள்ள எல்லா அறைகளையும், என்னுடைய சொந்த உபயோகத்திற்கு என்று வைத்துக்கொண்டு, விருந்தினர்களை உபசரிக்கவும், அவர்களுக்கு இடங் கொடுக்கவும், நண்பர்களை வரவேற்கவும் ஒரு தனிப்பட்ட இட மில்லாமல் செய்து விட்டால் அப்போது என்னைக் குறை கூறலாம். அப்போது நான் தலை குனிந்து, “என்னுடைய வீட்டில் எப்போதுமே நண்பர்கள் கூட்டம் கூடுவது இல்லை” என்று என் குறையை ஒப்புக் கொள்ளலாம்.

ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு காலத்திலும் சரித்திரக் காரணங்களுக்காகச் சமயத் தொகுதிகள் ஏற்படுகின்றன. எல்லாக் காலத்திலும் ஒரு சிலர் மரபு காரணமாகவும், மன நிலை காரணமாகவும் ஒரு குறிப்பிட்ட சமயத் தொகுதியில் சேர்ந்து மன அமைதியை அடையலாம். அதே நேரத்தில், இவர்கள் பெறுகின்ற மன அமைதி தங்களுடைய மன அமைதியோடு பொருந்துகின்ற நியாயமான முறையில்தான் வழங்கப்பெற வேண்டும் என்று நினைப்பவர்களும் இருக்கலாம். இந்த இரண்டு தொகுதியாளரினிடையே

போராட்டம் நிகழத்தான் செய்யும். இந்தப் போராட்டங்கள் ஒருபுற மிருக்க, இந்தத் தொகுதியாளர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, அவர்களுடைய மன வேறுபாடுகளை மறந்து, ஒன்றுகக் கூடுவதற்குரிய ஒரு கூடுமிடம் இருக்கக் கூடாதா? இந்தியா தான் கொண்டுள்ள சமய இலட்சியங்களைப் பொறுத்தவரை, மனித சமுதாயம் முழுவதற்கும் ஏற்ற முறையில் அனைவருக்கும் பொது வான வெளிச்சத்தையும், காற்றையும் பெற்றிருக்க வில்லையா? சமய வெறி பிடித்தவர்கள் தலையை வேகமாக ஆட்டுவதைப் பார்த்த வுடன் இதன் பேரில் நமக்கே ஒரு சந்தேகம் எழுகின்றது. மிக அற்பமான காரணங்களுக்காகக்கூட அடிக்கடி இரத்த ஆறுகள் ஓடுவதைப் பார்த்தால் இதில் ஓரளவு சந்தேகம் கொள்ளத் தோன்று கிறது. மனிதனுக்கும் மனிதனுக்கு மிடையே கொடுமையான, கேவலமான வெறுப்புகளைச் சமயச் சட்டங்கள் என்ற பெயரில் ஓயாது நிலைக்க வைத்திருப்பதைப் பார்க்கும்பொழுது இதில் ஓரளவு சந்தேகம் ஏற்படுகின்றது. என்றாலும்கூட, இந்தியாவின் பழைய பண்பாடு, உண்மையின் பேரில் வளமாக வளர்ந்து இருந்த காலத்தைத் திரும்பிப் பார்க்கும்பொழுது, அது அங்கேயே இன்னும் இருக்கிறதென்று துணிவுடன் சொல்ல விரும்புகிறேன். உலகத்தின் எல்லாப் பகுதிகளிலுமிருந்தும் வருகின்ற எல்லா மக்களையும் வர வேற்று, ஒற்றுமையுடனும் சகோதர உணர்ச்சியுடனும் அமர்த்த கூடிய முறையில் நம்முடைய முன்னோர்கள் ஒரு பெரிய கம்பளத்தை விரித்திருந்தார்கள். அங்கே எத்தகைய போராட்டமும் தோன்ற முடியாது. யாருடைய பெயரில் இந்த அழைப்பிதழ்கள் அனுப்பப் பட்டனவோ, அவன் எக்காலத்திலும் சாந்தம், சிவம், அத்வைதம்[6] என்றே அழைக்கப் பெற்ருன். போராட்டம் நிறைந்த மனங்களில் எல்லாம் அமைதியைத் தருகின்றவனும், துன்பத்திலும், துயரத் திலும், நஷ்டத்திலும் வெளிப்படுகின்றவனும், உலகத் தோற்றத்தி லுள்ள பல்வேறு மாறுபாடுகளையும் கடந்து நிற்கின்றவனுமான அவன் பெயரில்தான் இந்த வரவேற்பு அனுப்பப்பெற்றது. அவனுடைய பெயரால்தான் என்று முள்ளதாகிய இந்த உண்மை பழைய இந்தியாவில் வெளியிடப்பெற்றது :

'அனைத்துயிர்களையும் தன்னுள் காண்பவன் மட்டுமே உண்மையில் காண்பவனுகிருன்.' [7]

—1919.

சொல்லற்ற சூன்யமாகிய இலைகளி னிடையே
பூக்கள் என்னும் சொற்கள் காணப்படுகின்றன.

—ரவீந்திரநாத் தாகூர்.

# 11. கல்வியின் பேதமின்மை

இன்றுள்ள உலகம் ஐரோப்பியர்கட்குச் சொந்தமா யுள்ளது என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வர். அதுதான் அவர்களுடைய கறவைப் பசு; அவர்களுடைய பாத்திரம் நிரம்பி வழியும் முறையில் அது கறக்கிறது. கீழை நாடுகளில் உள்ள நாம் அச்சத்தால் வாய் பிளந்து பார்த்துக் கொண்டிருப்பது தவிர வேறு ஒன்றுஞ் செய்யாமையினுல், உலகத்தில் கிடைக்கும் உணவிலும், செல்வத்திலும் நம் பங்கு நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது. ஐரோப்பியர்கள் உண்டு புடைத்திருப்பதைக் காணும் நாம், நம் பசியின் காரணமாக அவர்கள் மேல் சீற்றங் கொள்கிருேம்; நாமும் அதில் கை வைக்க முடியுமா எனப் பார்க்கிருேம். ஆனுல் நாம் எவ்வாறு அதனைச் செய்ய முடியும்? அவர்கள் கைதான் ஓங்கி இருக்கிறது. உலகமும், வாழ்வும் தரக் கூடிய ஒவ்வொரு சந்தர்ப்பமும் அவர்கட்கே இதுவரைப் பயன்பட்டன. நமக்கு எதுவுமே வரவில்லை.

இந்தச் சந்தர்ப்பங்கள் ஏன் இதுவரை நம் பக்கம் வரவில்லை? உலகத்தைத் தம தாக்கி அனுபவிக்கும் உரிமையை, எந்தச் சக்தி ஐரோப்பியர்கட்கு வழங்கியது? நிச்சயமாக, ஏதோ ஓர் உண்மையின் சக்தியாகத்தான் இருக்க வேண்டும். விரும்பியவற்றைப் பெற வேண்டுமானுல், நாம் அனைவரும் ஒன்ருகக் கூடி ஐரோப்பியர்கள் பெற்றுள்ளவற்றை இழக்குமாறு செய்து விட்டால் போதும் என்று நினைப்பது பெருந் தவருகும். நம்முடைய விருப்பப்படி ஒரு புகை வண்டி இஞ்சின் ஓடவேண்டு மென்பதற்காக, அதை ஓட்டுபவனை அடித்து வீழ்த்தி விட்டால் போதும் என்பதற்கும் இதற்கும் வேற்றுமை இல்லை; இதைவிடப் பெரிய தவறு வேறு இல்லை. இவ்வாறு செய்வதால், இஞ்சினை ஓட்டும் ஆள் மூலமாகப் பொறி இயல் தொழிற்படுகிறது என்பதை மறந்து விடுகிருேம். நம்முடைய உணர்ச்சி வேகத்தினுலும் கோபத்தினுலும் எவ்வளவு சூட்டை உண்டாக்கினுலும் எஞ்சினிடம் அது எந்தப் பயனையும் அளிக்காது; அந்த விஞ்ஞான அறிவே இஞ்சினை ஓட்டப் பயன் படும்.

ஒரு மோட்டார் வண்டியை வைத்து அதனைத் தானே ஓட்டிக் கொண்டிருந்த ஒருவனுக்கு, இரண்டு பிள்ளைகள் இருந்தனர். அந்த இருவருள் யார் வண்டியை நன்கு ஓட்டக் கற்றுக் கொள்கிருனே அவனுக்கே வண்டியைக் கொடுக்கக் கருதினுன் தந்தை. அந்த

இருவருள் ஒருவன், அறிவுக் கூர்மை யுள்ளவனாகவும் கற்றுக் கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் உடையவனாகவும் இருந்தமையின் உடனே காரைப் பற்றி நுணுக்கமாக அறியத் தொடங்கினான். மற்றவனோ வெளில் வெள்ளை மனம் படைத்தவனாகவும் தந்தையிடம் நிறைந்த பக்தி கொண்டவனாகவும் இருந்தான். அவனுடைய பக்தி எந்த அளவிற்குச் சென்றிருந்தது எனில் தந்தையின் திருவடிகளி லிருந்து அவன் கண்களை எடுப்பதே இல்லை. எனவே அவன் வண்டியில் அமர்ந்து திருப்பும் சக்கரத்தைக் கையில் பிடித்தவுடன் எப்பக்கம் திருப்புவது என்றுகூடத் தெரியாதவனாக இருந்தான். காரைப்பற்றி நன்கு அறிந்திருந்த கெட்டிக்கார மகன் ஒரு நாள் காரைத் தயார் செய்து கன வேகமாக ஓட்டிச் சென்றுவிட்டான். காரை ஓட்டுவதில் அளவு மீறிப் பற்றுக் கொண்ட அவன் இரவு, பகல் என்ற வேறுபாடு காணாமல் தந்தை என்ன நினைப்பார் என்று கூடக் கவலைப்படாமல், எந்நேரமும் வண்டியை ஓட்டிச் செல்வ திலேயே கருத்தாய் இருந்தான். ஆனால், அவன் தந்தை அவனைக் கண்டித்து இனிக் காரைத் தொடக் கூடாது என்று கட்டளை இட்டானா? அதற் கெதிராகத் தன் மகன் தன்னைப் போலவே காரை ஓட்டுவதில் விருப்பங் கொண்டிருக்கிறான் என்ப தறிந்து மகிழ்ச்சி யடைந்தான். கெட்டிக்கார மைந்தன் காரை ஓட்டுகையில் தன் சகோதரனின் விளை நிலத்தில்கூட ஓட்டி, நன்கு முற்றி இருந்த பயிர்களைக்கூட அழித்தான். அவ்வாறு செய்யக் கூடாதெனச் சகோதரன் கண்டித்ததுகூட அவன் செவிகளில் ஏறவில்லை. அவன் ஓட்டிச் சென்ற வேகத்தில் அந்தக் காரின் எதிரே வந்தவர் கள் மரணத்தை எதிர்ப்பட்டவர்கள்போல் ஆயினர்.

எனவே வெள்ளை உள்ளம் படைத்த மகன் மறுபடியும் தந்தை யின் திருவடிகளில் கண்களைப் புதைத்தபடியே அவரை நோக்கி, "நடந்தவற்றைக் கண்ட பிறகு, இனி எதனையும் நான் விரும்ப வில்லை" என்று கூறி விட்டான்.

கீழை நாடுகளில் உள்ள நம்முடைய நியாயமான தேவைகளைப் பற்றிக்கூடக் கவலைப்படவில்லை என்று கூறுவது தொல்லையை விலைக்கு வாங்குவதாகும். நம்முடைய தேவைகளை மறுத்துவிட முடியாது. அவற்றைப் பூர்த்தி செய்த பிறகுதான் அவை நம்மை விட்டுவைக்கும். அவற்றைச் சட்டை செய்யாமல் இருந்து விட்டால் வாழ் நாள் முழுவதும் அவற்றிற்கு நாம் கடமைப்பட்டு வட்டி செலுத்த வேண்டி வரும். தேவைகளிலிருந்து விடுபட ஒரே வழி அவற்றை நிறைவேற்றுவதுதான். பரீட்சகர்களிடமிருந்து

விடுதலைப் பெறப் பரீட்சையில் தேர்வது எப்படி ஒரே வழியோ அதே போலத்தான் இதுவும்!

அனைத் துலகமும் (அண்டம்) புறப் பகுதியில் அதனுடைய சட்டங்களை மீருத ஒரு பெரிய யந்திரம் போன்றதாகும். சடப் பொருளாலான இந்த அண்டம் நம்மைப் பல வழிகளில் தடை செய்கின்றது. எனவே சோம்பேறித்தனத்தாலோ, முட்டாள்தனத் தாலோ இதனைப் புறக்கணிக்க முற்பட்டவர்கள் இறுதியில் தடை களை வென்று அப்பாற் செல்வதற்குப் பதிலாகத் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொண்டனர். இதற்கு எதிராக, சடப் பொருள்களின் சட்டங்களை நன்கு அறிந்தவர்கள் சடப் பொருளின் தடைகளை வென்றதோடு அவற்றின் மூலம் உதவியும் பெற்றுள்ளார்கள். சட உலகத்தின் இரகஸ்யங்களை நன்கு அறிந்திருந்தமையின் அத னுடைய இறுதிப் பகுதி வரைச் சென்று, அதனுடைய செல்வங்களை எல்லாம் வாரிக் கொண்டனர். அதே நேரத்தில், சோம்பேறிகளும், காலந் தாழ்த்து வந்தவர்களும் சென்றபொழுது தங்கட்கு ஒன்றும் விட்டு வைக்கப்படவில்லை என்பதைக் கண்டனர்.

இந்தச் சூழ்நிலையில் கீழை நாடுகளில் வாழும் நாம், உலகை வெல்லக் கற்றுக் கொண்ட மேனாட்டாரைப் பழித்துக் குறை கூறுவ தால் பயனொன்றும் இல்லை. அறிவே உண்மையாகும். ஆதலின் அறிவைக் குறை கூறுவது நம்மை நாமே குறை கூறிக் கொள்வ தாகும்.

அறிவோடு கூடிய திட்டம் எதுவுமின்றி, நடப்பவற்றை ஏன் என்று ஆராயாமல், அப்படியே ஏற்றுக் கொண்டு வாழ்கின்றன விலங்குகள். நிகழ்ச்சிகளை ஏன் நிகழ்ந்தன என்று கேட்பதுதான் மனிதனுடைய மிக உயர்ந்த செயலாகும். விலங்குகளைப் போல் அல்லாமல் மனிதன் கலகக்காரனாக உள்ளான் என்பதையே இது தெரிவிக்கிறது. உயிருடன் வாழ்பவற்றில் மனிதன் மிக உயர்ந்த இடத்தைப் பெற்றிருக்க ஒரு காரணம் உண்டு. அவனுடைய விருப்பம், முயற்சி என்பவற்றின தொடர்பு இல்லாமல் நிகழ்ச்சிகள் நடைபெறுவதை ஏற்றுக் கொள்ளாமல், சரித காலத்தின் தொடக்கத் திலிருந்தே நிகழ்ச்சிகளின் காரணத்தை ஆய்ந்தும், அவற்றின் நிகழ்ச்சிச் சட்டங்களை ஆய்ந்தும், அவற்றைக் கட்டுப்படுத்த முயன்று வந்துள்ளான் என்ற இந்தக் காரணத்தாலேயே, அவன் உயர்ந்த இடத்தைப் பெற்றிருக்கிறான். அதனால்தான் நிகழ்ச்சி களால் ஆட்டிப் படைக்கப்படும் கருவியாக இல்லாமல் நிகழ்ச்சி களை ஆக்கும் சக்தியாக மனிதன் விளங்குகிறான். சக்தியைத்

தேடிய ஆதி மனிதன், இந்த உலகம் மந்திர வித்தைகளால் ஆளப் படுகிறதென நம்பினமையின் மந்திரங்கள், தாயத்துக்கள் மூலம் சக்தியைப் பெற முயன்றான். இரகஸ்யமான சக்தியை வளர்த்துக் கொள்வதன் மூலம் நடைமுறை நிகழ்ச்சிகளை மாற்றி யமைக்க லாம் என நம்பினான்.

சக்தியைத் தேடி மனிதன் செய்த முயற்சிகளில், பழைய மந்திரவாத முறையை வென்று விஞ்ஞான முறை நிலைத்து விட்டது. விஞ்ஞானத்தைக் கற்றறிந்தவர்களே அண்டத்தின் புறப் பகுதியை ஆளுகின்றனர். அண்டத்தின் சட்டங்கள் மாற்ற மில்லாதவை என விஞ்ஞானம் நம்புகிறது. விஞ்ஞானத்தின் துணைகொண்டு மேனாட் டார் புற உலகின் ஆபத்துக்களை வென்று விட்டார்கள். ஆனால் உலகம் மாய வித்தைகளால் ஆளப்படுகிற தென்று நினைத்துத் தங்கட்குத் தொல்லை ஏற்படும் பொழுதெல்லாம் மாய வித்தையிடம் உதவிக்குச் செல்கிறவர் இன்றும் உண்டு. அவர்கள்தாம் தோற் கடிக்கப்பட்டு அமுக்கப்பட்டு, அடிமைகளாக வாழ்கின்றவர்கள்.

கீழை நாட்டில் உள்ள நாம், 18-ம் நூற்றாண்டில், நோய் வாய்ப்பட்ட பொழுது பேயோட்டுபவனை நாடிச் சென்றோம்: தொல்லை ஏற்பட்ட பொழுது ஜோசியர்களின் துணையை நாடிக் கிரக சாந்திக்கு முயற்சி செய்தோம். அம்மை நோயிலிருந்து காப்பாற் றப்பட வேண்டுமென்று சித்தாலா தேவியை வேண்டிக் கொண் டோம். நம்முடைய பகைவர்களைக் கொல்வதற்கு பில்லி சூனியங் காரர்களை நாடினோம். அதே காலத்தில் ஐரோப்பியர்கள் என்ன செய்தார்கள் என்பது பற்றி ஓர் உதாரணம் தருகிறேன். வால்டேரைப் பார்த்து ஓர் அம்மையார், மந்தையிலுள்ள ஆடுகள் முழுவதையும் மந்திரம் போட்டுக் கொன்று விட முடியுமா என்று கேட்டதற்கு, அவர், தேவையான அளவு வெள்ளைப் பாஷாணத்தை அந்த மந்திரத்தின் மூலம் செலுத்தினால் முடியும் என்று கூறினாராம். ஐரோப்பாவின் ஏதோ ஓரிரு மூலை முடுக்குகளில் மாய வித்தை பற்றிய நம்பிக்கை இருக்கலாம்; ஆனால் பாஷாணம் பற்றிய நம்பிக்கை அனைவரிடமும் உள்ளது. ஆதலால்தான் ஐரோப்பியர் விரும்பியபொழுது யாரையும் கொல்ல முடிகிறது; கனுடைய தயவில் வாழ வேண்டியுள்ளது.

இன்று அண்டத்தின் சட்டத்தை அறிந்து கொண்டதனாலேயே அதனுடைய சக்தியையும் அறிந்துள்ளோம் என்று சொல்லத் தேவை இல்லை. இந்தச் சக்தியை அறிந்துள்ளமையின் மனித அறிவு இச் சட்டத்துடன் தொடர்பு படுத்தப்பெற்றுள்ளது. அனைத்

துலகச் சட்டம் இயல்பாகவே தம்முள் அமைந்துள்ளது என்பதை அறியும் பொழுதுதான் மனிதர்கள் தங்கள் சக்தியில் நம்பிக்கை வைக்க முடியும். எதிர்பாரா அதிர்ஷ்டத்தை நம்பிக்கொண்டிருக்கிறவர்கள் சுய நம்பிக்கையை இழந்து விடுகின்றனர்; எப்பொழுதும் பிறரை நம்பி வாழவே விரும்புகின்றனர். தங்களுடைய அறிவையே நம்பாததால், ஏன் என்று கேட்கும் தன்மையை விட்டுவிட்டு, ஆராயும் பழக்கத்தையும் இழந்து விடுகின்றனர். தங்கட்குப் புறத்தே ஒரு தலைவர் வேண்டும் என்று தேடி அலைகின்ற அவர்கள், போலீஸ்காரன் முதல் ஒரு கொசு வரை யாரா யிருந்தாலும், அல்லது எதுவாக இருப்பினும் அவற்றினுடைய சக்தியை ஏற்றுக் கொள்ளத் தயாராக உள்ளனர். அறிவுக் கோழைத்தனமே வலிமைக் குறைவின் இருப்பிடம்.

மேனுடுகளில் அரசியல் சுய ஆட்சி முறை எவ்வளவு காலமாக வளரத் தொடங்கியுள்ளது? மற்ருெரு வகையாகக் கூற வேண்டுமாஞல் நாட்டின் சட்டங்கள், ஒரு தனிப்பட்ட மனிதனின் அல்லது சமுதாயத்தின் விருப்பு வெறுப்புக் குட்பட்டவையல்ல, அவை எல்லா மக்களுடைய விருப்பத்தையும் பொறுத்தே உள்ளன என்ற உண்மையை அவர்கள் எவ்வளவு காலமாக அறிந்துள்ளனர்? தனிப்பட்ட மனிதனின் விருப்பத்திற்காக இயற்கைச் சட்டங்கள் மாற்றப்பெற முடியாதவை என்றும், அவன் விருப்பப்படி அவற்றைத் தலை கீழாக மாற்ற முடியாதென்றும் கூறி அவர்கள் மனத்திலிருந்த அச்சத்தை விஞ்ஞானம் போக்கிய பிறகுதான் இது நடைபெற்றது.

ஆண்டவன், அவனுடைய ராஜ்யமாகிய இந்த அண்டத்துள், அனைத் துலகச் சட்டங்களை நாம் அறிந்துகொள்ளும்படி வைத்துள்ளதே அவன் நமக் களித்துள்ள சுயராஜ்யமாகும். அவனுடைய சூரியன், சந்திரன், விண்மீன்கள், கோள்கள் ஆகியவற்றின் மேல் ஆண்டவன் எழுதி வைத்துள்ள செய்தி வருமாறு. "சடப் பொருள்களில் நான் இல்லாமலும் நீங்கள் வாழவே மாகலின், இந்தச சடப் பொருள்களில் மறைந்து கொள்கிறேன். இங்கு ஒருபுறம் அண்டத்தின் சட்டமும் மறுபுறத்தில் உங்கள் மனத்தினுடைய சட்டமும் உள்ளன. இவை இரண்டையும் ஒற்றுமைப்படுத்துவதன் மூலம் நீங்கள் பெரிய சிறப்புக்களைப் பெற்று எனது ராஜ்யமாகிய இந்த அண்டத்தைப் பெறலாம். வெற்றி பெறுவதற்குரிய கருவியை உங்களிடம் தருகிறேன். அதனைப் பயன்படுத்தி வெற்றி பெறுங்கள்". ஆண்டவனல் அளிக்கப்பெற்ற இந்தச் சுய

ராஜ்யத்தை அடைபவர்கள் யாரோ அவர்கள் வேறு எவ்வகையான சுயராஜ்யமாயினும் அவற்றைப் பெற்று என்றுமே தம துடைமை யாக வைத்திருப்பர்.

அறிவுத் துறையில் தங்கள் ஊக்கத்தை மற்றொரு தலைவரிடம் சரண் செய்கின்ற மக்கள், அரசியல் துறையிலும் இவ்வாறே செய்யத் தயங்க மாட்டார்கள். ஆண்டவன்கூட அதிகாரம் செலுத்த விரும்பாததும், தமக்கே உரியதுமான பகுதிகளில்கூட ஒரு தலைவரைத் தேடிப் பிடித்து ஏற்படுத்திக் கொள்ளும் பழக்க முடையவர்கள் இவர்கள். ஆண்டவன் உரிமை வழங்கியுள்ள பகுதி களிற்கூட இவர்கள் தம்மைத் தாமே அவமானப்படுத்திக் கொள் கிறார்கள் ஆகலின், அவர்கட்கு ஏற்ற ஒரே வகை ஆட்சி 'சுயம்' இல்லாத ஆட்சிதான்.

இயற்கையின் சிறந்த சக்திகளிலிருந்தும் இரகஸ்யமான சக்திகளிலிருந்தும் மனித மனத்தை விடுதலை செய்வித்த பெரியார் களை, அவர்கள் ஐரோப்பியர்களாயினும் ஆசியர்களாயினும் சரி, தலைவர்கள் என்றே புகழ வேண்டும். அண்டத்தின் ஆன்மப் பகுதி தெய்வங்களின் பாதுகாவலில் உள்ளது; அதன் உலகாயதப் பகுதி அசுரர்கள் பாதுகாப்பில் உள்ளது. அசுரர்கள் என்று இங்கே நான் குறிப்பது, கோள்களை அவற்றின் பாதைகளில் பம்பரம் போல் சுற்றி வருமாறு செய்கின்ற அண்ட சக்திகளையே யாகும்; உலகியல் சம்பந்தமான அறிவில் முக்கியமான பகுதி, வாழ்வு பற்றிய விஞ்ஞானமாகும். அப் பகுதி இன்றைய நிலையில் ஐரோப்பிய விஞ்ஞானிகள், சிந்தனையாளர்கள் ஆகியவர்கள் பொறுப்பில் உள்ளது. இந்த வாழ்வு விஞ்ஞானம், நாம் இப் பூவுல கில் வசதியுட னிருக்க வழி செய்து, வறுமை, இன்மை ஆகியவற்றி லிருந்து நமக்கு விடுதலையளித்து, விலங்குகளிடத்திலிருந்தும், கொடிய மக்களின் ஆதிக்கத்திலிருந்தும் நமக்குப் பாதுகாப் பளிக்கிறது. நேர்மையான கடவுளருளே, இந்த வாழ்வு விஞ்ஞான அறிவை நமக்கு வழங்கியுள்ளது. இதனைப் பெறுகின்ற காலத்தில் தான் இந்தியர்களாகிய நாம் சுய ஆட்சிக்கு அடிகோல முடியும்.

இந்த அறிவிலிருந்து வழுவிவிடுவதற்கு ஓர் உதாரணம் தரு கின்றேன். முஸ்லிம்கள் கிணற்றிலிருந்து நீர் இறைத்தால் அக் கிணறு மாசுபட்டுவிடுகிற தென்று சில ஹிந்துக்கள் நினைக்கிறார் கள். இது விநோதமானது; ஏனென்றால் மாசு என்பது ஆன்மாவைப் பொறுத்தது. ஆனால் கிணற்றுத் தண்ணீர் என்பது சட உலக சம்பந்த முடையது. முஸ்லீம்களை வெறுப்பது இருத

யத்தை மாசுபடுத்தி விடுகிறது என்று கூறப்பெற்ருல் அந்தச் சொல்லை நான் புரிந்து கொண்டிருக்க முடியும். ஆனுல், முஸ்லீம் தண்ணீர் இறைக்கும் பாத்திரத்தில் மாசு இருக்கிற தென்று கூறுவது ஒருவருடைய அறிவையே பழிப்பதாகும். ஏனெனில் விவாதத்திற்குரிய ஒரு விஷயத்தை விவாதத்துக்கு அப்பாற்பட்ட பிராந்தியத்திற்குக் கொண்டு சென்று வைப்பது, அறிவைப் பழிப் பதாகத்தானே முடியும். மேற்கில் உள்ள ஹிந்து சமயச் சீடர்கள் இவ்வாறு மாசுப்பட்டு விடுவதாகக் கூறுவது, சுகாதாரக் கருத்தைச் சமய வழி மூலமாகக் கூறுவதாகும் என்பர். உடற் சுகாதாரம் ஒழுக்கத் தூய்மை பற்றிக் கவலைப்படுவதில்லை. ஆகையால்தான் போலும் விஞ்ஞானம் பற்றிக் கவலைப்படாதவர்கள் உலகப் பொருள்களுக்குக்கூட ஆன்மீகப் பெயர்கள் இருந்தால் அவற் றுக்குக் கீழ்ப் படிந்து நடக்கிருர்கள். இவ்வாறு நினைப்பது நல்ல தன்று. இத்தகைய மக்கள் தாங்களாக விரும்பிப் பணியாற்ற மாட் டார்கள்; எப்பொழுதும் ஒரு தலைவனுடைய ஆணைக்காகக் காத் திருப்பார்கள்; அந்தத் தலைவனுடைய ஆணைகள் பொய்யானவை யாக இருப்பினும் கவலை இல்லை.

கிணற்று உதாரணத்துக்கு மீண்டும் வருவோம். முஸ்லீம் பயன் படுத்தும் பாத்திரம் மாசுடையது என்று கூருமல் அழுக்குடை யது என்று கூறினுல் விவாதத்திற்கு இடம் உண்டு. எல்லாச் சூழ் நிலையையும் ஒப்பிட்டு ஆராயும் பணி அப்பொழுது தேவைப் படலாம். அவையாவன: ஹிந்துக்கள், முஸ்லீம்கள் ஆகிய இருவரும் பயன்படுத்தும் பாத்திரங்கள், அவர்களுடைய கிணறு கள், அவர்கள் ஒவ்வொருவரும் குடி இருக்கும் இடத் தூய்மை ஆகியவையாகும்.

மேலும், மாசு என்பது அக சம்பந்தமானது, அதாவது ஆன்-மார்த்தமானது; அழுக்கு என்பது புற சம்பந்தமானது, அதாவது சுகாதாரம் பற்றிய விஷயமாகும். இதனைச் சரி செய்ய வேண்டு மாயின் சுகாதார வழியினைத்தான் மேற்கொள்ள வேண்டும். பாத்திரத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்ளவேண்டு மென்பது ஹிந்து, முஸ்லீம் ஆகிய இருவருக்கும் பொதுவானதாகும். அவர் களுள் ஒருவர் கிணற்றை மற்றவர் பயன்படுத்தினுல் இது நன்கு நிறைவேறும். ஆனுல், மாசையும் அழுக்கையும் ஒன்ருக்கிப் பேசு வதும், சுகாதார சம்பந்தமான ஒரு விஷயத்தை ஆன்மார்த்த விஷயம் போல் பேசுவதும், நம்முடைய அறிவை மழுக்கி, அதனுல் விளையும் குழப்பத்தை நம் சௌகரியத்துக்குப் பயன்படுத்திக்

கொள்வதாகும். இத்தகைய அறிவுக் கோழைத்தனத்திலிருந்து நம்மைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமாயின், ஐரோப்பிய விஞ்ஞானிகள், சிந்தனையாளர்கள் ஆகியவர்களின் உதவியை நாடவேண்டும். மேனாட்டு விஞ்ஞானத்தை, அது மேனாட்டில் தோன்றிய காரணத்தால் வெறுப்பதாக இருந்தால், அது, நமக்குக் கற்றுக் கொடுக்கும் தத்துவங்களை இழப்பதோடு நம்முடைய கீழை நாட்டு ஆன்மீகத்தையும் கீழே தாழ்த்தி விடுகிறோம்.

கருத்து வேறுபாட்டை உண்டாக்கக்கூடிய ஒரு விஷயத்தை நான் தொட்டுவிட்டேன் என்று அறிகிறேன். "ஐரோப்பியர்கள் காட்டுமிராண்டிகள் போல் வசித்துக் கொண்டிருந்த அந்த பழங் காலத்தில் கூட, இந்தியர்கள் மிகவும் நாகரிகம் அடைந்திருந் தார்கள் என்பது உண்மை யில்லையா?" என்று என்னைக் கேட்க லாம். அன்றியும், ஐரோப்பியர்கள் விலங்குகளின் தோலை உடுத்துக்கொண்டு வெறும் வேட்டைக்காரர்களாக வாழ்ந்த காலத் தில் இந்தியர்கள் உயர்ந்த வாழ்க்கைத் தரம் உடையவர்களாக இருக்கவில்லையா? ஐரோப்பியர்கள் கடற் கொள்ளை வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்த காலத்தில் இந்தியர்கள் நல்ல அரசாங்கத் தின் தத்துவங்களை வகுத்துவிட வில்லையா?" என்றும் கேட்கப் படலாம். அவை அனைத்தும் உண்மை என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். அந்தக் காலத்திய இந்தியர்கள் ஐரோப்பியர்களை விட உயர்ந் திருந்தது, அவர்கள் அறிந்திருந்த அதிகப்படியான விஞ்ஞான அறிவினால்தான் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். விலங்குத் தோலை உடுத்தும் நிலையிலிருந்து தறியில் நெய்த ஆடை களை அணியும் நிலைக்கு மனிதன் மாறவேண்டுமானால் விஞ்ஞானத் தில் அதிகப்படியான அறிவைப் பெறும்பொழுதுதான் முடியும். விலங்குகளை வேட்டையாடி உணவு சேகரிக்கும் நிலையிலிருந்து வேளாண்மை செய்து உணவு சேகரிக்கும் நிலையை அடைவதற்கும் அதே அறிவு வளர்ச்சிதான் தேவைப்படும். கடற் கொள்ளையிடும் நிலையிலிருந்து நல்ல அரசாங்கம் நடத்தும் நிலையையும் அப் பொழுதுதான் பெறமுடியும். அந் நிலை மாறி, இப்பொழுது, ஐரோப் பியர்கள் இந்தியர்களைவிட உயர்ந்தவர்களா யிருப்பதற்கு, தெய் வீகக் குறுக்கீடோ, வஞ்சகமோ ஒன்றும் காரண மாகிவிடவில்லை. அதனெதிராக ஐரோப்பியர் அதிக விஞ்ஞானம் கற்றதே இதற்குரிய காரணமாயிற்று. ஐரோப்பியர்களுடைய நாகரிகத்தில் இந்தியர்கள் போட்டியிட வேண்டுமானால் முதலில் அவர்களுடைய விஞ்ஞான அறிவில் போட்டி இடவேண்டும். இந்தியப் பிரச்னை பெரும்பாலும்

கல்விப் பிரச்னையாகவே இருத்தலின் அதற்குத் தீர்வு காண வேண்டுமாயின், இந்தியர்கள் ஐரோப்பிய விஞ்ஞானிகள், சிந்தனை யாளர்கள் ஆகியவர்களிடமே உதவி நாடவேண்டும்.

இதுவரை வந்த பிறகு, என்னை நோக்கி மற்றொரு வினக் கேட்கப்படலாம். "நீங்கள் கூறுவது அனைத்தையும் ஒப்புக்கொள் கிறோம். ஆனால் மேனாட்டில் பிரயாணம் செய்யும்பொழுது அங்குக் காணப்பெற்ற சக்தியைக் கண்டு நீங்கள் திருப்தி அடைந்த துண்டா?" என்பதே அவ் வினா.

இல்லை! அது என்னைத் திருப்திப்படுத்தவில்லை. மேனாடு நன் முறையில் பொழுதைக் கழிக்கிறதே தவிர அவர்கள் மகிழ்ச்சியாக இல்லை. எல்லை யற்ற பெருஞ் செல்வமுடைய நாடாகிய அமெரிக் காவில் இடையீடின்றி ஏழு மாத காலம் வசித்தேன். நான் தங்கி இருந்த உணவு விடுதியின் ஜன்னல் அருகே அமர்ந்து என்னை நோக்கிப் புன்முறுவல் செய்யும் முப்பத்தைந்து மாடிக் கட்டிடத் தைப் பார்க்கும் பொழுதெல்லாம் நம்முடைய இலக்குமிக்கும், குபேர னுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டைப் பற்றிச் சிந்தித்தேன். இலக்குமி மகிழ்ச்சியைத் தருகிறாள்; அதுவே செல்வத்திற்கு அழகு. குபேரன் மேலும் மேலும் சேகரிக்கும் இயல்பைத் தருகிறான். முடிவில்லாத முறையில் அது செல்வத்தைப் பெருக்கு கிறது. இரண்டை இரண்டால் பெருக்க நான்கும், நான்கை இரண்டாற் பெருக்க எட்டும், ஆகத் தவளைப் பாய்ச்சல் போல் எண்கள் பெருகிக்கொண்டே செல்கின்றன. இந்த வெற்றியில் அகப்பட்ட மனிதன் மேலும் மேலும் சேகரித்துக் கொண்டே போகிறான்; கடைசியில் இதில் ஏற்படும் உற்சாகமே அவனுடைய குருதியைச் சூடேற்றுகிறது. இந்த உற்சாகத்தில் பங்கு கொள்ளா தவர் எந்த அளவில் பொறுமையைக் கைக் கொண்டுள்ளனர் என்பதைக் கீழ்வரும் உவம நிகழ்ச்சியால் அறியலாம்.

சில ஆண்டுகட்கு முன்னர், இலையுதிர் காலத்தில் பூர்ணிமை யன்று ஆற்றில் என்னுடைய படகு வீட்டின்[1] ஜன்னல் அருகில் அமர்ந் திருந்தேன். தூரத்திலுள்ள கரையில் நாட்டுப்புறப் படகோட்டிகள் கூட்டம் ஒன்று டமாரம் அடித்து இசை இசைத்துப் பொழுதைப் போக்கிக்கொண்டிருந்தது. இந் நிகழ்ச்சியில் அவர்கள் கை வன்மை மிகுதியாகத் தெரிந்ததே தவிர அவர்கள் இசை வன்மை அதிகம் தெரியவில்லை. இரவில் நேரம் ஆக ஆக வேகமாகவும் அதிக சப்தமாகவும் டமாரங்களை அடித்தனர்; நடு இரவாகியும் ஓசை நிற்ப தாக இல்லை. அவர்கள் ஏன் நிறுத்தப் போகிறார்கள்? ஒருவேளை

ஏதாவது ஒரு பாட்டைப் பாடி இருப்பின் எங்கேயாவது ஓரிடத்தில் அப் பாடல் இயல்பாக முடிந்திருக்கும். வரன்முறை யில்லாத ஓசை நிறுத்தம் இல்லாமல் ஓடும்; திருப்தியளிக்காமல் ஊக்கந் தரும். நடு இரவு கழித்துங்கூட ஓசை வெறியர்கள் அடங்கவில்லை. ஒவ்வொரு விநாடியும் இந்தக் கூச்சலை அவர்கள் அனுபவித்துக் கொண்டிருந்தனர். ஆனால், அதே நேரத்தில் எல்லையற்ற தொல்லை யில் ஆழ்ந்திருந்தேன் நான்.

அட்லாண்டிக் சமுத்திரத்தின் அக் கரையில் உள்ள சுண்ணாம் பும், செங்கல்லும் சேர்ந்த காட்டில், என்னுடைய வருத்தமுற்ற மனம் இவ்வாறுதான் பேசியது; "அவர்கள் இங்கே மிகப் பெரிய கூச்சலைக் கிளப்புகிறார்கள்; ஆனால் இசை எங்கே இருக்கிறது?" "எனக்கு இன்னும் வேண்டும்; இன்னும் வேண்டும்" என்ற இந்தச் சொற்கள் இசையாக முடியாது. அதே போலத்தான் ஆகாய மளாவிய கட்டிடங்களையும் செல்வத்தையுங் கொண்ட அமெரிக் காவின் முன் நின்று மனந் தளர்ந்த ஏழை இந்தியன் தினந்தோறும் குழப்பத்துடன் "அடுத்து என்ன?" என்ற கேள்வியைக் கேட்டுக் கொண்டே இருந்தான்.

தவம் என்ற பெயரில் வெறுமையைப் போற்றுவதை நான் ஒப்புக்கொள்ள முடியா தென்று பல முறையும் திருப்பித் திருப்பிக் கூற விரும்புகிறேன். இசை, நெஞ்சை நிரப்ப வேண்டுமாயின் ஓசையும் பாட்டும் கட்டுப்பாட்டுள் அடங்கி நிற்கவேண்டும். வடிவத்தில் ஏற்படும் கட்டுப்பாடே ஆன்ம நிறைவை எடுத்துக் காட்டும். குடித்துவிட்டுப் போடப்படுகின்ற கூச்சலில் கட்டுப்பாடு என்பதே இருத்தற்கில்லை. இருதயத்தில் உண்மையான உணர்ச்சி இருக்குமாயின் அது வெளிப்படும் பொழுது மிக அடக்க ஒடுக்கத் துடனும், தூய்மையுடனும் வெளிப்படும். தூய்மையின் கட்டுப் பாடுதான் உண்மையான தவமாகும். மிகுதியின் தேவதையும், பிச்சைக்காரத் தெய்வமும் ஒன்று சேர்வதுதான் உண்மையில் ஒற்றுமை என்று கூறப்படும்.

ஜப்பானில் சிலகாலம் இருந்தேன்; பழைய ஜப்பானியப் பண்பாட்டைப்[2] பற்றி நான் பார்த்தவரையில் பெரிதும் விரும் பினேன். மிகைப்படுத்தல், அதீதம் என்பவை ஒரு சிறிதும் இல்லாமல் அழகின் ஆழத்தை உணர்ந்த ஒரு சாசனமாகும் அது. அவர்கள் உடை, விளையாட்டுக்கள், வீடுகள், தட்டுமுட்டுச் சாமான்கள், பவ்வியமான மரியாதை, சமயச் சடங்குகள் ஆகிய அனைத்தும் ஒரு முக்கியக் கருத்தில் இணைக்கப்பெற்றுள்ளன. "இந்த

ஒற்றுமைக்குத்தான் அவர்களுடைய கலைகள் பல்வேறு வழிகளில் விளக்கம் தருகின்றன. வெறுமை என்பதும், அதீதத்தைப் போலப் பயனற்றது. பழைய ஜப்பானியப் பண்பாட்டில் என்னை மிகவும் கவர்ந்தது அதனுடைய அதீதமோ அன்றி வெறுமையோ அல்ல; ஆனால், அதனுடைய நிறைவுதான். மன நிறைவின் காரணமாகத்தான் ஒரு மனிதன் மற்றொரு மனிதனை வெருட்டி விடாமல் வீட்டிற்குள் அழைத்து விருந்தளிக்கிறான். நவீன ஜப்பானையும் கண்டேன். நாட்டுப்புறத்துப் படகோட்டிகள் வெறுங் கூச்சல் போட்டு நிலா நிறைந்த இரவை அவமானப்படுத்தியதைப் போல நவீன ஜப்பானியர் தங்கள் கூச்சலால் அசிங்கப்படுத்து கின்றனர்.

இரயில், தந்தி, யந்திரம், தொழிற்சாலை ஆகியவற்றை ஒழித்துவிடவேண்டும் என்று யான் கூறவரவில்லை. அவை தேவை தான். ஆனால் அவை நமக்கு எந்தச் செய்தியையும் தரவில்லை. இந்த அண்டத்தின் எந்த இசைக்கும் அவை ஒத்துப்போகவில்லை. இருதயத்தின் எந்த அழைப்புக்கும் அவை செவிசாய்க்கவில்லை. மனிதன் தன்னுடைய தேவையால்மட்டும் தூண்டப்பெறும்பொழுது, தேவையைப் பூர்த்திசெய்யும் கருவிகளைச் செய்துமுடிக்கிறான். நிறைவேறியவுடன் அதில் அழிவிலாத ஆத்மாவை (தன்னை) வெளிப்படுத்துகிறான். தேவைகளாலும், கருவிகளாலும் ஆகிய உலகம், பொறாமை, குரோதம், தடைகள், காவல்கள், பிறருடைய முயற்சியில் சுய லாபம் சேகரித்தல் ஆகியவற்றின் பயனாக இறுதியில் போரையே வளர்க்கிறது. தன்னுடைய ஆன்மாவை வெளிப்படுத்துவதன் மூலம் மரண மிலாப் பெரு வாழ்வை அனுப விக்கும் உலகில், அவன் ஆன்மா இரக்கம், நட்பு, அமைதி ஆகிய வற்றையே வளர்க்கின்றது.

விஞ்ஞானம் என்ற சாவியால் அண்டம் என்ற அறையை ஐரோப்பா திறந்தபொழுது, எங்கு நோக்கினும் நிலையான சட்டங்கள் இருப்பதை அறிந்தது. இவற்றுடன் ஓயாமல் பழகியதன் காரண மாக இந்தச் சட்டங்கட்கு அப்பாற்பட்டு மனித மதிப்புடன் தொடர்புடைய பொருள்களை ஐரோப்பா கவனிக்கத் தவறி விட்டது. சடப் பொருளின் சட்டங்களைப் பயன்படுத்துவதால் உலகில் வெற்றி கிட்டுகிறது. ஆனால் மனித சமுதாயம் உரிமை கொண்டாடக்கூடிய, இதனைவிடப் பெரிய ஒன்றும் இருக்கிறது. தேயிலைத் தோட்டத்தின் மேலாளர், கூலிகளைப் பொறுத்த சட்டங்களைக் கடுமையாகக் கடைப்பிடித்தால் அதிகமாகவும்,

சிறந்ததாகவும் உள்ள தேயிலையைச் சேகரிக்கலாம். ஆனால், அதே மேலாளர் தம் நண்பர்களிடம் நடந்துகொள்ளவேண்டிய விதம்பற்றி எந்தச் சட்டமும் இல்லை; இருக்கவும் முடியாது. தோட்டக் கூலிகள் சட்டம், ஜட உலகச் சட்டங்களின் பகுதி யாகும். ஆனால் நட்பு எந்த அனைத் துலக உண்மையிலும் இடம் பெறவில்லை என்று கருதுவதாலேயே மானுடம் வறண்டு விடுகிறது. யந்திரங்களிடம் உறவுக்குரிய அன்பைக் காட்ட முடியாது. யந்திரங் கட்கு அப்பால் ஒன்றுமில்லை எனின், அன்பு காட்டும் நம் இயல்பை எங்கு நிறைவேற்றிக் கொள்வது? விஞ்ஞானத்திடம் அதிகக் கவனம் செலுத்தியதன் பயனாக, ஐரோப்பியர்கள் தம் ஆன்மாவை ஒரு புறமாக ஒதுக்கிவிட்டதுபோல் தெரிகிறது; அன்றியும் அவர் களுடைய திட்டத்தில் அதற்கோர் இடம் இருப்பதாகவே தெரிய வில்லை. ஆன்மீகத்துடன் அதிசம் ஈடுபட்டதால் கீழ் நாடுகள் வலு விழந்து செய லற்றுவிட்டன என்றாலும், மேனாட்டின் ஒருபக்க வளர்ச்சியான உலகாயதம் விரும்பத் தகுந்த முடிவாகிய தன்நிறை வில் கொண்டுவிடுமா?

தேயிலைத் தோட்ட மேலாளருக்கும் கூலிகட்கும் உள்ள தொடர்பைப் போல அண்டத்துக்கும் தமக்கு முள்ள தொடர்பை வைத்துக்கொண்டுள்ளவர்கள் உயர்ந்த வல்லமை படைத்தவர்கள். மேலாளரைப்பற்றி நியாயமாகக் கூறவேண்டுமானால், அவர் கீழ்ப் பணியாற்றுகிற மக்களைக் கவனிப்பதுட்படத் தம் கடமையை நன்கு நிறைவேற்றுகிறார் என்று கூறவேண்டும். ஒரு துணியைக் கத்தரி யால் ஒழுங்காக வெட்டுவது போலக் கூலிகள் குடியிருப்பை நேர்பட ஒழுங்காகக் கட்டுகிறார். அவர்கட்கு வேண்டிய மருத்துவ மனை, காய் கறிக் கடை என்பவை போன்றவற்றை நன்கு அமைக்கிறார். ஆனால் உயிர்கட்காகப் பயன்படுத்தப் பெறாத அவர் சாமர்த்தியம், ஆட்சித் திறனின் ஒரு பகுதியே யாகும். அது அவருடைய இலாபத்தை மிகுதிப்படுத்துவதுடன் ஒருவேளை அக் கூலிகட்கு ஓரளவு நன்மை செய்தாலும், அவற்றால் யாருக்கும் மகிழ்ச்சி உண்டாவதில்லை.

அதிகாரம் செய்கின்ற மேனாட்டையும் அடிமையாக இருக் கின்ற கீழ் நாட்டையும் மட்டுமே மனத்தில் வைத்துக்கொண்டு பேசுகிறேன் என்று யாரும் நினைத்துவிட வேண்டா. யந்திர வழி பாடு, மேனாட்டுக்குள்ளேயே மனித உறவில் ஒரு பிளவை உண் டாக்கி இருக்கிறது. மனிதர்களைச் செயற்கை முறையில் ஒன்றாக்க முயல்வது, அவர்களுக்குள் இயல்பாக அமைந்திருக்கும் ஆக்க ஒற்றுமையை நெகிழ்த்து விடுகிறது. பசைவைத்துத் தாளை

ஒட்டுவது போலவும், இரண்டு துண்டு மரக் கட்டைகளை ஸ்குரூ ஆணி வைத்து ஒட்டுவது போலவும், மனிதர்களை ஒட்ட முடியாதாகலின், ஆக்க ஒற்றுமை ஒன்றால் மட்டுமே ஆன்மீக ஒற்றுமையில் அவர்களை இணைக்க முடியும். மேனாட்டார் மனிதர் களை இயந்திரங்கள் போல் நடத்தி அதனால் சம்பாதித்த எல்லை யற்ற செல்வத்திற்கு அளவே இல்லை. மலை போன்ற பொருள் களைத் தயாரித்து, உலகச் சந்தைகளில் விற்று, அதன் பயனாக ஆகாயத்தை முட்டும் வீடுகளைக் கட்டியுள்ளனர். அன்றியும் சமு தாயத்தின் எல்லாப் பகுதிகளிலும் கல்வியைப் பரப்பியும், மருத்துவ மனைகளை அனைத் திடங்களிலும் கட்டியும், கோடிக் கணக்கானவர் கட்கு வாழ வழி வகுத்துக் கொடுத்தும் இன்னும் பல்வேறு வகை களில் மனித இனத்திற்கு நன்மை புரிந்துள்ளனர். இது ஏன் நடை பெற்றது எனில் புற உலகைப் பொறுத்தமட்டில், யந்திரத்திற்கு, அதற்கே உரிய மெய்ம்மை உண்டு. ஆனால் அதனைப் போற்று கின்றவர்கள், விரைவில் பயன் காணவேண்டும் என்னும் வெறி பிடித்து மேலும் மேலும் பலனை விரும்புகின்றனர். அவர்கள் பேராசை எவ்வளவுக்கு அதிகப்படுகிறதோ அவ்வளவுக்கு சக மனிதர்களைக் குறைத்து மதிக்கவும் தயாராகி விடுகின்றனர்.

பேராசை என்பது தீய உணர்ச்சியாகு மாகலின் அதனிடம் ஆக்கம் இல்லை. மனித நாகரிகத்தின் அடிப்படைச் சக்தி பேராசையாக அமையும் பொழுது மனிதனுடைய ஆன்ம வளர்ச்சி வலுக் குறைந்து போகிறது. அத்தகைய நாகரிகம், உலகச் செல் வம், வலிமை, வளம் ஆகியவற்றை அதிகமாகத் தரத் தர மனித னுடைய ஆன்ம பலம் வலி குன்றி விடுகிறது.

ஒரு கோட்டினால் மட்டும் ஓவியம் ஆவதில்லை; பல கோடுகள் இணைவதாலேயே ஓவியம் தோன்றுகிறது. குட்டையும், நெட்டையு மான கோடுகள் ஒன்றுடன் ஒன்று இணைவதால்தான் அவற் றின் ஒன்றல்தன்மையில் ஓவியம் ஏற்படுகிறது. நீல நிறக் காகிதத்தில் வீடு கட்ட எழுதிய வரை படத்தை ஓவியம் என்று யாருங் கூறுவதில்லை. அதில் காணப்படும் கோடுகள் ஒன்றுக் கொன்று ஆன்மீகத் தொடர்புடையவை அல்ல. புறத் தேவைக்கு ஏற்ப வரையப்பட்டவை அவை. ஓவியம் என்பது ஆக்கல் செயல்; வரை படம் என்பது கட்டுக்கோப்பைக் காட்டுவது.

பேராசை பிடித்த வியாபாரிகள் செல்வாக்குடன் இருக்கும் ஒரு சமுதாயம், ஓவியத்தின் இயல்புகள் எதுவும் இல்லாத பெரிய வரைபடம் போன்றது; அது மக்களின் இடையே

உள்ள ஆன்மீகத் தளையை வலு விழக்கச் செய்கிறது. செல்வமே அத்தகைய சமுதாயத்தின் வாகனம்; செல்வமுடையவனே வாகனத்தை ஓட்டுபவன்; சாதாரண மக்களே அந்த வாகனத்துடன் வலிய சங்கிலிகளாற் பிணைக்கப்பட்டு அதனை இழுத்துச் செல்கின்றவர்கள். அந்த வாகனம் பெரிய சப்தத்துடன் செல்வதைத்தான் நாகரிகம் வளர்வதாகக் கூறுகின்றனர். பொருளைச் சேர்க்கும் இயல்பாகிய இந்தத் தெய்வத்தின் வெற்றி ஊர்வலம் பொதுமக்களுக்கு எவ்வித மகிழ்ச்சியையும் தருவதில்லை; ஏனென்றால் இந்தத் தெய்வத்திடம் மக்களுக்கு எவ்வித மரியாதையும் இல்லை. புறக் கட்டுப்பாடு ஒன்றாலேயே மக்கள் ஒன்று சேர்க்கப்பட்டால் அதனை எதிர்த்து அவர்கள் கலகஞ் செய்வார்கள். இன்று ஐரோப்பிய ஆகாயத்தைக் கப்பிக் கொண்டிருக்கிற சமுதாயப் புரட்சி மேகத்தைப் பார்த்தாலே இது நன்கு விளங்கும். பழங்கால இந்தியா சமயத்தின் சாரத்தை விட்டுவிட்டு அதன் வடிவத்தை மட்டும் கொண்டு ஒற்றுமைப்படுத்த முயன்றதால் அதன் சக்தியை இழக்கச் செய்தது. அதேபோல, இன்றைய ஐரோப்பா, நல்லொழுக்க ஆன்மீகச் சட்டங்கள் மூல மல்லாமல், சமுதாய, பொருளாதாரச் சட்டங்கள் மூலம் மக்களை ஒற்றுமைப்படுத்த முயன்று முடிவில் அதன் கட்டுக்கோப்பைக் கலைக்கிறது. இந்த இரண்டு வழிகளுமே மனித ஆன்மாவைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், ஆன்மீக உண்மையுடன் தொடர்பு கொள்ளாமல், செய்யப்பெறும் காரியங்களாகும்.

ஆன்மீக உண்மை என்பது யாது? கடவுளும் தாமும் ஒன்றே என்று ஏசுநாதர் கூறினார். அதுவே ஆன்மீக உண்மை. ஒரு தந்தையும் மைந்தனும் ஒன்றே என்று கூறுவதில் உண்மையான ஒற்றுமையுள்ளது. ஆனால் தேயிலைத் தோட்ட மேலாளருக்கும் அங்குள்ள கூலிகட்கும் எவ்வித உறவு இருப்பினும் அதில் உண்மை ஒற்றுமை இல்லை.

ஐரோப்பிய நாகரிகத்தின் இருதயத்தில் கொலு வீற்றிருக்கும் பேராசையை நான் மிகவும் கண்டித்துள்ளேன். பேராசையை ஏன் கண்டிக்க வேண்டும்? ஏனென்றால் அது உண்மையிடம் அழைத்துச் செல்வதில்லை; இவ்வாறு ஈசா உபநிஷதம் கூறுகிறது.[3] உண்மையைப் பற்றித் தங்கட்குக் கவலை இல்லை என்றும், இன்பம் ஒன்றே தங்கள் குறிக்கோள் என்றுங் கூறுபவரை நோக்கி உபநிஷதங் கூறுவதாவது: “நன்றாக மகிழ்ச்சியை அனுபவியுங்கள்;

ஆனால் உண்மை யில்லாத விடத்தில் இன்பம் இல்லை". எனவே அந்தக் கேள்வி இப்பொழுது எழுகிறது. "அந்த உண்மை என்பது என்ன?" இந்தக் கேள்விக்கு வரும் விடை, இந்த உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் கடவுளால் மூடப்பெற் றுள்ளன என்பதே யாகும். இந்த உலகமே முடிவான உண்மையாக இருக்குமாயின், இந்த உலகத்தின் அப்பால் வேறு ஒன் றும் இல்லாதிருப்பின், செல்வத்தைப் பெறுதலே மனிதனின் உயர்ந்த தொழிலாகவும், பேராசையே அவனுடைய திருப்தியின் காரணமாகவும் இருந்திருக்கலாம். ஆனால் மிக உயர்ந்த உண்மை என்னவென்றால், ஆண்டவனே அனைத்திலும் நிறைந்துள்ளான் என்பதாகும். ஆகவே, ஆன்மாவில் உள்ள அந்த உண்மையை அனுபவிப்பதே மனிதனின் தலையாய செயற்பாடு என்பது விளங்கும். உபநிஷதங்கூட உண்மையைத் துறவு மூலந்தான் அறிய முடியுமே தவிரப் பேராசையின் மூலம் அறிய முடியாது என்று கூறுகிறது. அமெரிக்காவின் வானளாவிய செல்வ மாளிகைகளின் இடையே நான் செலவழித்த ஏழு மாதங்களில் அந்த நாடு எதிர்த் திசையில் முன்னேறுவதைக் கண்டேன். எந்த உலகத்தை, அற்பத்தனமானது, அழியக் கூடியது என்று உபநிஷதம் கூறுகிறதோ அந்த உலகமே அங்குச் சகலமுமாக மதிப்புப் பெற்று விளங்குகிறது. அனைத்தையும் மூடிக் கொண்டு நிற்கும் ஆண்டவன்கூட அங்கு டாலர் என்னும் கனத்த தூசியால் மூடப்பெற்றுள்ளான்.

ஒற்றுமையை உண்மையும், ஒற்றுமை இன்மையை செல்வமும் தருகின்றன. ஆன்மாவைப் பட்டினிபோட்டு, மயக்கம் தரும் அளவில், சேகரிப்பது ஒன்றையே நிறைவாகத் தருகிறது செல்வம். நிறைய வைத்திருப்பது, மேலும் சம்பாதிக்கவேண்டும் என்னும் எண்ணத்தைத் தூண்டி ஓய்வையோ, இன்பத்தையோ பெற முடியாமல் செய்து விடுகிறது.

நிறைவை வேறு எங்கே காணமுடியும்? இந்த வினாவிற்கு விடை, பழங்கால இந்திய ஞானிகளால் கூறப்பெற்றுள்ளது; ஒற்றுமையில்தான் நிறைவைக் காணமுடியும் என்றனர் அவர்கள். ஆப்பிள் பழங்கள் மரத்திலிருந்து விழுவதை ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்று எண்ணிக்கொண்டே போகமுடியும். ஆப்பிள் விழுவதன் உண்மை, அது விழ விழ எண்ணிக்கொண்டிருப்பதில்தான் இருக்கிற தென்று கருதுகின்ற மனிதன், ஒவ்வொரு எண்ணிக்கை ஆனவுடனும் 'அடுத்து என்ன என்ன?' என்ற வினாவினால் சிக்கிவிடுகிறான். அந்த வினாத் தோன்றுவதையோ, எண்

ணுவதையோ அவன் நிறுத்த முடியாது. ஆப்பிள் பழம் விழுவதிலிருந்து புவி ஈர்ப்புத் தத்துவத்தை விளங்கிக் கொண்டவுடன் நிறைவு ஏற்படுவதால் நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

ஆப்பிள் விழுவது பற்றிய உண்மை இதனுடன் இருக்கட்டும். மனிதனைப் பற்றிய உண்மையை எங்கே அறிகிறோம்? ஜனக் கணக்கு அறிக்கையிலிருந்தா? மக்களை ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்று எண்ணிக்கொண்டே போவதிலிருந்தா? மனிதனைப் பற்றிய உண்மை அவனுடைய எண்ணிக்கையிலிருந்தா கிடைக்கும்?

மனிதனைப் பற்றிய உண்மை எவ்வாறு வெளியிடப்பெறுகிறதென்ற வினவிற்கு உபநிஷதங்கள் இவ்வாறு விடை கூறின: "எவன் தன்னுள்ளே அனைத்துயிர்களையும், அனைத்துயிர்களிலும் தன்னையுங் காண்கின்றானோ அவனுக்கே உண்மை விளக்கப்படுகிறது."[4] தன்னுள்ளே தான் அடங்கிக் கிடப்பது தன்னையே அழித்துக் கொள்வதாகும்; பிற உயிர்களில் தன்னை அறிவதே தன்னை வெளிப்படுத்திக் கொள்வதாகும். இந்த வெளிப்பாடு, அழிப்பு ஆகிய இரண்டிற்கும், வரலாறு பெரிய உதரணந் தருகிறது. அனைத்துலகையும் அன்பு செய்யும் வகையால் எல்லா உயிர்களையும் ஒன்றாகவே புத்தர் கண்டார்; அவர் கூறிய மானிட ஒற்றுமைச் சட்டம் சீனர்கட்கு[5] அமிர்தத்தை வழங்கியது. ஆனால் பேராசையால் உந்தப்பெற்றுச் சீனாவிற்குச் சென்ற வியாபாரிகள் மரணத்தையும் அழிவையுமே சுற்றிலும் வழங்கினர். மனிதன் எவ்வாறு ஒரு புறத்தில் வெளிப்பாட்டையும், மற்றொரு புறத்தில் தனக்குத் தானே அழிவையும் தேடிக்கொள்கிறான் என்பதற்கு இதைவிடப் பெரிய உதாரணத்தை வரலாறு தர முடியாது.

இத்தகைய கருத்துக்களைப் படிக்கும்பொழுது வாசகர்கள் என்ன நினைப்பார்கள் என்பதை நான் அறிவேன். "ஐரோப்பியர்களைப் பற்றி இதையேதான் நாங்கள் எப்பொழுதும் கூறிவந்தோம். அதனால்தான் அவர்களுடன் கொடுக்கல் வாங்கல் ஒன்றும் வைத்துக்கொள்ள முடியாது. அவர்கள் எல்லையற்ற அகந்தை காரணமாகத் தனித்தே நிற்கின்றனர்; உலகம் முழுவதையும் ஒரே வாயில் விழுங்கிவிட விரும்புகின்றனர். வெறும் உலகாயதவாதிகளான அவர்கள், உலகியல் அறிவை மட்டுமே தேடி அலைகின்றனர். ஆகவே ஐரோப்பியக் கல்வியை விஷத்தைப்போல் ஒதுக்க வேண்டும்" என்கிறார்கள் அவர்கள். இவ்வாறு கூறுவது பகுத்தறிவுக்கு பொருத்தமான தன்று என்பதுடன், இவ்வாறு கூறுவதே

தனித்திருக்க விரும்புவதைக் குறிக்கிறது. பழங்கால இந்தியாவில் இவ்வாறு நினைக்கக்கூட ஒத்துக்கொள்ள மாட்டார்கள். மனுவின் கொள்கைப்படி, வாழ்க்கையில் பொறுப்புக்களை ஒதுக்கிவிடுவதால் கட்டுப்பாட்டைப் பெற முடியாது; அதற்கெதிராக, அன்றாடக் கடமைகளை நிறைவேற்றுவதால் ஏற்படும் அறிவைக் கொண்டே கட்டுப்பாட்டைப் பெற முடியும். வாழ்க்கையின் பொறுப்புக்கள் என்பவை, . ஜட உலகப் பொறுப்புக்களின் ஒரு பகுதியாகும். ஆன்மீக உலகில் புக வேண்டுமாயின் இந்த ஜட உலகப் பொறுப்புக்களைத் தட்டிக் கழிக்காமல் அவற்றை நிறைவேற்றி உயர்வு படுத்தவேண்டும். மனுவின் இந்தக் கொள்கையை ஆதரித்தே, மரணத்திலிருந்து வெற்றி பெறுவதற்கு உலகியல் அறிவைப் பெறவேண்டும் என்று உபநிஷதங்கள் கூறுகின்றன. இன்றைய ஐரோப்பிய விஞ்ஞானிகள், சிந்தனையாளர்கள் என்பவர்களிடமே உலக அறிவு இருத்தலின், அதனை விரும்பும் கீழை நாட்டிலுள்ள நாம் அவர்கள் உதவியை நாடிப் பெறவேண்டும்,

ஜட அண்டத்தின் பிடியிலிருந்து ஆன்மாவை விடுதலை செய்ய வேண்டுவதே ஆன்மீகப் பண்பாட்டின் ஒரு பகுதியாகும். பண்பாட்டின் அடிப்படை வேலையே இது ஆகலின், இது இன்று மேனாட்டாரின் பொறுப்பி லிருந்துவருகிறது. இதனை நன்கு வலியுறுத்தினாலொழியப் பெருவாரியான மக்கள் பசித் தீயின் காரணமாக, ஜடத்தின் அடிமைகளாக இருந்தே தம் சக்தியைச் செலவழித்து விடுவர். இதனால்தான், இன்றைய மேனாட்டினர், சட்டையை மடக்கிக் கொண்டு மண்வெட்டி மூலம் பூமியை வெட்டுவதில் அவ்வளவு சுறு சுறுப்புக் காட்டுகிறார்களாகலின், அவர்கட்கு வானத்தைப் பார்க்கக்கூட நேர மில்லாமற் போய்விட்டது. வலிமையான இந்த அடித்தளத்தின்மேல் மேலே செல்லும் படிகள் கட்டி முடிக்கப் பட்டால்தான், காற்றையும் ஒளியையும் விரும்புகிறவர்கள் கவலையின்றி. வாழமுடியும்.

அறியாமையே தளை என்றும் அறிவே விடுதலை என்றும் நம்முடைய பழைய ஞானிகள் கூறியுள்ளனர். இவ்வாறு கூறும்பொழுது அவர்கள் ஆன்ம உலகத்தையே கருத்தில் கொண்டிருப்பினும், ஜட உலகத்திற்கும் இது பொருந்தும். ஜட உலகத்தின் சட்டங்களை நன்கு அறிந்தவனே விடுதலையடைந்த மனிதனாவான்; அவற்றை அறியாதவர்கள் அடிமைகளாகவே இருப்பர். இந்த உலகம் போட்டுள்ள தடைகள் மாயமானவையாகலின் விஞ்ஞானத்தின் உதவி கொண்டு அவற்றை வெல்ல முடியும். விடுதலையை இந்த உலகத்தில் விரும்புவதால் மேனாடு பசி, தாகம், நோய், வறுமை ஆகிய

வற்றை வேருடன் களைய முற்படுகிறது. சுருங்கக் கூறுமிடத்து, மனிதனை மரணத்தின் பிடியிலிருந்து விடுவிக்க முயல்கிறது. இதற்கெதிராக, பழங்கால இந்தியா, ஆன்மாவைத் தேடிச் சென்ற முறையில் மரண மில்லாப் பெருவாழ்வாகிய நித்தியத்துவத்தின் இரகஸ்யத்தைக் கண்டு கூறியுள்ளது. ஆகவேதான் கிழக்கும் மேற்கும் ஒன்று சேராமல் இருந்தால் இரண்டும் மனமுடைந்து போக நேரும். அவைகள் ஒற்றுமை யடையும் 'மந்திரத்தை' உபநிஷதங்கள் கூறியுள்ளன. அறியாமை மரணத்தில் கொண்டுவிடு மென்றும், அறிவு நித்தியத்துவத்தில் கொண்டுவிடு மென்றும், விஞ்ஞானம் ஜட உலகிற்குத் தேவை என்றும், ஆண்டவனை அறிய ஆன்மீகம் தேவை என்றும் கூறியதே அந்த விடையாகும். கிழக்கும் மேற்கும் ஒற்றுமைப்படுவது ஆன்மீக, விஞ்ஞான அறிவுகள் ஒன்றுபடுவதாகும். அவை ஒன்றுபடாத காரணத்தால்தான் கிழக்கில் வறுமையும் உயிரற்ற தன்மையும், மேற்கில் அமைதி இன்மையும், துயரமும் இருந்து வருகின்றன.

ஒற்றுமை என்பதும் ஒரே மாதிரியாக இருத்தல் என்பதும் வெவ்வேறு என்பதைப் புரிந்து கொள்ளாவிட்டால், என்னைத் தவருகப் புரிந்து கொள்ள நேரிடும். வெவ்வேருக இருப்பவர்களே ஒற்றுமைப்பட முடியும். பிற நாட்டினுடைய சுதந்திரத்தை அழிக்கும் நாடுகள், ஒருவருக் கொருவர் நம்பி வாழும் வாழ்க்கையை அழிப்பவை. சாம்ராஜ்ய நாடுகள் மலைப் பாம்பைப் போலப் பிற நாடுகளை விழுங்கி விடுகின்றன; இவ்வாறு விழுங்குவதை ஒற்றுமை என்றுங் கூறுகின்றன. மனிதனுடைய உலகாயத அக்கறைகளை ஆன்மீகம் விழுங்கிவிடுமே யாஞல், அதனை ஆன்மாவும் ஜடமும் கலந்த கலவை என்று கூற முடியாது. இவை இரண்டும் தனித் தனியேயும் ஆஞல், ஒற்மையோடும் இருக்கும்பொழுதுதான் அதனைக் கலவை என்று கூற முடியும். எந்த விஷயங்களில் மனிதர்கள் தனியாக இருக்கிருர்களோ, அவற்றில் அவர்கள் தனித்தன்மைக்கு இடங் கொடுப்பது மூலந்தான், அவர்கள் ஒன்றுயிருக்கக் கூடிய விஷயங்களில் உண்மை ஒற்றுமையை நிலைநாட்ட முடியும். (முதல்) உலகப் போர் முடிந்த அன்றிலிருந்தே சிறிய ஐரோப்பிய நாடுகள் சுய உரிமை கோரி வலியுறுத்தின. அன்றிலிருந்தே ஐரோப்பா அமைதியில் நாட்டங் கொண்டது. ஐரோப்பாவில் தொடங்கப் போகிற புது யுகத்தில் மாபெருஞ் செல்வம், சாம்ராஜ்யங்கள், உடன்படிக்கைகள் ஆகியவற்றின் ஆற்றல்கள் தவிடு பொடியாகி, முடிவில் உண்மைச் சுதந்திரத்தின் அடிப்படையில் உண்மை ஒற்றுமை நிலைபெறப் போகிறது. புது யுகம்

தோன்ற முயற்சி செய்யும் மனிதர்கள் இத்தகைய ஒரு விடுதலைக்கு முயல வேண்டும். இத்தகைய விடுதலை, குறிப்பிட்ட நாடுகளை யல்லாமல் மனித சமுதாயம் முழுவதற்கும் விடுதலை அளிக்கும் என்பதை மனத்திற்கொள்ள வேண்டும்.

"எவன் தன்னுள்ளே அனைத்துயிர்களையும், அனைத்துயிர்களிலும் தன்னையும் காண்கிருனே அவனுக்கே உண்மை விளக்கப் படுகிறது." மானிடத்தின் வரலாறு முழுவதும் இந்தப் பழைய கொள்கையைத் தவருமல் விளக்க வில்லையா? மலை, கடல் என்ற எல்லைகளுக்குள் தனித் தனியான கூட்டமாக இருந்த பழைய இனத்தாரை வரலாற்றுத் தொடக்கத்தில் காண்கிறோம். ஒன்று சேர முடியாமல், அவ நம்பிக்கை, கொள்ளை ஆகியவற்றைச் செய்வதுடன் ஒருவருடன் ஒருவர் சண்டையிடும் இனங்கள் மறைந்து விட்டன. இதன் எதிரே, அனைத்துலக ஆன்மாவைத் தம் சக மானிடர்களிடம் கண்டவர்களே பெரிய இனமாக விளங்குகிறுர்கள்.

நிலம், நீர், ஆகாயம் ஆகியவற்றில் பல வழிகளை உண்டாக்கி, விஞ்ஞானம் அவற்றில் பல வாகனங்களையும் விடுவதால், பூகோளத் தடைகள் என்பவை இன்று இல்லை என்றே கூறி விடலாம். பல்வேறு மனிதர்களும், அதைவிடச் சிறப்பாகப் பல்வேறு இனங்களும் நெருங்கி வருவதால் மானிட ஒற்றுமைப் பிரச்னை முன் பிருந்ததைவிட இப்பொழுது முக்கியத்துவம் பெற்று விட்டது. விஞ்ஞானத்தால் நெருக்கத்தில் கொண்டுவரப் பெற்றுள்ள இவர்களை எது இணைக்க முடியும்? அவர்களை ஒன்ருக்கியுள்ள புறச் சக்திகள் மிக வேகமாக வேலை செய்கின்றன; ஆனுல் அவர்களை ஒற்றுமைப் படுத்தும் ஆக்க சக்திகள் மிகவும் பின்தங்கி விட்டன. இரயில் பெட்டிகளுடன் கூடிய எஞ்சின், அதனை ஓட்டுபவன் இல்லாமல் முன்னேக்கி ஓடுவது போலவும், ஓட்டுபவன் வண்டியைப் பிடிக்கப் பின்னே ஓடுவது போலவும் இருக்கிறது இது. வண்டி வேகமாக ஓடுவதைப் பார்த்து ஐரோப்பியப் பார்வையாளர்கள் மகிழ்ச்சிக் குரலில் "இதுதான் உண்மையில் முன்னேற்றம் என்பது" என் கிருர்கள். ஆனுல் மெல்ல நடக்கும் வெள்ளை மனம் படைத்தவர் களாகிய கீழ் நாட்டார் இத்தகைய முன்னேற்றத்தால் ஏற்படும் அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ள இன்னும் பழக வேண்டும். மிக நெருக்கமாகவும், கட்டப்படாமலும் உள்ள பொருள்கள் அசையத் தொடங்கினுல் முட்டிக்கொள்வது உறுதி. அவ்வாறு முட்டிக் கொள்வதைச் சில நேரங்களில் நாம் வரவேற்ருலும், அதனுல் ஏற்படும் வலி இன்பந் தருவதன்று.

இது எவ்வாறாயினும், ஒற்றுமைப்படாமலேயே தேசங்கள் பலவும் நெருங்கி வந்து கொண்டிருக்கின்றன. அதனால் ஏற்படும் துயரம் உலகை இன்று ஆட்டிப் படைக்கிறது. ஏன் அந்தத் துயரம் இன்னும் ஆற்றுவிக்கப்பெற வில்லை? ஏனென்றால், தம்முடைய எல்லைக் குள்ளாக மட்டும் ஒற்றுமையாக இருக்கக் கற்றுக்கொண்ட தேசங்கள், அந்த எல்லைக்கு அப்பாற்பட்டு ஒற்றுமையாக இருக்கமுடியாது.

என்றாவது ஒருநாள், நடைமுறைச் சூழ்நிலையின் காரணமாக, மனிதன், எல்லைக்குள் ஓரளவு உண்மையைக் காண்பானே யாகில், அப்பொழுது உண்மையைக் காட்டிலும் எல்லையையும், கடவுளைக் காட்டிலும் பூசாரியையும், அரசனைக் காட்டிலும் போலீஸ் காரனையும் அதிகமாக மதிக்கத் தொடங்கி விடுகிறான். உண்மையின் சக்தியால் தேசங்கள் வளர்ச்சியடைந் துள்ளனவே தவிர, தேசீயம் வளரவில்லை. என்றாலும், தேசீயத்தின் பலி பீடத்தில் பலியிடுவதற் கென்றே உலகத்தின் பலவிடங்களி லிருந்தும், மக்களைச் சேகரித்தது ஐரோப்பா. பலியிடப்பட்டவர்கள் பிற நாட்டைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றவரை யாரும் அதற்கு மறுப்புக் கூறவில்லை. ஆனால் 1914-ம் ஆண்டில் ஐரோப்பியர் களையே பலியிடும் நிலை ஏற்பட்டவுடன் தேசீயம் என்பது நலம் புரிகின்ற தெய்வம் அன்று எனச் சிலர் கருதத் தொடங்கினர். பலியிடப்பட்டவர்கள் ஐரோப்பியர்களா, ஐரோப்பியர் அல்லாத வர்களா என்பதுபற்றி அந்தத் தெய்வம் கவலைப்பட வில்லை என்ப தால்தான் அவர்கள் இவ்வாறு நினைக்கலாயினர். அதுவரை, ஆசியாவில், நன்கு கொழுத்துத் தின்பதற்கு ருசியாக இருந்த பகுதிகளைப் பொறுக்கி எடுத்து தேசீயம், விருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தது. இவ்வாறு செய்வது நன்மை புரியுமா எனச் சில ஐரோப்பியர் கருதத் தொடங்கினர். உலகப் போர் முழு மூச்சாக நடந்து கொண்டிருக்கும்பொழுது, அது முடிந்தவுடன் தேசீயமும் மறைந்து விடுமென்று அவர்கள் கருதினர். ஆனால், போர் என்ற பெயரில் அது மறைந்து உடனே சமாதானம் என்ற போர்வையில் வெளிப்பட லாயிற்று. தேசீயம் விளைத்த துயரத்தின் பிறகும், அதன் அடியும் உதையும் பெற்ற பிறகும், இன்னுங்கூடத் தேசீயம் இவ்வளவு வலிமையுடன் இருப்பதைக் கண்டு ஐரோப்பியச் சிந்தனை யாளர் அச்ச மடைந்தனர். தன் னலத்தை விரிவு படுத்தப் பயன்படும் இக் கொடிய விஷம், ஒரு தேசீய முட்டாள்தனமாகும்; இதுவே அனைத் துலக ஒற்றுமையை வெறுக்கிறது. இவ்வாறு இருந்துங்கூட

உலக மக்கள் ஒன்றாக ஆகியுள்ளனர். எந்த ஒரு மதமும், அது எவ்வளவு வலுவுடையதாகவோ அன்றி வல்லரசாகவோ இருப்பினும் சரி; இந்த உண்மையை மறுக்க முடியா தாகலின் இதனுடன் சமாதானஞ் செய்து கொண்டே யாகவேண்டும். இன்றேல், தேசீய உணர்ச்சியின் தூண்டுதலால், வஞ்சகமான அரசியல் தந்திரத்தால் அனைத்தையும் அழிக்கின்ற இந்தப் போர்களுக்கு முடிவே இல்லாமற் போய்விடும்.

நவீன காலத்தில், கல்வி என்பது காலத்தின் இயல்புக்கு ஏற்ற தாக இருத்தல் வேண்டும். தேசீயத்தை வழிபடுகிறவர்கள் தன் னலத்தைப் கல்வியின் மூலம் பரப்புவதற்குக் தகுந்த சமாதானத் தைத் தேடிப் பிடிப்பது தமது கடமை என நினைக்கின்றனர். அரசியல் பகைமை உணர்ச்சியை வளர்ப்பதற்குக் கல்வியை பயன் படுத்தியமைக்காக ஜர்மெனியை ஏனைய ஐரோப்பிய நாடுகள் கண்டித்தன; என்றாலும் பெரிய ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் இதே செயலை ஒவ்வொரு காலத்தில் செய்துள்ளன. தேசீயத்தைப் பிறப்பிக்கும் ஒரு முட்டை பொரிக்கும் யந்திரமாகத்தான், அவர்கள் அனைவரும் கல்வியைக் கருதினர். எனினும் அவை அனைத்திலும் சிறப்புடைய விஞ்ஞான அறிவு பெற்றதாகலின் ஜர்மெனி தேசம் சிறந்த பொரிக்கும் யந்திரத்தைத் தயாரித்துச் சிறந்த குஞ்சுகளைப் பெற்றது. அவர்களுடைய செய்தித் தாள்களும் இதே இலட்சியத் துடன் பொய்யை வழங்குவதைத் தவிர வேறு என்ன செய்கின்றன?

கர்வத்தோடு கூடிய தேசீயத்திலிருந்து எவ்வாறு விடுதலை அடைவது என்பதுபற்றித்தான் இன்று முக்கியமாகக் கற்றுக் கொள்ள வேண்டும். நாளைய வரலாறு சர்வ தேசீயத்தில் ஓர் அத்தியாயத்துடன் தொடங்கும். அந் நிலையில் அனைத் துலகத் தன்மைக்கு மாறான பழக்கங்கள், நடை யுடைகள், மரபுகள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கொண்டிருத்தல் தகாது. தேசீய கர்வம் என்று ஒன்றிருப்பதை நான் அறிவேன். ஆனால் நம்முடைய இந்திய ஞானிகள் அனைவருடைய முயற்சியும், இந்த ஒற்றுமை இன்மையைப் போக்கத்தான் பயன்பட்டது என்பதை, இந்தக் கர்வம் மறக்கச் செய்யாமல் இருக்க வேண்டுமெனப் பெரிதும் விரும்புகிறேன். இத்தகைய ஓர் இக்கட்டான நிலைமைத் தாங்கள் அடைவதற்கு, எவற்றைக் கற்றோம், எவற்றை நினைத்தோம் அல்லது எவற்றைச் செய்தோம் என்று கடல் கடந்து வாழும் மக்கள் அனைவரும் தம்மைத் தாமே கேட்டுக்கொள்வது நம் காதிலும்

விழுகிறது. அவர்களுடைய பல்வேறு செயல்களிலும் மானி ஒற்றுமையைச் சேர்க்க மறந்த தவற்றி லிருந்துதான் அவர்க துயரம் தொடங்கிற்று என்று நாம் இங்கிருந்துகொண்டே கூ முடியும்.

"யார் ஒருவன் தன்னை அண்டத்துடன் இணைத்துக்கொள் தால் மானிட ஒற்றுமையை உணர்கிருனே அவனே அறியாமைக லிருந்தும், துயரத்திலிருந்தும் விடுதலையடைகிருன்"[7]. கட கடந்துள்ள மக்கள் சமாதானத்திற்காக அலறுவது நம் காதுகளி விழுகிறது. நலமாக இருக்கும் பொழுதுதான் அமைதி கிடைக்கு தென்றும், ஒற்றுமை நிலவும்பொழுதுதான் நலமாக இருக்க முடி மென்றும் நாம் அவர்கட்குக் கூறவேண்டும். பழைய இந்தி விடுத்துள்ள செய்தியாகிய அத்வைதத்தை, பிரிக்க முடியாதது ஒன்ருக இருப்பதுமான ஒன்றை, அமைதியும் நித்யத்துவமுமா ஒன்றை அவர்களிடம் எடுத்துச் சென்று கூறவேண்டும். ஒ புதிய யுகம் தோன்றப் போகிறது. அதனை வரவேற்பதற்கு வழி, மேனுடு இப்பொழுதே தொடங்கியதைப் போல, நம் வீடுகள பழமையால் ஏற்பட்ட தூசியைப் போக்குவதாகும். இந்த நாட் உள்ளவர்களாகிய நாம், பழமை என்ற குப்பை மேட்டில் ஏறி நின் இப் புதிய யுகத்தை வரவேற்கப் போகிருேமே என்று நினைக் பொழுது பெரிதும் வெட்க மடைகிறேன். தேசீய கர்வம் எவ் ஒன்றிருப்பதனுல் இதனை வேண்டுமென்றே கூற விரும்புகிறே பிரிக்கப்படாத ஒன்று என்பது நம்முடைய நாட்டுக் கருத்துத்தா எனவே, புதிய யுகத்தை வரவேற்கும்பொழுது இந்தக் கருத்ை வலுவாகப் பற்றிக் கொள்ளாமல் எவ்வாறு கை நெகிழ விட்டுவ முடியும்?

நம்முடைய கல்வி நிலையங்கள் கிழக்கும் மேற்கும் சந்திப்ப குரிய இடமாக[8] அமைய வேண்டுமென்று பெரிதும் ஆசைப் கிறேன். உலகாயத இலாபம் பெறக்கூடிய உலகில், மனி சண்டை யிடுவதை நிறுத்த வில்லை; எளிதாக நிறுத்தவும் மாட்ட கள். பண்பாட்டுப் பரிவர்த்தனைப் பகுதியில் அவர்கள் சந் பதற்குத் தடை ஒன்றும் இல்லை. விருந்தினர் யாரையும் வரவே காமல், தன்னந் தனியனுய் வாழும் மனிதன் அற்ப மனம் படை வனுவான்; ஒரு தேசமே அவ்வாறு இருப்பினும் அதுவும் அ குணம் படைத்த தேசமே யாகும் என்றுதான் கூறவேண்டு தன்னுடைய சௌகரியத்தைத் தேடிக்கொண்டது போல, உலக பிற பகுதிகளிலிருந்து வரும் விருந்தினர்களை உபசரிக்க ஒவ்வொ

தேசமும் விருந்தினர் மாளிகைகளை வைத்து வரவேண்டும். இம்முறையில் பார்த்தால் தேசீயக் கல்வி நிலையங்களே சிறந்த விருந்தினர் மாளிகைகளாகும். நம்முடைய அரசாங்கப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் வழங்கப்படும் கல்வியில், துரதிஷ்டவசமாக, இந்தியக் கல்வி என்று சொல்லக்கூடியது ஒன்றுமில்லை. அதில் பெரும்பாலானது மேனாட்டில் இருந்து எடுக்கும் பிச்சைப் பொருளாகும். ஆகவே, இந்தியக் கல்வி நிறுவனங்கள், தாங்களே பிச்சைப் பொருளில் பிழைக்கவேண்டி இருப்பதால், பிறரை உபசரிக்கும் பொறுப்பைத் தங்களிடம் எதிர்பார்க்கக் கூடா தென்ற சமாதானத்தைக் கூறிவிடுகின்றன. அவர்களிடம் ஒன்றும் எதிர்பார்க்கப்படுவதில்லை என்பதும் உண்மை யன்று. மேனாட்டார் அடிக்கடி "இந்தியாவின் குரல் எங்கே?" என்று கேட்பதை நானே கேட்டிருக்கிறேன். மேனாடுகளில் தோன்றும் இந்த வினா, இந்தியாவிற்கு வந்து, இந்தியாவின் கதவருகில் நின்று உள்ளே நடப்பதைக் கேட்க முயல்கிறது. அந்த வினா, கதவருகில் நின்று காது கொடுத்துக் கேட்கும்பொழுது, உள்ளே மேனாட்டுக் குரலின் எதிரொலியையே கேட்கிறது. அது ஒரு கேலிக்கூத்தாகவே இருக்கிறது. "மாக்ஸ் முல்லர்" நூல்களைப் புதிதாகப் படித்த நம்மவர்கள் தங்களுடைய பழைய நாகரிகம் பற்றிப் பேசினாலும், மேனாட்டைக் கண்டித்தும் பழித்தும் பேசினாலும், அதைக் கேட்கும் பொழுது ஐரோப்பிய பாண்டு வாத்தியத்தைக் கேட்பது போலவே இருக்கிற தென்பதை நானும் கவனித்துள்ளேன்.

கீழை நாடுகளின் சார்பாக, இந்தியா ஒரு கல்வி நிறுவனத்தை உண்டாக்கி, உலகின் பல்வேறு பகுதிகளிலும் உள்ளவர்கள் உண்மையை நாடுவதற்காக அதில் வந்து கூடும்படி செய்யும் என நான் எதிர்பார்க்கிறேன். இதனைச் செய்வதற்குரிய வசதியும் ஆதாரமும் நம் நாட்டில் இருக்கின்றன. இந்தியா வரவேற்கும் ஒவ்வொரு நாடும் இந்தியாவை வரவேற்கும். அன்றியும், இந்தியாவை ஒரு கௌரவமான விருந்தாளியாகவும் போற்றும். ஆனால் கௌரவம், கௌரவ மின்மை என்ற பிரச்னையே இங்கு எழப் போவதில்லை. மனிதனுடைய ஆன்மாவை வெளிப்படுத்தவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் சத்தியத்தை அகத்திலும் கண்டு புறத்திலும் காட்டவேண்டும் என்ற ஒன்றுதான் முக்கியமானதாகும். மனிதனுடைய ஆன்ம வெளிப்பாடு என்ற தத்துவம் நம்முடைய கல்வி மூலமாகப் பிரசாரம் செய்யப்பெற்று, நம்முடைய செயல்கள் மூலம் பயிற்சி யளிக்கப்பெற வேண்டும். அப்பொழுதுதான்

மானிட சமுதாயம் முழுவதையும் கௌரவிக்கின்ற காரணத்தால் நாமும் கௌரவிக்கப்படுவோம். புதிய யுகத்தைக் கொணர்வதன் மூலந்தான், வலி யிழந்த பழைய யுகத்தை வெல்ல முடியும். "எவன் தன்னுள்ளே அனைத் துயிர்களையும், அனைத் துயிர் களிலும் தன்னையும் காண்கிறானோ அவனுக்கே உண்மை விளக்கப் படுகிறது" என்ற இதுவே நம் இந்தியக் கல்வி நிறுவனங்களின் இலட்சியமாக அமைந்திருக்க வேண்டும்.

—1921.

## 12. சத்தியத்தின் அழைப்பு

பிற உயிர்கள் தயாரித்த உணவை உண்ணுகின்ற ஒட்டுண்ணிகள் (Parasites) தயாரான உணவை உண்ணும் சௌகரியத்திற்காக, தாமே இயல்பாக உண்டு சீரணிக்கும் சக்தியை இழந்துவிடுகின்றன. மனிதனுடைய வரலாற்றிலும், சக்தியைப் பயன்படுத்தாமல் விட்ட குற்றமே, அவனுடைய வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று. பிறருடைய உழைப்பில் வாழும்பொழுதுதான் மனிதன் ஒட்டுண்ணி யாகிறுன் என்பதில்லை. புறத்தில் உள்ள சந்தர்ப்பங்களுடன் விலக முடியாதபடி தன்னைச் சேர்த்துக் கட்டிக்கொண்ட பொழுதும், எவ்வாறு பொருள்கள் இருந்தனவோ, இருக்கின்றனவோ அவற்றுடன் கட்டிக்கொண்டு வேறு சிறு முயற்சியும் இல்லாமல் நீர் போகும் வழியில் மிதந்து செல்லுங் காலத்திலும் அவன் ஒட்டுண்ணி யாகிறுன். புறச் சூழ்நிலைக்குத் தன்னை முற்றிலும் தியாகம் செய்துகொள்ள, அகத்தின் ஆணை கிடைப்பதில்லை. இதன் பயனுக, மனிதன் இச்சா சக்தியை இழந்து, வெறும் பழக்கத்திற்கு அடிமையாகி, ஒருவகையான ஒட்டுண்ணியாகி விடுகிறுன். பார்வைக்கு இயலாதவை போல் தோன்றுகிற காரியங்களைக்கூடச் செய்து முடிக்கும் சக்தி அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்தும் அதனைப் பயன்படுத்தாமல் இழந்து விடுகிறுன். மனிதனின் விதியாக வுள்ள வளர்ச்சி வழியையும் அவன் இழந்து விடுகிறுன்.

இந்த முறையில் பார்த்தால் எல்லாக் கீழ் விலங்குகளும் ஒட்டுண்ணிகளே. சூழ்நிலைக் கேற்ப வாழ்க்கை நடத்துகின்ற அவை, இயற்கையின் தேர்வு முறைப்படி வாழவோ, சாகவோ செய்கின்றன. இயற்கையின் ஆணைப்படி அவை முன்னேற்றத்தையோ அன்றிப் பின்னேற்றத்தையோ அடைகின்றன. அவற்றின் மனம், வளரும் சக்தியைப் பெருமையினுல், வளராத குறளையாகவே இருந்து விடுகிறது. பல்லாயிர மாண்டுகளாகத் தன் கூட்டை ஒரே ஒரு முறையில்தான் தேனீ கட்டிக்கொண்டு வருகிறது; இது தவிர வேறு வழியை அது அறிய வில்லை. இந்த முறையில் தேனீக்கூடு ஒரு அழகிய இலட்சிய வடிவத்தை அடைந்துவிட்டது என்றுலும், எவ்வித மாறுபாடும் இல்லாத கூட்டு வாழ்க்கைக்கு அவை அடிமையாகி விட்டன. கீழ் நிலையிலுள்ள உயிர்களைப் பொறுத்தமட்டில், இயற்கை, விநோதமான பழக்கத்தையே காட்டி வருகிறது. தன்னுடைய புடவைத் தலைப்பில்

மிக்கப் பாதுகாவலுடன் அவ் வுயிர்களைக் காத்து வருகிறது. அந்த உயிர்கள் தைரியமடைந்து ஆபத்து நிறைந்த புதிய சோதனைகளில் ஈடுபட்டு விடாதபடி அவற்றின் இயல்பூக்களை (Instincts) அடக்கியே வைத்திருக்கிறது.

மனிதனைப் பொறுத்தவரை, தைரியமான ஆக்கல் முறையைக் கையாண்டது தெய்வீகம். புறப் பகுதியில் அவன் வலி இழந்து, அம்மணமாக, பாதுகாவல் அற்ற முறையில் இருப்பினும் அவனுடைய அக இயல்பு விடுதலை பெற்று விளங்கியது. இந்த விடுதலையில் மகிழ்ந்து நின்ற மனிதன், "இயலாதவற்றையும் செய்து முடிப்பேன் நான். பொருள்கள் இவ்வாறுதான் இருக்கும் என்ற கொள்கையை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். இதற்கு முன்னர் நடைபெருதவற்றையும் நடைபெறுமாறு செய்வேன்" என்று பறை சாற்றினுன்.

அதனுல்தான் போலும், அவனுடைய வரலாற்றின் தொடக்க காலத்தில், கொம்பும், நகங்களும் உடைய பிராணிகளின் மத்தியில் அவனுடைய வாழ்வு நடைபெற வேண்டி இருந்தது. அந்த நிலையில் அவன் மானைப் போல ஓடி ஒளிந்தோ அன்றி ஆமையைப் போல மறைத்துக் கொண்டோ வாழாமல், இயலாது என்று கூறத்தக்க செயலை அதாவது சிக்கிமுக்கிக் கல்லைத் தயாரித்தான். இதன்மூலம் அதிக சக்தி வாய்ந்த ஆயுதங்களைச் செய்யத் தொடங்கினுன். அவன் தயாரித்துக் கொண்ட 'கொம்பும் நகங்களும்' அவனுடைய அக அறிவின் பயனுக விளைந்தவை. இயற்கை அன்னையின் கொடையாகக் அவை கிடைக்காமையால், இயற்கைத் தேர்வு முறையின் பயனுகத்தான் அந்த ஆயுதங்கள் செம்மைப்பட வேண்டும் என்ற நிலைமை தோன்ற இல்லை.

சிக்கிமுக்கிக் கல்லில் தொடங்கிய அவனுடைய ஆயுதங்கள் இரும்பாக வளர்ந்தன. சூழ்நிலைகளின் எல்லையால் கட்டப் பெற்று அவனுடைய மனம் செய லிழக்காமல் மேலும் மேலும் புதியவற்றைத் தேடி அலைகின்றது என்பதை அது நிரூபித்தது. அவனுடைய பிடிக்கு அப்பாற்பட்டதாகக் காணப்பெற்ற ஒன்று அவனுடைய பிடிக்குள் சிக்கியது. கையில் தயாராக இருந்த சிக்கிமுக்கியுடன் திருப்தி யடையாமல், பூமிக் கடியில் குடைந்து இரும்புக் கனியைத் தேடினுன். சிக்கிமுக்கியை எளிதாகக் கூர்மைபடுத்துவதுடன் திருப்தியடையாமல், இரும்புக் கனியை உருக்கி அடித்து ஆயுத மாக்கினுன். எது மிகவும் கடினமாகவும் எதிர்த்து நிற்கக் கூடியதாகவும் இருந்ததோ, அதுவே அவனுடைய சிறந்

துணையாயிற்று. ஓயாத உழைப்பில் வெற்றியை மட்டுங் காணுமல், இன்பத்தைக் காண்பதே மனித இயல்பாகும். புறத்தே இருந்து அகத்தே குடைந்து செல்வதற்கும், வெளியே காணப்படுபவற்றி லிருந்து மறைந்து கிடப்பவற்றிற்கும், எளிமையிலிருந்து கடினத் திற்கும், ஒட்டுண்ணி வாழ்க்கையிலிருந்து சுதந்திர வாழ்க்கைக்கும் உணர்ச்சி உந்தலிலிருந்து சுயக் கட்டுப்பாடாகிய கலங்கா மைக்கும், மனிதன் விடாது உழைக்க வேண்டி இருந்தது. அவன் அடைந்த வெற்றிகட்கு அதுவே வழியாய் அமைந்தது.

ஒரு கூட்டத்தார் "சிக்கி முக்கிக் கல் மதிப்புக்குரிய நம் மூதா தையர் கையாண்ட ஆயுதமாகும். அதனை விட்டுவிடுவ தென்பது நம் இனத்துக்கேயுரிய பரம்பரைச் சொத்தை விட்டு விடுவ தாகும்" என வருந்திக் கூறுகினறனர். இந்த முறையில், பரந்த மானிட சமுதாயத்தின் பரம்பரைச் சொத்தில் அவர்கட்கும் உரிமை உண்டு என்பதை மறந்து விட்டு, அவர்கள் இனத்தாரின் பரம் பரைச் சொத்தை மட்டும் வைத்துக் கொண்டனர். கற் காலத்தில் வாழவேண்டிய இத்தகைய மனிதர்கள் இன்றும் உண்டு. எனினும் காட்டிலும், குகையிலும் மறைந்து திரிகின்ற இவர்கள் ஒதுக்கப் பட்டவர்களாவர். சூழ்நிலையைப் பற்றி வாழும் ஒட்டுண்ணி வாழ்க் கையை அடைந்துவிட்ட உயிர்களைப்போல வாழ்க்கையை நடத்து கின்ற இவர்கள், தங்கள் அக உலகத்தினுள் சுயராஜ்யத்தை இழந்துவிட்ட காரணத்தால் புற உலகத்திலும் அதனை இழக்க வேண்டிய கடப்பாடுடையவர்கள். மனிதன் தன் சக்தியைப் பயன் படுத்தி ஆகாதவற்றை எல்லாம் ஆக்கும் இயல்பைப் பெற வேண்டும் என்ற உண்மையை மறந்தவர்கள் இவர்கள். முன்னர் நிகழ்ந்தவற்றில் மட்டும் தன்னை அடக்கிக் கொண்டு வாழாமல் எவ்வளவு இருக்க வேண்டுமோ அந்த நிலைக்கு மனிதன் வளர்ச்சி யடைய வேண்டும்.

முப்பது ஆண்டுகளின் முன்னர், ஆங்கிலம் கற்ற இந்தியர்கள் அரசியல் உரிமைகளைப் பிச்சையாகக் கேட்டுக் கொண்டிருந்த பொழுது, மனிதன் தன் உரிமைகளைப் பிச்சையாகக் கேட்டுப் பெற வேண்டியதில்லை, அதற்குப் பதிலாக அவற்றை அவனே ஆக்கிக் கொள்ள வேண்டும் என்னும் கருத்தை என்னுடைய நாட்டினர் அறியுமாறு செய்ய முயன்றேன். மனிதன் அவனுடைய அக இயல்பால்தான் வாழ்கிறான்; அங்கு தனக்குத் தானே அவன் தலைவனுவான். புறத்தே இருந்து கிடைக்கின்ற இலாபத் திற்கு இச்சை வைத்தல், தன்னைத் தானே புண்படுத்திக் கொள்வு

தாகும். நம்முடைய அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டதைக் காட்டிலும் அதிக வருத்தந் தருபவை நம்முடைய பிரார்த்தனைகள், மகஜர்கள் ஆகிய வெட்கக்கேடான நமூனுக்களேயாகும்.

பின்னர், பிரிவினை என்ற கத்தியின் மூலம் மறுபடியும் ஓர் அமைதி யற்ற நிலை வங்காளத்தில் பரவியது. பிரிட்டிஷ் துணி பகிஷ்காரத்தில் இறங்கினோம்; ஆனால் இம் முயற்சியின் பயனுகப் பம்பாய் மில் முதலாளிகளின் இலாபம் மயக்கந் தரும் அளவுக்கு ஏறினதுதான் கண்ட பலன். அப்பொழுது நான் கூறியதாவது: "இது சரியான வழியல்ல; இது மிவுகம் மட்டமான வழியாகும். உங்களுடைய உணர்ச்சிக ளெல்லாம் பிற நாட்டார் மேல் சென்றுள்ளதே தவிர உங்கள் நாட்டாரைப் பற்றிக் கவலைப்பட வில்லை. பிற நாட்டார் மேல் கொண்ட கோபந்தான் உங்கட்கு ஊக்கத்தைத் தருகிறதே தவிர உங்கள் நாட்டார் மேல் கொண் டுள்ள அன்பால் ஊக்கம் பிறக்கவில்லை.'' இதன் மேல் ஓர் எச்சரிக் கையையும் விடுத்தேன். "பிற நாட்டார் இந்தியாவில் இருப்பது வரலாற்றில் நிகழ்ந்த ஓர் எதிர்பாராச் சம்பவமாகும். ஆனால் நம் முடைய நாடு இங்கு நிலைத்துள்ளது என்பதும் வாழ்கிறதென்பதும் ஆழ்ந்த பொருளைக் கொண்டுள்ளன. முதல் விஷயம் மாயை[1] அல்லது இல்பொரு ளாகும்; அடுத்த விஷயம் ஆழ்ந்த அசைக்க முடியாத உண்மை யாகும். கோபத்தின் காரணமாகவோ அன்றி இன்ப உணர்ச்சி வசப்பட்டோ அதைப் பெரிதாக ஆக்கிக் கொண் டால்தான் மாயை நம் எதிரே மிகப் பெரிதாகக் காட்சி யளிக்கும். கோபத்தால் அதனிடம் போரிடுவதும், மரியாதையுடன் அதனிடம் பணிந்து போவதும் ஒரே பயனைத்தான் தரும். மாயை என்பது இருட்டைப் போன்றது. மிக வேகமான நீராவி எஞ்சினைக் கொண்டு இருளைக் கடந்துவிட முடியாது. எழு கடல் நீரைக் கொண்டும் இருளைக் கழுவிவிட முடியாது. என்றாலும் சத்திய மாகிய விளக்கை ஏற்றினவுடன் அதன் ஒரு கிரணம் பட்ட மாத்தி ரத்தில், மாயையாகிய இருள் ஓடி மறைந்து விடுகிறது. ஒரு சிறிய அளவு உண்மைகூட மிகப் பெரிய பயத்திலிருந்து நம்மைக் காப்பாற்றுகிற தென்று சாத்திரம் கூறுகிறது.[2] மனித மனத்தின் எதிர்மறை இயல்புதான் பயம் என்பது; அதனை மற்றொரு எதிர் மறையால் வென்றுவிட முடியாது. ஒரு முறை அதற்கு இடங் தந்தால் புதிய புதிய வடிவமெடுத்துக் கொண்டு 'இரக்தவீஜா,[3] என்ற பிசாசைப் போன்று பல்கிவிடும். சத்தியம் ஒன்றிற்குத்தான் உடன்பாட்டு மதிப்பு உண்டு ஆகலான் எதிர்மறையை எதிர்மறை யாக்கச் சத்தியம் ஒன்றால்தான் முடியும்.

இந்தியாவிலுள்ள பிற நாட்டு அரசாங்கம் பச்சோந்தியைப் போன்றது. இன்று ஓர் ஆங்கிலேயன் வடிவில் அது காட்சி யளிக்க லாம்; நாளை மற்றொரு நாட்டினனைக் காட்சி யளிக்கலாம். அதற் கடுத்த நாள், அதனுடைய கொடுமை குறையாமல், நம்முடைய நாட்டானுடைய வடிவையும் எடுத்துக்கொள்ளக் கூடும். பிற நாட்டான் ஆட்சி என்ற பூதத்தைப் பயங்கரமான ஆயுதங்களை எடுத்துக் கொண்டு வேட்டையாட முயற்சிக்கலாம். ஆனால் அந்தப் பச்சோந்தி ஒவ்வொரு முறையும் தன் நிறத்தையும் தோலை யும் மாற்றிக் கொண்டு நம்மைக் கலங்க வைக்கிறது. நம்முடைய நாடு இருக்கிற தென்றும், அது உண்மையாகவே வாழ்கிற தென்றும் என்றைக்கு நாம் நம் முள்ளேயே நினைக்கின்றோமோ அப்பொழுது தான் மாயை நீங்கும்.

இந்த நாட்டில் நாம் பிறந்துவிட்ட காரணத்தால் மட்டும் இது நம்முடைய தாய் நாடாகிறதென்று கருதுகிறவர்கள், வாழ்க்கை யின் புறப் பகுதியில் ஒட்டி வாழ்கின்ற ஒட்டுண்ணிக ளாவார்கள். மனிதனுடைய ஆழ்ந்த இயல்பில்தான் அவனுடைய உண்மை வடிவம் காணப்படுகிற தாகலின் எந்த ஒரு நாட்டை அவன் தன் னுடைய அறிவு, அன்பு, செயல், ஆகியவற்றால் உண்டாக்கு கிறானே அதுவே அவனுடைய உண்மையான தாய் நாடாகிறது. இந்த அண்டத்தின் சிற்பிகூட அவனுடைய கைவண்ணத்தின் மூலந்தான் வெளிப்பட்டுத் தோன்ற வேண்டியுள்ளது.

ஒருவருடைய நாட்டை அவரே ஆக்கிக் கொள்ளுதல் என்னும் போது நாம் என்ன கருதுகிறோம்? நம்முடைய அந்தராத்மாவைப் புற உலகம் முழுவதிலும் விரித்து, அதனை நம்முடைய நினைவு, செயல், பணி ஆகியவற்றிற்கும் ஏற்குமாறு செய்கிறோம். ஒரு மனிதனுடைய சொந்த நாடு அவனுடைய அக வாழ்க்கையின் வெளிப் பிதுக்கமாகவும், கண்ணாடியாகவுங்கூட இருக்கவேண்டும்.

பல்லாண்டுகட்கு முன்னர் ‘சமுதாயமும் அரசாங்கமும்’ என்ற கட்டுரையில், நாம் பிறந்த நாட்டை உண்மையில் நம்முடைய நாடாக எவ்வாறு செய்வது என்பதுபற்றி விளக்கி இருந்தேன். நம்முடைய நாட்டை அன்னியர் ஆதிக்கத்திலிருந்து மீட்பதைக் காட்டிலும், நம்முடைய ஜடத்துவம், கவலை இன்மை ஆகியவற்றிட மிருந்து மீட்க வேண்டும் என்று அழுத்தமாகக் கூறியிருந்தேன். பிற நாட்டாரின் அரசாட்சியிடம் சென்று நமக்கு வேண்டும் வரங்களை வேண்டிக் கொண்ட போதெல்லாம் நம்முடைய ஜடத் துவம் இன்னும் வலுப் பெற்றது. முன்னேற்றம் ஏற்பட்ட போதெல்

லாம் அதற்குரிய பெருமையை அரசாங்கமே பெற்றது. இதன் பயனாக கொஞ்சங் கொஞ்சமாக நம் நாட்டை நாம் இழந்து வருகிறோம். நாம் பெறுகின்ற உலகாயத நலங்கள் அத்தனைக்கும் ஆன்மீக மதிப்புக்களின் மூலம் ஈடு செய்ய வேண்டியுள்ளது.

யாஞ்யவல்கியர் கீழ்வருமாறு கூறியுள்ளார் :—

"நாம் விரும்பிய காரணத்தால் மட்டும் நம்
மகனிடம் நமக்கு அன்பு சுரக்கவில்லை ;
அவனிடத்தில் நம்மையே நாம் காண்கிறோ
மாகலின் அவனிடம் அன்பு செய்கிறோம்."*

நம்முடைய தாய் நாட்டைப் பொறுத்தவரையிலுங்கூட இது பொருந்தும். அது நம்முடைய அகத்தின் வெளிப்பாடு ஆகலான் அது நமக்கு மிகவும் அன்புடையதாகவே இருத்தல் வேண்டும். இந்த உண்மை நமக்கு விளங்கும்பொழுது நம்முடைய நாட்டின் ஆக்க வளர்ச்சிக்குப் பிறருடைய தயவை எதிர்பார்க்க வேண்டிய தேவையே இராது.

இவ்வாறு கூறப்பெறும் கருத்தில், நம்முடைய தேச பக்தர் களின் காதுகளைக் குடையக் கூடியது எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை என்றாலும், நான் இதனைக் கூறியவுடன் அதன் பயனாக எழுந்த மறுப்புப் புயலை மறக்கவே முடியாது. வெறுங் கோபம், பேராசை என்ற இரண்டு காரணங்களாலேயே இப் புயல் தோன்றியது.

ஒருவருடைய கோபத்தை வெளிக் காட்டுவதும் ஒரு வகை யான உணர்ச்சிச் சுகபோக மாகும். மனம் போன போக்கில் ஒருவர் அனுபவிப்பதற்கு அக் காலத்தில் எவ்விதமான தடையும் இருக்க வில்லை. மறியல் செய்தும், கட்டுக் கட்டாகத் துணிகளைக் கொளுத்தியும், நம் கால்களைச் சுற்றிக் கொண்டு பின்னே வராத வர்களை மனம் போனபடி நாக்கில் நரம்பில்லாமல் ஏசியும், கட்டுப்பாடு எதுவுமின்றி நம் விருப்பம்போல் திரிந்தோம். இவை அனைத்தும் தீர்ந்த பிறகு ஒரு ஜப்பானிய நண்பர் என்னை நோக்கி "நீங்கள் உறுதிப்பாட்டோடும், அமைதியான பொறுமையோடும் ஏன் உங்கள் காரியங்களைச் செய்து கொண்டு போவதில்லை? ஒருவர் விரும்பும் இலக்கை அடைவதற்கு இவ்வாறு சக்தியை வீண்டிப்பது சிறந்த வழி அல்லவே!" என்று கூறினார். நான், "நாங்கள் அடைய விரும்பும் முடிவான இலக்கு எது என்று எங் கட்குத் தெளிவாகத் தெரிந்தால் இன்னும் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்வோம். எங்களுடைய இலக்கு மறைந்துவிட்ட நிலையில்,

சினத்தின் பயனாகக் கையையும், காலையும் ஆட்டி மிச்சம் ஒன்றும் இல்லை என்கிற வரையில் எங்கள் சக்தியை வீணடிப்பதைத் தவிர வேறு ஒன்றும் வழி இல்லை" என்று விடை கூறினேன். தங்களுடைய புண்பட்ட உணர்ச்சிகளை வெளிக் காட்ட ஏற்பட்ட தடைகளைக் கண்டு பொறுக்காத என்னுடைய நாட்டவர்கள் பலர் இருந்தனர். நம்ப முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருந்தது. அந்த நிலையில்தான் நான் உள் நுழைந்து வேறு வகையான செயல் முறையைக் கைக்கொள்ள வேண்டும் என வேண்டினேன். என்னுடைய வேண்டுதல் வெற்றி பெருவிட்டாலும், அவர்களுடைய கோபத்தில் ஒரு பகுதியை என் மேல் திருப்பிக்கொள்ளும் அளவிற்கு வெற்றி யடைந்தேன்.

அடுத்து வருவது பேராசைப் பிரச்னை. அடையத் தகுந்த மதிப்புடைய பொருள்கள், தீவிர உழைப்பின் பயனாகவே கிடைத்துள்ளன. என்றாலும், அவற்றை எளிதாகப் பெற்றுக்கொள்ளும் வழியைக் கண்டு பிடித்துள்ளோம். கைகளை வணங்கிப் பிச்சை எடுக்காமல், அச்சுறுத்தும் குரலுடன் பிச்சைக் கேட்பதே இப் புதிய முறை. இந்தத் தந்திரத்தின் சிறப்பைக் கண்டு நாடே மகிழ்ந்தது. மலிவு விற்பனைக் கடையின் முன்னர் நிற்கும் ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. அரசியல் சந்தையில், சாமான்கள் மிகக் குறைந்த விலையில் கிடைத்தன. வாங்குவதற்குரிய வசதி குறைந்தவர்கள் குறைக்கப்பட்ட விலையைக் கண்டவுடன் பொருளின் தரத்தைப் பற்றிக் கவலைப்படாமல் அவற்றை வாங்க ஓடுகின்றனர். இதைப்பற்றி யாரேனும் சந்தேகப்பட்டால் அவர்களைத் தாக்கவும் ஓடுகின்றனர்.

புறத் தோற்றமாகிய மாயை, அன்று நம்மைப் பீடித்திருந்தது. அக்காலத்திய அரசியல் தலைவர் ஒருவர் அர்த்தத்தோடு கூடிய முறையில் "பிரிட்டிஷ் அரசாங்கத்தின் குரல்வளையில் ஒரு கையையும், மற்றொரு கையை அதன் கால்களிலும் வைத்திருக்கிறேன்" என்று கூறினார். இம் முறையில் பார்த்தால் அவருடைய நாட்டுக்குப் பணி செய்ய அவரிடம் எந்தக் கையும் இல்லை. அந்தக் கைய நிலை இப்பொழுது மாறிவிட்டது. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் குரல்வளையை இரண்டு கைகளாலும் பற்றியுள்ள ஒரு காட்சியையும், அந்த அரசாங்கத்தின் கால்களை இரண்டு கைகளாலும் பற்றியுள்ள மற்றொரு காட்சியையும் இப்பொழுது பெற்றுள்ளோம். இவை இரண்டு அபிநயங்களுமே நமக்குத் துணை செய்ய மாட்டா. பிற நாட்டாரை மட்டும் பற்றிநிற்கும் எந்த அபிநயமும் நமக்கு உதவ முடியாது.

அந்த நாட்களில், எல்லாப் பகுதிகளிலிருந்தும் தோன்றிய ஊக்கம் வங்காளத்தின் இருதயத்தை நோக்கி இருந்தது. ஆனால், வெறும் உணர்ச்சி, நெருப்பைப்போலத் தான் பற்றியுள்ள பொருளையே எரிக்கும். அப் பொருளைச் சாம்பலாக ஆக்குவது தவிர ஆக்கச் சக்தி ஒன்றும் அதனிடம் இல்லை. மனிதனுடைய மனம், பொறுமை, முன்னோக்கம், சாமர்த்தியம் இவற்றைத் தாங்கி, இந்த நெருப்பைப் பயன்படுத்தி, கையிலுள்ள கடினமான பொருள்களைக் காய்ச்சி அவற்றை மென்மை புடையனவாக ஆக்க வேண்டும். நம்முடைய அறிவின் ஆற்றலைக் கிளப்பிவிடத் தவறி விட்டோம். ஆகவே, இன்று கிடைக்கும் அகன்று பரந்துள்ள இந்த உணர்ச்சி ஒன்றை மட்டுங் கொண்டு மதிப்புடைய நிலையான நிறுவனம் எதையும் நிர்மாணிக்க முடியாது.

நம்முடைய தோல்வியின் காரணம் நம்முள்ளேயே இருக்கிறது. சென்ற பல காலமாக, நம்முடைய செயல்கள் அனைத்தும் ஒரு பக்கத்தில் உணர்ச்சியாலும், மற்றொரு பக்கத்தில் பழக்க வழக்கத் தாலுமே பரிபாலிக்கப்பெற்று வந்தன. நம்முடைய சிந்தனை சக்தி தொழிற்படாமல் மறைந்து கிடந்தது. அதற்குச் சுதந்திரம் கொடுக்கக் நமக்குத் தைரிய மில்லை. எனவே செயற்பாட்டுக்கு நம்மைத் தூண்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டவுடன் நம்முடைய உணர்ச்சியைத்தான் உடனடியாகத் தூண்ட முடிந்தது; நம் முடைய அறிவை மயக்க, கூடாகாரமான ஒரு கொள்கையைக் கூறி அதனை மயக்க மடையச் செய்தோம்.

இந்த முறையில் மனத்தைச் செயலிழக்கச் செய்த பிறகு, தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளும் இயல்பு எளிதாக வந்து விடுகிறது. பேராசை நிரம்பிய மனத்துக்கு, எளிதான வழிகளில் காரியத்தை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்று தோன்று வதால் அல்லாவுத்தீனுடைய அற்புத விளக்கை நாடி அலைகிறது. அல்லாவுத்தீனுடைய அற்புத விளக்கை நாம் பெறக்கூடுமேயானால் அதைவிடச் சிறந்த தொன்று கிடைப்பதற்கில்லை. என்றாலும் பேராசை நிறைந்து, செயல் திறன் குறைந்துள்ள மனிதன் இதனை ஒப்புக்கொள்ள மாட்டான். விளக்குக் கிடைக்கும் என்று யாரேனும் கூறினாற்கூட அது அவனைத் தூண்டி விடுவதாகும். அவன் நம்பிக்கை பயனற்றது என்று எடுத்துக் காட்டினால் தன் சொத்தையே யாரோ கொள்ளையடிப்பதுபோல அவன் கூச்சல் இடுவான்.

பிரிவினை நாட்களில் (வங்காளப் பிரிவினை) ஒரு சில இளைஞர்கள் புரட்சியின் மூலம் ஒரு பொற்காலத்தைக் கொணர முனைந்தனர். அவர்கள் பற்ற வைத்த பெரு நெருப்பில், தம்மையே பலியாக இட்டுக் கொண்டனர். ஆகலின், நம்மிடமிருந்து மட்டுமல்லாமல், அகில உலகத்திலிருந்தும் நன்றியைப் பெறத் தகுதியுடையவர்களாகின்றனர். அவர்களுடைய தோல்வியிற்கூட ஆன்மீக ஒளி வீசுகிறது. நாடு தயாராக இல்லாத நேரத்தில் தோற்றுவிக்கப் படும் புரட்சிப்பாதை, எந்த இலட்சியத்திலும் கொண்டு விடுவதில்லை என்பதை, எல்லை மீறிய வேதனையின் மூலமும், மிக உயர்ந்த சுய அர்ப்பணத்தின் பிறகும், அறிந்து கொண்டார்கள். இலக்கை நோக்கிச் செல்வதுபோலக் காணப்பெற்ற பொய்யான பாதை, இலக்குக்குக் கொண்டு விடாததோடுகூட, அதில் இருந்த முட்கள் மூலம் நடந்து சென்றவர்களின் கால்களைக் கிழித்து விட்டது. ஒரு பொருளுக்குப் பாதி விலை கொடுப்ப தென்பது, விலையையும் பொருளையும், ஒரு சேர இழிப்பதாகும். தைரியம் வாய்ந்த அக் கால இளைஞர்கள், எல்லா மக்களின் சார்பாகவும், தங்களில் சிலர் செய்யும் தியாகம் ஒரு புரட்சியைக் கொண்டு வந்து விடும் எனக் கருதினர். தங்கள் சக்தி யளவில் மிக உயர்ந்த விலையைக் கொடுத்தனர் என்றாலும் அவ்விலை போதியதாக இல்லை. ஒரு நாட்டு மக்கள் விடுதலை யடையவேண்டுமெனில் அந்த விடுதலை யுணர்ச்சி அந் நாட்டு மக்கள் அனைவருடைய மனத்திலும் எழ வேண்டுமே தவிர, அந் நாட்டின் ஒரு சிலர் மனத்தில் மட்டும் தோன்றினால் பயனில்லை. ஓர் இரயில் வண்டியில் இணைக்கப் பெற்ற மூன்றும் வகுப்புப் பெட்டியை விட்டுவிட்டு மிகவும் வசதியுடன் அமைக்கப் பெற்ற முதல் வகுப்புப் பெட்டி மட்டும் முந்திக் கொண்டு சென்று விட முடியாது. தேசப் பற்று மிகுந்த அந்தக் கூட்டத்தில் எஞ்சியுள்ளவர்கள், நாட்டை ஆக்க வேண்டுமாயின் அது நாட்டு மக்கள் அனைவரும் சேர்ந்து, தங்கள் முழு மனத்தோடும், உறுதியோடும், ஒவ்வோர் உறுப்பையும் அதற்காகவே செலவிட்டுச் செய்ய வேண்டிய காரியம் என்பதை உணர்ந்திருப்பார்கள் என நினைக்கிறேன்.

பிற தேசங்களின் முன்னேற்றத்தைப் பார்க்கும் பொழுது அரசியல் வண்டிக் குதிரைதான் நம் கண்ணெதிரே பெரிதாகக் காட்சியளிக்கிறது. வண்டியின் வேகம் முழுவதும் அந்தக் குதிரையைப் பொறுத்திருப்பது போலத் தெரிகிறது. குதிரையின் பின்னே உள்ள வண்டியும் ஓடுவதற்குரிய நிலையில் இருக்க வேண்டும்

20

என்பதை நாம் மறந்து விடுகிறோம். வண்டிச் சக்கரங்கள் ஒரே நேர் கோட்டில் இருக்க வேண்டும்; அதனுடைய உறுப்புக்கள் ஒழுங்காகப் பூட்டப்பெற்றிருக்க வேண்டும். வெறும் கட்டையில் ரம்பமும், சுத்தியலும் சேர்ந்து வேலை செய்ததால் மட்டும் வண்டி என்ற பொருள் கிடைத்து விடுவதில்லை. செய்பவனுடைய எண்ணம், சக்தி, முயற்சி ஆகிய யாவும் ஒன்று சேர்ந்தே வண்டி உருவாகியுள்ளது. புறத் தோற்றத்தில் விடுதலை பெற்றுள்ளது போல் காணப்படுகிற பல நாடுகள் அரசியல் என்ற குதிரை பூட்டி இழுக்கப்பட்டவுடன் அதில் உண்டாகும் இரைச்சல் பக்கத்திலுள்ளவர்களை எல்லாம் உறக்கத்திலிருந்து எழுப்பி விடுவதுடன், அதில் ஏற்படும் ஆட்டம், பயணஞ் செய்பவர் எலும்புக் கணுதோறும் வலியை உண்டாக்கி விடுகிறது. மேலும் இந்த வண்டிகள் வழியில் உடைந்து விடுவதனுல், அவற்றை ஒக்கப் பண்ணி மறுபடியும் ஓடுமாறு செய்வது மிகவும் கஷ்டமான காரியமாகிறது. என்றுலும் அவைகளும் ஒருவகையான வண்டிகளே என்பதை நினைவில் இருத்த வேண்டும். நம்முடைய நாடு என்று சொல்லப்படும் மரத் துண்டுகளில், ஒருவித சம்பந்தமும் இல்லை என்பதுடன் அவை ஒன்றுக் கொன்று பொருந்தாமலும் உள்ளன. இத்தகைய ஒன்றை, கோபம் அல்லது பேராசை அல்லது மற்றோர் உணர்ச்சியில் பூட்டி ஏகப்பட்ட இரைச்சலுடனும் வருத்தத்துடனும் இழுத்துச் செல்வதையே அரசியல் முன்னேற்றம் என்று கூறுகிறோம். இதனை இயக்கும் சக்தி எவ்வளவு நேரத்திற்கு நிற்கும்? இத்தகைய சந்தர்ப்பத்தில் குதிரையை லாயத்தில் கட்டி விட்டு வண்டியைச் செப்பனிடும் முயற்சியை மேற்கொள்வது புத்திசாலித்தன மன்றோ?

மரணத்தின் வாயிலிருந்து திரும்பிய வங்காள இளைஞர்கள்[5] எழுதும் எழுத்துக்களிலிருந்து அவர்களையும் இத்தகைய எண்ணம் ஆட்டிப் படைக்கிறது என்று தெரிகிறது. எல்லாவற்றையும்விட இன்று நமக்குத் தேவைப்படுவது அக மனிதனை நன்கு வளருமாறு செய்யும் முயற்சியே என்றும் இதன்மூலம் அனைவரும் சேர்ந்து செய்யும் முயற்சிக்கு அடிப்படை வேலை நடைபெறும் என்றும் அவர்கள் கூறுகிறுர்கள். இதனைப் பெற வேண்டுமானுல் அது புறத்தே இருந்து வரும் ஆணைக்குக் குருட்டுத்தனமாக கீழ்ப்படிவதால் கிடைக்காதென்றும் கட்டுப்பாட்டுடன் கூடிய காரண ஆராய்ச்சியால் மட்டும் வருவது என்றும் அறிய வேண்டும். மனத்தில் ஒளி உண்டாக்க முடியாமல், அதைச் செயலற்ற நிலையில் வைத்திருப்பது எதுவும் தடை என்றே கருதப்பெறும்.

நம்முடைய ஆக்கல் சக்தி மூலம் நாட்டை நமதாக்கிக் கொள்ள முனைவது சிறந்த முறையாகும். வெறும் இயந்திரப் பயிற்சியாகாது அது. தேனீ ஒரே மாதிரியாகத் தன் கூட்டைக் கட்டுவது போலவும், சிலந்தி ஒரே மாதிரியாக வலை பின்னுவது போலவும் மனிதன் தன் முயற்சிகளைச் செய்வதில்லை. அவனுடைய மிகப் பெரிய சக்தி அவனுள்ளேயே அடங்கி இருக்கிறது; கேவலம் குருட்டுப் பழக்கத்துக்கு அடிமை யாகமல் தேவை ஏற்படும்பொழுது அந்தச் சக்தியிலிருந்து வேண்டுமானதைப் பெற்றுக் கொள்வதும் அவன் கையிலேயே உள்ளது. அவனை நோக்கி "சிந்திக்க வேண்டா; செய்" என்று கூறுவது, இந்த நாட்டின் உயிர் நாடியை இதுவரைப் பற்றிக் கொண்டிருந்த பழைய ஏமாற்றத்தை மறுபடியும் நீட்டிப்பதற்கு மேற்கொள்ளும் வழியாகும். நம்மிடம் உள்ள மிகப் பெரிய உரிமையாகிய பகுத்தறிந்து உண்மை கண்டு நாமே முடிவு செய்து கொள்ளும் உரிமையை இப்பொழுது தியாகம் செய்ய முடியாதபடி அவ்வளவு நீண்ட காலம் திருப்தியுடன் இருந்து விட்டோம். இனி இந்த உரிமையை சாஸ்திரீய ஆணைகள், பழக்கமாக அனுஷ்டிக்கப்பட்ட வழக்கங்கள் என்ற குருட்டுச் சக்திகளிடம் பலியிட மாட்டோம். "கடல் கடந்து செல்ல மாட்டோம்; அவ்வாறு செய்வதை மனு[6] தடுத்துள்ளார். ஒரு முஸ்லீமுடன் உணவு உண்ண மாட்டேன், ஏனெனில் அது விதிக்கப்பட்ட பழக்கத்திற்கு விரோதமானது" என்று இதுவரைக் கூறி வந்தோம். மற்றொரு வகையாகக் கூறுமிடத்து, மனத்திற்கு ஒரு சிறிதும் உரிமை தராத பழக்க வழக்கங்களை வரிசையாகக் கடைப்பிடித்து வந்துள்ளோம். எதற்கெடுத்தாலும் தன் வேலைக்காரனையே நம்பி வாழும் எசமானனின் உதவி யற்ற நிலைக்கு நாம் தள்ளப்பட்டோம். உண்மையான தலைவன் அல்லது யசமானன் நம் உள்ளேயே இருக்கும் மனிதன்தான் என்பதை மறுபடியும் வலியுறுத்த விரும்புகிறேன். புறச் சூழ்நிலையுடன் இந்த அக மனிதன் தன்னைப் பிணித்துக் கொளளும் பொழுது எல்லையற்ற துன்பங்கட்கு ஆளாகிறான். இந்தப் புறச் சூழ்நிலை என்பது ஓர் ஒட்டுண்ணியாய், அடிமைத்தனம் என்ற பட்டறையில் கட்டப்பட்ட ஒரு தானியங்கி இயந்திரமாக உள்ளது. எந்த ஒரு ஜட இயல்பிலிருந்து நம்முடைய அடிமை மனப்பான்மை வளர்ந்ததோ அதனை முறிப்பதற்கு இன்னுங் கொஞ்சம் குருட்டுத்தனமான கீழ்ப்படிதலை மேற்கொள்வதால் எவ்விதப் பயனும் இல்லை. சாவி கொடுத்த இயத்திர பொம்மை காலைக் கையை ஆட்டுவது போல நாமும் உடலசைவை மேற்கொள்வதால் பயன் இல்லை.

பிரிவினையை எதிர்த்துப் போராட ஏற்பட்ட இயக்கத்தை அடுத்துத் தோன்றிய இயக்கம் அளவாற் பெரியதாய் இந்தியா முழுவதும் பரவி விட்டுள்ளது. பழைய நிலைமையில், நம்முடைய அரசியல் தலைவர்களின் முன்னேற்றம் ஆங்கிலம் கற்ற கூட்டத்தாருக்கு அப்பால் சென்றதில்லை; அவர்கள் மட்டுமே சிந்திக்கக் கூடிய தகுதி பெற்றிருந்தார்கள். ஆங்கில மொழியில் தோன்றிய ஆவியில் புறப்பட்ட கானல் நீராகவே நாடு இருந்து வந்தது. இந்தக் கானல் நீரில் 'பர்க்', 'கிளாட்ஸ்டன்' 'மாஜினி' 'கரிபால்டி' இவர்களின் மெல்லிய நிழல்கள் காணப்பெற்றன. தியாக உணர்ச்சி எதுவுமோ, பொதுமக்களிடம் காட்ட வேண்டிய உண்மையான கருணை எதுவுமோ அங்குக் காணப்படவில்லை. பிறகு மிக இக்கட்டான சந்தர்ப்பத்தில் இந்தியாவின் கோடிக் கணக்கான அனாதைகளின் சார்பாக, அவர்களைப் போலவே அரை ஆடை பூண்டு, அவர்களிடம் அவர்கள் மொழியிலேயே பேசிக் கொண்டு மகாத்மா காந்தி வந்து நின்றார். அச்சடித்த புத்தகங்களிற் படிக்கின்ற கதையன்று இது; உண்மையாக நடைபெற்ற நிகழ்ச்சியாகும். இதனால்தான் அவரை மகாத்மா-பெரிய ஆன்மா-என்று பொருத்தமாக அழைக்கின்றனர். தன்னுடைய குருதியின் குருதியாக, சதையின் சதையாக இந்தியாவின் கோடிக் கணக்கான மக்களை வேறு யார்தான் முழு மனத்துடன் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்? சத்தியத்தின் ஒளி பட்டவுடன் ஆன்மாவில் அடங்கி இருந்த பெருஞ் சக்தி விடுதலை பெற்று வெளிப்பட்டது. அன்பு வந்து நின்று தட்டியவுடன் இந்தியாவின் கதவுகள் திறந்து கொண்டன. அக முகமாக இருந்த கஞ்சத்தனம் மறைந்தது. சத்தியம் சத்தியத்தைத் தட்டி எழுப்பியது.

அரசியலில், தந்திரத்தைக் கைக் கொள்வது, பயன் தராக் கொள்கையாகும். அந்தப் பாடத்தைத்தான் நாம் அவசியம் கற்றுக் கொள்ள வேண்டி இருந்தது. சத்தியத்தின் சக்தியை நாம் உணருமாறு செய்த மகாத்மாவுக்கு எல்லாப் பெருமையும் உண்டாவதாக. ஆனால் கோழையும், பலமற்றவனுமே அற்பத் தந்திரங்கட்கு ஆட்படுவான். தம்முடைய அரசியல் சூதாட்டத்தில் முறைமுகமாக மகாத்மாவைப் பயன்படுத்த வேண்டும் என்ற கருத்தை இன்றுங் கூட, உலகியல் அறிவு மட்டும் கொண்ட நம்மில் சிலர் விட்டு விட்டதாகத் தெரியவில்லை. மக்களின் உள்ளத்தில் மகாத்மாவின் தூய அன்பு எழுப்பியுள்ள பேரன்பின் அர்த்தத்தை அசத்தியத்தால் அறிய முடியாது.

இதைத்தான் உண்மையில் விடுதலையின் தோற்றம் என்று கூற வேண்டுமே தவிரப் பிறவற்றை யல்ல. நாடு தன்னைத் தானே அறிந்து கொண்ட நிலை இதுதான். பிற நாட்டார் இந்தியாவை ஆக்ரமித்துக் கொண்டிருப்பதற்கும் இதற்கும் சம்பந்தம் ஒன்றுமில்லை. இந்த அன்பு முற்றிலும் உடன்பாட்டு முறையானது. எதிர்மறை இயல்புடன் இந்த உடன்பாட்டு முறை எவ்வித விவாதத்திலும் இறங்குவதில்லை. எவ்விதமான விவாதத்திற்கும் அங்குத் தேவையுமில்லை.

அன்பை அடிப்படையாகக் கொண்டு இந்தியாவில் ஏற்பட்ட இந்த ஒப்பற்ற விழிப்பில் தோன்றிய இசையின் ஒரு பகுதி, கடல் கடந்து இருந்த என் காதுக்கும் எட்டியது[8]. இந்தியாவின் இருதயத்தில் மறைந்து கிடக்கும் சக்தி எல்லாம் தூண்டப்பெற்று முற்றிலும் விடுதலை யடைந்து தொழிற்படுவதைப் பார்க்கக் கொடுத்து வைத்திருப்பதை நினைத்தபொழுது எவ்வளவு இன்பமாக இருந்தது? இதுதான் உண்மையான விடுதலை என்று நான் நம்பினேன். எல்லா உயிர்களிடத்தும் கருணை காட்ட வேண்டும் என்ற தம் கொள்கையை புத்தர் கூறியபொழுது அந்த இலட்சியத்தின் கிளர்ச்சி வாழ்வின் எல்லாப் பகுதிகளையும் தொட்டதுடன் ஆக்கக் கலைகளையும் வளப்படுத்திற்று. அந்தப் பழைய காலத்தில் கூட, அங்கும் இங்குமாகச் செய்யப்பட்ட அரசியல் ஒற்றுமை முயற்சியில் அடிக்கடி விரிசல் காணப்பட்டது. இந்தக் கிளர்ச்சியின் வலுக் கராணமாக, அது கடல் கடந்தும் சென்று அந்த நாட்டில் உள்ளவர்களும் தம்முள்ளே அடங்கிக் கிடக்கும் செல்வத்தை உணருமாறு செய்தது. எந்த ஒரு வெற்றி வீரனும் அல்லது மாபெரும் வாணிகனும் இதுபோன்ற ஒன்றைச் செய்திருக்க முடியாது. அவர்கள் கண்ட வெற்றியில் ஒற்றுமை யின்மை, அவமானம், வருத்தம் ஆகியவை மட்டுமே இருந்தன. உயிரை அதனுடைய ஆணி வேரில் தொடும் பொழுதுதான் அன்பு விடுதலைக் குறிக்கோளை அடைகிறது. ஆனால் இந்தக் குறிக்கோளை அடைய விரும்பும் பேராசை, கசக்கிப் பிழியும் முறையைக் கையாள்கிறது. பிரிவினைக்கு முற்பட்ட போராட்டத்தில் இதனை நன்கு அறிய முடிந்தது. அந்தப் போராட்டத்தில் அக மனத்தில் தோன்றும் அன்பு காரணமாக அல்லாமல், பேராசையின் காரணமாகப் புறத்தே தோன்றும் கட்டாயத்திற்குட்பட்டுப் பலர் தியாகம் செய்தனர். நிலையாத வெற்றிகளாக இருப்பினுங்கூட அவற்றை விரைவில் பெற்றுவிட வேண்டுமென்று விரும்புகிறது பேராசை,

அன்பின் பயன் கிடைத்து நிற்கக் கூடியது; அதுவே அதன் பயனாகவும் உள்ளது.

புதிதாகக் காணப்பட்ட விடுதலைக் காற்றை நுகர வேண்டும் என்ற துடிப்பினால் உந்தப்பெற்று நான் தாய் நாட்டுக்கு மீண்டு வந்தேன். ஆனால் இங்குக் கண்டவையும், நான் அறிந்தவையும் அப்பொழுது என்னை வருத்தி நின்றன. மக்களுடைய மனத்தை ஏதோ ஒரு பாரம் அழுத்திக் கொண்டிருப்பதுபோல் தெரிகிறது. ஒரு வலிமையான அழுத்தம் வேலை செய்கிறது. அந்த அழுத்தம் அனைவரையும் ஒரே குரலில் பேசச் செய்வதுடன் ஒரே விதமான செய்கையும் செய்யச் சொல்கிறது.

என் ஐயங்களை வெளியிட்டுக் கிடைக்கும் விடைகளைக் கொண்டு நானே ஒரு முடிவிக்கு வர விரும்பியபொழுது, என் நண்பர்கள் என் வாயைப் பொத்தி "தயை கூர்ந்து அமைதியாக இருங்கள்" என்று என்னை அடக்கி விட்டனர். நாட்டில் ஒரு வகையான கொடுமை இருந்து வருகிறது. அது வெளிப்படையாகக் காணப்படா விட்டாலும், வெளிப்படையாக உள்ள ஹிம்சை முறையைவிட மோசமானதாக இருக்கிறது. பிரகடனம் செய்யப்பட்ட கொள்கை அறிவுடையதா என்று சந்தேகப்படுகிறவர் எவரேனும் தம் ஐயத்தை இரகஸ்யமாகக் கூறினால்கூட அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. வெளிநாட்டுத் துணிகளைத் தீக்கு இரையாகும் செயலைப்[3] பற்றித் தன் கருத்து வேறுபாட்டைத் தைரியத்துடன் வெளியிட்டது ஒரு பத்திரிகை. உடனே வாசகர்களின் மறுப்புக்கள் பறந்தன. பற்பல பேல்கள் மில் துணிகளை விழுங்கிய நெருப்புக்கு இந்த செய்தித்தாளையும் சாம்பராக்குவது எளிது.

மக்களில் ஒரு பகுதியினர் தமக்குக் கொடுக்கப்பட்ட பணியை ஒரு வகை வெற்றியுடன் செய்து கொண்டிருப்பதையும், மற்றொரு பகுதி அச்சத்தின் பிடியில் அகப்பட்டு, செயலிழந்து நிற்பதையும் காண்கிறேன். கேள்வி கேட்பதே கூடாது என்ற கருத்து நிலவுவதாகத் தெரிகிறது. குருட்டுத்தனமான கீழ்ப்படிதல் தவிர வேறு ஒன்றும் இருக்கக்கூடாது. யாருக்குக் கீழ்ப்படிவது? மந்திர உச்சாடனம் போன்ற சில சொற்களுக்கா? அன்றி அர்த்த மற்ற சடங்குகட்கா?

ஏன் இந்தக் கீழ்ப்படிதல் நடைபெற வேண்டும்? இங்கேயும் கூடப் பேராசை என்ற நம்முடைய ஆன்ம விரோதிதான் இருக்கிறது. மிகவும் விரும்பத் தகுந்த ஒரு வாக்குத் தத்தம் கொடுக்க

பட்டிருக்கிறது தேசத்துக்கு. விலை மதிப்பில்லாத ஒரு பொக்கிஷம் மிகக் குறுகிய காலத்தில் அதற்குக் கிடைக்கும். அதனுடைய மயக்கில் மக்கள் அனைவரும் பகுத்தறிவைக் காற்றில் பறக்க விட்டு விட்டதுடன் அவ்வாறு செய்யாதவர்களை வெறுக்கவும் செய்கின்றனர். இதில் வருந்தத் தகுந்த விஷயம் என்னவென்றால் இந்தத் தூண்டிலை விழுங்காதவர்கள்கூட இதன் பயனை அனுப்விக்க விரும்புகிறார்கள். "இது ஒரு நல்ல காரியத்துக்குப் பயன் படும்" என்று அவர்கள் கூறுகிறார்கள். "சத்தியத்தில் தான் வெற்றி இருக்கிறது; வேறு எதிலும் அதைப் பெற முடியாது"[10] என்று கூறும் இந்தியா சுய ஆட்சிக்குத் தகுதி யற்றது என்று அவர்கள் கருதுகிறார்கள் போலும்.

துரதிர்ஷ்டவசமாக, கிடைக்கப் போகும் இலாபத்திற்கு ஒரு பெயர் கொடுத்தார்களே தவிர, அதனை விளக்கிக் கூறவில்லை. இன்னதென்று விவரிக்க முடியாத அச்சம், மேலும் அதிகமான அச்சத்தை ஊட்டுவது போல, வடிவு பெறாத, ஆனால் ஆசைப்பட்ட பொருள் இன்னும் நம் விருப்பத்தை அதிகப்படுத்துவதாகவே உள்ளது. கற்பனைக்கு விடப்பட்டுவிட்டமையின் அவரவர்கள் விருப்பத்திற்கேற்ப அதற்கொரு வடிவை அமைத்துக் கொள்ள லாம். இதனுடைய உண்மையான இயல்பை ஆராய வேண்டுமென்று தொடங்குவதும் பயன்படவில்லை; ஏனெனில் அது தன்னைத் தானே மறைத்துக் கொண்டு வேடம் புனையும் இயல்புடையது. அதனுடைய எல்லை வரையறுக்கப்படாத தன்மையால் ஆசை அதிகரிக்கப்பட்டாலும், அதை அடையும் வழியும், அடையும் நேரமும் மட்டும் குறிப்பிட்டுக் கூறப்படுகிறது. சுய ஆட்சி வெகு அண்மையில் ஒரு குறிப்பிட்ட மாதத்தில் குறிப்பிட்ட நாளில்[11] வந்துவிடப் போவதாகப் பலர் எண்ணுகின்றனர். அவர்கள் தங்கள் சுதந்திரத்தை விட்டுவிட்டதாற் போலும், பிறரும் அவ்வாறே செய்யவேண்டும் என்று நினைக்கின்றனர். நாம் ஒரு பேயை ஓட்டவேண்டி மந்திரவாதியை அழைக்கப் போக, அந்தப் பேய் மந்திரவாதி வடிவாகவே வந்தது போலும் இருக்கிறது இது.

மகாத்மா தம் அன்பு வழியாகவே இந்தியாவின் இருதயத்தைக் கவர்ந்து விட்டார். அதன் பொருட்டு அவருக்கு நாம் தலை வணங்குகிறோம். சத்தியத்தின் முழு ஆற்றல் எவ்வளவு என்பதை அவர் நமக்கு எடுத்துக் காட்டியுள்ளார். ஆகலின் அதற்கும் அவருக்குக் கடமைப்பட்டுள்ளோம். நித்தியத்துவம் வாய்ந்த சத்தியத்தைப் பற்றி நாம் நூல்களில் படித்துள்ளோம்; அதைப் பற்றி நாம்

பேசுகிறோம்; ஆனாலும் சத்தியத்தை நேருக்கு நேர் சந்திப்பது வாழ்க்கையில் பெரும் பேறு என்றே கூற வேண்டும். ஒருவருடைய வாழ்க்கையில் அத்தகைய ஒரு சந்தர்ப்பம் வருவது துர்லபம். மாகாணத்துக்கு மாகாணம் சென்று அரசியல் பேச்சுக்களை அள்ளி வீசலாம். தேசீய காங்கிரசைக் கூட ஆக்கலாம்; அழிக்கலாம். ஆனால், பல்லாயிரம் ஆண்டுகளாக ஆழ்ந்த உறக்கத்திலிருந்த நம்மை எழுப்பும், உண்மை அன்பு என்னும் தங்கத்தாலாய மந்திரக் கோலை காண்பதுதான் அரிது. அத்தகைய அபூர்வ மந்திரக் கோலை வைத்திருப்பவருக்கு நம் தலை தாழ்ந்த வணக்கம் உரியது.

ஆனால், சத்தியத்தின் வடிவத்தைக் கண்ட பிறகு கூட, அதன்மாட்டு நாம் கொண்டுள்ள நம்பிக்கை வலுவாக இல்லை யானால் இதனால் பெறும் நன்மை யாது? அன்பின் உண்மையை இருதயம் ஏற்றுக் கொள்வதுபோல அறிவின் உண்மையை மனம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இன்று வரை, காங்கிரஸோ அன்றி வேறு எந்த ஒரு நிறுவனமோ இந்தியாவின் இருதயத்தைக் கவர வில்லை. அன்பின் கைப்பட்டே அது நடைபெற வேண்டி இருந்தது. இப்பொழுது அன்பின் உண்மை தெரிகின்ற நேரத்தில் சுயராஜ் யத்தைப் பொறுத்தவரை மற்றோர் உண்மையிலிருந்து நம் நம்பிக்கையை இழந்து விடுவதா?

இதற்கு ஓர் உதாரணந் தர விரும்புகிறேன். ஒரு வைணிகனை[12]த் தேடுகிறேன். எங்குத் தேடியும் தக்க ஆளைக் காண இயலவில்லை. அவர்கள் அனைவரும் தொழில் நுட்பம் அறிந்தவர்கள்; உயர்ந்த சம்பளம் பெறுகிறார்கள்; அவர்களுடைய நுட்பத்தைக் கண்டு வியக்கிறேன். ஆனால் என் உணர்ச்சியை அவை தொடுவதில்லை. இறுதியாகச் சந்தித்த வைணிகன் வாசிக்கத் தொடங்கியதுமே உள்ளம் நெகிழ்ந்தது. அவனையே என் குருவாக ஏற்றுக் கொள் கிறேன். உடனே வீணை செய்ய வேண்டும் என்று விரும்பினாலும் என் நிதி நிலைமை அதற்கு இடம் கொடுக்கவில்லை. அந்தக் குரு என்மேல் கொண்ட கருணையின் காரணமாக "கவலைப்படாதே. இந்தக் குச்சியை எடுத்துக் கொள். அதன் நீளத்துக்கு ஒரு கயிற்றைக் கட்டி இதனையே வாசித்துக் கொண்டிரு. ஒரு குறிப்பிட்ட மாதத்தில் குறிப்பிட்ட நாளில் இந்தக் குச்சி ஓர் உண்மை வீணையாக மாறி விடும்" என்று கூறுகிறார். அவ்வாறு கூறினால் அது பயன் படுமா? இவ்வாறு, என் சூழ்நிலையில் குரு கருணை காட்டினால் அது தவறான கருணையாகும். வீணை போன்ற இத்தகைய சாமான்களை எளிதான விலைக்குப் பெற முடியாது என்று, என்னிடம் கருணை

காட்டாமல் கூறி இருந்தால் அதுவே சிறந்தது. ஓர் உண்மையான வீணையை ஒரு கம்பியில் செய்ய முடியாது; பல்வேறு வகையான சாமான்களும் சிறந்த தொழில் வன்மையும் வேண்டும்; ஒரு சிறு தவறு நேர்ந்தாலும், அது சுருதி தவறி விடும் என்பதைக் கூறி இருக்க வேண்டும்.

மகாத்மாவினுடைய அன்புசெய்யும் சக்தியில் நமக்குள்ள நம்பிக்கை குறையா திருக்கட்டும்; ஆனாலும் சுயராஜ்யம் என்பது ஒரு குச்சியாலும் கம்பியாலும் ஆகும் காரிய மன்று. பல்வேறு முரண்பட்ட வழிகளுடன் கூடிய முயற்சியாகும் அது; உணர்ச்சி, தூண்டுதல் என்பவை எவ்வளவு தேவையோ அவ்வளவு, ஆராய்ச்சி, தெளிந்த சிந்தனை, என்பவையும் வேண்டும். பொருளாதார வல்லுநர்கள், கல்வித் துறையாளர்கள், இயந்திரப் பொறியியலார்கள் ஆகியவர்கள் தம் கருத்தையும் முயற்சியையும் இந்தப் பன்முக முயற்சிக்கு உதவ வேண்டும். மக்களினுடைய அறிவு முழுவதும் விழித்திருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் தான் கேள்வி கேட்கும் இயல்பு தடைப்படாமலிருக்கும். மறைமுகமாகவோ நேரடியாகவோ பிடிவாதப்படுத்தி மனத்தை அச்சுறுத்தவோ, தொழிற் படாமற் செய்யவோ கூடாது.

இந்த நாடு யாருடைய அழைப்புக்கும் செவிசாய்ப்ப தில்லை என்பதைக் கிடைத்த அனுபவத்தால் அறிந்திருக்கிறோம். நாட்டின் சக்திகளை இத்தகைய ஆக்க வேலையில் யாரும் ஒற்றுமைப்படுத்தாமையால், காலம் வீணாகிக் கொண்டிருக்கிறது. நம்மை நோக்கி இந்த அழைப்பு விடுப்பதற்கு யாருக்கு உரிமையும் ஆற்றலும் இருக்கிறதோ, அத்தகைய தலைவனுடைய வரவுக்காக இத்துணை நாள் காத்துக் கொண்டிருந்தோம். ஒரு காலத்தில், காட்டில் பர்ணசாலையில் வாழ்ந்த நம்முடைய குருமார்கள் தங்கள் தெளிந்த அறிவின் உதவியினால் இத்தகைய ஓர் அழைப்பை விடுத்தார்கள்;

"சிற்றாறுகள் கீழ்நோக்கி ஓடுவதுபோல,
மாதங்கள் ஓடிச் சென்று ஆண்டில் கலப்பதுபோல,
எல்லா பிரம்மச்சாரிகளும்
எல்லாத் திசைகளிலிருந்தும் என்னிடம்
ஓடி வருவார்களாக."

அந்தப் பழைய காலத்தின் உண்மைக் காட்சி இன்னும் வாழ்ந்து வருகிறது; அதனுடைய குரல் இன்னும் எதிரொலிக்

கிறது. அப்படியானால் நம்முடைய இன்றையப் பெருந் தலைவர் அதேபோன்று தம் அழைப்பை அனுப்பி மக்களுடைய செயல்படும் திறனை ஏன் ஒன்றுக்கக் கூடாது? "என் குரல் காதில் விழுபவர்கள் அனைவரும் எல்லாத் திசைகளிலிருந்தும் இங்கு வருக" என்று ஏன் கூறக் கூடாது? மக்களை முழுவதும் தட்டி எழுப்புவதில்தான் சுதந்திரம் என்பது அடங்கி இருக்கிறது. இவ்வாறு அழைக்க கூடிய சக்தியை மகாத்மாவுக்கு ஆண்டவன் கொடுத்துள்ளான். இதுவே அந்தச் சிறந்த தருணமாக ஏன் இருக்கக் கூடாது?

அவருடைய அழைப்பு வந்துள்ளது என்றாலும் அது ஒரு குறிப்பிட்ட பகுதியினருக்கே கிடைத்துள்ளது. அனைவரையும் நோக்கி அவர் "நூல் நூற்று ஆடை நெய்யுங்கள்; நூல் நூற்று ஆடை நெய்யுங்கள்" என்று கூறியுள்ளார். ஒரு பெரு முயற்சிக்கு அடிகோலும் புதிய யுகத்தின் அழைப்பா இது? தேனீக்களை தேன் கூட்டில் வாழுமாறு இயற்கை அழைத்ததும் கோடிக் கணக்கான ஈக்கள் அந்த அழைப்புக்குச் செவி சாய்த்துச் சிறந்த பணியாற்றுவதற்காகத் தம் ஆண்மை, பெண்மைத் தன்மைகளைப் பலி இட்டுவிட்டன. தன்னையே அர்ப்பணிக்கும் இத்தகைய தியாகம் சுதந்திரத்துக்கு எதிரான பயனை அளித்தது. அழைப்பு வந்தவுடன் தம்முடைய சக்தியை ஆராயாமல் போக்கிக் கொள்பவர்கள் அவர்களுக்குள்ளேயே ஒரு சிறையைச் சுமந்து செல்கிறார்கள். இந்த எளிதான வழியை மேற்கொள்ள அழைக்கும் அழைப்புத் தேனீக்கட்கு உகந்ததே தவிர மனிதனுக்கு அன்று. என்று மனிதனுடைய முழுச் சக்தியும் கேட்கப்படுகிறதோ, அன்று தான் அவனுடைய முழுச் சக்தியையும் வெளிக் கொணர முடியும்.

தன்னிடமுள்ள மக்களின் சக்தியை எல்லாம் ஒரு குறுகிய துறையில் மட்டும் செலுத்தி வலுவடைய வேண்டும் என்று நினைத்த ஸ்பார்ட்டா நாடு தன் கருத்தில் வெற்றி பெறவில்லை. இதற்கு எதிராக ஏதன்ஸ் நாட்டினர் மக்களின் சக்தி முழுவதற்கும் வழி வகுத்துக் கொடுத்தமையின் ஏதன்ஸ் வெற்றி பெற்றது. அதனுடைய வெற்றிக் கொடி நாகரிகத்தின் உச்சியில் இன்றும் பறந்து கொண்டிருக்கிறது. ஐரோப்பாவின் தொழிற்சாலைகளிலும், படைஞர் வாழும் பாடி வீடுகளிலும் மனிதனின் மனிதத் தன்மை கொஞ்சங் கொஞ்சமாகக் குறுக்கப்பட்டுக் கொண்டே வருகிறது. மிகக் குறுகிய தங் நலத்திற்காக மானிடம் பலியிடப்பட்டு வருகிறது. மேனாடுகளில் துயர இருள் வலுப்பட்டு வருவதற்கு இதுவன்றே காரணம்! பெரிதாகவும் சிறிதாகவும் உள்ள இயந்திரங்களா

மனிதன் குள்ளனாக்கப்படுகிறான். அது மிகப் பெரிய இயந்திர மாயினும் மிகச் சிறிய கைராட்டையாயினும் ஒன்றுதான். அது இருக்க வேண்டிய இடத்தில் இருந்தால் இராட்டையும் நல்லதுதான். மனிதனிடம் காணப்படும் மாறுபட்ட இயல்பு காரணமாக, சர்க்கா தவறான இடத்தில் வைக்கப்பட்டால், அதில் நூற்கப்படும் நூல் கிடைக்கும்பொழுது மனத்தில் ஒரு பகுதியை இழக்க நேரிடுகிறது. சர்க்காவில் நூற்கப்படும் ஒரு துண்டு நூலை விட மனம் மதிப்புக் குறைந்து போனதா?

இந்திய மக்களில் ஐந்தில் நான்கு பாகத்தினர் உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர் என்றும், ஆண்டில் ஆறு மாதம் அவர்கள் தொழில் இல்லாமல் இருக்கின்றனர் என்றும் ஒரு வாதம் காட்டப்பெறுகிறது. அவர்கட்கு எடுத்துக் காட்டாக விளங்கும் முறையில், உயர்ந்த வகுப்பினர்களும் சில காலத்துக்கு சர்க் காவை மேற்கொள்ள வேண்டும் என்றும் வாதம் செய்யப்படுகிறது. தொடக்கத்தில் அடிப்படை ஊகங்களை நிரூபிக்க வேண்டும். எவ் வளவு உழவர்கள் எவ்வளவு காலத்துக்கு வேலை இல்லாமல் இருக் கிறார்கள்? வேறு தொழில்களை மேற் கொள்வதை விட்டு விட்டுச் சர்க்கா சுற்றுவதால் அவர்கள் அதிகம் சம்பாதிக்க முடியுமா? உழவைத் தவிர வேறு ஒரேயொரு வாழ்க்கை வழியை மட்டும் எல்லாக் குடியானவர்கட்கும் காட்டுவது நலம் பயக்குமா என்பதே ஐயத்துக்குரிய விஷயம். சுருங்கக் கூறுமிடத்து வெறும் ஊகத்தின் அடிப்படையில் ஒரு பொதுத் திட்டத்தைத் தீட்டவே கூடாது. விஞ்ஞான ரீதியில் ஆராய்ச்சி நடத்த வேண்டும். அவ்வாறு செய்த பிறகே என்ன முடிவுகள் எடுக்க வேண்டும் என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும்.

எதிர்ப்புக் குரல் என் காதில் விழுகிறது. "மனத்தை எப் பொழுதுமே கட்டுப்படுத்தி வைக்கப் போவதில்லை; ஒரு சில காலத் திற்கு மட்டுமே அவ்வாறு செய்கிறோம்" என்பதே அக் குரல். ஒரு சிறிது காலத்திற்குக்கூட ஏன் அவ்வாறு செய்ய வேண்டும்? அந்தச் சிறிது காலம் சுய ராஜ்யத்தை அடையப் போதுமானதா? இதில் ஒன்றும் புத்திசாலித்தனம் இருப்பதாகத் தெரியவில்லை. துணி உற்பத்தியில் சுய தேவைப் பூர்த்தி ஏற்படுவதுதான் சுயராஜ்யம் என்பது தவறு. அதனுடைய உண்மையான இடம் நம் மனத்தில் தான் இருக்கிறது. பல்வேறு சக்திகளையுடைய மனம் தனக் குள்ளேயே சுயராஜ்யத்தைப் பின்னிக் கொண்டிருக்கிறது. உல கத்தின் எந்தப் பகுதியிலும் இந்த வேலை இன்னும் பூர்த்தியாகவில்லை.

அரசியலில் ஒளித்திருக்கிற பேராசையும், ஏமாற்றமும் இன்னும் தளையைப் பிணித்தே வைத்திருக்கின்றன. அந்தத் தளையும் மனத்தின் உள்ளேயேதான் இருக்கிறது.

பிற இடங்களிற் காணப்படுவது போல இந்த நாட்டிலும், அறிவு, விஞ்ஞான சிந்தனை, ஆகியவற்றில் மனம் விரிவது மூலந்தான் சுய ராஜ்யத்தைப் பெற முடியுமே தவிர அர்த்தமற்ற சடங்குகளால் அல்ல. ஒரு சில நேரத்துக்கு சர்க்காவைச் சுழற்றுவதன்மூலம் இத்தகைய சுயராஜ்யத்தை அடைந்து விடலாம் என்று கூறுவதில் பொருளே இல்லை. மனிதர்கள் வார்த்தைகளைத் தேவ வாக்குக் களாக எடுத்துக் கொள்வதானுல் ஏற்கனவே நம்மிடம் உள்ள ஆயிரத் தொரு மூட நம்பிக்கைகளுடன் இதுவும் ஒன்ருகச் சேர்ந்து விடும். இப்படிப்பட்ட தெய்வ வாக்குகள்தாம் நம்மைத் தொழிற் படச் செய்யும் என்று கண்டால் வேறு வழியே இல்லாமல் இரவும் பகலுமாக ஆயிரக் கணக்கான தெய்வ வாக்குகளைத் தயாரிக்க வேண்டி நேரிடும். ஏனைய குரல்கள் அனைத்தும் அடைக்கப்பட்டு விடும். பகுத்தறிவின் இடத்தை, விடாப்பிடி என்பது பிடித்துக் கொண்டால், சுதந்திரத்தின் இடத்தை எதேச்சாதிகாரத்துக்குத் தந்துவிட நேரிடும். இது புதிய தன்று. இந்தியாவைப் பொறுத்த மட்டில் உலக காரியங்களில் கூட தெய்வங்கள், கூடார்த்த விளக் கங்கள், மற்றும் தெய்வீக செயல்கள் தலையிடுவதை நிரம்ப அனு பவித்துள்ளோம். ஆகவேதான் வீழ்ந்துவிட்ட பகுத்தறிவை மறு படியும் ஆசனத்தில் அமர்த்த ஆசைப்படுகிறேன்.

நிர்வாணமாக, அவமானத்தால் நிறைந்து நிற்கும் தாயின்[13] எதிரே யந்திரத்தில் உற்பத்தி செய்யப்பெற்ற துணி மலையளவிற்குப் போட்டுக் கொளுத்தப்படுகிறது. வெறும் மூட நம்பிக்கையால் செய்யப்பட்டால் ஒழிய இவ்வாறு பொருளை வீணடிப்பதற்கு அவசியம் இருப்பதாகவே தெரியவில்லை. பிரிட்டனில் நெய்யப்பெற்ற துணியைப் பயன்படுத்தலாமா வேண்டாமா என்பது பொருளியல் வாதிகள் முடிவு செய்ய வேண்டிய விஷயம். அதுபற்றி விவாதிக்கும் பொழுது பொருளாதார பாஷையைத்தான் உபயோகிக்கவேண்டும். விஞ்ஞான ரீதியில் மக்கள் சிந்திக்க மறுத்தால் அத்தகைய வருந்தத் தகுந்த மன நிலையை மாற்றியமைக்கவே நம்முடைய முதற் போராட் டத்தை நடத்த வேண்டும். இவ்வாறு சிந்திக்க முடியாமல் இருப்பதே முதற் குற்றம். அதிலிருந்தே ஏனைய குற்றங்கள் தோன்றுகின்றன. விதேசித் துணி 'தூய்மை யற்றது' என்றும் அது அழிப்பதற்கே தகுதியுடையதென்றும் கூறும் கூற்று இந்த முதற் குற்றத்துக்குத்

துணை புரிகின்றது. ஒரு பொய்யை நல்லொழுக்கச் சட்டமாக மாற்றுவதற்குப் பொருளாதாரம் துணைக்கு அழைக்கப் பெறுகிறது.

பொய்தான் தூய்மை யற்றது ; எனவே அதனைத்தான் ஒதுக்க வேண்டும். நமக்கு அப் பொய் துணையாக இல்லை என்ற காரணத்திற்காக மட்டும் அல்லாமல் அது பொய்யென்ற காரணத்திற்காகவே ஒதுக்கப்பட வேண்டும். அதன் வேறு பயன்கள் எவையாக இருப்பினும் நம்முடைய அக இயல்பை அது மாசுபடுத்தி விடுகிறது. பொருளாதாரம், அரசியல் என்ற நிலைகட்கெல்லாம் மேம்பட்ட நிலை ஒழுக்க நிலை என்பது நன்கு விளங்கும். ஒரு குறிப்பிட்ட ரகத் துணியைப் பயன்படுத்துவதில் ஏதேனும் தவறு இருக்குமேயாயின் அத் தவறு பொருளாதாரம், சுகாதாரம், அரசியல் ஆகியவற்றில் இருக்கக் கூடுமே தவிர நீதித் துறையில் இருக்க முடியாது. இதற்கு எதிராக, துயரத்தைத் தரும் எந்தத் தவறும் ஒழுக்கத்திற்கு விரோதமானது என்று வாதஞ் செய்யப்படுகிறது. இதை மறுத்து ஒவ்வொரு பிழையைத் தொடர்ந்தும் துயரம் வருகிறது என்றும் யான் கூற முடியும். ஜியாமெட்ரியில் ஏற்படும் பிழையால் சாலை நீளமாகி விடலாம் ; அல்லது ஓர் அஸ்திவாரம் வலுவிழந்து விடலாம்: அல்லது ஒரு பாலம் ஆபத்தானதாகி விடலாம். ஆனால் கணிதத்தில் நேர்ந்த பிழையை நீதியால் சரிப்படுத்திவிட முடியாது. ஜியாமெட்ரிக் கணக்கில் மாணவன் தவறு செய்ததற்காக அவனுடைய நோட்டைக் கிழித் தெறிவதாற் பயனில்லை. சரியான முறையில் அவன் கணக்கை மறுபடியும் போடுவதே சரியான வழியாகும். அவன் நோட்டைக் கிழித்து எறிந்தால் ஒழிய மாணவன் திருந்தமாட்டான் என்று ஆசிரியர் முடிவு செய்து கொண்டால் என்ன செய்வது? இவ்வாறு செய்வதுதான் சரியான முறை என்றால் மாணவருக்குப் பாடத்தைவிட முக்கியமாக ஒரு புரட்சி தேவைப்படும்.

விதேசித் துணிகளை எரித்து விடுமாறு நமக்கு ஆணை இடப்பட்டுள்ளது. ஆனால் இதற்கு நான் கீழ்ப்படியத் தயாராக இல்லை. குருட்டுத்தனமாகக் கீழ்ப்படியும் பழக்கத்தையே எதிர்த்துப் போராட வேண்டுமென்று நம்புகிறவன் நான். இரண்டாவதாக அந்தத் துணி மிகவும் தேவைப்படுகிற மக்களுடையதே தவிர என்னுடையதன்று என்றும் உணர்கிறேன். இம் முறையில் ஒரு பெரிய தியாகத்தைச் செய்துவிட்டதாகக் கருதிக் கொள்ளும் நமக்கு வேறு வழிகளில் துணியைச் சேகரித்துக் கொள்ள வசதி உண்டு. ஆனால் உண்மையிலேயே இதனால் பாதிக்கப் பட்டவர்கள், தங்கள் நிர்வாண நிலையை மூடிக்கொள்ள முடியாமையின், வீட்டை விட்டே வெளிச் செல்ல

முடியாது. திணிக்கப்பட்ட கழுவாய் அல்லது பிராயச்சித்தம் நம் குற்றங்களைப் போக்குவதில்லை. அன்றியும் பகுத்தறிவோடு கூடிய உறுதியை, ஏதோ சில இலாபங்கள் ஈடு செய்வதுமில்லை.

உலகத்தை இன்று அமிழ்த்திக் கொண்டிருக்கிற யந்திர சாதனத்தின் கொடுங்கோன்மையை எதிர்த்து மகாத்மா போர் தொடுத்திருக்கிறார். இங்கே நாம் அனைவரும் அவருடைய கொடியின் கீழே இருக்கிறோம். நம்முடைய தேசிய வாழ்வின் ஆணி வேராக அமைந்துள்ள அடிமை மனப்பான்மையை, இந்தப் போராட்டத்தில் நம் துணையாக ஏற்றுக்கொள்ள முடியாது. அதுதான் நம்முடைய உண்மையான எதிரியாகும்; அதனைத் தோற்கடிப்பதன் மூலந்தான் சுயராஜ்யத்தை அகத்தும் புறத்தும் அடையமுடியும்.

நான் துணிகளைக் கொளுத்தச் சித்தமாக இருக்கிறேன் என்றாலும் குருட்டுத்தனமான ஓர் ஆணைக்குக் கட்டுப்பட்டு அவ்வாறு செய்ய விரும்பவில்லை. அறிஞர்கள் இவ்விஷயம் பற்றித் தங்கள் காலத்தையும் சிந்தனையையும் செலவிட்டு நன்கு ஆராயட்டும். விதேசித் துணியைப் பயன்படுத்துவதால் ஏற்படும் பொருளாதாரத் தாங்கலை எந்த வகையான பொருளாதார வழிகளால் சீராக்க முடியும் என்று கூறட்டும். ஒரு வகையான துணியைப் பயன்படுத்தியதால் ஒரு பொருளாதார பிழையைச் செய்துவிட்டதாக வைத்துக் கொள்வோம். தர்க்க முறைப்படி நிரூபித்தால் ஒழிய, துணிகளை எரிப்பதன் மூலம் அந்தப் பிழையை இன்னும் பெரிதாக்கவில்லை என்று எவ்வாறு கூற முடியும்? அதன் மூலம் இந்தியாவின் குரல் வளையைப் மாஞ்செஸ்டர் பிடித்திருக்கும் பிடியை இன்னும் வலுப்படுத்தவில்லை என்பதை எவ்வாறு நிரூபிக்க முடியும்? நான் ஒரு நிபுணன் அல்லன் ஆகையால் அந்த முறையில் பேச இயலாது. கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற முறையில்தான் நான் இவற்றைக் கேட்கிறேன். நிபுணர்கள் என்ன கூறினாலும் அதை வேத வாக்காக எடுத்துக் கொள்பவன் அல்லன் நான். என்றாலும் வேத நூல் போல அவர்கள் எதனையும் கட்டளை இடுவதில்லை. நம்முடைய அறிவுக்குப்படும் முறையில் கூறி நேரடியான வாதத்திற்கு அழைக்கிறார்கள்.

மற்றொரு விஷயத்தையும் கவனிக்க வேண்டிய காலம் வந்துள்ளது இப்பொழுது. அகில உலகத்திலும் ஏற்பட்டுள்ள விழிப்பின் ஒரு பகுதியே இந்தியாவிலும் ஏற்பட்டுள்ளது. உலகப் பெரும் போருடன் ஒரு புதிய யுகத்தின் வாசல் திறக்கப்பெற்றுவிட்டது.

உலகத்தின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் மக்கள் தங்களையும் அறியாமல் ஒருவருடன் ஒருவர் நெருங்கிக் கொண்டிருக்கிறார்கள். போரின் கொடுமையை மானிட வர்க்கம் முழுமையும் அறிகின்ற நேரத்தில், அவர்கள் ஒருவரை யொருவர் நம்பி வாழ வேண்டிய இன்றியாமையாமையை யாரும் மறுக்க முடியாது. திடீரென்று நாகரிகத்தின் அஸ்திவாரம், இன்னும் குறிப்பாகக் கூறப்போனால், மேனாட்டு நாகரிக அடிப்படை, ஆட்டங் காணத் தொடங்கி விட்டது. இந்த அதிர்ச்சி ஏதோ குறிப்பிட்ட நேரத்துக்குக் குறிப்பிட்ட இடத்தை மட்டும் தாக்குவதாகக் கருதிவிட வேண்டா. இந்த அதிர்ச்சி உலகம் முழுவதும் வியாபித்துள்ளது; கண்டத்திற்குக் கண்டம் வியாபித்துள்ள மனித உறவுகள் உண்மையான ஒன்றல் தன்மையில் நிலைபெற்றா லொழிய இந்த அதிர்ச்சி நிற்காது.

இனிமேல் எந்த ஒரு நாடும் தனித்து இருந்து வாழ விரும்பினால் கால நிலையுடன் முரண்பட நேரிடுவதுடன், அமைதியையும் காண முடியாது. எந்த ஒரு தேசமும் சர்வ தேச ரீதியில்தான் இனிச் சிந்திக்க வேண்டும். அனைத் துலகப் பான்மையை மனத்தில் வளர்ப்பதே இப் புது யுகத்தின் முயற்சியாகும். நம்முடைய இந்திய ஆட்சியினரின் அடிப்படைக் கொள்கைகளில் சமீப காலமாக ஒரு வகை மாற்றம் காணப்படுகிறது. இந்தியப் பிரச்னைகளை அகில உலகத்துடன் இணைத்துப் பார்க்கும் முயற்சி நடைபெறுகிறது. நம்முடைய மனக் கண்ணை மூடி இருந்த திரையை உலகப் போர் நீக்கி விட்டது. பரந்த உலகத் தேவைகட்கு விரோதமானவை எவையோ அவை நம்முடைய தேவைகட்கும் விரோதமாகும். புத்தகத்தில் காட்சியளிக்கும் இந்த உண்மை இப்பொழுது நன்கு வெளிப்பட்டு நிற்கிறது. தவறான வழிகளிற் சேகரித்து வைத்துக் கொண்ட பொருள்களின் உரிமை நிலைப்பதில்லை என்பதை மானிட சமுதாயம் நன்கு அறிந்து கொண்டுள்ளது. அன்றியும் நேரிடைப் பொருள் கிடைப்பதனால் அதன் பொருட்டுச் சில போலி உரிமைகளை இழப்பது இலாபமே தவிர நஷ்டமில்லை. நோக்கத்தில் ஏற்பட்டுள்ள இந்தப் பெரிய மாறுதல் மனிதனுடைய மனத்தை அற்பத் தனத்திலிருந்து பெருந் தன்மைக்கு இட்டுச் செல்கிறது; மேலும் இந்திய அரசியலையும் மாற்றியமைக்கப் பயன்படுகிறது. இதனை அடைய வேண்டுமானால் பல தடைகளை வென்றாக வேண்டும். ஒவ்வொரு படியிலும் தன்னலம் மெய்யறிவைத் தாக்குகிறது. தன்னலம் ஒன்றுமட்டும் மெய்ம்மையானது என்று நினைப்பது தவறாகும்.

கலப்பற்ற வஞ்சகம் அல்லது கபடம் என்பது எளிதாகக் கிடைக்கக் கூடியது அன்று என்பதையும், மிக அருகியே காணப்படுவது என்பதையும் என்னுடைய அறுபதாண்டு அனுபவத்தில் கண்டுள்ளேன். முற்றிலும் வஞ்சகமானவனைக் காண்பது எளிதன்று. உண்மை என்ன வென்றால் ஒவ்வொரு மனிதனும் இரட்டை இயல்புள்ளவனே யாவான். இரண்டு எதிர்மறையான பண்பாடுகள் ஒன்றாக இருக்க முடியும் என்பதை நம்முடைய தர்க்க மனப்பான்மை ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. நன்மையுடன் கலந்து தீமை காணப்படும்பொழுது அந்த நன்மை போலியானது என்ற முடிவுக்கே விரைந்து விடுகிறோம். சர்வ தேசீய உறவுகளில் இந்த இரட்டைத் தன்மை நன்கு விளங்குகிறது. நம்முடைய பழைய அனுபவங்கள் காரணமாக இத்தகைய நிலையைப் பற்றி ஒருதலைப் பட்சமான முடிவையே கொண்டிருப்போம். எதிர்காலத்துக்குரிய வாக்களிப்பின்படி நோக்கத்தில் ஏற்பட்டுள்ள இந்த மாறுதலை மெய்ம்மையானதென்றே ஏற்றுக் கொள்ள வேண்டும். எதிர்காலத்தின் தூண்டுதல் மானிட ஒற்றுமையை நோக்கியே செல்கிறதென்பதை இன்றே நாம் அறிய முடிகிறது. சர்வதேச சங்கமும் இந்திய அரசியல் சீர்திருத்தமும்[14] தோன்றியதே மேனாட்டின் எதிர்காலம் எவ்வாறு இருக்கும் என்பதை எடுத்துக் காட்டும் செய்திகளாகும். உண்மையை இச் செய்திகள் முற்றிலும் காட்டவில்லை எனினும் உண்மையைக் காட்ட அவை பெரிதும் முயல்கின்றன என்பதில் ஐயமில்லை.

உலகம் விழிப்படைந்துள்ள இந்த விடியற்கால நேரத்தில், நம்முடைய தேசீய முயற்சிகளில் அனைத் துலக இயல்பு ஒன்றும் இல்லையானால், நம்முடைய ஆன்மீக வறுமை பிறர் காணும் நிலையில் வெளிப்பட்டுவிடும். இவ்வாறு கூறுவதால் நம்முடைய உடனடிக் கடமைகளை ஒதுக்கிவிட வேண்டும் என்று நான் கூறியதாக யாரும் நினைக்க வேண்டா. விடியற்கால நேரத்தில் பறவை உறங்கி விழித்தவுடன் உணவு தேடுவதிலேயே தன் முழு கவனத்தையும் செலுத்தி விடுவதில்லை. காலை ஒளியின் இன்பத்தில் மூழ்கி அதன் தொண்டையில் இன்ப இசை பிறக்கிறது; ஆகாயத்தின் அழைப்பு அதன் சிறகுத் துடிப்புக்களில் காணப்படுகிறது. அனைத்துலக மானிடம் அதனுடைய அவசர அழைப்பை விடுத்துள்ளது. நம்முடைய மனங்கள் அதே மொழியில் இந்த அழைப்பிற்கு விடையளிக்கட்டும். முன் பெல்லாம், நம்மை ஆள்பவர்களின் குறைகளையும், குற்றங்களையும் கண்டு பிடித்து எடுத்துக் கூறுவதில் 'நாம்

மூழ்கி இருந்தோம். அடிமைத் தளையிலிருந்து நம்முடைய அரசியலை விடுவிக்க முயற்சி எடுக்கும் இந்த நேரத்தில்கூட, நம்முடைய பழைய பகிஷ்கரிப்புப் பல்லவியையே பாடிக் கொண்டிருக்கப் போகிறோமா? கோப உணர்ச்சியால் எழுப்பப்படும் தூசிப் படலம் பெரிய உலகத்தைக் கூட நம்முடைய காட்சியிலிருந்து மறைத்து விடுகிறது. இந்தியாவின் மிகப் பெரிய பரப்பை உலக அடிப்படையில் காண மறந்தால் நம்முடைய நாட்டைப் பற்றிய வருந்தத் தகுந்த ஒரு பட்டம்தான் நம்மிடம் எஞ்சும்.

நம்முடைய நோக்கத்தை, கேவலம் உலகாயத முறையில் எதிர்பார்க்கும் அளவுக்குக் குறுக்கிக் கொண்டது மிகவும் வருந்தத் தகுந்த விஷயமாகும். ஆனால், இன்று மேனாடுகளிற் கூட, உலகாயதத் தேவைகட்கு அப்பாற்பட்டு வளர வேண்டும் என்ற எண்ணம் வளர்ந்திருப்பது நன்கு தெரிகின்றது. அந்த நாட்டில் துறவு மனப்பான்மையை மிகுதியாகப் பெற்றுள்ளவர்கள் பலரைக் கண்டேன். அந்த மனிதர்கள் தேசீயம் என்ற அற்பத் தளைகளிலிருந்து விடுதலை பெற்றவர்கள்; தங்களுடைய மனத்தில் மானிட சமுதாய அடிப்படை ஒன்றாயிருப்பதை உணர்ந்தவர்கள். அந்தப் பெரிய இலட்சியத்திற்கு உழைக்கும் வகையில் எந்தத் தியாகத்திற்கும் அவர்கள் தயாராக இருக்கிறார்கள். அத்தகைய மனிதர்களை இங்கிலாந்தில் கண்டேன். அடிமைப்பட்ட தேசங்களை அதிகாரத்தின் கொடுங் கோன்மையிலிருந்து விடுவிக்க அவர்கள் பாடுபடுவதால் அவர்களுடைய சொந்த நாட்டு மக்களிடமிருந்து ஏச்சையும், துன்பத்தையும் ஏற்றுக் கொண்டுள்ளனர். இத்தகைய துறவு மனப்பான்மையை பிரான்ஸ் நாட்டிலும் கண்டேன். தம்முடைய தாய் நாட்டிலேயே ஜாதிப் பிரஷ்டம் செய்யப்பட்டுள்ள ரோமன் ரோலண்ட் ஓர் உதாரணமாவார். ஐரோப்பாவின் சிறிய சிறிய தேசங்களிலும் இந்த மனப்பான்மையைக் கண்டுள்ளேன். உலக ஒற்றுமை என்னும் நம்பிக்கையால் முகத்தில் ஒளியுடன் வசிக்கும் ஐரோப்பிய மாணாக்கர்களையும் கண்டேன். தங்களுடைய ஒளி பொருந்திய எதிர் காலமாகிய கனவை அடையுமுன், எவ்வளவு பொறுமையோடும் மனத் திடத்தோடும் எவ்வளவு துன்பங்களைச் சகித்துக் கொள்ள வேண்டும் என்பதையும் அம் மாணவர்கள் அறிந்திருந்தனர்.

இந்த விடியற்காலமாகிய நல்வேளையில் நாம் மட்டும் பிறருடைய குற்றங்களையே எடுத்துக் காட்டும் பல்லவியை ஓயாமல் பாடிக் கொண்டு, நம்முடைய ஆக்க வேலைத் திட்டங்களை இந்தத்

தவருன எண்ணங்களாகிய அஸ்திவாரத்தின் மேற் கட்ட வேண்டுமா? இந்தப் புதிய உஷா காலத்தில் ஏகனுய், நிற வேறுபாடு அற்றவனுய், தன் பல்வேறு சக்தியால் ஒவ்வொரு வகுப்புக்கும் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுபவனுய் உள்ள ஒருவனை நினைக்க வேண்டாவா? நம் அனைவரையும் நல்ல மனப்பாங்குடன் ஒன்ருய் இணைக்கக்கூடிய மெய்யறிவை நமக்கு நல்கும் அவனை நோக்கி வழிபட வேண்டாவா? [15]

—1921.

பனியைச் சேகரித்துப் பாரமாக வைத்திருப்பது பனிக்குன்றின்
இயல்பாயினும்
பனி உருகி ஆருகப் பெருகும் பொழுது அதன் பயனை அனைத்
துலகும் அனுபவிக்கின்றன

—ரவீந்திரநாத் தாகூர்.

# 13. சுயராஜ்யத்திற்கு உழைத்தல்

நம்முடைய நாட்டில் வாழ்ந்த அறிவுடைப் பெருமக்கள் நல்ல உயர்தரமான இலக்கிய வட மொழியில் கூறியுள்ளதென்னவெனில், வேண்டுமான அளவு வாயாற் பேசலாம்; ஆனால் எழுத்தில் மட்டும் நாம் சிக்கிக் கொள்ளக் கூடாது என்பதேயாம். இந்த அறிவு நிறைந்த அறிவுரையை தவறாமல் நான் மீறி வந்திருக்கிறேன். திறனாய்வு செய்து முடிபு கூற வேண்டிய இடங்களில் மட்டுமே இந்த உபதேசத்தைக் கடைப்பிடித்துள்ளேன். எப்பொழுதாவது ஏதாவது சொல்ல வேண்டி இருந்தால் அதனைக் கவிதை மூலமோ அன்றி உரைநடை மூலமோ சொல்லத் தயங்கியதே இல்லை. கருத்து வேறுபாடு காரணமாகப் பூசலிட நேர்ந்தால் அங்குப் போகாமல் யான் நின்று விடுகிறேன். அந்த இடத்தில் என்னுடைய பேனா உழைக்க மறுத்து விடுகிறது.

நம்முடைய நம்பிக்கைகள் எப்பொழுதும் பகுத் தறிவின் அடிப்படையில் தோன்றுவதில்லை. அந்த நம்பிக்கை, நம்முடைய இயல்பாகவோ அன்றி அந்த நேரத்தில் மனத்தில் தோன்றும் உணர்ச்சியாகவோகூட இருக்கலாம். கலப்பற்ற பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்டு ஒன்றை நம்புவதென்பது என்றோ ஒரு முறை நடைபெறக் கூடும். நமது நம்பிக்கையை ஏற்றுக் கொண்டு பிறகு ஒரு காரணத்தை நாடுகிறோம். விஞ்ஞானத்தில் மட்டுமே நம்முடைய முடிவுகள் நேரடிச் சான்றுகளைக் கொண்டு ஏற்படுகின்றன. பிற இடங்களில் நம்முடைய கற்பனைகள், தவறான எண்ணங்கள் இவற்றால் இழுக்கப்பெற்று அவை நம்முடைய மன விருப்பத்தைச் சுற்றிச் சுற்றி வருகின்றன.

இம் முறையில், ஒரு குறிப்பிட்ட பயனை அடைய வேண்டும் என்ற விருப்பம் ஏற்பட்டு, அந்த விருப்பத்தின் மேல் நம்பிக்கை தோன்றுமானால் ஒரு குறிப்பிட்ட வழியை மேற்கொள்ளுமாறு மக்களைத் தூண்ட ஏற்றதாகிய காரணத்தையும் காட்ட வேண்டிய தேவையே இல்லாமற் போய்விடுகிறது. மேற்கொள்ளும் வழி எளிதாகவும் இருந்து விரைவில் பயனை அடைய முடியும் என்ற நம்பிக்கையும் ஏற்படும்படி செய்து விட்டால் அதுவே போதுமானது.

சுய ராஜ்யம்[1] எளிதாகவும், விரைவாகவும், கிடைத்துவிடும் என்ற எண்ணத்தினால் என்னுடைய நாட்டு மக்களின் மனநிலை ஒரு சுண்டு நிலையில் இருந்து வந்தது. வெடிக்கக் கூடிய இந்தச்

சூழ்நிலையில் இந்த எண்ணத்தின் நன்மை தீமைகளைப் பற்றி ஆராயத் தொடங்குவது, ஒரு வாதப் புயலையே கிளப்பி விட்டுவிடும். அன்றியும் அறி வென்னும் கப்பல் அடைய வேண்டிய துறை முகத்தை அடைய முடியாதபடி இந்தப் புயல் செய்துவிடும். சுய ராஜ்யம் பெறுவது மிகவும் கடினமான காரியம் என்றுதான் இது வரை நாம் எண்ணிக் கொண்டிருந்தோம். இதற்கெதிராக, அதை மிகவும் எளிதாகப் பெற முடியுமென்றும், மிகக் குறைந்த கால அளவில் பெற்றுவிட முடியுமென்றும், யாரேனும் கூறுவதைக் கேட்டால் அதை நம்ப முடியாதென்று கூற யாருக்குத்தான் துணிவு பிறக்கும்? செம்பைப் பொன்னாக மாற்றும் யோகியைக் கண்டு வியக்கும் மக்கள் உண்மையில் முட்டாள்களல்லர்; ஆனால் அவர் களுடைய அறிவைப் பயன்படுத்த முடியாதபடி பேராசை குறுக்கே நின்று தடை செய்கிறது.

என்றாலும், சுய ராஜ்யம் வாயிற்படியில் காத்துக் கொண்டு நிற்கிறது என்ற செய்தியைக் கேட்டுச் சமீப காலத்தில் நம் மக்கள் பெரிதும் மகிழ்ச்சியடைந்தனர். குறிப்பிட்ட நாளும் வந்து போயிற்று; ஆனாலும் சுய ராஜ்யம் வரவில்லை. போடப்பெற்ற நிபந்தனைகளை நாம் நிறைவேற்றாமல் விட்டதே வாராமைக்குரிய காரணம் என்று கூறினார்கள். அந்த நிபந்தனைகளை எவ்வாறு நிறைவேற்ற வேண்டும் என்று அறிவதே ஒரு பெரிய பிரச்னையாக இருந்ததைக் கண்டு யாரும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. ஹிந்துக்களும் முஸ்லீம்களும் உண்மையாக நட்பை மேற்கொண்டால் சுய ராஜ்யத்தை நோக்கி நீண்ட தூரம் சென்றதாக முடியும். உண்மை யான தொல்லை என்னவென்றால் அவர்கள் ஒன்று சேர்வதில்லை. அவர்கள் ஒன்றுகூடிவிட்டால் அதன் பிறகு ஒவ்வொரு நாளும் சுய ராஜ்யம் தொடங்குவதற்கு ஏற்ற நாளாகலாம். இதுபற்றிய ஒரு கால அட்டவணையை அரசினர் வெளியிட்டால் அதனால் பெரு மகிழ்ச்சி ஏற்படலாமே தவிர, உண்மையான வளர்ச்சிக்குக் குழப்ப மடைந்துள்ள மனம் பயன்படாது.

குறிப்பிடப்பெற்ற காலம் கடந்து பல நாட்களாகி விட்டன; என்றாலும் அந்தப் பழைய உற்சாகம் ஓரளவு இருந்து கொண்டே இருக்கிறது. ஒன்றிரண்டு குறுகிய வழிகளே இலக்கை அடைவ தற்கு ஏற்ற வழிகளாகும் என்ற குருட்டு நம்பிக்கையில் ஏற்பட்ட குழப்பம், அவசரம், வேகம் ஆகியவை மட்டும் எஞ்சியுள்ளன. அந்த வழிகளில் சர்க்கா அல்லது ராட்டை மிகவும் முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது.

எனவே, இந்த சுயராஜ்யம் என்பது என்ன? என்ற கேள்வியைக் கேட்கத்தான் வேண்டி இருக்கிறது. நம்முடைய தலைவர்கள் அதை அறுதியிட்டு விளக்கவில்லை. சுதந்திரம் என்ற சொல்லுக்குப் பலவிதமாகப் பொருள் கூறலாம். உண்மையைக் கூறுமிடத்து நம்முடைய சர்க்காவில்[2] நம்முடைய நூலை நாமே நூற்கும் சுதந்திரம் இருக்கிறது. இதனைச் செய்ய நாம் தவறி விட்டோம் என்றால் அதற்குரிய காரணம் நாம் நூற்கும் நூல் இயந்திரங்களில் நூற்கப்படும் நூலுடன் போட்டியிட முடியவில்லை என்பதுதான். இதற்குப் பதிலாக இந்தியாவில் வாழும் கோடிக் கணக்கான மக்கள் தங்கள் ஓய்வு நேரங்களில் சர்க்காவில் நூற்பதாயிருந்தால் வீட்டில் நூற்ற நூலின் விலை வெகுவாகக் குறைந்திருக்கும். ஆனால் அவ்வாறு எதிர்பார்ப்பது வீணாகும்; ஏனென்றால் சர்க்காவின் உபயோகத்தை ஆதரித்துப் பேனாவால் எழுதித் தள்ளுகிறார்களே தவிரச் சர்க்காவைத் தொட மறுக்கிறார்கள்.

இரண்டாவது கருத்தை இனிக் காண்போம். நம்முடைய நாட்டிலுள்ள அனைவரும் நூற்கத் தொடங்கினால் வறுமை ஓரளவு குறையும்; என்றாலும் அதன் மூலம் சுயராஜ்யத்தை அடைந்து விட முடியாது. அப்படியானால் அதற்கு என்ன செய்ய வேண்டும்? வறுமை நிறைந்த நாட்டில் தேசீயச் செல்வம் பெருகுவது பெரிய காரியந்தான். நம்முடைய விவசாயிகள் தம் காலத்தை வீணடிக்காமல் இத்தகைய பயன்தரும் வேலையில் ஈடுபட்டால் அதனால் நன்மை பெரிதும் விளையும்.

விவசாயிகளின் வேலை இல்லாக் காலத்தைச் சம்பாதிக்கும் வழிகளில் செலவழிப்பது மிகவும் முக்கியமானது என்பதை ஏற்றுக் கொள்வதாக வைத்துக் கொள்வோம். அவ்வாறு செய்தாற்கூட நாம் நினைப்பதுபோல் பிரச்னை அவ்வளவு எளிதாக முடிவதாகத் தெரியவில்லை. இன்னும் அதுபற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டியுள்ளது. விளக்கமாக ஒன்றுங் கூறாமல் அவர்கள் நூல் நூற்கட்டும் என்று மட்டும் கூறுவதால் பயன் இல்லை.

விவசாயி தன்னுடைய பணியில் பல காலமாக ஈடுபட்டிருத்தலின் அதற்கேற்ற ஒரு மன நிலையையும், கை வன்மையையும் பெற்றிருக்கிறான். பூமியை உழவு செய்வதுதான் அதிக சிரமம் இல்லாமல் அவன் செய்யக் கூடிய காரியம். அவனுடைய வயலில் இருக்கின்றவரை, பயிரை விளைப்பதற்காக ஏதாவது ஒரு பணியை மேற்கொள்கிறான். இவ்வாறு பணி புரியாமல் இருக்கும்போது அவன் வேலை இல்லாமல் இருக்கிறான் என்று கூறலாம்

அதனால் அவன் சோம்பி இருக்கிறான் என்று குற்றஞ் சாட்டுதல் நியாயமற்றதாகும். விவசாயத்தை ஆண்டு முழுதும் மேற்கொள்ளக் கூடுமானால், குடியானவன் தடை இல்லாமல் அப் பணியை ஆண்டு முழுவதும் மேற்கொள்வான். உழவுத் தொழில் போன்ற உடலுழைப்பில் அமைந்து கிடக்கும் குறை என்னவென்றால், மனம் வேலையே செய்யாமையால், சுறுசுறுப் பற்றுப்போய் விடுகிறது. சுறுசுறுப்புள்ள மனந்தான், ஒரு வேலையிலிருந்து மற்றோர் அலுவலுக்கு அன்றாடம் போக முடியும். டிராம் வண்டி, தண்டவாளத்தில் ஓடுங் காரணத்தால், திடீரென்று எங்கும் திரும்ப முடியாதிருப்பது போல, உழவுத் தொழில் போன்ற உடலுழைப்பு வேலைகளில் மனம் இஷ்டம்போல் பணி புரிய முடியாது. நிலத்தை உழுபவன் நூல் நூற்கும் பணியை மேற்கொண்டால் அவன் மனம் தண்டவாளத்தை விட்டு இறங்கி விடுவது போல் ஆகிவிடுகிறது. சிறிது தூரம் அதை அவன் இழுத்துக்கொண்டே போகலாம்; ஆனாலும் அது பெரு முயற்சியால்தான் நடைபெற முடியும்; இதனால் அவனுடைய சக்தி வீணடிக்கப்படுகிறது.

நம்முடைய மாகாணத்தில் குறைந்த அளவு இரண்டு ஜில்லாக்களில் வாழும் குடியானவர்களுடனாவது நான் நெருங்கிப் பழகியுள்ளேன். பழக்க வழக்கங்களால் ஏற்பட்டுள்ள தளை அவர்களைப் பொறுத்தமட்டில் எவ்வளவு வலுவானது என்பதை அனுபவ பூர்வமாக அறிவேன். இவற்றில் ஒரு ஜில்லாவில் நெல் பயிராகிறது. அந்த ஒரு போகப் பயிரை விளைப்பதற்கு எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பதை நான் அறிவேன். என்றாலுங்கூட அவர்களுடைய ஓய்வு நேரங்களில் அவர்கள் வீடுகளைச் சுற்றிக் காய்கறிப் பயிர் செய்திருக்கலாம். அவ்வாறு செய்யுமாறு அவர்களைத் தூண்டினேன் என்றாலும் அதில் தோல்வியே அடைந்தேன். நெல்லை விளைப்பதற்கு நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்ட அவர்கள், காய்கறி விளைக்கச் சிறு கஷ்டத்தைக்கூட எடுத்துக் கொள்ளக் மறுத்து விட்டனர். பிற ஜில்லாக்களில், விவசாயிகள் வருடம் முழுவதும், நெல், சணல், கரும்பு, கடுகு ஆகியவற்றை விளைப்பதற்குத் தகுதி இல்லாத சில நிலங்கள் தரிசாக விடப்பட்டிருப்பினும் அவற்றிற்கும் நிலச் சொந்தக்காரர்கள் குத்தகை விதித்து வாங்கி விடுகின்றனர். மேற்பகுதிக் கிராமங்களிலிருந்து[3] பல குடியானவர்கள் இந்தத் தரிசு நிலத்திற்கு வந்து தங்கி அந்த மணற்பாங்கான பூமியில் வெள்ளரி முதலியவற்றைப் பயிரிட்டு நல்ல இலாபம் எடுத்துச் சென்று விடுகின்றனர். சணல் விளைப்பவன்

எக் காரணத்தை முன்னிட்டும் சோம்பேறி என்று கூற முடியாது. உலகத்தில் மற்ற சில இடங்கள்கூடச் சணல் உற்பத்திக்கு ஏற்ற தாக இருப்பினும் அதைப் பயிரிடுவதால் ஏற்படும் கஷ்டத்தை நினைத்து யாரும் முன்வருவ தில்லை. சணல் பயிர் வங்காளத்தின் ஏகபோக உரிமையாக இருக்கிறதென்றால் அது அந்த மண்வளத் தோடுமட்டு மல்லாமல் மக்கள் வளத்தையும் பொறுத்திருக்கிறது. என்றாலும் சணல் பயிரிடும் இந்தக் கடும் உழைப்பாளர்கள், வெள்ளரி பயிரிடுபவர்கள் ஆண்டுதோறும் எடுக்கின்ற இலாபத் தைக் கண்டு கொண்டே இருந்துங்கூட, தங்களுடைய மணற்பாங் கான பூமிகளில் வெள்ளரி பயிரிடுவதில்லை; ஏனென்றால் அவர்கள் இந்தப் புதிய பழக்கத்தை மேற்கொள்ளக் கூசுகிறார்கள்.

மக்களுடைய மனத்தில் படிந்துள்ள பழைய பழக்கமாகிய பாதையை மாற்றிப் புதிய பாதையில் திருப்புவதே இன்று நம் முன்னர் இருக்கின்ற பெரிய பிரச்னை. புறத்தே எளிதாகக் காணப் படுகின்ற ஒரு வழியைக் காட்டிவிடுவதால் எந்த நற்பயனும் விளையும் என்று நான் கருதவில்லை. மனம் மாறுவதைப் பொறுத்தே பிரச்னையின் தீர்வு காணும் நிலை அமைந்துள்ளது.

ஹிந்துக்களும் முஸ்லீம்களும் ஒன்றுசேரட்டும் என்று உத்திரவு போடுவது எளிது. கீழ்ப்படியும் பழக்கமுள்ள ஹிந்துக்கள் கிலா பத் இயக்கத்தில்[4] கூடி விடுவார்கள். அது மிகவும் எளிதான காரியம். தங்களுடைய பொருளாதார வசதிகளில் சிலவற்றைக் கூட முஸ்லீம்களுக்கு விட்டுக்கொடுத்து விடுவார்கள். ஆனால் அவர்களை வேறு பிரித்து வைத்திருக்கும் ஆழமான மன மாற்றங் களே பெரும் முட்டுக் கட்டைகளாக உள்ளன. இதுவே அந்த விஷயத்தின் இருதய ஸ்தானம். ஹிந்துவுக்கு முஸ்லீம் அசுத்த மானவன்; முஸல்மானுக்கு ஹிந்து கடவுள் நம்பிக்கை இல்லாதவன். இருவரும் சுய ராஜ்யத்தை எவ்வளவு விரும்பினாலும் இந்த மன நிலையிலிருந்து மாறுவதாகத் தெரியவில்லை. ஆங்கிலேயப் பழக்கத்தை மிகுதியும் மேற்கொண்டுள்ள ஒரு ஹிந்துவை யான் அறிவேன். எல்லா வகையான கறிகளையும் அவர் விரும்பி உண்பார். ஆனால் முஸ்லீம்கள் சமைத்த சாப்பாட்டு விடுதிச் சோற்றை மட்டும் தொடமாட்டார். அந்தச் சோறு அவருடைய தொண்டையில் இறங்க மறுப்பதாக அவர் கூறுவார். இந்த உணவு பற்றிய மன நிலைதான் சுமுகமான உறவு முறைக்கும் முட்டுக் கட்டையாக இருக்கிறது. சமய உத்திரவுகளின் அடிப்படையில் பழகிய மனப் பழக்கமே, ஜாதி உணர்ச்சிக்குப் பன்னெடுங் காலமாக இடங்

கொடுத்த கோட்டையாகும். கிலாபத் இயக்கம், அல்லது சந்தர்ப்ப வசமான உடன்படிக்கைகள் ஆகியவற்றின் மூலம் ஏற்பட்ட புற ஒற்றுமை எதுவும் இந்தக் கோட்டையை அழித்துவிட முடியாது.

ஆழத்தில் ஓட்டிக் கொண்டிருப்பதால் இத்தகைய பிரச்னைகளை எளிதில் தீர்க்க முடியாது. இவற்றின் வேர்கள் நம்முடைய மனத்தில் ஆழத்தில் பதிந்திருப்பதால், அவற்றைப் பிடுங்கி எறியும் எந்தத் தீர்மானத்தையும் நாம் ஏற்றுக் கொள்ள இயல்வதில்லை. , ஆகவே, புறத்தே மட்டும் உள்ள எளிய தீர்வு ஏதேனும் வந்தால் நாம் ஆசீர்வாதம் பெற்றதுபோல மகிழ்ச்சி யடைகிறோம். பலரும் சென்ற வழியிற் சென்று வாழ்க்கை வசதியைச் சம்பாதிக்க விரும்பாதவன் தான், திடீரென்று பணக்காரனாவதற்காக, சூதாட்டத்தில் பெரும் பந்தயம் கட்டி ஆடி விடுவான். சுயராஜ்யம் அடைவதற்கு சர்க்கா தான் சிறந்த வழி என்பதை நம் நாட்டவர்கள் நம்புவார்களே யானால், அவர்களுடைய கருத்துப்படி சுயராஜ்யம் என்பது அடைய வேண்டிய ஒன்று என்பதை நம் நாட்டவர்கள் நம்புவார்களேயானால், அவர்களுடைய கருத்துப்படி, சுயராஜ்யம் என்பது புறத்தே அடைய வேண்டிய ஒன்று என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். ஆகவே நம் குணாதிசயங்களிலும், சமுதாய வழக்கங்களிலும் உள்ள குறைபாடுகள் நாட்டின் முன்னேற்றத்துக்கு உண்மையான முட்டுக் கட்டைகளாக இருக்க, அவற்றை மூடி மறைத்து விட்டு வீட்டில் நூல் நூற்பதில் மட்டும் கவனம் செலுத்தினால் அதில் ஆச்சரியந் தோன்றாமல், குறை தீர்ந்த உணர்ச்சியே தோன்றுகிறது.

நம்முடைய விவசாயிகள் ஓய்வு நேரங்களைப் பயனுள்ள வழிகளிற் செலவழிக்கத் தொடங்கியவுடன் சுயராஜ்யத்திற்குள்ள பல முட்டுக் கட்டைகளில் ஒன்றைப் போக்கிவிடலாம் என்பதை நாம் ஏற்றுக் கொள்வோமாக. அந்த நிலையில் அந்த ஓய்வு நேரத்தை எவ்வாறு சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும் என்பது பற்றி நம் தலைவர்கள் ஆலோசிக்க வேண்டும். அந்த வழிகளைப் பற்றி ஆராயும் பொழுது விவசாயத்தையே இன்னும் தீவிரமாகச் செய்தால் நல்ல தல்லவா என்பதையும் ஆராய வேண்டும்.

நான் வறுமையில் வாடுவதாக வைத்துக்கொள்வோம். நல்ல முறையில் என் நலம் நாடும் ஒருவர் எனக்கு உபதேசஞ் செய்யத் தொடங்கும்பொழுது நீண்ட நாட்களாக நான் இலக்கிய உலகில் தொடர்பு கொண்டிருப்பதைக் கவனத்தில் வைத்துக்கொண்டு அறவுரை கூற வேண்டும். என் நலம் நாடும் அவர் எவ்வளவுதான் இலக்

கியத்தைப் பழிப்பவராயினும், எவ்வாறு பொருள் தேட வேண்டும் என்று எனக்கு உபதேசஞ் செய்யும் பொழுது இலக்கியத்துடன் எனக்குள்ள தொடர்பை மறந்துவிடக் கூடாது. மாணவர்கள் வாழும் இடங்களில் டீக் கடை வைத்தால் 75 சத வீதம் இலாபம் கிடைக்கும் என்று அவர் கணக்குப் போட்டுக் காட்டலாம். அவ்வாறு நான் டீக் கடை வைத்து மோசமான வறுமையுற்று அழிந்தால்,, அதனால், வெற்றிகரமாக டீ வியாபாரம் செய்பவன் அறிவைவிட என்னுடைய அறிவு குறைந்தது என்ற கருத்தில்லை. அதன் எதிராக, என் மனம் வேறு வகையில் ஈடுபட்டுள்ளது என்பதையே அது குறிக்கிறது.

ஆகவே, என் நலம் நாடுபவர் நாள் துப்பறியும் நவீனங்களோ அன்றிப் பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்கட்குக் குறிப்புரையோ எழுதத் தொடங்க வேண்டும் என்று கூறினால், சூழ்நிலையின் நெருக்கடி காரணமாக நான் அந்த புத்திமதியைக் கேட்டு அதன்படி நடக்கலாம். அது அதிக ஆபத்தில்லாத வழியாகவும் அமையலாம். அந்த நிலையில் கூட இலாபம் வருமா என்பது சந்தேகத்துக்குரியது தான். என்றாலும் ஓர் எழுத்தாளன், தன் மனத்தைக் கவிதையிலிருந்து புதினத்துக்குத் திருப்புவது அவ்வளவு கடினமன்று.

ஒரு விவசாயி பல்லாண்டுகளாக உடம்பாலும், மனத்தாலும் பழகியுள்ள பழக்கத்தை ஒரே வினாடியில் ஒதுக்கி விடுவதன் மூலம் அவனைச் செல்வமுடையவனாகவும், மகிழ்ச்சி யுடையவனாகவும் ஆக்கி விடலாம் என முயல்வது நடைபெறக்கூடிய காரியமன்று. நான் முன்னரே குறிப்பிட்டப்படி, மனத்தைப் பயன்படுத்தாதவர்கள் பழக்க வழக்கங்கட்கு அடிமையாகிச் சிறிதளவு மாற்றத்தையும் விரும்பாதவர்களாக ஆகி விடுகின்றனர். ஏதோ ஒரு குறிப்பிட்ட வேலைத் திட்டத்தில் வைத்துள்ள அதிகப் பற்றுக் காரணமாக இந்த மனோ தத்துவ உண்மையை ஒதுக்கி விட்டால் அதன் பயனாக மனோதத்துவம் கவலைப்படுவதில்லை. அதற்குப் பதிலாக அந்தத் திட்டந்தான் திண்டாட நேரிடும்.

மற்றைய விவசாய நாடுகளில் விவசாய முறையைச் சீர்திருத்துவதற்குரிய முயற்சிகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பெற்று வருகின்றன. விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்தி நம்முடைய நாட்டு விளைச்சலைப் போல் இரண்டு பங்கு அல்லது நான்கு பங்கு விளையுமாறு செய்கிறார்கள். அறிவுத் துறை எளிமையானதன்று; எனினும் அது ஒன்றுதான் உண்மையான முறை. விவசாயி தன்னுடைய தொழிலில் முழுக் கவனத்தையும் செலுத்தி அதனைச்

சீர்ப்படுத்த வேண்டும் என்பன்பதற்குப் பதிலாக, அவனை சர்க்காச் சக்கரத்தைச் சுற்றுமாறு கூறுவது நம்முடைய வன்மைக் குறைவையே காட்டுகிறது. அவனைச் சோம்பேறி என்று ஏசுகின்ற நாம், உண்மையில் அவனுக்குத் தரும் அறவுரை, நம்முடைய மனத்தைச் சூழ்ந்துள்ள சோம்பரையே எடுத்துக் காட்டுகிறது.

வீட்டிலேயே நூற்று மிகுதியாகத் தயாரிக்கப்படும் நூல், பொருளாதார முறையில் தொழிலாளிக்கு இலாபந் தரும் என்ற கருத்தில் தான் இதுவரைப் பேசியுள்ளேன். ஆனால் இது வெறும் சங்கற்பமே தவிர வேறு அன்று. இந்த விஷயம் பற்றி நிபுணர்கள் தம்முடைய சந்தேகத்தை அறிவித்துள்ளனர். நிபுணத்துவம் இல்லாத என் போன்றவர்கள் அத்தகைய போராட்டத்தில் சிக்கிக் கொள்ளாமல் இருப்பது நலம். சுயராஜ்யம், சர்க்கா என்ற இவை இரண்டின் இடையே ஏற்பட்டுள்ள குழப்பம், நாட்டில் சுய ராஜ்யம் என்றால் என்ன என்பது பற்றியே ஒரு குழப்பமான சூழ்நிலையை உண்டாக்கியுள்ளது.

நாட்டின் நலன் என்றால் என்ன என்பது பற்றித் தெளிவானதும் விரிவானதுமான ஒரு கருத்து நம்மிடம் இருக்க வேண்டும். அரைகுறையான காட்சி நம் சக்தியையே வளர்ச்சி குன்றச் செய்து விடுகிறது. எவ்வளவுக் கெவ்வளவு நம் மனத்தைக் குறைவான அளவுக்கு வேலை வாங்குகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு நம் மனம் சோம்பித் திரிகிறது. நம்முடைய தேசீய முன்னேற்றத்தில் சர்க்காவுக்கு முதலிடம் தருவது நம்முடைய அறிவையே குறைத்து மதிப்பதாகும். நாட்டின் நலமாகிய பிம்பத்தை விரிவான முறையில் எடுத்துக் காட்டி அதன் எல்லாப் பகுதிகளையும் நாம் காணுமாறு செய்வதுதான், மக்களுடைய சக்தி என்று கூறப்படும் வலிமை பொருந்திய ஆறு ஓடிப் பாய்வதற்கு ஏதுவாகும். அந்தச் சக்தியாகிய ஆற்றுக்கு வளமூட்டும் முறையில் நம் உணர்ச்சிகளும், அறிவும் துணை செய்யும். அந்த பிம்பம் அற்பத்தனமானதாக ஆகி விட்டால், நம் உழைப்பும் அற்பமாகி விடும். உலகத்தில் மிகக் கடினமான தியாகத்தை நாட்டுக்கும், மானிடத்துக்கும் செய்த பெரியவர்கள், மிகப் பெரிய ஒளி பொருந்திய ஒரு காட்சியால் ஓயாமல் உந்தப்பெற்றனர். தன்னலத்தைத் தியாகஞ் செய்யும் நிகழ்ச்சிகட்குப் பெருங் காட்சிகள் என்னும் உந்தல்கள் வேண்டும். அந்தக் காட்சிகளை எத்தனை வண்டி நூலினாலும் உண்டாக்க முடியாது. கணக்குப் போடும் அறிவைக் கொண்டு எத்தனை புள்ளி விவரக் கணக்கை எடுத்துக் காட்டினாலும் மனிதனுடைய

சக்தியைத் தூண்ட முடியாது. அந்தச் சக்தியே எதிர்ப்பு, தோல்வி என்பவை பற்றிக் கவலைப்படாமல், எவ்வளவு துன்பத்தையும் அவன் சகித்துக் கொள்ளுமாறும், சாவைக்கூட ஏற்றுக் கொள்ளுமாறும் செய்கிறது,

தாய் தந்தையர் பேசிக் கொள்ளும் பேச்சில் வடிவம் உள்ள காரணத்தால் அந்த மொழியின் ரூபத்தையே குழந்தை காண முடிகிறது. ஆதலின் அக் குழந்தை மகிழ்ச்சியுடன் மொழியை கற்றுக் கொள்கிறது. அதனை முற்றிலும் விளங்கிக் கொள்ளும் ஆற்றல் இல்லாவிட்டாலும் இந்த ரூபத்தை முழுவதும் காண்பதால் அதனால் ஈர்க்கப்பெற்றுக் குழந்தை முழு ஆர்வத்துடன் அதனைக் கற்க முற்படுகிறது. மொழியின் இந்த நிறைந்த அழகு இல்லாமல் வெறும் இலக்கணம் மட்டும் இருக்குமேயானால் தாய் மொழியிடத்து எவ்விதப் பற்றும் இல்லாமற் போவதுடன், அதனைப் பிரம்பின் துணை கொண்டுதான் குழந்தைக்குக் கற்பிக்க முடியும். அதனை கற்பிப்பதற்குரிய காலமும் மிக அதிகமாக நீண்டு விடும்.

இந்த நாடு முழு மூச்சுடன் சுயராஜ்யத்திற்கு உழைக்க வேண்டுமாயின், இந்த ஒரு காரணத்திற்காகவேனும், சுயராஜ்யத்தின் முழு ரூபத்தையும் நாட்டு மக்களுக்குக் காட்ட வேண்டுமே தவிர அதன் ஒரு சிறு உறுப்பை மட்டும் காட்டுவதிற் பயனில்லை என்று கூறுகிறேன். அந்த ரூபம் அளவால் மிகப் பெரிதாக இருக்கவேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை என்றாலும், உண்மையானதாகவும், முழு வடிவம் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும். உயிர் உள்ள பொருள்கள் ஒவ்வொன்றும், அதனுடைய வளர்ச்சிப் பருவத்தின் ஒவ்வொரு நிலையிலும், உயிருள்ள முழுத் தன்மை பெற்றே விளங்குகிறது. குழந்தை பிறக்கும் பொழுது வெறும் கட்டை விரலாகப் பிறந்து, மெள்ள மெள்ளக் கால் வளர்ந்து பதினைந்து அல்லது இருபது ஆண்டுகட்குப் பிறகு முழு வடிவம் பெற்ற மனிதனாக ஆவதில்லை. குழந்தையாகப் பிறக்கும் பொழுதே முழு வளர்ச்சி பெற்ற மனிதனுடைய வடிவைக் காண முடிகிறது. அதனால்தான் குழந்தையைக் காண்பதில் ஒரு மகிழ்ச்சி தோன்றி, அந்த மகிழ்ச்சியின் காரணமாக அதனை வளர்த்துப் பெரிய ஆளாக ஆக்கும் பொறுப்பைப் பெற்றோர் ஏற்றுக் கொள்கின்றனர். ஓர் உறுப்பை மட்டும் பல நாட்களுக்கு வளர்க்க வேண்டிய பொறுப்பை அவர்கள் மேல் சுமத்தினால், அந்த உறுப்பை ஒரு முழு மனிதனாக ஆக்கும் பொறுப்பு சகிக்க முடியாததாகி விடும்.

வீட்டில் நூற்கப்படும் நூல் வடிவாகவே சுயராஜ்யம் நமக்கு வருகிறதென்றால், அதுவும் முன்னே கூறியபடி சகிக்க முடியாத தாகிவிடும். மகாத்மா காந்தியைப்[5] போன்ற ஒருவர், அவருடைய தனிப்பட்ட சிறப்பில் மக்கள் எல்லையற்ற நம்பிக்கை கொண்டுள்ள காரணத்தால், நம்முடைய நாட்டு மக்களில் ஒரு சிலரை இந்தச் சுவை யற்ற நிலைமையை ஒப்புக் கொள்ளுமாறு செய்ய முடியும் என்பதை ஒருவாறு ஊகிக்கலாம். அந்த நிலை என்னவென்றால் அவருக்குக் கீழ்ப்படிவதே ஒரு பயனாகும் என்று நினைப்பதுதான். என்றாலும் என்னைப் பொறுத்தவரை இத்தகைய ஒரு மனநிலை சுய ராஜ்யம் பெறுவதற்கு ஏற்ற தன்று என்றே கருதுகிறேன்.

வீட்டில் நூற்கும் நூலுடன் நின்று விடாமல், சுயராஜ்யத்தின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலையங்களை நாடு முழுவதிலும் நிறுவுவது அவசியமென நான் நம்புகிறேன். மக்கள் நலம் என்பது, பலவும் கூடிய ஒரு கலப்படமாகும். அவற்றுள் ஒன்றை மட்டும் எடுத்துக் கொள்வதால் நலன் விளையாது. சுகாதாரம், பொழுது போக்கு, உடலுக்கும் மனத்துக்கும் வேண்டிய செயல்கள் ஆகிய அனைத்தும் ஒன்றாக இணைக்கப்பட்ட கூட்டுறவே அப்படத்தை முழுத் தன்மையுடைய தாக்குகிறது. முழுத் தன்மை பெற்ற அந்தச் சமுதாய நலப் படத்தை நம் கண் முன் காண விரும்பு கிறோம். எவ்வளவு தூண்டுதலையும்விட அதிகமாக அது நமக்கு அறிவூட்டும். நாட்டின் பல பாகங்களிலும் பல்வேறு வகைப்பட்ட புத்துணர்ச்சி பெற்ற வாழ்க்கை முறைகளை நாம் வைத்திருக்க வேண்டும். இவ்வா றல்லாமல், சர்க்காவைச் சுழற்றி, வீட்டில் நூலை நூற்று, ஆழ்ந்த முறையில் விவாதங்களை நடத்திவிட்டால் மட்டும் சுயராஜ்யத்தின் ஆழ்ந்த பொருள் யாது என்பதை நாம் அறிந்துகொள்ள முடியாது. நாட்டின் எங்காவது ஒரு மூலையில் இந்தியா முழுவதும் வடிவம் பெற்று விளங்குமாறு செய்தால், அப் பொழுதுதான் நேரடி அனுபவத்தால் சுயமாக நிச்சயிக்கும் மதிப்பை அறிய முடியும். இந்தியாவிலுள்ள எந்த ஒரு கிராமமாவது தன் சுய முயற்சியால் புத்துயிர் பெற்று வாழ முற்பட்டால் இந்தப் பிரச் னைக்குத் தீர்வு காணும் பாதையில் ஓர் அடி எடுத்து வைத்ததாக முடியும்.

இந்தியாவுக்குத் தேவையான பல திறப்பட்ட ஆக்க முயற்சி களை மேற்கொள்வதானால் அதற்கு நம்முடைய சக்தி முழுமையும் தேவைப்படும். அந்தச் சக்தியை, ஒரே இலக்கை நோக்கிச் செல்லும் பல திறப்பட்ட பாதைகளிலும் செலவு செய்யும்பொழுதுதான் நாம்

சுய நிறைவை அடைய முடியும். நம்மைச் சுற்றி அடுத்துள்ள இடங்களில்தான் வேலையைத் தொடங்க வேண்டும். அதன் பிறகே அந்த வேலை பரவலாக்கப்பட வேண்டும். தொடக்கத்தில் சிறிய அளவில் செய்யப்படும் வேலையை நாம் எள்ளி நகையாடுவதாக இருப்பின் கீதையின் சொற்களை நினைவில் கொள்ள வேண்டும். 'தர்மம் சிறிதளவு தொட்டவுடன் பெரியதாகிய அச்சமும் நீங்கி விடுகிறது' என்பனவே அச் சொற்கள். மற்றொரு வகையாகக் கூறினல் சத்தியத்தின் சக்தியை அதனுடைய பரிமாணத்தைக் கொண்டு அளவிடாமல் அதன் இயல்பைக்கொண்டே காண வேண்டும்.

கூட்டுறவு முறையில் சுய நிர்ணய முயற்சியை இவ்வாறு பரப்பினல், இதன் பயனுக நூற்படும் பெருமை, கர்வம் ஆகியவற்றின் அகமுக அனுபவம் சுயராஜ்யத்திற்கு வலுவான அஸ்திவாரமாகும். இந்த அனுபவம் அகத்தும் புறத்தும் இல்லாமற் போவது நம்முடைய உணவு, சுகாதாரம், கல்வி, அறிவு, இன்பம் ஆகியவற்றின் இன்மை அல்லது வறுமைக்குக் காரணமாகிறது. இந்த ஆன்மீக வறுமையையும் மீறிக் கொண்டு சுயராஜ்யம் உண்மையில் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது பைத்தியக்காரத்தனம்.

நூல் நூற்பதை ஆக்க வேலை என்று கூறுவது உண்மையன்று. மரத்தால் ஆகிய சக்கரத்தைச் சுற்றுவதால் மனிதனும்கூட அந்தச் சக்கரத்தின் இணைப்பாக, மற்றொரு யந்திரமாக ஆகி விடுகிறுன். மனம் என்ற ஒன்றில்லாத காரணத்தால் யந்திரம் தனக்குத் தானே போதுமானதாக, தன்னையன்றி மற்றொன்றை அறியாததாக இருக்கிறது. சர்க்காவோடு சேர்ந்த மனிதனும் இதே ரகத்தில்தான் இருக்கிறுன். அவன் நூற்கும் நூல், பிறருடன் கொள்ள வேண்டிய உறவு முறையைப் பின்னுவதற்குப் பயன்படுவதில்லை. அவனுடைய அண்டையிலுள்ளவர்களைப்பற்றிக்கூட அவன் கவலைப்பட வேண்டியதில்லை; பட்டுப் பூச்சி கூட்டினுள் அடைப்பட்டிருப்பது போல அவன் தன்னைச் சுற்றியே தன் செயல்களைப் படைத்துக் கொள்கிறுன். வெறும் யந்திரமாகத் தன்னை ஆக்கிக்கொள்பவன், தனியனுய், பிறர் துணை யற்றவனுய் நண்பர்கள் இல்லாதவனுய் இருக்க வேண்டியதுதான். ஒரு காங்கிரஸ் உறுப்பினர் நூற்புப் பணியில் ஈடுபட்டிருக்கும்பொழுது, தம்முடைய நாடு பொருளாதார வளத்தில் நீச்சல் அடிப்பதாகக் கனவு காணலாம்; ஆனல் அத்தகைய கனவுக்கு வேறு தூண்டல்கள் இருக்க வேண்டும்.

இதன் எதிராக, தன்னுடைய கிராமத்தில் பரவியுள்ள தொற்று நோயை ஒழிக்கப் பாடுபடுபவன், தன்னந் தனியனாய்ப் பாடுபட்டாலுங்கூட, ஒவ்வொரு நிலையிலும், தன்னைப் பிறருக் குரியவனாக ஆக்கிக்கொள்கிறான். பொதுநலத் தொண்டின் மூலம் கிராமம் முழுவதையும் தன்னிற் காண்கிறான். அவனுடைய பணி இன்பமும் ஆக்கமும் நிறைந்த பணியாகும். சுயராஜ்யத்திற்கு உழைப்பது இங்குதான் உண்மையில் தொடங்குகிறது. மற்றவர்கள் அவனுடன் சேரும்பொழுது அந்தக் கிராமம் முழுவதும் புத் துணர்ச்சி, நிறைவு ஆகிய பாதைகளில் அடியெடுத்து வைக்கிறது. இதுதான் சுயராஜ்யம்; இதனைப் பரிமாணத்தால் அளவிடாமல் உண்மையாகிய அளவு கொண்டு அளத்தல் வேண்டும்.

எந்தக் கிராமத்தில் உள்ள மக்கள் ஒன்றாகக் கூடி ஒரு சமுதாயமாக அமைந்து, தம்முடைய சுகாதாரம், கல்வி, பொருளாதார வாழ்வு என்பவற்றுடன் நில்லாமல், பொழுது போக்கு ஆகியவற்றையும் வளர்க்கப் பாடுபடுகிறார்களோ அந்தக் கிராமத்தில்தான் இந்தியா முழுவதற்கும் உரிய சுயராஜ்யம் ஆரம்பிக்கும். அந்த சுயராஜ்யம் பின்னர்த் தன் சொந்த சக்தியாலேயே பரவும். அதனுடைய உயிருள்ள வளர்ச்சியின் அகத்தே தோன்றும் உயிர்ச் செயலால், அதனுடைய பரவல் சக்தி உந்தப்பெறுமே தவிரச் சர்க்காவின் யந்திரச் சுற்றல் மூலம் அன்று.

—1925.

தன்னையே மறுக்கும் உரிமையை எனக்கு நல்கியதால்,
எனது ஆண்டவனிடம் நான் அன்பு செய்ய முடிகிறது.

—ரவீந்திரநாத் தாகூர்.

# 14. கவிஞன் நிறுவிய பள்ளிக்கூடம்

என்னை நோக்கிக் கேட்கப்பெறும் கேள்விகளிலிருந்து ஒன்று தெரிந்து கொண்டேன். என்னைப்போல் அவசரப்பட்டு ஒரு கவிஞன் பள்ளிக்கூடம் ஒன்று நிறுவி விட்டால் அவன் பொதுமக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டிய நிலையிலுள்ளான் என்பதே அது. ஓயாது நூற்றுக் கொண்டே இருக்கும் பட்டுப் புழுவும், காற்றில் மிதந்து கொண்டே இருக்கும் பட்டுப் பூச்சியும் வாழ்வின் முரண் பட்ட இரண்டு நிலைகளைக் காட்டி நிற்கின்றன. இயற்கையின் கணக்கெழுதும் இலாகாவில், பட்டுப் புழு செய்யும் வேலைக்கு ஏற்ப, ஏதோ ஒரு முறையில் வரவு வைக்கப்படும் என்று தெரிகிறது. ஆனால், பட்டுப் பூச்சி பொறுப்பற்றுத் திரிகிறது. அதனிடம் இருக்கக் கூடிய பொருளுக்குக் கனமோ, பயனோ இல்லைபோல் தோன்றுகிறது. ஆதலால்தான் நடனமாடும் இரண்டு சிறகுகளில் அது தன் உடம்பைத் தூக்கிக் கொண்டு சுற்றி வருகிறது. ஒருவேளை நிறங் களின் தேவதை, கணக்கெழுதும் வேலை எதுவும் இல்லாமை யினாலும், காலத்தைப் பாழாக்கும் கலையை நன்கு கற்றிருப்ப தாலும், இந்தப் பட்டுப் பூச்சியைக் கண்டு மகிழ்ச்சியடைகிறது போலும்!

கவிஞனை அந்தப் பைத்தியக்காரப் பட்டுப் பூச்சிக்கு ஒப்பிடலாம். ஆக்கல் தொழிலின் பல்வேறு இன்பமான நிறங்களை அவனும் கவிதையில் மொழி பெயர்க்க முயல்கிறான். அப்படியானால் அவன் ஏன் கடமை என்னும் விலங்கில் சிக்க வேண்டும்? ஒருவன் உற்பத்தி செய்யும் பொருளின் மதிப்பை அது சம்பாதிக்கும் இலாபத்திலிருந்தே கணக்கிடும் மக்களிடம் அவன் ஏன் கணக்குச் சொல்ல வேண்டும்?

குளிர் காலத்தில்[1] நல்ல வெய்யில் காயும் ஒருநாள் நீண்டு வளர்ந்த சால் மரங்களின் அமைதியான கிளைகளின் கதகதப்பான நிழலில் சில மாணாக்கர்களை ஒன்று கூட்டியபொழுது, சொற்கள் மூலம் அல்லாத ஒரு கவிதையை, இந்தக் கவிஞன் புனைய ஆரம் பித்தான் என்பதே அவனுடைய விடை.

உளப் பகுப்புப் (Psycho - analysis) பற்றி ஒவ்வொருவரும் சிந்தித்துக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில், அறிஞர் சிலர், 'அமுக்கப்பட்ட விடுதலை புணர்ச்சி' என்ற மறைந்துள்ள மன நிலையிலும், தன்னை அறியும் அறிவு ஏமாற்றப்பட்ட மன நிலையிலுந் தான் கவிதையின் இரகஸ்யமான ஊற்று இருக்கிறதென்று கூறு

கின்றனர். இந்த ஒரு நிகழ்ச்சியில் மட்டும் அவர்கள் சரியாகக் கூறிவிட்டனர். மிகப் பழங்காலத்தில், என்னிடமிருந்த குழந்தைத் தனத்தின் நிழல், மறுபடியும் என்னிடம் தலைக் காட்டிற்று; பிற குழந்தைகளின் வாழ்வில் என்னுடைய குழந்தைத் தன்மை மறுபடியும் புத்துயிர் பெற்று வாழ விரும்பியது. கிடைககக் கூடிய பொருள்களைக் கொண்டு, வழக்கமாகப் பயன்படும் கருவிகள், குறிப்பிட்ட அளவுகள், நிலையான மதிப்புக்கள் ஆகியவை இல்லாமல், இழக்கப் பட்ட சுவர்க்கத்தை மீட்டும் தயாரிக்க விரும்பியது.

பழங்கால இந்தியக் கவிஞனாகிய காளிதாசனை[2] இது என் நினைவுக்குக் கொண்டு வருகிறது. காளிதாசன் பிறந்த ஊரை அறிஞர்கள் மகிழ்ச்சி அடையக்கூடிய முறையில் அறிய வாய்ப்பு ஒன்றுமில்லை. எனவே இதில் முடிவிலாத தர்க்கத்திற்கு இட முண்டு. என்னுடைய புலமை ஆழமானது அன்று; எனினும் அவன் அழகிய காஷ்மீரத்தில் பிறந்தான் என்று எங்கோ படித்ததாக நினைவு. அதிலிருந்து அவன் எங்குப் பிறந்தான் என்பது பற்றிய ஆராய்ச்சியையே படிக்காமல் விட்டு விட்டேன். ஏனென்றால், வேறு யாரேனும் ஒருவர், அவன் வேறு ஓர் ஊரில்தான் பிறந்தான் என்று இதேபோல நிறைவைத் தரக்கூடிய முறையில் கூறி விடுவாரோ என்ற அச்சத்தால்தான் படிக்கவில்லை. காளிதாசன் காஷ்மீரத்தில் பிறப்பதுதான் சரியானது. கல்கத்தாவிற் பிறந்த காரணத்தால் நான் அவனைக் கண்டு பொறுமை அடைகிறேன்.

என்றாலும், உளப் பகுப்பு இயல் ஏமாற்றமடைய வேண்டிய தில்லை; ஏனென்றால், காஷ்மீரத்தில் பிறந்த காளிதாசன் சமவெளிக்குத்[3] தேசப் பிரஷ்டஞ் செய்யப்பட்டான். "முன்னர் இருந்த மகிழ்ச்சி தரும் பொருள்களை" நினைப்பதாகிய துன்ப இசையையே "மேக தூதம்"[4] தன்னுள் நிறைத்துக் கொண்டிருக் கிறது. இந்தக் கவிதையில், காதலனுடைய கற்பனை, குன்றாத அழகுடைய சுவர்க்கத்தில் வாழும் காதலியைத் தேடிச் செல்கையில் மலை, அருவி, காடு ஆகிய ஒவ்வொன்றின் அழகையும் தங்கி, கண்டு, இன்புற்றுச் செல்கிறது. அந்தக் கற்பனை, ஜூன் மாதத்திய மழை நிறைந்த கரிய மேகத்தை வரவேற்கும் கிராமப் பெண்களின் நன்றி நிறைந்த பெரிய கண்களைக் கண்டது. ஆல மரத்தின் அடியில் கிராமத்தைச் சேர்ந்த முதியவன் ஒருவன், வெள்ளை மனம் படைத்தவர்கள், துயரத்திலும் இன்பத்திலும் பாடும் காதற் கவிதை ஒன்றைப் பாடியதையும் அக் கற்பனை கேட்டு ரசித்தது. கல் மனம் படைத்த நகரத்தில் வாழும் கைதி, மனத்தில் ஏற்படும்

மகிழ்ச்சியால் துள்ளுகிருன். இந்தக் கவிதையில் அவனும் கற்பனை யாத்திரை ஒன்றை மேற்கொண்டு அந்தக் காதலனுடன் சேர்ந்து மலைக்கு மலை தாவிச் சென்று, ஒவ்வொரு கிளைப் பாதையிலும் சுவர்க்கத்திலிருந்து தள்ளப்பட்ட காதலர்கள் தெரிந்து கொள்வதற்காக ஏற்பட்ட கைகாட்டிகளைக் கண்டு ஆனந்திக்கிருன்.

வீட்டில் இருந்து பிரிந்திருக்கும் துயரத்தைமட்டும் கவிஞன் அனுபவிக்கவில்லை. அவன் துயரம் இன்னும் ஆழமானது. அது ஆன்மாவின் துயரமாகும். காளிதாசனுடைய நூல்கள் அனைத்திலும் அன்று நிலைத்திருந்த அரச அரண்மனைகளின் வாழ்வில் காணப்பெற்ற குறுகிய மனப்பான்மை, எல்லை யற்ற ஆடம்பர வாழ்க்கை, தன் னடக்க மில்லா வாழ்க்கை ஆகியவற்றைக் காண்கிருேம். எனினும், இவற்றினூடே ஒருவகையான ஊதாரி நாகரிகத்தின் வளமான பண்பாடும் விளங்கித் தெரிகின்றது.

கவிஞன், அரண்மனையில் வாழ்ந்துங்கூட, நாடு கடத்தப்பட்ட வாழ்க்கையையே வாழ்ந்ததுபோலத் தெரிகிறது. இந்த நாடு கடந்த வாழ்க்கையை அவன்மட்டு மல்லாமல், அவன் பிறந்த அந்தச் சமுதாயம் முழுவதும்கூட இதே முறையில் வாழ்ந்ததாகத் தெரிகிறது. அந்தச் சமுதாயம் சுகத்தையும் செல்வத்தையும் வேண்டுமான அளவு சேகரித்து விட்டாலும் அனைத் துலகத்தோடு எல்லாவிதத் தொடர்பையும் இழந்து விட்டது. கவிஞனுடைய நாடகங்களிலும், கவிதைகளிலும் ஓயாது வெளிப்பட்ட அதனுடைய இலட்சிய ஆசை எந்தச் சாயலைக் கொண்டு தோன்றியது? அந்தச் சாயல், பழங்கால இந்தியாவின் சமுதாயம் சென்று ஒடுங்கியதும், காட்டில் உள்ளதுமான தபோவனமாகும். வடமொழி இலக்கியம் கற்றவர்கள், ஆதி மனிதர் பண்பாட்டில் வாழும் மக்களின் குடியேற்ற இடமன்று தபோவனம் என்பதை அறிய முடியும். தபோவனத்தில் வாழ்ந்தவர்கள் சத்திய ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்கள்; எளிய வாழ்க்கையை வேண்டுமென்றே மேற்கொண்டவர்கள். ஆனல், அதே நேரத்தில் உடலைப் போட்டு வருத்திக் கொள்ளாதவர்கள் அவர்கள் பிரம்மச்சரியத்தை வற்புறுத்தாமல், உலக வாழ்க்கையில் ஈடுபட்டவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். அவர்களுடைய இலட்சியங்களைப் பற்றிச் சுருக்கமாக உபநிஷதம் இவ்வாறு கூறுகிறது :—

“எங்கும் நிறைந்த பிரம்மத்தை உணர்ந்து
அதனுடன் ஐக்கியப்பட்டிருத்தலின், இந்த

மனிதர்கள், ஒருமைப்பட்ட மனத்துடன்
எங்கும் நிறைந்த பொருளுடன் ஒன்றி
வாழ்கின்றனர்.''[5]

அவர்கள் மேற்கொண்ட கொள்கை வெறும் எதிர்மறைக் கொள்கையான துறவுக் கொள்கை யன்று. வள மிகுந்த உஜ்ஜயினி நகரத்தில், புகழ் வாய்த்த விக்ரமாதித்தன் காலத்தில் வாழ்ந்த காளிதாசன், உலகாதயப் பொருள்களாலும் அவற்றின் ஓயாத தூண்டுதல்களாலும், அமுக்கப்பெற்று அவஸ்தைப்பட்ட மன முடையவனுய், தபோவனக் காட்சிகளில் மனத்தைச் செலுத்தி ஒளி, வாழ்வு, சுதந்திரம் ஆகியவை நிறைந்த மன உலகில் வாழத் தொடங்கினுன்.

ஆன்மீகத் தேசப் பிரஷ்டத்தை அனுபவித்து, அதன் துன்பங் காரணமாக, நவீன இந்தியாவில் வாழும் கவிஞன் ஒருவன் இத் தகைய காட்சியைப் பெற்ருன் என்ருல் அது காளிதாசனை வேண்டுமென்றே நகல் செய்யும் நோக்கத்தால் அன்று; இவை இரண்டும் எதிர்பாராத நிலையில் ஒன்ருக அடைந்தன. காளிதாச னுடைய காலத்தில்கூட மக்கள் காடுகளில் குடியேறி வாழும் தபோ வன வாழ்க்கையைப் பெரிதும் நம்பினர். அவ்வளவு பிற்காலத்திற் கூடக் காட்டில் வாழும் சமுதாயங்கள் இருந்தன என்றே நம்ப வேண்டியுள்ளது. இந்தச் சமுதாயத்தினர், கொஞ்சங் கொஞ்சமாகத் தற்கொலை செய்துகொள்ளும் நோக்கமுடைய துறவிகளல்லர்; ஆனுல் தம் வாழ்க்கையின் உட்பொருளை ஆராயும் நோக்கமுடைய வர்கள். தபோவனத்தைப்பற்றிக் காளிதாசன் பாடியவுடன், அதைக் கேட்டவர்களின் உயிருள்ள நம்பிக்கைகளை, அப்பாடல் பற்றிக் கொண்டது. ஆனுல் இன்று தபோவனத்தின் கருத்துக்கள் உண்மை இழந்து பொய்யாய்க் கனவாய்ச் சென்று மறைந்து விட்டன; வெறும் பழங் கதைகளாகி விட்டன அவைகள். எனவே இன்று எழும் நவீனக் கவிதைகளில் அவை வெறும் 'இலக்கிய மாகவே' காட்சியளிக்கும். மேலும், நவீன காலத்தில், 'தபோ வனக்' கருத்தை, இக்கால வாழ்க்கையோடு பொருந்தும் முறை யில் மாற்றியமைக்காவிட்டால் அது காலத்தோடு பொருந்தாத தாய்த் தனித்து நிற்கும். அதனுல்தான் இன்றையக் கவிஞன் இக் காலத்துக்குப் பொருந்தும் மொழியில் கவிதை புனைய வேண்டி யுள்ளது. ஆனுல், அந்த வரலாற்றைக் கொஞ்சம் விரிவாகக் கூற வேண்டும்.

நாகரிக மனிதன் அவனுடைய விதிப்படியான வாழ்க்கை விட்டத்திலிருந்து வெகு தூரம் வந்து விட்டான். தேனீக்களைப் போல, தேன் கூட்டு உலக வாழ்க்கைக்கு ஏற்ற முறையில், சில பழக்கங்களை மெள்ள மெள்ள ஏற்படுத்தி அவற்றை வலுப்படுத்திக் கொண்டான். நவீன மனிதர்கள், உலக வெறுப்படைந்து, சூழ்நிலையை வெறுத்துப் புரட்சி செய்ய விரும்பும் நிலையைக் காண்கிறோம். தற்பொழுது நிலைபெற்றிருக்கும் தேன்கூட்டு அமைப்பின் மேல்கொண்ட வெறுப்பால், சமுதாயப் புரட்சிகள் தற்கொலைக்கு ஒப்பான வேகத்துடன் திணிக்கப்படுகின்றன. இந்தத் தேன் கூட்டு அமைப்பு, நம்முடைய வாழ்வுக் கலைக்குத் தேவையான காட்சியை இல்லாமற் செய்து விடுகிறது. மனிதன் தேனீயின் அச்சில் வார்க்கப்படவில்லை என்பதைத்தான் இவை வலியுறுத்துகின்றன ஆதலால், மனிதன் சமுதாயக் கட்டுக்கு அப்பாற் போக விரும்புவதைத் தடுத்தால், மூர்க்கத்தனத்துடன் சமுதாய எதிர்ப்பாளியாகிறான்.

இன்றுள்ள கலப்படமான நவீன நிலைமையில், யந்திர ஆற்றல் மிக உயர்ந்த முறையில் தொழிற்படுகின்றமையின், அவற்றால் தயாரிக்கப்படும் பொருள்களைத் தன் இயல்புக்கும் தேவைக்கும் ஏற்ப மனிதன் எடுத்துப் பயன்படுத்துவதற்குள், மிகுதியாக அவை தயாராகி விடுகின்றன. உஷ்ணப் பிரதேசங்களில் தோன்றும் தாவரங்களைப் போல் இவ்வாறு அதிகமாக வளர்வது மனிதனுக்கு நெருக்கத்தையே உண்டாக்குகிறது. கூடு மிகவும் எளிதானது. அது ஆகாயத்துடன் எளிதாக உறவு கொண்டுள்ளது. ஆனால் மனிதன் செயற்கையாகச் செய்தக் கூண்டு, இன்னும் கலவை முறையில் செய்யப் பெற்று, அதிகச் செலவுடன் கூடிய நிலையில் புறத்தே யுள்ள பொருள்களுடன் தொடர்பே இல்லாமல் செய்து விடுகிறது. நவீன மனிதன் மிக வேகமாகச் செயற்கைக் கூண்டைச் செய்து வருகிறான். அந்தக் கூண்டின் மூலை முடுக்குகளுக்குத் தன்னை ஏற்றவனாக்கிக் கொள்வதிலும் அதனுடைய அளவுக் கேற்பத் தன்னளவைச் சரி செய்து கொள்வதிலும் ஈடுபட்டு அவன் அதன் ஒரு பகுதியாகவே ஆகி விடுகிறான்.

இந்தப் பேச்சில் கீழ் நாட்டுப் பாணி அதிகம் இருப்பதாகவே நேயர்கள் கருதலாம். உலகாயதப் பொருள்களுக்காக ஏற்பட்ட செயற்கைப் பசியின் தூண்டுதலினால், எப்பொழுதும் அதி வேகமான வாழ்க்கையில் அவர்கள் நம்பிக்கை வைத்துள்ளார்கள் என அறிகிறேன்." நாகரிகத்தை, அதன் முடிவிலாப் பிரயாணத்தில்

செலுத்தும் சக்தியை உண்டாக்கி முடுக்குவது இதுவே என அவர்கள் கருதுகிறார்கள். எந்த ஒரு பெரிய நாகரிகத்தையும் செலுத்தும் சக்தியாக இது இருந்ததில்லை என நான் தனிப்பட்ட முறையில் கருதுகிறேன். ஆனால், இந்த விஷயத்தை நான் ஏன் தொட்டேனென்றால், வல்லுநர்களும், கல்வித் துறையில் முற்றியவர்களும் மட்டுமே தலையிட வேண்டிய இந்தப் பகுதியில் ஒரு கவிஞன் ஏன் நுழைய வேண்டும் என்பதை விளக்கவே இதனைத் தொட்டேன்.

அன்று பிரிட்டிஷ் இந்தியாவின் தலைநகராக இருந்த கல்கத்தாவில்[6] நான் பிறந்தேன். கிழக் கிந்தியக் கம்பெனியாரின் காலத்தில், என் முன்னோரின் தொடக்க கால அதிர்ஷ்ட அலைகளால் அவர்கள் இங்குக் கொண்டு வரப்பெற்றனர். எங்கள் குடும்ப வாழ்க்கை நியதி, ஹிந்து, முஸ்லீம், பிரிட்டிஷ் ஆகிய மூன்று பண்பாடுகளும் கலந்தே வளர்ந்தது. எங்களுடைய பாட்டனார் காலத்தில் உடை, நடைமுறை, ஓய்வு ஆகியவற்றில் காணப்படும் அதீதம், விக்டோரியா கால நடைமுறையாகச் சித்தரிக்கப்பெற்ற காலம். பழைய கிராம சமுதாயத்தின் பச்சை நிறத்தை, நவீன நகர முன்னேற்ற உணர்ச்சி வென்று அடிமைப்படுத்திய காலத்தில் நான் இந்த உலகிற் பிறந்தேன்.

பழமை முற்றிலும் அடித்து நொறுக்கப்பட்டாலுங் கூட, அந்த அழிவுச் சின்னத்தைச் சுற்றி ஓர் அளவு பழமையின் இயல்பு ஒட்டிக் கொண்டிருந்தது. என் இளமைக் காலத்தில்[7] கழிந்து போன சமுதாயத்தில் இருந்த உபசரிக்குந் தன்மை, அன்பு, எளிய நம்பிக்கை, வாழ்வுக் கீதம் ஆகியவை அழிந்தமைபற்றி என் தமையனார் வருந்திக் கூறியவற்றைக் கேட்டிருக்கிறேன். அவை அனைத்தும் அடிவானத்து அந்தி ஒளியில் தோன்றிய நிழல் போல் மறைந்து விட்டன. எங்கும் நிறைந்த உண்மை என்ன வென்றால், மேனாட்டு வியாபாரிகள் இங்கு வந்து கட்டிய நவீன நகரமேயாகும். புது யுகத்தின் செல்வாக்குப் பல்வேறு முரண்பாடுகளையும் எதிர்த்து நம்முடைய வாழ்வில் புகுந்தது. இந்த நகர வாழ்க்கையே என்னுடைய உலக அனுபவமாக அமைந்திருந்துங்கூட, என்னுள்ளத்தில் உறைந்த நாடு கடத்தப்பட்ட மன நிலையைக் கண்டு நானே வியப்படைந்துள்ளேன்.

நம்முடைய மூதாதையர்களின் மனத்தில் நிறைந்திருந்த குன்றுகள், ஓடும் அருவி, காட்டின் சல சலப்பு, ஆகியவை என் குருதியில் கலந்து என்னை அழைப்பது போன்ற ஓர் எண்ணம்,

என் அக மனத்தில் குடி இருந்து வந்தது. (எல்லையில்லாத நிலம், நீர், காற்று ஆகியவற்றின் வித்தையில் பங்கு கொண்டு விளையாட என்னுள் ஓர் உயிருள்ள நினைவு எப்பொழுதும் வேண்டி நின்றது) நிர்மலமான உச்சி வேளையில், ஆகாயத்தில் சூரிய ஒளியில் உயரத்தில் பறந்து சென்ற கருடனின் குரல் பூமியில் நடந்து செல்லும் ஒற்றையான பையனின் மனத்தில் அந்தக் கருடனுடன் உள்ள தூரத்து உறவை நினைவூட்டியது. என் வீட்டின் புறச் சுவர்களை ஒட்டி வளர்ந்து நின்ற தென்னை மரங்கள், பழங் காலத்தில் இந்தப் பூமியின் மேல் படை எடுத்து வந்த வீரர்கள் கைதாகி நின்று, மரக் கூட்டங்கள் மானிட வர்க்கத்தோடு எப்பொழுதும் தொடர்பு கொண்டிருந்த உண்மையை என்னிடம் பேசின. காடுகளின் அழைப்பைக் கேட்டு நான் புளகாங்கிதமடையுமாறு செய்தன அவைகள். இந்த அழைப்பை ஏற்றுக் கொண்டு பத்து வயதாக இருக்கும்போதே ஹிமாலயத்தின் சாரலில் ஒரு தேவதாரு மரத்தின் அடியில் தன்னந் தனியனாக நிற்கும் பேறு பெற்றேன். வாழ்வில் முதன் முதலில் தோன்றிய 'பீடு' எத்துணை மதிப்பு வாய்ந்தது என்பதையும், அதனுடைய உரம் ஒரே சமயத்தில் கொடுமையையும் பரிவையும் காட்டிற்று என்பதையும் கண்டேன்.

அந்த இளமைக் காலத்தை, என் மனம் முழுவதும் ஆகாயம், ஒளி ஆகியவற்றில் மிதந்து கொண்டு நிற்பது போன்றிருந்த அந்த இளமைக் காலத்தைத் திரும்பிப் பார்க்கும்பொழுது, என்னுடைய இந்தியத் தத்துவம் மனத்தில் ஆழ்ந்த ஒரு நினைவைப் பதித்து விட்டுள்ளது என்பதை நம்பாமல் இருக்க முடியவில்லை. இயற்கையோடு ஒன்றுதல் பெற்றவுடன்தான் நிறைவு ஏற்படும் என்ற உண்மையை அறிவுறுத்துவதே அந்தத் தத்துவம். நம்முடைய விடுதலையை, மனிதன் செய்த உலகத்தில் தேடாமல், அண்டத்தின் ஆழத்தில் தேடிப் பெறுமாறு அது நம்மைத் தூண்டுகிறது. தீ, நீர், மரங்கள் ஆகிய அனைத்திற்கும், இயங்கி வளரும் இயல்புடைய அனைத்திற்கும் நம்முடைய மரியாதையைச் செலுத்துமாறு செய்கிறது அது. அந்த விடுதலையை விரும்பும் நினைவில்தான் இந்தப் பள்ளிக்கூடத்தை நிறுவும் எண்ணம் தோன்றியது. அந்த நினைவு என்னுடைய பிறப்பாகிய தொடுவானத்தையும் கடந்து அப்பால் செல்லுகிறது.

சுதந்தரம் என்ற பொருளில் மட்டும் விடுதலை இருப்பின் அது பயனற்றது. உறவு முறையில் ஏற்படும் ஒன்றல் தன்மையில்தான் முழு விடுதலை இருக்கிறது. அதனை, அறிவதால் மட்டும் அல்லாமல்

வாழ்வதாலும் நாம் உணர்கிறோம். அறிவால் அறியப்படும் பொருள்கள், அறிபவர்களாகிய நம்மிடமிருந்து எல்லை கடந்த தூரத்தில் உள்ளன. ஏனென்றால் அறிவு ஒன்று சேர்ப்பதில்லை. முழுப் பரிவு ஏற்படும்பொழுதுதான் முழு விடுதலையை நாம் பெறுகிறோம்.

பொறிகள் வளர்ச்சி யடையாத நிலையில் உள்ள குழந்தைகள் இந்த உலகுடன் நெருங்கிய தொடர்பு கொள்ள முடிகிறது. இது தான் அவர்கள் முதன் முதலில் பெற்றுள்ள பெரிய பேறுகும். அதனை அப்படியே வேறு கலப்பில்லாமல் அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். விரைவில் தொடர்பு கொள்ளக் கூடிய ஆற்றலை அவர்கள் இழந்துவிடக் கூடாது. நாம் முழுத் தன்மை அடைய வேண்டுமாயின் ஒரே நேரத்தில் காட்டுமிராண்டியாகவும், நாகரிகம் பெற்றவர்களாகவும் இருக்க வேண்டும். நாம் இயற்கையுடன் பழகும்போது இயற்கையாகக் கலந்தும், மனிதர்களுடன் பழகும்போது மனித இயல்புடன் பழகவும் வேண்டும். நான் அடைந்த மன வேதனையின் காரணம் என்னவெனில், கூட்டம் நிறைந்த நகரத்திலும் தனிமையாக வளர்ந்த நான், எங்கும் மனிதர் நிறைந்துள்ளமையின் மானிட வாசனை இல்லாத ஒரு சிறிது ஓய்வையும் பெருமையே யாகும். நகர வாழ்க்கையில் நாடு கடத்தப்பட்ட என் ஆன்மா புதிய தொடுவானங்களை நினைத்து அழுதது. ஒரு கவிதையிலிருந்து பிய்த்து எடுக்கப் பெற்ற ஓர் அடியைப் போன்று, எப்பொழுதும் ஒரு நிலைப்படாத ஐய மன நிலையுடன், எந்த அடியுடன் சேர்ந்தால் எதுகை, மோனை தனை முதலியன இருக்குமோ அந்த அடி அழிக்கப்பட்ட நிலையில் இருந்தேன். மற்றக் குழந்தைகளுடன் கூடி எளிதாக இன்பத்துடன் வாழும் ஆற்றல், சுண்ணும்பு, செங்கல் ஆகியவற்றுடன் கூடிய வாழ்க்கையில் ஓயாது உரசுவதால், அழியத் தொடங்கியது. இந்தப் புது வாழ்க்கையில், யந்திரம் போன்ற பழக்கங்களும் மரபை அடிப்படையாகக் கொண்ட கௌரவங்களுமே எஞ்சின.

வழக்கமான முறையில்தான் என்னைப் பள்ளிக்கு அனுப்பினுர்கள் எனினும் நான்பட்ட துன்பம் மற்றக் குழந்தைகள் பட்டதைக் காட்டிலும் அதிகமாகும். என்னிடம் இருந்த நாகரிகம் பெருத பகுதி மிகக் கூர்மையாக இருந்தது. வண்ணம், இசை, வாழ்வின் சலனம் ஆகியவற்றில் அப் பகுதி மிகவும் ஈடுபட்டது. நகரத்தில் வழங்கப்பெற்ற கல்வி உயிருள்ள இந்தத் தத்துவம் பற்றி எதுவும் கவலை எடுத்துக் கொள்ளவில்லை. முத்திரை இடப்பெற்ற

சரக்குகளைச் சந்தையில் விற்பனைக்காக ஏற்றிச் செல்லும் வண்டிகள் தயாராக இருந்தன. நாம் வாழும் உலகத்தில் நிலப் பரப்பும், நீர்ப் பரப்பும் இருப்பது போல மனிதனிடம் நாகரிகப் பகுதியும், நாகரிகம் பெறாத பகுதியும் இருத்தல் வேண்டும் எனினும், அவற்றுள் நீர்ப் பரப்பு மிகுதியாக இருப்பதுபோல, நாகரிகம் பெறாப் பகுதி அதிக மாக இருத்தல் வேண்டும். ஆனால் நாகரிகம் பெறாப் பகுதியை மீட்பதே பள்ளிக்கூடங்களின் குறிக்கோளாக இருந்து வருகிறது. உயிர் ஊட்டந் தருவதாகிய நீர்ப் பகுதியை இவ்வாறு வறண்டு போகுமாறு செய்வது வருந்தத் தக்கது என நகர மக்கள் நினைப்ப தில்லை என்றாலும், என்னுடைய இயல்பு இந் நிலையை ஒருநாளும் ஏற்றுக் கொள்ளவில்லை. என்னிடம் இருந்த நாகரிகம் பெறாப் பகுதி விரைவில் மேலோங்கிப் பதினைந்து ஆண்டுகள் நிரம்பு முன்னரே பள்ளிக்கூடத்தை விட்டு ஓடுமாறு செய்துவிட்டது. அறியாமை என்ற தீவில் தனித்து விடப்பட்டவனாகிய நான், தொடக்கத்தி லிருந்தே என் கல்வியை வளர்த்துக் கொள்வதற்கு என்னுடைய இயல்பூக்கங்களை நம்பி வாழ வேண்டி இருந்தது.

நான் சிறுவனாக இருந்தபொழுது ராபின்சன் குரூசோக் கதை யின் வங்காளி மொழி பெயர்ப்பு ஒன்றைக் காணும் பேறு கிடைத் ததை இப்பொழுது நினைக்க நேரிடுகிறது. குழந்தைகட்காக எழுதப்பெற்ற மிகச் சிறந்த புத்தகங்களில் அதுவும் ஒன்று என இன்றும் நம்புகிறேன். சிறுவனாக இருக்கும்பொழுது, என்னிடத்தி லிருந்தே நான் தப்பித்துச் சென்று இயற்கையோடு இரண்டறக் கலந்துவிட விரும்பியதைப்பற்றி, இதே கட்டுரையில் குறிப்பிட்டுள் ளேன். தான் என்ற பொருளை விரிவுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று, பரம்பரையாக இந்தியாவில் எழுந்த விருப்பத்தின் பயனே இது. ஆகவேதான் இந்தியர்களிடையே காணப்படும் தனிப்பட்ட விருப்பம் இது எனக் கூறியுள்ளேன். இத்தகைய விருப்பம் மிகுதியும் அக்குத் துறையைச் சேர்ந்தது என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால் நம்முடைய பூகோள நிலையில் இது இருந்து தான் தீரும். உஷ்ணப் பிரதேசத்தின் கொடுமைக்குள்ளாகி வாழ் கிறோம் நாம். சாதாரணமாக உயிருடன் உலவுவதற்குக்கூட ஒவ்வொரு வினாடியும் அதிகமாகப் பலி கொடுக்கிறோம். கொடிய உஷ்ணம், சத சதப்பு, பெரிய உயிரிடத்தில் தங்கி அதனையே உண்டு சிறிய உயிர் இனப் பெருக்கம் செய்யும் முறை, ஓயாத முறையில் கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாமலும் எரிச்சலை உண் டாக்கும் பொருள்கள் ஆகிய அனைத்தும் சேர்ந்து விரிவான முறையில் சோதனைகள் நடத்த முடியாதபடி தடை செய்கின்றன.

அதிகப்படியான சக்தி, சண்டையிட்டு வெல்லக் கூடிய தடைகளை விரும்புகிறது. அதனால்தான் இயற்கையின் கொடிய பகுதி பற்றி மேனாட்டு இலக்கியங்கள் அழுத்தம் கொடுத்துப் பேசுகின்றன. அதனை எதிர்த்துப் போராட வேண்டும் என்ற ஒரே நோக்கத்தால் மேனாட்டார் இயற்கையிடத்துப் பகைமையைத் தேடித் திரிகின்றனர். இந்த உலகம் முழுவதையும் வெற்றி கொண்ட பிறகும் அலக்சாந்தர் பிற உலகங்களை வெற்றி கொள்ள விரும்பியதும் இதே காரணத்தால்தான். அதிக ஆற்றல் படைத்த இந்த மக்கள், வழியலா வழிமேற் சென்று, பிறர் நடமாடும் பாதையில் தம் சட்டைகளை விரித்துக் கொண்டு அதன் மேல் அவர்கள் கால் வைத்து நடக்கக் கூடாதென வம்பு செய்தனர். தங்களைப் பிறர் ஊறு செய்தவன் முன், வலுவற்ற பிறருக்குத் துன்பஞ் செய்து அதில் இன்பங் கண்டனர். பறக்கத் தெரிந்த பறவைகள்; கண் காணு இடத்தில் வாழும் அச்சமிகுந்த விலங்குகள்......உயர்ந்த இனத்தாரைக் கூறி அவமானப் படுத்த நான் விரும்பவில்லை.

வாழ்வு முன்னேற வேண்டுமானால் அது தாண்டிச் செல்லக் கூடிய தடைகளும் வேண்டும். பூமியில் தடைப்படுத்தும் சக்தி இல்லையானல் ஓடை கூட, ஓடிப்பாயும் இயல்பை இழந்து விடும். போரிடும் இயல்பு உயிர்த் தத்துவத்தில் இயல்பாய் அமைந்துள்ளது. இசையைச் செம்மையான முறையில் அனுபவிக்க வேண்டுமாயின் கருவியில் நன்கு சுருதி சேர்க்க வேண்டும். மேனாடுகளில் வாழ்வுக் கருவி எதிர்ப்புக்களை எதிர்த்துப் போராடும் முறையில் எல்லாத் தந்திகளிலும் நன்கு சுருதி சேர்க்கப்படுகிறது என்பதறிந்து மகிழ்வோமாக. அண்டத்தின் இருதயத்திலுள்ள ஆக்க சக்தி, தடைகளை முற்றும் நீக்கி விட விரும்பாது. முழுத்தன்மை பற்றிய இலட்சியத்தை அடைய வேண்டி இருத்தலின் போராடும் உணர்வு பெரிதாகக் கருதப் பெறுகிறது.

ராபின்சன் குரூசோ கதையில் இயற்கையோடு ஒன்றுவதால் ஏற்படும் மகிழ்ச்சி வெளிப்பட்டு நிற்கிறது. அங்கே தனித்த மனிதன் தனித்த இயற்கையைச் சந்தித்து, அதனைக் காக்கை பிடித்தும், அதனுடன் ஒத்துழைத்தும், அதன் இரகசியங்களை அறிய முயன்றும், அதன் உதவியை நாடத் தன் முழுச் சக்தியையும் பயன்படுத்துகிறான். அந்தக் கதையைப் படிக்கையில், சிக்கன புத்தியுடைய இயற்கை, மூடி வைத்திருக்கின்ற பொருளை அடைய முயன்ற மனிதன், அதில் பெற்ற வெற்றியால் அடைந்த கர்வத்தில் நான் பங்கு கொள்ளவில்லை. அதன் எதிராக, அவ்வு

டைய அறிவின் துணை கொண்டு இயற்கையுடன் ஒன்றல்தன்மை பெற்றதையே பாராட்டுகிறேன். இதுவே மேனாட்டார் மேற் கொண்டுள்ள வீரத் துணிகரச் செயலாகும்; அச் செயலே பூமி யிடத்து அவர்கள் அன்பு செய்யுமாறு செய்வது.

என் இளமைக் காலத்தில், ஐரோப்பாவில் 'பிரின்டிசி'யிலிருந்து 'கலே' நகரத்துக்கு இரயில் மூலம் செல்ல நேர்ந்தது. மேனாட்டு மானிடன் என்ற காதலன் பல்லாண்டுகளாக அன்பு செய்ததன் பயனாக அந்தக் கண்டம் ஒளியுடன் விளங்கியதை ஆர்வத்துடன் கண்டு கொண்டே சென்றேன். அந்தக் கண்டத்தை வென்று, தனதாக்கி, அவளுடைய மனத்தைத் திறக்கச் செய்து அவள் கருணையைப் பூரணமாகப் பெற்று விட்டான் அவன். கீழை நாட்டுப் பக்தன் ஒருவன் அவனுடைய மன உலகில் சஞ்சரித்துப் பெறும் அனுபவத்தை, அந்த ஆன்ம விசாரணையில் காணும் அனைத் துலக ஆன்மாவைத் தொண்டு செய்யும் மனப்பான்மையுடன் இணைக்க வேண்டும் எனப் பெரிதும் விரும்பினேன்.

ஒருநாள் காலை நேரத்தில் வங்காளத்தில் ஒரு கிராமத்தில் என் பூந்தொட்டியிலிருந்த பூக்களை வெளியே எடுத்து எறிந்தேன். ஒரு பிச்சைக்காரப் பெண்மணி அந்த வாடிய மலர்களைத் தன் புடவைத் தலைப்பில் ஏந்திக் கொண்டு எல்லையற்ற பரிவுடன் தன் முகத்தை அக் காய்ந்த மலர்களில் புதைத்துக் கொண்டு "உள்ளத்தில் நிறைந்துள்ள அன்பே!" என அரற்றினாள். இந்த மலர்களின் வாடிய புறத் தோற்றத்தைக் கிழித்துக் கொண்டு அவற்றின் நித்தி யத்துவத்தைக் கண்டு அதில் தன் காதலனுடைய ஸ்பரிசத்தைக் காணும் தீட்சண்யம் படைத்திருந்தன அவளுடைய கண்கள். இவை அனைத்தும் இருந்துங்கூட வழிபடும் ஆற்றலை அவள் பெற்றி ருக்கவில்லை. மேனாட்டாரைப் போல நேரடியாக ஆண்டவனை வழி படும் ஆற்றலை, பூமிதேவி மலர்களை மலர்வித்து புழுதியில் கூட அழகைப் பரப்ப உதவும் ஆற்றலை அவள் பெறவில்லை. கிழக்கும் மேற்கும், மேரியும் மாத்தாவும் சந்தித்து, சத்திய தரிசனத்தைப் பூரணமாக்க முடியாது என்று கூறுவதை நான் நம்ப மறுக்கிறேன். நம்முடைய லௌகீக வறுமை, காலத்தின் பகைமை ஆகியவற்றை யும் எதிர்த்துக் கொண்டு அந்த விடிவு காலத்தை நோக்கிப் பொறுமையுடன் காத்துக் கொண்டிருக்கிறேன்.

மனிதனும் இயற்கையும் அன்பால் மட்டும் அல்லாமல் நேரடித் தொடர்பாலுங்கூட ஒன்றுபடும் நிலையைத் தடையில்லாமல் கற்பிக் கக் கூடிய ஒரு நிறுவனத்தை நினைக்கும்பொழுது, ராபின்சன்

குரூசோ நினைவுக்கு வருகிறான். அன்பு, செயல் என்ற இரண்டின் மூலந்தான் முழுத் தன்மை பெற்ற அறிவைப் பெற முடியும் என்பதை நாம் நினைவில் பதித்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் அறிவின் பயன் ஞானமே தவிர ஆடம்பர மன்று. இத்தகைய நிறுவனம், ஒருவனை எத்தகைய அவசரத்துக்கும் தேவையான உடல், மன நிலையுடன் இருக்குமாறு செய்வதுடன்மட்டு மல்லாமல், வாழ்வு, உலகம் ஆகிய இரண்டின் அழைப்பை ஏற்றுக் கொள்ளும் நிலையிலும் இருக்கச் செய்யும். இவை இரண்டின் இடையே ஓர் ஒன்றலைக் காணும் ஞானத்தையும் அந்த நிறுவனம் அளிக்கும். அத்தயை நிறுவனத்தில் குழந்தைகட்குக் கற்பிக்கப்படும் முதல் பாடம், கிடைப்பவற்றைக் கொண்டு வேண்டுமானதைத் தயார் செய்து கொள்ளும் பழக்கமாகும். திடீரென்று செய்து முடிக்கும் ஆற்றலைப் பெறுவதற்கேற்ற முறையில், தயாரித்து வைக்கும் பொருள்கள் அங்கு இராமற் செய்யப்படும். இவ்வாறு செய்வது எளிய வாழ்க்கைபற்றி யல்லாமல், ஆக்க வாழ்க்கை பற்றிய பாடமாகும் என்பதைச் சொல்லிவிட விரும்புகிறேன். ஏனென்றால், வாழ்வு பல கோணங்களில் வளர நேரும்போது அதன் மத்தியில் உயிருள்ள ஆளுமை இருப்பின், ஆக்கல் ஒற்றுமையும் அங்கே இருக்கும்; அதனுடைய கனத்தை அதுவே அழகுடன் தாங்கிச் செல்லும்; மேலும் கூட்டத்தை அதிகப் படுத்தும் முறையில் ஓர் எண்ணிக்கை என்ற முறையில் அது இராது.

இத்தகைய ஒரு கனவை எங்கள் பள்ளிக்கூடத்தில் நனவாக்கியுள்ளோம் என்று சொல்ல என் மனம் விரும்புகிறது. இது பற்றிய ஒரு தொடக்கத்தைத்தான் இப்பொழுது செய்துள்ளோம். இயற்கையினிடத்து அன்பு செய்வதன் மூலமாக, அதில் விடுதலை காணும் சந்தர்ப்பங்களைக் குழந்தைகட்கு ஏற்படுத்தியுள்ளோம். ஏனெனில் அன்புதான் சுதந்திரமாகும். எளிதாகக் கிடைக்கக் கூடிய பொருள்களுக்கு நம் ஆன்மாவையே விலையாகக் கொடுக்கும் பைத்தியக்காரத்தனத்தை அது போக்கி விடுகிறது. வறுமையின் ஆன்மீகத்தைப் பெரிதுபடுத்தி, எளிய வாழ்க்கையின் பெருமையைப் பேசுகிறவர்களை நான் அறியேன். வறுமை என்பது வெறும் எதிர்மறையாக இருக்கும்பொழுது அதற்குத் தனி மதிப்புக் கொடுக்க நான் விரும்பவில்லை. எப்பொழுது, மனம் உண்மையின் ஆழ்ந்த அழைப்பை அறியும் கூர்மையான சக்தியைப் பெறுகின்றதோ, அப்பொழுதுதான் பொய்மையின் அழைப்பிலிருந்து அது விடுபட முடியும். எளிதாக மகிழ்சியடையும் சக்தியைப் போக்கி, கேவலம் தட்டுமுட்டுச் சாமன்களிலும், விலை யுயர்ந்த

பொருள்களிலும் மட்டும் படாடோபமான இன்பமடையுமாறு செய்வது கொடுமையானது. ஆடம்பரத்தால் ஏற்படும் மரத்துப் போன தன்மையைத் துறவால் ஏற்படும் மரத்துப் போன தன்மையால் அழிக்க முயல்வது ஒரு தீமையை மற்றொரு தீமையால் அழிக்க முயல்வது போலாகும். இது காட்டுப் பேயை, ஓட்டிவிட்டுப் பாலைவனப் பேயை அழிப்பது போலாகும்.

இலக்கியம், திருவிழாக்கள், சமய போதனை ஆகியவற்றின் மூலம் என் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு இயற்கையில் ஈடுபாட்டையும், மானிடச் சூழ்நிலையில் ஒரு கூர்மையையும் ஏற்படுத்த முயன்றேன். இந்த உலகத்தை நன்கு அனுபவிக்கப் பழக்க முயன்றேன். திறந்த வெளியிலும், மரத்தடியிலும் இசையையும், ஓவியத்தையும், நாடகத்தையும் அவர்கள் பயின்றனர்.

ஆனாலும் இது போதாதென்று அவர்கள் நல் இயல்புகளை வளர்ப்பதற்குரிய செயல்களையும் புகுத்த வேண்டி அதற்கேற்ற மனிதர்களும், வழிகளும் கிடைக்குமா எனக் காத்திருந்தேன். என்னுடைய கல்வி இலட்சியத்திற்கு நடைமுறை பலத்தைத் தரக் கூடிய மேனாட்டு அறிவாற்றல் தேவை என்று விரும்பினேன். இந்த ஆற்றல், நடைமுறையில் எவ்வாறு குறிப்பிட்ட நன்மையைச் செய்ய முடியும் என்பதை அறிந்து செய்யும்.

இதற்கிருந்த தடைகள் அளப்பில. கற்றறிந்தவர்கள் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் சமுதாயத்தாரின் மரபுகள், பெற்றோர்களின் விருப்பம், ஆசிரியர்கள் பயன்ற முறை, அரசியலாரின் கட்டுப்பாட்டுக்கு இணங்க அமைக்கப்பட வேண்டிய பல்கலைக் கழகம் ஆகிய இவை அனைத்தும் என்னுடைய விருப்பத்திற்கு எதிராக அணி வகுத்து நின்றன. இவற்றை யல்லாமல் எங்களுடைய நிதி நிலை இந்த நிறுவனத்தைத் காப்பாற்றக் கூடிய நிலையில் இல்லாவிடினும், என்னுடைய தேசத்தாரிடமிருந்து எவ்வகையான நிதி உதவியும் கிட்டவில்லை. இத்தகைய நிறுவனத்தில் பிள்ளைகள் மிகக் குறைவாகவே இருப்பார்கள் என்பது உறுதி.

நல்லதிர்ஷ்டவசமாக ஓர் ஆங்கிலேய நண்பரிடமிருந்து[8] உதவி கிடைத்தது. விஸ்வ பாரதியுடன் தொடர்பு கொண்ட கிராம நிறுவனத்தை அமைத்து, வழிகாட்டி, நடத்திச் செல்லும் பொறுப்பில் அவர் தலைமை இடம் வகித்தார். அவரும் என்னைப் போலவே கல்வி என்பது மனித ஆளுமையால் உயர்த் தன்மை பெற்ற முழுத் தன்மையை வளர்க்க வேண்டும் என்று விரும்பினார். மனிதனிடம்

உள்ள மனம், உடல் ஆகியவற்றின் எல்லாப் பகுதிகளையும் தூண்டுதல் செய்து வளர்க்க வேண்டும் என்பதையும் அவர் விரும்பினார். இந்தக் கருத்தை நடைமுறையில் கொண்டு செலுத்து வதற்குரிய சுதந்திரத்தைப் பெற வேண்டி, சில அநாதைக் குழந்தை களையும், வேறு பள்ளிக்கூடங்களில் படிக்க வசதியற்ற குழந்தை களையுங் கொண்டே எங்கள் பணியைத் தொடங்கினோம்.

தொடங்கிய சில காலத்திலேயே, ஆக்க வேலையில் ஈடுபட் டுள்ள மனங்கள் மிக விரைவாக ஆற்றலைப் பெற்று, அறிவுத் துறையில் இந்த ஆற்றலை வெளிப்படுத்த வழி தேடும் முறையில், அதிகப்படியான பணிகளையும் மேற்கொண்டன என்பதை அறிந் தோம். இந்தப் பிள்ளைகளின் மனங்கள் வெகு விரைவில் மிகவும் கூர்மை பெற்றன. ஆங்கிலம் அவர்கள் பாடத் திட்டத்தில் இடம் பெறுவிட்டாலும் ஒரு சிறு நிகழ்ச்சியின் மூலம் அதனைக் கற்றுக் கொள்வதால் ஏற்படும் நன்மையைக் குழந்தைகள் அறிந்து கொண் டார்கள். ஒரு சில கடிதங்களைத் தபாலில் சேர்க்கும்பொழுது அவர்கட்கு இந்த எண்ணம் தோன்றிற்று. உறைகளின் மேல் ஏற்கெனவே வங்காளி மொழியில் எழுதப்பெற்ற விலாசங்களை அஞ்சல் அலுவலகத் தலைவர் மறுபடியும் ஆங்கிலத்தில் எழுதினார். உடனே அவர்கள் தம் ஆசிரியரிடத்தில் சென்று அதிகப்படியான ஒரு மணி நேரத்தில் தமக்கு ஆங்கிலம் கற்றுத் தரும்படி வேண்டினர். அவசரப்பட்ட தங்கள் வேண்டுதலை நினைத்து அவர்கள் என்றுமே வருந்த நேரிடவில்லை. என்றாலும் எனக்கு ஆங்கிலம் கற்பித்த ஆசிரியர் எங்கள் வீட்டிற்கு வருவதற்காகச் சந்து முனை யில் திரும்பியதைப் பார்த்தவுடன் என் மனத்தில் எவ்வளவு தீய எண்ணங்கள் தோன்றின என்பதை யான் இன்றும் மறக்க முடிய வில்லை.

இந்தப் பிள்ளைகட்கு விடுமுறை காலம் என்பது அர்த்தமற்ற தாகி விட்டது. அவர்களுடைய படிப்பு எவ்வளவு கஷ்டமாக இருப் பினும், கடமையாக ஆக்கப்படவில்லை. அப் படிப்பில் சமைய லறை வேலை, காய்கறித் தோட்ட வேலை, நெசவு வேலை, சிறிய பழுது பார்க்கும் வேலை ஆகிய விடுமுறை காலப் பணிகள் சேர்ந்தே இருந் தமையின் பள்ளிப் படிப்பை அவர்கள் செய்து தீர வேண்டிய கடமையாகக் கருதவில்லை. அவர்களுடைய வகுப்பு அறையில் செய்யப்படும் வேலையும் அன்றாட வேலையும் வேறுபிரிக்கப்படாமல், அன்றாட வாழ்வில் இவை இரண்டும் ஒன்றாகவே ஆகிவிட்டமையின் அந்த வேலை, தானே அவர்களைக் கொண்டுசெலுத்தியது.

எங்கள் பிள்ளைகளில் பெரும்பாலோர் பள்ளியில் வந்து சேரும் பொழுது உடலாலும், மனத்தாலும் வலுவிழந்து சோர்ந்து இருந்தனர். மலேரியா போன்ற உஷ்ணப் பிரதேச நோய்கள் அவர்கள் பரம்பரைச் சொத்தாக இருந்து வந்தன. சகிக்க முடியாத மனக் கோணல் அவர்களிடம் குடிகொண்டிருந்தது. பிராம்மணன் அகங்கார முடையவனாகவும், பிராம்மணன் அல்லாதவன் வருந்தத் தகுந்த முறையில் தன்னைத் தானே அழித்துக் கொள்பவனாகவும் இருந்தான். பிறர்க்குப் பயன்படும் எந்த நன்மைகளையும் செய்ய அவர்கள் விரும்பவில்லை; அவ்வாறு செய்வதால் தங்களைத் தவிரப் பிறர் அதனால் விளையும் பயனை அனுபவிப்பதை அவர்கள் பொறுக்க வில்லை. கூலி ஆள் செய்யவேண்டிய வேலை என்று அவர்கள் கருதும் எந்தப் பணியையாவது செய்யச் சொன்னபொழுது அவர்கள் முணுமுணுக்க ஆரம்பித்தனர். பிறருடைய தர்மத்தில் வாழ்வதில் அவர்கட்கு அவமானம் தோன்றவில்லை. எனினும், தங்களுடைய பணிகளைத் தாங்களே செய்துகொள்வதில் வெட்க மடைந்தனர்.

இத்தகைய அற்பத்தனமும் மரத்துப்போன மன நிலையும் அவர்களிடம் பரம்பரையாக உள்ள குணங்கள் என்று நினைத்திருக்கக்கூடும். ஆனால், மிகக் குறுகிய காலத்தில் இவை அனைத்தும் மாறிவிட்டன. இந்தப் பிள்ளைகள் கற்றுக்கொண்ட தியாக உணர்ச்சியும், சகோதர ஒற்றுமையும், இன்னும் சிறந்த சூழ்நிலையில் நல்ல சந்தர்ப்பங்களில் வளர்ந்த குழந்தைகளிடங் கூடக் காணமுடியாது. சுறுசுறுப்புடன் கூடிய சுகாதாரமான வாழ்க்கைதான் அவர்களிடம் மறைந்து நின்ற நற்பண்புகள் அனைத்தையும் வெளிக் கொணர்ந்து, அவர்கள் வாழ்வில் மண்டிக் கிடந்த குப்பை கூளங்கள் அனைத்தையும் வெளியேற்றியது. அவர்கள் மேற்கொண்ட அன்றாட அலுவல்களில் புதிய பிரச்னைகளும் அவற்றிற்குத் தீர்வு காணவேண்டிய அவசியமும் ஏற்பட்டன. வாழ்க்கையில் நீதிக் கொள்கைகள் நிறைந்திருப்பதை தர்க்க முறையான மெய்ம்மைகள் அவர்கட்கு எடுத்துக் காட்டின. பிற பிள்ளைகள் இவற்றை உணர முடியாததைக்கண்டு அவர்கள் இப்பொழுது வியப்படைகின்றனர். சமையல், நெசவு, தோட்ட வேலை, சூழ்ந்துள்ள இடத்தைத் துப்புரவு செய்தல் ஆகியவற்றுடன், உதவி பெறும் பிள்ளைகட்குக்கூடத் தெரியாத முறையில், அவர்கட்கு உதவுதல் ஆகியவற்றில் அவர்கள் இன்பங் காண்கிறார்கள். உதவி பெறுபவர் வெட்கப்படாதிருக்கவே அவர்கட்குத் தெரியாமல்

உதவ முன் வந்தனர். பிற இடங்களில் உள்ள உணவு விடுதிகளில் வாழும் பிள்ளைகள் அவர்களுக்கென ஒதுக்கப்பட்டிருப்பதை விட அதிகப்படியாக வேண்டுமெனக் கூச்சலிடுகின்றனர்; ஆனால், இந்தப் பிள்ளைகள் விருப்பத்துடன் தங்கள் தேவைகளை எளிதாக ஆக்கிக்கொள்கின்றனர். ஒரு வகையான பொறுப்பு உணர்ச்சியை அவர்கள் வளர்த்துள்ளனர். குறைகள் ஏற்படும்பொழுது முணங்குவதற்குப் பதிலாக அதுபற்றி ஆராய்ந்து எவ்வாறே சரிப்படுத்திக்கொள்கின்றனர். உணவை வளப்படுத்த வேண்டுமானால் அவர்கள் காய்கறித் தோட்டத்தில் அதிகப்படியான ஊக்கங்காட்டவேண்டும். அதில் அவர்கள் தக்க பயனைப் பெருவிடினும் கூட, அந்த முயற்சிக்கு ஒரு மதிப்புண்டு; அந்த மதிப்பைச் சந்தை விலை நிலவரத்தால் அளவிடக் கூடாது.

இந்த விளக்கத்தை இன்னும் கலை யழகுபடுத்திக் கூற வேண்டும் என்பதற்காகவே எங்களுடைய திட்டத்தில் ஏதேனும் தோல்வி ஏற்பட வேண்டுமென்று நினைக்கிறேன். எங்களுடைய நிரல்பட கோக்கப்பட்ட வேலை முறையில் பொருத்தமில்லாத ஒன்று புகுந்து அதனைக் கலைக்க முயலவேண்டும். இதுவரை அத்தகைய எதுவும் நிகழவில்லை என்பதை அறிவித்துக் கொள்கிறேன். நம்முடைய உஷ்ணப் பிரதேச தட்ப வெப்ப நிலை காரணமாகப் போலும் பொருள்களை நிலை குலையச் செய்ய விரும்பும் அதிகப்படியான ஆற்றல் நம்மிடம் காணப்படவில்லை. நாங்கள் மேற்கொண்டுள்ள இந்தப் பரிசோதனை குற்றமற்ற பிள்ளைகட்கு ஒரு சுவர்க்கம் போன்றதன்று என்று கூறிவிடுவதற்குக்கூட காலங் கடந்துபோய் விடவில்லை. எங்களுடைய கொள்கைகளையும், இலட்சியத்திலுள்ள நம்பிக்கையையும் சோதனைக் குள்ளாக்கும் முறையில் விரைவில் தீர்வு காண முடியாத பிரச்னைகள் தோன்றக் கூடும் என்று உறுதியாக நம்புகிறேன்.

வாழ்வின் அன்றாடத் தேவைகட்கு மனத்தையும் உடம்பையும் இணையச் செய்யும் பயிற்சியை அளித்த பிறகு, அதன் பயனாக ஏற்பட்ட அறிவு விழிப்பைக் கண்டபிறகு, எங்கள் பள்ளிக்கூடத்தில் தொடக்க நிலைப் பிள்ளைகட்கும்கூட, இந்த முறையைக் கையாளலாம் என்ற துணிவு பிறந்தது. அந்தப் பிரிவின் குழந்தைகளும் அவர்கட்குக் கற்றுக் கொடுப்பதன் மூலம் நாமும் கற்றுக்கொள்கிறோம் என்று நம்பும் அதன் இலட்சிய ஆசிரியரும், தாங்களாகவே ஒரு குடிசையைக் கட்டி முடித்து அதன் பயனைப் பெருங் கர்வம் பாராட்டி வருகின்றனர். வாழ்க்கையின் வீரச்

செயல்களில் கல்வியும் ஒரு பகுதி என அவர்கள் நினைப்பது போலத் தெரிகிறது. பிறவியிலேயே ஏற்பட்ட அறியாமையைப் போக்குவதற்கு மருத்துவ மனையில் செய்யப்படும் வலி மிகுந்த சிகிச்சை யன்று கல்வி என்றும், அது நல்ல உடம்பில் உள்ள மனத்தின் ஆற்றலை வெளிப்படுத்தும் சக்தி என்றும் அவர்கள் நினைக்கத் தொடங்கிவிட்டார்கள். இந்த முறையில் எங்கள் நிறுவனமாகிய மூலையில் உயிர்த் தத்துவம் மெல்லத் தலைதூக்கி வருவதைப் பார்க்கும் பேறு எனக்குக் கிடைத்தது. இந்தக் கொடியை, தனிப்பட்ட நீண்ட பெயர் ஒன்றும் சூட்டாமல் அப் படியே வளரவிட வேண்டுமென்பதே என்னுடைய நோக்கமாகும். இது இப்படியே வளரவேண்டும். வேறு பயன் ஒன்றும் இல்லாமல், இயற்கையான மலர்கள், பழங்கள் ஒன்றுங் கொடாமல் நிற்கும் மூங்கிலை, வெறும் தேர்வில் பெறும் வெற்றிகள் என்னும் கொடி பறக்கவிடும் அந்த மூங்கிலை அப்படியே இந்தக் கொடி மறைக்க வேண்டும் என விரும்புகிறேன்.

இதனை முடிக்கு முன்னர், எங்கள் கல்வித் திட்டத்தில் மிக முக்கியமான ஒரு பகுதியைப் பற்றிச் சில சொற்கள் கூற வேண்டும்.

சுற்றுப் புறங்களில் உள்ள காற்று, சூரிய ஒளி ஆகியவற்றி லிருந்து மரம் உணவை உறிஞ்சிக்கொள்வது போலக் குழந்தை களும் தங்கள் அகமனத்தால் சுற்றுச் சூழ்நிலைகளிலிருந்து தேவை யானவற்றை எடுத்துக்கொள்கிருர்கள். அவர்களைப் பொறுத்த மட்டில், விதிகள், வழிகள், முஸ்தீப்புகள், பாடப் புத்தகங்கள், பாடங்கள் ஆகியவற்றைவிடச் சுற்றுச் சூழ்நிலை மிக இன்றியமை யாததாகும். பூமியின் கன பரிமாணம் அதன் மண்ணிலும் தண் ணீரிலும் உள்ளது; ஆனுல் இதனை உருவகமாகச் சொல்லவேண்டு மாயின், சுற்றுச் சூழ்நிலையாலேயே பூமி ஊக்கத்தைப் பெறுகிறது. நிறம், மணம், இசை, இயக்கம் ஆகியவை மூலமாகவே அது வெளிப்படுகிறது. அவனுடைய சமுதாயத்தில் மனிதனும் பண்பாடு என்ற சூழ்நிலையை ஏற்படுத்துகிருன். அவனுடைய தேசீயப் பண் பாட்டை அவனுடைய மனம் அறியுமாறு செய்கிறது அதுதான். அன்றியும், அது மரபின் வழிப்பாய்கிற செல்வாக்கையும் அறியு மாறு செய்கிறது. பன்னெடுங் காலமாக வந்துள்ள ஞானத்தின் சாரத்தைத் தன்னையும் அறியாமல் அவன் உட்கொள்ளுகிருன். உழவர்கள் இயற்கையோடு கூட்டுறவு முறையில் சேர்ந்து வயலை உழ்வு செய்வதுபோல், கல்வியைப் புகட்டாமல், சுரங்கத் தொழி

லாளரைப் போன்று நம் கல்வி நிறுவனங்களில் ஏதோ ஒன்றைத் தோண்டி எடுக்கவே பாடுபடுகிறோம்.

என்னுடைய பள்ளிக்கூடத்தில் ஒரு சுற்றுச் சூழ்நிலையை ஏற்படுத்தவே பாடுபட்டேன்; அதுவே முக்கியமான வேலையாகும். கல்வி நிறுவனங்களில் மனத்திற்கு சுதந்திரம் தருவதற்காக மனோ சக்திகளை ஊட்டந் தந்து வளர்க்கவேண்டும். கலைக்குச் சொந்த மான இந்த உலகத்திற்குப் பொருத்தமான முறையில் நம் கற்பனையை வளர்க்கவும், மானிட உறவுகட்கு ஏற்ற முறையில் நம் பரிவுகளை வளர்க்கவும் கல்வி நிறுவனங்கள் பாடுபடவேண்டும். பிற நாட்டுப் பூகோளத்தைக் கற்பதைக் காட்டிலும் கடைசியிற் கூறிய பரிவை வளர்ப்பது மிக முக்கியமாகும்.

பிற மொழி பேசி, பிற மரபுகளுடன் வாழும் மக்களை அறிந்து கொள்ள முடியாமற் செய்யும் நோக்கத்துடன் குழந்தைகள் மனம் இன்று பயிற்சி யளிக்கப்பெறுகிறது. இதன் பயனுகப் பிற்காலத்தில் அவர்கள் அறியாமையின் காரணமாக ஒருவரை ஒருவர் துன் புறுத்திக் கொள்கின்றனர். அந்தக் காலத்துக் கேற்ற குருட்டுத் தனத்தால் மிகுதியும் துன்புறுகின்றனர். பிற இனங்களையும், நாகரிகங்களையும் எள்ளி நகையாடும் இந்தத் துர்ப்பழக்கத்தைக் கிறிஸ்துவப் பாதிரிமார்களேகூட வளர்க்கின்றனர். அனைவர்க்கும் சகோரத்துவத்தைப் போதிக்கும் அதே நேரத்தில், தங்கள் கூட்டம் என்ற கர்வத்தால் கட்டுண்டு, பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்களின் மூலம்கூட வளைந்து கொடுக்கக்கூடிய இளம் பிள்ளைகளைக் கெடுக்க முயல்கின்றனர். நம்முடைய பிள்ளைகளை இத்தகைய தீங்குகளிலிருந்து காப்பாற்றவே நான் முயல்கிறேன்; இந்த இடத் தில் மேனுட்டு நண்பர்களின் பரிவுடைய மனம் செய்யும் உதவி பெருந் தொண்டாகப பயன்படுகிறது.

—1926.

குழந்தைகள் கோயிலை விட்டு வெளியே வந்து
புழுதியில் விளையாடுகின்றனர்;
ஆண்டவன் குழந்தைகள் ஆடலைக் கண்டு,
பூசாரியை மறந்து விடுகிருன்.

—ரவீந்தரநாத் தாகூர்.

## 15. நகரமும் கிராமமும்

தேனீ முதன் முதலாகக் கூட்டைக் கட்டும்பொழுது உணவு தான் அதன் முக்கியக் குறிக்கோளாக இருந்தது. ஆனால் பல பூக்களிலிருந்து தேனைச் சேகரிக்கப் பல ஈக்கள் கூடி, அந்தத் தேனை மழைக் காலத்துக்கென்று சேகரித்து வைத்தவுடன், அந்தக் கூட்டிலேயே தேனீச் சமுதாயமும் அமைக்கப் பெற்றுவிட்டது. இதில் இயந்திர அமைப்புப் போன்ற வெறும் எண்ணிக்கை முறை மட்டுமல்லாமல், ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ளும் நீதி முறையும் அமைந்துள்ளது.

பலரும் மகிழ்ச்சியடைவதற்கென்று தொடங்கப்பெற்ற ஒன்றே இவ்வாறு பலரும் துறவு அடையக் கூடிய நிலையில் முடிகிறது. தனக்கு என்று தொடங்கப்பெற்ற அலுவல் பிறருக்குச் செய்யும் பணியாக முடிகின்றது; தனி மனிதனுடைய வாழ்வு சமுதாய வாழ்வில் கலந்து விரிவடைகிறது. ஆகவேதான் மனிதன் எதிரில் இருப்பதைக் கடந்து எட்டிப் பிடிக்க வேண்டியதை நாடுகிறான். ஒருவன் முயற்சி செய்து, தன் வாழ்நாளுள் ஒன்றை அடைய முடியாவிடினுங்கூட அம் முயற்சி வீண் போவதில்லை. தனி மனிதனிடமிருந்து, அனைவரிடமும் உறவு முறை நீள்வதற்கும், நிகழ் காலத்திலிருந்து எதிர் காலத்துக்கு நீள்வதற்கும் சமுதாயம் பொது நிலைக் களமாக அமைகிறது. உணவு அளவு மீறி இருக்கும்பொழுது அதனுடைய ஜடத் தன்மை நீங்கி, ஆன்மீக மதிப்பைப் பெற்று 'அன்னம் பிரம்மம்'[1] என்ற தத்துவத்தின் முடிவிலாத் தன்மையை விளக்கி நிற்கிறது.

மிகப் பழைய கற் காலத்தில் ஒவ்வொரு மனிதனும் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் ஒரே நோக்கத்துடன் உணவைத் தேடித் தனித் தனியே அலைந்தான். அவர்களுடைய உணர்ச்சி அதிகமாகவும், பழக்கங்கள் வரன்முறையற்றதாகவும், நடத்தை சமுதாயத்துக்கு ஒத்து வராததாகவும் இருந்து வந்தன. ஆனால் ஆற்றங் கரைகளில், உணவு [illegible] கிடைத்தமையின் சமுதாயங்கள் ஏற்பட்டு, நாகரிகங்கள் பிறந்தன.

கன்னியாக இருந்த நிலத்தை உழுது, மனிதர்கள் ஆண்டு தோறும் நிறைந்த தானியங்களைப் பெற்றனர். ஒருவரை ஒருவர் இழக்கச் செய்வதைக் காட்டிலும், ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்வதால் அதிக இலாபம் பெறலாம் என்பதைக் கண்டனர். உணவுப் பிரச்னை தீர்ந்தவுடன் மனிதனுடைய

இயல்பில் அமைந்துள்ள சமுதாய இயல்பு தூண்டப்பெற்றது. பூமித் தாயின் அழைப்பின் பேரில் மனிதர்கள் ஒன்று யமர்ந்து விருந் துண்ணும் பொழுது அவர்கள் கொண்ட பொது உணவின் பயனாக, தனிப்பட்ட அவர்களுடைய வாழ்வில் சகோதரத்துவ அடிப் படையைக் கண்டார்கள்.

ஒன்று சேர்வதில் வசதி மட்டுமல்லாமல், திருப்தியும் இருப் பதை உணர்ந்தனர் அவர்கள். அதன் பொருட்டாகத் தனி மனிதன் துன்பத்தையும், மரணத்தையுங்கூடப் பொறுத்துக் கொள்ளத் தயாரானான். பூமிதேவி நம் கண்களுக்கு விருந்தளிக்கும் முறையிலும், மனத்தை நிறைவிக்கும் முறையிலும் நமக்கு உண வளிக்கிறாள். வானத்தில் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைக்குப் பரந்து கிடக்கின்ற பொன் வண்ணம், வயலில் முற்றி விளைந்து பொன் நிறத்துடன் இருக்கும் பயிருடன் போட்டி இடுகிறது. இந்த அழகு மனிதன் தன் உணவை மட்டும் சிந்திக்காமல், விழா இன்பங் காணவும் உதவுகிறது.

பூமியின் உக்கிராண அறையில் நம் பசிக்கேற்ற உணவுடன் இன்பமாகிய தேனும் நிறைந்துள்ளது. நிறைவின் தேவதையாகிய இலக்குமி அழகுடன் கருணையும் உடையவள். உண்டால் பயன் தரும் சத்துப் பொருளுடன் வடிவம், சுவை, மணம் ஆகியவற்றாலும் பழம் நம்மைக் கவர்கிறது. பூமியின் பழங்கள் அழகாயிருப்பது போல மனிதனுடைய கூட்டுறவும் அழகாயிருக்கிறது. தனிமையில் நாம் உண்ணும் உணவு ஊட்டத்தைத் தரும்; ஆனால் கூட்டத் துடன் கலந்து உண்ணும் உணவு ஊட்டத்துடன் அன்பையுந் தரும். அத்தகைய விருந்தில் பாத்திரங்கள் அழகுடனும், பரிமாறல் கௌரவத்துடனும், கறிகள் சுவையுடனும் இருக்கும்.

மனிதனுடைய எந்த உபசரிப்பு இயல்பின் மேல் சமுதாயம் நிறுவப்பெற்றுள்ளதோ, அந்த உபசரிப்பு இயல்பை வறுமை நசுக்கு கிறது. அதனால்தான் பூமியின் உணவு அறைகளின் பக்கத்திலேயே கிராமங்கள் தோன்றி வளர்ந்தன. மனிதனிடம் உள்ள நித்தியத் துவம் அவனுடைய மறு ஐக்கியத்தின் மூலந்தான் வெளிப்படு கிறது. அவனுடைய நல்லொழுக்கம், அவன் இலக்கியம், இசை, அவன் கலை, அவன் கொண்டாடும் பல சடங்குகள் ஆகியவையே இந்த வெளிப்பாடுகள். இவற்றின் மூலமாகத்தான் அவன் தன் னுடைய ஆழத்தை அறிந்து, நிறைவின் குறிக்கோள் ஆகிய வற்றையும் உணரத் தொடங்கினான்.

கிராமங்கள் வளர்ச்சியடைந்து நகரமாகப் பரிணமித்தன. அரசாங்கத்தின் சக்திகள் அங்குத்தான் தோன்றின. படைவீரர் கட்குக் கோட்டை, வாணிகர்கட்குக் கிடங்குகள், ஆசிரியர்க்கும் மாணவர்கட்கும் அறிவுப் பசியைத் தணிக்கக் கல்லூரிகள் ஆகிய வற்றுடன், வாணிக மையமாகவும், வெளி உலகத்தோடு தொடர்பு கொள்ளும் நிலைக் களமாகவும் நகரம் ஆயிற்று. நகரத்தில் ஆன்மா வெறும் கல்லில் மூடப்பட்டுள்ளது; வாழ்க்கையே போராட்ட மிகுந்தது; ஆற்றல் ஆற்றலை எதிர்க்கிறது. அங்கே வாழும் தனி மனிதன் ஒருவன் பிறனுடைய முயற்சியில் வாழ விரும்புகிறான். இவற்றை எல்லை மீறிக் கொண்டுபோகாத வரையில் இவற்றிற்கு ஒரு மதிப்புண்டு. தனி மனிதத்துவத்தை அதிகமாக அமிழ்த்தி விட்டால் மனிதன் முழு வளர்ச்சி அடைய முடியாது. இளய காட்டு மரங்களின் அடியில் அதிகப்படியான புல் பூண்டுகள் முளைத்துவிட்டால் மரங்கள் வளர்ச்சி குன்றிவிடுகின்றன. இதன் எதிராகத் தனி மனிதனுடைய எரிமலை போன்ற பேரார்வம் கூட்ட மான மக்கள் நிலையை உயர்த்துகிறது. பொதுவான செயல் நிறை வேற்றத் தரம் உயர்கிறது. போட்டி மனப்பான்மை ஆற்றல் வெளியீட்டை அதிகப்படுத்துகிறது. அறிவுத் துறையிலும் செயல் துறையிலும் தினந் தினம் புதிய ஆக்க சக்தி தோன்றுகிறது. பல்வேறு நாட்டு மக்கள், அவர்கள் பண்பாடுகள் ஆகியவற்றின் வரவால் அறிவு விசால மடைகிறது. ஆகவே நகரத்தில் சமுதா யத்தின் கட்டுப்பாடு தளர்ந்துள்ள நிலையில் கூட்டமான மக்களின் ஒரே அளவான மன நிலையிலிருந்து தனி மனிதனின் மனம் உயர எழும்பும் வாய்ப்பைப் பெறுகிறது. மனத்தின் குறுகிய நோக்கத் திற்கு எல்லா விடங்களிலும் 'கிராமியம்' என்றே பெயர் கூறப் படும்.

நியாயமான உறவு முறை இருந்தால், அதாவது சமுதாயம் ஒரு பக்கத்தில் அதிகமாகச் சாய்ந்து விடாதிருந்தால், கிராமத்திற்கும் நகரத்திற்கும் இடையே நல்ல முறையில் தொடர்பு இருந்து வரும். ஒன்றிலிருந்து உணவு, சுகாதாரம், சகோதர அன்பு ஆகியவை பாய்கின்றன. மற்றொன்றிலிருந்து செல்வம், அறிவு, ஆற்றல் என்பவை பாய்கின்றன. வெறும் கிராம வாழ்க்கையே மிகுந்துள்ள நாகரிகம் அதிகத் தூரம் முன்னேற முடியாது. கிராமத்தில் மனிதனுக்குச் சிறப்பில்லை; சமுதாயமே பெரிதாகக் கருது கிராமத்தில் இறக்கையுடைய குதிரையில் செல்லும் போர்ச் ளாக்கிய காத்திகேயன் இல்லை; அதற்குப் பதிலாக

வயிறும், யானை முகமுமுடைய கணேசனே இருக்கிறான். இதன் எதிராக, நகரம் முன்னணியில் இருக்கும் இடத்தில் தனி மனிதனே அதிகச் செல்வாக்குடையவனாகிவிடுதலின், சமுதாயம் ஒதுக்கப்படுகிறது. அங்கு நாகரிகம் தன் சொந்த நெருப்பிலேயே எரிகிறது. எவ்வளவுக் கெவ்வளவு அது சுடர் விட்டு எரிகிறதோ அவ்வளவுக் கவ்வளவு அதன் எரிபொருள் கரிய நிறமாக இருக்கும்; இறுதியில் அது எரிந்து சாம்பலாக ஆகி விடுகிறது. இதே முறையில் பல்வேறு நாகரிகங்கள் தம்மைத் தாமே எரித்துக் கொண்டுள்ளன. நவீன ஐரோப்பாவும் இவ்வாறு தன்னைத் தானே எரித்துக் கொள்ளும் வகையைச் சேர்ந்ததா, இல்லையா என்பதை அதற்குள் கூற முடியாது.

நகரத்தில்தான் சுறு சுறுப்பு மிகுந்துள்ளது. பல்வேறு மையங்களில் நம் உடம்பின் ஆதார சக்திகள் ஒன்று சேர்க்கப்படுகின்றன. கீழ்நிலை விலங்கு வாழ்வில் இந்த மையங்கள் நன்கு நிறுவப்படவில்லை. கூர்தல் அறத்தின்படி மூளை, நுரை ஈரல், இருதயம், வயிறு ஆகியவை தம் தொழிலில் வளர்ச்சி யடைகின்றன. இவற்றை நகரங்களோடு ஒப்பிடலாம்.

இராஜ்ய பரிபாலனத்தின் தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நகரங்கள் தயார் செய்யப்படுகின்றன. அக் காலத்தில் இத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் யந்திரங்கள் ஓரளவே பயன் பட்டன. ஆக்க முயற்சியில் ஏற்படும் மகிழ்ச்சிக்காகவே பொருள் களை உற்பத்தி செய்தார்கள். கிடைக்கும் பயனைப் ப்ற்றிய பசியினால் அன்று பொருள்கள் தயாரிக்கப்பெறவில்லை.

நவீன யுகத்தில் உள்ள யந்திரங்கள், வேலை செய்யும் திறமையைப் பெருக்கியதோ டல்லாமல், இலாபப் பசியையும், கொள்ளை இலாபம் கிடைக்கும் வழியையும் உண்டாக்குகின்றன. இதன் பயனாகத்தான் தனி மனிதன் அக்கறைக்கும் சமுதாயத்தின் அக்கறைக்கும் வேற்றுமை ஏற்பட்டு இறுதியில் போராட்டமாக முடிகிறது. கிராமத்திற்கும் நகரத்திற்கும் உள்ள தொடர்பைப் பேராசை துண்டித்து விடுகிறது. நகரம் கிராமத்தின் வடிகாலாக ஆகிவிடுகிறது; ஏனென்றால் கிராமத்திற்குத் தரவேண்டியதை நகரம் தருவதில்லை. நகரத்தின் செயற்கை விளக்குகள் மிகப் பிரகாசமாக எரிகின்றன. இந்த விளக்குகள் சூரியன், சந்திரன், விண் மீன்கள் ஆகியவற்றோடு எவ்விதத் தொடர்புங் கொள்ளவில்லை; ஆனால் எளிய கிராம விளக்குகள் அவிந்துவிட்டன. சமுதாயத்தின் அமைதியான ஒதுக்கிடத்திலிருந்த மனிதர்களை, ஆலைகளின் சங்

கொலி அழைக்கிறது. மனிதன் பழைய காட்டுமிராண்டி இயல்புகளை நோக்கி விரைவாகச் செல்கிறான். பழைய காலத்திய தனி மனிதத்துவம் மறுபடியும் உயிர்பெற்று வருகிறது; ஆனால் மிகப் பெரிய இராட்சஸ வடிவில் உயிர் பெறுகிறது.

ஆதியில் கிராம மக்கள் தனித் தனிக் கூட்டமாகச் சேர்ந்ததன் நோக்கம், ஒருவருக் கொருவர் உதவிக் கொள்ளும் முறையில் சேகரிப்பதற்கும் சேமித்து வைப்பதற்குமாகும். ஆனால் இப்பொழுது மிகவும் அதிகப்படியான அளவில் அவர்கள் கூடிவிட்டார்கள்; ஆனால் ஒவ்வொருவரும் தம்முடைய மகிழ்ச்சிக்காகவே சேகரிக்கிறார்கள். எனவே சமுதாய வரன் முறைக்குப் பதிலாகக் கடுமையான பொலீஸ் ஆட்சி நடைபெறுகிறது. வலிமையான சோதர உணர்ச்சி நீக்கப்பெற்றுக் கடுமையான சட்டங்களின் ஆட்சி நிலை பெற்றுவிட்டது. எங்கே இவ்வாறு தன்னலந் துய்த்தல் அளவு மீறி ஏற்படுகிறதோ, அங்கே நமக்கே நாம் அடிமையாகி விடுகிறோம்; எந்தவகையில் நோக்கினாலும் அடிமைத்தனந்தான் எஞ்சுகிறது. இன்றேல் பிறருக்கு அடிமையாகி விடுகிறோம்; தன்னலத்தை விருப்பத்துடன் தியாகஞ் செய்ய வாய்ப்பளிக்காத எந்தப் பணியும் ஒரு தளையாக அல்லது பிணிப்பாகவே முடியும். தேவையின் காரணமாக மேலும் மேலும் அதிகப்படியான மக்கள் ஒன்றாகப் பிணிக்கப்பெற்றவுடன், அவர்களுக்குள் எவ்வித ஒற்றுமையும் இல்லாமற் போய், போட்டியும் பொறாமையும் மேலும் மேலும் வளர்கின்றன.

உடைந்துபோன சமுதாய வாழ்க்கையை ஒட்ட வைத்து முழுவதாக ஆக்கவும், கிராமத்திற்கும் நகரத்திற்கும் இடையே உள்ள வேற்றுமையை ஒற்றுமைப்படுத்துவதற்கும், தனி வகுப்புக்களுக்கும், கூட்டத்திற்கும்; அதிகாரத்தின் கர்வத்திற்கும், சோதர மனப்பான்மைக்கும், இடையே உள்ள வேற்றுமைகளை நீக்கி ஒற்றுமைப்படுத்துவதற்கும் நாம் இன்று முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த முடிவைப் பெறுவதற்குப் புரட்சியைக் கைக்கொள்ளவேண்டும் என்று நினைப்பவர்கள், எளிதாக ஆக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் உண்மையின் வடிவை வெட்டிவிட முற்படுகிறார்கள். இன்ப வேட்டையில் இறங்குபவர்கள், துறவு மனப்பான்மையை ஒதுக்குகிறார்கள். துறவு மனப்பான்மையை விரும்பும் பொழுது, இன்பம் என்பதை நாட்டிலிருந்தே துரத்திவிட்டு, மனித மனத்தை நசுக்குவதன் மூலம் அதனை அடங்கச் செய்ய நினைக்கிறார்கள். விசுவ பாரதியில் உள்ள நாங்கள், மனிதனுக்கு

உண்மையை முழு வடிவுடன் தராவிட்டால் அவனுடைய இயல்பையே அது மறுப்பதாகும் என்று கூறுகிறோம். இவ்வாறு, மனிதனுக்கு உண்மை கிடைக்காமற் செய்வதன் பயனாகவே அவனிடம் நோய்களும், நிராசையும் தோன்றுகின்றன.

தொழிற்சாலை பல கேடுகளுக்குக் காரணமாக இருக்கலாம்; என்றாலும் நாம் அதனை முற்றிலும் ஒதுக்கி விடுவதற்கில்லை. நம்முடைய முக்கிய ஆற்றலில் யந்திரமும் ஓர் உறுப்பாகும். கொள்ளையடித்தன என்பதற்காக நம்முடைய கைகளை வெட்டிவிடுவதால் எப்பயனும் ஏற்படாது; அதற்கெதிராக, அக் குற்றத்தைக் களைய வேண்டும். நொண்டியாக ஆக்கிக் கொள்வதன் மூலமே நம்மைச் சீர்திருத்திக் கொள்ள முடியும் என்று கூறுவது கோழைகளின் புத்திமதியாகும். மனிதனிடம் உள்ள சக்திகள் அனைத்தும் வளர்ச்சியையும், விரிவையும் எதிர்நோக்கி இருக்கின்றன. மிகப் பழைய காலத்திலிருந்தே மனிதன் கருவிகள் செய்ய முயன்றிருக்கிறான். இயற்கையின் ஏதாவது ஓர் இரகஸ்யத்தை அவன் அறிந்தவுடன், ஏதாவது ஓர் இயந்திரத்தின் மூலம் அந்த இரகஸ்யத்தைத் தனதாக்கிக் கொள்ள முயன்றிருக்கிறான். இந்த முறையில்தான் மனிதனுடைய நாகரிகம் வளர்ந்து வந்துள்ளது.

மனிதன் என்றைக்குக் கலப்பையைச் செய்து பூமியின் சத்தை வெளிக் கொணர்ந்தானோ, அன்றே அவனுடைய வளர்ச்சிப் பாதையிலிருந்த முதல் தடை நீக்கப்பெற்றது. அவனுடைய உணவு கிடைப்பதற்குரிய வழியை இது காட்டியதோ டல்லாமல் அவனுடைய மனத்தின் ஆழத்தில் ஒரு பகுதியையும் ஒளிபெறச் செய்தது. முதன் முதலில் அவன் செய்த இராட்டையும், தறியும் அவனுடைய நிர்வாணத்தை மூடியதுடன், அவனிடமுள்ள அழகுணர்ச்சியையும் தூண்டி விட்டன. அத்துடன் இந்த அழகுணர்ச்சி அவன் வாழ்வின் பெரும் பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டது. இன்று அவனுடைய உடல் மூடப்பட்டதுடன் மனமும் உடை உடுத்துக் கொண்டுள்ளது. மனிதனுடைய இராஜ்யம் இந்த இரண்டு உடைகளையுமே பொறுத்திருக்கிறது.

எந்த ஒரு சந்நியாசியாவது[2] வெளியுலகத்துடன் வைக்கப் பெற்றுள்ள இந்த வாணிகத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று விரும்பினால் அவன் முதலில் மனிதனுடைய இரண்டு கைகளையுந் தான் குற்றஞ் சாட்டவேண்டும். அதீத அளவில் செல்லும் துறவி இந்த அளவுக்கும் சென்று விடுகிறான். தான் இந்த உலகைத் துறந்து விட்டதையும் விடுதலையைப் பெற்று விட்டதையும், வலி

யுறுத்த வேண்டி ஓயாமல் தன் கைகள் இரண்டையும் ஆகாயத்தின் மேல் உயர்த்தி வைத்திருப்பதன் மூலம், கைகளிரண்டையும் சாம்பிப் போகுமாறு செய்து விடுகிறான். மனிதனுடைய கைகளுக்கு, 'இந்த அளவுதான் நீ போகலாம்; இதற்கு மேல் செல்லலாகாது' என்று ஆணையிடுதல் சந்நியாசி கைகளைத் தூக்கி வைத்திருப்பதை ஒத்ததே யாகும். ஆண்டவன் கொடுத்த கைகள், அந்த ஆண்டவன் இடும் பணிகளைக்கூட ஓர் அளவுக்குமேல் செய்யக் கூடாது 'என்று கட்டளையிட யாருக்குத்தான் அதிகாரம் இருக்கிறது? நம்முடைய நலத்துக்கு ஊறு செய்யாத வகையில் நம் ஆற்றலை வழிப்படுத்தலாமே தவிர, அந்த ஆற்றல் விரிவடைவதைத் தடுக்கக் கூடாது.

பழங்கால மனிதன், அவனுடைய கலப்பை, தறி, வில், அம்பு, வண்டிகள், ஆகியவற்றை வாழ்வின் வளர்ச்சிக்காகவே பயன்படுத்தினான். அதேபோல இன்றுங்கூட நவீன யந்திரங்களை மானிடத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யத்தான் பயன்படுத்தவேண்டும். இயந்திரத்தின் காரணமாக ஒரு செல்வனுக்கு ஆயிரக்கணக்கானவர் பணி புரிகின்றனர் என்பது மெய்ம்மைதான். ஆனால், இயந்திரத்தின் உதவியால் ஒரு மனிதன் ஆயிரம் பேருடைய வலிமையைப் பெறலாம் என்பதையே அது அறிவுறுத்துகிறது. இவ்வாறு பெறப்பெற்ற சக்தியை ஒரு சிலர் தமக்கு மட்டும் என்று ஆக்கிக் கொள்ளக் கூடாது; பலருடைய நன்மைக்காகவும் அதனைப் பயன்படுத்த வேண்டும். மனிதர்களைப் பிரித்து வைப்பதற்காக அதிகாரக் குவியல் பயன்பட வேண்டா; அதிகாரம் பொறுப்பற்றதாக ஆகிவிட வேண்டா.

மனிதனுடைய அறிவுடன், இயற்கையின் வளங்களும் சேர்ந்தமையால் நாகரிகம் வளர்ந்துள்ளது. இவை இரண்டும் எப்பொழுதும் கூட்டாகவே இருத்தல் வேண்டும். அறிவின் மூலம் பெற்ற பயனைப் பலமான அறைகளில் போட்டுப் பூட்டி வைத்தால் அந்தப் பயன் கொஞ்சங் கொஞ்சமாகக் கரைவது உறுதி. சென்ற காலத்தில் சேகரித்து வைத்ததைக் கொண்டே நாம் நீண்ட நாட்கள் வாழ முடியாது.

மனிதனுடைய இந்தப் புதிய சக்தியை நம்முடைய கிராமங்கட்குப் பயன்படச் செய்யவேண்டும். இவ்வாறு செய்யத் தவறியதால்தான் இப்பொழுது எங்கு திரும்பினாலும் தோல்வி, தரித்திரம் என்ற இரண்டின் படங்களையே காண்கிறோம். 'நாங்கள் தோற்று விட்டோம்', என்ற கூச்சலைத்தான் நம் நாட்டு மக்கள் கிளப்புகின்

றனர். காய்ந்து வறண்ட குழிகள், விளையாத நிலங்கள், என்றும் அணையா நம் சுடுகாடுகள் ஆகிய அனைத்திலிருந்தும் "நாங்கள் தோற்றுவிட்டோம்" என்ற ஒரே ஓலந்தான் கேட்கப்படுகிறது. இந்த யுகத்திற்குச் சக்தியைக் கொடுக்கக்கூடிய விஞ்ஞானத்தை நாம் பெற்றிருந்தால்தான் இனியாவது வெல்லக் கூடும்; நாம் பிழைக்கவும் கூடும்.

செல்வம் ஒரே அளவில் பங்கிடப்படாமையால் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகள் ஒரு குறுகிய எல்லையில்தான் நற்பயன் விளைவிக்க முடியும். ஓங்கி வளர்ந்த மலைகள் ஓயாத தடைகளை எழுப்புகின்ற நாட்டில் பெரிய நாகரிகம் எதுவும் தோன்றி வளர முடியாது; ஏனெனில் இயல்பான போக்குவரத்தை அம் மலைகள் தடை செய்கின்றன. மாபெரும் சொத்துக்களும், ஆடம்பர வாழ்வும் உயர்ந்த மலைகளைப் போலப் பிரிக்கும் தன்மையுடைய குறுக்குச் சுவர்களாக அமைந்துவிடுகின்றன. கல்லாலும் சுண்ணம்பாலும் ஆகிய சுவர்களைக் காட்டிலும் மோசமான சமுதாயப் பிரிவினையை உண்டாக்கும் இச் சுவர்கள்.

சொத்துரிமைக் கொள்கையை ஒழித்து விடுவதால் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணமுடியும் என்று நம்புகின்றனர் சிலர். ஆனால் தனி மனிதன் சொத்துரிமை எண்ணத்தை மனித மனத்தில் உண்டாக்கிய தூண்டுதல்கள், மனித இயல்பில் புதைந்து கிடக்கின்றன. அதிகாரம் இருந்தால், தனிச் சொத்துரிமையைப் போக்கி விடலாம் எனினும், மனித இயல்பை மாற்ற முடியாது.

சொத்து என்பது நம்முடைய ஆளுமையை வெளியிடும் ஊடுநிலைப் பொருளாகும் (Medium). ஆளுமையின் எதிர்மறைத் தன்மையைக் கவனித்தால் ஒரு மனிதனை மற்றொரு மனிதனிலிருந்து பிரிக்கும் எல்லையை அங்குக் காணலாம். ஒரு சிலரிடத்தில் இந்தத் தனித் தன்மை அதிகம் வலுப் பெற்றால் அவர்களைத் தன்னலக்காரர்கள் என்று கூறுகிறோம். இந்த எதிர்மறைத் தன்மைக்கு எதிரான உடன்பாட்டுத் தன்மைதான் மனிதர்கள் ஒருவருடன் மற்றவர் கலந்து உறவாட இடங்கொடுக்கிறது. நம்முடைய தனித் தன்மை தன்னலத்தில் கொண்டுவிடுகிறது என்ற காரணத்தால், அதனைக் கொன்றுவிட முயன்றால், மானிட உறவு என்பதே அர்த்தமற்றதாகிவிடும். அதற்குப் பதிலாக அதனை வளரவிட்டால், இயல்பிலேயே ஆக்க சக்தி உடையதாகலின் அது தனக்கேற்ற ஓர் உலகை ஆக்கிக் கொள்ளும். பல சந்தர்ப்பங்களில், பல மனிதர்கள் அவர்கட்கேயுரிய உலகை உண்டாக்கிக் கொள்ளச்

சொத்து ஒன்றுதான் அடிப்படையாக நிற்கிறது. சொத்து என்பது வெறும் பணமும் தட்டுமுட்டுச் சாமான்களும் மட்டுமல்ல. அது நம்முடைய சேகரிக்கும் இயல்பை மட்டும் குறிப்பிடாமல், நம் ரசனை, நம் கற்பனை, நம் மனோ சக்தி, தியாகஞ் செய்யும் விருப்பம் ஆகியவற்றையுங் குறிக்கிறது.

நம்முடைய ஆளுமையின் இந்தக் குறியீடு அல்லது அடையாளத்தின் மூலமாகவே, நாம் கொடுக்கல் வாங்கல் ஆகியவற்றுடன் நம் கருத்தையும் வெளியிடுகிறோம். நம்மிடம் உள்ள மிகச் சிறந்த பொருள்களின் வெளிப்பாடாகவே நம்முடைய சொத்தும் அமைய வேண்டு மென்பதுதான் நம்முடைய சமுதாயத்தின் சிறந்த பற்சியாக அமைகிறது. சமுதாயத்தைக் காட்டும் தொகுதிகளாகத் தனி மனிதர்கள் அமைவதுபோல, சொத்து என்பதும் அதனுடைய கடமைகளைப் பூர்த்திசெய்ய வேண்டுமானால், சமுதாயத்தின் மொத்தச் சொத்தை ஆக்கும் அங்கங்களாக அமைகின்றன. இந்தத் தொகுதிகளின் தனி இயல்பை அழிப்பது அறிவுடைமை யாகாது; ஒற்றுமை உணர்ச்சியை முழு பலத்துடன் காப்பதே அறிவுடைமையாகும்.

வாழ்வு எளிதாக இருக்கும்பொழுது செல்வம் என்பது அளவு மீறித் தனிவுடைமை யாகாது. அந்த நிலையில் தனி மனிதர் உடைமை, மக்களுக்குரிய கடமையைச் செய்ய முற்படுகிறது. வாழ்க்கைத் தரம் உயர, உயர சொத்தும் அதன் இயல்பில் மாறி விடுகிறது. சமுதாயத்தில் நெருங்கி உறவாடக் கூடிய வாய்ப்பாகிய உபசரிக்கும் இயல்பை அது போக்கிவிடுகிறது. கடுமையான வகுப்புப் பிரிவினையை வளர்க்கிறது. சுருங்கக் கூறினால் அது சமுதாய விரோதியாக ஆகிவிடுகிறது. லௌகீக வளர்ச்சி ஏற்பட ஏற்பட சொத்து என்பது கடுமையான தனியுடைமையாகி விடுகிறது. அதனைச் சம்பாதிக்கச் சமுதாய நீதிமுறை வழியை அனுசரிக்காமல், விஞ்ஞானத்தின் உதவியை நாடுகிறோம். அது சமுதாயப் பிணைப்புகளை தகர்த்து விடுகிறது, சமுதாயத்தின் சாரத்தை உறிஞ்சி விடுகிறது. நியாயம், அநியாயம் பற்றிக் கவலைப்படாத அதனுடைய தன்மை பெருங் கொடுமையை விளைவிக்கிறது.

காட்டுத் தீ எந்த உயிர் மரங்களிலிருந்து பிறக்கிறதோ, அந்த உயிர் மரங்களையே பற்றி உண்ணுகிறது. இறுதியில் அதன் உணவாகிய மரங்கள் அழியும்பொழுதுதான் தீயும் அணைகிறது. பேராசை போன்ற ஏதேனும் ஓர் உணர்ச்சி சமுதாயக் கட்டுப்பாடு

என்ற தடையை உடைத்துக்கொண்டு வெளிப்படுமானால் அதுவும் காட்டுத் தீப்போல, சமுதாயத்தையே அழித்து விடுகிறது. இதன் பயனாக விளைவது முழு அழிவுதான். ஆதியிலிருந்தே சமுதாய விரோதியாக வுள்ள உணர்ச்சிகளைக் கட்டுப்பாட்டுக் குள்ளடக்கி வைக்க வேண்டு மென்பதற்குத்தான் மனிதனுக்கு ஆன்மீகப் பயிற்சி அளிக்கப் பெற்று வருகிறது.

நம்முடைய வயல்களில் சில வகைப் பூச்சிகள் உள்ளன. அவை செய்யும் அழிவைக் காட்டிலும் உழவர்கட்குத் தேவையான பொருள்களை வயலில்விட்டுச் செல்கின்றன ஆகலின் அப் பூச்சிகளை அழித்து விடுவதால் பயன் ஒன்றும் இல்லை. வெகு விரைவில் தன் இனத்தைப் பன் மடங்காகப் பெருக்கிக் கொள்ளும் பூச்சி இனம் நம் பயிர்களைச் சாடினால், அதை ஒரு பெரிய விபத்தாகவே கருதி அழிக்க முயலவேண்டும். மனித சமுதாயத்தில் சாதாரணச் சூழ் நிலையில், பல்வேறு காரணங்களால் பொருள்கள் வீணடிக்கப்படு கின்றன ; என்றாலும் நாம் அவற்றைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்க முடியும். என்றாலும் நம்முடைய சமுதாய வாழ்விலும் அதனுடைய ஆதாரத்திலும் இன்று ஏற்பட்டுள்ள நிலை மிகப் பெரிய ஆபத்தாகும் ; ஏனெனில் அது குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் ஏற்படவில்லை. அது காயசண்டிகையின் யானைப் பசிபோன்ற தொற்று நோயாகும். நாகரிகப் பகுதி முழுவதிலும் அது பற்றி யுள்ளது.

இன்பங்களை அனுபவிக்க நம்மால் எவ்வளவு செலவு செய்யக் கூடுமோ அந்த அளவுக்குக் கவலை யில்லாமல் செலவு செய்வதில் தவறில்லை என்று கருதுகிறோம். பணக்காரனாக உள்ள நம் அண்டை வீட்டுக்காரன் செலவு செய்கின்ற அளவுக்கு, நாமும் செலவு செய்ய முடியாவிட்டால் அதற்காக வெட்கப்படுகிறோம். கௌரவம் என்ற கொடுங்கோன்மை நம்மை அழிவுப் பாதையில் அழைத்துச் செல்கிறது.

வசதி, சௌகரியம் என்பவை பற்றியே ஓயாது பேசப்படு கிறது. வீணாகும் பகுதியை நோக்கும்போது, செய்யப்படும் செல வுக்குக் கிடைக்கின்ற பயன் மிகவும் குறைந்துவிடுகிறது. உற்பத் திப் பெருக்கத்தை அறிவிக்கத் தொண்டை கிழியக் கூவப்படும் விளம்பரம், பொருளும் உயிர்ச் சக்தியும் அளவு மீறி வீணாவதைக் குறிக்கிறது.

நாகரிகம் என்பதே மிகப் பெரிய இரை போடும் நிறுவனமாக அமைந்து விட்டது. சாப்பாட்டுராமர்களாக உள்ள பெரிய

கூட்டத்துக்கு ஓயாது விருந்திடுவதே அதன் தொழிலாகிவிட்டது. ஒரு சிலரிடம் மட்டும் இருப்பின் மன்னிக்கப்படகூடிய பெருங்குடிப் பழக்கம் பெருங் கூட்டத்திற்கும் பரவி விட்டது. இதன் பயனுக ஏற்பட்ட அனைத் துலகப் பேராசைதான் இன்று மானிட சமுதாயம் முழுவதிலும் அரசியலிலும், வாணிகத்திலும் நிறைந்து கிடக்கும் அற்பத்தனம், பொய், கொடுமை, ஆகியவற்றிற்குக் காரணம். இயற்கைக்கு மாருன பசியுடைய நாகரிகம், எண்ணற்ற அப்பாவிகளைப் புசிக்கவேண்டி யுள்ளது. இந்த அப்பாவிகளைத் தேடுகையில் உலகின் எந்தப் பகுதியில் மானிட இரைச்சி மலிவாகக் கிடக்கிறதோ அந்த இடம் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அர்த்தமற்ற ஆடம்பரத்தையும் எண்ணற்ற கௌரவக் குப்பைகளையும் தருவதற்காக ஆசியா, ஆப்ரிக்கா ஆகிய இடங்களில் வாழும் எண்ணற்ற மக்களின் இன்பம் பலியிடப்படுகிறது.

பேராசை, கடிவாளம் இல்லாமல் வளருகின்ற சமுதாயத்தில், பேராசை மக்களால் வளர்க்கப்பெற்றுப் போற்றப்படுகின்ற சமுதாயத்தில், எந்த ஒன்றை மேனுட்டார் ஜன நாயகம் என்று கூறுகிருர்களோ அது உண்மையாக இருக்க முடியாது. அத்தகைய சூழ்நிலையில், தனிப்பட்ட மனிதர்கள் தங்கள் சுய இலாபத்திற்காகப் பொது நிறுவனங்களைப் பிடித்துக் கொள்வதற்கு ஓயாமல் போராடுவார்கள். அத்தகைய இடங்களில் ஜன நாயகம் என்பது, புத்திசாலிகளையும், பணக்காரர்களையும் இன்பத்திற்காக ஊர்வலமாக ஏற்றிச் செல்லும் யானை போன்றது.

அந்தச் சூழ்நிலையில், பொதுமக்களின் கருத்துக்களை வெளியிடும் சாதனங்களையும், ஆட்சி என்னும் கருவியையும், நேரடியாகவோ மறைமுகமாகவோ செல்வந்தர்கள் சிலர் பிடித்துக் கொள்வார்கள். பழங் காலத்தில் ஊசியின் காதில் நுழைய முடியாத ஒட்டகத்திற்கே இவர்கள் ஒப்புமை கூறப்பட்டார்கள். இங்கு ஊசியின் காது என்பது இலட்சிய ராஜ்யத்தின் வாயிற்படியையேயாகும். ஆன்மிக விடுதலை பற்றிய தங்கள் நம்பிக்கையை எடுத்துச் சொல்பவர்களை அந்தச் சமுதாயம் கருணை இன்றியும் கொடுமையாகவும் நடத்துகிறது. அத்தகைய சமுதாயத்தில், அந்த மக்கள் தாங்களாகக் கூறிக்கொள்ளும் முன்னேற்றம் என்ற போதையில் மயங்கி யுள்ளார்கள். அந்த முன்னேற்றத்தை விலைக்கு வாங்க நாகரிகத்தைக்கூட விற்று விடுகிருர்கள். உணவைவிட மதுவை அதிகம் விரும்பும் மனிதனைப் போன்றவர்கள் இவர்கள்.

கிராமங்கள் பெண்களைப் போன்றவை. இனத்தாரின் தொட்டில் அவர்கள் கையில்தான் இருக்கிறது. நகரங்களைக் காட்டிலும் கிராமங்களே இயற்கையின் அருகாமையில் உள்ளன; அதனால் வாழ்வு ஊற்றுடன் அதிகத் தொடர்பு கொண்டுள்ளன. இயல்பாகப் புண்ணை ஆற்றும் சக்தி கிராமங்களில் உண்டு. மக்களுக்கு அடிப்படைத் தேவைகளான உணவு, இன்பம், ஆகியவற்றுடன், வாழ்வின் சாதாரண கீதத்தையும், கிராமங்கள் தாமே ஏற்படுத்திக் கொண்டு, மகிழ்ச்சியடையும் அழகிய சடங்குகள் ஆகியவற்றையும் பெண்கள் தருவதுபோல, கிராமங்கள் தரவேண்டியது கடமையாகும். ஆனால் ஓயாத உழைப்பாலும், கிராமங்களினுடைய பயனைப் பிறர் அளவு மீறிக் கொள்ளையடிப்பதாலும், அவை சுரத்தின்றி ஆக்க வேலையில் ஈடுபடாமல் நின்று விடுகின்றன. பல்லாண்டுகளாக இருந்த வீட்டரசி நிலையிலிருந்து, வீட்டு வேலைக்காரி என்ற இடத்திற்குக் கிராமங்கள் இறங்கி விட்டன. நகரம், தனக்கேயுரிய அகங்காரத்தாலும், கர்வத்தாலும், வாழ்வின் ஆதாரங்களாகிய சுகாதாரம், இன்பம் ஆகிய இரண்டிற்கும் தன்னால் ஏற்படும் துன்பம்பற்றி ஒன்றுமே அறியாமல் இருந்து விடுகிறது.

'மேக தூதம்' என்ற சம்ஸ்கிருதக் கவிதையைப் படிக்கையில் கற்பனை மூலம் மேகமாகிய தூதன் செல்லும் பழைய உலக ஊர்கள் தோறும் நாமும் செல்கிறோம். அந்தப் பெயர்களே அழகாக உள்ளன. இந்த நகரங்கள், வேறு எல்லாவற்றையும் விட, அன்றைய மனிதனுடைய அன்பு, நம்பிக்கை என்ற இரண்டையும் காட்டி நின்றதை நாம் உணர்கிறோம். இந்த நகரங்கள் அவன் ஆன்மாவில் உறைந்த பல அழகுகளை, அவற்றின் வீடுகளிலும், கோயில்களிலும் அன்றுடம் மகளிர் செய்த அலங்காரங்களிலும் கொண்டிருந்தன. அன்றியும் அவர்களுடைய கடைவீதிகளில் நடைபெற்ற பண்டமாற்றலிற்கூட இந்த அழகு உறைந்தது.

அவர்கள் வாழ்ந்த காலத்தில் டில்லியும், ஆக்ராவும் எவ்வாறு இருந்திருக்கும் என நாம் கற்பனை செய்து பார்க்கலாம். ஒரு பெரிய சாம்ராஜ்யத்தின் ஆக்க சக்தியையும், மானிட இயல்பையும் அவை காட்டி நின்றன. அவற்றின் அழிவிற்கூட இந்த நகரங்கள் மனிதனின் பெருமையைத் தம்மிடம் நிலைக்க வைத்துள்ளன. ஆனால் நவீன நகரங்கள் சந்தர்ப்பங்களைத் தருகின்றனவே தவிர இலட்சியங்களைத் தரவில்லை.

உயர்ந்த பிறவிகளில் மூளை, இருதயம் அல்லது வயிறு என்ற ஒழுங்கான உயிர் மையங்கள் இருப்பது போல மனிதனுடைய நாகரிகத்திற்கு நகரங்கள் இருக்க வேண்டியது அவசியம். இந்த உறுப்புக்கள், உடம்பின் முழு வாழ்க்கையை ஆக்ரமித்துக் கொள் வதில்லை, அதன் எதிராக, சிறந்த கூட்டமைப்பு முறையில் அவற் றின் செயல் முறைகள் அமைந்துள்ளமையின் வாழ்வின் சிறப்புக்கு அவை அடிகோலுகின்றன. உடம்பின் ஒரு மூலையில் தோன்றி அந்த உடம்பையே அரித்துத் தின்று கொண்டு அதனால் வளர்ச்சி யடையும் இரத்தக் கட்டி உடம்பு முழுவதற்கும் பகையாகும். அதேபோலக் கிராமங்களில் ஊடுருவி நிற்கும் சமுதாய நிறுவனங் களை நம்முடைய நவீன நகரங்கள் அரித்துத் தின்கின்றன. சமு தாயமாகிய பொருளை இந் நகரங்கள் தம்முடையனவாக்கிக் கொண்டு, இறந்த பொருள்களை எல்லையில்லாமல் விட்டுச் சென்று அதனையே வளர்ச்சி அல்லது முன்னேற்றம் என்று போலியாகக் கூறுகின்றன.

உயிருள்ள இருதயம் குருதியைத் தூய்மைப்படுத்துவதுபோல் இந் நகரங்கள் செய்யாமல், அதன் எதிராக, குருதி ஓட்டத்தைத் தடை செய்து, இடை இடையே நச்சுப் பொய்கைகளை உண்டாக்கி விடுகின்றன. ஏதாவது ஓர் உலகாயத இலாபத்தைக் கருதி மனிதர்கள் ஒன்றுகச் சேர்ந்தால் அது வெறும் மக்கள் தொகுப்பாக ஆகுமே தவிர, மக்கள் கூட்டமாக ஆகாது. அந்தத் தொகுப்பில் ஒழுக்கக் குலைவுதான் ஏற்படுகிறது. உண்மையான நாகரிகம் இருக்க வேண்டிய இடத்தில், மேளுடுகள், முன்னேற்றம் என்று கூறுகின்ற பொருளை வைப்பதால் ஏற்படும் பயன் இதுதான். முன் னேற்றத்துக்கு எதிராக நான் நிற்கவில்லை. ஆனுல் அந்த முன் னேற்றத்தைப் பெறுவதற்கு, நாகரிகம், தன் ஆன்மாவையே விலை கூற வேண்டும் என்று நேரிட்டால், நான் பழைய கற்கால நிலையி லேயே இருக்கத் தயார்.

பல்லாயிரம் ஆண்டுகளாக இந்தியாவில் குடும்ப முறை இருந்து வருகிறது. மிகப் பெரிதாகவும், கலப்படமானவையுமான இந்தக் குடும்பங்கள் ஒவ்வொன்றும் ஒரு சமுதாயமாகவே இருந்து வந்தது. அதன் இன்றியமையாமைபற்றி நான் இப்பொழுது ஆராய விரும்பவில்லை. ஆனுல் நவீன காலத்தில் இந்தக் குடும்ப முறை விரைவாக அழிந்து வருவது, எந்த வகையான இயல்புள்ள அழிவுக் கொள்கை, எவ்வாறு வேலை செய்கிறது என்பதையே நமக்கு அறிவுறுத்துகிறது. வாழ்க்கை எளிதாகவும், அதன்

தேவைகள் இயல்பானவையாகவும் இருந்தபொழுது, தன்னல உணர்ச்சிகள் கட்டுப்பாட்டுக் குள்ளடங்கி இருந்தபொழுது, இத் தகைய ஒரு முறை இயல்பானதாகவும், இன்பந் தருவதாகவும் இருந்தது. குடும்ப நிதி ஆதாரங்கள் அனைவருக்கும் போதுமான தாக இருந்தது; தனி உறுப்பினர் யாரும் நியாயமற்ற முறையில் எதற்கும் உரிமை கொண்டாடவில்லை. ஒரு தனி உறுப்பினர் தம் தேவைக்கு அதிகமாகப் பேராசைப்பட்டுக் கூச்சலிடும் நிலை யில், இத்தகைய குழு நிலைத்து வாழ முடியாது. பொது நன்மைக்கு எதிராகத் தனி வசதிகள்பற்றிய ஆசை வேலை செய்யும்பொழுது குடும்ப முறை நன்கு நிலைபெற முடியாது. அந்த நிலையில் சகோதரர்கள் பிரிந்து செல்லவும், பகைவர்களாகக் கூட ஆகவும் நேரிடும்.

கவிஞர் 'காட்டே'யின் காலத்திய ஜர்மெனியை, அரசியல்வாதி பிஸ்மார்க்கின் காலத்தில் வாழ்ந்த ஜர்மானியர் வறுமையுடைய நாடு எனக் கூறினர். பிளேட்டோவால், அல்லது அசோகன்[3] வாழ்க்கையால் ஒளிதரப்பெற்ற நாகரிகத்தின் தரத்தை நவீன காலத் தில் வாழும் கர்வம் பொருந்திய மக்கள் ஒருவேளை எள்ளி நகை யாடக் கூடும். நவீன காலத்தில் வாழும் இளைஞர்கள் அதிக அச்சியந்திரங்களைப் பெற்று, மனத்தைக் குறைவாகப் பெற்றுள்ள மையின், அக் காலத்தில் வாழ்ந்தவர்களை நோக்கி இரக்கங் காட்ட வேண்டுமா ?

பூமியைக் காட்டிலும் சந்திரன் வடிவால் சிறியதாக இருத்த லின், பூமியைக் காட்டிலும் முன்னரே சந்திரனில் உயிர்கள் தோன்றி விட்டன என்று நான் கற்பனை செய்துகொள்ள விரும்புவ துண்டு. ஒரு காலத்தில் சந்திரனில்கூட, தீப விழாவும், நிற பேதங்களும், இசையும், இயக்கமும் இருந்து வந்தன. அதனுடைய உக்கிராண அறையில் எப்பொழுதும் உணவுப் பொருள்கள் நிறைந் திருந்தன. பின்னர்ச் சுற்றுப் புறத்தையே அழித்து விழுங்கும் ஓர் இனம் அங்குத் தோன்றிற்று. அந்த இனம், விலங் குணர்ச்சி யையும் ஓரளவு அறிவையும் பெற்றிருந்தது. வெறும் கூட்டல் முறை, நிறைவை உண்டாக்காது என்ற உண்மையை அவர்கள் கற்பனை செய்து பார்க்க முடியாதவர்களா யிருந்தனர். அன்றியும் மிக அதிகமாகச் சேகரித்து விடுவது மட்டும் இன்பத்தைக் கொணராது என்பதையும், வேகமான இயக்கம் மட்டும் முன்னேற் றத்தைக் கொணராது என்பதையும், ஏதாவது ஒரு நிறைவுள்ள இலட்சியத்தை நோக்கிச் செல்லும்போதுதான் முன்னேற்றம்

என்பதற்கே ஒரு பொருள் இருக்கும் என்பதையும் அவர்கள் கற்பனை செய்து பார்க்கத் தவறி விட்டனர். அவர்கள் அடித்த கொள்ளை, இயற்கை செய்யும் மறு வழங்கலைக்கூடத் தாண்டி விட்டது. அங்கு வாழ்ந்த கொள்ளை இலாபம் அடிக்கின்றவர்கள் இயற்கைக்கு மாறுபட்ட முறையில் அவர்களுடைய தேவைகளை அதிகப்படுத்தினர். இயற்கையின் மூலப்பொருள் பண்டசாலையிலிருந்து கொள்ளையடித்ததுடன், இயற்கையின் ஆதாரங்களையும் கருணையற்ற முறையில் அவர்கள் சுரண்டலாயினர். உள்ள பொருளை எல்லாம் கொள்ளை கொண்ட பிறகு, யாருக்கு அதிகப் பங்கு என்பது பற்றி அவர்கள் தமக்குள் சண்டை இட்டுக் கொண்டனர். இந்தச் சண்டையில் ஈடுபட்டிருந்த அவர்கள் ஒழுக்க நீதிகளைக் கண்டு எள்ளி நகையாடினர். தங்களுடைய ஆசையைத் திருப்தி செய்து கொள்வதில் விட்டுக் கொடாமல் இருப்பதே தங்கள் இன உயர்வைக் காட்டுவதாகும் என நம்பினர். தண்ணீரைக் காலி செய்து, மரங்களை வெட்டிச் சாய்த்து, அந்தக் கோளை மொட்டையடித்துப் பள்ளங்கள் நிறைந்த பாலைவன மாக்கினர். அந்தக் கோளின் உட்பகுதியை எல்லாம் ஒருவனுடைய சட்டைப் பையில் உள்ள உயர்ந்தவற்றைக் கவர்வதுபோலக் கொள்ளையடித்தனர். பழம் தன்னுள் வைத்துக் காத்த பூச்சிகள் அந்தப் பழத்தின் சதையை எல்லாம் தின்று தீர்த்ததுபோல, சந்திரனும் இறுதியில் உயிரற்ற வெறும் ஓடாக, தாம் பிறந்த உலகத்தையே தின்று தீர்த்த பேய்ப் பிராணிகள் அனைத்தின் சுடுகாடாக விளங்கிற்று.

என்னுடைய கற்பனையில் உதித்த சந்திர மண்டல மக்கள், இன்று இப் பூமியில் உள்ள மக்கள் எவ்வாறு நடந்து கொள்கிறார்களோ அப்படியே நடந்து கொள்கின்றனர். பூமாதேவி தன் குழந்தைகளின் பசியைத் தணிக்க வேண்டிய உணவை வைத்திருக்கிறாள்; தப்பித் தவறி எங்கேனும் மிகுதியான தேவை ஏற்பட்டால் அதைப் போக்கவும் ஓரளவு அதிகமாக வைத்திருக்கிறாள். ஆனால் திடீரென்று உலகம் முழுவதும் தோன்றியுள்ள, செல்லங் கொடுத்துக் கெட்டுப்போன, பிள்ளைகளின் அனுவசியமான தேவைகட்குத் தரக்கூடிய அளவில் அவள் பெற்றிருக்கவில்லை.

மனிதன் தன் வாழ்க்கை வசதிகளில்மட்டு மல்லாமல், வாழ்வில்கூட அஸ்திவாரம் வரைத் தோண்டிக் கொண்டே போகிறான். அவனுடைய உடம்பையே தின்கின்ற நிலைக்குச் சென்று விட்டான். கண்ணை மூடிக் கொண்டு பொருள்களை வீணடிக்கும் நிலையைக் கிராமங்களிற் காணலாம். வாழ்வின் ஒளியை மங்கச் செய்து,

உயிருடன் இருப்பதன் இன்பம் குறைக்கப்பட்டு, சமுதாயக் கூட்டுறவுத் தொடர்பு கிராமங்களில்தான் துண்டிக்கப்படுகிறது. சமுதாயத்தில் இரத்த ஓட்டங் குறைந்துள்ள இந்த உறுப்புக் களுக்கு, நல்ல இரத்த ஓட்டம் கிடைக்குமாறு செய்வதே நம்முடைய கடமையாக இருக்க வேண்டும். மேலும் செல்வத்தையும் அறிவை யும் கிராமங்கட்குக் கொணர வேண்டும். வாழ்வதற்குத் தேவை யான இட வசதியும், உழைப்பதற்கும் ஓய்வெடுப்பதற்கும் மகிழ் வதற்கும் தேவையான நேரத்தையும், சுய மதிப்பைத் தரக்கூடிய கௌரவத்தையும் உலகின் பிற பகுதிகளில் வாழும் மனிதர்களுடன் உறவு கொண்டாடக்கூடிய முறையில் பரிவையும் தருவதுடன், எப்பொழுதும் இரண்டாவது ஸ்தானத்தையே அவர்கட்குத் தரும் பழக்கத்தையும் ஒழிக்க வேண்டும்.

ஓடைகள், ஏரிகள், கடல்கள் ஆகியவை தங்கள் எல்லைக்குள் நீரை வைத்துக் கொள்வதற்காக மட்டும் இருக்கவில்லை. மேகமாக மாறக்கூடிய நீராவியையும் அவை அனுப்புகின்றன. இதன் பயனாகத் தண்ணீர் பரவலாக வழங்கப்படுகிறது. செல்வத்தையும் அறிவையும் குவித்து வைக்க வேண்டிய கடமை நகரங்கட்கு உண்டு. ஆனால் அவற்றைத் தங்கட்காக மட்டும் இவ்வாறு குவிக்கக் கூடாது. அவை பாசனத்துக்குரிய மைய இடங்களாக இருத்தல் வேண்டும். பரவலாக வழங்குவதற்காகவே அவற்றைச் சேகரிக்க வேண்டும். அவை தங்களை மட்டும் பெருக்கிக் கொள் ளாமல் சமுதாயம் முழுவதையும் வளப்படுத்த வேண்டும். அவை விளக்குக் கம்பங்களைப் போன்று நின்று தங்களுக்குக் கீழே மட்டும் ஒளியைப் பரப்பாமல், அந்த எல்லைக்கு அப்பாலும் ஒளி பரவச் செய்ய வேண்டும்.

நகரமும், கிராமமும் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளும் முறையில் உறவு கொள்ள வேண்டுமாயின், கூட்டுறவு மனப்பான் மையும், தன்னலத் தியாகமும் சமுதாயத்தின் உயிருள்ள குறிக் கோளாக இருக்கின்ற வரையில்தான் முடியும். ஏதாவது ஓர் ஆசை இந்தக் குறிக்கோளைத் தோற்கடித்து விடுமானால், சுயநல உணர்ச்சி மிஞ்சி விடுமானால், ஒரு பெரிய பிளவு ஏற்பட்டு விரிந்து கொண்டே செல்லும். அந் நிலையில் நகரம் சுரண்டும் பொருளாகவும், கிராமம் சுரண்டப்படும் பொருளாகவும் ஆகி விடும்.

விசுவ பாரதியின் சார்பில் இந்தியாவில் கிராமப் புனருத்தாரண வேலையைத் தொடங்கியுள்ளோம். இனத் தற்கொலையின்

வேகத்தைக் குறைக்க முயல்வதே எங்கள் நோக்கமாகும். நாங்கள் செய்யும் வேலையைப் பற்றிய விவரங்களை அறிந்தால் அவை உங்கட்கு மிக அற்பமாகக் காணப்படும். ஆனால் சிறிதாகத் தோன்றுகின்ற காரணத்தால் ஒன்றைக் கண்டு நாங்கள் அஞ்சுவதில்லை; ஏனென்றால் நாங்கள் வாழ்வில் நம்பிக்கை கொண்டுள்ளோம். எங்கள் அகத்தினுள் இருக்கும் உண்மையின் முளையை அது பிரதிபலிக்குமானால், எல்லாவிதத் தடைகளையும் வெல்வதுடன் காலம் இடம் ஆகிய அனைத்தையும் வென்று விடும். வறுமைப் பிரச்னையைக் காட்டிலும், மகிழ்ச்சி இன்மை பற்றிய பிரச்னைதான் மிகப் பெரிய பிரச்னை என்பதை நாங்கள் அறிவோம். உற்பத்தி, பொருள் சேகரம் என்ற இரண்டின் மறு பெயர்தான் செல்வம் என்பது. எனவே, கருணை யின்றி மக்கள் அதனைப் பயன் படுத்தல் கூடும். பூமியில் உள்ள உயிர்களை நசுக்கிக் கூட அது வாழ முடியும். ஆனால் மகிழ்ச்சி, தான் வைத்திருக்கும் பொருள் பட்டியலில் செல்வத்தோடு போட்டியிட முடியாவிட்டாலும், முடிவானதாய், ஆக்கம் உடையதாய், தன்னுள்ளேயே ஒருவகைச் செல்வத்தைப் பெற்றதாய் விளங்குகிறது.

வண்டல் நிறைந்துள்ள கிராம வாழ்க்கை என்னும் நிலத்தில் மகிழ்ச்சி என்ற நீரைப் பாய்ச்சுவதே எங்கள் குறிக்கோளாகும். இதனைச் செய்வதற்கு அறிஞர்கள், கவிஞர்கள், இசை வல்லுநர்கள், கலைஞர்கள், ஆகிய அனைவரும் ஒன்று சேர்ந்து தங்கள் பங்கைச் செலுத்த வேண்டும். இல்வாறு செய்யாவிட்டால் அவர்களும் மற்றுவர்களைப் போல, மக்களினுடைய உயிரை உண்டு, பதிலுக்கு ஒன்றுந் தாராத ஒட்டுண்ணிகளாய் ஆகி விடுபவர்கள்.

வறுமைப் பிரச்னையைப் பற்றி ஆராய்கின்ற நாம் ஒவ்வொருவரும், உற்பத்தியை எவ்வாறு பெருக்குவது என்பது பற்றியே சிந்திக்கிறோம். அவ்வாறு செய்வதால் மானிடமும், பொருள்களும் அதிகமாகக் களைப்படைந்து விடுகின்றன என்பதை நாம் மறந்து விடுகிறோம். பணமுடைய செல்வில் ஒரு சிலருக்கு மட்டும் அது மிகு லாபம் பெறும் வழியைச் செய்கிறது. உணவுதான் ஊட்டத்தைத் தருமே தவிர, பணம் தாரது. வாழ்வு நிரம்பி இருப்பதால்தான், ஒருவர் இன்பம் பெற முடியுமே தவிரப் பணப்பை நிரம்பி இருப்பதால் மகிழ்ச்சியைப் பெற முடியாது. உலகாயதச் செல்வத்தை மட்டும் பெருக்கிக் கொண்டு செல்வதால், உடையவர்கட்கும் இல்லாதவர்கட்கும் உள்ள வேற்றுமை பெருகிக் கொண்டே போகிறது. அதன் பயனாக, சமுதாய முறையில் பெரிய

தொரு காயம் ஏற்பட்டு, நாளாவட்டத்தில், முழு உடம்பும் இரத்த நஷ்டத்தால் இறக்க நேரிடும்.

## II

நான் கூற வேண்டியவற்றை எல்லாம் முன்னரே பல முறை கூறியுள்ளேன்; இனி ஒன்றும் எஞ்ச வில்லை. அப்பொழுது எனக்கு வலிமை இருந்தது; என் எண்ண ஓட்டமும் தடைப்படுத்தப்பட வில்லை. முதுமையும், உடல் நலக்குறைவும் இப்பொழுது என் வலிமையைப் பாதித்து விட்டன; எனவே என்னிடம் அதிகம் ஒன்றும் எதிர்ப்பார்க்கக் கூடாது.

மிக நீண்ட நாட்களுக்குப் பிறகு யான் இங்கிருக்கிறேன். உங்களில் சிலரை அடிக்கடிக் காண்கிறேன். இப்பொழுது நான் உங்கட்குத் தரக்கூடியதெல்லாம் என்னைத்தான். இந்த வீட்டை[4] முதலில் வாங்கியபொழுது இதற்கெனத் தனித் திட்டம் ஒன்றும் வைத்திருக்கவில்லை. சாந்தி நிகேதன் மக்கள் கூட்டத்திலிருந்து வெகுதூரம் விலகி இருக்கிறது. அதில் கற்கின்ற மாணவர்கள் தேர்வில் வெற்றி பெற உதவுவதுடன் கல்வித் துறையினர் கல்வி என்ற பெயரில் தரும் பங்கீட்டுப் பொருளைவிட ஓரளவு அதிக மாகவும் சாந்தி நிகேதன் தருகிறது என்று மட்டும் நினைத்ததுண்டு.

ஆனால் மற்றோர் எண்ணமும் என் மனத்தில் ஓடியது. ஷலியாத், பாட்டிசார்[5] ஆகிய கிராமங்களில் வசிக்கத் தொடங்கியவுடன் தான் கிராம வாழ்க்கையுடன் எனக்கு நேரடித் தொடர்பு ஏற்பட்டது. அப்பொழுது நான் ஜமீன்தார் தொழில் பார்த்து வந்தேன். ரயத்துகள் தங்கள் இன்பம், துன்பம், குற்றச் சாட்டுக் கள், வேண்டுதல்கள் ஆகியவற்றை என்னிடம் கொண்டு வந்ததால் கிராமத்தை ஓரளவு கண்டு கொள்ள முடிந்தது. ஒரு புறத்தில், புறக் காட்சிகளாகிய ஆறுகள், புல் வெளிகள், நெல் வயல்கள், மரத்தடியில் உள்ள மண் குடிசைகள் ஆகியவை காட்சியளித்தன. மற்றொரு புறம் மக்களின் அக வாழ்க்கை காட்சியளித்தது. என் கடமைகளை நிறைவேற்றுகையில் அவர்களுடைய குறைகளை அறிய முடிந்தது.

நகரத்தில் பிறந்த நகரப் பூச்சி நான். என் முன்னோர்கள் கல்கத்தாவில் குடியேறிய ஆதிக் குடிகளாவர். என் இளமைப் பருவத்தில் கிராம வாசனையே பட்டதில்லை. எங்களுடைய சொத்துக்களைக் கண்காணிக்கும் நிலை ஏற்பட்டவுடன் அக் கடமை

தொல்லைதரும் என்று அஞ்சினேன். கணக்கு வைத்தல், வரி வசூல் செய்தல், பற்று வரவு ஆகிய அலுவல்களில் நான் பழகவில்லை; எனவே என் அறியாமை என் மனத்தில் பெரும் பாரமாக இருந்தது. கணக்கு வழக்குகளில் கட்டுண்டு கிடக்கும் நான் மனிதனுகவும், இயல்பாகவும் இருக்க முடியுமென்று நம்பவில்லை.

அலுவலில் புகுந்தவுடன் அது என்னை ஆட்கொண்டு விட்டது. ஏதாவது, ஒரு பொறுப்பை மேற்கொண்டு விட்டால் அதிலேயே மூழ்கி, என் சக்தி முழுவதையும் அதில் செலவிடுவது என்னுடைய இயல்பாகும். ஒரு முறை ஆசிரியனுக இருக்க நேர்ந்தபொழுது என் முழு ஆர்வத்தையும் காட்ட நேர்ந்தமையின் அதில் அதிக இன்பங் கண்டேன். ஜமீந்தார் வேலையில் உள்ள பல சிக்கல் களைத் தீர்க்கக் கங்கணம் கட்டிக் கொண்டமையின் நான் கண்டு பிடித்த பல புதிய வழிகள்பற்றி என்னைப் புகழ்ந்தனர். உண்மை யைக் கூறுமிடத்து அக்கம் பக்கத்திலுள்ள நிலச் சுவான்தார்கள் என் முறையைப் பழகிக் கொள்ள, தங்கள் குமாஸ்தாக்களை என்னிடம் அனுப்பினர்.

என். பணியாளர்களில் கொஞ்சம் வயதானவர்கள் அஞ்சிப் போய்விட்டனர். ஒரு வகையிலும் நான் புரிந்து கொள்ள முடியாத படி, அவர்கள் பதிவேடுகளை வைத்திருந்தனர். அவர்களாக எவற் றைத் தெரிவிக்க வேண்டும் என்று கருதுகிருர்களோ அவற்றைத் தவிர மற்றவற்றை நான் அறிந்து கொள்ளக் கூடாது என்பதே அவர்களுடைய நோக்கமாகும். இந்த முறையை மாற்றினுல் குழப்பம் உண்டாகும் என்று அவர்கள் கூறினுர்கள். வழக்கு நேர்ந்தால் இப் புதிய முறைப் பதிவேடுகளை நீதி மன்றத்தார் ஐயப் படுவார்கள் என்றும் எடுத்துக் காட்டினர். என்ருலும் அடியி லிருந்து நுனிவரை இதனை மாற்றியமைக்க வேண்டும் என்று நான் பிடிவாதம் பிடித்ததால் ஏற்பட்ட பயனும் திருப்தியாகவே இருந்தது.

ரயத்துகள் என்னைக் காண வந்தனர். இரவு பகல் எந்த நேரத்திலும் என் கதவுகள் அவர்கட்குத் திறந்திருந்தன. சில நாட்களில், நாள் முழுவதும் அவர்களுடைய குறைகளைக் கேட்பதி லேயே செலவழிந்தது; சாப்பாட்டைக்கூட நழுவவிட வேண்டி இருந்தது. இந்த வேலைகள் அனைத்தையும் உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் செய்தேன். குழந்தைப் பருவத்திலிருந்து தனித்தே வாழ்ந்த நான் கிராமத்தில் முதல் தடவையாக அனுபவம் பெற்றேன். புதிய வழிகளை உண்டாக்குவதில் திருப்தியும், இன்ப மும் இருக்கக் கண்டேன்.

கிராம வாழ்க்கையின்[6] ஒவ்வொரு பகுதியையும் நுணுக்கமாகக் காண விரும்பினேன். என்னுடைய கடமைகள் காரணமாக ஆறு, கால்வாய், நீர் வழிகள் மூலம் நீண்ட தூரங்கட்குச் சென்று வந்தேன். இந்த வழியில் வாழ்வின் மாறும் காட்சிகளைக் காண ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. கிராம மக்களின் அன்றாட அலுவல்களும், அந்த அலுவல்கள் மாறி மாறி வருவதும் என்னை வியப்பில் ஆழ்த்தின. நகரத்தில் வாழ்ந்து பழகிய நான் கிராம அழகின் இருதய ஸ்தானத்தில் இறங்கி அந்த அழகால் நிரப்பப்பெற்றேன். பின்னர் மெள்ள மெள்ள அந்த மக்களின் வறுமையும், துன்பமும் என் கண் முன் விரிந்தன; அவர்கட்கு ஏதாவது செய்ய வேண்டுமென விரும்பினேன். நான் ஒரு ஜமீந்தாராக இருப்பதிலும், பணமே குறியாகவும், வருவாயே கருத்தாகவும் இருப்பதிலும் வெட்கமடைந்தேன். அந்த உணர்வு ஏற்பட்டதிலிருந்து, மக்களின் மனத்தை விழிப்படையச் செய்து அவர்கள் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு செய்யும் பணியை மேற்கொண்டேன்.

வெளியில் இருந்து கொண்டு கிராமத்தாருக்கு உதவ முயல்வது பயன்படாது. அவர்களிடமுள்ள உயிரின் ஒரு பொறியைத் தூண்டுவதே என் பிரச்னையாக இருந்தது. அவர்கள் தங்களை தாங்களே மதித்துக் கொள்ளாமையின் அவர்கட்கு உதவுவதே முடியாத காரியமாக இருந்தது. ‘நாங்கள் நாய்கள்; சவுக்கு ஒன்று தான் எங்களைச் சரியான வழியில் செலுத்தும்’ என்று அவர்களே கூறுவதுண்டு.

ஒரு நாள் அண்டைக் கிராமம் ஒன்றில் நெருப்புப் பிடித்துக் கொண்டது. அந்த மக்கள் அப்படியே அதிர்ச்சியடைந்து செய்வதறியாது நின்று விட்டனர். பக்கத்திலுள்ள கிராமத்திலிருந்து முஸல்மான்கள் ஓடி வந்து நெருப்பை அணைத்தனர். தண்ணீர் இன்மையால், நெருப்பை அணைக்கக் கொட்டகைகளைத் தகர்த்து எறிய வேண்டி இருந்தது. குடிசைக்காரர்கள் வெளியேற மறுத்தமையின் அவர்களை அடித்து அப்புறப் படுத்திய பிறகே அந்தக் குடிசைகளைத் தகர்த்து எறிய முடிந்தது. நன்மை புரிவதற்குக்கூட ஹிம்சை வழியை மேற்கொள்ள வேண்டி இருந்தது; இதன்பிறகு அவர்கள் என்னிடம் வந்து “எங்கள் குடிசைகளைப் பிரித்தது எவ்வளவு அதிர்ஷ்டம்; அதனல்தான் நாங்கள் பிழைத்தோம்” என்று கூறிச் சந்தோஷப் பட்டனர். அவர்களை அடித்து விலக்கியது பற்றிக்கூட அவர்கள் மகிழ்ச்சி யடைந்தனர். ஆனலும் அவர்களுடைய பணிந்து போகும் இந்த இயல்பைக் கண்டு நான் வெட்கப்பட்டேன்.

அவர்கள் வேலை முடிந்தவுடன், கிராமத்தின் நடுவில் வந்து கூடிச் செய்தித் தாள் படிக்கவும், இராமயண, மகாபாரதம் கேட்க வசதியாகவும் ஒரு சிறிய கட்டிடம் கட்ட விரும்பினேன். அது ஒரு வகை 'கிளப்' போன்றிருக்க வேண்டும் என நினைத்தேன். மகிழ்ச்சி யற்று அவர்கள் கழிக்கும் மாலை நேரத்தை நினைத்து நான் வருந்தினேன். ஒரு பாட்டின் ஒரே அடியைத் திருப்பித் திருப்பிப் பாடுவது போன்றிருந்தது அது. நாளா வட்டத்தில் கட்டடம் கட்டி முடிந்தது. ஆனால் அதை ஒரு நாளும் அவர்கள் பயன்படுத்த வில்லை. ஒரு ஆசிரியரை நியமித்தேன் என்றாலும் பிள்ளைகள் ஏதாதது ஒரு சாக்குச் சொல்லிக் கொண்டு பள்ளிக்கூடம் வராமல் இருந்து விட்டனர்.

இதன் எதிராக மற்றொரு கிராமத்திலிருந்த முஸ்லீம்கள் என்னிடம் வந்து "எங்கட்கு ஓர் ஆசிரியரைத் தர முடியுமா? அதன் செலவை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்" என்று கேட்டார்கள். அதற்கு நான் இணங்கவே அவர்கள் கிராமத்தில் ஒரு பள்ளிக்கூடம் தொடங்கப்பெற்றது; அது இன்னும் இருந்துவரும் என்று நினைக்கிறேன். என்னுடைய கிராமத்தில் ஒன்றுமே செய்ய முடியவில்லை; ஏனென்றால் அவர்கள் தன்னம்பிக்கையை முற்றிலும் இழந்து விட்டிருந்தனர்.

பிறரை நம்பியே வாழும் பழக்கம் கற்பனைக் கெட்டாக் காலத்திலிருந்தே நமக்கு வந்துள்ளது. பழங் காலத்தில் ஒரு செல்வந்தன் கிராமத்தின் தூணாகவும் வழிகாட்டியாகவும் இருந்து வந்தான். சுகாதாரம், கல்வி ஆகிய அனைத்தும் அவனுடைய பொறுப்பாக இருந்து வந்தது. அந்த முறையை நான் போற்றியுள்ளேன். ஆனால் அத்தகைய முறையால் சாதாரண மனிதனுடைய தன்னம்பிக்கை பெரிதும் பாதிக்கப்பட்டதென்பதும் உண்மைதான்.

என்னுடைய எஸ்டேட்டில், நீண்ட தூரத்திற் கப்பால் ஆறு இருந்தமையின் தண்ணீர்ப் பஞ்சம் பெரிய பிரச்னையாக இருந்தது. என் ரயத்துக்களைப் பார்த்து "நீங்கள் ஒரு கிணறு தோண்டினால் அதற்கு செமென்ட் பூசித் தருகிறேன்" என்று கூறுகிறேன். அதற்கு அவர்கள் "நீங்கள் மீனைப் பொறிப்பதற்கு அந்த மீனின் எண்ணெயையே எதிர்பார்க்கிறீர்கள். நாங்கள் கிணற்றைத் தோண்டினால், தாகமெடுத்தவர்கட்குத் தண்ணீர் கொடுத்த புண்ணியத்தால் நீங்கள் மோக்ஷம் போவீர்கள். ஆகவே புண்ணியம் உங்களைச் சேர, வேலையை மட்டும் நாங்கள் செய்ய நேரிடும்" என்று கூறிவிட்டார்கள். இத்தகைய செயல்களைப் பற்றிய

கணக்கு, சுவர்க்கத்தில் வைக்கப்படுமென்றும், பெரிய கௌரவத்தைச் சம்பாதித்த காரணத்தால், ஏழாவது சுவர்க்கத்திற்கு போய் விடுவேன் என்றும் கிராம மக்களுக்குக் கொஞ்சம் தண்ணீர் மட்டுமே கிடைக்குமென்றும் அவர்கள் கருதியதாகத் தெரிகிறது. அந்தத் திட்டத்தையே நான் கைவிட்டு விட்டேன்.

மற்றோர் உதாரணந் தருகிறேன். எங்கள் எஸ்டேட்டிலிருந்து குஷிட்டியா[7] வரையில் ஒரு சாலையை நிர்மாணித்தேன். அந்தச் சாலையின் பக்கத்தில் குடி இருப்பவர்களை நோக்கி "இந்தச் சாலையைப் பாதுகாப்பது உங்கள் பொறுப்பு. அதில் ஏற்படும் குண்டு குழிகளை நீங்கள் ஒன்றுகூடிப் பழுது பார்த்துக் கொள்ளுங்கள்" என்று கூறினேன். உண்மையைக் கூறினால் அவர்கள் மாட்டு வண்டி அதிகம் போய் வந்ததால்தான் அந்தச் சாலை மழைக்காலத்தில் பழுதடைந்தது. உடனே அவர்கள் "குஷிடியாவிலிருந்த பணக்காரர்கள் வந்து போவதற்குரிய சாலையை நாங்கள் பழுது பார்க்க வேண்டுமா?" என்று கூறிவிட்டனர். தங்களுடைய உழைப்பில் ஏற்பட்ட பயனை மற்றவர்களும் அனுபவிக்கிறார்கள் என்ற எண்ணத்தைக்கூட அவர்களால் பொறுக்க முடியவில்லை. இவ்வாறு நிகழ்வதைவிட அவர்கள் தொல்லைகளைக் கூடப் பொறுத்துக் கொள்ளத் தயாராக இருந்தனர்.

நம்முடைய கிராமங்களில் வாழும் ஏழை மக்கள் பல அவமரியாதைகளைச் சகித்துக் கொண்டுள்ளனர்; அதிகாரமுள்ளவர்கள் பல இன்னல்களைப் புரிந்துள்ளனர் அவர்கட்கு. அதனெதிரில் அதிகாரமுள்ளவர்கள் எல்லாச் சமுதாய நல வேலைகளையும் செய்ய வேண்டி இருந்தது. கொடுங் கோன்மை, தருமம் என்ற இந்த இரண்டின் இடைபட்டுக் கிராமவாசிகள் சுய மரியாதையையே இழந்து விட்டனர். தாங்கள் அனுபவிக்கும் துன்பங்கட்குச் சென்ற பிறவிகளில் செய்த பாபமே காரணம் என அவர்கள் எண்ணுகின்றனர். மேலும், நல்வாழ்வு வாழ்வதற்கு, தகுந்த அளவு நன்மைகள் புரிந்து மறு பிறப்பு எடுக்க வேண்டும் என்றும் நம்புகின்றனர். துன்பத்திலிருந்து விடுதலையடைய வழியே இல்லை என்ற உறுதியான நம்பிக்கை அவர்களை உதவியற்றவர்களாகச் செய்து விட்டது.

ஒரு காலத்தில் கிராமத்தில் தண்ணீருங் கல்வியுங் கிடைக்குமாறு செய்வது புகழ் பெறுங் காரியம் எனப் பணக்காரர்கள் நினைத்தனர். அவர்களுடைய நல்லெண்ணத்தினால் கிராமங்கள் நன்கு வாழ்ந்தன. ஆனால் அவர்கள் நகரங்களில் குடியேறியவுடன்

கிராமங்களில் தண்ணீர்ப் பஞ்சம் தலை விரித்தாடியது ; மலேரியாவும், காலராவும் பரவலாகப் புகுந்தன ; கிராமங்கள்தோறும் மகிழ்ச்சி ஊற்றுக்கள் வறண்டன. நம்முடைய கிராமங்களைப் போலச் சுவை யற்ற வாழ்வு வாழும் மக்களைப் பார்ப்பது கடினம்.

இதனை-நீக்கும் வழியே எனக்குத் தென்படவில்லை. பன்னூறு ஆண்டுகளாக வலு விழந்து வாழ்ந்து அதன் பயனாகச் சுய முயற்சி என்பதையே மறந்து நிற்கும் மக்களுக்கு உதவிசெய்வ தென்பதே இயலாத காரியம். இருந்தாலும் வேலையைத் தொடங்க வேண்டும் என்று நினைத்தேன். அந்த நாட்களில் எனக்கு உதவியாக இருந்தவர் காளி மோகன்[8] ஒருவர்தாம். காலையும் மாலையும் வெப்பு நோயால் அவதிப்படுவார் அவர். என்னுடைய மருந்துப் பெட்டி மூலம் அவருக்கு நானே மருத்துவஞ் செய்தேன். இந்த மருத்துவ முறை யில் அவரைப் பிழைக்க வைக்க முடியும் என்று நான் நம்பவே இல்லை.

"எதனையாவது கொடுப்பதானால் மரியாதையுடன் கொடு" என்று சாத்திரம் பேசுகிறது. இந்த முறையில்தான் நான் வேலை செய்யத் தொடங்கினேன். என்னுடைய அலுவல் அறையிலிருந்து கொண்டே குடியானவர்கள் கலப்பைகள், எருதுகளுடன் வயலுக்குச் செல்வதைக் கவனித்து வந்துள்ளேன். அவர்களுடைய நிலங்கள் சிறு சிறு துண்டுகளாக இருந்தன ; அவரவர்களுடைய துண்டுகளை அவரவர்கள் உழுதனர். நிலங்கள் இவ்வாறு இருப்ப தால் அவர்கள் செலவழிக்கும் சக்தி வீணாயிற்று. ஆகவே அவர் களை வரவழைத்து "உங்கள் நிலங்கள் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து உழவு செய்யுங்கள். அனைவரிடத்திலும் உள்ள வசதி களையும், வலிமையையும் ஒன்று சேருங்கள். அப்பொழுது நீங்கள் டிராக்டர்களைக் கூடப் பயன்படுத்த முடியும். நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து உழைத்தால் தனிப்பட்டவர்களுடைய வயல்களில் ஏற்படும் சிறிய மாறுதல்கள் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. எவ்வளவு இலாபம் கிடைத்தாலும் நீங்கள் அதனைப் பங்கிட்டுக் கொள்ளலாம். கிராமத்தில் உற்பத்தியாகும் பொருள்களை ஓர் இடத்தில் சேகரித்து வைத்தால் நீங்கள் வியாபாரிகளிடமிருந்து நல்ல விலை பெற முடியும்" என்று கூறினேன். இதைக் கேட்டுக் கொண்டிருந்த அவர்கள் "இந்தக் கருத்து நன்றாகத்தான் இருக் கிறது. ஆனால் நடைமுறையில் இதனை எவ்வாறு நிறைவேற்று வது ?" என்று கேட்டனர். அதற்குரிய அறிவும் பயிற்சியும் எனக்கு இருந்திருக்குமாயின் "நான் அந்தப் பொறுப்பை ஏற்றுக்

கொள்கிறேன்" என்று கூறியிருப்பேன். அவர்கள் அனைவருக்கும் என்னைத் தெரியும். ஆனால் உதவி செய்ய வேண்டும் என்று நினைப்பது மட்டும் உதவியாகி விடாது. முட்டாள்தனமான உதவியைப் போல ஆபத்தானது வேறு எதுவுமில்லை. ஒரு முறை கிராமத்தார்கட்கு உதவி செய்வதற்காக நகரத்து இளைஞர் சிலர் சென்றனர். உடனே கிராம மக்கள் அவர்களை எள்ளி நகையாடி "இதோ கால் ரூபாய்ப் பெரிய மனிதர்கள் வருகிறார்கள்" என்று கூறி விட்டனர். இந்த நகர இளைஞர்கட்கு கிராமிய மொழியும், அவர்களுடைய பழக்க வழக்கங்களும் தெரியாது என்பதில் புதுமை ஒன்றும் இல்லை.

இதற் கேதாவது செய்தாக வேண்டும். என்னுடைய மகனையும், சந்தோஷையும்[10] விவசாயம், பால் பண்ணை முறைகளைக் கற்றுக் கொள்வதற்கு வெளிநாடுகட்கு அனுப்பினேன். பல்வேறு வழிகளில் சிந்திக்கவும் வேலை செய்யவும் தொடங்கினேன்.

அந்த நிலையில்தான் இந்த வீட்டை வாங்கினேன். ஷிலைதாவில் தொடங்கிய பணியை இங்கே தொடர்ந்து செய்ய முற்பட்டேன். இடிந்துபோன இந்த வீடு பேய்க் கோட்பட்டதாகக் கூறினார்கள். இதனைப் பழுது பார்ப்பதற்கு ஏகப்பட்ட பணத்தைச் செலவு செய்தேன். பின்னர்ச் சிறிது காலம் ஓய்வாக இருந்தேன். "இந்த வீட்டை விற்று விடு" என்று ஆண்டுரூஸ்[11] கூறினார். "இந்த வீட்டை நான் வாங்க நேர்ந்ததால் இதில் ஏதாவது ஓர் உட்கருத்திருக்க வேண்டும். என் வாழ்நாளில் கொண்டுள்ள இரண்டு குறிக்கோள்களில் ஒன்று இதன் மூலம் பூர்த்தியாகும்" என்று எனக்குள் சிந்தித்தேன். அது எவ்வாறு எப்பொழுது நடைபெறும் என்று எனக்குத் தெரியாது. நல்ல நேரத்தில் வறண்ட பூமியில் விதை தெளிக்கப்பட்டாற்கூட அது திடீரென்று முளைக்கத் தொடங்குகிறது. அந்த நேரத்தில் அப்படிப்பட்ட குறிகள் ஒன்றுந் தோன்றவில்லை. என்றாலும் மெள்ள அந்த விதை முளை விடத் தொடங்கியது.

என்னுடைய நண்பர் 'எல்ம் ஹர்ஸ்ட்' பெரிய அளவுக்கு உதவி புரிந்தார். அவர்தாம் இந்த இடத்தை ஒரு தனிப்பட்ட பணியைச் செய்யும் களமாக மாற்றிப் படிப்படியான முன்னேற்றம் காணுமாறு செய்தார். இதனைச் சாந்தி நிகேதனுடன் இணைப்பது முறை யன்று.

இன்னும் ஒரு வார்த்தையுடன் என் உரையை முடிக்கிறேன். மக்களின் அகத்திலிருந்து ஓர் ஆற்றல் வேலை செய்யத் தொடங்கு

கிறதென்பதை நாம் காண வேண்டும். 'ஸ்வதேசி சமாஜ'[12] (சமுதாயம் அரசாங்கமும்) நான் எழுதிக் கொண்டிருக்கும் பொழுது இதே கருத்து எனக்கு உதயமாயிற்று. நான் அப்பொழுது என்ன சொல்ல நினைத்தேனென்றால், நாடு முழுவதையும் பற்றி நாம் சிந்திக்க வேண்டியதில்லை என்பதுதான். ஒன்று அல்லது இரண்டு கிராமங்களில் நம் பணியைத் தொடங்கலாம். உதவி இன்மை, அறியாமை என்ற விலங்குகளிலிருந்து ஒரு கிராமத்தை விடுதலை செய்தாலுங்கூட இந்தியா முழுவதற்கும் ஓர் இலட்சியத்தை உண்டாக்கக் கூடும். இந்த எண்ணந்தான் எனக்கு அப்பொழுது உதயமாகி இன்னும் இருந்து கொண்டு வருகிறது. சில கிராமங்களையாவது இந்த முறையில் புனரமைப்புச் செய்து விட்டால், அவையே என்னுடைய இந்தியா என்று நான் சொல்லத் தயார். உண்மையான இந்தியாவைக் கண்டு பிடிப்பதற்கும் அதுவே வழியாகும்.

—1928.

## 16. கூட்டுறவு

ஒவ்வொரு நாட்டிலும் உடையார் தொகையைக் காட்டிலு இல்லார் தொகை பல மடங்கு அதிகமாகவே உள்ளது. அப்ப யானுல், குறிப்பிட்ட எந்த ஒரு நாட்டை வறுமை நிறைந்த நா என்று கூறுவது? எந்த நாட்டில் வாழ்க்கைச் சம்பாதனைக்குரி வசதிகள் குறைவாக உள்ளனவோ, எங்கு அந்தக் குறைவா வழிகளும் அடைக்கப்பட்டுள்ளனவோ, அவற்றையே வறுமை யுடைய நாடுகள் என்று குறிப்பிட வேண்டும். எந்த நாட்டில் இல்லாதவர்கள், தாங்களும் உடையவர்களாக ஆக முடியு என்று எதிர்பார்க்கிருர்களோ அங்கு, அந்த நம்பிக்கையே ஒ செல்வமாக இருக்கிறது.

நம்முடைய நாட்டில் நிதி ஆதாரம் குறைவாக இருக்கிறது என்று கூறிவிடுவது மட்டும் போதாது; அதனைவிட வருந்தத் தக் நிலைமை என்ன வென்ருல் நம்பிக்கையே இழந்து நிற்பதுதான் பசியின் கொடுமையைப் பொறுத்துக் கொள்ள நேரிடும்போதெல் லாம் விதியின் மேலேயே எல்லாப் பழியையும் சுமத்தி விடுகிறேம் ஆண்டவனின் கருணை, அல்லாவிடில் அயல் நாட்டாரின் அன்ப இவையே நம்மைத் தூக்கிவிட முடியும் என்ற கருத்தில் நாம் புழுத் யில் புரள்கிறேம். நம்முடைய கையிலேயே இதற்கு மாற்ற இருக்கிற தென்பதை நாம் அறியவில்லை.

அதனுல்தான், பிச்சை போடுவதைவிட நம்பிக்கை யூட்டுவது சிறந்ததாகப் படுகிறது. ஒரு மனிதன் ஆழத்தில் புதைந்து போவது, அவனுடைய குறையைத்தான் காட்டுகிறதே தவிர, அது விதியின் விளையாட்டோ, கட்டளையோ அன்று. துன்பம் ஏற்கெனவே விதிக்கப்பட்டுள்ளது; எனவே அதிலிருந்து விடுதலையே கிடையாது என்று நினைத்துக் கொள்வதால், அந் துயரத்தை நிரந்தரமான தாக்கிக் கொள்கிறேம். வலிமையை ஓயாது புதுப்பித்துக் கொள்ளு தலின் மூலம் புதிய வழிகளைக் காண்பதே முன்னேற்றத்தின் இரகஸ்யம். அதிர்ஷ்டச் சக்கரம் திரும்ப வேண்டும் என்று முயற்சி இல்லாமல் சோம்பிக் காத்துக் கொண்டிருக்கும் மனிதன் ஆண்மையை இழந்தவனுகவே கருதப்பெறுவான்.

மனிதன், தன்னை யொத்த பிற மனிதர்களுடன் கூடிக் கலக்காத நேரத்தில் தன் முழு வளர்ச்சியையும் அடைய முடிவதில்லை. ஒற்று மைப்படும் இந்த வன்மையைப் பெற்றவனே முழு மனிதன் என்று

கருதப்பெறுவான். தனித்து நிற்கும் மனிதன் துண்டிக்கப்பட்ட ஜன்ம மாவான். குழந்தை தனித்து இருக்க நேரும்பொழுதுதான் பிசாசைக் கண்டு அஞ்சுகிறது. ஒற்றையான மனிதன் தன் வன்மைக் குறைவைக் கண்டு அஞ்சுவதாகும் இது. பிசாசைக் கண்டு அஞ்சும் 'இந்த அச்சத்தின் நகல்களே நம்முடைய மற்றைய அச்சங்கள்.

வறுமைபற்றிய அச்சம் இருக்கிறது. நாம் ஒரு குழுவாக ஒன்று கூடி எதிர்த்தால் இதனைப் போக்கிவிட முடியும். பலரும் ஒன்றுகக் கூடினமையால்தான் வாழ்வில் சிறப்புடைய அனைத்தை யும் மனிதன் சாதிக்க முடிந்தது. சிறப்புடையவை என்பவை அறிவு, நம்பிக்கை, சக்தி, செல்வம் ஆகியவைகளாம். மணற் பாங்கான பூமி ஒட்டுதல் இல்லாமையினுல் ஒன்றையும் விளைய விடுவதில்லை. சத்துப்பொருள் அந்த மணலில் தங்க முடியாமல் இடை வெளிகள் மூலம் ஓடிவிடுகிறது. இந்தச் சந்துக்களை அடைக்கக் கூடிய மட்கிய தழை, களிமண் போன்றவற்றை அதில் கலப்பதால் அந்த இடைவெளிகளை அடைத்துவிட முடியும். மனிதர்களைப் பொறுத்தமட்டிலுங்கூட இதுவே உண்மை. அவர்களின் இடையே இடைவெளிகள்' பெரிதாக இருக்கின்றவரை அவர்களுடைய ஆற்றல் பயன்படுவதில்லை.

மனிதன் மற்ற மனிதர்களுடன் சேரும்பொழுதுதான் தன்னைத் தானே காண முடிகிறது என்று கூறுகையில் ஓர் அடிப்படையை நாம் ஆராயவேண்டும். மனிதன் பேசமுடியும்; அவனுக்கென்று ஒரு மொழி இருக்கிறது. விலங்குகட்கு மொழி இல்லை. தனக்குள் ளேயே தான் அழுந்திக் கிடக்கின்ற ஒரு மனம், ஒற்றுமைப்படுத்தும் இயல்புடைய மொழி காரணமாகப் பிறருடன் சேர முடிகிறது. பேச்சின் மூலமாகத்தான் என்னுடைய மனம், பிற மனங்களில் சென்று தாக்க முடிகிறது. அதன் பயனுக அந்த மனங்களை யான் பகிர்ந்துகொள்ள முடிகிறது. அகத்தில் ஏற்படும் வறுமையைப் போக்கி வளர்ச்சியைச் செய்வது இந்தப் பேச்சு ஒற்றுமைதான்.

மனித குலம் மொழியை எழுத்து மூலம் வடித்துக்கொண்டு அதை நிலைநிறுத்தியவுடன் மனங்களுக்குள் ஏற்பட்ட தொடர்பு விரிவடைய லாயிற்று. வாய்மொழிகள் மிக நீண்டதூரம் செல்ல முடிவதில்லை. அவை காளாவட்டத்தில் அழிவுற்றதுடன், வாய்க்கு வாய் மாறும்பொழுது அவற்றின் பழைய நிலையை இழக்கின்றன. ஆனுல் வரி வடிவில் எழுதப்பெற்ற எழுத்து, கடலையும் மலையையுங் கடந்து சென்ருலும் இயல்பு மாறுவதில்லை. இந்த முறையில்

ஒவ்வொரு மனிதனும் கணக்கற்ற பேர்களின் எண்ணங்களைப் பங்கிட்டுக்கொள்ள முடியும்.

இதுமட்டு மன்று. உயிருடன் வாழ்பவர்கள் மனத்தை மட்டும் இந்த வரி வடிவ மொழி பிணிக்கவில்லை. மிகப் பழங் காலத்தில் வாழ்ந்தவர் மனத்தையுங்கூடப் பிணித்து, இடையிலுள்ள காலம் என்னும் தடையை உடைத்துவிடுகிறது; எண்ணங்களின் இடையே ஏற்பட்ட இந்தத் தொடர்புதான் நாகரிகம் என்பதையே உண்டாக்கிற்று. எந்த ஓர் ஒற்றுமை நிலையில், ஒவ்வொரு தனி மனிதனுடைய வலிமையும் அனைவருடைய ஆற்றலுக்கும் உதவி செய்கிறதோ, எந்த நிலையில் அனைவருடைய ஆற்றலும் தனி மனிதனுக்குக் காவலை நல்குகிறதோ அந்த நிலையே நாகரிகம் என்று கூறப்பெறும்.

வெறுக்கத் தகுந்த நம்முடைய வறுமையின் பின்னர், நாமே நம்மை ஒதுக்கிவைத்துக் கொண்டுள்ளோம் என்பதும், நம்முடைய மிகப் பெரிய பாரத்தை நாமே தாங்கிக்கொள்கிறோம் என்பதும் அறியக்கூடிய உண்மைகள். ஐரோப்பாவில் நீராவி யந்திரம் வந்த பொழுது பல கைத்தொழிலாளர் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர். மனிதனுடைய கைகள் எவ்வாறு யந்திர சக்தியின்முன் போட்டியிட முடியும்? ஆனால் ஒரு நெருக்கடியான நிலையில் ஐரோப்பிய மக்கள் ஒருவரைப்பற்றி மற்றவர் சிந்திக்கின்றனர். எங்கே நாகரிகம் வலிமையுடைய ஆற்றலாக இருக்கிறதோ அங்கே சகோதர உணர்ச்சியும் வலுவாக இருக்கிறது. மக்களினுடைய ஒற்றுமை முயற்சிகள் அவர்களுடைய ஆற்றலாகவும், முதலாகவும் இருத்தல் கூடும் என்ற எண்ணம் தோன்றலாயிற்று. பலருடைய எண்ணங்கள் ஒற்றுமைப்பட்டமையின் நாகரிகம் பெற்ற மனிதன் நல்ல வளர்ச்சியைப் பெற்றான். அதேபோலப் பலருடைய ஒற்றுமையான முயற்சி புதிய வேகத்தைப் பெறக்கூடும். மேலும் மேலும் வளத்தைத் தருகின்ற இந்தக் கூட்டுறவு ஐரோப்பாவில் மேலும் வளருகின்ற பாதையாகிவிட்டது. இதைவிடச் சிறந்ததொரு பாதையை உலகில் வேறு எங்கும் நான் காணவில்லை.

ஒவ்வொரு முறையும் நான் ஒரு சிறிய கிராமத்தைச் சென்று காணவேண்டி இருக்கிறது. ஒரு தாழ்வாரத்தில் நின்றுகொண்டு பல மைல்கள் நீண்டு கிடக்கும் வயல்களைக் காண்கிறேன். இந்த நிலங்களைப் பல குடியானவர்கள் பயிர் செய்கின்றனர். சிலர் இரண்டு பிகாக்களையும்,[1] சிலர் நான்கையும், சிலர் பத்துப் பிகாக்களையும் வைத்திருக்கின்றனர். முதன் முதலில் கண்ணிற்படும்

மெய்ம்மை என்னவென்றல், ஒரு சில குடியானவர்களே தேவை யான எருதுகளை வைத்திருக்கின்றனர். மற்றுஞ் சிலர் மிகக் குறைவாகவே வைத்துள்ளனர். காலா காலத்திலோ அன்றிக் காலந் தாமதித்தோ உழவு தொடங்கப்படலாம்; அது உழவு ஆதா ரங்களைப் பொறுத்து இருக்கிறது. இந்தத் துண்டு நிலங்களின் எல்லைகள் வளைந்து வளைந்து செல்வதால்,[2] உழவுச் சால் வளைந்து சென்று அதனல் உழவு மாடுகளின் உழைப்பு வீணுகிவிடுகிறது. ஒவ்வோர் உழவனும் அந்த அந்தச் சிறிய நிலங்களை மட்டும் தன் னுடையது என்று கருதாமல், பக்கத்திலுள்ள பகுதிகளையும் சேர்த் துக்கொண்டு உழவு செய்தால் ஒரு சில கலப்பைகளும், உழவு மாடுகளுமே போதுமானதாக இருப்பதோடு, பயன் அற்ற உழைப் பையும் மிச்சம் செய்யலாம். அறுவடைக்குப் பிறகு குடியானவர் கள் தங்கள் தானியங்களை ஒன்ருகச் சேமித்து ஒன்ருக விற்ப தானல் நிறைந்த அளவு சக்தியும் செலவும் மிஞ்சும்.

குறைந்த அளவு நேரத்தில் நிறைந்த அளவு வேலையைச் செய் பவனே வெற்றி பெறுகிருன். அதனல்தான் மனிதர்கள் கருவி களைப் பயன்படுத்துகிருர்கள். இந்தக் கருவிகளைப் பயன்படுத்து வதால் இரண்டு கைகள் பத்து அல்லது இருபது கைகளுக்குச் சமமாகின்றன. மனிதன் தன்னுடைய உடல் வலிமையால் அல்லாமல் கருவிகளைப் பயன்படுத்துவதால்தான் உழவுத் தொழிலி லிருந்து சிறந்த பயனைப் பெறுகிருன். உழவில் மட்டுமல்லாமல், போக்கு வரத்து, மற்றும் நெசவு, எண்ணெய் ஆட்டுதல், சர்க்கரை காய்ச்சுதல் ஆகியவற்றிலும் கருவிகளே உதவுகின்றன. கலப்பை, தறி, மாட்டு வண்டி, குதிரை வண்டி, செக்கு ஆகியவை, தேவைப் பட்ட நேரத்தைக் குறைத்ததுடன், உற்பத்தியையும் பெருக்கி விட்டன. இவற்ருல்தான் முன்னேற்றம் சாத்திய மாயிற்று. இவை இல்லாவிடின் மனிதனை வாலில்லாக் குரங்கிலிருந்து வேறு பிரித்துக் காட்ட ஒன்றுமே இருந்திராது.

நவீன காலத்தில் ஆவியாலும், மின்சாரத்தாலும் இயக்கப் படும் பெரிய யந்திரங்கள் வருகின்றவரை, மனிதன் தன் சிறிய கருவிகளையே பயன்படுத்தி வந்தான். பெரிய யந்திரங்கள் கருவிகளைத் தோற்கடித்தன; கருவி ஏந்திய கைகள் வெறுங் கைகளைத் தோற்கடித்தன.

நம்முடைய உழவர்கள் கூட இவற்றைப்பற்றிச் சிந்திக்க வேண்டிய காலம் வந்துவிட்டது; சிந்திக்க மறுத்தால் அவர்கள் பிழைத்து வாழ முடியாது. இப்பொழுது வெறும் சித்தாந்தங்களைப்

பற்றிப் பிரசங்கம் செய்வதில் பயனில்லை; நடைமுறை மூலம் சரியான விடைகளைக் காண முயலவேண்டும். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இத் திசையில் வேகமாக முன்னேறுகின்றனர். அவர்கள் யந்திரங்களின் உதவியினுலேயே உழவு, அறுவடை, கட்டுக் கட்டல், தானியத்தைக் களஞ்சியத்தில் இடல் ஆகியவற்றைச் செய்கின்றனர். நம்முடைய நாட்டிலும் இம் முறையை மேற்கொண்டால் பல நன்மைகள் கிடைக்கும். விவசாயம் தொடங்கு முன்பு மழையை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்க வேண்டியுள்ளது. ஓர் உழவு மழை பெய்தவுடன் ஒரு சிறு துண்டு நிலத்தை மேலாகச் சுறண்டத்தான் முடிகிறது. சில வாரங்கட்கு மழை இல்லை யென்ருல் தானியம் தெளிப்பதையே தள்ளிப்போட வேண்டி இருக்கிறது. அதன் பயனுகக் கதிர் முற்றி வருங் காலத்தில் பருவக் காற்ருல் ஏற்படும் மழையில் பயிர்கள் மூழ்கிவிடுகின்றன. அறுவடையிற்கூடத் தொல்லை ஏற்படுகிறது. அதிகப் படியான உழைப்பாளிகளைக் கிராமத்திற்குள்ளேயே பெறுவது கடினமாகலின், கிராமத்திற்கு வெளியே இருந்து கூலியாட்களைப் பிடிக்கவேண்டி இருக்கிறது. அறுத்த கதிர்கள் வயலில் கிடக்கும் போது அதிக மழை பெய்தால் பெரு நஷ்டம் ஏற்படுகிறது. யந்திரக் கலப்பையும், அறுவடை செய்யும் யந்திரமும் இருந்தால் சிறிய பருவ மாறுதல்களைக்கூட நன்கு பயன்படுத்திக்கொள்ளலாம். உரிய காலத்தில் பயிரிடவும், முற்றிய கதிர்களைச் சேகரிக்கவும் முடியும்.

இந்த யந்திரங்களைப் பெரிய பரப்புடைய வயல்களில்தான் பயன்படுத்த முடியுமென்பதும், பெரிய அளவில் இதற்கு முதல் தேவைப்படும் என்பதும் உண்மைதான். நம்முடைய குடியானவர்களின் சக்திக்கு மேற்பட்டது இது என்று கூறிவிட்டு வாளா இருந்து விட்டால் அழிவை வரவேற்பதைத் தவிர வேறு வழி யில்லை. யந்திர வசதிகள் பெருகிக் கொண்டிருக்கின்ற இந்தக் காலத்தில் நம்முடைய குடியானவர்களும், தொழிலாளர்களும், இந்த யந்திரங்களை வரவேற்க வேண்டும்; இன்றேல் கொஞ்சங் கொஞ்சமாகப் பின்னேறிச் சென்று படுகுழியில் விழ நேரிடும்.

நம்பிக்கையை இழந்தவன் அழிய வேண்டியதுதான். பிச்சை தருவதாலோ அன்றி வேறு உதவிகள் செய்வதாலோ அவனை யாரும் காப்பாற்றிவிட முடியாது. தனி மனிதன் செய்ய முடியாததை ஐம்பது மனிதர்கள் ஒன்று கூடினுல் செய்துவிட முடியும் என்பதை அவன் உணருமாறு செய்ய வேண்டும். இதுவரையில் தனித்

தனியே உழவு செய்து வந்த ஐம்பது குடியானவர்களும் தங்களுடைய நிலம், உழைப்பு, களஞ்சியம் ஆகியவற்றை ஒன்று சேர்த்தால் மிகப் பெரிய நடைமுறை முதலைச் சேர்த்துவிட முடியும். அப்பொழுது யந்திரங்களைச் சேகரிப்பது முடியாமற் போகாது. தினம் ஒரு சேர்[3] மட்டும் அதிகப்படியான பாலை உற்பத்தி செய்யக்கூடிய குடியானவன் தகுந்த முறையில் வாணிபம் செய்ய முடியாது. ஆனால் நூறு மனிதர்கள் தங்களுடைய பாலை எல்லாம் ஒன்றாகச் சேகரித்தால் ஒரு வெண்ணெய் எடுக்கும் யந்திரத்தை விலைக்கு வாங்கி நெய் தயாரித்து வியாபாரம் செய்ய முடியும். ஐரோப்பாவில் இதுவே சகஜமாக நடைபெற்று வருகிறது. டென்மார்க் போன்ற சிறு நாடுகளில் வாழும் மக்கள் ஒன்றாகச் சேர்ந்து வெண்ணெய், பாலடைக் கட்டி ஆகியவற்றை ஒன்றாகச் சேர்த்து வாணிகம் செய்து வறுமை என்பதையே அவர்கள் வாழ்விலிருந்து ஓட்டி விட்டனர். மேலும் வாணிகத்தால் ஏற்பட்ட தொடர்பால் இந்தக் குடியானவர்களும், பால்காரர்களும், உலக மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு பிறரைப் புரிந்து கொள்ளல், பிற நாட்டாரை அறிதல் ஆகியவற்றையும் கற்றுள்ளனர்.

ஒரு சம்பாதனையைச் செய்வதற்கு, பலர் ஒன்று கூடும் இந்தப் பழக்கத்தை, ஐரோப்பாவில் கூட்டுறவு முறை என்று கூறுவார்கள். நம்முடைய நாட்டில் பன்னெடுங் காலமாக இருந்து வரும் வறுமையையும், தேக்கத்தையும் விடுவிக்க வேண்டுமானால் இந்த முறையால்தான் முடியும்.

கற்றறிந்தவர்கள் நாட்டிற்கு உழைக்க விரும்புகின்றனர். நோயாளிகட்கு உதவுதல், பசித்தவர்க்கு உணவு கொடுத்தல், ஏழைகட்குப் பிச்சை போடுதல் ஆகியவை அவற்றுள் சில வழிகளாம். கிராமம் முழுவதும் நெருப்பு பற்றி எரியும்பொழுது அதை அணைக்க விரும்பி, அதற்காக அதன் மேல் ஊதுவது போலாகும் இது. புறத்தே காணப்படும் குறிகட்கு மருத்துவம் செய்வதன்மூலம், நம் நோய்களைக் குணப்படுத்தி விட முடியாது. நோய்க்குரிய காரணங்களை ஆராய்ந்து நீக்க வேண்டும். முதலாவது, மக்கள், மாகாண வெறி பிடித்து அலையக்கூடாது; அவர்கள் உலக சமுதாயத்தின் உறுப்பினர்கள் என்பதை உணரவேண்டும். இரண்டாவதாக, பொருளாதாரத் துறையில் அவர்களுடைய உழைப்புகள், பிற இடங்களில் உள்ள மக்களின் உழைப்புடன் ஒருமைப்படுத்தப்பட வேண்டும். மற்றொரு வகையாகக் கூறினால் நீண்டு உயர்ந்த மரங்களைப் போல, வேர் ஓடிச் செல்வதற்கு அகன்ற பூமியும் கிளைகள்

பரந்து விரிந்து செல்வதற்கு ஒளியும் காற்றும் மிகுதியாகத் தேவை. அப்பொழுது பழம் பழுக்கும் நிலை எளிதாகவும், மிகுதியாகவும் இருக்குமாகலின் அதுபற்றி யாரும் கவலைப்பட வேண்டியதில்லை.

## II

நாகரிகத்தின் ஒரு நிலையில் கிராமங்களை யெல்லாம் நகரங்கள் வென்று விடுகின்றன. இவ்வாறு காணுவதால் நகரங்களில்தான் நாட்டு மக்களின் வாழ்வு நல்ல முறையில் வெளிப்படுகிறது என்ற கருத்தில்லை. நாட்டின் அதிகாரம் முழுவதும் நகரத்தில் இறங்கி விடுகிறதாகலின் நகரத்திற்குப் புதியதொரு மதிப்பு ஏற்பட்டு விடுகிறது.

வங்காள கிராமத்தின் சமுதாய இயல்பு, நகர வாழ்க்கையிலும் ஓரளவு காணப்பட்டது. புறத் தோற்றத்தில் நகரம் கிராமத்திற்கு முற்றிலும் வேருகக் காட்சி யளித்தது. என்ருலும் சில இடங்களில் இரண்டும் குணப் பாங்கில் ஒன்ருகக் காட்சியளித்தன. மிகப் பெரிய நகரங்களைப் பொறுத்த மட்டிலுங்கூட இதுவே உண்மை. அவற்றின் கர்வத்தினூடேகூட கிராமங்களுடன் தமக்குள்ள தொடர்பை நகரங்கள் மறக்கவில்லை. ஒரு வீட்டின் உள் அறையையும் வெளி அறையையும் ஒத்திருந்தன அவைகள். செல்வமும் ஆடம்பரமும் வெளி அறையில் இருந்தன. ஓய்வும், வசதியும் உள் அறையில் இருந்தன. இவை இரண்டும் நெருங்கிய தொடர்பால் பிணைக்கப்பட்டிருந்தன.

இப்பொழுது அவ்வாறு இல்லை. சென்ற அரை நூற்ருண்டில் நகரம் எட்டிப் பிடிக்க முடியாத அளவுக்கு வளர்ந்து விட்டமையின், கிராமம் கொல்லைப்புற வழியிற் கூட நகரத்தை எட்ட முடியாத நிலைக்குச் சென்று விட்டது. இந்த உண்மையைத்தான் "உன் கொல்லைப்புறங்கூடப் பிறருடைய மண்ணுகும்"[4] என்ற பழமொழி அறிவுறுத்துகிறது. நகரங்களைச் சுற்றி முழுவதும் கிராமங்களே யுள்ளன எனினும் இவை இரண்டும் ஒன்றுக் கொன்று நூற்றுக் கணக்கான மைல்களுக்கப்பால் இருப்பவைபோலவே உள்ளன.

இந்தச் செயற்கைப் பிரிவினை ஒரு நன்மையையும் செய்யாது. இது ஏதோ நம்முடைய நாட்டில் மட்டும் காணப்படும் புதுமை எனக் கருத வேண்டா. நவீன யுகத்தின் அடையாளமே அது. மேனடுகளிலிருந்து அடித்த காற்று, சமுதாயப் பிரிவினை விதையைப் பரவலாக விதைத்து விட்டது. இதனுல் அமைதியும் மகிழ்ச்சியும் அழிந்ததோ டல்லாமல் வாழ்வின் அடிப்படையான பகுதியும்

அழிந்தது. எங்கணும் உள்ள மக்கள் சிந்திக்க வேண்டிய பிரச்னை யாகும் இது.

ஐரோப்பாவில் வளரும் நாகரிகம் பொது மக்களுடைய உயிரை உறிஞ்சித் தனிப்பட்ட ஓர் அதிகாரத்தை வளர்க்கிறது. மூங்கில் பூத்து விடுவது போன்றது அது; ஏனெனில் பூக்கள் தோன்றிய வுடன் மரத்தின் முழுச் சத்தையும் உறிஞ்சி விடுகிறது. இதற்கு ஆங்கிலத்தில் 'சுரண்டுதல்' என்று பெயர் கூறுவர். சிறிய உறுப் புக்கள் தம்மைவிடப் பெரிய உறுப்புக்களை விழுங்கிப் பெரியதாக ஆக யத்தனிப்பதாகும் இது. பெரியவை மெலிவடைய அடையச் சிறியவை பெருத்துக் கொண்டே போகும். இதன் பயன் என்ன வெனில், சமுதாய விரோதமான பகுதி வலுவடைந்து, பிரிவினை மனப்பான்மை யுடைய தனித் தன்மைகள் வளர்வதே யாகும்.

ஒரு நாட்டின் உயிர் மையம் அதன் கிராமங்களிலிருந்தாலும், நாட்டின் வன்மை அதன் நகரங்களில்தான் இருக்கிறதென்று முன்னமே கூறியுள்ளேன். நகரங்களில்தான் நிதி, அரசியல், ஜனநாயக சக்திகள் ஆகியவற்றை வளர்ப்பதற்கு வழிகளை ஆராய வேண்டும். இந்த வழிகள் சமுதாய வழிகளாக எப்பொழுதும் அமைவதில்லை. இங்கு மனிதர்களைவிட யந்திரங்கள் அதிக மதிப் புப் பெறுகின்றன. யார் யந்திரங்களின் மேல் ஆட்சி செலுத்து கிறார்களோ அவர்களிடமே அதிகாரம் அடைக்கலம் புகுகிறது. ஆகவே நகரங்கள் பெரும் போட்டிகட்கு இடமாக உள்ளன. ஒருவருக் கொருவர் உதவி செய்துகொள்ளும் மனநிலையை இங்கு யாரும் ஆதரிப்பதில்லை.

சக்தியை வளர்ப்பதற்குத் தனித்துவமும் போட்டியும் முக்கியத் தேவைகள் என்றாலும் அவற்றிற்குரிய எல்லைகளைத் தாண்டி விட் டால் ஆபத்து உறுதியாக வந்து விடும். நவீன நாகரிகம் உண்மையில் இந்த எல்லையைக் கடந்து விட்டது. இந்த நாகரிகம் பல உறுப்புக் களுடன் விளங்குவதால் பல்வேறு வகைப்பட்ட கருவிகள் மூலமே அதனை வெளிப்படுத்தவும் நிலைநாட்டவும் முடியும். இந்த வகை வாழ்க்கை முறையில், நிதி ஆதாரம் குறைவாகப் பெற்றிருப்பது, குற்றமாகவே கருதப்பெறும். இந்த முறை பலவகைப் பொருள் களின் மேலேயே நிலைத்து வாழ்கிறது. கல்வி, சுகாதாரம், சட்டம், நியாயம், செய்திப் போக்குவரத்து, இடம் விட்டு இடம் பெயர்தல், உணவு, வீடு, போர் நடத்தல், அமைதியை நிலை நிறுத்தல், ஒழுங் கைக் காப்பாற்றுதல் ஆகிய அனைத்தும் பெரிய அளவில் பணத்தைச் சாப்பிடுகின்றன. வறுமை அதனுடன்கூட மானக்

25

கேட்டையும் கொண்டு வருகிறது; ஏனெனில் இந்த நாகரிகத்தின் முற்போக்குக்கு வறுமை ஒரு தடையாகவே இருக்கிறது.

இன்றைய நிலையில் பணமே எல்லாச் சக்திகட்கும் மூல காரணமாகக் கருதப்பெற்று, அதற்கே அதிக மதிப்பு வழங்கப்படு கிறது. அரசியல் கொள்கைகூட ராஜ்யத்தை விஸ்தரிக்கும் முறை யில் அமைய வில்லை. வாணிகத்தையும் வியாபாரத்தையும் பெருக்கு வதையே பெரிதும் விரும்புகின்றனர். மேலும் செல்வத்தைப் பெருக் கும் வழியாகவே இது கருதப்படுகிறது. நாகரிகம், இவ்வாறு பல உறுப்புக் கொண்டதாக வளர்ச்சி அடையாத காலத்தில் அறிஞன், முனிவன், வீரன், உபகாரி என்ற இவர்களையே பணக்காரர்களைவிட அதிகமாகப் போற்றினர். அவர்கட்குக் காட்டப்பெற்ற மரியாதை மனித சமுதாயத்திற்கே காட்டப்பெற்றதாகும். பண வேட்டை மட்டும் ஆடுபவனை மக்கள் மதிக்கவில்லை. இன்றுள்ள அனைத்தும் செல்வத்தில் வாழும் ஒட்டுண்ணிகள் நாகரிகம். பணம் சம்பா திப்பது மட்டுமல்லாமல், பணத்தை வணங்குவதும் முக்கியமாகி விட்டது. இந்தப் பொய்த் தெய்வம் மனிதனிடம் காணப்படும் நன்மைகளை அழித்து விடுகிறது. வேறு எக்காலத்திலும் மனிதன் இந்த அளவு தனக்குத் தானே பகையாக இருக்கவில்லை. இந்த பணப் பசியைப்போல் வேறு எதுவும் இவ்வளவு கொடுமை உடைய தாகவும், சம நோக்கு அற்றதாகவும் இருக்கவில்லை. இந்த அகோர மான யானைப் பசிதான் நவீன நாகரிகத்தின் விளைவாகும்; இப் பசியைப் போக்கச் செய்யப்படும் முயற்சிகள் வேறு எல்லாவகை யான முயற்சிகளையும் தோற்கடித்து மேலோங்கி விடுகிறது.

பேராசையிலிருந்து பாவம் பிறக்கிறது; பாவம் அழிவைத் தருகிறது.[5] பேராசை சமுதாய விரோதமான தூண்டுதலாகும். இவை அனைத்தும் மனிதனுடைய சமுதாய நுண்ணறிவை வலு விழக்கச் செய்கின்றன. ஒவ்வொரு படியிலும் அகமுகப் போராட் டத்தை உண்டாக்குகிறது; மனிதனுடைய சமுதாய வாழ்க்கை யைக் கொடூரமாக வெடிக்கச் செய்து அவனுடைய வாழ்வை முடிக் கின்ற வரையில் இந்த நிரம்பாத பேராசை முடிவுறுவ தில்லை.

மேனாடுகளில் பெரும் பணம் சேகரிக்கின்றவர்கட்கும், அவ்வாறு அவர்கள் சேர்ப்பதற்குக் கருவிகளாக மட்டும் இருக்கின்ற வர்கட்கும் இடையே முடிவில்லாத போராட்டம் ஒன்று நடைபெறு கிறது. இந்த முரண்பாட்டைப் போக்கக் கூடிய வழி ஒன்றுந் தெரியவில்லை. ஏனென்றால் தொழிலாளரின் பேராசை முதலாளியின் பேராசைக்கு ஒரு சிறிதும் குறையவில்லை. நாகரிகத்தின் நன்மை

களை முழுவதும் அனுபவிக்க வேண்டி ஒவ்வொருவரும் மேலும் மேலும் பணத்தை நாடுகின்றனர். எங்காவது ஓரிடத்தில் இந்தப் போராட்டம் முடியும் என்று நினைப்பதுகூடப் பயனற்ற தாகி விடுகிறது.

சமுதாய வாழ்வில், என்று பேராசையும் அதிகார வணக்கமும் எல்லை கடந்து போகின்றனவோ அன்றே, மனிதன் மானிடத்தின் வளர்ச்சிக்கு உழைக்க முடியாமல் போகிறது. மனிதன் முழுத் தன்மை அடைய விரும்புவதை விட்டுவிட்டு அதிகாரத்தைப் பெற விரும்புகிறான். அத்தகைய சூழ்நிலையில் நகரம் முழு மதிப்பையும் அடைய, கிராமங்கள் ஒதுக்கப்படுகின்றன. எல்லாச் சந்தர்ப்பங் களும், எல்லா வசதிகளும், வாழ்க்கையை இன்பமாக அனுபவிக்கத் தேவைப்படுகின்ற அனைத்தும் நகரத்தில் குவிகின்றன. கிராமங்கள் உணவை உற்பத்தி செய்து தர மட்டும் உழைத்து உயிரைக் கையிற் பிடித்துக்கொண்டு வளர்கின்றன. சமுதாயம் ஒரு புறம் ஒளியும் மறு புறம் காரிருளும் பெற்று இரண்டாகப் பிரிக்கப்படுகிறது. இதே வகையில்தான் ஐரோப்பாவில் உள்ள நக்ர நாகரிகம் மனித னுடைய உயிர்ச் சத்தைப் பிளந்து விடுகிறது. பழைய கிரேக்க நாடும் நகரங்களைச் சுற்றியே அமைந்திருந்தது. அதனால் அங்குத் தலைவன் அடிமை என்ற பிரிவினை மீற முடியாததாக இருந்தது. ஆகவே மிகுந்த செல்வாக்குடன் சில காலம் வாழ்ந்த கிரேக்கம் ஒதுக்கப் பெற்று விட்டது. பழைய கால இத்தாலியுங் கூட நகர அடிப்படை யில் அமைந்து அதுவுஞ் சில காலம் அதிக அதிகாரத்தைச் செலுத் தியது. அதிகாரம் என்பது இயல்பாகவே சமுதாய எதிரி யாகலின் ஆண்டான் அடிமை என்ற வகுப்புப் பிரிவினையை உண்டாக்கி விடுகிறது. ஒரு சில யசமானர்கள் பெரும்பாலான அடிமைகளின் ஒட்டுண்ணி யாகின்றனர். இந்த ஒட்டுண்ணித்தனம் அவர்களு டைய மானிட இயல்பை அழித்து விடுகிறது.

மேனாடுகள், தம்மிடத்தில்மட்டு மல்லாமல் உலக முழுவதிலும் ஒளி இடங்களையும், இருட் டிடங்களையும் உண்டாக்கி விட்டன. அவற்றினுடைய தேவைகள் மிகப் பெரிதாக வளர்ந்து விட்டமையின் அந்த நாட்டு எல்லைக்குள் கிடைக்கும் பொருள்களால் அவற்றைத் திருப்திப்படுத்த முடியவில்லை. பிரிட்டிஷ் மக்கள் நாகரிக வாழ்க்கை என்று கூறிக் கொள்வதை நிலைநிறுத்த வேண்டுமாயின், அதன் இன்றியமையாத தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய செல் வத்தைப் பெறுவதற்கு இந்தியாவை அவர்கள் பிடிக்குள் வைத் திருக்கவேண்டும். இந்தியாவை விட்டுவிட்டால் அவர்களுடைய

ஆடம்பர வாழ்வைக் குறைத்துக் கொள்ள நேரிடும். அவர்கள் அதிகாரத்தின் கருவிகளாகச் சில அடிமை மக்களை வைத்திருக்க வேண்டும். ஆகையால்தான் பிரிட்டிஷ் இனம் முழுவதும் இந்தியாவின் ஒட்டுண்ணிகளாக வாழ்கின்றது. ஆகவேதான் ஐரோப்பாவிலுள்ள பெரிய நாடுகள் அனைத்தும், ஆசியாவையும், ஆப்பிரிக்காவையும் தம்முள் பங்கிட்டுக்கொள்ள விரும்புகின்றன. இன்றேல் இன்ப வேட்டை ஆடும் அவர்களுடைய நாகரிகம் அரைப் பட்டினி கிடக்க நேரிடும்.

எல்லையில்லாமல் இன்ப வேட்டை ஆடுவதற்குரிய ஆதாரங்களை அனைவருக்கும் சமமாகப் பிரிக்க இயலாது. ஒரு சிலர் ஏற்கனவே சேர்த்துள்ள தம் செல்வத்துடன் மேலும் சேர்ப்பதற்காக, பலரிடம் இருப்பதைப் பறிக்க வேண்டும். மேனாட்டு மக்கள் எதிரே காணப் படும் முக்கியமான பிரச்னை இதுதான். ஆளும் நாடுகட்கும் அடிமை நாடுகட்கும் இடையே யுள்ள அதே பிளவு, அவர்களுடைய பேராசை காரணமாக அவர்கள் நாட்டிலேயும்கூட, உடையவர்கள் இல்லாத வர்கள் இடையேயும் ஏற்பட்டுள்ளது. அனைத் துலக மானிட சமயத்திற்கு இத்தகைய முரண்பாடு பெருந் தீங்கை விளைக்கும். எங்கெல்லாம் மனித ஒற்றுமை ஆபத்தில் இருக்கிறதோ, அங்கெல் லாம் ஒற்றுமையைக் குலைக்கும் சக்திகள் நேரிடையாகவும், மறை முகமாகவும் தோன்றத்தான் செய்யும். ஆண்டான், அடிமையை நேரிடையாகத் தாக்குகிறான். ஆனால் ஆண்டானிடம் இருக்கும் நீதி உணர்ச்சியைப் போக்குதலின், அடிமை மறைமுகமாக ஆண் டானைத் தாக்குகிறான். இது ஒரு பெரிய ஆபத்தாகும். ஏனெனில் விலங்குகள் பசியால் மட்டும் மடிகின்றன; மனிதன் நீதி மனப் பான்மை இன்மையாலும் மடிகின்றான்.

ஒரு கண் குருடான மான் ஒன்று எதிர்ப்புற மிருந்து வந்த அம்பை அறிய முடியாமையால் கொல்லப்பட்டதாக ஏசாப்பின் நீதிக் கதைகளில் படிக்கிறோம். மனிதன் தற்கால நாகரிகத்தில் முற்றிலும் லௌகீகமான பகுதியே குருட்டுப் பக்கமாகும். இன்றுள்ள ஐரோப்பாவில் அறிவைத் தேடும் முறையில் பலவகைப் பட்டதும் பரந்ததுமான ஒற்றுமையைக் காண்கிறோம் எனினும் செல்வத்தைத் தேடும் முறையில் கொடுமையான போட்டி இருந்து வருகிறது. ஐரோப்பாவில் உள்ள அறிவு விளக்கு ஒன்று கொளுத்தப் பெற்ற வுடன் ஆயிரக் கணக்கான விளக்குகளை அதுவே கொளுத்தி அதன் பயனாக நவீன யுகம் முழுவதும் ஒளி பெறுகிறது. இம் முறையில் பிற கண்டங்களைவிட ஐரோப்பா சிறந்து விளங்குகிறது. அறிவை

வழிபடும் முறையில் பூசாரியாகவும் பிறறைக் கூட்டுபவராகவும் உள்ள ஐரோப்பா, பல்வேறு இடங்களிலிருந்து சம்பாதித்த இந்த விறகைப் போட்டு யாகத் தீயை வளர்த்தலின் அத் தீ அணைக்கப் படமுடியாமல் வளர்ந்துள்ளது. மானிட வரலாற்றிலேயே அறிவுத் துறையில் இத்தகைய கூட்டுறவு முயற்சி இவ்வளவு விரிவாக நடைபெற்றதில்லை. பழங் காலத்தில் ஒவ்வொரு நாடும் பிற நாடு களுடன், எவ்விதத் தொடர்பும் இல்லாமல் தாந்தாமே அறிவையும் கல்வியையும் வளர்த்தன. கிரேக்க நாட்டின் கல்வி கிரேக்கத்திற்கே உரியதாகவும், ரோம் கல்வி ரோமாபுரிக்கே உரியதாகவும், இந்தியா, சீனு ஆகிய இடங்களிலும் இதேபோல அந்தந்தக் கல்வி அந்தந்த நாட்டுக்கே உரியதாகவும் இருந்தன. ஐரோப்பாக் கண்டத்தின் நல் லதிர்ஷ்டவசமாக அந்த நாடுகளிடையே அதிக தூரமோ, தாண்ட முடியாத எல்லைகளோ இல்லை; நீண்டுயர்ந்த மலைகளோ, அகன்று விரிந்த பாலைவனமோ கிடையாது. சமயத்தாலும் அவர்கள் ஒன்றுபட் டுள்ளார்கள்; அந்தச் சமயமும் ரோமாபுரியிலேயே மையங் கொண்டிருக்கிறது.

பன்னூறு ஆண்டுகளாக, ஐரோப்பா முழுவதும், லத்தீன் மொழி ஒன்றின் மூலமாகவே கல்வியைப் பெற்று வந்ததுடன் ஒரே சமயமாக இருந்ததும் ஒற்றுமைக்கு வழி கோலிற்று. இந்தச் சமயத்தின் அடிப்படைக் கொள்கை ஒற்றுமையேயாகும்; அதனு டைய மையம் ஏசுவினிடத்து அன்பு; அதனுடைய கட்டளை மனித சமுதாயத்திற்குத் தொண்டு செய்வது. லத்தீன் மொழியாகிய தொட்டிலிலிருந்து ஒவ்வொரு நாடும் வெளி வந்தவுடன் தன்னுடைய மொழியின் மூலமே கல்வியைப் பரப்பத் தொடங்கியது. என்றாலும் எல்லாக் கல்வியும் ஒரே காலின் வழியாக ஓடி ஒரே இடத்தில் சேமித்து வைக்கப்பட்டது. இதிலிருந்துதான், கூட்டுறவில் காலூன் றிய நாகரிக அறிவில் மேனாட்டு நாகரிகம் பிறந்தது. கீழை நாட்டு நாகரிகம் என்று நாம் பேசும்பொழுது, அது ஐரோப்பிய நாகரிகம் அன்று என்பதைத்தான் எதிர் மறைமுகமாக அவ்வாறு குறிக்கி றோம். சீனுவின் மனத்திற்கும் அரேபியாவின் மனத்துக்கும் எவ்வித ஒற்றுமையும் இல்லை; இன்னுங் கூறப் போனால் அவை ஒன்றுக் கொன்று மாறுபட்டுள்ளன. இந்தியாவிலுள்ள ஹிந்துக்களும் மேற்கு ஆசியாவிலுள்ள செமிட்டிக் மக்களும் தங்களுடைய பண் பாட்டில் பெரிதும் மாறுப்பட்டுள்ளனர். ஆசிய நாடுகள் தாம் கற்ற முறையில் கூட்டுறவை அறியாமையின் தங்களுடைய பழைய வரலாறு, பல்வேறு துண்டுகளாக உடையுமாறு விட்டு

விட்டனர். வரலாற்றின் கட்டாயங் காரணமாகச் சில பகுதிகள் பண்பாட்டைப் பரிமாறிக் கொண்டிருக்கலாம். ஆனால் ஆசியாவின் மனம் ஒற்றுமையுடைய ஒரு பொருளாக மாறவில்லை. ஆகவே நாம் கீழை நாட்டு நாகரிகம் என்று கூறும்பொழுது நம்முடைய தேசீய நாகரிகத்தை மட்டுமே குறிப்பிடுகிறோம். அதனால்தான் ஐரோப்பாவைப் போன்று ஆசியா, தன் செல்வாக்கை நவீன யுகத்தில் வலிமையாகப் பொறிக்க முடியவில்லை.

ஐரோப்பாவின் இந்த நாகரிகத்தில் எந்த இடத்தில் அழிவு விதை விதைக்கப்பட்டுள்ளது? லௌகீக முன்னேற்றத்தில் கூட்டுறவு முறையைக் கையாள மறுக்கும் பகுதியில்தான் அழிவு விதை இருக்கிறது. இப் பகுதியில் ஐரோப்பிய நாடுகள் முற்றிலும் பிரிந்து, இயல்புக்குமாறான முறையில் ஒன்றுக் கொன்று மாறுபட்டுள்ளன. விஞ்ஞானத்தின் உதவியால் லௌகீக முன்னேற்றம் விரிவாகவும் பல திறப்பட்டும் வளரும்பொழுது விரோதமான முரண்பாடுகள் கிளம்புகின்றன. ஒரு பக்கத்தில் உயிரைக் காப்பாற்றும் அறிவு விரைவாக வளர்கிறது என்றாலும், மனிதனுடைய உடம்பின் மேலும், நிலத்தின் விளைக்கும் சக்தி, வாழ்வுக்கு எதிராக உள்ள லௌகீகத் தன்மைகள் ஆகியவற்றின் மேலும் இவ்வளவு அதிகாரம் எப்பொழுதும் செலுத்தப்பட்டதில்லை. மரணத்தைப் போக்கும் அமிர்தத்தை சுவர்க்கத்திலிருந்து மனிதன் பலாத்காரமாகப் பறித்துக் கொள்ள முயல்வது போன்றுள்ளது இது. இதன் மறுபுறத்தில், முற்றிலும் விரோதமான ஒன்றைக் காண்கிறோம். மரணத்தை வாரி வழங்கும் முயற்சி இவ்வளவு சீரிய முறையில் முன்னர் எப்பொழுதும் நடைபெறவில்லை. இந்த முயற்சியில் ஐரோப்பிய நாடுகள் ஒவ்வொன்றும் மிகுந்த உற்சாகத்துடன் தீவிர முயற்சி எடுத்துள்ளன. அறிவை ஒன்று சேர்ப்பதில் ஐரோப்பா மிக முயன்று அதன் பயனாக நல்ல வலிமையைப் பெற்றது. இப்பொழுது அதே வலிமையைப் பயன்படுத்தித் தன்னைத் தானே அழித்துக் கொள்வதில் முயன்று வருகிறது. அறிவைத் தேடும்பொழுது உயிர்களை வாழவைக்கும் வழிகளில் செல்கிறது. ஆனால், அதே நேரத்தில், லௌகீகச் செல்வத்தைத் தேடும் முறையில் உயிர்களை அழிக்க அஞ்சுவதில்லை. முடிவில் எந்த ஆற்றல் எஞ்சி நிற்கும் என்று கூறுவது கடினம்.

பெருங் கேட்டைத் தவிர்ப்பதற்கு இன்றுள்ள யந்திரங்களை அழிப்பதுதான் வழி என்று பலர் கூறுகின்றனர். இது பைத்தியக்காரத்தனம். நான்கு கால் பிராணிகளுக்குக் கால்கள் நான்

இருப்பினும் கைகள் இல்லை. வாழ்க்கையை நடத்துவதற்கு எவ்வாறோ அவைகள் முயன்று நடத்திக் கொள்கின்றன. சாதாரண வாழ்க்கை என்றால் வறுமையும் தோல்வியுந்தாம். ஆனால் மனிதன் நல்லதிர்ஷ்டவசமாக இரண்டு கைகளைப் பெற்றுள்ளான். பிற உயிர்களின் மேல் ஆணை செலுத்தும் ஒரு வசதியை அவனுடைய கைகள் அவனுக்குத் தந்துள்ளன. யந்திரங்களின் உதவியினால் அவனுடைய ஆற்றலை அதிகப்படுத்திக் கொண்ட பொழுது இன்னும் ஓர் அடி முன்னே எடுத்து வைத்து விட்டான். மனிதனுடைய இந்த ஆற்றலைக் குறைக்க வேண்டுமென்று கூறுவது பைத்தியக்காரத்தனம். யந்திரங்களின் மேல் ஆட்சி செலுத்த முடியாத தேசங்கள் மனிதனிடம் தோல்வி கண்ட விலங்குகளைப் போலத் தோல்வியைத் தான் காண நேரிடும்.

சந்தர்ப்பத்தின் உதவியினால், தனியொரு மனிதனோ அன்றி ஒரு தொகுதி மக்களோ, அதிகாரத்தின் காரணமான வழிகளையும், கருவிகளையும் கைப்பற்றி விட்டபொழுது பிரச்னை தோன்றுகிறது. ஒவ்வொரு நாட்டிலும், எல்லா அரசியல் அதிகாரமும் ஒரே மனிதனிடம் இருந்த காலமும் உண்டு; அந் நிலையில் அவனுடைய எண்ணம் எதுவோ அதுவே நிறைவேறி வந்தது. அதிகாரத்தை அவன் தவறான வழிகளில் செலுத்தாமல் அவனை அடக்க வேண்டுமானால் அவனுடைய மனச் சாட்சிக்கு முறையிடுவது தவிர, அன்றைய நிலையில், வேறு வழியில்லை. அவ்வாறு செய்யப் பெற்ற முறையீடுகளைக் கேட்கும் செவிகள் அதிகாரத்தின் உச்சியில் நின்றவர்கட்கு எப்பொழுதுமே வாய்த்ததில்லை. அதனால்தான் சில நாடுகளில் உள்ள மக்கள், தம் ஆட்சியாளரிடமிருந்து அதிகாரத்தை பலவந்தமாகப் பிடுங்கிக் கொண்டனர். மேலும், "ஆட்சியாளனின் அதிகாரம் என்பதே நம்முடைய அதிகாரங்களின் கூட்டுத் தொகையாகும். அதிகாரம் ஒரு கையில் இப்படிக் குவிவதால் நாம் சக்தியை இழந்து விட்டோம். நாம் ஒவ்வொருவரும் எவ்வாறு அந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவது என்று கண்டு கொண்டால், நாம் பெறும் அதிகாரம் அனைத்தையும் ஒற்றுமைப்படுத்தி, நம்முடைய இணைப்பு அரசை நிறுவி விடலாம்" என்று கூறினர் அவர்கள். இத்தகைய சந்தர்ப்பம் இங்கிலாந்துக்குக் கிடைத்தது. மற்ற நாடுகளுக்கு இந்தச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்றால், அந்த நாடுகள், குவிந்து கிடக்கும் ஆற்றலைப் பங்கிட்டு மறுபடியும் நடைமுறைக்கும் பயன்படுத்தக்கூடிய முறையில் அதற்கேற்ற கல்வியையோ, மன நிலையையோ பெறாத காரணந்தான்.

ஒரு குறிப்பிட்ட வகுப்பினரிடம் அகப்பட்டுள்ள பணத்தின் ஆற்றல்பற்றியும் இதுவே உண்மையாகும். பல மக்களுடைய உழைக்கும் ஆற்றலை தம் கையில் திரட்டி வைத்துள்ளமையின் பணக்காரர்கட்கு இந்த நிலை கிடைத்துள்ளது. பல்வேறு மக்களின் உடல் உழைப்புச் சக்தியே அவர்களுடைய முதலாகும்; அந்த உழைப்பு, செல்வம் என்ற வடிவில், அவர்களிடம் குவிந்து கிடக்கிறது. அந்த உழைப்பின் ஆற்றல்தான் உண்மையான சக்தியாகும். அந்த ஆற்றல் ஒவ்வொரு உழைப்பாளியிடமும் அமைந்து கிடக்கிறது. அவர்கள் அனைவரும், "நம்முடைய வலிமை அனைத்தையும் ஒருமைப்படுத்துவோம்" என்று மட்டும் சொல்லக்கூடுமேயானால், அவர்களுடைய உண்மையான மூலதனம் அவர்கள் கையிலேயே இருக்கும். ஒற்றுமைப்பட முடியாதவர்கள் துயரப்பட்டே தீர வேண்டும். பிறரை ஏசுவதலோ அன்றிக் கொள்ளையடிப்பதாலோ எவ்வித நிலையான நன்மையையும் அவர்கள் பெற முடியாது.

லௌகீக விஷயங்களில் மிக நீண்ட காலமாக மனிதன் தன் மனிதத் தன்மையை இழந்து விட்டான். பேராசையை விரிவுபடுத்தவே, அவன், தன்னுடைய வலிமையைப் பயன்படுத்தினன். எண்ணிக்கைக்குள் அடங்காத அடிமைகளைச் செல்வம் என்னும் வண்டியில் பூட்டிச் சவுக்கடி மூலம் முன்னே செலுத்துகின்றனர். இறுதியாக அமிழ்த்தப்பட்ட அந்த மக்கள் தமக்குள்ளாகவே "துண்டுபட்டுக் கிடக்கின்ற எங்கள் சக்தியை, ஒரு சில சக்தி வாய்ந்தவர்கள் தம் கைகளில் தாங்கிக் கொண்டு, எல்லையற்ற ஆற்றலைப் பெற்று விட்டார்கள். அதனை எதிர்த்துப் போராடி நாங்கள் அதனை உடைத்துவிட முடியும். ஆனால், அதனை மறுபடியும் ஒன்றாக்க முடியாது எனவே அதனால் எங்கட்கு ஒன்றும் பயனில்லை. ஆகவே எங்களுடைய உழைப்பாற்றல் அனைத்தையும் ஒன்றாக்கி, அதன்மூலம் அனைவருக்கும் பங்கிடக்கூடிய முறையில் பொருளாதார சக்திகளைப் பெற வேண்டும்" என்று கூறிக்கொள்வார்கள்.

இதுவே கூட்டுறவின் கொள்கையாகும். இதுவே மனிதன் அறிவுத் துறையில் பெரியவனாக ஆகுமாறு செய்தது. அன்றாட நடைமுறையில் அவனுக்கு ஒரு நல்லொழுக்க அடிப்படையைத் தந்ததும் இதுவேயாகும். இந்தக் கொள்கை இல்லாதவிடத்தில் துன்பம், பொறாமை, பொய், காட்டுமிராண்டித்தனம், பஞ்சம் என்பவை தோன்றுகின்றன.

அதிகாரம் அதிகாரத்துடன் மோதும் போது எல்லாப் பகுதிகளிலும் நெருப்புப் பற்றி எரிகிறது. தனியொருவனுடைய பேராசை என்னும் பலிபீடத்தில் மனிதன் பலி இடப்படுகிறுன். இதனை நிறுத்தினு லொழிய வரலாற்றிலேயே பெரிய கண்டம் உண்டாகும். லௌகீக விஷயங்களில் அதிகாரமுடையவர்கள், வலுவிழந்தவர்கள் என்பவர்களிடையே ஏற்பட்டுள்ள பிளவு, மிகக் கடுமையான ஆபத்தாக உள்ளது, இன்றைய உலகில். கற்றறிவுடையார்க்கும் கல்லாதவர்க்கும் இடையே வேறுபாடுகள் உள்ளன. ஆனுல் அறிவைப் பெற்றிருக்கின்ற காரணத்திற்காக இவர்களிடையே குறுக்குச் சுவர்கள் எழுப்பப் படுவதில்லை. அறிவுடையவர்கள் தம்முள் ஒன்றுகூடிக் குழுக்கள் அமைத்துக் கொண்டு அதன்மூலம் பலம் சேர்க்க விரும்பவில்லை. ஆனுல் பணத்தின் மேல் ஏற்பட்ட எல்லை யில்லாத பேராசை, எல்லா நாட்டிலும் எல்லா வீடுகளிலும் மக்களை மக்களிடமிருந்து பிரித்து வைத்துள்ளது. பழங்காலத்திற் கூட மக்களிடையே வேறுபாடுகள் இருந்து வந்தன. எனினும், அந்தக் குறுக்குச் சுவர்கள் இவ்வளவு உயரமாக இல்லை. எல்லா இலக்கியங்களையும், கலை, அரசியல், வீட்டு வாழ்க்கை ஆகியவற்றையும் பேராசை வென்றுவிட வில்லை. பண உலகத்தை யல்லாத பரந்து விரிந்துள்ள பிற உலகங்களில் மனிதர்கள் ஒற்றுமைப்பட வாய்ப்பிருந்தது.

பெருஞ் செல்வமாகிய பாரத்தால் அழுத்தப் பெற்று சமுதாயத்தை நசுங்காமல் காக்கும் பொறுப்பு ஏழைகளுடையதே தவிரப் பணக்காரர்களுடைய தன்று. மிகுதியும் காவலுடைய பொருளாதாரப் பகுதிக்கு ஒரு நுழைவு வாயில் கட்டும் பொறுப்பு அவர்களிடமே இருக்கிறது. ஏழைகளின் வலு வற்ற இயல்புதான், நாகரிகத்தை வலு வற்றதாகவும், முற்றுப் பெருததாகவும் இவ்வளவு நாட்கள் வைத்திருந்தது. அதிகாரத்தை வெல்வதன் மூலம் அவர்கள் இதனைச் சரிசெய்ய வேண்டும்.

கூட்டுறவுக் கொள்கை ஐரோப்பிய நாடுகளில் முன்னேறி வருகிறது. இதனுல் நம்மைவிட அதிகப்படியான ஓர் இலாபம் அவர்கட்கு ஏற்பட்டுள்ளமையின் அவர்கள் அதிக அனுபவமும், கூட்டுணர்ச்சியும் பெற்றுள்ளனர். இந்தியர்களாகிய நாம், அதிலும் சிறப்பாக ஹிந்துக்கள்[1] இந்தத் துறையில் மிகவும் பின்னடைந்திருக்கிறேம். எனினும், எல்லை யில்லாத வறுமையால் தூண்டப் பெற்று, நல்லதொரு வாழ்க்கையைப் பெறப் பெரிதும் விரும்பினுல், நாம்கூட முடிவில் கூட்டுறவு வாழ்க்கையை ஏற்றுக்கொள்

வோம் என்றே எதிர்பார்க்கலாம். இதில் நாம் தோற்றுவிட்டால் நம்முடைய துயரங்களிலிருந்து விடுதலை பெறவும் முடியாது; இது பற்றிப் பிறரைக் குறைகூறவும் முடியாது.

முற்காலத்தைப்போல அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்கின்ற அளவில் நம் வாழ்க்கைத் தரத்தைக் குறைத்துக்கொண்டால் வறுமையை ஒழித்து விடலாம் என்றும் பேசப்படுகிறது. இது எவ்வாறு உள்ளதென்றால், ஆழமான அடித்தளத்தில் கிடப்பவன் அதற்குக் கீழ் விழமுடியாது என்பதைப் போன்றுள்ளதே தவிரப் பிரச்னைக்குரிய தீர்வு இதுவன்று.

மனிதனுடைய வரலாற்றைப் பார்த்தால், அவன் பின்னேற்றத்தை என்றுமே செய்ததாக அறிய முடியவில்லை. ஒவ்வொரு யுகத்திலும் புதிய புதிய ஆக்கத் தொழில்களில் அவனுடைய அறிவு வெளிப்படலாயிற்று. இந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாதவர்கள் ஒதுக்கப்பெற்றனர். புதியன புனையும் அவனுடைய ஆற்றலால் புதிய புதிய சந்தர்ப்பங்களைப் படைத்துக்கொள்கிறான்; எனவே அவனுடைய தேவைகளும் பல்குகின்றன. கலப்பையைக் கண்டு பிடிப்பதற்கு முன்பேகூட மனிதன் காட்டிற் கிடைத்த பழங்களையும் வேர்களையும் உண்டு வாழ்ந்து வந்தான். அந்த நேரங்களில் அவனுக்கு எந்தவிதமான குறையும் இருந்ததாக யாரும் நினைத்திருக்கமாட்டார்கள். கலப்பை கண்டுபிடிக்கப்பட்டவுடன் வேளாண்மை செய்வது தொடங்கியது; அதன் பயனாக வாணிகமும், வியாபாரமும், சட்டங்களும், விதிகளும் தொடர்ந்தன. இதனைத் தொடர்ந்து ஹிம்சை, திருட்டு, கொள்ளை, பொய்க் கையெழுத்து, ஏமாற்றல், பொய் ஆகிய தொல்லைகளும் ஏற்பட்டன. ஆனால் இவற்றின் காரணமாகக் கலப்பையையும் துறந்துவிடவேண்டுமென்று கூறுவது முன்னேறும்பொழுது பின்னே திருப்பிக் கொண்டே செல்லவேண்டும் என்பதுபோலவாகும். சில இனத்தார்கள், புதிய ஆக்க வழிகளில் முன்னேறாமல் நிலைத்து நின்றுவிட்டது பற்றியும், தங்களுடைய பழமையையே பார்த்துக்கொண்டிருந்தது பற்றியும் வரலாறு கூறுகிறது. இறந்தவர்களைவிட இவர்கள் மோசமானவர்கள்; ஏனென்றால் இவர்கள் உயிருடன் இருந்தே இறந்தவர்களாவர். இறந்தவர்கள் செலவு செய்யப் பணம் தேவைப்படுவதில்லை. ஆகவே வறுமைப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு மரணம் ஒன்றுதான் வழி என்று கூறிவிட முடியுமா? பழமையின் மிச்சங்களை வைத்துக்கொண்டு எப்படியாவது வாழவேண்டுமென்பது மனிதனுடைய தலைவிதி யன்று. மனிதனின் தேவைகள்

மாறுபடும்; அவனுக்குத் தேவையான இன்றியமையாப் பொருள் களும் பலப்பல; ஆனால் அதே நேரத்தில் அவன் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் சக்தியையும் பெற்றிருக்கிறான்.

ஆடம்பரம் என்பது என்ன? விளக்கெண்ணெய் விளக்கை நீக்கிவிட்டு மண்ணெண்ணெய் விளக்கையும், பிறகு அதனையும் நீக்கிவிட்டு மின் விளக்கையும் ஏற்றுக்கொண்டதை ஆடம்பரம் என்று கூறிவிடலாமா? பகல் நேரங் கழிந்த இரவு நேரத்தில்கூடச் செயற்கை ஒளிக்கு வேலை இல்லாமற்போகும் காலத்தில்தான் மின் விளக்கை விட்டுவிட முடியும். இரவு நேரம் வந்து விளக்கெண் ணெய் விளக்கை ஏற்றியபொழுது ஏற்பட்ட அதிகப்படித் தேவையைப் பூர்த்தி செய்யவே அந்தப் பழைய விளக்கின் முன் னேற்றமாக மின் விளக்குச் செய்யப்பெற்றது. இன்று மின் விளக் கைப் பயன்படுத்துவது ஆடம்பர மன்று; அதனைப் பயன்படுத் தாமை வறுமையின் அடையாளமேயாகும். மாட்டு வண்டி முதன் முதலில் செய்யப்பெற்றபொழுது அது செல்வத்தின் அடையாள மாக இருந்தது. ஆனால் அந்த வண்டியினுள்ளேயே மோட்டார் வண்டித் தத்துவம் மறைந்து கிடந்தது. மாட்டு வண்டியைப் பயன் படுத்திய மனிதன் இன்று மோட்டாரைப் பயன்படுத்த வில்லை என்றால் அது அவனுடைய வறுமையைத்தான் காட்டி நிற்கிறது. ஒரு காலத்தில் செல்வம் என்று கருதப்பட்டது அதனையடுத்த காலத்தில் வறுமையைக் காட்டுகிறது. வறுமையை அடைவதன் மூலமே அதனை வென்று விடலாம் என்று கூறுகிறவன் நொய்மை யான மனம் படைத்தவனேயாவான்.

நவீன யுகம் படைத்துள்ள வசதிகள் பலவற்றையும் ஒரு சிலரே அனுபவிக்க, பெரும்பாலானவர்கள் அதனை அடைய முடியா மலிருப்பது ஒரு பெரிய துரதிருஷ்டமாகும்; சமுதாயம் இதற்குக் கழுவாய் (பிராயச்சித்தம்) செய்தே யாகவேண்டும். இதற்குரிய வழி செல்வத்தைக் குறைப்பதோ, அதனை வலுக்கட்டாயமாகப் பிடுங்கிக் கொள்வதோ அல்லது பிறருக்குத் தந்துவிடுவதோ அன்று. எல்லா மக்களிடமும் செல்வத்தைப் படைக்கும் ஆற் றலைத் தூண்டிவிடுவதே வழியாகும். மற்றொரு வகையாகக் கூற வேண்டுமானால் கூட்டுறவுக் கொள்கையை மக்கள் அறியுமாறு பரப்பவேண்டும்.

செல்வ வேறுபாட்டை அதிகார முறையினால் முற்றிலும் போக்கிவிட முடியும் என்பதை நான் நம்பவில்லை. மனிதனிடம் இயல்பாகவே அமைந்துள்ள ஏற்றத் தாழ்வு எப்பொழுதும் தன்

இருப்பை நிலைநாட்டிவிடும். இதனை யல்லாமல் சுபாவங்களில் உள்ள வேறுபாடு வேறு இருக்கிறது. சிலர் பணத்தைக் குவிப்பதில் விருப்பங் காட்ட, இன்னுஞ் சிலர் அதுபற்றிக் கவலைப்படுவதாகவே தெரியவில்லை. இதன் பயனாகவே செல்வ இருப்பில் ஏற்றத் தாழ்வுகள் உண்டாக்கப்படுகின்றன. யந்திரத் தன்மை வாய்ந்த சமநிலை முடியவும் முடியாது; விரும்பத் தகுந்ததும் அன்று. இயற்கை உலகத்தில் காணப்படுவது போலவே, மனித உலகத்திலும், முழுச் சமத்துவம், சுய ஊக்கத்தைத் தடுத்து அறிவை மழுங்கச் செய்து விடுகிறது. அதே நேரத்தில், அளவு மீறிய தாரதம்மியமும் கெடுதலைச் செய்யும். ஏனெனில் மக்களிடையே உள்ள பொருளாதார தூரத்தை அதிகப்படுத்துவதால் சமுதாயக் கூட்டுறவைத் தடை செய்துவிடுகிறோம். இத்தகைய தடைகளின் நிழலில்தான் தீமை தன் கூட்டைக் கட்டுகிறது.

ஒவ்வொரு மனிதனுக்கும் போதுமான அளவு கூலியும், ஓய்வும் பெற உரிமை யுண்டு. வாழ்க்கைக்கு மிக இன்றியமையாத தேவைகளை மட்டும் பெற்றிருப்பது அவமதிப்பாகும். விருப்ப மில்லாத பலருடைய உழைப்பின் பயனாக நாகரிக வாழ்க்கையின் கௌரவம் என்பதே இன்று மிகச் சிலரிடந்தான் தங்கியுள்ளது. பெரும்பான்மையான மக்கள் கல்வி, சுகாதாரம் என்பவற்றுடன் இன்பத்திற்குக் காரணமான வசதிகளையும் இழந்துவிட்டு அறிவில்லாதவர்களாகவே வாழ்ந்து மடிய விடப்பட்டுள்ளார்கள். இதன் பயன் என்ன ஆகும் என்பதுபற்றி நாம் கவலைப்படவே இல்லை. என்றாலும், இனியும் இதுபற்றிக் கவலைப்படாமல் இருக்கமுடியாது. மிகக் குறுகிய இடத்தில் அடங்கிக் கிடக்கும் சக்தியின் வெளிப்படு முயற்சியாக உள்ள உக்கிரமான சமுதாயப் புரட்சிகள் உலக முழுவதும் தொடங்கிவிட்டன. அந்தச் சக்தியை இப்பொழுது விடுவித்துப் பரவலாகப் பயன்படுமாறு செய்யவேண்டும்.

கிராம அடிப்படையிலுள்ள பொருளாதாரத்தில் கூட்டுறவு முறை ஒரு காலத்தில் கையாளப்பட்டது. ஆனால் அன்றிருந்தது போல வாழ்க்கை இன்றில்லை. மேலும் பணக்காரர்கள் தன்னலமற்றவர்களாக இக்காலத்தில் இருப்பது மிகமிகக் கடினம். அதுவும் ஒரு முறையில் நல்லதுதான். ஏனெனில் பெரும்பான்மையான மக்கள் தங்கள் பங்கு ஆற்றலை வளர்த்துக்கொள்ள, இதுவே தகுந்த நேரம். இது என்றும் நிலையானதாக இருக்கும். இந்தியப் பொருளாதாரத்தை மறுபடியும் கூட்டுறவு முறையில் அமைத்தால் நம் நாகரிகத்தின் சிசு வளர்ப்புக் கூடங்களாக உள்ள கிராமங்கள்

வலிவுபெற்று, நாடு முழுவதும் புத்துயிர் பெறும். நாடு முழுவதும் வறுமை நிறைந்து கிடக்க, இந்தப் பெரும்பான்மையான மக்கள் எதிரே, குவிந்த செல்வம் என்ற தடைச் சுவர்கள் சில உள்ளன. எனவே கூட்டுறவை எதிர்த்துப் போராடவேண்டிய பகுதி, அதிக மாக ஒன்றுமில்லை. ஆகவே என்னுடைய பிரார்த்தனை என்ன வென்றால், இந் நாட்டின் குவிந்த செல்வம் விடுதலை பெற்று, பரவ லாக முழு நாட்டிலும் மறு-பங்கீடு செய்யப்பெற்று, நாட்டு மக்கள் அனைவரின் ஒத்துழைப்பின் மூலம், உணவு, பெருஞ்செல்வம் ஆகிய தெய்வங்கள் எல்லாக் காலத்துக்குமாக இந் நாட்டில் நிலை யாக அமரவேண்டும் என்பதேயாகும்.

—1929.

காலை விண்மீன் உஷா காலத்தின் காதுக்குள்
“உனக்காகவே நான் வாழ்கிறேன் என்று சொல்”
என்று கூறுகிறது. உஷா காலம்
“ஆம்! உனக்குமட்டும் அல்லாமல் பெயரில்லாத அந்தப்
பூவுக்காகவும் நான் வாழ்கிறேன்” என்று
விடை கூறுகிறது.

—ரவீந்தரநாத் தாகூர்.

## 17. மாறும் யுகம்

மிகச் சமீப காலம் வரையில்கூட நம்முடைய நாட்டு மக்கள் கோயில் முகப்பில் சிறுசிறு கூட்டமாகக் கூடி, வெட்டிப் பேச்சுப் பேசிக் கொண்டும், சீட்டுவிளையாடிக் கொண்டும் ஓய்வு நேரங்களைக் கழித்தார்கள். அவர்கட்கு மிகவும் பழக்கமாகவுள்ள கிராம வாழ்க்கை வட்டத்தைச் சுற்றியே அவர்கள் சிந்தனையும், பேச்சும் நடைபெற்றன. அவர்களுடைய பண்பாட்டுத் தேவை யெல்லாம் என்றோ ஒருநாள் வந்து போகின்ற நாடகக் குழுவினர் நடத்திய நாடோடி நாடகங்களிலும், பழைய காப்பியங்களைப் படிப்பதிலும், புலவர்கள் ஒன்று கூடிப் பாடல் இயற்றும் போட்டியிலும் முடிவடைந்து விட்டன. இந்த போட்டிகளுக்குத் தேவையான கருப் பொருள் எல்லாம் பழங்காலக் கர்ண பரம்பரைக் கதைகளிலிருந்தே எடுக்கப்பெற்றன. இது மிகவும் நெருக்கமானதும், மிகக் குறுகியதும் தனக்குத் தானே சுற்றுவதுமாகிய ஓர் உலகம். வருஷத்திற்கு வருஷம், தலைமுறைக்குத் தலைமுறை இதே விஷயம் எவ்வித மாறுபாடுமின்றித் திருப்பித் திருப்பி வந்து கொண்டிருந்தது. இதற்கு அப்பால், பரந்து கிடக்கின்ற உலகத்தில் உள்ள மக்கள் முரட்டுப் பழக்கங்களாலும், சாஸ்திர உத்தரவுகளாலும் கட்டுப் படுத்தப்படாமல் மேலும் மேலும் வரலாற்றைப் புதிதாக ஆக்கிக் கொண்டிருந்தார்கள். ஒரு பகுதி மற்றொரு பகுதியோடு முரண்படுவதால் தோன்றுகின்ற புதிய புதிய பிரச்னைகட்கு எல்லாம் தீர்வு காணுவதன் மூலம் அவர்கள் வரலாறு ஓயாது மாறிக்கொண்டே இருந்தது. இந்த மாறுபாடுகள் எல்லாம் நம்முடைய மனக் காட்சிக்கு மிக மிக அப்பாற்பட்டவையாய் இருந்தன.

முதன் முதலில் இந்த நாட்டை முஸ்லீம்கள் பிடித்து ஆண்ட பொழுது குறுக்குச் சுவர் வைத்துக் கட்டப்பட்ட நம்முடைய மனிதத் தன்மைக்கு முதலாவது அடி கிடைத்தது. ஆனால் முஸ்லீம்களும்கூட மாறுபாட்டை விரும்பாத கீழ் நாடுகளைச் சேர்ந்தவர்களானதால், தங்களுடைய பழமையிலேயே கட்டுண்டு கைதிகளாக இருந்தார்கள். அவர்களுடைய வலிமையால் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்த போதிலும், அவர்களுடைய மனங்களிலும்கூட ஆக்கத்தினால் ஏற்படும் கிளர்ச்சி இல்லை. நம்முடைய எல்லைகளில் அவர்கள் தங்க நேர்ந்தவுடன் நமக்கும் அவர்களுக்கு மிடையே முரண்பாடுகள் தோன்றின. என்றாலும், இந்த முரண்பாடுகள் மாறுபாட்டை விரும்பாத இரண்டு கொள்கைள்

சந்திப்பதனுல் ஏற்பட்ட முரண்பாடாதலின், புறத்திலேயே பல தங்கிவிட்டன. அவர்களுடைய செல்வாக்கு நம்முடைய ஆட்சி முறையில் மிகவும் அதிகமாகச் சென்று தைத்தாலும்கூட, நம்முடைய மனம் வரையில் அது செல்ல முடியவில்லை. உயர்ந்த பிரிவைச் சேர்ந்தவர்கள் பலரும் பர்ஸிய மொழியைப் மிகுதியாகப் பயன் படுத்தினுர்கள். அதனுடைய சொற்கள் பல வங்காளி மொழியில் புகுந்தன. என்ருலும், அந்தக் காலத்தில் தோன்றிய வங்காள இலக்கியத்தில் பாரஸீக மொழியின் நிலையான செல்வாக்கு ஒன்றும் காணப்படவில்லை. அக்கால வங்காள இலக்கியங்களிலோ, உட்பொருளிலோ முஸ்லீம் இலக்கிய மரபுகள் ஒன்றும் இல்லை. இதற்கு ஒரே ஒரு புறநடை என்னவென்ருல் பாரத் சந்திரரின் "வித்யா சுந்தர்" தான்[1]. அந்த நூலின் சொல்லாட்சியில் பர்ஸிய இலக்கியத்தின் மென்மையான சாயல் ஓரளவு உள்ளது.

எனவே, இந்த இந்திய மண்ணில் வளைந்து கொடுக்காமல் நன்கு பதிக்கப்பெற்ற இரண்டு நாகரிகங்கள் அணித்தணித் தாகத் தொங்கிய தலைகளுடன் வளர்ந்தன. இவை இரண்டி னிடையே எந்தவிதமான தொடர்பும் இல்லை யென்று சொல்ல முடியாவிட்டாலும் அந்த இடை நிகழ்ச்சி ஒரு குறிப்பிட்ட அள விலேயே நடைபெற்று வந்தது. முஸ்லீம்களுடைய உடல் வன்மை, இந்நாட்டில் ஒரு கிளர்ச்சியை உண்டாக்கினுலும் கூட, மக்களி னுடைய சிந்தனு சக்தியையும், ஆக்க உணர்ச்சியையும் அது தூண்டிவிட இல்லை. மற்ருெரு கருத்தையும் கவனிக்க வேண்டும். இந்தியாவின் வெளியிலுள்ள பிற பகுதிகளிலிருந்து முஸ்லீம்கள் ஹிந்துஸ்தானத்தில் வந்த பொழுதும்கூடப் புற உலகத்தை நோக்கி நம்முடைய மனக் காட்சி விரியுமாறு அவர்கள் செய்யவில்லை. தாங்கள் குடியிருக்கும் இடங்களை நிர்மாணித்த பிறகு, தாங்கள் தாண்டி வந்த அந்த வாயிலை அவர்களே அடைத்து விட்டார்கள். என்ருே ஒரு சமயத்தில் புதிதாக வருகின்ற படையெழுச்சிகளுக்கு இந்த வாயில் திறந்த போதிலும் கூட, அதன் மூலமாக நாம் புற உலகத்தைக் காணக்கூடிய முறையில் ஒன்றும் நிகழவில்லை. இதனுல்தான் நம்முடைய உள்ளூர்க் கோயிலின் வாயிலில் அமர்ந்து வெட்டிப் பேச்சிலும், சீட்டாட்டத்திலும் பொழுதைப் போக்கி, மிகக் குறுகிய ஓர் உலகத்தில் வாழ்ந்து வருகிருேம்.

பின்னர் பிரிட்டிஷார்கள் வந்தனர். வெறும் மனிதர்களாக வாராமல் ஐரோப்பாவின் புத்துணர்ச்சியின் அடையாளங்களாக அவர்கள் வந்தனர். நம்முடைய வரலாற்றிலேயே பிரிட்டிஷார்

களின் வருகை மிக விநோதமான ஒன்றாகும். தனிப்பட்ட முறையில் புதிதாக வந்த இந்த பிரிட்டிஷார்கள் முஸ்லீம்களைப்போல நம்மை நெருங்காமல், அதிக தூரத்திலேயே இருந்தார்கள். ஆனால், ஐரோப்பியப் புத்துணர்ச்சியைக் கொண்டு வருகின்ற தூதுவர்கள் என்ற முறையில், இதற்கு முன்னர் நம்முடைய நாட்டிற்குள் வந்தவர்கள் யாரும் செய்யாத முறையில் மிக ஆழமானதும், விரிவானதுமான தொடர்பை இவர்கள் கைக்கொண்டார்கள். ஐரோப்பாவின் இயக்க சக்தி நம்முடைய மனித சக்தியை வலுவாக அடித்தது. வறண்டு போன பூமியில் அடித்துப் பெய்கின்ற தாரையான மழை புதியதொரு கிளர்ச்சியை உண்டாக்கிப் புதிய உயிர்கள் தோன்றுமாறு செய்வதுபோல, இந்த ஐரோப்பியப் பண்பாடு வேலை செய்தது. இத்தாலியிலிருந்து புறப்பட்ட மறுமலர்ச்சி ஐரோப்பாக் கண்டம் முழுவதும் பரந்து விரிந்ததைப் போல் இந்தப் புத்துணர்ச்சியும் இங்கே பரவியது. வளம் மிகுந்த பல்வேறு வகையான அதனுடைய பயன்கள் எந்த இடத்திலும் தேசீய கௌரவத்தைக் குறைத்ததாகக் கருதப்பெறவில்லை. இப்புதிய எண்ணத்தின் வளத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்புள்ள மனங்கள் இக் கருத்துக்களைப் பெற வேண்டும். கொடுக்கல், வாங்கல் என்ற அந்த வேகமான ஆறு, எங்கே அறிவு விழிப்புடனும் உயிர்த் துடிப்புடனும் இருக்கின்றதோ, அந்த இடங்களில் வேகமாகப் பாய்கின்றது.

நவீன காலத்தின் புத்துணர்ச்சி மேலை நாட்டு ஆகாயத்தில் தோன்றி, உலக வரலாறு முழுவதையும் ஒளி பொருந்தியதாகச் செய்து விட்டது. ஐரோப்பாவின் மனம் ஏதோ ஒரு பெருந் தூண்டுதலால் தூண்டப்பெற்று, உலகத்தின் எல்லாப் பாகங்களிலும், தன்னைத் தானே செலுத்திக் கொண்டது. அது எங்கேயெல்லாம் பரவியதோ, அங்கே யெல்லாம் வெற்றியைக் கண்டது. இத்தகைய ஆற்றலின் ரகசியம் என்ன? இதற்கு விடை காண வேண்டுமேயானால், அந்த ஆற்றல், உண்மையை நாடிச் செய்யும் முயற்சிகளிலேயே அந்த ரகசியம் அடங்கி இருக்கிறது. அறிவுத் தேக்கம், பைத்தியக்காரக் கற்பனை, மேற்போக்கான ஒற்றுமை அல்லது மிகப் பழைய காலந்தொட்டு வருகின்ற மெய்யறிவின் எதிரொலி ஆகியவற்றால் இந்த மேனாட்டு நாகரிகம் மூழ்கடிக்கப்படவில்லை. எடுத்த எடுப்பில் எதனையும் நம்ப வேண்டுமென்று தோன்றுகின்ற மனித உணர்ச்சியை அந்த நாகரிகம் மிக வன்மையாகக் கட்டுப்படுத்தி வருகிறது. தனிப்பட்ட மனிதர்களுடைய சிந்தனை சக்திக்கு ஏற்ற முறையில், உண்

மையை மாற்றி அமைத்துக் கொள்ள அது முயன்றது இல்லை. தனிப்பட்ட மனிதர்களின் விருப்பு வெறுப்பு ஆகியவற்றுக்கு இடங் கொடாமல், பகுத்தறிவு ஒன்றையே துணையாகக் கொண்டு தினந் தோறும் அதனுடைய அறிவு விளக்கத்தில் புதிய புதிய உலகங் களைக் காண்கிறது.

இங்கே இந்தியாவிலுள்ள நாம் விதியோடும், பஞ்சாங்கத் தோடும், அளவு மீறிக் கட்டுண்டு கிடக்கிறோம். என்றாலும் நம்மைத் தடுத்து நிறுத்துகின்ற குறுக்குச் சுவர்களிடையே தோன்றியுள்ள வெடிப்புக்களின் மூலமாக ஐரோப்பிய நாகரிகம் நம்முடைய வீட்டினுள் புகுந்து விட்டது. அனைத் துலகப் பான்மை யில் தோன்றுகின்ற பெரிய அறிவை ஒரு பெரிய வரப்பிரசாதமாகவே அது நமக்குக் கொண்டு வந்திருக்கிறது. அனைத்தையும் விசாரித் தறியும் அறிவையும், சமீபத்தில் இருந்தாலும் தூரத்தில் இருந் தாலும் அதனுடைய ஆழமான உண்மை என்னவென்பதை ஆராய்ந் தறியும் அறிவையும் அது நமக்குத் தந்திருக்கிறது. ஆராய வேண்டிய பொருள் சிறியதாக இருப்பினும், பெரியதாக இருப்பினும், நேரிடையாகப் பயன்படுத்துவதாக இருப்பினும், வெறும் சித்தாந்த மதிப்புடையதாக இருப்பினும் அனைத்தையும் அது ஆராய்கின்றது. அறிவு என்பது விளக்க முடியாததாய், எல்லாவற்றின் ஊடேயும் துண்டிக்க முடியாத நூல் போல ஊடுருவி நிற்கின்றது என்பதையும், அந்த நாகரிகம் நமக்கு எடுத்துக் காட்டிற்று. இயற்கையில் நடைபெறுகின்ற மிகச் சாதாரணமான ஒன்றைக் கூட, பல்லாயிரக் கணக்கான ஆண்டு களாக இருக்கின்றதென்று பெருமைப் பட்டுக்கொள்ளும் சாஸ் திரங்கள் எதிர்த்துக் கூறுமேயானால், அந்த எதிர்ப்பை அந்த நாகரிகம் ஏற்றுக் கொள்வதில்லை.

பௌதீக உலகத்தைப் போலவே நீதி உலகத்திலும் இது நடைபெறுகிறது. புதிய யுகத்தில் வந்துள்ள பல்வேறு கொள்கை களுள் சட்டத்தின் எதிரே எல்லா மனிதர்களும் சமம் என்ற இதுவே அந்தப் புதிய கொள்கை. ஒரு பிராமணன் தாழ்ந்த ஜாதி யினனுகிய சூத்திரனைக் கொன்றாலும், சூத்திரன் பிராமணனைக் கொன்றாலும் இரண்டுமே கொலையாகு மாதலினால், ஒரே வகையான தண்டனையை இருவருக்கும் நிர்மாணிக்கிறது. பழங்கால சாஸ் திரங்கள் இதுபற்றி என்ன சொல்லியபோதிலும், நீதியின் இந்தத் தராசை அசைக்க முடிவதில்லை.

நம்முடைய சிந்தனையிலும், நடைமுறையிலும்கூடப் புரட்சிகர மான மாறுதல்கள் தோன்றியுள்ளன. சமுதாயப் பழக்கம் காரணமாகத் தீண்டத்தகாதவர்கள் என்று தள்ளப்பட்டவர்களைக் கோயிலுக்குள் அனுமதிக்க வேண்டுமென்ற கொள்கையிலிருந்து இது புலனாகும். இன்றுங்கூட, தீண்டத்தகாதவர்களைக் கோயிலுக் குள் அனுமதிப்பதற்கு[3] நீதியை அடிப்படையாகக் கொள்ளாமல், சாஸ்திரங்களில் ஆதாரம் தேடுகின்றவர்கள் இருக்கிறார்கள். என்றாலும் ஒருதலைப்பட்டசமான இந்த வாதங்களை யாரும் சட்டை செய்வதில்லை. சாஸ்திரங்கள், மரபுகள், தனிப்பட்ட மனிதர்களின் பெருமைகள் அனைத்தும் ஒன்று கூடினும் ஒரு பிழையைச் சரியாக்கி விட முடியாதென்றும், நீதி பற்றிய கொள்கை ஒன்றே முடிவானதென்றும் மக்களின் அந்தராத்மா, சொல்லத் தொடங்கி யுள்ளது.

முஸ்லீம்கள் காலத்திய வங்காள இலக்கியம் பற்றி மீண்டும் பேச வருவோம். கொடுமை செய்வதற்கு எல்லை யில்லாத உரிமை பெற்றிருப்பவர்களே மிக உயர்ந்த ஆற்றலைப் பெற்றவர்கள் என்ற கொள்கை அக்கால இலக்கியத்தில் காணப்படுகிறது. இத்தகைய ஓர் எண்ணம் தெய்வக் கொள்கையைக்கூட மங்கச் செய்துவிட்டது. ஆற்றல் நிறைந்த மனிதர்கள் தங்களுடைய அதிகாரத்தை நிலை நிறுத்திக் கொள்வதற்குக் கையாண்ட மிகக் கொடுமையான வழிகள் தெய்வங்களுக்கும் தேவதைகளுக்கும் கூடக் கருவியாக இருந்தன என்றும் அந்தத் தெய்வங்களின் மதிப்பை அறிவதற்கு அவர்கள் செய்யக் கூடியக் கொடுமையே அளவுகோலாக இருந்தது என்றும் அறிகிறோம். சாதாரண மனிதன் தான் சட்டங்களுக்கும், மரபுகளுக்கும் கட்டுப்பட வேண்டும்; உயர்ந்த இடத்திலிருந்த மனிதன் எந்தச் சட்டத்தை யும் உடைப்பதற்குரிய வலிமை பெற்றான். எல்லை யில்லாத அதிகாரத்தைப் பெற்றுள்ள ஒருவனுடைய முரட்டுத்தனமான கர்வம் ஓரளவு தெய்வீகம் பெற்றதென்றுகூடக் கருதினார்கள். அக் காலத்தில் வழங்கிய பழமொழி "டில்லியிலுள்ள அரசனும் எல்லா வற்றையும் ஆக்கிப் படைக்கும் கடவுளும் ஒன்றே" என்பதாகும். அந்த இருவரும் நியாயம் வழங்குவதில் ஒற்றுமைப்படாமல், அதிகாரத்தைப் பிரயோகம் செய்வதில் மட்டும் ஒன்றாக இருந் தனர். பிராமணன் "பூதேவன்" அதாவது பூமியிலுள்ள தேவன் ஆவான் என்று சொல்லப்பட்டான். இது தெய்வீகத் தன்மைக் குரிய எந்தப் பெருந்தன்மையும் இல்லாவிட்டாலும் வெறும்

உயர்வை மட்டும் விரும்புகின்ற ஓர் உரிமையாகும். பழங்கால சாஸ்திரங்கள், கீழ் ஜாதியினருக்குப் பிராமணன் பிறப்புரிமையால் செய்யக் கூடிய பல்வகைக் கொடுமைகளையும் நீக்க முடியாத உரிமையாகத் தந்திருக்கிறது.

மொகலாயர்களை விட பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் மிகவும் சக்தி வாய்ந்தது. என்றாலும்கூட இன்றைய நிலையில்கூட வெலிங்டன் பிரபுவும்,[4] அனைத்தையும் ஆக்குகின்ற கடவுளும் ஒன்று, என்று எந்த அடிமுட்டாளும் கூற மாட்டான். முழு முழுக் கிராமங்களைக் கூட ஆகாயத்திலிருந்து குண்டு வீசுவதன்மூலம்[5] நிர்மூலமாக்கக் கூடிய சக்தியும், தெய்வீக சக்தியாக நமக்குப்படவில்லை. பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ்த் துன்பம் அடைகின்ற நாம் அதனைப் பற்றி முடிவு சொல்லத் தொடங்கும்பொழுது அனைவரையும் ஆராய்வதற்குரிய சாதாரணமான தர அளவு கோலையே அவர்களுக்கும் பயன்படுத்துகிறோம். அவர்கள் செம்மையான முறையில் நடந்து கொள்ள வேண்டுமென்று நாம் வற்புறுத்துகிறோம். இதில் உண்மை என்ன வென்றால், பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் தான் அனைவருக்கும் ஒரே வகையான நீதியை, நியாய அநியாயங்களை ஏற்க வேண்டுமென்று வற்புறுத்தியதாதலின் அந்த சாம்ராஜ்யத்திலுள்ள மிகச் சாதாரணமான ஒரு பிரஜைக்குரிய உரிமையே சாம்ராஜ்யத்திற்குமுள்ள உரிமையாகவும் ஆகி விட்டது.

ஆங்கில இலக்கியத்தோடு நாம் முதன் முதலில் தொடர்பு கொண்டபோது, புதுக் கருத்துக்களாகிய ஒரு பெரும் பக்குவத்தை அடைந்ததோடு அல்லாமல், ஒரு மனிதன் மற்றொரு மனிதனுக்குச் செய்யும் கொடுமையை எதிர்க்கவும் கற்றுக் கொண்டோம். அரசியல் அடிமைத்தனத்தைப் போக்குகின்ற மாட்சிமை பொருந்திய அரச கட்டளையைக் கேட்டு, நம்முடைய காதுகள் இனித்தன. மானிட உழைப்பைப் பொருளாதார வஸ்துவாகப் பயன்படுத்தச் செய்யப்பெற்ற முயற்சிகள் —வலுவாகக் கண்டிக்கப்பட்டன. நம்மைப் பொறுத்தவரையில் இது ஒரு புதுமையான காட்சியாகும். நம்மைப் பொறுத்தவரையில், பிறப்பும், செய்கின்ற செயலின் பாவ-புண்ணியங்களும் பழைய பிறவிகளிலிருந்து[6] வருகின்றன. ஆகவே அவற்றை மறுக்க முடியாது என்று சொல்லி வந்தோம். இதன் பயனாக ஏற்பட்ட எல்லை யில்லாத துயரமும், தாழ்ந்த நிலையில் இருப்பதனால் ஏற்படுகின்ற அகௌரவமும் மிகப் பொறுமையாக நம்மால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இந்த நிலை நீங்க வேண்டுமானால் அது மறு பிறப்பின் மூலமாகத்தான் முடியும் என்று நம்பி

ணோம். இன்றுகூட, நம்மிடையே உள்ள கற்றறிவுடைய சிலர் அரசியல் துறையில் எதனையும் எதிர்த்துப் போராடத் துணிவு கொண்டவர்களாயினும் சமுதாயச் சமயத் துறைகளை எதிர்த்துப் போராடாமல் அவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கூறுகிறார்கள். எந்தச் சூழ்நிலையில் ஒருவன் பிறந்தானோ, அந்தச் சூழ்நிலை அவனுக்கு ஏற்கெனவே விதிக்கப்பட்டதாதலின், அதனை அப்படியே ஏற்றுக் கொள்ளவேண்டு மென்று நினைக்கின்ற நம்பிக்கை தான் நம்முடைய அரசியல் அடிமைத்தனமாகிய சங்கிலியில் மிக வலுவான ஒரு கணு என்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள். என்றாலும் ஐரோப்பாவுடன் நாம் கொண்டுள்ள தொடர்பு அனைத்துலகச் சட்டங்களாகிய காரண, காரியச் சட்டங்களைப் பற்றி நம்மிடையே ஒரு விழிப்பை உண்டாக்கி யுள்ளன. அந்தச் சட்டங்கள் கொடுத்துள்ள மதிப்புக்களை எதிர்த்துப் பழைய சாஸ்திரங்களும், பரம்பரை பரம்பரையான பழக்கங்களும் வீணே கூச்சலிடுகின்றன. இந்த நிலையில் நின்றுதான் நம்முடைய குறைகளை யெல்லாம் தாண்டிக்கூட, நம்முடைய அரசியல் நிலையினை முன்னேற்றிக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறோம். ஒரு காலத்தில் மொகலாயச் சக்கரவர்த்திகளிடம் நாம் கேட்கத் துணியாத சிலவற்றை இன்று நம்மை ஆள்பவர்களிடம் கேட்கத் துணிந்தால் அது கவிஞனுடைய கூற்றுப்படியுள்ள "என்ன இருந்தாலும் மனிதன் மனிதன்தான்" என்ற அந்த இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டதேயாகும்.

நான் இப்பொழுது எனது 70-வது ஆண்டைக் கடந்து விட்டேன். உண்மையில் ஐரோப்பிய யுகம் என்று பொருத்தமாக அழைக்கப்படக் கூடிய புது யுகத்தில் 19-ம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் நான் புகுந்தேன். அந்த இடைக் காலத்தை இக் கால இளைஞர்கள் கேலியாக 'விக்டோரியா யுகம்' என்று அழைக்கிறார்கள். நம்மைப் பொறுத்தவரை ஐரோப்பாவின் பிரதிநிதியாக வுள்ள பிரிட்டன் தன்னுடைய அதிகாரம், செல்வ வளம் என்ற இரண்டிலும் உச்ச நிலையிலிருந்த காலம் அது. அக் காலத்தில் பிரிட்டனுடைய அழகிய மாளிகையில் எந்த இடத்திலேனும் வெடிப்பு விடக்கூடுமென்றோ, அதன் வழியாகத் துரதிருஷ்டம் நுழையக் கூடுமென்றோ யாரும் எதிர்பார்த்து இருக்க முடியாது. வரலாறு கூறுகின்ற உண்மை எவ்வாறு இருப்பினும், அத்தகைய ஒரு மேல் நாட்டு நாகரிகத்தின் மேல் பகைமைக் காற்று வீசக் கூடும் என்பதற்கு வெளிப்படையான அறிகுறிகள் எதுவுமே இருக்கவில்லை. எந்தப்

பேச்சுரிமை அல்லது தனி மனித உரிமை ஆசிய இலட்சியங்களை நிலைபெறுத்த மறு மலர்ச்சிப் போராட்டங்களும், பிரெஞ்சுப் புரட்சிப் போராட்டங்களும் நடைபெற்றனவோ, அந்த லட்சியங்களின் மதிப்பைக் குறைப்பதற்கு அதுவரை ஒன்றும் நடைபெறவில்லை. அந்த விக்டோரியா யுகத்தில் அமெரிக்காவைப் பொறுத்தவரையில் நீக்ரோக்களின் அடிமைத்தனத்தைப் போக்குவதற்காக ஒரு கொடுமையான உள்நாட்டுப் போர் நடைபெற்று வந்தது. அந்த யுகத்தில்தான் 'மாசினியும்,' 'கரிபால்டியும்' விடுத்த செய்திகள் எதிரொலித்துக் கொண்டிருந்தன. துருக்கி ஸ்தானத்தில் நடைபெற்ற அட்டூழியங்களை எதிர்த்துக் 'கிளாட்ஸ்டன்' வீராவேசத்துடன் கர்ஜனை புரிந்து வந்தார். அதே நேரத்தில்தான் இந்தியாவில் உள்ளவர்களாகிய நாம் நம்முடைய நாட்டின் விடுதலைபற்றி எதிர்பார்க்கத் தொடங்கினோம். அந்த நம்பிக்கையின் அடியில், வெற்றி பெற்ற பிரிட்டிஷாரின் மேல் ஒருவித வெறுப்பும் இருந்தது உண்மை தான். ஆனால், அதே நேரத்தில் பிரிட்டிஷாரின் குணாதிசயங்களில் எல்லை யற்ற நம்பிக்கையும் இருந்து வந்தது. அவ்வாறு இல்லாவிட்டால், மானிட மரியாதையை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, இந்தியாவின் ஆட்சித் துறையில் சம பங்கு வேண்டுமென்று நாம் எவ்வாறு கேட்டிருக்க முடியும்?

ஒரு யுகத்திலிருந்து, புதிய பொருளும், புதிய மதிப்பும் கொண்டுள்ள மற்றொரு யுகத்திற்குத் திடீரென்று நாம் தாண்டியது வியப்புடையது! நம்முடைய வீட்டிலும், நம்முடைய அண்டை அயல் இடங்களிலும், நம்முடைய சமுதாயத்திலும் மானிட உரிமை, மானிட கௌரவம், வகுப்பு சமத்துவம் ஆகியவை பற்றி எவ்விதமான விழிப்பும் ஏற்படவில்லை. அன்றிருந்த முரண்பாடுகளிடையே விஞ்ஞானத்தைப் பொறுத்தமட்டில் மதில் பூனை போன்று நம்முடைய மனோ நிலையும் இருந்து வந்தது. விஞ்ஞானம் நம்முடைய கதவுகளைத் தட்டும் நேரத்தில்கூட, நட்சத்திரங்களினுடைய நிலைகளை எடுத்துச் சொல்லும் பஞ்சாங்கத்தின் பிடியிலிருந்து நாம் விடுபட வில்லை. என்றாலும் கூட, பகுத்தறிவுக்கு வணக்கம் செலுத்தும் மேற்றுட்டுக் கொள்கையின் செல்வாக்கு நம்மையும் ஆட்கொண்டது உண்மை தான்.

எனவே, ஐரோப்பாவோடு நாம் மிகுதியாக ஒத்துழைத்த காலம் விக்டோரியா காலம்தான் என்பது வெளிப்படை. உண்மையைக் கூறுமிடத்து' எந்தெந்த இடங்களில் நம்முடைய மனம் ஐரோப்பிய மனத்துடன் தொடர்புகொள்ள வில்லையோ, எங்கெந்தத் துறை

களில் நம்முடைய கல்வி முறை ஐரோப்பியக் கல்வி முறையுடன் தொடர்புகொள்ள வில்லையோ, அங்கெல்லாம், ஏற்பட்ட நஷ்டம் நம்முடையதே ஆகும். ஐரோப்பியர்களிடத்தில் நாம் கொண்டிருந்த மதிப்பு அதிர்ச்சி அடையாத வரையில் அந்தக் கூட்டுறவு எளிதாகவும், தொடர்ந்தும் இருந்து வந்தது. ஏனென்றால், நான் முன்னரே கூறியபடி ஐரோப்பாவின்மேல் நாம் கொண்டிருந்த பெரு மதிப்பின் காரணமாகவே அந்தப் புது யுகம் பிறந்தது. அறிவுத் துறையில் அஞ்ஞானம் நீங்கிய பகுத்தறிவுக்கு ஐரோப்பா எவ்வாறு மதிப்புக் கொடுத்தது என்பதையும், நடைமுறை நிகழ்ச்சிகளில் மனித உரிமைக்காக ஐரோப்பா எங்ஙனம் துணை செய்தது என்பதையும் நாம் காணவில்லையா? அதே முறையில்தான் எவ்வளவு எதிர்ப்புக்கள் இருந்தபோதிலும் நம்மிடையேயுள்ள சுய மரியாதை வளர்ச்சி அடைந்ததோடு, நம்முடைய மக்களைப் பொறுத்தமட்டிலும் ஒரு புதிய நம்பிக்கையும் பிறந்தது. வலிமையுடையவர்களை, அவர்களுடைய அளவு கோலைக் கொண்டே அளந்து பார்க்கத் தொடங்கினோம். நம்முடைய பழைய நாளைய ஆட்சியாளர்களைப் பொறுத்தமட்டில் இத்தகைய ஓர் அளவு கோல் இல்லை யென்பதை ஒத்துக் கொள்ளவேண்டும். அவர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் அன்புடையவர்களாக இருக்கும்பொழுது, நமக்கு ஏதாவது நன்மைகள் ஏற்பட்டாலொழிய, சாதாரண நீதி முறையையொட்டி அவர்களிடத்தில் எவ்விதமான உரிமையும் கோர முடியாமல் இருந்தோம். ஒரு சாதாரண மனிதனிடம் எதிர்பார்க்கும் இளகிய மனப்பான்மையைக்கூட அவர்களிடம் எதிர்பார்க்க முடியவில்லை.

அன்றுமுதல், சரித்திரம் அதனுடைய வழியில் ஓடிக் கொண்டே இருக்கிறது. தன்னுடைய மிக நீண்ட தூக்கத்திலிருந்து ஆசியா விழித்துக்கொள்ளும் அறிகுறிகள் தோன்றியுள்ளன. மேனாடுகளோடு தொடர்பும் முரண்பாடும் கொண்ட காரணத்தால் உலக வல்லரசுகளோடு ஒரு சமமான இடத்தை ஜப்பான் பெற்றுள்ளது. ஜப்பானிய தேசம் நிகழ்காலத்திற்றான் வாழ்ந்து கொண்டிருக்கிறதே தவிர, சென்று போன காலத்தின் அந்தி ஒளியில் தான் வாழவில்லை யென்பதை நிரூபித்து விட்டது. ஏனைய கீழைத் தேசங்களும் அந்தப் புதிய யுகத்தில் கால் வைத்துவிட்டன. உலக வரலாற்றின் இந்தப் புதிய பகுதியில் நாமும் ஒருமைப்பாட்டை அடையலாம் என்று இதுவரையில் எதிர்பார்த்து வந்தோம். அன்றியும், தன்னம்பிக்கை, தன்னறிவு என்ற நம்முடைய வண்டி முன்னேற்றத்தை நோக்கிச் செல்லும் என்றும், பிரிட்டிஷார்களே

இதற்கு உதவி செய்வார்கள் என்றும் இதுவரை நம்பி வந்தோம். ஆனால் இதுவரைக் காத்திருந்த பிறகு, இந்த வண்டியின் சக்கரங்கள் ஓடுவதற்காகச் செய்யப்பட்டவை அல்ல என்பதை அறிந்து கொண்டோம். இந்தியாவிலுள்ள பிரிட்டிஷார்கள் சட்டம், ஒழுங்கு முறை, விதி முறைகள் ஆகியவற்றையே நம்புகிறார்கள். நாட்டின் தேவைக் கேற்றபடி, கல்வி, சுகாதாரம் ஆகியவை வளர்க்கப்பட வில்லை. மக்கள் புதிய செல்வங்களைச் சேகரிப்பதற்கு வாய்ப்புக்கள் இல்லை. எதிர் காலத்திலும் அத்தகைய வாய்ப்புக்கள் இருப்பதாகத் தெரியவில்லை. மேலும் நம்முடைய ஆதாரங்கள் அனைத்தும் சட்டம், ஒழுங்கு முறை என்ற இரண்டுக்கும் இரை போடவே போத வில்லை. இதில் வேடிக்கை என்னவென்றால், ஐரோப்பாவோடு இந்தியா கொண்டுள்ள தொடர்புதான், காலம் தருகின்ற இந்தப் பெரும் பயன்களை இந்தியா பயன்படுத்த முடியாமல் செய்துவிட்டது, புதிய யுகத்தின் சூரியப் பிரகாசத்தில்கூட இந்தியா ஒரு கரும்புள்ளி யாகவே இருக்க நேர்ந்துவிட்டது.

இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகள் ஐக்கிய அமெரிக்காவுக்குப் பெரிதும் கடன்பட்டு உள்ளன. ஆனால் கடன் வாங்கிய இந்த நாடுகள் சட்டத்தையும், ஒழுங்கு முறையையும் கடைப்பிடித்துத் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தைக் குறைத்துக் கொண்டிருக்கக் கூடுமேயானால், அவைகள் பெற்றுள்ள கடன்கள் இதைப்போல இன்னும் இரண்டு பங்கு இருப்பினும்கூட அவற்றைச் செலுத்த முடியாமல் போகாது. வாழ்க்கைத் தரத்தை மிகுதியாகக் குறைப்பது என்றால் பொதுவாக உணவைப் பங்கிட்டுக் குறைத்தல், தாகத்தைத் தீர்க்கும் அளவில் ஒரு சொட்டுத் தண்ணீரை மட்டும் பயன்படுத்தல், ஐந்து முதல் ஏழு சதவீதமுள்ள மக்களுக்கு மட்டும் கல்வி வழங்குதல், எலும்போடு ஒட்டியிருக்கின்ற நோய் நொடிகளை மட்டும் பாதுகாக்கின்ற முறையில் சுகாதார அமைப்புக் களைச் செய்தல் என்பவையாம். என்றாலும் நாகரிக வாழ்விற்கு இவ்வாறு குறைத்துக் கொள்ளுதல் என்பது இயலாத காரியம். ஆகவே, கடன் பெற்ற அந்த நாடுகள் துணிவோடு, “எங்களுடைய கடன்களை நாங்கள் திருப்பித் தரமாட்டோம்” என்று கூறுகின்றனர். வாழ்க்கையில் அடைய வேண்டிய அடிப்படைத் தேவைகளிலி ருந்து, இந்தியாவும் இதேபோல, “பொறுக்க முடியாத நிலையில் ஆட்சித் துறையில் ஏற்படும் இந்த அதிகப்படியான செலவையும், அதனால் ஏற்படுகின்ற திவால் ஆகும் நிலையையும் நாங்கள் பொறுக்க மாட்டோம். இந்தச் செலவுகள் ஒரு பெரிய பாரும்

கல்லைப் போல அழுத்தி, எங்களைக் காட்டுமிராண்டித்தனத்திற்கு அழைத்துச் செல்கிறது" என்று கூறி விடலாம். ஐரோப்பா தானே ஏற்படுத்திய இந்தத் தர அளவைகளை ஏன் குறைத்துக் கொள்ள வேண்டும்? அகில உலகத்திற்கும் உள்ள பொறுப்பை ஐரோப்பா தானே ஏற்றுக் கொள்ளவில்லையா?

ஐரோப்பாவின் எல்லைகளுக்கு அப்பால் நாகரிகத்தை ஏந்திச் செல்லும் இந்தச் சுடர் விளக்குகள் ஒளியைக் கொடுப்பதற்கு அல்லாமல் தீ வைப்பதற்காகவே பயன்படுத்தப்படுகின்றன என்பது இப்போது வெட்ட வெளிச்சமாகிவிட்டது. ஆகவேதான், துப்பாக்கிக் குண்டின் உதவி கொண்டு, அபின் உருண்டைகள் சீனவுக்குள்[8] புகுத்தப்பட்டன. இத்தகைய ஒரு கொடுமையான அட்டூழியம் வரலாற்றில் வேறு எங்கும் காணப்படவில்லை. ஒரு வேளை அமெரிக்காவில் குடியேறிய ஐரோப்பிய மக்கள் பொன்னின் மேல் இருந்த பேராசையின் காரணமாக, அங்கு வாழ்ந்த "மாயா" மக்களைச் செய்த கொடுமைகள், நிகழ்த்திய அட்டூழியங்கள் இதற்கு நிகராகலாம். வரலாற்றின் இடைக் காலத்தில் காட்டு மிராண்டித் தனம் நிறைந்த 'டாட்டார்' மக்கள் அவர்கள் வெற்றி அடைந்த நாடுகளில், தோற்றவர்களின் மண்டை ஓடுகளை மலை போல் குவித்தார்கள். என்றாலும், அவர்கள் உண்டாக்கிய காயங்கள் ஆறிவிட்டன. ஆனால் நாகரிகம் மிகுந்த ஐரோப்பா மாபெரும் சீன மக்களுடைய தொண்டையின் வழிச் செலுத்திய விஷம், என்றும் தீராத பெரும் துயரத்தை உண்டாக்கிவிட்டது. ஈரான் நாட்டில் இளைஞர் இயக்கம், பன்னூறு ஆண்டுகளாக உறங்கிக் கிடந்த அந்த நாட்டை எழுப்ப நினைத்தவுடன், இந்த வீர இயக்கத்தை நாகரிகம் பெற்ற ஐரோப்பா அழித்த, துயரம் நிறைந்த வரலாற்றை 'சூஸ்தர்' என்பவர் "பர்ஸியாவின் கழுத்தை நெறித்தார்கள்" என்ற நூலில் எழுதி யுள்ளார். ஆப்பிரிக்காவின் ஒரு மாகாணமாகிய காங்கோவில் ஐரோப்பியர்கள் செய்த கொடுமை பற்றி அனைவரும் அறிவார்கள். இன்று வரையில் ஐக்கிய அமெரிக்காவிலுள்ள நீக்ரோக்கள் பெருத்த சமுதாய அவமானத்தைத் தாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இதனை அடுத்து, உலக மகா யுத்தம் (முதலாவது) வந்தது. உடனே மேனாட்டு வரலாற்றில் தொங்கிக் கொண்டிருந்த திரை கிழிக்கப்பட்டது. ஒரு குடிகாரப் பைத்தியக்காரனை, அவன் ஆடிக் கொண்டிருக்கும் நிலையில் காட்டியதுபோல் இருந்தது அது. இப்படிப்பட்ட கொடுமை நிறைந்த முரட்டுத்தனம் பழைய இருண்ட

காலத்துல் உள்ளவர்களைக் கூட ஓரளவு உலுக்கி இருக்கும். என்றாலும், அந்த இருண்ட காலத்தில்கூட இத்தகைய ஒரு பைசாச வடிவம் கொண்டு அது ஆடி இருக்க முடியாது. பழங் காலத்தில் நிகழ்ந்த காட்டுமிராண்டித்தனம் ஒரு சிறிய இடத்தில் தூசு மண்டலத்தில் அடிக்கின்ற சுழல் காற்றைப் போன்றது. ஆனால், நவீன காலத்தில் தோன்றிய இந்த எரிமலையின் வெடிப்பு மிகப் பெரியதாக இருந்தது. இதுவரையில் அடக்கி வைத்திருந்த கொடுமையான மனப்பான்மை அதனுடைய மூடியைத் திறந்து கொண்டு எரிமலை குழம்பைக் கக்குவது போலக் கக்கி, வானம் முழுவதையும் சிவப்படையச் செய்து, பச்சைப் பசேலென்று இருந்த பூமியில்கூட பசுமைத் தன்மையை எல்லாம் விழுங்கி விட்டது. அது முதல் ஐரோப்பா தன்னுடைய அறிவுத் தெளிவில் கொண்டிருந்த நம்பிக்கையைக் கூட இழந்து விட்டது. அன்றியும் அனைத் துலகத்திலும் மனிதன் நலமாக வாழ வேண்டுமென்ற தன்னுடைய லட்சியத்தைக்கூட எள்ளி நகையாடுகின்ற அளவுக்குத் தடித்தனம் பெற்று விட்டது. நாம் தொடர்பு கொண்டுள்ள பிரிட்டன் மூலமாக நாம் அறிந்திருந்த ஐரோப்பா, அழகற்றப் பொருள்களை ஏற்றுக் கொள்ளாமல் இருந்தது. ஆனால் இப்போது அத்தகைய பெருந் தன்மை எதுவும் தன்னிடம் இல்லை யென்பதை அது வெளிப்படையாகவே காட்டுகிறது.

இன்றைய மேனாட்டு நாகரிகம் பெருந்தன்மையைத் தரக் கூடிய எந்தச் செயலையும் செய்வதாகத் தோன்றவில்லை. விலங்குத் தன்மையோடு கூடிய கொடுமையை, மிக்க கர்வத்துடன் அது மேற்கொண்டு உள்ளது. ஐரோப்பாவின் மிகச் சிறந்த சீடனை ஆசியாவிலும், ஜப்பானிலும் காண்கிறோம், கொரியாவிலும், சீனாவிலும் எஜமானனுடைய தலை கர்வித்தனத்தை அப்படியே படி செய்கின்ற மனப்பான்மையைக் காண்கிறோம். கறுப்பர்களையும், கலப்பு ஜாதியினரையும் அயர்லாந்தில் செய்த கொடுமை நம்முடைய கற்பனைக்கு அடங்காததாக இருக்கிறது. இந்தியாவாகிய இங்குங்கூட, ஜாலியன்வாலாபாக்[9] கொடுமையைக் கண்டோம். ஒரு காலத்தில் துருக்கி ஸ்தானத்தைக் கேலி செய்த ஐரோப்பா இன்று பாசிஸத்தைப் பாராட்டுகிறது. ஐரோப்பாவின் மிகச் சிறந்த வரப்பிரசாதம் என்று எந்தப் பேச்சு சுதந்திரத்தைப் பாராட்டினமோ, அதே பேச்சு சுதந்திரம் இன்று கொடுமையாக அமிழ்த்தப் படுகிறது. தனிப்பட்ட மனிதனுடைய மனச் சான்றுக்கு மரியாதை கொடுக்க வேண்டுமென்று ஐரோப்பாவிலுள்ள மேடைகளில் எல்

லாம் முழக்கம் செய்யப்பட்டன. ஆனால், தங்களுடைய பகைவர்களையும் அன்பு செய்ய வேண்டுமென்று கூறும் கிறிஸ்து நாதரின் உபதேசங்களை உண்மையாக நம்புகிறவர்கள் கதி என்னவாயிற்று?

தன்னுடைய அரசியல் கொள்கையோடு மாறுபடுபவர்களை எல்லாம், தீவாந்திர சிக்ஷை செய்து வைத்து மிக நீண்ட தூரத்திலுள்ள தீவுக்கு அனுப்புகின்ற இத்தாலி நாடு, எவ்வளவு கொடுமை இழைக்கிறது என்பதை நன்கறிய முடியும். ஐரோப்பாவின் பண்பாட்டு விளக்கு மிகுதியாக ஒளிவிட்ட ஜர்மானிய நாடு தன்னுடைய பண்பாட்டு மதிப்பை எல்லாம் முற்றிலும் கிழித்து எறிந்து விட்டது. இவ்வளவு எளிதாக, மிகக் கேவலமான பேயாட்டம் ஆட அந்த நாடு முழுவதும் தொடங்கி விட்டது.

பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த 'அமைதி விரும்பிகள்' கட்சியைச் சேர்ந்த ரானே ரேமெண்டு என்ற இளைஞர் எழுதியுள்ளவற்றில் ஒரு பகுதியை இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன்:—

> "எனவே போருக்குப் பிறகு பதினைந்து ஆண்டுகள் தீவாந்திர சிக்ஷை விதிக்கப்பட்டு, கயானாவுக்கு என்னை அனுப்பினார்கள். எனக்கு அளிக்கப்பட்ட கொடுமை என்னும் பாத்திரம் நிறைய முகந்து குடித்து விட்டேன். எனக்கு அளிக்கப்பட்ட தீவாந்திர சிக்ஷை ஒருபுறம் முடிந்தவுடன், அதன் உடன் சேர்ந்த தண்டனையாகிய ஆயுள் முழுவதும் நாடு கடத்தல் என்னும் பகுதி இருக்கவே இருக்கிறது. கயானாவுக்கு வருகின்ற ஒருவர் நல்ல உடலமைப்போடும், இளமையோடும், சுறுசுறுப்போடும் வருகிறார். ஆனால் இதைவிட்டுப் போகின்ற ஒருவர், உயிரோடு திரும்பக் கூடிய நிலையில் இருந்தால், களைத்தவராய், கிழவராய், நோயுடையவராய், செல்கிறார். கயானாவுக்கு வருகின்ற ஒருவர் நேர்மை யுடையவராய் வந்தாலும் சில மாதங்களில் லஞ்ச மனப்பான்மையைப் பெற்று விடுகிறார். இந்த நாட்டிலுள்ள காய்ச்சல், வயிற்றுப் போக்கு, எனும் புருக்கி நோய், இன்னும் கொடுமையான குஷ்டம் ஆகிய நோய்களுக்கு எல்லாம் இந்த நாட்டிற்கு நாடு கடத்தப்படுகின்றவர்கள் எளிதாக இரையாகிறார்கள்."

போர் முடிந்த பிறகு, ஐரோப்பாவில் தாண்டவமாடும் விலங்கு அறிவைக் கண்டு அஞ்சிய நாம், "கொடுமை இழைக்கப்பெற்றவர்கள் முடிவாக முறையிட்டுக் கொள்ளக் கூடிய மிக உயர்ந்த

மானிட நீதிமன்றம் எங்கே உள்ளது? மானிடத்தின் மேலுள்ள நம்பிக்கை முழுவதையும் நாம் இழந்து விடுவதா? காட்டுமிராண்டித் தனத்திற்கு அதே காட்டுமிராண்டித்தனம் மூலமாகத்தான் விடைகூற வேண்டுமா?" என்று கேட்கிறோம்.

மனம் நொந்து இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில்கூட, இன்றைய நிலையில் எவ்வளவு கீழே சென்று விட்டாலும்கூட, நம்முடைய தலையை நிமிர்த்திய வண்ணம் அதுபற்றி முடிவு கூறக் கூடிய நிலையில் உள்ளோம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இந்நிலை நம்முடைய கவனத்தைக் கவரத் தேவையே இல்லை என்றுகூட நாம் பறை சாற்றலாம். அதனை அலட்சியம் செய்கின்ற முறையில் "அழிக" என்று சொல்லி விடலாம். இந்த இருண்ட காலத்தில்கூட எதிர்த்துப் போராடவேண்டியதன் காரண மாகத் தங்களுடைய உயிரையே பணயம் வைக்கக் கூடிய மனத் திடம் பெற்றவர்கள் இருக்கிறார்கள் என்ற உண்மை உலகத்திலுள்ள அச்சம், துயரம் ஆகிய அனைத்தையும் காட்டிலும் மேம்பட்டது. மிகவும் கொடுங்கோன்மை வாய்ந்தவர்களுடைய மூங்கில் தடிகள், அவர்கள் உடம்பிலுள்ள ஒவ்வொரு எலும்பையும் முறித்தாலும் கூட, அவர்கள் கைகூப்பி வணங்கி, "டில்லியிலுள்ள ஆட்சி யாளர்களே உலகத்தைப் படைக்கின்ற தெய்வங்கள்" என்றுகூற மாட்டார்கள். அம்மட்டோடு அல்லாமல், சக்தி வாய்ந்த இந்த ஆட்சியாளர்கள் தவறு செய்ய மாட்டார்கள் என்று சொல்லவும் மாட்டார்கள். இதற்கு எதிராக, அதிகாரம் வகிக்கின்றவர்களே அதிகப்படியான பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும், என்றும் அவர்கள் கூறுவார்கள். மேலும் அதிகாரம் இருக்கிறவன், தான் பிறரை அளக்கப் பயன்படுத்தும் அளவு கோலைக் கொண்டே தன்னுடைய செயலை அளந்து பார்த்து, அது தீமை என்று காண் பானேயானால், மிக மிகக் கேவலத்தை அடைவான் என்றும் அவர் கள் சொல்வார்கள். அடிமைப்பட்ட மக்களாகிய நாம், கொடுங் கோன்மையின் வெறி பிடித்த கூச்சலை எதிர்த்து "வெட்கம்" என்று துணிவோடு சொல்லுவதற்குரிய சக்தியை என்றைக்கு இழந்து விடுகின்றோமோ, அன்றைக்கு, இந்தப் புதிய யுகம் தன் சக்தியை இழந்து, மீட்க முடியாதபடி திவாலாகி விட்டது என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும்.

—1933.

## 18. நாகரிகத்தில் நெருக்கடியான நிலை

இன்றோடு என்னுடைய 80-வது ஆண்டு நிறைவெய்துகிறது. இந்த நீண்ட வாழ்நாளைப் பின்னே திரும்பிப் பார்த்து என்னுடைய வாழ்க்கையிலும், என்னுடைய நாட்டு மக்களின் மனோதத்துவத்திலும் ஏற்பட்டிருக்கின்ற மாற்றத்தைக் கவனிக்கும் பொழுது, நான் வியப்படைகிறேன். இந்த மாற்றம் வருந்தத்தகுந்த அவலமாகவே இருக்கிறது.

பிரிட்டிஷ் இனத்தோடு தொடர்புகொள்ளத் தொடங்கிய காலத்திலிருந்துதான் வெளியிற் காணப்படும் பரந்த உலகத்தோடு நாம் நேரடியாகத் தொடர்பு கொள்ளத் தொடங்கினோம். நம்மிடத்தில் வரும்பொழுது, உள்ளவாறு அவர்களை காட்டுகின்ற மிகப் பெரிய இலக்கிய மரபுடன் அவர்கள் நம்மிடம் வந்தார்கள். அக்காலத்தில் அவர்களிடத்தில் நாம் கற்ற கல்வி மிகக் குறைவானதாகவும், பலவகைப்படாததாகவும் இருந்து வந்தது. விஞ்ஞானம் நமக்கு அப்பாற்பட்டதாகவே இருந்து வந்தது. ஆங்கில இலக்கியத்தைக் கற்பதையே முக்கியமான குறிக்கோளாகக் கொண்டிருந்தோம்; அந்த இலக்கியத்தை அனுபவிப்பதுதான் உயர்தரப் பண்பாட்டின் அடையாளமாக இருந்து வந்தது. 'பர்கி'னுடைய சொல்லாற்றலையும், 'மெகாலே'யினுடைய தருக்க முறையையும் ஓயாமல் நாம் எதிரொலித்துக் கொண்டிருந்தோம். 'ஷேக்ஸ்பியர்,' 'பைரன்' ஆகியவர்களைப்பற்றி அடிக்கடி வாதம் செய்தோம். அக் காலத்தில் நிலைபெற்றிருந்த மானிட அரசியல் தத்துவங்களைப் பற்றியும் விவாதித்து வந்தோம். நம்முடைய தேசீய விடுதலையைப் பெறவேண்டுமென்று, அப்போதே முடிவு செய்து இருந்ததோடு, நம்முடைய மனத்தின் ஆழத்தில் பிரிட்டிஷார்களுடைய பரந்த மனப்பான்மை பற்றியும் அதிகமான நம்பிக்கை இருந்து வந்தது. தோற்கடிக்கப்பட்டவர்கள், வெற்றி பெற்றவர்களாலேயே விடுதலையை நோக்கி அழைத்துச் செல்லப் பெறுவார்கள் என்று நம்பி இருந்தோம். பிற நாடுகளைச் சேர்ந்தவர்கள், தத்தம் நாடுகளில் ஏற்பட்ட புரட்சிக் காலத்துப் போராட்டங்களில் ஈடுபட்டு, நாட்டை விட்டு அகதிகளாக ஓடி வந்தபொழுது இங்கிலாந்து தேசம் இடம் கொடுத்துக் காப்பாற்றவில்லையா? பிரிட்டிஷார்களுடைய இத்தகைய மானிடப் பண்பாடு நம்மைப் பொறுத்தவரையில் அதிக மரியாதையைப் பெற்றது. இந்தச் சந்தப்பத்தில் என் இளமைக் காலத்தில் பிரிட்டனுக்கு முதன் முறைச் சென்று இருந்ததைப்[1] பற்றியும் கூற விரும்ப

கிறேன். அப்போது பாராளுமன்றத்திலும், வெளியிலும் 'ஜான் பிரைட்' பேசிய பேச்சுக்களைக் கேட்கும் வாய்ப்புக் கிடைத்தது. பரந்த மனப்பான்மையோடு கூடிய புரட்சிகரமான அவருடைய பேச்சுக்கள், குறுகிய மனப்பான்மையைவிட்டு நீண்ட தூரம் முன்னேறிச் சென்றிருந்தது. அந்தப் பேச்சுக்கள் என்னுடைய மனத்தில் மிக ஆழமாகப் பதிந்தவுடன், ஏமாற்றத்தைத் தந்துள்ள இங்கிலையில் கூட அப் பேச்சின் சில பகுதிகள் என் மனத்தை விட்டு நீங்கவில்லை.

நம்மை ஆள்வோரின் கருணை மனப்பான்மையை எதிர்ப் பார்த்துக் காத்து நிற்பது, நாம் கர்வம் அடையக்கூடிய ஒரு விஷய மன்று. என்றாலும் பிற இனத்தாரிடத்தில் காணப்படும் நல்ல மானிடப் பண்பாட்டைக் காண்பதற்குரிய கண்களும், அவற்றைக் கண்டபொழுது அவற்றைப் பாராட்டுகின்ற இயல்பும் நம்மிடம் இருந்தன என்பது மட்டும் பெருமைப்பட வேண்டிய விஷயமாகும். மானிட சமுதாயம் பெற்றுள்ள மிகச் சிறந்த இந்த வரப்பிரசாதங் கள் ஒரு குறிப்பிட்ட நாட்டிற்கு மட்டுமோ, அல்லது மக்களுக்கு மட்டுமோ சொந்த மில்லை. அன்றியும், இத்தகைய பண்பாடுகள் ஒரு கருமியின் மறைவான செல்வத்தைப் போல் பிறர் காண முடியா மலும், குறையாமலும் இருப்பதில்லை. ஆகையினால்தான், நம் முடைய வாழ்க்கை உண்மையான நிலைபேறுணர்ச்சியைப் பெறுவ தற்குக் காரணமாக இருந்த ஆங்கில இலக்கியம், இன்றுகூட நம்முடைய மனத்தில் ஒரு கிளர்ச்சியை உண்டாக்குகிறது.

"நாகரிகம்" (Civilization) என்ற ஆங்கிலப் பதத்திற்கு ஏற்றதொரு வங்காளிப் பதத்தைக் காண்பது கடினம். நம்முடைய பழங்கால நாகரிகத்தை மனு "நியாயமான நடைமுறை" என்று கூறியுள்ளார். இவை ஒரு குறிப்பிட்ட மரபுக் கொள்கை களுக்காக இருந்து, பிற்காலத்தில் சமுதாய நடைமுறைக் கொள்கைகளாக ஆகி விட்டன. எண்ணத்தின் சுதந்திரத்தைத் தடை செய்துகூட, பல சமயங்களில், கொடுங் கோன்மையான நியாயமற்ற இப் பழங்கள் வளர்ந்தன. மனு விதித்த இந்த நடை முறைச் சட்டங்கள் காலத்தால் போற்றப்பட்ட மரபுகளாக மாறி விட்டன.

நான் சிறு பையனாக இருந்த காலத்தில் வங்காளி மக்களில் ஆங்கிலம் கற்றவர்கள் இந்தக் கடுமையான சமுதாயச் சட்டங்களை எதிர்த்துப் புரட்சி செய்ய விரும்பினார்கள். அக் காலத்தில் தோன்றிய, வங்காளி இலக்கியம் இப் புரட்சியை நமக்கு நினைவூட்டு

வதாக இருக்கிறது. இந்த நடைமுறைச் சட்டங்களுக்குப் பதிலாக ஆங்கிலேயர்கள் எவற்றை நாகரிகம் என்று கூறினார்களோ, எவற்றை அவர்களுடைய ஒழுக்கங்களால் எடுத்துக் காட்டினார்களோ, அவற்றையே ஒத்துக் கொள்கின்ற அளவுக்கு முற்பட்டோம்.

என்னுடைய வீட்டில்கூட, பகுத்தறிவின் துணை கொண்டு, இந்த மாற்றத்தை முழு மனத்தோடு வரவேற்று நடைமுறையிலும், கொள்கையிலும் ஏற்றுக் கொண்டோம். இத்தகைய ஒரு சூழ்நிலையில் பிறந்து, இயற்கையாக என் மனத்தில் தோன்றிய இலக்கிய விருப்பத்தினால் வளர்க்கப்பெற்றமையின், பிரிட்டிஷார்கள் புகழ் படைத்த ஒரு படியில் நிற்பதாக நான் கருதினேன்.

என்னுடைய அந்த இளமைக் காலம், என் கனவை கலைத்து, ஏமாற்றத்துடன் முடிந்தது. மிக உயர்ந்த நாகரிக மதிப்புக்களை வாயினால் பேசுகின்ற இவர்கள் தங்களுடைய தேசீயத் தேவை ஏற்பட்டபொழுது, எவ்வளவு எளிதான முறையில் இந்த நாகரிக மதிப்புக்களை உதறி எறிந்து விடுகிறார்கள் என்பதை நான் காண முடிந்தது.

இலக்கிய ஈடுபாட்டிலிருந்து, என்னைப் பலவந்தமாக புறத்தே இழுத்துக் கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் வந்தது. ஏனென்றால், இந்திய மக்களின் கொடுமையான வறுமை என்னுடைய கவனத்தில் வந்து நிலைத்தது. நவீன காலத்தில் உள்ள எந்த நாட்டிலும், அடிப்படைத் தேவைகளைக் கூட மறுக்கின்ற, இந்தக் கொடுமை காணப்படவில்லை என்பதை நான் உணர்ந்தேன். அடிப்படைத் தேவைகள் என்று சொல்லும்பொழுது, உணவு, உடை, கல்வி, சுகாதார வசதிகள் ஆகியவற்றையே நான் குறிப்பிடுகிறேன். ஏன்றாலும்கூட, இந்த நாட்டிலிருந்து ஆதாரங்களை வருஷந்தோறும் சுரண்டி, சுரண்டிச் சேர்த்துத்தான் பிரிட்டிஷார்களின் செல்வம் வளர்ந்தது.

பிரிட்டிஷ் பண்பாட்டின் சிறப்பான பகுதிகளிலேயே என்னை இழந்திருந்த நான், மிக நீண்ட காலமாக வைத்திருந்த மதிப்புக்கள், இத்தகைய முறையில் கொலை செய்யப்படும் என்பதை நம்பவே இல்லை. இறுதியாக, நாகரிக தேசங்கள், நம்முடைய கோடிக் கணக்கான மக்களிடத்தில் காட்டும் அவமரியாதை, கவலையற்ற தன்மை ஆகியவற்றின் அடையாளம் இவ்வாறு கொலை செய்வது தான், என்பதை உணர்ந்தேன்.

எந்த யந்திர சாதனத்தின் காரணமாக, உலக வல்லரசுகளுள் தாங்களும் ஒருவர் என்று பிரிட்டிஷார் பெருமையடித்துக் கொண்டார்களோ, அந்த யந்திர சாதனத்தை இந்த வருந்தத் தகுந்த மக்களுக்குக் கொடுக்க மறுத்து விட்டார்கள். இதே நேரத்தில், இந்த இடைக் காலத்தில் ஜப்பான் நாடு தன்னுடைய பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொள்ள இந்த யந்திர சாதனத்தை மிக விரைவாகப் பெருக்கியது. ஜப்பானுடைய வளத்தையும் தேசீய முன்னேற்றத்தையும் என்னுடைய கண்களாலேயே[2] கண்டேன். அதே நேரத்தில் மாஸ்கோவில்[3] ரஷ்ய மக்கள் அவர்களுடைய நாட்டிலிருந்து நோய், அறியாமை, கல்வி யின்மை, வறுமை ஆகிய அவமானம் விளைவிக்கின்ற புறச் சின்னங்களை யெல்லாம் எவ்வளவு வேகமாகத் துடைக்க முயல்கிறார்கள் என்பதையும் கண்டேன். இன வேற்றுமை வெறி யின்மையினால் சோவியத் மக்கள் தங்களுடைய நாடு முழுவதிலும் மானிட சகோதரத்துவத்தைப் பரப்பி உள்ளார்கள். ஆச்சரியப்படும் முறையிலும் மிக வேகமாகவும் அவர்கள் அடைந்துள்ள முன்னேற்றம், என்னைப் பொறுமையையும் மகிழ்ச்சியையும் அடையச் செய்கிறது.

சோவியத் வாழ்க்கையில் ஒன்று மிக முக்கியமாக என்னைக் கவர்ந்தது. அது என்னவென்றால், அவர்களுடைய பொதுத் தேவைகள் கூட்டு முயற்சியை ஊக்குவித்து, சாதி வேறுபாடுகள், அரசியல் வேறுபாடுகளாகப் பரிணமிக்காமல் தடை செய்து விட்டன. இன்று உலகத்திலேயே இரண்டு பெரிய வல்லரசுகள் தாம் உள்ளன. ஒன்று பிரிட்டிஷ், மற்றொன்று பல்வேறு இனத்தாரும் கூடிய ரஷ்ய வல்லரசு. பிரிட்டிஷார்கள் தங்கள் ஆட்சியின் கீழுள்ள மக்களின் ஆண்மையை மிதித்து நசுக்கி, அவர்களை அடிமைகளாகவே வைத்துள்ளனர். இதற்கு நேரெதிராக, சோவியத் ரஷ்யாவில் அந்த நாட்டின் எல்லைக்குள் இருக்கின்ற பல்வேறு முஸ்லீம் இனங்களும் சிறந்த முறையில் அந்த அரசாங்கத்துடன் அரசியல் தொடர்பு கொண்டுள்ளன. அந்த நாட்டின் அரசாங்கம் விடா முயற்சியுடன் மக்களின் நன்மையை நாடி, அனைவருடைய தேவைகளையும் ஒற்றுமைப்படுத்துவதில் பெரிதும் முயன்று வருகிறது.

இரண்டு ஐரோப்பிய வல்லரசுகளினிடையே நசுக்குண்டு கிடந்த ஈரான் தேசம்[4] இன்று விடுதலை யடைந்து தன் விதியைத் தானே நிர்ணயித்துக் கொள்ளும் ஒரு நிலையில் வாழ்ந்து வருகிறது. அந்த நாட்டிற்குச் சமீபத்தில் சென்றிருந்தபொழுது, அந்த நாட்டின் பெரும்பாலான மக்களால் பெரிதும் நசுக்குண்டு இருந்த சுரேஷ்

டிரியர்கள் இப்போது அடக்கு முறையில் சிக்காமல் இருக்கிறார்கள் என்பதைக் கண்டேன். ஐரோப்பிய அரசியல் சூழ்ச்சிகளிலிருந்து விடுதலை அடைந்ததிலிருந்தே, ஈரான் நாடு, புதிய வாழ்க்கையைத் தொடங்கி விட்டது. என் முழு மனத்துடன் ஈரானுக்கு ஆசி கூறுகிறேன்.

நமக்கு அடுத்த தேசமாகிய ஆப்கானிஸ்தானத்தைப் பார்க்கும் பொழுது கல்வி, சமுதாய வளர்ச்சி ஆகிய துறைகளில் இன்னும் அதிகமாக வளர்ச்சி தேவைப்பட்டாலும் கூட, தொடர்ந்து முன்னேற்றம் காண்பதற்குரிய அறிகுறிகள் நிறைந்துள்ளன. ஏனென்றால், எந்த ஐரோப்பிய வல்லரசும், தன்னுடைய குரல்வளைப் பிடிக்குள் ஆப்கானிஸ்தானத்தைக் கொண்டு வர முடியவில்லை.

என்றாலும், பிரிட்டிஷ் ஆட்சி என்ற பாறாங்கல்லைக் கழுத்தில் கட்டிக் கொண்டு, எவ்வித முயற்சியும் இல்லாமல் இந்தியா உறங்கிக் கிடக்கிறது. இந்த நிலையில், மற்றொரு பழமையான நாகரிகத்தையுடைய மாபெரும் நாட்டின் வரலாற்றை, அதாவது சீனாவின் வரலாற்றை இப்பொழுது நினைக்கிறேன்; பிரிட்டிஷார்கள் சீன மக்களுக்குக் கஞ்சாவைக் கொடுத்து ஏமாற்றி, கொஞ்சங் கொஞ்சமாக நாடு பிடிக்கும் ஆசையைப் பூர்த்தி செய்து கொண்டார்கள். இந்தக் கொடிய நிகழ்ச்சிகளின் நினைவு மங்குவதற்குள்ளாக மற்றொரு கொடுமை இழைக்கப்பட்டது. வட சீனாவை ஜப்பான் விழுங்கத் தொடங்கியது. என்றாலும், இந்தத் தறிதலைச் செயலை ஏதோ ஒரு சாதாரண நிகழ்ச்சி என்று பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் ஒதுக்கி விட்டார்கள். பிற்காலத்தில் இதே ராஜதந்திரிகள் ஸ்பெயின் நாட்டு ஜனநாயகத்தை உடைப்பதற்குத் தந்திரமாக உதவி புரிந்தனர்.

இதன் எதிராக, வீரம் வாய்ந்த சில ஆங்கிலேயர்கள் ஸ்பெயின் நாட்டின் விடுதலைக்குப் போராடி உயிர் விட்டதையும் நான் கண்டேன். ஆனால், ஆசிய நாடாகிய சீனா போன்ற ஒரு நாடு இத்தகைய ஆபத்தில் இருக்கும்பொழுது, ஆங்கில மக்களுடைய மனத்தில் இதே போன்ற பரந்த கருணை தோன்றவில்லை யென்பதும் உண்மைதான். என்றாலும்கூட, ஓர் ஐரோப்பிய ஜனநாயகம் துன்பத்தில் ஆழ்ந்தபொழுது, வீரத்தோடு தங்களையே தியாகம் செய்து கொண்ட அந்த ஆங்கிலேயர்களின் ஆன்மா, நான் எந்த ஒரு பண்பாட்டிற்கு முன்பே மரியாதை செலுத்தினேனோ, அந்தப் பண்பாட்டையே காட்டி நிற்கிறது. இவை இரண்டிற்குமுள்ள வேறுபாடு, மிகுந்த ஆற்றலுடன் என்னைத் தாக்கியதனால்தான்,

மேனாட்டாரின் நாகரிகத்தில் நான் கொண்டிருந்த நம்பிக்கையை இழந்த இந்த வருந்தத் தகுந்த வரலாற்றைக் கூற நேரிட்டது.

இங்கு இந்தியாவில், நாகரிக ஆட்சியின் வருந்தத் தகுந்த நிலை, வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, கல்வி, மருத்துவம் ஆகியவற்றின் இன்மையில்மட்டு மல்லாமல், இந்தத் தேசத்தையே ஒன்றுக் கொன்று எதிராகப் பிளந்து வைத்திருக்கின்ற கொடுமையிலும் காட்சி யளிக்கிறது. இதை இன்னும் கேவலமாக ஆக்கும் முறையில், நம்முடைய வருந்தத் தகுந்த இந்த அரசியல் நிலைக்கு நம்முடைய சமுதாயச் சூழ்நிலையே காரணம் என்றும் பேசப்படுகிறது. என்றாலும், ஆட்சியாளர்களுடைய மறைமுகமான உதவி இருந்தாலொழிய, இந்தத் தீமை இத்தகைய வடிவம் எடுத்திருக்க முடியாது.

ஜப்பானிய மக்களைக் காட்டிலும் இந்தியர்களாகிய நாம் அறிவுத் துறையில் குறைந்தவர்கள் என்று நான் நம்பவில்லை. கீழை நாட்டைச் சேர்ந்த இந்த இரண்டு மக்களிடையேயும் உள்ள முக்கியமான வேறுபாடு என்னவென்றால், பிரிட்டிஷ் அதிகாரத்தின் கீழ் இந்தியா வருந்தும் பொழுது, ஜப்பான் எந்தப் பிற நாட்டின் அதிகாரத்தின் கீழும் வாழ நேரிடவில்லை. எத்தகைய ஒரு பொருள் நம்மிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்டது என்பதை உண்மையில் நான் அறிவேன். நாகரிக ஆட்சி என்று சொல்லிக் கொள்ளப் படுகிற இந்த ஆட்சி நமக்குச் செய்த நன்மைகள் எல்லாம் "சட்டம், ஒழுங்கு" என்பவற்றோடு ஒரு போலீஸ் ராஜ்யத்தின் கருவிகளையும் நமக்கு அளித்ததேயாம். முரட்டு வன்மையின் எதிரே விடுதலைச் சக்தி தலை தாழ்ந்து விட்டது. மானிட உறவில் மிக முக்கியமான பகுதிகளை எடுத்துக்கொண்டு விட்டமையின், நம் முடைய முன்னேற்றமே பெரிதும் தடைப்பட்டு விட்டது.

என்றாலுங்கூட, மிகப் பரந்த மனப்பான்மையுடைய ஆங்கிலேயர்களோடு பழகும் வாய்ப்பை நான் பெற்றுள்ளேன். இவர்கள் உவமை கூற முடியாத நற்பண்பு உடையவர்களாதலால், அவர்கள் காரணமாக, அவர்களோடு சேர்ந்த ஆங்கில மக்களிடமும் நான் நம்பிக்கை இழக்கவில்லை. உதாரணமாக, உண்மையிலேயே சிறந்த கிறிஸ்தவரும், ஒரு பெருமகனுமாகிய ஆண்ட்ரூஸினிடத்தில், அவர் ஆங்கிலேயராக இருப்பினும், மிகச் சிறந்த நட்பைப் பெற்றிருந்தேன். இன்று அவருடைய மரணத்தின் பின் நின்று நோக்கும் பொழுது, ஒரு சிறிதும் தந்நல மில்லாத, தைரியத்தோடு கூடிய

அவருடைய பெருமை, இன்னும் ஒளி விட்டு விளங்குகிறது. அன்பாலும், பக்தியாலும் தூண்டப்பெற்று ஆண்ட்ரூஸ் செய்த காரியங்களுக்கு இந்தியாவில் உள்ளவர்களாகிய நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். தனிப்பட்ட முறையில் பேசும்போது, கீழ் கண்ட காரணத்திற்காக ஆண்ட்ரூஸிற்கு நான் பெரிதும் கடமைப் பட்டுள்ளேன். ஆங்கில இலக்கியத்தைப் படித்துவிட்டு, பிரிட்டிஷ் மக்களிடம் நான் இளமைக் காலத்தில் கொண்டிருந்த மதிப்பை, முதுமைக் காலத்தில் இழந்து விட்டேன் என்ருலும் அந்த இழந்த பகுதிகளுள் ஒரு சிலவற்றை மீட்பதற்கு அவர் உதவியுள்ளார். பிரிட்டிஷ் மக்களின் இருதயத்திலுள்ள பெருந்தன்மையை நாம் ஓயாமல் நினைப்பதற்கு ஆண்ட்ரூஸின் நினைவு உதவுகிறது. அவரை ஒத்த மனிதர்களையே மிக நெருங்கிய நண்பர்களாக நான் கொண்டிருந்தேன். அன்றியும் அவர்கள் மானிட சமுதாயம் முழுவதற்கும் நண்பர்களாக இருந்தார்கள். அத்தகைய மனிதர் களை நண்பர்களாகப் பெற்றிருந்தது என் வாழ்வை வளப்படுத்து வதற்கு மிகவும் உதவிற்று. பிரிட்டிஷாரின் கௌரவம் பாறையில் தாக்கி மோதிவிடாமல் காக்கின்றவர்கள் ஆண்ட்ரூஸ் போன்ற வர்களே! எவ்வாறு இருப்பினும், அவர் போன்றவர்களை நான் காணமலும், அறியாமலும் இருந்திருப்பின், மேனுட்டார் நாகரி கத்தில் நான் கொண்ட ஏமாற்றம் மாற்றம் இல்லாமலே முடிந் திருக்கும்.

இந்த இடைக்காலத்தில், திறந்த வாயிலுள்ள கோரைப் பற்களோடும், கூர்மையான நகங்களோடும், கொடுமையைப் பரப்பிக் கொண்டும், மற்ெருரு காட்டுமிராண்டித்தனம் ஐரோப்பா வில் பவனி வருகிறது. அந்தக் கண்டத்தின் ஒரு மூலையிலிருந்து மற்ெருரு மூலைவரை அடக்கு முறையின் புகை, காற்றைக்கூட விஷத்தன்மை உடையதாக ஆக்குகிறது. மேனுட்டாரின் மனோ தத்துவத்தில் அடங்கி இருக்கின்ற பலாத்கார உணர்ச்சி இன்று வெளிப்பட்டு, மனிதனுடைய ஆன்மாவையே மாசுப்படுத்தத் தொடங்கி விட்டது.

என்ருவது ஒரு நாள் இந்திய சாம்ராஜ்யத்தை விட்டுவிடுமாறு, அதிருஷ்டச் சக்கரத்தின் சுற்றல், பிரிட்டனைக் கட்டாயப்படுத்த நேரிடலாம். அப்பொழுது எத்தகைய இந்தியாவை அவர்கள் பின்னே விட்டுச் செல்ல நேரிடும்? எவ்வளவு அப்பட்டமான வறு மையை அவர்கள் விட்டுச் செல்ல நேரிடும்? இரண்டு நூற்ருண்டு களாக நடை பெற்ற அவர்களுடைய ஆட்சி ஆறு வறண்டு

போகும் பொழுது, எத்தகைய மோசமான சேறும், சகதியும், குப்பையும் வெளிப்பட்டு, மிகப் பெரிய ஆற்றல் வீணான வரலாற்றை எடுத்துச் சொல்லும். உண்மையான நாகரிகம் ஐரோப்பாவின் இருதயத்திலிருந்து தான் ஊற்றெடுக்கப் போகிற தென்று நான் நம்பிய காலமும் உண்டு. இன்று இந்த உலகத்தை விட்டு நான் விடை பெற்றுக் கொள்ள வேண்டிய நேரம் வருகின்ற பொழுது, அந்த நம்பிக்கை பொய்யாய், கனவாய்ப் போய் விட்டது.

இந்த நாட்டைக் காக்கின்ற ஒரு புண்ணிய புருஷர் தோன்றப் போகிறார் என்றும், அவர் இந்தியா என்று சொல்லப்படும் இந்த வறுமை நிறைந்த புவியில் நம்மிடையேதான் தோன்றப் போகிறார் என்றும் நான் நம்பிக் கொண்டு வாழ்கின்றேன். அவர் தரப் போகின்ற செய்திக்காக நான் காத்து நிற்கின்றேன். இந்தக் கீழ்த் திசையிலிருந்து அவர் தரப் போகின்ற மிக உயர்ந்த அந்தச் செய்தி, அதனைக் கேட்பவர்கள் அனைவருக்கும் புதியதொரு நம்பிக்கை யையும் சக்தியையும் தரும் என்னும் உறுதி உடையேன்.

'இறந்த காலம்' என்ற அப்பகுதியை திரும்பிப் பார்க்கும் பொழுது மிகப் பெருமைப்படத்தக்க ஒரு நாகரிகம் இடிந்து, பாழாகி, வரலாற்றின் குப்பைத் தொட்டியாகக் குவிந்து கிடப்பதை நான் காண்கின்றேன். என்றாலும்கூட, மனிதனிடத்தில் நம்பிக்கை இழக்கும் மா பெரும் குற்றத்தை நான் செய்ய மாட்டேன். அவனுடைய தற்காலத் தோல்வியை முடிவான தோல்வியாக நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். இந்தப் பெருங்குழப்பம் முடிந்து, கரு மேகங்களும், உணர்ச்சிப் போராட்டங்களும் ஓய்ந்து, வானம் தூய்மை அடையும் பொழுது, வரலாற்றில் ஒரு திருப்பு மையம் ஏற்படும் என்றே எதிர்ப்பார்க்கின்றேன்.

இந்தப் புதிய விடிவு காலம், சூரியன் தோன்றுகின்ற இந்தக் கீழ்த் திசையிலிருந்தே ஒருவேளை தோன்றினாலும் தோன்றலாம். அது தோன்றும் பொழுது என்றுமே தோல்வியை அறியாத மானிடன் தடைகளை யெல்லாம் உடைத் தெறிந்து, தான் இழந்த அந்த மாபெரும் சாம்ராஜ்யத்தை வெற்றி கொள்வதற்காக மறுபடியும் அடியெடுத்து வைத்துச் செல்லக் கூடும்.

தந்திரத்தின் தலைகர்வித்தனம் மிகப் பெரும் ஆபத்துக்களுடன் கூடியது என்பதை வெட்ட வெளிச்சமாக்கும் நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. பழங் கால ஞானிகள், உலகத்திற்கு எடுத்துக் கூறிய கீழ்க்கண்ட உண்மை எவ்வளவு சத்தியமானது என்பு அந்த நேரம் விளக்கிக் காட்டக்கூடும். "நிய

வழிகளின் மூலம் மனிதன் வளர்ச்சியும் யடையலாம்; அவனுக்குத் தேவைபோலக் காணப்படுவனவற்றையும் பெற்று விடலாம்; அவன் பகைவர்களையும் அழிக்கலாம்; ஆனால், அதேநேரத்தில் அவனுடைய வேரிலேயே அவன் அழுகி விடுகிறான்.''

—1941.

## இணைப்புகள்

# இணைப்பு I

தாகூர் நினைவு மலர்க் குழு

### பொறுப்பாளர் குழு.

1. ஸ்ரீ ஹுமாயூன் கபீர், தலைவர்
2. ஸ்ரீமதி சாந்தி கபீர்
3. ஸ்ரீமதி நிர்மல் குமாரி மகலனோபிஸ்
4. ஸ்ரீ பி. சி. மகலனோபிஸ்
5. ஸ்ரீ அனில் கே. சந்தா, பொருளாளர்
6. ஸ்ரீ ஏ. கே. கோஷ்
7. ஸ்ரீமதி மல்லிகா கோஷ்
8. டாக்டர் பாபானி பட்டாச்சாரியா, செயலாளர்.

### உறுப்பினர்கள்

9. ஸ்ரீ அபூ சயீத் ஆயூப்
10. ஸ்ரீ புத்ததேவ போஸ்
11. ஸ்ரீமதி ராணி சந்தா
12. ஸ்ரீ கே. சி. சௌத்தரி
13. டாக்டர் ஜெ. சி. கோஷ்
14. ஸ்ரீ அமல் ஹோம்
15. ஸ்ரீ பி. எஸ். கேசவன்
16. ஸ்ரீ பிரபாத் குமார் முகர்ஜி
17. ஸ்ரீ சோமநாத் மயித்ரா
18. ஸ்ரீ க்ஷித்திஸ் ராய்
19. ஸ்ரீ புலின் பிஹாரி சென்
20. ஸ்ரீ தாராக் நாத் சென்
21. ஸ்ரீ பிரபோத் சந்திர சென்
22. காஸி அப்துல் வதூத்

## இணைப்பு II

1. கல்வியின் மாறுபாடுகள்
2. வித்யாசாகர் - ஒரு கோணப் பார்வை
3. இந்திய வரலாற்றின் செய்தி
4. சமுதாயமும் அரசாங்கமும்
5. மாணவர்கட்குச் சொற்பொழிவு
6. கல்விப் பிரச்னை
7. அடுத்து என்ன ?
8. தலைமைப் பேருரை
9. வழியும் பயனும்
10. கிழக்கும் மேற்கும்
11. சமயத்தின் பொருள்
12. ஹிந்துப் பல்கலைக் கழகம்
13. சமய போதனை
14. தன்னைத் தானே அறிமுகஞ் செய்து கொள்ளல்
15. புறப்பாட்டுக்கு முன்னாள்
16. போதன மொழி
17. தலைவன் விருப்பமே நடைபெறும்
18. இந்தியப் பண்பாட்டு நிலையம்
19. கல்வியின் ஒற்றுமை
20. சத்தியத்தின் அழைப்பு
21. சுயராஜ்யத்திற்கு உழைத்தல்
22. கவிஞன் நிறுவிய பள்ளிக்கூடம்
23. கிராமமும் நகரமும்
24. கூட்டுறவு
25. ரஷ்யாவிலிருந்து வந்த கடிதங்கட்குப் பிற்குறிப்பு
26. கல்வியைப் பரப்புதல்
27. மாறும் யுகம்
28. ராம் மோஹன் ராய் - இந்திய யாத்ரீகர்
29. பெண்
30. நாகரிகத்தில் நெருக்கடியான நிலை.

# இணைப்பு III

## முதல் தேர்வுக்கு உதவியவர்கள்

1. ஸ்ரீ அபூ சயித் ஆயூப்
2. ஸ்ரீ சாரு சந்திர பட்டாச்சாரியா
3. ஸ்ரீ ஏ. என். பாசு
4. ஸ்ரீ புத்த தேவ போஸ்
5. ஸ்ரீ ராஜசேகர் போஸ்
6. டாக்டர் ஸ்ரீ குமார் பானர்ஜி
7. டாக்டர் பாபானி பட்டாச்சாரியா
8. ராய் ஹரேந்திரநாத் சௌத்ரி
9. ஸ்ரீ அனில் கே. சந்தா
10. டாக்டர் சுனீதீ குமார் சட்டர்ஜீ
11. ஸ்ரீ சுதாகந்த் ராய் சௌத்ரி
12. ஸ்ரீ நிஷிகந்த் ராய் சௌத்ரி
13. ஸ்ரீ கேதாரி நாத் சட்டர்ஜீ
14. ஸ்ரீ கே. சி. சௌத்ரி
15. ஸ்ரீ ஏ. சி. குஹா
16. டாக்டர் ஜெ. ஸி. கோஷ்
17. டாக்டர் பி. என். காங்குலி
18. ஸ்ரீ அமல் ஹோம்
19. ஸ்ரீ ஹுமாயூன் கபீர்
20. ஸ்ரீ பி. எஸ். கேசவன்
21. ஸ்ரீ பிரபாத் கே. முக்கர்ஜீ
22. ஸ்ரீ ஹிரேந்திரநாத் முக்கர்ஜீ
23. ஸ்ரீ பூபதி மஜும்தார்
24. ஸ்ரீ பி. சி. மஹலநோபிஸ்
25. டாக்டர் காளிதாஸ் நாக்
26. ஸ்ரீ ஆனந்தா ஷங்கர் ராய்
27. ஸ்ரீ க்ஷித்திஸ் ராய்
28. ஸ்ரீ நிஹர் ரஞ்சன் ராய்
29. ஸ்ரீ புலின் பிஹாரி சென்
30. டாக்டர் சச்சின் சென்
31. ஸ்ரீ கே. ஸி. சென்
32. ஸ்ரீ ப்ரபோத் சந்திர சென்
33. ஸ்ரீ என். கே. சித்தாந்தா
34. ஸ்ரீ தாரக் நாத் சென்
35. ஸ்ரீ ஸௌமியேந்திரநாத் தாகூர்
36. காஸி அப்துல் வதூத்

# இணைப்பு IV

மொழிபெயர்ப்பாளர் பட்டியல்

1. ஸ்ரீ புத்ததேவ போஸ்
2. டாக்டர் பாபானி பட்டாச்சாரியா
3. ஸ்ரீ அபூர்வ சந்தா
4. ஸ்ரீ சிதானந்த தாஸ் குப்தா
5. டாக்டர் ஜெ. சி. கோஷ்
6. ஸ்ரீ ஹுமாயூன் கபீர்
7. ஸ்ரீ சோமநாத் மயித்ரா
8. ஸ்ரீமதி லீலா மஜும்தார்
9. ஸ்ரீ தாரக்நாத் சென்
10. ஸ்ரீ சஞ்சல் சர்க்கார்

சாந்தினிகேதன், ரவீந்திர சாதனத்தைச் சேர்ந்த ஸ்ரீ க்ஷித்திஸ் ராயால் குறிப்புரை தயாரிக்கப் பெற்றது.

## இணைப்பு V

கட்டுரைகளின் முடிவான தேர்வுக்கு உதவிய இந்திய, ஐரோப்பிய, அமெரிக்க அறிஞர்கள்

(1) ஸ்ரீ ஹோரஸ் அலெக்ஸாண்டர், க்வேக்கர் நிலையம், புது டில்லி.

(2) சர் ஐசைய்யா மர்லின், ஆல் சோல்ஸ் கல்லூரி, ஆக்ஸ்போர்ட்.

(3) ஸ்ரீ மில்லன் பிராண்ட், 21, 11-வது கிழக்குத் தெரு, நியூயார்க் 3, என். ஒய்.

(4) ஸ்ரீ நார்மன் கசின்ஸ், ஆசிரியர் சாட்டர்டே ரெவ்யூ, 25, மேற்கு 45-வது தெரு, நியூயார்க் 36, என். ஒய்.

(5) பேராசிரியர் நெவில் காக்ஹில், மெர்ட்டன் கல்லூரி, ஆக்ஸ்போர்ட்.

(6) ஸ்ரீ லியோனர்ட் கே. எல்ம்ஹர்ஸ்ட், டார்லிங்டன் ஹால், டோடேன்ஸ், டெவோன் (இங்கிலாந்து)

(7) டாக்டர் டக்ளஸ் என்ஸ்மனர், போர்ட் பவுன்டேஷன், இந்தியக் கிளைப் பிரதிநிதி, 32, பிரோஸ் ஷா ரோட், புது டில்லி.

(8) ஸ்ரீ க்ளேரன்ஸ் பாஸ்ட், கல்வி வளர்ச்சி நிதி, 477, மாடிஸான் அவின்யூ, நியூயார்க் 22, என். ஒய்.

(9) டாக்டர் பி. கோபரோ, நெறியாளர், கீழ்த்திசைக் கல்வி நிறுவனம், விஞ்ஞானக் கழகம், யூ. எஸ். எஸ். ஆர்.

(10) தி ரைட் ஆனரபிள் லார்ட் ஹெயில் ஷாம், விஞ்ஞான அமைச்சர், 32, ஸ்மித் ஸ்கொயர், வெஸ்ட் மின்ஸ்டர், எஸ். டபிள்யூ-I.

(11) ஸ்ரீ ராபர்ட் எம். ஹட்சின்ஸ், தலைவர், குடியரசு நிதி, 60, கிழக்கு 42-வது தெரு, நியூயார்க் 17, என். ஒய்.

(12) குமாரி ஜீன் ஜாய்ஸ், போர்ட் பவுன்டேஷன், புது டில்லி.

(13) டாக்டர் மொர்டேகாய் ஜான்சன், தலைவர், ஹர்வார்ட் பல்கலைக் கழகம், வாஷிங்டன்-I டி. சி.

(14) ஸ்ரீ வி. டி. கிருஷ்ணமாச்சாரி, துணைத் தலைவர், திட்டக் கமிஷன், 5 ஜன்பத், புது டில்லி.

(15) பேராசிரியர் ரிச்சர்ட். பி. மேக்கீன், தத்துவப் பேராசிரியர், சிக்காகோப் பல்கலைக் கழகம், தத்துவத் துறை, 1050 கிழக்கு 42-வது தெரு, சிக்காகோ.

(16) தி ரைட் ஆன்ரபிள் மால்கம் மாக்டனல்ட். இந்தியாவில் இங்கிலாந்தின் ஹை கமிஷனர், 2, கிங் ஜார்ஜ்'ஸ் அவின்யூ, புது டில்லி.

(17) ஹர் எக்ஸலன்ஸி — ஸ்ரீமதி ஆல்வா மிர்டால். இந்தியாவில் ஸ்வீடன் நாட்டின் தூதுவர், புது டில்லி.

(18) ஸ்ரீமதி லக்ஷ்மி மேனன், துணை அமைச்சர், வெளிநாட்டுத் துறை, இந்திய அரசாங்கம், புது டில்லி.

(19) ஹிஸ் எக்ஸலன்ஸி ஸ்ரீ எஸ்காட் ரெய்ட், மேற்கு ஜர்மெனியில் கானடா நாட்டின் தூதுவர், பான்.

# குறிப்புரைகள்

## கல்வியின் மாறுபாடுகள்

கல்விப் பிரச்னை பற்றிய தாகூரின் முதலாவது கட்டுரை யாகும் இது. 1892-இல் ராஜ ஸகாஎியில் ஒரு பொதுக் கூட்டத்தில் படிக்கப்பட்ட இக் கட்டுரை 'ஸாதனு' என்ற மாதாந்தர இதழில் 1892 டிசம்பரில் வெளியிடப்பெற்றது. பின்னர் 'சிக்ஷா' (1908) என்ற நூலில் தொகுக்கப்பட்டது.

ஆரம்பக் கல்வி முதல் பல்கலைக் கழகம் வரைக் கல்வியின் எல்லா நிலைகளிலும் வங்காளி மொழியையே போதனு மொழி யாகக் கொள்ள வேண்டும் என்பதை வலுவாக ஆதரித்தது இக் கட்டுரை.

இக் கட்டுரையின் ஆங்கில மொழி பெயர்ப்பு 'தலை கீழான கல்வி' என்ற தலைப்பில் 'விஸ்வபாரதி முத்திங்கள்' இதழில் (நவம்பர் - ஜனவரி 1947) வெளியாயிற்று.

1. பங்கதர்ஸன்—வங்காளி மொழியில் முதன் முதல் வெளி யான இலக்கிய மாத இதழ். பிரசித்தி பெற்ற வங்காளிப் புதின ஆசிரியராகிய பங்கிம் சந்திர சட்டர்ஜி யால் 1872-இல் தொடங்கப் பெற்றது. 1875-இல் அது நின்று போகும் வரை அவரே அதன் ஆசிரியராக இருந்து வந்தார். 1901-இல் அதனை உயிர்ப்பித்துத் தாகூர் ஏப்ரல் 1906-வரை அதன் ஆசிரியராக இருந்து வந்தார்.
2. சூரிய முகியும் கமல மணியும்; சந்திர சேகரும் பிரதாப்பும் பங்கிம் சந்திரரின் புதினத்தில் வரும் பாத்திரங்கள்.

## சமுதாயமும் அரசாங்கமும்

1904-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 22-ஆம் தேதியன்று கல்கத் தாவில் நடந்த பொதுக் கூட்டத்தில் படிக்கப் பெற்றது. 'பங்க தர்ஸனில்' (ஆகஸ்ட் 1904) வெளியிடப் பெற்று, 'ஆத்ம சக்தி' (1905) என்ற நூலில் சேர்க்கப் பெற்றது.

வங்காளத்தில் ஏற்பட்ட தண்ணீர்ப் பஞ்சப் பிரச்னை பற்றி அரசாங்கம் நிறைவேற்றிய தீர்மானமே இக் கட்டுரை தோன்று வதற்கு உடனடியான தூண்டுதலாய் அமைந்தது.

சுரேந்திரநாத் தாகூர் இதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து "நம்முடைய ஸ்வதேசி சமாஜ்" என்ற தலைப்பில் மாடர்ன் ரெவ்யூ" (ஏப்ரல் 1921) வில் வெளியிட்டதுடன் "அகண்ட இந்தியா" (கணேசன், சென்னை 1921) என்ற நூலிலும் இதனைச் சேர்த்தார். லீலா மஜூம்தார் "சமுதாயமும், அரசாங்கமும்" என்ற தலைப்பில் மற்றோர் ஆங்கில மொழி பெயர்ப்பை "ஹிந்துஸ் தான் ஸ்டாண்டர்ட் பூஜா மலரில்" 1949-இல் வெளியிட்டார்.

1. சமுதாயமும் அரசாங்கமும் — இந்தக் கட்டுரையைத் தொடர்ந்து, இக் கட்டுரையில் கண்டுள்ளபடி ஒரு கழகத்தையே நிறுவி, அதன் உறுப்பினர்கள் நடை முறைக்காக விதிகளையும் தாகூர் வரைந்துள்ளார்.

2. மாகாண மாநாடு — இந்த மாநாடு 1888-இல் துவக்கப் பெற்று முதற் கூட்டம் கல்கத்தாவில் நடைபெற்றது. 'நட்டோரி'லும் (1897) 'டாக்கா'விலும் (1899) நடை பெற்ற இரு கூட்டங்களிலும் கூட்ட நடை முறைகள் ஆங்கிலத்தில் அல்லாமல் வங்காளியிலேயே நடைபெற வேண்டும் என்று தாகூர் வலியுறுத்தினர். 1908-இல் 'பாப்ன'க் கூட்டத்திற்குத் தலைமை வகித்தபொழுது வங்காளியிலேயே தம் தலைமை யுரை இருக்க வேண்டு மென அவர் முடிவு செய்தார்.

3. தேசீயக் காங்கிரஸ் — முதல் தேசீயக் காங்கிரஸ் 1885-ம் ஆண்டு கிறிஸ்துமஸ் விடுமுறையில் பம்பாயில் கூடியது. வங்காளி பாரிஸ்டரான டபிள்யூ சி. பானர்ஜி இக் கூட் டத்திற்குத் தலைமை தாங்கினர்.

4. வங்காள......முனைந்தது - 1905-ல் லார்ட் கர்ஸான் வங்கா ளத்தைப் பிரிவினை செய்தார். இதன் பயனாக வங்காளித் தேசீயம் தாகூரைத் தலைவராகக் கொண்டு கிளர்ந்து எழுந்தது. வங்காளம் பண்பாட்டு ரீதியில் ஒன்றுகவே இருத்தல் வேண்டுமென்றும், சுய உதவி அடிப்படையில் வங்காளக் கிராமங்கள் அனைத்திற்கும் ஒரு புத்துயி ரளிக்கும் இயக்கத்தை நிறுவ வேண்டுமென்றும் விரும் பினர்.

5. கபீர், குரு நானக் - வைணவ பக்தர்கள்—நானக்கும், கபீரும் இடைக் காலத்தைச் சேர்ந்த (15-ம் நூற்றுண்டு) அடியார்கள். அன்பு மார்க்கத்தைப் போதித்த அவர்கள்,

எல்லா வகுப்பினர், சமயிகள் ஆகியவரிடையேயும் ஒற்றுமை நிலவ வேண்டுமென உபதேசித்தனர். வங்காளத்தில் சைதன்யரால் நிறுவப்பட்ட 'வைஷ்ணவர்கள்' இதே போன்ற கொள்கைகளையே உபதேசித்தனர்.

6. ரிஷிகள்—தீர்க்க தரிசிகளும் திரிகால ஞானிகளுமாவர்.

---

### கல்விப் பிரச்னை

1906-ம் ஆண்டு ஜுன் மாதம் 6-ம் நாள் கல்கத்தாவில் நடந்த பொதுக் கூட்டத்தில் படிக்கப்பெற்றது. 'பங்க தர்சனில்' (ஜுன் 1906) வெளியிடப்பெற்று 'சிக்ஷா' (1908) என்ற நூலில் சேர்த்துக் கொள்ளப்பெற்றது.

1905-ம் ஆண்டு நடந்த வங்கப் பிரிவினையை ஒட்டி எழுந்த 'இயக்கத்தின்' நேரடி விளைவாகும் இது. சில தேசபக்தர்கள் கல்வியைத் 'தேசீய மயமாக்க' முயன்று அக் கல்வி இந்தியக் கல்வியாக அமைய வேண்டும் என்று கருதினர்கள். 1906-ல் தேசீயக் கல்விக் கழகம் நிறுவப்பட்டது. இதன் தொடக்க காலத்தில் தாகூர் அதனுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். அந்தக் கழகத்தின் பள்ளிக்கூடக் குழுவினர், பள்ளிக்கூட அமைப்பை வரைய வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற் கிணங்க இக் கட்டுரை வரையப்பெற்றது.

1. விஞ்ஞானக் கழகம் — கல்கத்தாவில் 1876-ம் ஆண்டு விஞ்ஞான வளர்ச்சியைக் கருதி இந்தியக் கழகம் ஒன்று டாக்டர் மகேந்திரலால் சர்க்காரால் நிறுவப்பட்டது.

2. பிரம்மச்சரிய விரதம் - பழங்கால ஹிந்துக்கள் கூறிய நான்கு நிலைகளில் முதலாவது நிலை. ஏனைய நிலைகளை அடைவதற்குரிய பயிற்சியையும் ஒழுங்கையும் அடைவதற்குரிய முதற்படியே பிரம்மச்சரியம் என்று கருதப்பெற்றது.

3. நன்னரிக் கஷாயம்—பலருக்கும் பழக்கமான ஒருவகை மருந்து.

4. நெருப்பும் ........ தலை வணங்கிடுவோம் — ஸ்வேதஸ்வதார உபநிஷதம்: 2/17. வேதாந்தக் கொள்கையின் அடிப்படையாகும் உபநிஷதங்கள். இந்தியத் தத்துவத்திலும், சமயக் கொள்கையிலும் கடந்த 3000 ஆண்டுகளாக இவை ஆட்சி செலுத்தி வருகின்றன. உப-பக்கம்;

நி - கீழே ; ஷத் - உட்கார் என்பதே இச் சொல்லின் பொருளாகும். பழங் காலத்தில் மாணுக்கர்கள் குருமார் களின் திருவடிகளில் அமர்ந்து மிக உயர்ந்த ஞானங்களைக் கற்றுக் கொண்டமையாலேயே இப் பெயர் வந்தது. உபநிஷதங்கள் 108 என்று கர்ண பரம்பரையாகச் சொல்லப்படுகிறது. இவற்றுள், ஈச, கேன, கட, பிரஸ்ன, முண்டக, மண்டூக்ய, தைத்ரீய, ஐத்ரேய, சந்தோக்ய, பிரகாதாரண்யக என்ற பத்து உபநிஷதங்கள் முக்கிய மானவை. பெரிய வேதாந்த வித்தகரான சங்கரர் இப் பத்திற்கும் விரிவுரை எழுதியுள்ளார்.

5. ஆறு அங்க...காட்சி—இந்தியாவில் ஓர் ஆண்டை ஆறு ருதுக்களாகப் பிரித்துள்ளனர். கோடை (முதுவேனில்), கார் (மழை), இலையுதிர் (முன்பனி), வாடை (பின் பனி), கூதிர் (குளிர்), இளவேனில் (வஸந்தம்) என்பவையாம்.

6. யாக்ஞவல்கியர்—மிகப் பழைய இந்தியாவின் மாபெரும் ஞானி களுள் ஒருவர். பிரகாதாரண்யக உபநிஷதம் II, IV, காண்க.

7. பாபுக்கள்—ஒரு ஹிந்துவை, அதிலும் முக்கியமாக வங்காளி மனிதரைக் கேலி செய்யும் முறையில் அழைப்பது.

---

### அடுத்து என்ன ?

1906-ல் கல்கத்தாவில் நடைபெற்ற விவாத அரங்கில் படிக்கப் பெற்றது. ‘பங்க தர்ஸ’னில் (நவம்பர் 1906) வெளியிடப் பெற்றது. ‘தர்மா’ என்ற நூலில் (1909) சேர்க்கப் பெற்றுள்ளது.

“இந்தியாவின் நான்கு வகைப்பட்ட வழிகள்” என்ற பெய ருடன் இது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு ‘மாடர்ன் ரெவ்யூ’வில் (ஆகஸ்ட், 1924) வெளி வந்தது. ‘அடுத்து என்ன?’ என்ற பெயருடன் மற்ருேர் ஆங்கில மொழிபெயர்ப்பு விஸ்வ பாரதி முத்திங்கள் வெளியீட்டில் (ஏப்ரல், 1924) வெளியாயிற்று.

1. தனி ஒரு குடும்பம்...காண்மின்—மகாபாரதம், ஆதி பர்வம்: 115/38—39.

2. ஆசைகள்..என்ன ? பர்த்ருஹரி (6-ம் நூற்ருண்டு) வீட்டில் ஏற்பட்ட அவலம் காரணமாக உலகைத் துறந்து விட்டார் என்று கூறப்படுகிறது. ‘வைராக்ய சதகம்’ (துறவு பற்றி நூறு பாடல்கள் கொண்டது) என்ற

நூலை இயற்றியுள்ளார். அதிலிருந்துதான் இப்பகுதி எடுக்கப்பெற்றுள்ளது.

3. உலகையே........எய்துகிறான் — ஈசா உபநிஷதம்: 9, 11 இந்த உபநிஷதம் புத்தர் காலத்துக்கும் முற்பட்டதென்றும், அநேகமாக கி. மு. 8-ம் நூற்றாண்டாக இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. ஆன்மீக ஒளியால் நிறைந்திருந்த ஞானிகள் மனமுவந்து பாடிய பாடல்கள் என்று கருதப்படுவது. மிகச் சுருங்கிய அளவுள்ள 18 பாடல்களை மட்டும் பெற்றிருப்பதால் ஏனைய உபநிஷதங்களைக் காட்டிலும் அளவால் மிகச் சுருங்கிய ஒன்றாகும். இந்த உபநிஷதத்தின் முதல் ஸ்லோகமாகிய 'இசாவாஸ்யம்' என்று தொடங்கும் பாடல் தாகூரின் தந்தையாகிய தேவேந்திர நாத்தின் ஆன்மீக வாழ்க்கையில் ஒரு புரட்சியையே உண்டாக்கி விட்டது. தாகூரின் வாழ்க்கையிலும், அவருடைய தந்தை வாழ்க்கையைப் போல, உபநிஷதங்கள் பெரிய அளவுக்குச் செல்வாக்குப் பெற்றிருந்தன. அவர் ஆற்றிய ஹிப்பர்ட் சொற்பொழிவுகளாகிய "மனிதனின் சமயம்" என்பதிலிருந்து இதனை அறியலாம்.

4. தன்......தாம்—ஈசா உபநிஷதம்: 2.

5. இவ்......பின்—ஈசா உபநிஷதம்: 1.

6. மனு—மனுஸ்மிருதி: 2/96.

7. எந்த இன்பத்திலிருந்து ...... செல்வோம்—தைத்ரேய உபநிஷதம்: 3/6.

8. மரணமிலா .... செய்வேன் — பிரஹதாரண்யக உபநிஷதம். 11, iv, 2, 3; v. 3, 4. யாக்ஞவல்கியர் என்ற ஞானி இவ்வுலகைத் துறந்து 'சந்நியாசம்' வாங்கப் போகிறார். அப்பொழுது அவருடைய மனைவியாகிய மைத்ரேயியை இவ்வுலகப் பொருள்களை ஏற்றுக் கொள்ளுமாறு கூறுகிறார். அப் பொருள்கள் அழிவிலாப் பெரு வாழ்வை நல்குமோ என அந்த அம்மையார் கேட்கிறார். இந்த உலகமும் அதிலுள்ள செல்வ முழுவதும் சேர்ந்து தம்மிடம் வந்தாலும் அவை அழிவிலாப் பெரு வாழ்வை நல்குமோ என அந்த அம்மையார் வினவுகிறார். அந்த ஞானி 'முடியாது' என்ற விடையைத் தான் கூற

வேண்டி இருக்கிறது. அப்பொழுதுதான் மைத்ரேயி "அப்படியானால் அழிவிலாப் பெரு வாழ்வை நல்காத இவற்றை வைத்துக் கொண்டு நான் என்ன செய்யப் போகிறேன்?" என்று கேட்கிறார்.

---

தலைமை உரை

1908-ல் வங்காள மாகாண மாநாடு பாட்னாவில் கூடியபொழுது வாசிக்கப் பெற்ற தலைமை உரை. இந்த ஒரே ஒரு அரசியல் மாநாட்டில்தான் தாகூர் தலைமை தாங்கினார். தலைமை வகிப்பவர் வங்காளியில் தலைமை உரையைப் பேசினது, முதன் முதலில் இந்த மாநாட்டில்தான்.

'பிரபாஸி' (பிப்ரவரி, 1908) என்ற திங்கள் இதழில் வெளி யாயிற்று. 'சமூக' (1908) என்ற நூலிலும் சேர்க்கப் பெற்றுள்ளது.

1908-ல் சுரேந்திரநாத் தாகூரால் முதன் முதலில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிடப் பெற்றது. (தாகூரின் கட்டுரைகளில் முதன் முதலில் ஆங்கிலத்தில் ஆக்கம் பெற்று வெளியிடபெற்றது இதுதான் போலும்) 'கிரேட்டர் இந்தியாவில்' வில் "ஒரே தேசீயக் கட்சி" என்ற பெயரில் மறுபடியும் பதிப்பிக்கப் பெற்றது.

1. சென்ற முறை...... காங்கிரசில் — அகில இந்தியத் தேசீயக் காங்கிரஸின் சூரத் கூட்டத்தில் (1907) காங்கிஸ் தலைமையிடத்தில் 'மிதவாதிகள்', 'தீவிரவாதிகள்', இடையே வெளிப்படையான பிளவு ஏற்பட்டது

2. சாதி அடிப்படையில் கழகங்கள் - 1906-ல் டாக்காவைச் சேர்ந்த நவாப் சலிமுல்லா 'முஸ்லீம் லீக்' என்ற பெயரில் முஸ்லீம்கட்கான நிலையான ஸ்தாபனம் ஒன்றை நிறுவினார். அது வங்காளப் பிரிவினையை ஆதரித்து, பிரிட்டிஷ் சரக்குகள் பகிஷ்காரத்தை எதிர்த்தது.

3. பிரிவினை செய்வதனால் - தனித் தொகுதி, முக்கியத் துவம் (Weightage) என்ற இரண்டு தந்திரமான வழி களைக் கையாண்டு லார்ட் மிண்டோ (கர்ஸானை அடுத்து கவர்னர் ஜெனரலானவர்) முஸல்மான்களைத் தம் பக்கம் இழுத்துக் கொண்டு காங்கிரஸ் கட்சிக்கு எதிராகவும் இருக்குமாறு செய்தார்.

4. லார்ட் மாலி - 1905-ல் இந்தியாவின் செகரட்டரி ஆப் ஸ்டேட்டாக ஆனார். பெரிய லிபரல் கட்சியாளர். பிரி

வினையை அடுத்து வங்காளத்தில் ஏற்பட்ட தேசீய இயக்கத்தை எதிர்த்தவர்.

5. தேசீயப் பள்ளிக்கூடம் - 1906-ல் கல்கத்தாவில் ஒரு தேசீயப் பள்ளியை நிறுவிய தேசீயக் கல்விக் குழுவில் தாகூர் முக்கியப் பங்கை மேற்கொண்டார்.

6. தேசீய நிதி - பிரிவினை எதிர்ப்புக் கிளர்ச்சி நாட்களில் பாடல்கள் பலவற்றை இயற்றி, கல்கத்தாவின் தெருவுகளூடே பெரிய ஊர்வலங்களைத் தலைமைத் தாங்கி நடத்திச் சென்றார் தாகூர். தேசீய நிதிக்குப் பணம் தேவை என்று அவர் ஒரு பொதுக் கூட்டத்தில் கூறினவுடன் அதே இடத்தில் ரூ. 50,000/—வசூலாயிற்று.

7. காளி தேவி - கரிய நிறமுடைய அழிக்குந் தெய்வம்.

8. 'பள்ளிப் பையன்' - தீவிர வாதிகளின் பயங்கர இயக்கத்தின் முதல் "கொடுமை"களில் கூதிராம் போஸ் என்ற 19 வயதுக்குட்பட்ட இளைஞன் (மார்ச்சு, 1908) குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப் பெற்றான். இதனை அடுத்துப் பள்ளிப் பிள்ளைகளை எல்லாம் ஆராய முயற்சி நடைபெற்றது. இம் முயற்சியால் பல பிள்ளைகள் பெரிதும் உடல் வருத்தப் பெற்றனர்.

9. சுதேசி இயக்கம் - வங்காளப் பிரிவினையை (1905) அடுத்துத் தோன்றிய சுதேசி இயக்கம் பிரிட்டிஷார்கள் அடக்கு முறையைக் கைக்கொள்ளத் தூண்டியது.

10. ஜகத்தால் கல் - மிகப் பெரிய மந்திர சக்தியுடைய கல் என்றும், உலகையே நசுக்கிவிடும் சக்தி வாய்ந்தது என்றும் பேசப்படுகிறது.

11. பகீரதன் - புராணங்களில் காணப்படும் இந்த அரச குமாரன் நீண்ட தவத்திற்குப் பிறகு தெய்வீக கங்கையை (பாகீரதி என்றும் கூறப்படும்) இந்திய மண்ணிற்குக் கொண்டு வந்ததாகக் கூறப்படுகிறது. ஒரு முனிவனின் சாபத்தால் சாம்பராகிவிட்ட இவன் முன்னோர்கள் அந்தத் தண்ணீர் பட்டவுடன் உயிர் பெற்றனர்.

12. அர்த்தோதயம் - பஞ்சாங்கப்படி பல நாட்கட்கு ஒருமுறை வரும் ஒரு புண்ணிய நாள். குளித்து, உண்டு இன்பமாக இருக்கும் நாள். இக் கட்டுரை எழுதிப் பெற்ற ஆண்டில் இது நிகழ்ந்தது.

## கிழக்கும் மேற்கும்

1908-ம் ஆண்டு ஜூலைத் திங்களில் சதாரண் பிரம்மோ சமாஜ மண்டபத்தில் மாணவர் கூட்டமொன்றில் இக் கட்டுரை படிக்கப் பெற்றது. 'பங்க தர்சனில்' (ஆகஸ்ட், 1908) இக் கட்டுரையின் சுருக்கம் வெளியிடப் பெற்றது. முழுக் கட்டுரையும், 'பிரபாலி' யில் "பூர்வ-ஓ-பஸ்சிம்" என்ற பெயரில் வெளியாயிற்று. 'சமாஜ்' (1908) என்ற நூலிலும் சேர்க்கப் பெற்றுள்ளது.

இக் கட்டுரையின் ஆங்கில மொழி பெயர்ப்பு ஒன்று, எஸ். டி. சர்மாவால் 'இந்தியாவின் எதிர்காலம்' என்ற தலைப்புடன் 'மாடர்ன் ரெவ்யூ' (மார்ச், 1911)வில் வெளியிடப் பெற்றது. "அகண்ட இந்தியாவில் கிழக்கும் மேற்கும்" என்ற தலைப்புடன் மற்றோர் ஆங்கில மொழிபெயர்ப்பு (சுரேந்திரநாத் தாகூர் செய்தது) அதே 'மாடர்ன் ரெவ்யூ'வில் ஜூன் 1921-ல் வெளியாயிற்று.

1. மிகப் பழங்காலம் - ஏறத்தாழ கி. மு. 2000.
2. புத்த காலம் - ஏறத்தாழ கி. மு. 4-ம் நூற்றுண்டு முதல் கி. பி. 10-ம் நூற்றுண்டு வரை.
3. இந்திய வரலாறு - 1191-ல் முகமத் கோரி, இராஜபுத்திர மன்னன் பிரித்விராஜன் மேல் பெற்ற வெற்றியே இந்தியாவில் முஸ்லீம் அரசு கால் கொள்ளக் காரணமாயிற்று.
4. ராம் மோஹன்ராய் - ஹிந்து சமயத்திற்கு மறுமலர்ச்சி நல்கிய மாபெரும் புரட்சியாளர்களுள் ஒருவர். பிரம்மோ சமாஜத்தை நிறுவியவர். இந்திய மறுமலர்ச்சியின் தந்தை என்று கருதப்பெறுபவர்.
5. ரானடே - மகாதேவ கோவிந்த ரானடே (1842—1901) மகாராஷ்டிரத்தில் மிக முக்கியமானதும் முன்னேற்றம் பொருந்தியதுமான சமுதாய, சமய, சீர்திருத்தங்களைச் செய்த தலைசிறந்த ஒருவர் ஆவார்.
6. விவேகானந்தர் - (1863—1902) இராமகிருஷ்ணரின் தலையாய சீடர். தம்முடைய குருவின் செய்தியை இந்தியா முழுவதும் பரப்பியதோ டல்லாமல், மேலை நாடுகளிலும் வேதாந்தக் கொள்கையை வெற்றிகரமாக எடுத்துக் கூறியவர். இராமகிருஷ்ண மிஷனைத் தோற்றுவித்தவர்.
7. பங்கிம் சந்திர சட்டர்ஜி - (1831—1894) கல்க்த்தா பல் கலைக் கழகத்திலிருந்து வெளிவந்த முதலாவது வங்

காளிப் பட்டதாரி. வங்காளியில் முதன் முதலாகத் தோன்றிய பெரிய எழுத்தாளர். நவீன காலப் புதின முறையை வங்காளியில் கையாண்டவர்.

8. இராவணன்—இராமாயணக் கதையே இங்கு குறிப்பிடப்படுவது. இலங்கையின் இராட்சஸ மன்னனாகிய இராவணன் சீதையைத் தூக்கிக்கொண்டு சென்றதே கடவுளின் அவதாரமாகிய இராமனோடு அவன் போர் புரியக் காரணமாயிற்று என்று சொல்லப்படுகிறது.

9. டேவிட் ஹேர் - டேவிட் ஹேர் (1775—1842). ஸ்காட்லாந்து தேசத்தில் ஒரு கடிகாரம் செய்பவரின் மகனாகப் பிறந்தவர். கல்கத்தாவில் பொருள் தேட வந்து, இறுதியில் தம் சொத்தில் பெரும் பாகத்தை வங்காளிப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காகத் தந்தவர். ராம் மோகன்-ராயோடு சேர்ந்து ஹிந்துக் கல்லூரியைத் தோற்றுவித்தார். அக் கல்லூரியே பிற்காலத்தில் மாநிலக் கல்லூரியாக மாறிற்று.

---

## ஹிந்துப் பல்கலைக் கழகம்

1911-ம் ஆண்டு அக்டோபர் 29-ம் தேதி யன்று கல்கத்தாவில் ஒரு கூட்டத்தில் படிக்கப்பெற்றது. "தத்துவ போதினி பத்திரிகா"வில் (நவம்பர், 1911) வெளியிடப் பெற்றது. "பரிச்சியா" (1916) என்ற நூலில் சேர்க்கப்பட்டுள்ளது.

1. வல்வரசு மாநாடு—1911-ஆம் ஆண்டு லண்டனில் இம்பீரியல் (குடியேற்ற) மாநாடுகளின் வரிசையில் 5-வது மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் விவாதற்கு வந்த முக்கியமான பிரச்னை—என்னவென்றால் டொமீனியன்களிலிருந்து பிரதிநிதிகளைக் கொண்ட இம்பீரியல் பாராளு மன்றம் ஒன்றைத் தொடங்க வேண்டு மென்பதாகும். பிரதம மந்திரியாகிய ஆஸ்க்வித் இதனைத் தடை செய்து விட்டார்.

2. குஜராத்திகள், மராத்திகள், ஏனையோர்கள் - வங்காளி, ஹிந்தி, குஜராத்தி, மராத்தி ஆகிய மொழிகள், செம்மையான சம்ஸ்கிருத மொழியிலிருந்து பிறந்த கிளை மொழிகளின் அடிப்படையில் தோன்றியனவாகும்.

3. சந்தாலி இலக்கியம்—வங்காளம், பீஹார் ஆகிய மாகாணங்களின் எல்லைப்புறங்களில் தங்கி வாழ்கின்ற ஆதிமக்களாவர், சந்தால்கள்.

4. தனித்தே இருப்பது—இந்தியாவிலுள்ள முஸ்லீம்களின் தலைவர்கள், தேசீய ஹிந்துக்களின் விருப்பப்படி ஒரு ஜனநாயக முறை அமைக்கப்பட்டால், சிறுபான்மை இனத்தவரின் தேவைகளை யெல்லாம் பெரும்பான்மை இனத்தவர் நசுக்கி விடுவார்கள் என்ற கருத்தைப் வெளிப்படையாகப் பேசி வந்தனர்.

5. கல்வி முறை—இந்த நூற்றுண்டின் முற் பகுதியில் நடைபெற்ற, கல்வி முறையை இந்திய மயமாக்கும் முயற்சி பற்றியே இங்குப் பேசப்படுகிறது. 1907-ல் தேசீயக் கல்விக் குழு அமைக்கப்பட்டதும் இதனையொட்டியேயாகும்.

6. அந்த......ஒருவர்—இங்கே பேசப்படுபவர்கள் இராமர், புத்தர் ஆகிய இருவருமே யாவர்.

7. தேறில் ஏறி—இந்த உருவகம் பூரியில் ஒரு கோயிலிவிருந்து மற்றொரு கோயிலுக்கு ஜெகந்நாதரைத் தேரில் வைத்து இழுத்துச் செல்கின்ற திருவிழாவை மனத்தில் கொண்டு செய்யப் பெற்றதாகும். பக்தர்கள் இந்தத் தேர்களைக் கயிற்றின் மூலம் இழுப்பார்கள்.

---

## புறப்பாட்டுக்கு முன்னுள்

இக் கட்டுரையின் பெயரே குறிப்பிடுவது போல் இக் கடிதம் 1912-ம் ஆண்டு மே மாதம் தாகூர் இங்கிலாந்துக்குப் புறப்படுவதற்கு முதல் நாள் எழுதப் பெற்றதாகும். இக் கடிதம் சாந்தி நிகேதனத்தில் உள்ள பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு எழுதப்பெற்றது.

'தத்துவபோதனிப் பத்திரிகா'வில் (ஜூலை, 1912) வெளியிடப்பட்டது. பாதர் கஞ்சயர் (1947) என்ற நூலில் சேர்க்கப்பட்டுள்ளது.

1. குடிசை—சாந்தி நிகேதனத்திலுள்ள ஆசிரமத்தையே இவ்வாறு குறிப்பிடுகிறார்.

2. அனைத்தும்......தோன்றுகின்றன—தைத்ரேய உபநிஷதம் 3/6.

3. போல்பூர்—சாந்தி நிகேதனத்தை அடுத்துள்ள ரயில் நிலையமும் நகரமும் ஆகும்.

4. ஹோமர் கிரன்—இவரைப் பற்றி 1894-ம் ஆண்டு ஜூலையில் தம்முடைய மாத இதழாகிய 'சாதனை'வில் தாகூர் ஒரு முழு நீளக் கையறுநிலை பாடியுள்ளார்.

5. சகோதரி நிவேதத்தா—அயர்லாந்து நாட்டில் பிறந்த மார்கரெட் எலிசபெத் மோபெல் என்ற இந்த அம்மையார் 1896-ல் விவேகாநந்தரின் மாணவியாகி, கல்கத்தாவுக்கு வந்து தம் வாழ்நாள் முழுவதையும் இராமகிருஷ்ண மிஷன் பள்ளிக்காகச் செலவிட்டார்.

6. வளர்ந்து உச்ச நிலையில்—ஏறத்தாழ கி. மு. 4-ம் நூற்றுண்டிலிருந்து கி. பி. 10-ம் நூற்றுண்டு வரை.

7. வலு...முடியாது—கதா உபநிஷதம் 2/23. முண்டக உபநிஷதம் 3/2/3.

8. ஒரு சிறு......காக்கும்—கீதை 2/40.

9. சட்டசபையில்—1909-ல் மிண்டோ-மார்லிச் சீர்திருத்தத்தின் காரணமாகச் சட்ட மன்றத்தின் பணிகளில் பல முக்கியமான மாறுதல்கள் ஏற்பட்டன.

10. பாற்கடலை...உண்டனது—இந்தக் குறிப்பு, புராணங்களில் வருகின்ற ஒரு கதையாகும். தேவர்களும், அசுரர்களும் கூடி சமுத்திரத்தைக் கடைந்தார்கள். சமுத்திரம் தன்னிடத்திலுள்ள பொருள்கள் அனைத்தையும் தேவர்களுக்குத் தந்த பிறகு, நாணுகப் பயன்படுத்தப்பட்ட வாசுகி விஷத்தைக் கக்க, சிவன் அதனை உண்டார்.

## தலைவன் விருப்பமே நடைபெறும்

1917 ஆகஸ்டு 4-ம் தேதி கல்கத்தாவில் ஒரு பொதுக் கூட்டத்தில் படிக்கப்பட்டது. 'பிரபாசி'யில், ஆகஸ்டு, 1917-ல் வெளியிடப்பட்டு, தனிப் புத்தகமாகவும் அதே நேரத்தில் வெளி வந்தது. "கலாந்தார்" (1937) என்ற நூலில் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்திய "ஹோம்ரூல் இயக்கத்"தின் தலைவியாகிய திருமதி அன்னிபெசன்ட் அம்மையார் சென்னை அரசாங்கத்தால் 1916-ம் ஆண்டு ஜூலை மாதம் சிறை செய்யப்பட்டார். வங்காளத்தில் இதைப்பற்றிய ஒரு பொது மறுப்பைத் தோற்றுவிக்க வேண்டுமென்று சிலர் தொடங்கிய பொழுது வங்காள அரசாங்கம் அவ்வாறு ஏதேனும் செய்யப்பட்டால் அதனைச் சட்டம் மீறிய செயலாகவே எடுத்துக் கொள்ள நேரிடுமென்று எச்சரிக்கை செய்தனர். இந்த

எச்சரிக்கையைக் கேட்டு அரசியல்வாதிகள் வாய்மூடி இருந்து விட்டாலும், பொதுமக்களுடைய மனத்தில் தோன்றிய வெறுப்பைத் தாகூர் இதன்மூலம் வெளியிட்டார்.

இதனுடைய ஆங்கில மொழிபெயர்ப்பு (சுரேந்திரநாத் தாகூர் செய்தது) "நீ கீழ்ப்படிந்தே ஆக வேண்டும்" என்ற தலைப்புடன் 'மாடர்ன் ரெவ்யூ'வில் (செப்டம்பர், 1917) வெளியாயிற்று.

1. சந்து - கல்கத்தாவிலுள்ள துவாரகநாத் தாகூர் சந்தில்தான் தாகூர் பிறந்து, வளர்ந்து, இறந்த அவருடைய பூர்வீக வீடு அமைந்து இருக்கிறது.
2. 'கால்களால்.........எத்தனை காலம் பிடிக்கும் - அக்காலத்தில் பிரபலமாய் இருந்த ஒரு தேசியப் பாட்டைக் கேலி செய்யும் முறையில் அமைக்கப்பட்டது.
3. சித்பூர் சாலை - துவாரகாநாத் தாகூர் சந்து சென்று சேருகின்ற பெரிய சாலை.
4. சௌரங்கி - கல்கத்தாவின் 'பிக்கா டிலி' ஆகும்.
5. அபிமன்யூ - அர்ஜுனன் மகனாகிய இவன் குழந்தை வீரனாவான்.
6. அற்பத்தனம்.........தருகிறது—சந்தோக்கிய உபநிஷதம் - 7/23/1.
7. சனி, செவ்வாய், ராகு, கேது - ஹிந்து சமய சோதிடப்படி தீய பயனைத் தருகின்ற கொடுங் கோள்களாகும்.
8. வங்காளத்தின் மங்கள காவியங்கள் - இடைக்கால வங்காளத்தில் வழங்கப்பட்ட சந்தி, மனசா, தர்மா ஆகிய தேவதைகளின் பெயர்களைத் தாங்கிய கதைப்பாட்டுகள்.
9. கவி கங்கன் - 17-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த வங்காளக் கவிஞராகிய முகுந்தராம் என்பவரின் பட்டப் பெயராகும் கவி கங்கன் என்பது. சண்டிதேவியின் மேல் இவர் பாடிய மங்களகவிதை ஒரு பேரிலக்கியமாகும்.
10. அனைத்திலும்......கண்டவன் - ஈசா உபநிஷதம்—6.
11. கைம்பெண் - கைம்பெண்ணாக ஆகிவிட்ட பெண்கள் கடைப் பிடிக்க வேண்டிய விரத நாட்கள் எவை எவை என்று ஹிந்து சமயம் வகுத்துள்ளது.

12. ஸ்நான யாத்திரை - தெய்வங்களை நீராடக் கொண்டுசெல்லும் விழாக்கள்.

13. ஏகலைவன் - மகாபாரதத்தில் வருகின்ற ஒரு நிகழ்ச்சியாகும். ஆரிய இனத்தைச் சேராத ஏகலைவன் துரோணச்சாரியாரின் சீடனாக ஏற்றுக்கொள்ள மறுக்கப்படுகிறான். அர்ஜுனனுக்கும் அவனுடைய சகோதரர்களுக்கும் துரோணச்சாரியார் என்ற ஆரிய வீரர் வில் வித்தை கற்பிக்கும் ஆசிரியராக இருக்கிறார். என்றாலும் ஏகலைவன் துரோணருடைய விக்ரகம் ஒன்றை எதிரே வைத்துக் கொண்டு வில் வித்தை பயின்று அர்ஜுனனைப்போலத் தானும் ஓர் ஒப்பற்ற வீரனாக ஆகி விட்டான். தன்னுடைய அரச குமார சீடனாகிய அர்ஜுனனின் நல்லெண்ணத்தைப் பெறுவதற்காகத் துரோணச்சாரியார் ஏகலைவனுடைய வலக்கைக் கட்டை விரலைக் குருதக்ஷிணையாகப் பெற்று விடுகிறார்.

14. பொது நல வேலைகள் - 1890-ல் குடும்ப நிர்வாகத்தைத் தாகூர் மேற்கொண்டதிலிருந்தே சுய உதவி, சுய மரியாதை ஆகியவற்றின் அடிப்படையில் கிராம முன்னேற்றத் தொண்டு செய்வதில் அதிக ஊக்கம் செலுத்தி வந்தார்.

15. சூத்திரன் - ஹிந்துக்களிடம் உள்ள நான்கு வருணங்களில் நான்காவது வருணமாகும். மற்ற மூன்று வருணங்களும் முறையே பிராம்மணர் (அறிவாளிகள் கூட்டம்), க்ஷத்திரியர்கள் (ஆள்வோர்களும், போர் வீரர்களும்), வைசியர்கள் (வணிகர்கள்) ஆகும்.

16. பெகூலாக் கவிதைகள் - சர்ப்ப தேவதையாகிய மனஸா தேவதையை உயர்த்திக் கூறுகின்ற மங்கள கவிதைகளின் தலைவியாகவுள்ள பெகூலா தேவியாவாள்.

17. அரசாங்கத்தில்.........வணக்கம் - சாதாரண ஒரு பக்திப் பாடலைக் கேலிப் பாட்டாக மாற்றியது.

18. வளையத்தின்......போக்கிவிடும்—கீதை 2/40.

19. விளக்கு விழா - குளிர் காலத்தின் கடைசிப் பகுதியில் நடைபெறுகின்ற தீபாவளி விழாவைத் தாகூர் நினைவில் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இந்த விழாவின்போது வீடுகளைத் தீப ஒளியால் அலங்காரம் செய்வார்கள்.

20. ஸ்ரவண - ஏறத்தாழ ஜூலை 15-லிருந்து ஆகஸ்டு 15 வரையிலுள்ள மழைக்காலத்தின் பிற் பகுதியாகும்.

---

## இந்தியப் பண்பாட்டு நிலையம்

1919-ல் தாகூர் தென்னிந்தியச் சுற்றுப் பிரயாணம் செய்த போது நிகழ்த்திய சொற்பொழிவாகும். முதன் முதலாகச் சென்னை அடையாற்றில் உள்ள தேசீயக் கல்வி முன்னேற்றக் கழகத்தால் (1919) வெளியிடப் பட்டது.

1. சோதனைகள் - தாகூரின் சொந்த நிறுவனமாகிய விசுவபாரதி 1918-ல் நிறுவப்பட்ட போதிலும் 1921-ல் தான் அதன் திறப்பு விழா நடைபெற்றது.

2. பாடசாலைகள் - பள்ளிக்கூடங்கள்.

3. பிரம்மவிருத்தம்...உஜ்ஜியினி - சிந்து நதிப் பள்ளத்தாக்கின் ஒரு பகுதி பிரம்ம விருத்தம் என்று அழைக்கப் பட்டது. பழங் காலத்தில் ஆசிரியர்கள் மிகுதியாக வாழ்ந்த இப் பிராந்தியம் மிக உயர்ந்த நாகரிகம் பெற்று விளங்கியது. அதேபோல் பீகாரின் வட கிழக்குப் பகுதியிலுள்ள மிதிலை ஜனக மகாராஜாவின் காலத்தில் (ராமாயண காலம்) சிறப்புப் பெற்று விளங்கியதோடு, விக்கிரமாதித்தியன் காலத்தில் (கி. பி. 4-ம் நூற்ருண்டு) உஜ்ஜயனியும் இதே போல் சிறப்புப் பெற்றுத் திகழ்ந்தது.

4. பௌராணீக - வேத காலத்தை அடுத்த ஹிந்து சமய கர்ண பரம்பரைக் கதைகள்.

5. தபோவனங்கள் - பழங் கால இந்தியாவின் காடுகளிலிருந்த பள்ளிக்கூடங்கள்.

6. சாந்தம், சிவம், அத்வைதம் - சாந்தி நிகேதனத்தில் ஒரு பண்பாட்டு நிலையத்தை ஏற்படுத்தி அதில் சமயங்கள், இலக்கியம், வரலாறு, விஞ்ஞானம் ஆகியவற்றையும், ஹிந்து, பௌத்த, ஜைன, இஸ்லாமிய, சீக்கிய, கிறிஸ்துவக் கலைகளையும், ஏனைய நாகரிகங்கள் பற்றிய ஆராய்ச்சிகளையும் மேனாட்டுப் பண்பாட்டோடு சேர்த்து ஆராய வேண்டுமென்பதே அதன் குறிக்கோளாகக் கொள்ளப்பட்டது. இவ்வாறு செய்கையில், உண்மையான ஆன்மீக வளர்ச்சிக் கேற்ற முறையில் பூற வாழ்க்

கையில் எளிமையையும், அக வாழ்க்கையில் ஒற்றுமை, சகோதர மனப்பான்மை, கூட்டுறவு ஆகியவற்றைக் கீழ், மேல் நாட்டுச் சிந்தனையாளர்களிடையே வளர்க்கவும், சாதி, சமய, இன மாறுபாடுகளை இல்லாமல் செய்யவும் இவை அனைத்தையும் "சாந்தம்" என்ற ஒரு பரம் பொருளின் கீழ்ச் செய்யவும் குறிக்கோளாகக் கொண்டார்கள்.

7. அனைத்துயிர்...ஆகிறான்—ஈசா உபநிஷதம் - 6.

---

## கல்வியின் பேதமின்மை

1921 ஆகஸ்டு 20-ம் தேதியன்று சாந்தி நிகேதனத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடியுள்ள கூட்டத்தில் படிக்கப்பட்ட கட்டுரை. ஒரு துண்டுப் பிரசுரமாகவும், மறுபடி 'பிரபாசி'யிலும் (செப்டம்பர், 1921) வெளியிடப்பட்டது. 'சிக்ஷா' (1935-ம் பதிப்பு) என்ற புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஆகஸ்டு 15-18 தேதிகளில் கல்கத்தாவில் நடந்த பல்வேறு பொதுக் கூட்டங்களில் இக் கட்டுரை படிக்கப்பட்டது. ஒத்துழையாமை இயக்கத்தின் அடிப்படையைப் பற்றி இக் கட்டுரை கூறியுள்ள குறைகளைக்கண்டு மக்களில் ஒரு பகுதியினர் வெறுப்படைந்தனர். ('சத்தியத்தின் அமைப்பு' என்ற கட்டுரையின் குறிப்பையும் பார்க்கவும்.)

இக் கட்டுரையின் ஆங்கில மொழிபெயர்ப்பு ஒன்று "பண்பாடுகளில் ஒற்றுமை" என்ற பெயரில் சுரேந்திரநாத் தாகூரால் மொழிபெயர்க்கப்பட்டு 'மாடர்ன் ரெவ்யூ'வில் (நவம்பர், 1921) வெளியிடப்பட்டது.

1. படகு வீடு - வங்காளத்தில் நதிப் பிராந்தியக்களிலுள்ள தாகூர்க் குடும்பச் சொத்துக்களை மேற்பார்வை பார்க்கும் காலத்தில் தாகூர் இப்படிப் படகு வீட்டிலேயே பல முறை தங்கியுள்ளார்.

2. ஜப்பானியர் பண்பாடு - 1916-ல் தாகூர் முதல் முறையாக ஜப்பானுக்கு விஜயம் செய்தார். ஜப்பான் பற்றிய அவருடைய கருத்துக்கள் 'ஜப்பான் ஜத்திரி' (1919) என்ற நூலில் குறிக்கப்பட்டுள்ளது.

3. ஏனென்றால்......செல்வதில்லை— ஈசா உபநிஷதம் - 1,

4. எவன் தன்னுள்ளே...விளக்கப்படுகிறது—ஈசா உபநிஷதம் - 6.

5. சிறு - புற விஷயங்கள் பற்றிய தாகூரின் எழுத்துக்களில், "பாரதி"யில் (மே, 1881) வெளியான கட்டுரைகள் இதே விஷயத்தைப் பற்றிப் பேசுவது குறிப்பிடத் தகுந்தது. வங்காள மொழியில் தோன்றிய இம் மூல்க் கட்டுரையை 'மாடர்ன் ரெவ்யூ'வில் (மே, 1925) "மரணத்தின் போக்கு வரத்து" என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார்.

6. பக்கம் - 286 வரி-14 தேசியத்தின் பலிபீடம்! - மாக்மில்லன் கம்பெனியார் 1917-ல் வெளியிட்ட "தேசியம்" என்ற நூலிலுள்ள தாகூரின் சொற்பொழிவுகளில் முரட்டுத் தேசியத்தை அவர் கண்டிப்பதைக் காணலாம். இச் சொற்பொழிவுகள் ஜப்பானிலும், அமெரிக்காவிலும் முறையே மே, 1916-லும், மார்ச்சு மாதம் 1917-லும் வெளியிடப்பட்டன.

7. யார் ஒருவன்...அடைகிறான் - ஈசா உபநிஷதம் - 7.

8. கிழக்கும்...இடமாக - விஸ்வ பாரதி பல்கலைக் கழகத்தின் குறிக்கோளில் "கிழக்கும் மேற்கும் சந்திக்குமாறு செய்து, இதில் ஒரு பொது சகோதரத்துவத்தைக் காண வேண்டும்" என்பதும் ஒன்றாகும்.

9. மாக்ஸ் முல்லர் - ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த (1823-1900) கீழைக் கலைக் கலைஞர். பழைய சம்ஸ்கிருத இலக்கிய வரலாறு, பழங்காலத் தெய்வீக நூல்கள் போன்ற பல நூல்களின் ஆசிரியர்.

---

## சத்தியத்தின் அழைப்பு

1921 ஆகஸ்டு 29-ஆம் தேதி கல்கத்தாவில் ஒரு பொதுக் கூட்டத்தில் படிக்கப்பட்ட கட்டுரை. 'பிரபாசி'யில் (1921 அக்டோபரில்) வெளியிடப்பட்டு காலாந்தர் (1937) என்ற நூலில் சேர்க்கப் பட்டுள்ளது.

ஒத்துழையாமை இயக்கத்தைப் பற்றித் தாகூர் கூறியுள்ள குறைபாடுகள் பொதுமக்கள் சிலருடைய வெறுப்புக்கு இடமளித்தது. 1921 ஆகஸ்டு 29-ல் கல்கத்தாவில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் இக் கட்டுரையின் மூலம் மறுபடியும் தாகூர் இதுபற்றிய ஒரு சவால் விடுத்தார். 1921 செப்டம்பர்

மாதம் 6-ஆம் தேதி காந்திஜீ ஒத்துழையாமை இயக்கம் பற்றிக் கலந்தாலோசிப்பதற்காகத் தாகூரைக் கல்கத்தாவில் தனிப்பட்ட முறையில் சந்தித்தார். இதுபற்றி "அவர்களிடையே இருந்த எண்ண வேறுபாடுகள் மிகப் பெரிதாக இருந்தமையால், அறிவுக் கொத்த முறையில் ஒரு, பொது முடிவைப் பெறுவது மிகக் கடினமாக இருந்தது. என்றாலும், நட்பு முறையில் எவ்விதமான பிளவும் ஏற்படாமல் அவர்களால் இருக்க முடிந்தது" என்று கூறப்படுகிறது. "சத்தியத்தின் அழைப்பு" என்ற இந்தக் கட்டுரைக்கு மறுப்புக் கூறும் முறையில் காந்திஜீ "பெருங் காவலன்" (யங் இந்தியா, அக்டோபர் 13, 1921) என்ற கட்டுரையை எழுதினார்.

இக் கட்டுரையின் ஆங்கில மொழிபெயர்ப்பு ஒன்று "சத்தியத்தின் அழைப்பு" என்ற தலைப்புடன் 'மாடர்ன் ரெவ்யூ'வில் அக்டோபர், 1921) வெளி வந்தது.

1. மாயை - இருப்பின் பொய்யான அல்லது ஏமாற்றமான ஒரு பகுதி. ஹிந்து தத்துவத்தின் ஒரு கொள்கையாகும்.
2. சாத்திரம் - தெய்வீக நூல்கள்.
3. ரக்த வீஜா - பிசாசுத் தலைவன். அவன் உடம்பிலிருந்து சொட்டுகின்ற ஒவ்வொரு சொட்டு இரத்தமும் அவனைப் போன்ற ஒரு பிசாசை உற்பத்தி செய்ய முடியும் என்று புராணங்கள் கூறுகின்றன.
4. நாம் விரும்பிய...செய்கிறோம்—யாக்ஞவல்கியரது ப்ரகதாரண்யஹ உபநிஷதம் 4-5-6.
5. மரணத்தின் வாயில் . . . இளைஞர்கள் - கல்கத்தாவிலுள்ள மனிகொத்தளாவில் வெடி குண்டுகள் தயாரித்ததற்காகப் பரீந்திரகுமார் கோஷ் என்பவர் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டார். பிறகு அவருடைய தண்டனை தீவாந்திர சிக்ஷையாக மாற்றப்பட்டு, அவரும் அவருடைய கூட்டத்தாரும் அந்தமானுக்கு அனுப்பப்பெற்றனர்.
6. மனு - பழங்கால இந்தியாவில் வாழ்க்கை முறைச் சட்டம் வகுத்தவர்.
7. இயக்கம் - காந்திஜியால் 1920, ஆகஸ்டில் தோற்றுவிக்கப் பெற்ற ஒத்துழையாமை இயக்கம்.
8. வெளிநாட்டிலிருந்த என் காதுக்கு எட்டியது - இது தாகூரின் ஐரோப்பிய, அமெரிக்க (மே, 1920 - ஜூலை 1921) யாத்திரை பற்றிய குறிப்பாகும்.

9. வெளி . . . செயல் - ஒத்துழையாமை இயக்கத்தின் போது லன்காஷயர் ஆலைகளில் தயாரிக்கப்பட்ட துணிகளைக் கொளுத்துவது தேசபக்திக் குரிய செயலாகக் கருதப் பட்டது.

10. சத்தியத்தில் . . . . முடியாது—முண்டக உபநிஷதம் - 3-1-6.

11. ஒரு குறிப்பிட்ட நாளில் - இந்திய தேசீயக் காங்கிரஸின் நாகபுரிக் கூட்டத்தில் (1920) காந்திஜீ தம்முடைய ஒத் துழையாமை இயக்கத் திட்டத்தைத் தலைவர்களின் எதிரே வைத்து, "அதனை அப்படியே கடைப்பிடித்தால் ஒரே வருஷத்தில் சுய ராஜ்யத்தை அடைந்துவிட முடியும்" என்று உறுதி கூறினார். 'யங் இந்தியா'வில் (பிப்ரவரி, 23—1921) காந்திஜி கூறியதாவது: "ஒரு குறிப்பிட்ட எளிய சில நிபந்தனைகளை நிறைவேற்றக்கூடுமே யானால் அடுத்த அக்டோபருக்குள்ளாக சுய ராஜ்யத்தை எளிதாக அடைந்து விடலாம். சென்ற செப்டம்பர் மாதத்தில் ஒரு வருஷம் என்று நான் ஏன் குறிப்பிட்டேன் என்றால் இந்த நிபந்தனைகள் நம்ப முடியாத அளவுக்கு எளிமையான தாகவும், நாட்டிலிருந்த ஏற்றுக்கொள்ளும் மனநிலை மிகச் சிறந்ததாகவும் இருந்ததனாலேயே யாகும்".

12. வைணீகன் - இந்திய இசையை இசைக்கக் கூடிய ஒரு கடுமை யான கம்பி வாத்தியமே வீணை. அதனை இசைப்பவன் வைணீகன்.

13. தாய் - அதிகத் துணிகளைத் தேவையாகப் பெற்றுள்ள இந்தியத்தாய்.

14. அரசியல் சீர்திருத்தம்—1919-ல் தோன்றிய மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள். இந்தியத் தேசீயவாதிகள் எதிர்பார்த்த அளவுக்குக் குறைந்தே இருந்தன இவைகள்.

15. இந்தப் புதிய . . . . வேண்டாவா? ஸ்வேதஸ்வதார உபநிஷதம் - 4-1.

---

## சுய ராஜ்யத்திற்கு உழைத்தல்

1925 - செப்டம்பரில் எழுதப்பட்டது. 'சபுஜ் பத்ரா'வில் (செப்டம்பர், 1925) வெளியிடப்பட்டு, 'கலாந்தார்' (1937) என்ற நூலில் சேர்க்கப்பட்டுள்ளது.

பெல்காமில் (1924) கூடிய இந்தியத் தேசீயக் காங்கிரஸ், பிரிட்டிஷாரை எதிர்த்துப் போராடும் ஓர் ஆயுதமாக சர்க்காவில் நூல் நூற்கும் திட்டத்தை ஏற்றுக் கொண்டது. 1925 மே மாதம் 29-ம் தேதி காந்திஜி சாந்தி நிகேதனத்தில் தாகூரைச் சந்தித்து, சர்க்காவைப் பற்றிய தம்முடைய தத்துவத்தை ஆராய்வதற்கு வந்து சேர்ந்தார். கவிஞர் இக் கொள்கையை ஏற்றுக்கொள்ளாமல் தன்னுடைய கருத்தை இக் கட்டுரையின் மூலம் வெளியிட்டார். இக் கட்டுரைக்கு மறுப்பாக காந்திஜி "கவிஞரும் சர்க்காவும்" என்ற கட்டுரையை 'யங் இந்தியா'வில் (நவம்பர், 1925) வெளியிட்டார். 1925 டிசம்பர் 27-ம் தேதியன்று தாகூர் காந்திஜீக்குக் கீழ்வருமாறு எழுதினர்:

"தாங்கள் சாத்தியம் என்று நினைக்கின்ற ஒன்றுக்காக என்னைக் கடுமையாகத் தாக்க நேர்ந்தாலும், நாம் ஒருவருக்கொருவர் கொண்டுள்ள பரஸ்பர மதிப்பின் மேல் கட்டப்பெற்றுள்ள நம்முடைய உறவுமுறை இத் தாக்குதலைத் தாங்கிக் கொள்ளும்."

இக் கட்டுரையின் ஆங்கில மொழிபெயர்ப்பு ஒன்று "சுய ராஜ்யத்திற்கு உழைத்தல்" என்ற தலைப்பில் 'மாடர்ன் ரெவ்யூ'வில் (டிசம்பர், 1925) வெளியாயிற்று.

1. சுயராஜ்யம் - இதனுடைய நேரான பொருள் தம்மைத் தாமே ஆண்டுகொள்வது என்பதாகும். சுய ராஜ்யக் கிளர்ச்சியின் தொடக்க நாட்களில் இச் சொல் இப் பொருளை ஏற்றுக் கொண்டது.

2. சர்க்கா - நாகபுரி காங்கிரஸில் (1920) ஓராண்டு காலத்திற்குள் சுய ராஜ்யம் அடையும் வழி என்று காந்திஜீ சமர்ப்பித்த திட்டத்தில் "ஒவ்வொரு வீட்டிலும் சர்க்காவைப் புகுத்தி நம்முடைய தேவை முழுவதையும் கிராம நெசவாளர்களின் மூலமாக நிறைவேற்றிக் கொள்ள வேண்டும்" என்பதும் ஒன்று.

3. மேற்பகுதிக் கிராமங்கள்—கிழக்குப் பகுதிகளில் வசிக்கின்ற மக்களுக்குப் பீகாரும், உத்திரப் பிரதேசமும் மேற்பகுதி நாடுகளாகும்.

4. கிலாபத் இயக்கம்-காலிபைட் என்ற வார்த்தைக்குக் கிலாபாத் என்பது அராபிய வார்த்தையாகும். உலகத்திலுள்ள முஸ்லீம்கள் அனைவருக்கும் துருக்கி சுல்தானே காலீப்

ஆவார். முதல் உலகப் போரின் முடிவில் துருக்கி தோற்கடிக்கப்பட்டவுடன் இஸ்லாத்தின் புண்ணிய பூமி காலீப்புகளிடமிருந்து எடுக்கப்பட்டு, பிரிட்டிஷ் பொம்மைகளின் ஆட்சியின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. இந்திய முஸ்லீம்கள் இதனை வெறுத்தார்கள். அமிர்தசரஸ் (1919) காங்கிரஸ் கூட்டத்தில், சமாதான உடன்படிக்கையின் ஷரத்துக்களை மாற்றியமைக்க வேண்டுமென்று செய்யப்பட்ட கிலாபத் கிளர்ச்சியில் பங்கு கொள்ள வேண்டுமென்று, காங்கிரஸ் முடிவு செய்தது. கமால் பக்ஷாவின் கீழ், சமயச் சார்பற்ற ஒரு நாடாக 1913 வாக்கில் துருக்கி ஆனபோதுதான் இக் கிளர்ச்சி ஓய்ந்தது.

5. மகாத்மா - இச் சொல்லின் நேரான பொருள் மா பெரும் ஆன்மா என்பதாகும். 1919 வாக்கில் இச் சிறப்புப் பெயர் மூலமாகவே காந்திஜியை அனைவரும் அறியத் தொடங்கினார்கள்.

---

### கவிஞன் நிறுவிய பள்ளிக்கூடம்

விசுவ பாரதி முத் திங்கள் இதழில் 1926 அக்டோபர் மாதம் ஒரு கட்டுரையாக வெளியிடப்பட்டது. (பழைய தொகுப்பு வால்யூம் VI எண் '3' 1928 டிசம்பரில் விசுவ பாரதித் துண்டுப் பிரசுரமாக வெளிடப்பட்டது.)

1. குளிர் காலம் - சாந்தி நிகேதனக் பள்ளிக்கூடம் 1901 டிசம்பர் 22-ல் தொடங்கப் பெற்றது.

2. காளிதாசன் - பழங்கால இந்தியாவின் தலையாய கவிஞன். சாகுந்தலம், மேகதூதம் போன்ற நூல்களின் ஆசிரியன்.

3. சமவெளி - மத்திய இந்தியாவின் சமவெளிப் பிரதேசங்களிலுள்ள உஜ்ஜயினியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த விக்கிரமாதித்தனுக்கு (4-ம் நூற்றாண்டு) அரசவைக் கவிஞனாகக் காளிதாசன் இருந்தான் என்று கர்ண பரம்பரைக் கதைகள் சொல்லுகின்றன.

4. மேகதூதம் - இச் சொல்லின் நேர்ப்பொருள் மேகமாகிய தூதன் என்பதாகும். மிக நீண்ட இந்தக் கவிதை தேசப் பிரஷ்டம் செய்யப்பட்ட ஒரு காதலன், மலை நாட்டில் வாழ்கின்ற தன் காதலிக்குத் தூது அனுப்புவதாக அமைந்துள்ளது.

5. எங்கும்......வாழ்கின்றனர்—முண்டக உபநிஷதம் - 3/2/5.
6. கல்கத்தா - 17-ஆம் நூற்றுண்டின் கடைசிப் பகுதியில் பிரிட்டிஷார்கள் கிழக்கு இந்தியக் கம்பெனியாரின் தொழிற்சாலையைக் கல்கத்தாவில் நிறுவியபோது ஜெஸ்ஸோரில் வாழ்ந்த பஞ்சணன் குஷாரி என்பவர் தம் கிராமத்தை விட்டுக் கல்கத்தாவுக்கு வந்து குடியேறினர். அவர் அந்தணராக இருந்த காரணத்தால் 'தாகூர்' என்று அழைக்கப்பட்டார். அச் சொல்லே பிறகு 'டாகூர்' என்ற ஆங்கில வடிவம் பெற்றது. அவருடைய பேரனுகுய நில்மோனி என்பவர் மிகப் பெருஞ் செல்வத்தைப் பெற்றுக் கல்கத்தாவில் ஜோரசங்கோவில் தாகூர் இல்லத்தைக் கட்டினர். நில்மோனியின் பேரனுகிய துவாரஹாநாத் பிரிட்டிஷாரோடு வாணிகம் நடத்திய முதல் இந்தியராவார். துவாரகாநாத் (1794 - 1846) ரவீந்திரநாத் தாகூரின் பாட்டனர் ஆவார்.
7. எனது இளமைக் காலம் - தாகூரின் இளமைக் காலத்தைப் பற்றி விரிவாக அறிய, "பழைய நினைவுகள்" (மாக்மில்லன், 1917), "எனது இளமைக் காலம்" (விசுவ பாரதி, 1921) என்ற சுய சரிதை நூல்களைப் பார்க்கவும்.
8. ஆங்கிலேய நண்பர் - லியொர்ட் கே. எல்ம்ஹர்ஸ்ட் என்பவரே 1922 பிப்ரவரியில் ஸ்ரீ நிகேதனத்தில் தொடங்கப்பட்ட கிராமப் புனருத்தாரண நிறுவனத்தின் நெறியாளராக அமர்ந்தார். இந்த நிறுவனத்தை நடத்துவதற்குரிய பொருள் தேவையையும், பல ஆண்டுகள் வரை அவரே அளித்து வந்தார். 'கவிஞன் நிறுவிய பள்ளிக்கூடம்' என்று தாகூர் அழைக்கும் இந்த நிறுவனத்தின் கொள்கைகள், நடைமுறைகள் ஆகியவற்றை எல்ம்ஹர்ஸ்ட் விசுவ பாரதியின் 9-வது துண்டுப் பிரசுரத்தில் விரிவாக எழுதியுள்ளார்.

---

நகரமும் கிராமமும்

இக் கட்டுரையின் முதல் பகுதியிலுள்ள வேது பக்கம் 1வது பத்தி முடிய, அதாவது "நாம் பிழைக்கவும் கூடும்" என்பது வரை நகரமும் கிராமமும் என்ற கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டதாகும். இது 1928 பிப்ரவரியில் ஸ்ரீ நிகேதனத்தில் கூடிய கிராமப் புனருத்தாரண நிறுவனத்தின் 7-வது ஆண்டு விழாவில் பேசப்பட்ட பேச்

சாகும். இதனுடைய ஆங்கில மொழிபெயர்ப்பு ஒன்று "சமுதாயத்தின் உயிர்ப்பு" என்ற தலைப்பில் 'இந்தியாவில்' (1928) வெளியிடப்பட்டது. கட்டுரையின் பிற்பகுதி முழுவதும் விஸ்வ பாரதி முத்திங்கள் இதழில் (அக்டோபர், 1924) 'நகரமும் கிராமமும்' என்ற தலைப்பில் வெளியானது. இவை இரண்டையும் சேர்த்து விஸ்வ பாரதித் துண்டுப் பிரசுரமாக 1928 டிசம்பரில் வெளியிடப்பட்டது.

இரண்டாம் பகுதி 1939-ல் தாகூர் கடைசியாக கிராமப் புனருத்தாரண நிறுவனத்திற்குச் சென்றிருந்தபோது அங்குள்ள தொண்டர்களிடையே பேசப்பட்ட ஒரு பேச்சாகும். இதன் ஆங்கில மொழி பெயர்ப்பு ஒன்று மார்ஜோரி சைமிக்ஸ் என்பவரால் 'மாடர்ன் ரெவ்யூ'வில் 1941 நவம்பரில் வெளியிடப் பெற்றது.

1. அன்னம் பிரம்மம் - அன்னம் என்பது உணவின் சத்தாகும். இதனை ஆக்கல் தெய்வமாகிய பிரம்மத்தோடு ஒற்றுமைப் படுத்தி ஆக்கும் உயிர்களைக் காக்கின்ற சிறப்பை இதன் மூலம் பேசுகிறார்கள்.

2. சந்நியாசி - இவ்வுலகத்தைத் துறந்து ஆன்மீக முன்னேற்றத்திற்காக இவ் வுடம்பை வருத்திக் கொள்ளும் துறவி ஆவான்.

3. அசோகன் - பழங்கால இந்தியாவின் மிகச் சிறந்த சக்கரவர்த்தி ஆவார். (கி. மு. 3-ம் நூற்றாண்டு).

4. வீடு - சுருள் குடிலையும் அதன் அணித்தே உள்ள நிலத்தையும் சேர்த்து 1912 அக்டோபர் மாதம் ராய்ப்பூர் சின்ஹாக்களிடமிருந்து விலைக்கு வாங்கப்பட்டது.

5. ஷலியாத்தும், பட்டிசாரும் - இப்போது கிழக்குப் பாகிஸ்தான் என்று சொல்லப்படுகின்ற வங்காளத்தின் ஒரு பகுதியில் மிகப் பரந்து விரிந்து கிடந்த தாகூரின் சொத்துக்கள். இச் சொத்துக்களை 1890 முதல் 1910 வரைத் தாகூர கவனித்து வந்தார். அதன்பிறகு, அவருடைய மகனாகிய ரதீந்திரநாத் அப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

6. கிராம வாழ்க்கை - குடும்பச் சொத்தைப் பராமரிக்கின்ற காலம் முழுவதிலும் அவருடைய அண்ணன் மகளாகிய இந்திரா தேவியுடன் (1873-1960) இடைவிடாத கடிதத் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தார். கிராமத்திலுள்ள மாறுகின்ற இயல்புடைய வாழ்க்கை, ஒரு, கவிஞரை எவ்வாறு பாதிக்கின்றது என்பதைத் தெரிவிக்கின்ற

இக் கடிதங்கள் 1912-ல் ஒன்று சேர்க்கப்பட்டு 'சின்ன பத்ர' என்ற தலைப்பில் (கிழிந்த கடிதங்கள்) வெளியிடப்பட்டது. 1921-ல் 'கிளிம்ப்ஸஸ் ஆப் பெங்கால்' என்ற பெயரில் அதனுடைய ஆங்கில மொழிபெயர்ப்பு வெளியாயிற்று.

7. குஷ்டியா - மிகச் சமீபத்திலுள்ள ரயில் நிலையமும் ஆற்றுத் துறையும் இதுதான்.

8. காளிமோகன் - சாந்தி நிகேதனத்தில் ஆசிரியராக இருந்த காளிமோகன் கோஷ் (1884-1940) தாகூரின் கிராம சேவைக்குத் தாமே விரும்பி வந்தார். கிராமப் புனருத்தாரண நிறுவனம் அமைக்கப்பட்டபோது, அதனுடைய தலையாய தொண்டர்களுள் ஒருவராக அவரும் அமர்ந்தார்.

9. "எதனையாவ...கொடு" தைத்ரீய உபநிஷதம் 1/11.

10. என்னுடை மகனையும் சந்தோஷையும்...அனுப்பினேன் - ரதீந்தரநாத் தாகூரும் (பிறப்பு 1888) சந்தோஷ் மஜூம்தாரும் (1888-1926) சாந்தி நிகேதனத்தில் முதன் முதலாகச் சேர்ந்த மாணவர்களுள் இருவராவர். அவர்கள் கல்லூரிப் புகுமுக வகுப்பில் தேர்வு பெற்றவுடன் இலியனாய் பல்கலைக் கழகத்தில் விவசாயம் படிப்பதற்காகச் சென்றார்கள்.

11. ஆண்ட்ரூஸ் - சார்லஸ் ப்ரீயர்ஆண்டுரூஸ் (1871-1940). தாகூருடன் 1912-ல் முதல் தொடர்பு ஏற்பட்டதிலிருந்து தம்முடைய இறுதிநாள் வரைத் தாகூரிடம் நிலையான நண்பராக இருந்தார். வி. சதுர்வேதியும் மார்ஜோரி சயீக்ஸூம் எழுதிய "ஆண்ட்ரூஸ்" என்ற நூலை (ஆலன் அண்டு அன்வின் கம்பெனியார் வெளியீடு) காண்கவும்.

12. அரசாங்கமும் நாடும் என்ற கட்டுரை காண்க.

---

## கூட்டுறவு

பர்த்வான் பகுதியின் முதல் கூட்டுறவு மாநாட்டில், 1922-ஆம் ஆண்டு பிப்ரவரி 9-ஆம் தேதியன்று படிக்கப்பட்டது. இக் கூட்டத்திற்கு சர் டானியல் ஹாமில்டன் தலைமை ஏற்றிருந்தார். வந்திருந்த உறுப்பினர்கட்கு இச் சொற்பொழிவை அச்சடித்து வழங்கினார்கள்.

1. பிகா - வங்காளத்தின் பரப்பு அளவை முறையின் யூனிட் ஒரு பிகா ஏறத் தாழ ஓர் ஏக்கரில் மூன்றில் ஒரு பங்கு ஆகும்.
2. துண்டு நில......செல்வதால் - சிறு சிறு உடைமைகளாக இருத்தலின் வங்காளத்தில் நெல் வயல்கள் வடிவிலும், உருவத்திலும் கோணல் மாணலாக இருக்கும்.
3. சேர் - வங்காளத்தின் நிறுத்தல் அளவை. ஏறத்தாழ 2 பிரிட்டிஷ் பவுண்டுகட்குச் சமம்.
4. உன் கொல்லை......மண்ணாகும் - வங்காளிப் பழமொழி.
5. பேராசையி......தருகிறது - வங்காளிப் பழமொழி.
6. சிறப்பாக ஹிந்துக்கள் - சாதி வேற்றுமை காரணமாக அவர்களைச் சிறப்பாகக் குறிக்கப்பட்டுள்ளது.

---

## மாறும் யுகம்

'பரிச்சய' (ஜூலை, 1933) என்ற இதழில் வெளியாகி, இதே தலைப்புடன் 'கலாந்தார்' (1937) என்ற நூலிலும் சேர்க்கப் பெற்றுள்ளது.

'மாறும் யுகம்' என்ற தலைப்புடன் ஓர் ஆங்கில மொழிபெயர்ப்பு விஸ்வ பாரதி முத்திங்கள் இதழில் (வால்யூம் - I எண். 2. புதிய வரிசை) வெளியாயிற்று.

1. வித்யா சுந்தர் - பாரத் சந்திராவால் (1712 - 1760) எழுதப் பெற்ற கவிதைக் கதை. வித்யா, சுந்தர் இவருடைய காதல் வரலாற்றைக் கூறுவது.
2. பஞ்சாங்கம் - ஸனாதன ஹிந்துக்களின் வாழ்வு முழுவதும் பஞ்சாங்கத்துடன் பின்னிக் கிடந்த காலம் ஒன்றுண்டு. தனி மனிதன், குடும்பம், சமுதாயம் ஆகியவர்களின் முக்கிய நிகழ்ச்சிகள் பஞ்சாங்கப்படியே நடைபெற்றன.
3. கோயிலுக்குள் அனுமதிப்பதற்கு - 1932-ஆம் ஆண்டு பூனா ஒப்பந்தம் முடிந்த பிறகு ஹிந்து சமயத்தில் தீண்டாமை ஒழிப்புக்குக் காந்திஜீ பெரிய அளவில் பிரசாரம் தொடங்கினார். ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று அவர் விரும்பிய உரிமைகளில் கோயிலுக்குள் நுழையும் உரிமையும் ஒன்று.
4. வெலிங்டன் பிரபு—1931 - 34 இல் இந்தியாவின் வைஸ்ராய்.

5. ஆகாயத்திலிருந்து......வீசுதல் - வட மேற்கு எல்லைப்புறங்களின் மீது பிரிட்டிஷார் விமான மூலம் குண்டு வீசியதைக் குறிப்பது இது. பிரிட்டிஷ் அரசுக்குள் அடங்காத ஆப்கானியரை அடக்கவோ அன்றி, அச்சுறுத்தவோ இது செய்யப்பட்டது.

6. பழைய பிறவிகள் - ஹிந்துக்களின் கொள்கைப்படி கர்மம் பற்றிய தத்துவம் மிக முக்கியமானது.

7. பஞ்சாங்கப் பிடி - ஹிந்துப் பஞ்சாங்கம், ஜோஸ்யம் ஆகியவற்றின்படி கோள்களும், விண்மீன்களும் தம்முடைய பார்வையாலும், பெயர்ச்சியாலும் மானிட சமுதாயத்தை ஆட்டிப் படைக்கின்றன.

8. சீனவுக்குள் - சீனவுடன் நடத்தப்பட்ட கஞ்சா வாணிகத்தைக் குறிக்கிறது.

9. ஜாலியன்வாலாபாக் கொடுமை - 1919 ஏப்ரல் 13-ஆம் தேதி யன்று அமிர்தசரசில் நான்கு பக்கமும் மூடப்பட்ட ஒரு தோட்டத்தில் கூடி இருந்த நிராயுதபாணிகளாகிய ஆண், பெண்கள் மேல் ஜெனரல் டயர் என்பவன் குண்டு மழை பொழிந்தான். 10 நிமிஷங்களில் இறந்தவர் 379, காயமுற்றவர் 1137. இதன் காரணமாகத் தாகூர் "கோடிக் கணக்கான எங் நாட்டு மக்களின் மன வெறுப்பை வெளியிடும் முறையில் என்னுடைய இந்த 'சர்' பட்டத்தைத் துறக்கிறேன்" என்று கூறி 1919 மே மாதம் 30-ஆம் தேதி தம் பட்டத்தைத் துறந்தார்.

---

## நாகரிகத்தில் நெருக்கடியான நிலைமை

தாகூரின் 80-வது பிறந்த தின விழாவில் (ஏப்ரல் 14, 1941) சாந்தி நிகேதனத்தில் அவர் முன்னிலையில் வாசிக்கப் பெற்றது. இதன் அச்சடித்த பிரதிகளும் வந்திருந்தவர்கட்கு வழங்கப் பெற்றன.

இதன் ஆங்கிலப் பெயர்ப்பு (பெயர்த்தவர் க்ஷிதிஸ் ராய்; திருத்தம் செய்தவர்கள் கிருஷ்ண கிருபளானியும், ஆசிரியரும்) தனித் துண்டு நூலாக இதே பெயருடன் 'அவருடைய எண்பதாவது ஆண்டு விழாவில் விடுத்த செய்தி' என்று மே 1941-இல் வெளியிடப் பெற்றது.

1. பிரிட்டனுக்கு.....இருந்தது—1878 செப்டம்பரில் தாகூர் முதன் முறையாக இங்கிலாந்து சென்றார். லண்டன், பல்கலைக் கழகக் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். 18 மாதங்கட்குப் பிறகு மீண்டுவிட்டார். அவருடைய 'என்னுடைய நினைவுகள்' (மாக்மில்லன், 1917) என்ற நூலைப் பார்க்கவும்.

2. என்னுடைய கண்களால்—ஜப்பானுக்குத் தாகூர் 1916; 1924; 1929 ஆகிய ஆண்டுகளில் மும்முறை சென்றார். முதன் முறை அவருடைய அனுபவங்களை 'ஜப்பான் யாத்திரை' (நாட்குறிப்பு) என்ற நூல் வடிவில் 1919-இல் வெளியிட்டார்.

3. மாஸ்கோ—1930-இல் (செப்டம்பர் 11 - 25 வரை) இரு வார காலம் சோவியத் ரஷ்யாவுக்குச் சென்று வந்தார். மாஸ்கோவில் அவருடைய அனுபவம் பற்றி எழுதிய கடிதங்களைத் தொகுத்து 'ரஷ்யாவிலிருந்து கடிதங்கள்' என்று 1931-இல் வெளியிட்டார்கள்.

4. ஈரான்—ரெசா ஷா பஹ்லவியின் அழைப்பின் பேரில் 1932-இல் தாகூர் ஈரான் சென்று வந்தார்.

# பெயர் அட்டவணை


அசோகன் 360
அமெரிக்கா (ஐக்கிய) 275, 401, 402.
அலெக்ஸாண்டர் 147, 338.
அரேபியா 383

ஆப்கானிஸ்தானம் 410
ஆன்ட்ரூஸ். சி. எப். 370, 411, 412.
ஆரிய சமாஜம் 2
ஆக்ஸ்போர்ட் 236
ஆஸ்டிரியா 159

இத்தாலி 381, 383, 394.

ஈரான் 402, 409, 410.

உஜ்ஜயினி 257

எகிப்து 255
எலிஸபெத் அரசி 244
எல்ம்ஹர்ஸ்ட் 17, 370.

ஏதின்ஸ் 256, 308.

ஐர்லாந்து 159, 243.

கத்தே (கவிஞர்) 360
கபீர் 65
கர்ஸான் பிரபு 123
காரிபால்டி 302, 399.
கவி கங்கன் 210

கார்லைல் 241
காளிதாசன் 330, 332.
கிரீஸ் 147, 381, 383.
கிளமன்ஸ் 243
கிளாட்ஸ்டன் 302, 399.
கிறிஸ்து 190
கீதாஞ்சலி 30
குரு நானக் 65
கேம்பிரிட்ஜ் 236
கோகலே 175

சகோதரி நிவேதத்தா 188
சத்யேந்திரநாத் தாகூர் 4
சந்தோஷ் 370
சர்வதேச சங்கம் 314
சர் வில்லியம் ஜோன்ஸ் 2
சார்லமேன் 243
செமட்டிக் மக்கள் 383
செஸ்டர்டன் 241
சைனா 67, 255, 282, 383, 402, 410.
சையத் அகமத்கான் 2

டென்மார்க் 377
டேனர்கள் 244
டேவிட் ஹேர் 154

தக்ஷசிலம் 247, 250
திபெத் 67
துருக்கி 159, 399
துவாரகாநாத் தாகூர் 4

நாளந்தா 247, 250
நார்வே 159

பங்கதர்ஷன் 47, 151
பங்கிம் சந்தர சட்டர்ஜி 47, 151
பர்க் 302, 406
பர்னுட்ஷா 241
பர்ஸியா 255
பனாரஸ் 256
பாரத் சந்திரா 393
பாரீஸ் பல்கலைக் கழகம் 243
பிம்ம சமாஜம் 2
பிரார்த்தனை சமாஜம் 2
பிளேட்டோ 360
பின்லாந்து 159
பிஸ்மார்க் 360
புத்தர் 303
பென்தாம் (பென்ஹாம்) 241
பைரன் (கவி) 155

மகாத்மா காந்தி 35, 302, 305, 312, 326.
மனு 104, 283, 301, 407
மாக்ஸ் முல்லர் 289
மார்லி (லார்ட்) 118
மாஸினி 302, 399
மாஸ்கோ 409
மிதிலை 257
மில் 241
மெக்காலே 155
மெக்காடோ (ஜப்பானிய அரசர்) 253
மேக தூதம் 330, 358
மைத்திரேயி தேவி 107
மொகலாயர் 261, 397

யாக்ஞவல்கியர் 83, 296

ரஸ்கின் 241
ரஷ்யா 159, 161, 409.
ராம் மோஹன்ராய் (ராஜா) 2, 5, 150, 153.
ரானடே 151
ரைமண்ட் ரோன் 404
ரொமெயின் ரோலண்ட் 315
ரோம் 147, 255, 256, 383.

வால்டேர் 270
விக்கிரமாதித்தியன் 257, 332
விக்டோரியா 240, 334, 398.
வித்யாசுந்தர் 393
விவேகானந்தர் 151, 187
விஸ்வபாரதி (பல்கலைக் கழகம்) 13, 264, 362.
வெலிங்டன் 345, 397
வைஷ்ணவர்கள் 62, 65

ஸ்பார்டா 308
ஸ்பெயின் 214, 410
ஸ்வீடன் 159

ஷாஸ்டர் 402
ஷேக்ஸ்பியர் 155

ஜப்பான் 67, 199, 276, 400, 409, 411.
ஜனகன் 257
ஜாலியன்வாலாபாக் 403
ஜான் பிரைட் 407
ஜெர்மனி 249, 287, 360, 401, 404.

ஹோமர்கிரன் 187

A.S. GNANASAMBANDAN
19, DR. NATESAN ROAD,
ASHOK NAGAR. MADRAS-600 083